எரேமியா – முன்னுரை

காலமும் இடமும்

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் கி.மு. 685 - 606 ஆம் வருஷத்தில் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

எரேமியா (எரே 1:1,11; எரே 7:1; எரே 11:1; எரே 14:1; எரே 18:1; எரே 19:14; எரே 20:1-3; எரே 21:1-3; எரே 25:1-2,13; எரே 26:7-12, 20-24; எரே 27:1; எரே 28:5-15; எரே 29:1, 27-30; எரே 30:1; எரே 32:1-6,26; எரே 33:1, 19-23; எரே 34:1-12; எரே 35:1-18; எரே 36:1-32; எரே 37:2-21; எரே 38:1-28; எரே 39:11-15; எரே 40:1-6; எரே 42:2-7; எரே 43:1-8; எரே 44:1,15-24; எரே 45:1; எரே 46:1,13; எரே 47:1; எரே 49:23; எரே 50:1; எரே 51:59-64; எரே 52:1).

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் முழுவதிலும் எரேமியாவே இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர் என்பதற்கு அநேக ஆதாரங்கள் உள்ளன. வேதபண்டிதர்கள் அனைவரும் இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர் எரேமியாவே என்பதில் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கிறார்கள்.

மையக்கருத்து

கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போவது, தேவதூஷணம் கூறுவது, ஆகியவற்றினால் ஏற்படும் விளைவுகளை எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் விவரித்துக் கூறுகிறது. வேதாகமத்தில் எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும், ஓசியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும் (ஓசி 4:16; ஓசி 11:7; ஓசி 14:4) மாத்திரமே பின்மாறிப் போதல் என்னும் வார்த்தை காணப்படுகிறது. எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் மாத்திரம் இந்த வார்த்தை 13 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எரே 2:19; எரே 3:6-22; எரே 5:6; எரே 8:5; எரே 14:7; எரே 31:22; எரே 49:4)

எரேமியா தீர்க்கதரிசி தன்னுடைய ஜனங்களோடு தொடர்ந்து வெளிப்படையான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தார். கர்த்தரை மறுதலிக்கிறவர்களுக்கும், கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போனவர்களுக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு இரக்கமில்லாமல் வரும் என்பது எரேமியாவின் மையச்செய்தியாகும்.

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் மற்ற கருத்துக்கள்:

1. யூதா தேசத்தார் பாபிலோனுக்கு உடனடியாக சிறைப்பிடித்துச் செல்லப் படுவார்கள்.

2. எழுபது வருஷ சிறையிருப்பிற்குப் பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய தேசத்திற்குத் திரும்பி வருவார்கள்.

3. இஸ்ரவேல் ஜனங்கள் மறுபடியும் உலகம் முழுவதும் சிதறிப்போவார்கள்.

4. இந்தக் காலத்தின் முடிவில் இஸ்ரவேல் புத்திரர் இறுதியாகக் கூட்டிச் சேர்க்கப் படுவார்கள்.

5. மேசியா எருசலேமின்மீது நித்திய காலமாக ஆட்சி புரிவார்.

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் எழுதப்பட்டதற்கான நோக்கத்தின் விவரம் வருமாறு:

1. பாவத்தின் விளைவுகளையும், தேவனை விட்டுப் பின்வாங்கிப்போவதினால் ஏற்படும் விளைவுகளையும் இஸ்ரவேல் புத்திரருக்குத் தெளிவுபடுத்துவது.

2. மனுஷனைக் குறித்த தேவனுடைய திட்டத்தில் இஸ்ரவேல் புத்திரரின் வருங்காலத்துப் பங்கை அவர்களுக்கு வெளிப்படுத்துவது.

3. ஒவ்வொரு மனுஷனும் தேவனோடும், அவருடைய திட்டத்தோடும் இசைந்து போக வேண்டும். இதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு மனுஷனுடைய முடிவும் அமையும் என்பதை வலியுறுத்துவது.

எரேமியா – முன்னுரை

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 52

வசனங்கள் - 1,364

கேள்விகள் - 194

புதிய தீர்க்கதரிசனங்கள் - 90

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 680

கட்டளைகள் - 303

வாக்குத்தத்தங்கள் - 16

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள் - 779

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள் - 223

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (எரே 1:4,11,13; எரே 2:1; எரே 3:6; எரே 7:1; எரே 11:1; எரே 13:1,3,6,8; எரே 14:1; எரே 16:1; எரே 17:19; எரே 18:1,5; எரே 19:1,14; எரே 20:1; எரே 21:1; எரே 22:1; எரே 23:1; எரே 24:1; எரே 25:1; எரே 26:1; எரே 27:1; எரே 28:1; எரே 29:1,30;எரே 30:1; எரே 32:1,6,26; எரே 33:1,19; எரே 34:1,8; எரே 35:1,12,18; எரே 36:1,27; எரே 37:6; எரே 38:17,20; எரே 39:15; எரே 40:1; எரே 42:9; எரே 43:8; எரே 44:1,24; எரே 45:1; எரே46:1,13; எரே 47:1; எரே 48:1; எரே 49:1,7,23,28,34; எரே 50:1).

பொருளடக்கம்

I. எரேமியாவின் ஊழியம்

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்று பின்னணி (1:1-3)
2. எரேமியாவின் முதலாவது ஊழியம் (1:4-10)
3. வாதுமை மரக்கிளையின் அடையாளம் - முக்கியத்துவம் - நிறைவேற்றம் (1:11-12)
4. பொங்குகிற பானையின் அடையாளம் - முக்கியத்துவம் - பாபிலோனிய படையெடுப்பு (1:13-16)
5. எரேமியாவின் இரண்டாவது ஊழியம் (1:17-19)

II. யூதாவுக்கு எதிராக தேவனுடைய வழக்கு

1. யூதாவுக்கு முதலாவது செய்தி

(1) கன்னித்தன்மையின் ஏழு அம்சங்கள் (2:1-3)

(2) யூதாவின் பத்து பாவங்கள் (2:4-8)

(3) தேவனுடைய வழக்கு

(அ) தேவர்களை மாற்றினார்கள் (2:9-11)

(ஆ) இரண்டு தீமைகளைச் செய்தார்கள் (2:12-13)

(இ) வரப்போகிற சிறையிருப்பு (2:14-18)

(ஈ) பொதுவான பாவங்கள் (2:19)

(உ) தேவனுடைய கடந்த கால கிரியைகள் (2:20-21)

(ஊ) நம்பிக்கையின்மை (2:22-25)

(எ) விக்கிரகாராதனை (2:26-28)

(4) இஸ்ரவேலின் கேள்வி - பதில் - யூதாவின் பதினாறு பாவங்கள் (2:29-3:5)

2. யூதாவுக்கு இரண்டாவது செய்தி

(1) தோல்வியின் மூன்று அம்சங்கள் (3:6-11)

(2) அழைப்பு - காரணம் - தேவனுடைய இரக்கம் - நிபந்தனை - மனந் திரும்ப வேண்டும் (3:12-13)

எரேமியா - முன்னுரை

(3) அழைப்பு - காரணம் - திருமணம் - பதினான்கு ஆசீர்வாதங்கள் (3:14-21)

(4) அழைப்பு - வரப்போகிற பாவஅறிக்கை (3:22-25)

(5) திரும்பி வருவதற்கு ஏழு நிபந்தனைகள் (4:1-4)

(6) எச்சரிப்பு - பதினான்கு காரணங்கள் (4:5-7)

(7) அழைப்பு - காரணம் - ஒன்பது நியாயத்தீர்ப்புகள் (4:8-13)

(8) அழைப்பு - பத்து காரணங்கள் (4:14-18)

(9) எச்சரிப்பு - பதினான்கு அம்ச காரணம் (4:19-22)

(10) ஆதி பூமியின் ஒழுங்கின்மையின் எட்டு அம்சங்கள் (4:23-26)

(11) பூமியின் ஒழுங்கின்மையும் யூதாவின்மீது பாபிலோனின் நியாயத்தீர்ப்பும் (4:27-31)

(12) யூதாவின் பத்து பாவங்கள் (5:1-5)

(13) நியாயத்தீர்ப்பின் மூன்று அம்ச வருணனை (5:6)

(14) யூதாவின் ஐந்து பாவங்கள் (5:7-8)

(15) பகுதி நியாயத்தீர்ப்பு (5:9-10)

(16) யூதாவின் ஐந்து பாவங்கள் (5:11-12)

(17) பகுதி நியாயத்தீர்ப்பின் ஒன்பது அம்சங்கள் (5:13-19)

(18) யூதாவின் இருபது பாவங்கள் (5:20-28)

(19) நிச்சயமான நியாயத்தீர்ப்பு (5:29-31)

(20) எச்சரிப்பு - எட்டு அம்ச காரணம் (6:1-9)

(21) யூதாவின் எட்டு பாவங்கள் (6:10-17)

(22) நியாயத்தீர்ப்பின் பன்னிரெண்டு அம்சங்கள் (6:18-26)

(23) எரேமியாவின் மூன்றாவது ஊழியம் (6:27-30)

3. யூதாவுக்கு மூன்றாவது செய்தி

(1) ஆசீர்வாதத்திற்கு ஏழு நிபந்தனைகள் (7:1-7)

(2) யூதாவின் எட்டு பாவங்கள் (7:8-12)

(3) இரண்டு அம்ச நியாயத்தீர்ப்பு (7:13-15)

(4) யூதாவின் விக்கிரகாராதனை (7:16-19)

(5) ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பு (7:20)

(6) பத்து அம்ச புத்திமதி (7:21-28)

(7) புலம்பல் - காரணம் (7:29-31)

(8) பதினெட்டு அம்ச நியாயத்தீர்ப்பு (7:32-8:3)

(9) யூதாவின் பன்னிரெண்டு பாவங்கள் (8:4-9)

(10) ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு (8:10-13)

(11) யூதாவின்மீது பாபிலோனிய படையெடுப்பு முற்குறித்து கூறப்படுகிறது (8:14-17)

(12) எரேமியாவின் வருத்தம் (8:18-9:1)

(13) வருத்தத்திற்கு காரணங்கள் - யூதாவின் பதினைந்து பாவங்கள் (9:2-8)

எரேமியா – முன்னுரை

(14) ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு (9:9-12)

(15) யூதாவின் ஐந்து பாவங்கள் (9:13-14)

(16) ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பு (9:15-16)

(17) புலம்பலுக்கு அழைப்பு - ஏழு அம்ச காரணம் (9:17-22)

(18) தேவன் பிரியமாயிருக்கிறார் (9:23-24)

(19) இஸ்ரவேலும் புறஜாதியாரும் ஒன்று போல தண்டிக்கப்படுவார்கள் (9:25-26)

(20) விக்கிரகங்களின் எட்டு அம்ச மாயை (10:1-5)

(21) தேவன் இருக்கிறார் என்பதற்கு பதினெட்டு ஆதாரங்கள் (10:6-13)

(22) விக்கிரகாராதனைக் காரரின் புத்தியீனம் (10:14-16)

(23) பன்னிரெண்டு நியாயத்தீர்ப்புகள் - காரணங்கள் (10:17-25)

III. அடையாளங்கள் - தீர்க்கதரிசனங்கள்

1. எரேமியாவின் நான்காவது ஊழியம் (11:1-7)

2. யூதாவின் எட்டு பாவங்கள் (11:8-10)

3. யூதாவின்மீது பத்து அம்ச நியாயத்தீர்ப்பு (11:11-17)

4. எரேமியாவிற்கு எதிராக முதலாவது சதி - அவனுடைய சகோதரர்கள் மூலமாக (11:18-20)

5. சதிகாரர்கள்மீது நியாயத்தீர்ப்பு (11:21-23)

6. எரேமியாவின் ஜெபம் (12:1-4)

7. தேவனுடைய பதிலுரை - எரேமியாவிற்கு எச்சரிப்பு - நியாயத்தீர்ப்பின் ஏழு அம்சங்கள் (12:5-13)

8. யூதாவின் விரோதிகள்மீது நியாயத்தீர்ப்பு (12:14-17)

9. சணல் கச்சையின் அடையாளம்

(1) சணல் கச்சை வாங்கப்படுகிறது (13:1-2)

(2) சணல் கச்சை ஒளித்து வைக்கப் படுகிறது (13:3-5)

(3) ஒன்றுக்கும் உதவாத கச்சை (13:6-7)

10. இஸ்ரவேலுக்கு இது பொருந்தும் (13:8-11)

11. ஜாடிகளின் அடையாளம் (13:12)

12. யூதாவுக்கு இது பொருந்தும் (13:13-14)

13. பெருமையுடையவர்களுக்கு எச்சரிப்பு (13:15-17)

14. ஆட்சியாளர்களுக்கு எச்சரிப்பு (13:18-27)

15. மழைத்தாழ்ச்சியைப் பற்றிய செய்தி

(1) யூதாவின் பத்து அம்ச அழிவு (14:1-6)

(2) எரேமியாவின் பாவ அறிக்கை (14:7-9)

(3) தேவனுடைய பதிலுரை - நியாயத்தீர்ப்பு (14:10-12)

(4) எரேமியாவின் முறையீடு (14:13)

(5) தேவனுடைய பதிலுரை - நியாயத்தீர்ப்பு (14:14-18)

(6) எரேமியாவின் பாவ அறிக்கை (14:19-22)

(7) தேவனுடைய பதிலுரை - நியாயத் தீர்ப்பு (15:1-9)

எரேமியா - முன்னுரை

8. யூதாவின் விரோதிகள்மீது நியாயத்தீர்ப்பு (12:14-17)

9. சணல் கச்சையின் அடையாளம்

(1) சணல் கச்சை வாங்கப்படுகிறது (13:1-2)

(2) சணல் கச்சை ஒளித்து வைக்கப் படுகிறது (13:3-5)

(3) ஒன்றுக்கும் உதவாத கச்சை (13:6-7)

10. இஸ்ரவேலுக்கு இது பொருந்தும் (13:8-11)

11. ஜாடிகளின் அடையாளம் (13:12)

12. யூதாவுக்கு இது பொருந்தும் (13:13-14)

13. பெருமையுடையவர்களுக்கு எச்சரிப்பு (13:15-17)

14. ஆட்சியாளர்களுக்கு எச்சரிப்பு (13:18-27)

15. மழைத்தாழ்ச்சியைப் பற்றிய செய்தி

(1) யூதாவின் பத்து அம்ச அழிவு (14:1-6)

(2) எரேமியாவின் பாவ அறிக்கை (14:7-9)

(3) தேவனுடைய பதிலுரை - நியாயத்தீர்ப்பு (14:10-12)

(4) எரேமியாவின் முறையீடு (14:13)

(5) தேவனுடைய பதிலுரை - நியாயத்தீர்ப்பு (14:14-18)

(6) எரேமியாவின் பாவ அறிக்கை (14:19-22)

(7) தேவனுடைய பதிலுரை - நியாயத் தீர்ப்பு (15:1-9)

(8) எரேமியாவின் முறையீடு (15:10)

(9) தேவனுடைய பதிலுரை - மீதியாக இருப்பவர்கள் இரட்சிக்கப் படுவார்கள் - துன்மார்க்கர் தண்டிக்கப்படுவார்கள் (15:11-14)

(10) எரேமியாவின் பரிந்து பேசும் ஜெபம் (15:15-18)

(11) தேவனுடைய பதிலுரை - துன்ப வேளையில் எரேமியா பாதுகாக்கப்படுவார் (15:19-21)

16. திருமணமாகா தீர்க்கதரிசியின் அடையாளம்

(1) ஐந்து தடைகள் - பத்து காரணங்கள் (16:1-9)

(2) யூதாவுக்கு இது பொருந்தும் - பத்து பாவங்கள் - நியாயத்தீர்ப்பு (16:10-21)

(3) யூதாவின் அழிக்கமுடியாத பாவம் (17:1-4)

(4) உண்மையான நம்பிக்கையும் தவறான நம்பிக்கையும் (17:5-12)

(5) எரேமியாவின் ஜெபம் (17:13-18)

17. ஓய்வு நாளைக் குறித்த செய்தி

(1) ஐந்து கட்டளைகள் (17:19-23)

(2) நிபந்தனையுள்ள ஆறு ஆசீர்வாதங்கள் (17:24-26)

(3) மூன்று அம்ச நியாயத்தீர்ப்பு (17:27)

18. குயவன் வீட்டின் அடையாளம்

(1) குயவனுடைய கிரியை (18:1-4)

(2) யூதாவுக்கு இது பொருந்தும்

எரேமியா - முன்னுரை

(அ) தேவனுடைய சர்வ வல்லமை (18:5-10)

(ஆ) நியாயத்தீர்ப்பைத் தவிர்க்க வாய்ப்பு (18:11)

(இ) மறுப்பு - நியாயத்தீர்ப்பு (18:12-17)

19. எரேமியாவிற்கு எதிராக இரண்டாவது சதி - யூதாவின் மூலமாக (18:18)

20. எரேமியாவின் ஜெபம் (18:19-23)

21. குயவன் வேலையான கலசத்தின் அடையாளம்

(1) அடையாளம் - ஆறு பாவங்கள் - யூதாவின்மீது பத்து அம்ச நியாயத்தீர்ப்பு (19:1-10)

(2) யூதாவிற்கு இது பொருந்தும் - ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பு - காரணங்கள் (19:11-13)

22. தேவாலயப் பிரகாரத்தில் செய்தி (19:14-15)

IV. இஸ்ரவேலின் தலைவர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்

1. பஸ்கூருக்கு எதிரானது

(1) எரேமியாவின் மூன்றாவது உபத்திரவம் - பஸ்கூரினால் (20:1-2)

(2) பஸ்கூருக்கும் யூதாவிற்கும் எதிராக இருபது அம்ச தீர்க்கதரிசனம் (20:3-6)

(3) எரேமியாவின் பத்து அம்ச முறையீடு (20:7-10)

(4) எரேமியாவின் பத்து அம்ச நம்பிக்கை (20:11-13)

(5) எரேமியாவின் பத்து அம்ச சாபம் (20:14-18)

2. சிதேக்கியாவிற்கு எதிராக

(1) சிதேக்கியாவைப் பற்றி விசாரிப்பு (21:1-2)

(2) மூன்று அம்ச பதிலுரை

(அ) பதினாறு அம்ச நியாயத்தீர்ப்பு (21:3-7)

(ஆ) ஜீவவழியும் மரணவழியும் (21:8-10)

(இ) சிதேக்கியாவிற்கு கட்டளைகள் (21:11-14)

(3) தேவன் யூதாவை இன்னும் மீட்பார் - எட்டு நிபந்தனைகள் (22:1-4)

(4) ஏழு நியாயத்தீர்ப்புகள் (22:5-9)

3. சல்லூமுக்கு எதிராக (22:10-12)

4. யோயாக்கீமிற்கு எதிராக (22:13-19)

5. கோனியாவிற்கு எதிராக (22:20-30)

6. மேய்ப்பர்களுக்கு எதிராக

(1) விசுவாசமில்லாத மேய்ப்பர்களுக்கு ஐயோ - நான்கு பாவங்கள் (23:1-2)

(2) மேசியாவின்கீழ் மீதியாக இருப்பவர்களின் பதினான்கு அம்ச மீட்பு (23:3-8)

(3) தீர்க்கதரிசிகளின் எட்டு பாவங்கள் (23:9-14)

(4) தீர்க்கதரிசிகள்மீது நியாயத்தீர்ப்பு (23:15-20)

(5) தீர்க்கதரிசிகளின் ஆறு பாவங்கள் (23:21-27)

(6) தீர்க்கதரிசிகளின் நியாயத்தீர்ப்பு (23:28-40)

எரேமியா – முன்னுரை

V. பாபிலோனிய சிறையிருப்பைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

1. அத்திப்பழங்களின் அடையாளம்

(1) இரண்டு அத்திப்பழக் கூடைகள் - நல்லதும் கெட்டதும் (24:1-3)

(2) நல்ல அத்திப்பழங்கள் (24:4-7)

(3) கெட்ட அத்திப்பழங்கள் (24:8-10)

2. எழுபது வருஷ சிறையிருப்பைப் பற்றிய தீர்க்கதரிசனம்

(1) யூதாவின் ஏழு அம்ச கலகம் (25:1-7)

(2) பன்னிரெண்டு அம்ச நியாயத்தீர்ப்பு (25:8-11)

(3) பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு (25:12-14)

3. உக்கிரமாகிய மதுபான பாத்திரத்தின் அடையாளம்

(1) எல்லா தேசங்களும் இதைக் குடிக்க வேண்டும் (25:15-17)

(2) தேவனுடைய கோபத்தை இருபது தேசங்கள் குடிக்க வேண்டும் (25:18-26)

(3) யூதா முதலாவது குடிக்க வேண்டும் (25:27-29)

(4) யூதாவிற்கு பிறகு எல்லா தேசங்களும் குடிக்க வேண்டும் (25:30-33)

(5) தேசங்களின் தலைவர்கள் கட்டாயமாக குடிக்க வேண்டும் (25:34-38)

4. தேவாலய பிரகாரத்தில் செய்தி

(1) நிபந்தனையுள்ள இரக்கம் (26:1-6)

(2) எரேமியா கூறியதைக் கேட்டவர்கள் (26:7)

(3) செய்தியைப் புறக்கணித்து விட்டார்கள் - எரேமியாவின் நான்காவது உபத்திரவம் - ஆசாரியர் களாலும், ஜனங்களாலும் (26:8-11)

(4) எரேமியாவின் பதிலுரை (26:12-15)

(5) எரேமியாவின்மீது வாக்குவாதம் (26:16-24)

5. நுகங்களின் அடையாளம்

(1) ஆறு தேசங்களுக்கு நுகங்கள் அனுப்பப்பட்டன - தீர்க்கதரிசனம் (27:1-6)

(2) எல்லா தேசங்களும் மூன்று சந்ததிகள் கால அளவிற்கு பாபிலோனைச் சேவிக்க வேண்டும் (27:7)

(3) தேசங்களுக்கு எச்சரிப்பு (27:8)

(4) யூதாவிற்கு எச்சரிப்பு (27:9-10)

(5) நிபந்தனையுள்ள ஆசீர்வாதம் (27:11)

6. சிதேக்கியாவிற்கு நுகங்களின் அடையாளம்

(1) கட்டளைகள் (27:12-15)

(2) யூதா முழுமைக்கும் கட்டளைகள் (27:16-17)

(3) தேவாலயத்தில் மீதமுள்ள பொக்கிஷங்கள் பாபிலோனுக்குப் போகும் (27:18-22)

எரேமியா – முன்னுரை

7. தீர்க்கதரிசன போட்டி

(1) அனனியாவின் கள்ளத்தீர்க்கதரிசனம் (28:1-4)

(2) எரேமியாவின் பதிலுரை (28:5-9)

(3) அனனியாவின் கள்ளத்தீர்க்கதரிசனம் (28:10-11)

(4) எரேமியாவின் மெய் தீர்க்கதரிசனம் (28:12-16)

(5) மெய்தீர்க்கதரிசனத்திற்கு பரீட்சை (28:17)

8. முதலாவது சிறையிருப்பிலிருந்த யூதர்களுக்கு நிருபம்

(1) வீடுகளைக் கட்டி குடியிருங்கள் - பத்து அம்ச புத்திமதி (29:1-7)

(2) கள்ளத்தீர்க்கதரிசிகளை நம்ப வேண்டாம் (29:8-9)

(3) எழுபது வருஷத்திற்கு பின்பு ஒன்பது அம்ச மீட்பு (29:10-14)

(4) யூதாவிலுள்ள அவர்களுடைய சகோதரரின் ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு - காரணங்கள் (29:15-19)

(5) பாபிலோனிலுள்ள கள்ளத் தீர்க்கதரிசிகள் மீது நியாயத்தீர்ப்பு - காரணம் (29:20-23)

(6) செமாயாவின் பாவம் (29:24-29)

(7) செமாயாவின்மீது நியாயத்தீர்ப்பு (29:30-32)

VI. சிறையிருப்பிலிருந்து மீட்கப்படுவது பற்றிய தீர்க்கதரிசனங்கள்

1. யூதாவையும் இஸ்ரவேலையும் பாலஸ்தீனாவிற்கு மறுபடியுமாக கூட்டிச் சேர்ப்பது (30:1-3)

2. மகா உபத்திரவம் (30:4-7)

3. மேசியாவின்கீழ் இஸ்ரவேல் மறுபடியுமாக கூட்டிச் சேர்க்கப்படுவதன் பதினைந்து அம்சங்கள் (30:8-17)

4. எருசலேம் மறுபடியும் கட்டப்படும் (30:18)

5. இஸ்ரவேலின் பன்னிரெண்டு ஆசீர்வாதங்கள் (30:19-22)

6. மகா உபத்திரவம் (30:23-24)

7. இஸ்ரவேலின் மனந்திரும்புதல் (31:1)

8. மீட்பின் பதினான்கு அம்சங்கள் (31:2-9)

9. இஸ்ரவேலின் பத்து ஆசீர்வாதங்கள் (31:10-14)

10. அழவேண்டாம் என்று நான்கு அம்ச புத்திமதி (31:15-17)

11. இஸ்ரவேலின் மனந்திரும்புதல் (31:18-22)

12. இஸ்ரவேலின் பத்து ஆசீர்வாதங்கள் (31:23-30)

13. புதிய உடன்படிக்கையின் பத்து ஆசீர்வாதங்கள் (31:31-34)

14. சந்திரன், சூரியனைப் போன்று இஸ்ரேல் நித்திய காலமாக இருக்கும் (31:35-37)

15. எருசலேம் நித்திய நகரமாக இருக்கும் (31:38-40)

எரேமியா - முன்னுரை

16. உறவின் முறை மீட்பின் அடையாளம்

(1) சிதேக்கியாவின் கேள்வி (32:1-5)

(2) உறவின் முறை மீட்பின் நிறைவேற்றம் (32:6-14)

(3) யூதாவிற்கு பொருந்தும் (32:15)

17. எரேமியாவின் ஜெபம் - தேவனுடைய பதினாறு அம்ச மகத்துவம் (32:16-25)

18. தேவனுடைய பதிலுரை

(1) ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு - பத்து அம்ச காரணம் (32:26-36)

(2) இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவதின் பதினைந்து அம்சங்கள் (32:37-44)

19. தாவீதின் இராஜ்ஜியம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும்

(1) முதலாவதாக அழிவு (33:1-5)

(2) மீட்பின் பதினாறு அம்சம் (33:6-13)

(3) மேசியாவின் ஆளுகை - தாவீதின் உடன்படிக்கையும் லேவியரின் உடன்படிக்கையும் உறுதி பண்ணப்படுகிறது (33:14-18)

(4) சந்திரன், சூரியனைப் போல தாவீதின் உடன்படிக்கை நித்தியமாய் இருக்கும் (33:19-22)

(5) சந்திரன், சூரியனைப் போல இஸ்ரேல் நித்திய காலமாயிருக்கும் (33:23-26)

VII. பாபிலோனிய சிறையிருப்பைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

1. சிதேக்கியாவின் பன்னிரெண்டு அம்ச பதவி இழப்பும் சிறையிருப்பும் (34:1-7)

2. சிதேக்கியாவின் நீதியான ஆணை

(1) செயல் இழந்தது (34:8-11)

(2) தேவனுடைய கடிந்து கொள்ளுதல் (34:12-15)

(3) தேவனுடைய கடிந்து கொள்ளுதல் - பதினான்கு அம்ச நியாயத்தீர்ப்பு (34:16-22)

3. ரேகாபியரின் அடையாளம்

(1) ரேகாபியரின் கீழ்ப்படிதல் (35:1-11)

(2) யூதாவிற்கு பொருந்தும் (35:12-15)

(3) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு (35:16-17)

(4) ரேகாபிய உடன்படிக்கை (35:18-19)

4. யோயாக்கீமுக்கு எரேமியாவின் புஸ்தகம்

(1) நியாயத்தீர்ப்புகளின் புஸ்தகம் எழுதப்பட்டது (36:1-4)

(2) நியாயத்தீர்ப்புகளின் புஸ்தகம் யூதாவிற்கு வாசிக்கப்பட்டது (36:5-10)

(3) மிகாயாவின்மீது ஏற்பட்ட விளைவு (36:11-13)

(4) பிரபுக்களின்மீது ஏற்பட்ட விளைவு (36:14-19)

(5) யோயாக்கீமின்மீது ஏற்பட்ட விளைவு - புஸ்தகம் அழிக்கப்பட்டது (36:20-26)

எரேமியா - முன்னுரை

(6) அதிக நியாயத்தீர்ப்புக்களோடு புஸ்தகம் மறுபடியும் எழுதப்பட்டது - யோயாக்கீம் தண்டிக்கப்பட்டான் (36:27-32)

5. சிதேக்கியாவின் ஆட்சி

(1) ஆட்சிக்கு வருவதும் சுபாவமும் (37:1-2)

(2) ஜெபிக்குமாறு சிதேக்கியாவின் விண்ணப்பம் (37:3-4)

(3) கல்தேயர் எருசலேமை விட்டு புறப்பட்டுப் போனார்கள் (37:5)

(4) அவர்கள் திரும்பி வருவதைப் பற்றிய தீர்க்கதரிசனம் (37:6-10)

(5) எரேமியாவின் ஐந்தாவது உபத்திரவம்

(அ) தவறாக குற்றம் சாட்டப்பட்டு கைதானான் (37:11-14)

(ஆ) காவற்கிடங்கில் தள்ளப்பட்டான் (37:15-16)

(இ) எரேமியா விடுவிக்கப்பட்டான் (37:17)

(ஈ) இரக்கத்திற்காக எரேமியா கெஞ்சுகிறான் (37:18-20)

(உ) காவற்கிடங்கிலிருந்து காவற்சாலையின் முற்றத்திற்கு (37:21)

(ஊ) பிரபுக்கள் எரேமியாவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள் - மரண தண்டனை கொடுக்க வேண்டுமென்று கோருகிறார்கள் (38:1-4)

(எ) பிரபுக்கள் கையில் ஒப்புக் கொடுக்கப் படுகிறான் - இரண்டாவது காவற்கிடங்கில் போடப்படுகிறான் (38:5-6)

(ஏ) ஒரு எத்தியோப்பியன் அவனை விடுவிக்கிறான் - காவற்சாலையின் முற்றத்தில் வைக்கப்படுகிறான் (38:7-13)

(ஐ) சிதேக்கியாவோடு தனியாக சந்திப்பு - இரக்கத்திற்காக விண்ணப்பம் (38:14-16)

(ஒ) நிபந்தனையுள்ள இரக்கம் குறித்த தீர்க்கதரிசனம் (38:17-23)

(ஓ) சிதேக்கியா பிரபுக்களுக்காக பயப்படுகிறான் (38:24-27)

(ஔ) சிறையிருப்பு வரையிலும் எரேமியா தொடர்ந்து கைதியாகவே இருக்கிறான் (38:28)

எரேமியா – முன்னுரை

(6) யூதாவின் கடைசி சிறையிருப்பு

(அ) எருசலேம் பிடிக்கப்பட்டது (39:1-4)

(ஆ) சிதேக்கியாவின்மீது நியாயத்தீர்ப்பு (39:5-7)

(இ) எருசலேம் அழிக்கப்பட்டது (39:8)

(ஈ) கடைசியாக கடந்து போனவர்கள் (39:9)

(உ) ஒருசிலர் மீதியாக வைக்கப் பட்டார்கள் (39:10)

(ஊ) எரேமியா தப்புவிக்கப்பட்டான் (39:11-14)

(எ) எத்தியோப்பியனுக்குச் செய்தி (39:15-18)

VIII. மீதியாக இருப்பவர்களுக்கு தீர்க்கதரிசனங்கள்

1. எரேமியா விடுவிக்கப்பட்டான் (40:1-6)

2. யூதர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள் (40:7-12)

3. கெதலியாவிற்கு எதிரான சதி (40:13-16)

4. சதி நிறைவேறுகிறது (41:1-10)

5. யோகனான் தலைவனானான் (41:11-18)

6. யூதர்கள் எரேமியாவிடம் விசாரிக்கிறார்கள் (42:1-3)

7. எரேமியா தேவனிடம் விசாரிக்கிறான் (42:4)

8. யூதர்கள் கீழ்ப்படிவதாக வாக்குப் பண்ணுகிறார்கள் (42:5-6)

9. மீதியாக இருப்பவர்களுக்கு தேவனுடைய செய்தி

(1) ஆசீர்வாதம் - நிபந்தனை (42:7-12)

(2) சாபம் - நிபந்தனை (42:13-22)

10. மீதியாக இருப்பவர்களின் கலகம் (43:1-4)

11. அவர்கள் எகிப்திற்கு ஓடிப்போனார்கள் (43:5-7)

12. எகிப்தில் முதலாவது தீர்க்கதரிசனம்

(1) புதைத்து வைக்கப்பட்ட கற்களின் அடையாளம் (43:8-9)

(2) யூத ராஜ்ஜியத்திற்கு இது பொருந்தும் (43:10-13)

13. எகிப்தில் இரண்டாவது தீர்க்கதரிசனம்

(1) யூதாவின் அழிவு - காரணம் (44:1-6)

(2) யூதர்களின்மீது குற்றச்சாட்டு (44:7-10)

(3) பன்னிரெண்டு அம்ச நியாயத்தீர்ப்பு (44:11-14)

(4) புதுப்பிக்கப்பட்ட கலகம் (44:15-19)

14. எகிப்தில் மூன்றாவது தீர்க்கதரிசனம்

(1) யூதாவின் அழிவு - காரணம் (44:20-23)

(2) ஆறு அம்ச நியாயத்தீர்ப்பு (44:24-30)

இடைக்காட்சி - பாருக்கிற்கு தீர்க்கதரிசனம் (45:1-5)

IX. பன்னிரெண்டு புறஜாதியருக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்

1. எகிப்திற்கு எதிராக

(1) யுத்தத்திற்கு அழைப்பு (46:1-4)

(2) எகிப்தின் கலகம் (46:5-6)

(3) எகிப்தின் ஆணவம் (46:7-8)

எரேமியா - முன்னுரை

(4) யுத்தத்திற்கு அழைப்பு - வருங்காலம் (46:9-10)

(5) எகிப்தின் வீழ்ச்சி (46:11-12)

(6) பாபிலோனிலிருந்து நியாயத்தீர்ப்பு (46:13-17)

(7) சிறையிருப்பும் அழிவும் (46:18-26)

(8) இஸ்ரேல் மீட்கப்படும் (46:27-28)

2. பெலிஸ்தியா, தீரு, சீதோன், காப்தோர் ஆகியவற்றிற்கு எதிராக

(1) பாபிலோனிய படையெடுப்பு (47:1-5)

(2) தேவனுடைய நோக்கம் (47:6-7)

3. மோவாபிற்கு எதிராக

(1) பாபிலோனிய படையெடுப்பு ((48:1-5)

(2) மோவாபியர் தப்பி ஓடினார்கள் (48:6-10)

(3) மோவாபின் அழிவு (48:11-25)

(4) நியாயத்தீர்ப்பிற்கு பத்து காரணங்கள் (48:26-30)

(5) மோவாபிற்காக புலம்பல் (48:31-39)

(6) பாபிலோனிய படையெடுப்பு - காரணம் (48:40-43)

(7) மோவாபியர் தப்பி ஓடினார்கள் (48:44-46)

(8) மோவாபின் மீட்பு (48:47)

4. அம்மோனுக்கு எதிராக

(1) பாபிலோனிய படையெடுப்பு (49:1-2)

(2) அம்மோனுக்காக புலம்பல் (49:3)

(3) நியாயத்தீர்ப்பு - காரணம் (49:4-5)

(4) அம்மோனின் மீட்பு (49:6)

5. ஏதோமிற்கு எதிராக

(1) உடனடி அழிவு (49:7-12)

(2) வருங்கால அழிவு (49:13)

(3) பாபிலோனிய படையெடுப்பு (49:14-15)

(4) நியாயத்தீர்ப்பிற்குக் காரணம் (49:16)

(5) வருங்கால அழிவு (49:17-18)

(6) பாபிலோனிய படையெடுப்பு (49:19-22)

6. தமஸ்குவிற்கு எதிராக

(1) கலக்கமும் பலவீனமும் (49:23-24)

(2) பாபிலோனிய படையெடுப்பு (49:25-27)

7. கேதார், காத்சோர் ஆகியவற்றிற்கு எதிராக

(1) படையெடுக்கும் கட்டளை (49:28-29)

(2) ஓடுவதற்குக் கட்டளை (49:30)

(3) படையெடுக்கும் கட்டளை (49:31-32)

(4) ஆத்சோரின் அழிவு (49:33)

8. ஏலாமிற்கு எதிராக

(1) பாபிலேனியர்களால் ஏற்பட்ட அழிவு (49:34-37)

(2) கலக்கம் - நியாயத்தீர்ப்பு (49:38)

(3) ஏலாமின் மீட்பு (49:39)

9. பாபிலோனிற்கு எதிராக

(1) மேதிய - பெர்சியாவின் படையெடுப்பு (50:1-3)

(2) இஸ்ரவேலர் மறுபடியுமாக கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள் (50:4-7)

(3) படையெடுப்பு (50:8-16)

(4) பாபிலோன் தண்டிக்கப்பட்டது - இஸ்ரவேல் பாலஸ்தீனாவிற்கு திரும்ப வந்தது (50:17-20)

(5) பாபிலோனை அழிக்கும் கட்டளை (50:21-32)

(6) பாபிலோன் இஸ்ரவேலையும் யூதாவையும் அடக்கி வைத்திருந்தது (50:33-34)

(7) உடனடி நியாயத்தீர்ப்பு (50:35-38)

(8) வருங்கால நியாயத்தீர்ப்பு (50:39-40)

(9) உடனடியாக படையெடுத்து வந்தவர்கள் - மேதியா - பெர்சியா (50:41-51:4)

(10) யூதாவும் இஸ்ரவேலும் இன்னும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனமாக இருக்கிறார்கள் (51:5)

(11) வருங்கால அழிவு (51:6-8)

(12) உடனடி அழிவு (51:9-18)

(13) யாக்கோபின் பங்குவீதம் (51:19)

(14) பாபிலோனைத் தண்டிப்பதற்கு கோரேஸ் தேவனுடைய கோல் (51:20-25)

(15) பாபிலோன் நித்தியமாக அழிக்கப்படும் (51:26)

(16) உடனடி நியாயத்தீர்ப்பு (51:27-33)

(17) இஸ்ரவேலின் முறையீடு (51:34-35)

(18) தேவன் இஸ்ரவேலைப் பழிவாங்குகிறார் (51:36-44)

(19) பாபிலோனை விட்டு வெளியேறுமாறு கட்டளை (51:45-46)

(20) காரணம் - நியாயத்தீர்ப்பு (51:47-49)

(21) சீயோனுக்கு திரும்புமாறு கட்டளை (51:50-51)

(22) காரணம் - பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு - சிறையிருப்பு முடிந்தது (51:52-58)

(23) புஸ்தகத்தின் அடையாளம் (51:59-62)

(24) முக்கியத்துவம் - பாபிலோனின் வீழ்ச்சி (51:63-64)

X. யூதாவின் சிறையிருப்பு

1. யூதாவின் கலகம் (52:1-3)
2. எருசலேமின் வீழ்ச்சி (52:4-7)
3. சிதேக்கியாவின்மீது நியாயத்தீர்ப்பு (52:8-11)
4. எருசலேம் அழிக்கப்பட்டது (52:12-14)
5. யூதாவின் கடைசி சிறையிருப்பு (52:15)
6. ஒரு சிலர் மீதியாக வைக்கப்பட்டார்கள் (52:16)
7. தேவாலயத்தின் பொக்கிஷங்களை எடுத்துச் சென்றார்கள் (52:17-23)
8. ஆசாரியர்களையும் பிரபுக்களையும் வெட்டிக் கொன்று போட்டார்கள் (52:24-27)
9. நாட்டை விட்டு மூன்று வெளியேற்றங்கள் (52:28-30)
10. யோயாக்கீனின் பிந்தைய நாட்கள் (52:31-34)

எரேமியா - தொகுப்புரை

1 அதிகாரம்

I. எரேமியாவின் ஊழியம் - (1:1-19)

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்று பின்னணி - (2இராஜா 22-25; 2நாளா 34-36)

எரே 1:1 பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகிய இல்க்கியாவின் குமாரன் எரேமியாவினுடைய வசனங்கள்:

எரே 1:2 ஆமோனுடைய குமாரனாகிய யோசியா என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களில், அவன் அரசாண்ட பதின்மூன்றாம் வருஷத்தில் இவனுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

எரே 1:3 அப்புறம் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களிலும், யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா என்கிற யூதாவுடைய ராஜாவின் பதினோராம் வருஷத்து முடிவு மட்டாகவும், எருசலேம் ஊரார் ஐந்தாம் மாதத்தில் சிறைப்பட்டுப் போகும்வரைக்கும் கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று.

"எரேமியா" (Jeremiah) - இந்தப் பெயருக்குக் "கர்த்தர் உயர்ந்தவர்" "Jehovah is high" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "எரேமியா"க்கள்

1. தீர்க்கதரிசி

2. லிப்னா ஊரான் (2இராஜா 23:31; 2இராஜா 24:18; எரே 52:1)

3. ரேகாபியன் (எரே 35:3)

4. மனாசேகோத்திரத்தான் (1நாளா 4:24)

5. பென்யமீன் கோத்திரத்தான் (1நாளா. 12:4)

6. காத் ஊரான் (1நாளா. 12:10)

"இல்க்கியா" (Hilkiah) - வேதாகமத்தில் இல்க்கியா என்னும் பெயரில் ஆறு பேர் இருக்கிறார்கள். அவர்களில் இவன் பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவன். இவன் இத்தாமாரின் ஆசாரிய வழியைச் சேர்ந்தவன். (1நாளா 24:1-19) இவன் எலெயாசாரின் வழியில் வந்த பிரதான ஆசாரியன் அல்ல. (1நாளா 6:1-13).

ஆசாரியராக இருந்த தீர்க்கதரிசிகள்

1. எரேமியா (எரே 1:1)

2. நாத்தான் (1இராஜா 4:5)

3. எசேக்கியேல் (எசே 1:3)

4. சகரியா (சக. 1:1)

"பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத்" - இது எருசலேமிற்கு வடகிழக்கே மூன்று மைல் தூரத்திலுள்ளது. (எரே 1:1; எரே 11:21-23; எரே 29:27; எரே 32:7-9; யோசு 21:18; 1இராஜா 2:26; 1நாளா. 6:60; 1நாளா. 7:8; எஸ்ற 2:23; நெகே. 7:27; நெகே. 10:19)

"வசனங்கள்" - இவை எரேமியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் குறிக்கும். தீர்க்கதரிசிகள் தேவனிடத்திலிருந்து வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டு அவற்றை ஜனங்களுக்கு அறிவித்து வந்தார்கள்.

"கர்த்தருடைய வார்த்தை" - எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும், எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும் இந்த வாக்கியம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவருமே ஆசாரியர்களாக இருந்தவர்கள். இவர்கள் இந்த வாக்கியத்தை 76 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

எரேமியா - தொகுப்புரை

1 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்த காலத்தில் ஆட்சி புரிந்த ராஜாக்கள்

1. யோசியா (31 வருஷங்கள்- 2இராஜா 22:1)
2. யோவாகாஸ் (3 மாதங்கள் - 2இராஜா 23:31-33)
3. யோயாக்கீம் (11 வருஷங்கள் - 2இராஜா 23:36)
4. யோயாக்கீன் (3 மாதங்கள் - 2இராஜா 24:6-16)
5. சிதேக்கியா (11 வருஷங்கள் - 2இராஜா 24:18)

"யோசியா அரசாண்ட பதின்மூன்றாம் வருஷத்தில்" - யோசியாவின் பதின்மூன்றாவது வருஷ ராஜ்யபாரத்திலிருந்து சிதேக்கியாவின் சிறையிருப்பு வரையிலும் இடையிலுள்ள காலம் நாற்பது வருஷங்களாகும். எரேமியா தீர்க்கதரிசி சிறையிருப்பின் காலத்திலும் வாழ்ந்தவர். யோசியாவின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்குப் பின்பு எரேமியா தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பித்தார். (2நாளா. 34:3) ஏசாயாவிற்குப் பின்பு 66 வருஷங்கள் கழித்து எரேமியா தீர்க்கதரிசனம்உரைக்க ஆரம்பித்திருக்கிறார்.

"ஐந்தாம் மாதத்தில்" -இந்த மாதத்தில்தான் எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டது. (எரே 52:12; 2இராஜா 25:3-8). இதன் பின்பு, எரேமியா தொடர்ந்து தீர்க்கதரிசனம் உரைக்கிறார். (எரே 40:1; எரே 42:7; எரே 43:1-44:30).

2. எரேமியாவின் முதலாவது ஊழியம்

எரே 1:4 கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 1:5 நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.

எரே 1:6 அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றேன்.

எரே 1:7 ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை யெல்லாம் நீ பேசுவாயாக.

எரே 1:8 நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி,

எரே 1:9 கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்.

எரே 1:10 பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.

தீர்க்கதரிசன எண் - 1

"கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்......" (எரே 1:4-12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போவாய். (எரே 1:7).
2. நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை யெல்லாம் நீ பேசுவாய்.

எரேமியா - தொகுப்புரை

1 அதிகாரம்

3. நான் உன்னைக் காப்பேன். (எரே 1:8).

4. என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். (எரே 1:9).

5. பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் (எரே 1:10).

"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே" - கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் நம்முடைய தாயின் வயிற்றில் உருவாக்குகிறார். ஒருசில விசேஷித்த சமயங்களில் கர்த்தர் விசேஷித்த விதமாகக் கிரியை செய்கிறார். எரேமியா, யோசியா, கோரேசு ஆகியோருடைய பிறப்பிற்கு முன்பாகவே கர்த்தர் அவர்களைக் குறித்து சித்தம் கொண்டிருக்கிறார். (1இராஜா 13:2; ஏசா 44:28-45:1).

"உன்னை அறிந்தேன்" - எரேமியா பிறப்பதற்கு முன்பாகவே கர்த்தர் அவனை அறிந்திருக்கிறார். அவனை வேறுபிரித்து பரிசுத்தம் பண்ணியிருக்கிறார். ஊழியத்திற்கு அவனைப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார்.

தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே தேவனுக்காக வேறுபிரிக்கப்பட்டவர்கள்

1. சிம்சோன் (நியா 13:2-25)

2. சாமுவேல் (1சாமு 1:17-19,27-28)

3. எரேமியா (எரே 1:5-10)

4. யோவான்ஸ்நானன் (லூக்கா 1:15-17)

5. இயேசு கிறிஸ்து (மத் 1:18-25)

6. பவுல் (கலா 1:15-16)

"நான் பேச அறியேன்" - (யாத் 4:10; ஏசா 6:5)

"சிறுபிள்ளை" - இந்த வசனத்தில் எரேமியா தன்னைச் சிறுபிள்ளை என்று அழைத்தாலும் இந்த எபிரெய வார்த்தையானது 20 வயது முதல் 30 வயது வரையிலும் உள்ளவர்களைக் குறிக்கிற வார்த்தையாகும்.

"நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்" - (யாத் 3:12; உபா 31:6; எசே 2:6; அப் 26:17).

"உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்" - எரேமியாவின் ஊழியக்காலத்தின் பின்பகுதியில் கர்த்தருடைய இந்த வார்த்தை அவருக்கு நிறைவேறிற்று. (எரே 19:14-20:18; எரே 32:1-25; எரே 37:1-38:28).

"என் வாயைத் தொட்டு" - (ஏசா 6:6-7; எசே 2:8-9; தானி 10:16)

"என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்" - பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (அப் 3:21; 2தீமோ. 3:16-17; 2பேதுரு 1:21).

"இன்றையதினத்தில்" நடைபெற்ற சம்பவங்கள்

1. காயீன் துரத்திவிடப்பட்டான். (ஆதி 4:14)

2. ஜெபத்திற்குப் பதில் கிடைத்தது. (ஆதி 24:12,15)

3. சேஷ்டபுத்திரபாகம் விற்றுப் போடப்படுகிறது. (ஆதி 25:31)

4. சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப் போடுவதற்கு ஆணையிடப்படுகிறது (ஆதி 25:33)

5. பானபாத்திரக்காரன் செய்த குற்றம் அவனுடைய நினைவில் வந்தது. (ஆதி 41:9)

6. நினைவுகூருதலின் நாள். (யாத் 12:14,17)

7. எகிப்திலிருந்து புறப்பட்ட நாளை நினைவுகூருவது. (யாத் 13:3)

8. சத்துருக்களின்மீது பயம் வருவது. (உபா. 2:25)

1 அதிகாரம்

9. தேவன் மனுஷனோடு பேசியது. (உபா. 5:24)

10. ஜெயம் பெற்றது. (1சாமு 14:45)

11. எரேமியா ஊழியத்திற்குப் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. (எரே 1:10)

12. வேதவாக்கியம் நிறைவேறிற்று (லூக்கா 4:16-21)

13. இரட்சிப்பு (லூக்கா 19:9)

14. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு (லூக்கா 2:11)

"கட்டவும், நாட்டவும்" - இது வருங்காலத்தில் நடைபெறும் சம்பவம். (எரே 31:28; எரே 32:41; எரே 42:10; எசே 17:22-24; எசே 34:29; எசே 36:36; அப் 15:13-18).

3. வாதுமை மரக்கிளையின் அடையாளம் - முக்கியத்துவம் - நிறைவேற்றம்

எரே 1:11 பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்று கேட்டார்; வாதுமைமரத்தின் கிளையைக் காண்கிறேன் என்றேன்.

எரே 1:12 அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே; என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்.

"வாதுமைமரத்தின் கிளை" - எரே 46:17; ஆதி 30:37-41 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருப்பதுபோல இது வாதுமை மரத்தின் கிளையினால் செய்யப்பட்ட கோல் ஆகும். இந்த வாக்கியத்தில் வாதுமை மரத்தின் கிளையானது ஒரு ஜாமக்காரனுக்கு ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கிறது. இவன் யூதாவின்மீது பாபிலோன் ராஜா படையெடுத்து வருவதைக் கவனித்துக் கொண்டிருக்கிறான். (எரே 1:13-16) பாபிலோனின் சேனை யூதா தேசத்திற்குள் விரைவாக வரும். (எரே 1:12).

4. பொங்குகிற பானையின் அடையாளம் - முக்கியத்துவம் - பாபிலோனிய படையெடுப்பு

எரே 1:13 கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் எனக்கு உண்டாகி, அவர்: நீ காண்கிறது என்ன என்று கேட்டார்; பொங்குகிற பானையைக் காண்கிறேன், அதின் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது என்றேன்.

எரே 1:14 அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார்மேலும் வரும்.

எரே 1:15 இதோ, நான் வடதிசை ராஜ்யங்களின் வம்சங்களையெல்லாம் கூப்பிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் வந்து அவனவன் தன் தன் சிங்காசனத்தை எருசலேமின் ஒலிமுகவாசல்களுக்கும், அதின் சுற்றுமதில்கள் எல்லாவற்றிற்கும் விரோதமாகவும், யூதாதேசத்து எல்லாப் பட்டணங்களுக்கும் விரோதமாகவும் வைப்பார்கள்.

எரே 1:16 அவர்கள் என்னைவிட்டு அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டி, தங்கள் கைகளின் கிரியையைப் பணிந்துகொண்ட அவர்களுடைய சகல தீமைகளினிமித்தமும் நான் என் நியாயத் தீர்ப்புகளை அவர்களுக்கு விரோதமாகக் கூறுவேன்.

தீர்க்கதரிசன எண் - 2

"கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் எனக்கு உண்டாகி......" (எரே 1:13-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார் மேலும் வரும். (எரே 1:14).

2. கர்த்தர் வடதிசை ராஜ்யங்களின் வம்சங்களையெல்லாம் கூப்பிடுவார். (எரே 1:15).

எரேமியா - தொகுப்புரை

1 அதிகாரம்

3. அவர்களுடைய சகல தீமைகளினிமித்தமும் கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புகளை அவர்களுக்கு விரோதமாகக் கூறுவார். (எரே 1:16).

4. கர்த்தர் உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத் தூணும், வெண்கல அலங்கமும் ஆக்குவார். (எரே 1:18).

5. அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள் (எரே 1:19).

6. அவர்கள் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்.

7. கர்த்தர் உன்னை இரட்சிக்கும்படிக்கு உன்னுடனே இருக்கிறார்.

"பொங்குகிற பானையைக் காண்கிறேன், அதின் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது" - யூதாவின்மீது பாபிலோனின் படையெடுப்பு இங்கு அடையாளமாகக் கூறப்படுகிறது. வடக்கு திசையிலிருந்து பாபிலோன் தேசத்தார் வருவார்கள். (எரே 1:13-14) பாபிலோன் கிழக்கு திசையில் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் பாலஸ்தீன தேசத்திற்கு வரும்போது வனாந்தரத்தைச் சுற்றி வந்து பாலஸ்தீன தேசத்திற்குள் வடக்கு திசையிலிருந்து வர வேண்டும்.

"அவனவன் தன் தன் சிங்காசனத்தை எருசலேமின் ஒலிமுகவாசல்களுக்கும்" - இது எரே 39:3 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் நிறைவேறிற்று.

"யூதா தேசம்" - ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தைப் போலவே எரேமியாவின் புஸ்தகத்திலும் யூதா தேசத்தைப் பற்றியே தீர்க்கதரிசனம் பிரதானமாகக் கூறப் பட்டிருக்கிறது. சமாரியா அல்லது இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரைப் பற்றி எரேமியா தீர்க்கதரிசனம் எதுவும் கூறவில்லை. எரேமியா தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு 93 வருஷங்களுக்கு முன்பாகவே சமாரியர் சிறையிருப்புக்குச் சென்றுவிட்டார்கள். ஏசாயாவிலிருந்து மல்கியா வரையிலும் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள் யூதா தேசத்தாரைப் பற்றியே அதிகமாகக் கூறியிருக்கிறார்கள். இவர்கள் யூதர்கள் எனவும், இஸ்ரவேல் தேசத்தார் எனவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தர் யூதாவிற்கு விரோதமாக நியாயத் தீர்ப்புக்களைக் கூறுவதற்குக் காரணம்

1. அவர்களுடைய சகல தீமைகள்
2. அவர்கள் கர்த்தரைவிட்டு விட்டார்கள்.
3. அவர்கள் அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டினார்கள்.
4. அவர்கள் தங்கள் கைகளின் கிரியையைப் பணிந்துகொண்டார்கள்.

5. எரேமியாவின் இரண்டாவது ஊழியம்

எரே 1:17 ஆகையால் நீ உன் அரையைக் கட்டிக்கொண்டு நின்று, நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்; நான் உன்னை அவர்களுக்கு முன்பாகக் கலங்கப் பண்ணாதபடிக்கு, நீ அவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு.

எரே 1:18 இதோ, தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும், தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன்.

எரே 1:19 அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா - தொகுப்புரை

1 அதிகாரம்

கர்த்தர் எரேமியாவிற்குக் கூறும் கட்டளை

1. நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே (எரே 1:7).
2. நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; (எரே 1:8).
3. நீ உன் அரையைக் கட்டிக்கொண்டு நில். (எரே 1:17).
4. நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை யெல்லாம் அவர்களுக்குச் சொல்.
5. நீ அவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு.

எரேமியாவின் அடையாளங்கள்

1. அரணிப்பான பட்டணம்
2. இருப்புத்தூண்
3. வெண்கல அலங்கம்

எரேமியாவின் தீர்க்கதரிசன விவரம்

1. தேசமனைத்துக்கும் எதிராக.
2. யூதாவின் ராஜாக்களுக்கு எதிராக
3. யூதாவின் பிரபுக்களுக்கு எதிராக
4. யூதாவின் ஆசாரியர்களுக்கு எதிராக
5. தேசத்தின் ஜனங்களுக்கு எதிராக

எரேமியாவிற்குக் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தம்

1. அவர்கள் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்.
2. உன்னை நான் இரட்சிப்பேன்.
3. நான் உன்னுடனே இருக்கிறேன்.

2 அதிகாரம்

II. யூதாவுக்கு எதிராக தேவனுடைய வழக்கு - (2:1-10:25; ஏசா 1:2)

1. யூதாவுக்கு முதலாவது செய்தி - (2:1-3:5)

(1) கன்னித்தன்மையின் ஏழு அம்சங்கள்

எரே 2:1 கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 2:2 நீ போய், எருசலேமின் செவிகள் கேட்கும்படிக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: விதைக்கப் படாத தேசமாகிய வனாந்தரத்திலே நீ என்னைப் பின்பற்றிவந்த உன் இளவயதின் பக்தியையும், நீ வாழ்க்கைப் பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:3 இஸ்ரவேல் கர்த்தருக்குப் பரிசுத்தமும், அவருடைய விளைவின் முதற்பலனுமாயிருந்தது; அதைப் பட்சித்த யாவரும் குற்றவாளிகளானார்கள்; பொல்லாப்பு அவர்கள்மேல் வந்ததென்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 3

"கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்......" (எரே 2:1-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. எரே 2:1-35 ஆகிய வசனங்களில் எரேமியா யூதாவிற்குக் கூறும் செய்தி இந்த வசனத்திலிருந்து ஆரம்பமாகிறது.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அதைப் பட்சித்த யாவரும் குற்றவாளிகளானார்கள் (எரே 2:3)
2. பொல்லாப்பு அவர்கள்மேல் வந்தது.

எரேமியா 2 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீ போய், எருசலேமின் செவிகள் கேட்கும் படிக் கூப்பிட்டுச் சொல் (எரே 2:2)
2. நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். (எரே 2:4).
3. நீங்கள் பிரமியுங்கள் (எரே 2:12).
4. நீங்கள் கொந்தளியுங்கள்.
5. நீங்கள் மிகவும் திடுக்கிடுங்கள்.

கர்த்தர் இஸ்ரவேலைக் குறித்து நினைவுகூரும் காரியங்கள்

1. நீ என்னைப் பின்பற்றிவந்த உன் இளவயதின் பக்தியை நினைத்திருக்கிறேன். (எரே 2:2).
2. நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தை நினைத்திருக்கிறேன்.
3. விதைக்கப்படாத தேசமாகிய வனாந்தரத்தில் நீ என்னைப் பின்பற்றி வந்ததை நினைத்திருக்கிறேன்.
4. இஸ்ரவேல் கர்த்தருக்குப் பரிசுத்தமாய் இருந்ததை நினைத்திருக்கிறேன். (எரே 2:3).
5. இஸ்ரவேல் விளைவின் முதற் பலனாயிருந்ததை நினைத்திருக்கிறேன்.

(2) யூதாவின் பத்து பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 2:4 யாக்கோபின் குடும்பத்தாரே, இஸ்ரவேல் குடும்பத்தின் வம்சங்களே, நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரேமியா - தொகுப்புரை

2 அதிகாரம்

எரே 2:5 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினவரும், அவாந்தரவெளியும், பள்ளங்களுமுள்ள தேசமும், வறட்சியும், மரண இருளுமுள்ள தேசமும், ஒருவனும் கடவாமலும் ஒரு மனுஷனும் குடியிராமலும் இருக்கிற தேசமுமான வனாந்தரத்தில் எங்களை நடத்தினவருமாகிய கர்த்தர் எங்கேயென்று உங்கள் பிதாக்கள் கேளாமல்,

எரே 2:6 என்னைவிட்டுத் தூரப்பட்டு, மாயையைப் பின்பற்றி, வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்?

எரே 2:7 செழிப்பான தேசத்தின் கனியையும் நன்மையையும் சாப்பிடும் படிக்கு நான் உங்களை அவ்விடத்துக்கு அழைத்துக் கொண்டுவந்தேன்; ஆனாலும் நீங்கள் அதற்குள் பிரவேசித்தபோது, என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தை அருவருப்பாக்கினீர்கள்.

எரே 2:8 கர்த்தர் எங்கேயென்று ஆசாரியர்கள் சொல்லாமலும், வேதத்தைப் போதிக்கிறவர்கள் என்னை அறியாமலுமிருந்து, மேய்ப்பர்கள் எனக்குத் துரோகம் பண்ணினார்கள்; தீர்க்கதரிசிகள் பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ் சொல்லி, வீணானவைகளைப் பின்பற்றினார்கள்.

"இஸ்ரவேல் குடும்பத்தின் வம்சங்களே" - இந்த வாக்கியம் இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரை மாத்திரம் என்று குறிப்பிடாமல் இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரையும் குறிப்பிடுகிறது. இவர்கள் யாக்கோபின் குடும்பத்தார் என்றும், (எரே 2:4), யூதா என்றும் (எரே 2:28) அழைக்கப்படுகிறார்கள்.

யூதாவின் பாவங்கள்

1. என்னைவிட்டுத் தூரப்பட்டார்கள். (எரே 2:6)
2. மாயையைப் பின்பற்றினார்கள்.
3. வீணராய்ப் போனார்கள்.
4. என்னை விசாரியாமல் போனார்கள். (எரே 2:6)
5. என் தேசத்தைத் தீட்டுப்படுத்தினார்கள். (எரே 2:7)
6. என் சுதந்தரத்தை அருவருப்பாக்கினார்கள்.
7. ஆசாரியர்கள் கர்த்தரிடத்தில் விசாரிக்க வில்லை. (எரே 2:8).
8. மேய்ப்பர்கள் எனக்கு துரோகம் பண்ணினார்கள்.
9. தீர்க்கதரிசிகள் பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள்.
10. அவர்கள் வீணானவைகளைப் பின்பற்றினார்கள்.

"ஒருவனும் கடவாமலும் ஒரு மனுஷனும் குடியிராமலும் இருக்கிற தேசம்" - இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது அவர்கள் பிரயாணம் பண்ணிய வனாந்தரத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (எண் 14:25-35; உபா. 1:19; உபா 2:7).

"செழிப்பான தேசம்" - பாலஸ்தீன தேசம் செழிப்பாக இருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தார் பிரயாணம் பண்ணி வந்த வனாந்தரத்தைப் போன்று பாலஸ்தீன தேசம் வறட்சியாக இல்லை. (எசே 20:6,15).

"என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தை அருவருப்பாக்கினீர்கள்" - இஸ்ரவேல் தேசத்தார் தங்களுடைய பாவத்தினால் பாலஸ்தீன தேசத்தைத் தீட்டுப் படுத்திவிட்டார்கள். இதுவும் ஒரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகும். (லேவி 26; உபா 28).

2 அதிகாரம்

தேவதூஷணத்திற்குக் காரணமானவர்கள்

1. ஆசாரியர்கள்
2. மேய்ப்பர்கள்
3. தீர்க்கதரிசிகள்

(3) தேவனுடைய வழக்கு

(அ) தேவர்களை மாற்றினார்கள்

எரே 2:9 ஆதலால் இன்னும் நான் உங்களோடே வழக்காடுவேன், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் வழக்காடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:10 நீங்கள் கித்தீமின் தீவுகள்மட்டும் கடந்துபோய்ப் பார்த்து, கேதாருக்கு ஆள் அனுப்பி நன்றாய் விசாரித்து, இப்படிப்பட்ட காரியம் உண்டோ என்றும்,

எரே 2:11 எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ என்றும் பாருங்கள்; என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள்.

தீர்க்கதரிசன எண் - 4

"ஆதலால் இன்னும் நான் உங்களோடே வழக்காடுவேன்." (எரே 2:9-11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உங்களோடே வழக்காடுவேன். (எரே 2:9).
2. உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடு வழக்காடுவேன்

"நீங்கள் கித்தீமின் தீவுகள்மட்டும் கடந்துபோய்" - கித்தீமும், கேதாரும் கிழக்கு, மேற்கு திசைகளைக் குறிக்கும். இஸ்ரவேல் புத்திரரைப்போல பாவம் செய்தவர்கள் இந்த உலகத்தில் எங்கும் காணப்படவில்லை. கர்த்தர் அவர்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்திருந்தபோதும் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணினார்கள். (எரே 2:10-11).

"என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள்" - இது ரோமர் 1:21-28 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாவமாகும்.

(ஆ) இரண்டு தீமைகளைச் செய்தார்கள்

எரே 2:12 வானங்களே, இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து, மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:13 என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்.

யூதாவின் தீமைகள்

1. ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்.
2. தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள். (2 இராஜா 18:31; ஏசா 36:16)

(இ) வரப்போகிற சிறையிருப்பு

எரே 2:14 இஸ்ரவேல் ஒரு வேலைக்காரனோ? அவன் வீட்டில் பிறந்த அடிமையோ? ஏன் கொள்ளையானான்?

எரேமியா - தொகுப்புரை

2 அதிகாரம்

(உ) தேவனுடைய கடந்த கால கிரியைகள்

எரே 2:20 பூர்வகாலந்துவக்கி நான் உன் நுகத்தடியை முறித்து, உன் கட்டுகளை அறுத்தேன்; நான் அடிமைப் படுவதில்லையென்று நீயும் சொன்னாயே; ஆகிலும், உயரமான சகல மேட்டின் மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் நீ வேசியாய்த் திரிகிறாய்.

எரே 2:21 நான் உன்னை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?

"பூர்வகாலம்" - இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்த காலம். இது எரேமியாவின் காலத்திற்கு 1,034 வருஷங்களுக்கு முற்பட்டது.

"நான் அடிமைப்படுவதில்லை" - (எரே 19:8; எரே 24:3,7)

"நற்கனி தரும் உயர்குலத் திராட்சச் செடி" - இந்த வாக்கியம் இஸ்ரவேலைக் குறிக்கிறது. (உபா 32:32; நியா 9:12-13; சங் 80:8,14; ஏசா 5:1-7; எசே 15:2-6; எசே 17:6-8; ஓசி 10:1; ரோமர் 11).

(ஊ) நம்பிக்கையின்மை

எரே 2:22 நீ உன்னை உவர் மண்ணினாலே கழுவி, அதிக சவுக்காரத்தைக் கையாடினாலும், உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்குமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எரே 2:23 நான் தீட்டுப்படவில்லை; நான் பாகால்களைப் பின்பற்றவில்லை என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? பள்ளத்தாக்கிலே நீ நடக்கிற மார்க்கத்தைப் பார்; நீ செய்ததை உணர்ந்துகொள்; தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ணொட்டகம் நீ.

எரே 2:24 வனாந்தரத்திலே பழகினதும், தன் இச்சையின் மதவெறியிலே காற்றை உட் கொள்ளுகிறதுமான காட்டுக்கழுதை நீ; அதின் ஆவலை நிறுத்தி, அதைத் திருப்புகிறவன் யார்? அதைத் தேடுகிறவர்கள் ஒருவரும் வருத்தப் படவேண்டியதில்லை; அதின் மாசத்தில் அதைக் கண்டுபிடிப்பார்கள்.

எரே 2:25 உன் கால் வெறுங் காலாகாதபடிக்கும், உன் தொண்டை வறட்சியடையாத படிக்கும் அடக்கிக்கொள் என்றால், நீ: அது கூடாதகாரியம்; நான் அப்படிச் செய்யமாட்டேன்; அந்நியரை நேசிக்கிறேன்; அவர்கள் பிறகே போவேன் என்கிறாய்.

"உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்கும்" - இஸ்ரவேலின் பாவங்களை உவர்மண்ணாலோ அல்லது சவுக்காரத்தாலோ கழுவ முடியாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே மனுஷருடைய சகல பாவங்களையும் நீக்கி அவர்களைச் சுத்திகரிக்கும். (மத் 26:28; எபி 9:22; 1யோவான் 1:7; வெளி 1:5).

"தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ணொட்டகம்" - பாவம் செய்வதற்கு இஸ்ரவேல் புத்திரர் வேகமாக ஓடுகிறார்கள். (எரே 2:23-24).

(எ) விக்கிரகாராதனை

எரே 2:26 திருடன் அகப்படுகிறபோது, எப்படி வெட்கப்படுகிறானோ, அப்படியே இஸ்ரவேல் வம்சத்தார் வெட்கப் படுவார்கள்; கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும்; கல்லைப்பார்த்து, நீ என்னைப் பெற்றாய் என்றும் சொல்லுகிற அவர்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும் வெட்கப்படுவார்கள்.

எரே 2:27 அவர்கள் தங்கள் முகத்தையல்ல, தங்கள் முதுகை எனக்குக் காட்டினார்கள்; தங்கள் ஆபத்துக் காலத்திலோ எழுந்து எங்களை இரட்சியும் என்கிறார்கள்.

2 அதிகாரம்

எரே 2:28 நீ உனக்கு உண்டுபண்ணின தேவர்கள் எங்கே? உன் ஆபத்துக் காலத்தில் உன்னை இரட்சிக்கக் கூடுமானால் அவைகள் எழும்பட்டும்; யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும், உன் தேவர்களின் இலக்கமும் சரி.

"இஸ்ரவேல் வம்சத்தார்" - இந்த வாக்கியம் எரேமியாவின் புஸ்தகத்தில் 20 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எரே 2:4,26; எரே 3:18,20; எரே 5:11,15; எரே 9:26; எரே 10:1; எரே 11:10,17; எரே 13:11; எரே 18:6; எரே 23:8; எரே 31:27,31,33; எரே 33:14,17;எரே 48:13). "யூதா வம்சத்தார்" என்னும் வாக்கியம் 11 தல்வைகள் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எரே 3:18; எரே 5:11; எரே 11:10,17; எரே 12:14; எரே 13:11; எரே 27:6; எரே 31:27,31; எரே 33:14; எரே 36:3)

தீர்க்கதரிசன எண் - 6

"கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும்; கல்லைப்பார்த்து, நீ என்னைப் பெற்றாய் என்றும் சொல்லுகிற அவர்களும்....." (எரே 2:26-27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. எரேமியா இந்த தீர்க்கதரிசனத்தை உரைத்த பின்பும் அவர்கள் விக்கிரகங்களை வழிபட்டார்கள். தங்களுடைய ஆபத்துக்காலத்திலோ கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.

"கட்டை.........கல்" - இவை விக்கிரகங்களைக் குறிக்கும் வார்த்தையாகும். இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களுக்காகக் கர்த்தரைத் துதிக்காமல் விக்கிரகங்களைத் துதிக்கிறார்கள். (ஏசா 44:19).

"உன் ஆபத்துக்காலத்தில் உன்னை இரட்சிக்கக்கூடுமானால் அவைகள் எழும்பட்டும்" - இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை ஆராதித்தாலும் தங்களுடைய ஆபத்துக் காலங்களில் கர்த்தரை நோக்கியே கூப்பிடுகிறார்கள்.

அவர்களுக்கு ஏராளமான விக்கிரகங்கள் உள்ளன. அவர்களுடைய ஆபத்துக் காலங்களில் அந்த விக்கிரகங்கள்ளால் அவர்களுக்கு உதவி புரிய முடியாது.

(4) இஸ்ரவேலின் கேள்வி - பதில் - யூதாவின் பதினாறு பாவங்கள்

எரே 2:29 என்னோடே நீங்கள் வழக்காடுவானேன்? நீங்கள் அனைவரும் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:30 நான் உங்கள் பிள்ளைகளை அடித்தது விருதா; சிட்சையை ஏற்றுக்கொள்ளாமற் போனார்கள்; அழிக்கிற சிங்கத்தைப்போல உங்கள் பட்டயம் உங்கள் தீர்க்கதரிசிகளைப் பட்சித்தது.

எரே 2:31 சந்ததியாரே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைச் சிந்தித்துப் பாருங்கள்; நான் இஸ்ரவேலுக்கு வனாந்தரமும், காரிருளான பூமியுமாக இருந்தேனோ? பின்னை ஏன் என் ஜனங்கள்; நாங்களே எஜமான்கள், இனி உம்மிடத்தில் நாங்கள் வருவதில்லை யென்று சொல்லுகிறார்கள்.

எரே 2:32 ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள்.

எரே 2:33 நேசத்தைத் தேடும்படிக்கு நீ உன் வழிகளை நயப்படுத்துகிறதென்ன? இவ்விதமாய் நீ பொல்லாத ஸ்திரீகளுக்கும் உன் வழிகளைக் கற்றுக்கொடுத்தாய்.

எரே 2:34 உன் வஸ்திர ஓரங்களிலும் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம் காணப்படுகிறது; அதைத் தோண்டித் தேடுகிறதினால் அல்ல, அது எல்லாவற்றின்மேலும் வெளியாயிருக்கிறதினால் அதைக் கண்டுபிடித்தேன்.

2 அதிகாரம்

எரே 2:35 ஆகிலும்: குற்றமில்லாதிருக்கிறேன் என்றும், அவருடைய கோபம் என்னை விட்டுத் திரும்பிற்று என்றும் சொல்லுகிறாய்; இதோ, நான் பாவஞ்செய்ய வில்லையென்று நீ சொல்லுகிறதினிமித்தம் நான் உன்னோடே வழக்காடுவேன்.

எரே 2:36 நீ உன் வழியை மாற்றிமாற்றி இவ்வளவாய் விலகிப்போகிறது என்ன? நீ அசீரியாவினால் வெட்கிப்போனது போல எகிப்தினாலும் வெட்கிப்போவாய்.

எரே 2:37 நீ உன் கைகளை உன் தலையின்மேல் வைத்துக்கொண்டு இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போவாய்; ஏனெனில், உன் நம்பிக்கைகளைக் கர்த்தர் வெறுத்திருக்கிறார்; அவைகளால் உனக்குக் காரியம் வாய்க்காது.

யூதாவின் பாவங்கள்

1. சிட்சையை ஏற்றுக்கொள்ளாமற் போனார்கள் (எரே 2:30)
2. அவர்களுடைய பட்டயம் அவர்களுடைய தீர்க்கதரிசிகளைப் பட்சித்தது.
3. இனி உம்மிடத்தில் நாங்கள் வருவதில்லையென்று சொல்லுகிறார்கள். (எரே 2:31)
4. எண்ணிமுடியாத நாட்களாய் கர்த்தரை மறந்துவிட்டார்கள். (எரே 2:32)
5. நேசத்தைத் தேடும்படிக்கு அவர்கள் தங்களுடைய வழிகளை நயப்படுத்துகிறார்கள். (எரே 2:33)
6. பொல்லாத ஸ்திரீகளுக்கு அவர்கள் தங்களுடைய வழிகளைக் கற்றுக்கொடுத்தார்கள்.
7. அவர்களுடைய வஸ்திர ஓரங்களில் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம் காணப்படுகிறது (எரே 2:34)
8. குற்றமில்லாதிருக்கிறேன் என்றும், அவருடைய கோபம் என்னை விட்டுத் திரும்பிற்று என்றும் சொல்லுகிறார்கள். (எரே 2:35)
9. நான் பாவஞ்செய்யவில்லையென்று சொல்லுகிறார்கள்.
10. அவர்கள் தங்களுடைய வழியை மாற்றிமாற்றி இவ்வளவாய் விலகிப் போகிறார்கள். (எரே 2:36)
11. முந்திய மனைவியினிடத்திற்குத் திரும்பிப் போனார்கள். (எரே 3:1)
12. அநேக நேசரோடே வேசித்தனம் பண்ணினார்கள்.
13. அவர்கள் மேடுகளின்மேல் வேசித்தனம் பண்ணினார்கள். (எரே 3:2)
14. தங்களுடைய வேசித்தனங்களாலும், தங்களுடைய அக்கிரமங்களாலும் தேசத்தைத் தீட்டுப்படுத்தினார்கள்.
15. அவர்கள் "நாணமாட்டேன்" என்று சொல்லுகிறார்கள். (எரே 3:3)
16. அவர்கள் பொல்லாப்புகளைச் செய்து, மிஞ்சிப்போகிறார்கள். (எரே 3:5)

"நான் உங்கள் பிள்ளைகளை அடித்தது விருதா; சிட்சையை ஏற்றுக்கொள்ளாமற் போனார்கள்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைத் தம்முடைய தீர்க்கதரிசிகளின் மூலமாக எச்சரித்தார். ஆனால் அவர்களோ அந்தத் தீர்க்கதரிசிகளையே கொன்றுபோட்டார்கள். அதே சமயத்தில் தாங்கள் கொன்றுபோட்ட தீர்க்கதரிசிகளைக் குறித்தும், கர்த்தருடைய சிட்சையைக் குறித்தும் பயமில்லாமல் இருக்கிறார்கள்.

"சந்ததியாரே" - எரேமியாவின் காலத்தில் இருந்த சந்ததியாரை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது.

எரேமியா - தொகுப்புரை

2 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 7

"இதோ, நான் பாவஞ் செய்யவில்லையென்று நீ சொல்லுகிறதினிமித்தம் நான் உன்னோடே வழக்காடுவேன்......" (எரே 2:35-37) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உன்னோடே வழக்காடுவேன். (எரே 2:35).
2. நீ அசீரியாவினால் வெட்கிப்போனது போல எகிப்தினாலும் வெட்கிப் போவாய். (எரே 2:36).
3. நீ உன் கைகளை உன் தலையின்மேல் வைத்துக்கொள்வாய். (எரே 2:37).
4. இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போவாய்
5. உன் நம்பிக்கைகளால் உனக்குக் காரியம் வாய்க்காது.

"நீ அசீரியாவினால் வெட்கிப்போனதுபோல எகிப்தினாலும் வெட்கிப்போவாய்" - யூதா தேசத்தில் பலவிதமான பிரிவினர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு சத்துருக்களிடமிருந்து நெருக்கங்கள் வந்தபோது தங்களுடைய பாதுகாப்பிற்காக அவரவர்கள் வெவ்வேறு திசையை நோக்கிச் சென்றார்கள். ஒருசிலர் உதவிக்காக எகிப்துக்குப் போனார்கள். ஆனால் அவர்களுக்கோ எகிப்திலிருந்து உதவி வரவில்லை. எகிப்து யூதாவை ஜெயித்தது. யோசியா ராஜா கொல்லப்பட்டான். யூதாவின் ஜனங்கள் ஒடுக்கப்பட்டார்கள். (2இராஜா 23:28-37).

"நீ உன் கைகளை உன் தலையின்மேல் வைத்துக்கொண்டு" - இது அழுகைக்கும், புலம்பலுக்கும், துக்கத்திற்கும் அடையாளமாகும். இந்த உபத்திரவம் அவர்களுக்கு எகிப்தியர் மூலமாக வந்தது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நம்பி அவரைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக எகிப்தை நம்பினார்கள். இதனால் அவர்களுக்கு நெருக்கங்கள் உண்டாயிற்று. (2சாமு 13:19; 2சாமு 15:32).

3 அதிகாரம்

எரே 3:1 ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிட, அவள் அவனிடத்திலிருந்து புறப்பட்டுப்போய், அந்நிய புருஷனுக்கு மனைவியானால், அவன் அவளிடத்தில் இனித் திரும்பப்போவானோ? அந்த தேசம் மிகவும் தீட்டுப்படுமல்லவோ? என்று மனுஷர் சொல்லுவார்கள்; நீயோவென்றால் அநேக நேசரோடே வேசித்தனம்பண்ணினாய்; ஆகிலும் என்னிடத்திற்குத் திரும்பிவா என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:2 நீ மேடுகளின்மேல் உன் கண்களை ஏறெடுத்து, நீ வேசித்தனம் பண்ணாத இடம் ஒன்று உண்டோ என்று பார்; வனாந்தரத்திலே அரபியன் காத்துக் கொண்டிருக்கிறதுபோல, நீ வழி ஓரங்களில் உன் நேசருக்குக் காத்துக் கொண்டிருந்து, உன் வேசித்தனங்களாலும், உன் அக்கிரமங்களாலும் தேசத்தைத் தீட்டுப்படுத்தினாய்.

எரே 3:3 அதினிமித்தம் மழை வருஷியாமலும், பின்மாரியில்லாமலும் போயிற்று; உனக்கோ, சோரஸ்திரீயின் நெற்றியிருக்கிறது; நீயோ: நாணமாட்டேன் என்கிறாய்.

எரே 3:4 நீ இதுமுதல் என்னை நோக்கி: என் பிதாவே, தேவரீர் என் இளவயதின் அதிபதியென்று சொல்லி,

எரே 3:5 சதாகாலமும் கோபத்தை வைப்பாரோ? அதை என்றென்றைக்கும் காப்பாரோ என்கிறாய் அல்லவோ? இதோ, இப்படி நீ சொல்லியும் பொல்லாப்புகளைச் செய்து, மிஞ்சிப் போகிறாய் என்கிறார்.

"அவன் அவளிடத்தில் இனித் திரும்பப் போவானோ?" - தள்ளிவிட்ட ஸ்திரீயினிடத்தில் திரும்பப்போய் சேருவது மோசேயின் பிரமாணத்தின்படி தடைபண்ணப்பட்டிருக்கிறது. (உபா. 24:1-4) புதிய ஏற்பாட்டில் இதுபோன்ற தடை எதுவும் இல்லை.

"என்னிடத்திற்குத் திரும்பிவா என்று கர்த்தர் சொல்லுகிறார்" - யூதர்களைத் தம்மிடத்திற்குத் திரும்ப அழைத்துக் கொள்வதற்குக் கர்த்தர் இன்னும் கிரியை செய்து கொண்டிருக்கிறார். எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தினுடைய முதல் பகுதி முழுவதிலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்வதற்குக் கொடுக்கும் அழைப்பு விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் பின்பகுதியில் இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இரக்கமில்லாமல் வெளிப்படும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. (எரே 25:1-38).

"வனாந்தரத்திலே அரபியன் காத்துக் கொண்டிருக்கிறதுபோல" - இது கிழக்கு தேசத்தில் பயன்படுத்தப்படும் வழக்குச் சொல்லாகும். அரபியர்கள் தங்களுடைய கொள்ளைப்பொருளுக்காக ஆவலோடு காத்துக் கொண்டிருப்பார்கள். அதுபோலவே யூதா தேசத்தாரும் விக்கிரகாராதனை செய்வதற்கு ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"அதினிமித்தம் மழை வருஷியாமலும், பின்மாரியில்லாமலும் போயிற்று" - பாவம் செய்தவர்களைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் தேசத்தில் மழை பெய்யாமல் தடுத்து விடுகிறார். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரரைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் கர்த்தர் மழையை வருஷியாமலும், பின்மாரியில்லாமலும் செய்து விடுகிறார். இது கர்த்தர் தண்டிக்கும் விதம். (உபா. 11:17; உபா. 28:24; 1இராஜா 8:35; 1இராஜா 17:1-14). ஆயிரம் வருஷ அரசாட்சியில் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிப்பதற்கு ஜனங்கள் எருசலேமிற்கு வருவார்கள். அங்கு வராதவர்கள் மீது கர்த்தர் இந்தத் தண்டனையைக் கொடுப்பார். (சக. 14:16-21).

3 அதிகாரம்

"இதோ, இப்படி நீ சொல்லியும் பொல்லாப்புகளைச் செய்து, மிஞ்சிப்போகிறாய்" - கர்த்தர் தம்முடைய பிள்ளைகள்மீது கோபமாக இருக்கிறார். இதற்கான காரணம் இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்க மறுத்துவிடுகிறார். அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வருவதற்கு அனுமதிக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் துன்மார்க்கமான காரியங்களைச் செய்து வந்தார்கள். அதை நிறுத்திக் கொள்ளாமல் இன்னும் செய்து வருகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது பெருகிற்று.

2. யூதாவுக்கு இரண்டாவது செய்தி - (3:6-6:30)

(1) தோல்வியின் மூன்று அம்சங்கள்

எரே 3:6 யோசியா ராஜாவின் நாட்களிலே கர்த்தர் என்னை நோக்கி: சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் செய்ததைக் கண்டாயா? அவள் உயரமான சகல மலையின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் போய், அங்கே வேசித்தனம் பண்ணினாள்.

எரே 3:7 அவள் இப்படியெல்லாம் செய்தபின்பு: நீ என்னிடத்தில் திரும்பிவா என்று நான் சொன்னேன்; அவளோ திரும்பவில்லை; இதை அவளுடைய சகோதரியாகிய யூதா என்கிற துரோகி கண்டாள்.

எரே 3:8 சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் விபசாரம்பண்ணின முகாந்தரங்கள்எல்லாவற்றினிமித்தமும் நான் அவளை அனுப்பி விட்டு, அவளுடைய தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுத்தபோதும், அவளுடைய சகோதரியாகிய யூதா என்கிற துரோகி பயப்படாமல்; இவளும் போய் வேசித்தனம் பண்ணினாள், இதை நான் கண்டேன்.

எரே 3:9 பிரசித்தமான அவளுடைய வேசித்தனத்தினாலே தேசம் தீட்டுப்பட்டுப் போயிற்று; கல்லோடும் மரத்தோடும் விபசாரம் பண்ணிக்கொண்டிருந்தாள் என்றார்.

எரே 3:10 இவைகளையெல்லாம் கண்டும், யூதா என்கிற அவளுடைய சகோதரியாகிய துரோகி, கள்ளத்தனமாய்த் திரும்பினாளேயன்றி, முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்பவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:11 பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: யூதா என்கிற துரோகியைப் பார்க்கிலும் சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் தன்னை நீதியுள்ளவளாக்கினாள்.

"யோசியா ராஜாவின் நாட்களிலே கர்த்தர் என்னை நோக்கி" - எரே 2:1-3:5 ஆகிய வசனங்களில் பாவத்தைக் குறித்த எச்சரிப்பும், அதன் விளைவுகளைக் குறித்த எச்சரிப்பும் கூறப்பட்டிருக்கிறது. அந்த எச்சரிப்பின் பகுதியைத் தொடர்ந்து இங்கு மறுபடியும் மற்றொரு எச்சரிப்பின் பகுதி கொடுக்கப் பட்டிருக்கிறது. (எரே 3:6-6:30).

யோசியா ராஜாவின் எந்தக் காலத்தில் இந்தச் செய்தி கொடுக்கப்பட்டது என்பது தெரிய வில்லை. யோசியா ராஜாவின் 13 ஆவது வருஷத்து ஆட்சிக்காலத்தில் எரேமியா தீர்க்கதரிசனம் கூற ஆரம்பிக்கிறார். (எரே 1:2) வடக்கு ராஜ்யமான இஸ்ரவேல் ராஜ்யத்தைக் குறித்து எரேமியா இக்கேள்வியை எழுப்புகிறார். அந்த ராஜ்யம் தன்னுடைய பாவங்களினால் 93 வருஷங்களுக்கு முன்பாகவே அழிந்து போயிற்று. இஸ்ரவேல் தேசத்தைப் போலவே இப்போது யூதா தேசமும் பாவம் செய்து கொண்டிருக்கிறது. (எரே 3:6) யூதா தேசத்தார் பாவம் செய்த போதிலும் தம்மிடத்தில் திரும்பி வருமாறு கர்த்தர் அவர்களை அழைக்கிறார். ஆனால் அவர்களோமனந்திரும்பமறுத்துவிடுகிறார்கள். அவர்களுடைய துன்மார்க்கத்தின் நிமித்தமாக யூதா தேசமும் அழிந்துபோயிற்று. (எரே 3:7-8) வடக்கு ராஜ்யத்தைப் பார்த்து யூதா தேசம் மனந்திரும்பியிருக்க வேண்டும். ஆனால் யூதா தேசத்தாரோ அவர்களைப்போலவே பாவம் செய்து, மனந்திரும்ப மறுத்துவிடுகிறார்கள். (எரே 3:8-11).

3 அதிகாரம்

"அவளுடைய சகோதரியாகிய யூதா என்கிற துரோகி கண்டாள்" - இஸ்ரவேல் தேசமும், யூதா தேசமும் சகோதரிகளாக இங்கு வர்ணிக்கப் பட்டிருக்கிறது. அவர்களுடைய குணங்களும், இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. சமாரியா தேசம் கர்த்தரைவிட்டு விலகிப்போயிற்று. கர்த்தரை ஆராதிக்கும் பழக்கத்தை நிறுத்திக் கொண்டது. (1இராஜா 12:25-13:34). யூதா தேசத்தார் தங்களுடைய உள்ளத்தில் கர்த்தரை ஆராதிக்காமல், வெளிவேஷமாக ஆராதிக்கிறார்கள். தங்களுடைய இருதயத்திலும், நடத்தையிலும், சிந்தையிலும், அவர்கள் விக்கிரகாராதனை செய்கிறார்கள். (எரே 3:6-11). சமாரியாவின் அழிவிலிருந்து யூதா தேசம் நல்ல பாடங்களைப் படித்துக் கொள்ளவில்லை. தங்களுடைய விக்கிரகாராதனையினால் யூதா தேசத்தார் தங்களுக்கு அழிவை வரவழைத்துக் கொண்டார்கள். (எரே 3:8-9).

"கல்லோடும் மரத்தோடும் விபசாரம் பண்ணிக் கொண்டிருந்தாள்" - விக்கிரகாராதனைக்காரர்கள் விபசாரத்திலும் ஈடுபட்டிருந்தார்கள். புறஜாதியாரின் ஆசாரியர்கள் விபசாரிகளைப் பயன்படுத்தி விக்கிரகாராதனை செய்யும் ஜனங்களின் கூட்டத்தை அதிகரிக்கச் செய்தார்கள்.

"கள்ளத்தனம்" - யூதா தேசத்தார் கர்த்தரிடத்தில் மெய்யாக மனம் திரும்பவில்லை. அவர்களுடைய இருதயம் விக்கிரகாராதனையில் தரித்திருந்தது. சமாரியா தேசத்தைவிட யூதா தேசத்தார் அதிகமாகப் பாவம் செய்தார்கள். (எரே 3:10-11).

"யூதா என்கிற துரோகியைப்பார்க்கிலும் சீர்கெட்ட இஸ்ரவேல்" - சமாரியா தன்னுடைய பாவங்களுக்காக அழிந்துபோயிற்று. யூதா தேசமோ சமாரியாவைவிட அதிகமாகப் பாவம் செய்கிறது. (2இராஜா 17). யூதா தேசத்தார் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்பாமல் பாவத்தில் நிலைத்திருந்தால் சமாரியாவைப் போல அவர்களும் அழிந்துபோவார்கள் என்று எரேமியா எச்சரிக்கிறார்.

(2) அழைப்பு - காரணம் - தேவனுடைய இரக்கம் - நிபந்தனை - மனந் திரும்ப வேண்டும்

எரே 3:12 நீ போய் வடதிசையை நோக்கிக் கூறவேண்டிய வார்த்தைகள் என்னவென்றால்: சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள்மேல் என் கோபத்தை இறங்கப் பண்ணுவதில்லை; நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்.

எரே 3:13 நீயோ, உன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி, பச்சையான சகல மரத்தின்கீழும், அந்நியரோடே சோரமார்க்கமாய் நடந்து, உன் அக்கிரமத்தையும் என் சத்தத்துக்குச் செவிகொடாமற்போனதையும் ஒத்துக் கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நீ போய் வடதிசையை நோக்கிக் கூற வேண்டிய வார்த்தைகள்" - கர்த்தர் சீயோனைத் திரும்பக் கட்டுவதாக வாக்குப்பண்ணுகிறார். இந்த வசனத்தில் இஸ்ரவேல் என்பது வடக்கு ராஜ்யமான சமாரியாவைக் குறிக்கவில்லை. இஸ்ரவேல் தேசத்தார் அனைவரையும் குறிக்கிறது. அசீரியாவின் சிறையிருப்புக்குப் போன இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் மனந்திரும்பி, கர்த்தரிடத்திற்குத் திரும்பி வந்தால் கர்த்தர் அவர்கள்மீது கிருபையுள்ளவராக இருப்பார். (எரே 3:12-13).

"வடதிசை" - சிறையிருப்பின்போது அசீரியர் பத்துக் கோத்திரத்தாரை இங்கு குடியமர்த்தினார்கள். (2இராஜா 17). இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களை அங்கிகரித்து மனந்திரும்பினால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது தொடராது. (எரே 3:13-15) இந்த வாக்கியம் வடதேசமான சமாரியாவையும் குறிக்கலாம். அது 93 வருஷங்களுக்கு முன்பாகவே அழிந்துபோயிற்று.

எரேமியா - தொகுப்புரை

3 அதிகாரம்

(3) அழைப்பு - காரணம் - திருமணம் - பதினான்கு ஆசீர்வாதங்கள்

எரே 3:14 சீர்கெட்டபிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் நாயகர்; நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டுபேருமாகத் தெரிந்து, உங்களைச் சீயோனுக்கு அழைத்துக் கொண்டுவந்து,

எரே 3:15 உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.

எரே 3:16 நீங்கள் தேசத்திலே பெருகிப் பலுகுகிற அந்நாட்களிலே, அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியென்று இனிச் சொல்வதில்லை; அது அவர்கள் மனதில் எழும்புவதும் இல்லை; அது அவர்கள் நினைவில் வருவதும் இல்லை; அதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை; அது இனிச் செப்பனிடப்படுவதும் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:17 அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்; அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்.

எரே 3:18 அந்நாட்களிலே யூதா வம்சத்தார் இஸ்ரவேல் வம்சத்தாரோடே சேர்ந்து, அவர்கள் ஏகமாய் வடதேசத்திலிருந்து புறப்பட்டு, நான் தங்கள் பிதாக்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தேசத்திற்கு வருவார்கள்.

எரே 3:19 நான் உன்னைப் பிள்ளைகளின் வரிசையிலே வைத்து, ஜனக் கூட்டங்களுக்குள்ளே நல்ல சுதந்தரமாகிய தேசத்தை உனக்குக் கொடுப்பது எப்படியென்று சொன்னேன்; ஆனாலும் நீ என்னை நோக்கி, என் பிதாவே என்று அழைப்பாய்; நீ என்னை விட்டு விலகுவதில்லை என்று திரும்பவும் சொன்னேன்.

எரே 3:20 ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம்செய்தது மெய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:21 இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வழியை மாறுபாடாக்கி, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்ததினிமித்தம் அழுதுகொண்டு விண்ணப்பஞ்செய்யும் சத்தம் உயர்ந்த ஸ்தானங்களிலே கேட்கப்படும்.

தீர்க்கதரிசன எண் - 8

"சீர்கெட்டபிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்........." (எரே 3:14-25) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உங்கள் நாயகர்; நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து, உங்களைச் சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வருவேன். (எரே 3:14).

2. உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன் (எரே 3:15).

3. அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.

4. நீங்கள் தேசத்திலே பெருகிப் பலுகுகிற அந்நாட்களிலே, அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியென்று இனிச் சொல்வதில்லை; அது அவர்கள் மனதில் எழும்புவதும் இல்லை; அது அவர்கள் நினைவில் வருவதும் இல்லை (எரே 3:16).

3 அதிகாரம்

5. அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள். (எரே 3:17).

6. சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள் (எரே 3:17; ஏசா 2:2-4; சக. 14:16-21).

7. அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள். (எரே 3:17).

8. அந்நாட்களிலே யூதா வம்சத்தார் இஸ்ரவேல் வம்சத்தாரோடே சேர்ந்து, அவர்கள் ஏகமாய் வடதேசத்திலிருந்து புறப்பட்டு, நான் தங்கள் பிதாக்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தேசத்திற்கு வருவார்கள். (எரே 3:18).

9. நான் உங்களுக்கு நல்ல சுதந்தரமாகிய தேசத்தைக் கொடுப்பேன். (எரே 3:19).

10. நீ என்னை நோக்கி, என் பிதாவே என்று அழைப்பாய்.

11. நீ என்னை விட்டு விலகுவதில்லை.

12. உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன் (எரே 3:22).

"நான் உங்கள் நாயகர்" - இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிள்ளைகள். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையின் பிள்ளைகளை விவாகம் பண்ணியிருப்பதாக இங்கு உறுதி பண்ணியிருக்கிறார். அவர்களைத் தம்மிடத்தில் மறுபடியும் அழைத்துக் கொண்டு வருவதாக வாக்குப்பண்ணுகிறார். (எரே 3:14-15; எரே 30:1-31:40; எசே 37; ஓசி 1:2; சக. 12:10-13:1; அப் 15:13-18; ரோமர்11:25-29).இன்றைய சபைக்காலத்திலும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வந்தால் கர்த்தர் அவர்களை மன்னிப்பார். இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தர் தம்மோடு சேர்த்துக் கொண்டதுபோல புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் தம்முடைய பிள்ளைகளின் பாவங்களை மன்னித்து அவர்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்வார். (மத் 12:31-32) நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் அவர் நம்முடைய பாவங்களை மன்னிப்பார். (1யோவான் 1:9).

"சீயோன்" - வருங்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சீயோனில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் சமாரியாவிலோ அல்லது வேறு எந்த இடங்களிலோ கூட்டிச் சேர்க்கப்படுவதில்லை. (ஏசா 59:20-21; ரோமர் 11:25-29).

இஸ்ரவேலின் மேய்ப்பர்கள்

எரேமியாவின் புஸ்தகத்தில் ராஜாக்கள், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோர் மேய்ப்பர்களாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஜனங்களை வழிநடத்துகிறவர்கள். (எரே 3:15; எரே 2:8; எரே 10:21; எரே 12:10; எரே 23:1-4; எரே 25:24-38)

மேய்ப்பரின் தகுதிகள்

1. தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக இருக்க வேண்டும். (எரே 3:15).

2. அவர்கள் ஜனங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்க்க வேண்டும். (எரே 3:15; எரே 23:4).

3. அவர்கள் வேதத்தைப் போதிக்கிறவர்களாகவும், கர்த்தரை அறிகிறவர்களாகவும் இருக்க வேண்டும். (எரே 2:8)

4. அவர்கள் பாவத்திலிருந்து விலகியிருக்க வேண்டும்.

5. அவர்கள் பிரயோஜனமான வழிகளில் நடக்க வேண்டும்.

6. மேய்ப்பர்கள் நல்ல குணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். (எரே 10:21).

7. அவர்கள் கர்த்தரைத் தேட வேண்டும். (எரே 10:21)

எரேமியா - தொகுப்புரை

3 அதிகாரம்

8. அவர்கள் மந்தையை மேய்க்க வேண்டும்.

9. திராட்சத்தோட்டத்தைப் பாதுகாத்து பராமரிக்க வேண்டும். (எரே 12:10).

10. அவர்கள் ஆடுகளைப் பாதுகாத்துக் கூட்டிச் சேர்க்க வேண்டும். (எரே 23:1).

11. அவர்கள் ஆடுகளை விசாரிக்க வேண்டும். (எரே 23:2).

12. பயத்தில் அவர்களை விசாரிக்க வேண்டும். (எரே 23:4).

13. அவர்களுடைய தேவையைச் சந்திக்க வேண்டும்.

14. நீதிநெறியில் பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (எரே 23:14).

15. கண்ணிய முள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். (எரே 23:14,25).

16. தீமை செய்கிறவர்களைக் கடிந்து கொள்ள வேண்டும். (எரே 23:14).

17. பொல்லாப்பைவிட்டுத் திரும்ப வேண்டும்.

18. தேவனுடைய வசனத்தை அறிவிக்க வேண்டும். (எரே 23:16).

19. தேவனுடைய ஆலோசனையில் நிலைத்திருக்க வேண்டும். (எரே 23:22).

20. ஜனங்களுக்குத் தேவனுடைய வார்த்தைகளைத் தெரிவிக்க வேண்டும்.

21. ஜனங்களைத் தங்களுடைய பொல்லாத வழிகளிலிருந்து திருப்ப வேண்டும்.

22. அவர்களுடைய இருதயத்தில் வஞ்சகம் காணப்படக்கூடாது. (எரே 23:26).

23. ஜனங்கள் தேவனை நினைவுகூருவதற்கு ஆவன செய்ய வேண்டும். (எரே 23:27).

24. தேவனுடைய வார்த்தையை உண்மையாய் சொல்ல வேண்டும். (எரே 23:28).

"அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியென்று இனிச் சொல்வதில்லை" - இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவருடைய பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தது. இனிமேல் கர்த்தர் எப்போதும் அவர்களோடுகூட இருப்பார். ஆகையினால் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இனிமேல் அவர்களுக்குத் தேவனுடைய பிரசன்னத்தின் அடையாளமாக இராது. (எசே 34:7; சக. 14:9; வெளி. 11:15; வெளி. 21:3-6; வெளி. 22:4-5).

"அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்" - எருசலேம் கர்த்தருடைய தலைநகரமாக இருக்கும். கர்த்தரை ஆராதிப்பதற்கு எல்லா தேசத்தாரும் எருசலேமிற்கு வருவார்கள். (ஏசா 2:2-4; சக. 14:16-21).

"அந்நாட்களிலே யூதா வம்சத்தார் இஸ்ரவேல் வம்சத்தாரோடே சேர்ந்து" - அக்காலத்தில் இஸ்ரவேலின் இரண்டு தேசங்களும் மறுபடியும் ஒன்றுசேர்ந்து பாலஸ்தீன தேசமாக இருக்கும். (எரே 30:1-31:34; எசே 37; ஏசா11:11-14)

"அவர்கள் ஏகமாய் வடதேசத்திலிருந்து புறப்பட்டு" - இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். அப்போதுதான் கர்த்தர் அவர்களோடு செய்துகொண்ட நித்திய உடன்படிக்கையை நிறைவேற்றி அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணிய தேசத்திற்கு அவர்களைத் திரும்ப அழைத்துவருவார். (எரே 3:19). வருங்காலத்தில் உண்டாகப்போகும் உபத்திரவத்தின் மூலமாக இது நிறைவேறும். உபத்திரவங்களைத் தாங்க முடியாமல் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் மனந்திருந்தி வருவார்கள். (எரே 30:1-9; சக. 13:9; வெளி. 12:6,14)

எரேமியா - தொகுப்புரை

3 அதிகாரம்

(4) அழைப்பு - வரப்போகிற பாவஅறிக்கை

எரே 3:22 சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன் என்றார். இதோ, உம்மிடத்தில் வருகிறோம்; நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர்.

எரே 3:23 குன்றுகளையும், திரளான மலைகளையும் நம்புகிறது விருதா என்பது மெய்; இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே.

எரே 3:24 இந்த இலச்சையானது எங்கள் சிறுவயதுமுதல் எங்கள் பிதாக்களுடைய பிரயாசத்தையும், அவர்கள் ஆடுகளையும் மாடுகளையும், அவர்கள் குமாரரையும் குமாரத்திகளையும் பட்சித்துப்போட்டது.

எரே 3:25 எங்கள் இலச்சையிலே கிடக்கிறோம்; எங்கள் அவமானம் எங்களை மூடியிருக்கிறது; நாங்களும், எங்கள் பிதாக்களும் எங்கள் சிறுவயது முதல் இந்நாள்வரைக்கும் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; எங்கள் தேவனாகிய கர்த்தருடைய சொல்லைக் கேளாமலும் போனோம்.

"சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்" - வருங்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள். (சக. 12:10-13:1; ரோமர் 11:25-29).

"இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே" - இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வரலாற்றின் பல காலங்களில் கர்த்தரே மெய்யான தேவன் என்பதை அறிந்திருந்தார்கள். அவர்களுடைய இரட்சிப்பும், மீட்பும் விக்கிரகங்களிடமிருந்து வரவில்லை என்பதையும் அவர்கள் புரிந்து வைத்திருந்தார்கள். விக்கிரகாராதனை ஒரு விருதாவான காரியமென்று இந்த வசனத்தில் கூறப் பட்டிருக்கிறது.

எரே 3:24-25 ஆகிய வசனங்களில் விக்கிரகாராதனை இலச்சையான காரியம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இந்த விருதாவான விக்கிரகாராதனையிலும், இலச்சையான விக்கிரகாராதனையிலும் ஈடுபட்டிருந்ததினால் அவர்களுடைய தேசமே அழிந்துபோயிற்று. ஒருகாலத்தில் கர்த்தருக்கு பலிசெலுத்தி கர்த்தரை ஆராதித்து வந்தவர்கள் இப்போது குடித்தும், வெறித்தும், விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். (எரே 3:24) குமாரரையும், குமாரத்திகளையும் அவர்கள் பட்சித்துப் போட்டார்கள். அதாவது விக்கிரகங்களுக்கு அவர்களுடைய பிள்ளைகளைப் பலியாகச் செலுத்தினார்கள். (எரே 3:26; எரே 32:35; லேவி 18:21; லேவி 20:2-5; 2இராஜா 23:10).

"எங்கள் இலச்சையிலே கிடக்கிறோம்" - இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தில் மூழ்கியிருக்கிறார்கள். விக்கிரகாராதனையில் சிக்கிக்கொண்டார்கள். அதிலிருந்து அவர்களால் விடுதலை பெற முடியவில்லை. உதவியற்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

எரேமியா - தொகுப்புரை

4 அதிகாரம்

(5) திரும்பி வருவதற்கு ஏழு நிபந்தனைகள்

எரே 4:1 இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நீ உன் அருவருப்புகளை என் பார்வை யினின்று அகற்றிவிட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை.

எரே 4:2 நீ உண்மையோடும், நியாயத்தோடும், நீதியோடும், கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணையிடுவாய்; புறஜாதிகளும் அவருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டு, அவருக்குள் மேன்மைபாராட்டுவார்கள்.

எரே 4:3 யூதா மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்.

எரே 4:4 யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம் பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப் போடுங்கள்.

தீர்க்கதரிசன எண் - 9

"இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு......" (எரே 4:1-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை. (எரே 4:1).
2. புறஜாதிகளும் அவருக்குள் ஆசீர்வதிக்கப் பட்டு, அவருக்குள் மேன்மை பாராட்டுவார்கள். (எரே 4:2)
3. நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகாசங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன். (எரே 4:6).
4. உன் பட்டணங்கள் குடியிராதபடி அழிக்கப்படும் (எரே 4:5-7).
5. அந்நாளிலே ராஜாவின் இருதயமும், பிரபுக்களின் இருதயமும் மடிந்துபோம் (எரே 4:9).
6. ஆசாரியர்கள் திடுக்கிடுவார்கள்.
7. தீர்க்கதரிசிகள் திகைப்பார்கள்.
8. வனாந்தரத்திலுள்ள உயர் நிலங்களிலிருந்து, ஒரு தீக்காற்று என் ஜனமாகிய குமாரத்திக்கு நேராக அடிக்கும். (எரே 4:11-13).
9. காவற்சேவகர் தூரதேசத்திலிருந்து வந்து, யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்தசத்தமிடுவார்கள். (எரே 4:16).
10. அதற்கு விரோதமாய் அவர்கள் வயல் வெளிகளின் காவற் காரரைப்போலச் சுற்றிலுமிருப்பார்கள் (எரே 4:17).
11. நாசத்துக்குமேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது. தேசமெல்லாம் பாழாகிறது (எரே 4:20)
12. அசுப்பிலே என் கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப் படுகிறது.
13. தேசமெல்லாம் பாழாய்ப்போம் (எரே 4:23-26; எரே 4:27).
14. பூமி புலம்பும். (எரே 4:28).
15. உயர இருக்கிற வானங்கள் கறுத்துப்போம்
16. நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை; நான் அதைவிட்டுத் திரும்புவதும் இல்லை.

எரேமியா - தொகுப்புரை

4 அதிகாரம்

17. குதிரைவீரரும் வில்வீரரும் இடும் சத்தத்தினாலே சகல ஊராரும் ஓடுவார்கள். (எரே 4:29).

18. அவர்கள் அடர்த்தியான காடுகளில் புகுந்து, கன்மலைகளில் ஏறுவார்கள் (எரே 4:29).

19. ஒரு மனுஷனும் அவைகளிலே குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும்.

20. சோரநாயகர் உன்னை அசட்டை பண்ணுவார்கள். (எரே 4:30).

21. அவர்கள் உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்.

22. கர்ப்ப வேதனைப்படுகிறவளின் சத்தமாகவும், முதல்விசை பிள்ளை பெறுகிறவளின் வியாகுலமாகவும், சீயோன் குமாரத்தியின் சத்தம் கேட்கும். (எரே 4:31).

சிறையிருப்பைத் தவிர்ப்பதற்கு நிபந்தனைகள்

1. இஸ்ரவேல் மனந்திரும்ப வேண்டும். (எரே 4:1).

2. அவர்கள் தங்களுடைய அருவருப்புக்களைக் கர்த்தருடைய பார்வையிலிருந்து அகற்றிவிட வேண்டும்.

திரும்புமாறு கட்டளைகள்

1. என்னிடத்திற்குத் திரும்பிவா (எரே 3:1).

2. சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு (எரே 3:12).

3. சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் (எரே 3:22).

4. என்னிடத்தில் திரும்பு (எரே 4:1).

5. ஒவ்வொருவரும் தன்தன் பொல்லாத வழியை விட்டு திரும்புங்கள் (எரே 18:11).

6. முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புங்கள் (எரே 24:7).

7. அவனவன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி உங்கள் நடத்தையைச் சீர்திருத்துங்கள். (எரே 35:15).

ஆனால் இந்தக் கர்த்தருடைய கட்டளையை இஸ்ரவேல் புத்திரர் புறக்கணித்து விட்டார்கள். (எரே 5:3; எரே 8:5; எரே 15:7).

இஸ்ரவேல் திரும்புவதால் வரும் ஆசீர்வாதம்

1. இனி அவர்கள் அலைந்துதிரிவதில்லை. (எரே 4:1).

2. உண்மையோடும், நியாயத்தோடும், நீதியோடும், கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணையிடுவார்கள். (எரே 4:2).

"யூதா மனுஷர்" - யூதாவின் மனுஷர் எரே 4:1 ஆவது வசனத்தில் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

யூதாவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள். (எரே 4:3)

2. உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்.

3. நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம் பண்ணுங்கள். (எரே 4:4).

4. உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்.

5. தேசத்தில் எக்காளம் ஊதுங்கள் என்று சொல்லி, யூதாவில் அறிவித்து, எருசலேமில் கேட்கப்பண்ணுங்கள் (எரே 4:5).

எரேமியா - தொகுப்புரை

4 அதிகாரம்

6. அரணான பட்டணங்களுக்கு உட்படும்படிக்குச் சேருங்கள் என்று சொல்லி, உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்.

7. சீயோனுக்கு நேரே கொடியேற்றுங்கள் (எரே 4:6).

8. கூடுங்கள், நிற்காதிருங்கள்.

9. உங்கள் இருதயங்களைப் பொல்லாப்பறக் கழுவுங்கள். (எரே 4:14).

10. ஜாதிகளுக்கு அதை நீங்கள் பிரஸ்தாபம்பண்ணுங்கள்; இதோ, காவற்சேவகர் தூரதேசத்திலிருந்து வந்து, யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்தசத்தமிடுவார்கள் என்று எருசலேமுக்குக் கூறுங்கள். (எரே 4:16)

"தரிசு நிலம்" **(fallow ground)** - தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள் என்னும் வாக்கியம் வேதாகமத்தில் இரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (எரே 4:3; ஓசி 10:12) தரிசு நிலம் என்பது விளைச்சல் இல்லாத, உழுது பண்படுத்தப்படாத நிலத்தைக் குறிக்கும். இஸ்ரவேல் புத்திரரின் இருதயங்கள் தரிசு நிலத்தைப்போல் உள்ளது. தரிசு நிலங்களில் முட்கள் முளைத்திருக்கும். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இருதயங்களில் உள்ள முட்களையெல்லாம் அகற்றிப்போட்டு, தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். தங்கள் ஜீவியத்தில் பாவத்தை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக நீதியை வெளிப்படுத்த வேண்டும். விதைப்பதற்கு முன்பாகவே நிலத்தை ஆயத்தப்படுத்த வேண்டும்.

"யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே" - இரண்டாம் முறையாக யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் இங்கு செய்தி கூறப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷர் தேவனிடத்தில் மனந்திரும்பி வரவில்லையென்றால் அவர்கள்மீது தேவனுடைய உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி வரும். (எரே 4:3-4).

"உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்" - இந்தக் கட்டளை வேதாகமத்தில் இங்கு இரண்டாம் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. (எரே 4:4; உபா. 10:16). தேவனுக்கு எதிரான கலகக்குணம், தேவனுக்கு எதிர்த்து நிற்பது, வணங்காக்கழுத்து, ஆகியவற்றையெல்லாம் யூதாவின் மனுஷர் அகற்றிப்போட வேண்டும். (உபா 10:16).

(6) எச்சரிப்பு - பதினான்கு காரணங்கள்

எரே 4:5 தேசத்தில் எக்காளம் ஊதுங்கள் என்று சொல்லி, யூதாவில் அறிவித்து, எருசலேமில் கேட்கப் பண்ணுங்கள்; நாம் அரணான பட்டணங்களுக்கு உட்படும் படிக்குச் சேருங்கள் என்று சொல்லி, உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்.

எரே 4:6 சீயோனுக்கு நேரே கொடியேற்றுங்கள்; கூடுங்கள், நிற்காதிருங்கள்; நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகா சங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்.

எரே 4:7 உன் தேசத்தைப் பாழாக்கி விடும்படிக்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, ஜாதிகளைச் சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்; உன் பட்டணங்கள் குடியிராதபடி அழிக்கப்படும் என்கிறார்.

"தேசத்தில் எக்காளம் ஊதுங்கள்" - எரேமியா இந்த வசனப்பகுதியில் கூறியுள்ள காரியங்களெல்லாம் யுத்தம் சம்பந்தமாகவே இருக்கிறது. எக்காளம் ஊதுதல், உரத்த சத்தமாய் கூப்பிடுதல், கொடியேற்றுதல், கூடுதல் ஆகியவை அனைத்தும் யுத்தக்காலங்களில் செய்யப்பட வேண்டிய காரியங்களாகும். ஜாதிகளைச் சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான். (எரே 4:5-6). ஆகையால் இது யுத்தகாலம் போல இருக்கிறது.

4 அதிகாரம்

"ஜாதிகளைச் சங்கரிக்கிறவன்" - இது நேபுகாத்நேச்சாரைக் குறிக்கிறது. இவன் பல தேசங்களைச் சங்கரித்தான். யூதர்களைச் சிறைப்பிடித்தான். இவன் பாபிலோனிய சாம்ராஜ்யத்தை நிறுவினான். (தானி 2:37-38; தானி 7:4)

(7) அழைப்பு - காரணம் - ஒன்பது நியாயத்தீர்ப்புகள் - (ஏசா 5:5)

எரே 4:8 இதினிமித்தம் இரட்டைக் கட்டிக் கொள்ளுங்கள்; புலம்பி அலறுங்கள்; கர்த்தருடைய உக்கிர கோபம் நம்மை விட்டுத் திரும்பவில்லையே.

எரே 4:9 அந்நாளிலே ராஜாவின் இருதயமும், பிரபுக்களின் இருதயமும் மடிந்துபோம்; ஆசாரியர்கள் திடுக்கிட்டு, தீர்க்கதரிசிகள் திகைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 4:10 அப்பொழுது நான்: ஆ! கர்த்தராகிய ஆண்டவரே, உங்களுக்குச் சமாதானமிருக்கும் என்று சொன்னதினால், மெய்யாகவே இந்த ஜனத்துக்கும் எருசலேமுக்கும் மிகுதியான மோசத்தை வஜ்ப் பண்ணினீர்; பட்டயம் பிராணன்மட்டும் எட்டுகிறதே என்றேன்.

எரே 4:11 வனாந்தரத்திலுள்ள உயர் நிலங்களிலிருந்து, ஒரு தீக்காற்று என் ஜனமாகிய குமாரத்திக்கும் நேராக அடிக்கும் என்று அக்காலத்திலே இந்த ஜனத்தோடும் எருசலேமோடும் சொல்லப்படும்; அது தூற்றவுமாட்டாது சுத்திகரிஉப்ளி மாட்டாது.

எரே 4:12 இதைப்பார்க்கிலும் பலமான காற்று என் காரியமாய் வரும்; இப்பொழுது நானும் அவர்களோடே நியாயம் பேசுவேன்.

எரே 4:13 இதோ, மேகங்களைப்போல எழும்பி வருகிறான்; அவனுடைய இரதங்கள் பெருங்காற்றைப் போலிருக்கிறது; அவன் குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்; நமக்கு ஐயோ! நாம் பாழாக்கப்படுகிறோமே.

"கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பவில்லையே" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வர மறுத்து விடுகிறார்கள். இதனால் கர்த்தருடைய உக்கிரம் அவர்கள்மீது தொடர்க்கிறது. இந்தச் சூழ்நிலையில் உபவாசம் பண்ணி, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாகப் புலம்பி அலறுமாறு எரேமியா கூறுகிறார். (எரே 5:3; எரே 8:5; எரே 15:7; எரே 23:14).

"அந்நாளிலே" - நேபுகாத்நேச்சார் யூதாவைப் பிடிக்கும் நாளிலே, இந்தச் சம்பவமெல்லாம் நிறைவேறும். (எரே 4:9-13; 2இராஜா 25; 2நாளா. 36).

யுத்தத்தில் மடிந்து போகிறவர்கள்

1. ராஜா
2. பிரபுக்கள்
3. ஆசாரியர்கள்
4. தீர்க்கதரிசிகள்
5. ஜனங்கள் (எரே 4:10-11,22)

"பட்டயம் பிராணன்மட்டும் எட்டுகிறதே" - எரேமியா கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை மாத்திரம் பார்க்கிறார். ஆனால் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளைப் பார்க்கத் தவறிவிடுகிறார். யூதா தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலைக்குக் கர்த்தரே காரணமென்று எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். தற்காலத்தில் நாமும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை எதிர் பார்க்கிறோம். ஆனால் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குக் கர்த்தர் நியமித்திருக்கும் நிபந்தனைகளைக் கைக் கொள்ளத் தவறிவிடுகிறோம். (எரே 4:1,4).

எரேமியா - தொகுப்புரை

4 அதிகாரம்

"அது தூற்றவுமாட்டாது சுத்திகரிக்கவுமாட்டாது" - யூதாவின்மீது நேபுகாத்நேச்சார் படையெடுத்து வருவான். அவனுடைய படையெடுப்பு ஒரு தீக்காற்றாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. (எரே 4:5-7). இந்தக் காற்று வனாந்தரத்திலிருந்து வருகிறது. இது தூற்றவோ சுத்திகரிக்கவோ வரவில்லை. இந்தத் தீக்காற்று நியாயத்தீர்ப்பு செய்யவும், அழிக்கவும் வருகிறது. எரேமியா தன்னுடைய உள்ளத்தில் உள்ள வேதனையைக் கர்த்தரிடத்தில் கூறிய பின்பு (எரே 4:10), ஜனங்கள்மீது வரும் நியாயத்தீர்ப்பைப் பற்றித் தொடர்ந்து கூறுகிறார். (எரே 4:11-13).

"நமக்கு ஐயோ! நாம் பாழாக்கப்படுகிறோமே" - நேபுகாத்நேச்சார் யூதாவுக்கு விரோதமாக வருவான். அவன் மேகங்களைப்போல விரைவாக வருவான். (எரே 4:7) அவன் வந்து யூதா தேசத்தாரை நிச்சயமாகவே பாழாக்கிவிடுவான்.

(8) அழைப்பு - பத்து காரணங்கள்

எரே 4:14 எருசலேமே, நீ இரட்சிக்கப் படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு; எந்தமட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்.

எரே 4:15 தாணிலிருந்து ஒரு சத்தம் வந்து, செய்தியை அறிவிக்கிறது; எப்பிராயீமின் மலையிலிருந்து வந்து, தீங்கைப் பிரசித்தம் பண்ணுகிறது.

எரே 4:16 ஜாதிகளுக்கு அதை நீங்கள் பிரஸ்தாபம்பண்ணுங்கள்; இதோ, காவற்சேவகர் தூரதேசத்திலிருந்து வந்து, யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்தசத்தமிடுவார்கள் என்று எருசலேமுக்குக் கூறுங்கள்.

எரே 4:17 அதற்கு விரோதமாய் அவர்கள் வயல்வெளிகளின் காவற்காரரைப் போலச் சுற்றிலுமிருப்பார்கள்; அது எனக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 4:18 உன் நடக்கையும் உன் கிரியைகளுமே இவைகளை உனக்கு நேரிடப்பண்ணின; இது இத்தனை கசப்பாயிருந்து, உன் இருதயமட்டும் எட்டுகிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத்தானே.

"உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு" - யூதா தேசத்தார் தங்களுடைய பொல்லாப்புக்களிலிருந்து தங்களைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டுமென்று கர்த்தர் இரண்டாம் முறையாக இங்கு கட்டளையிடுகிறார். கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். (ஏசா 1:16).

"யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்தசத்தமிடுவார்கள்" - யூதாவும், எருசலேமும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறது. ஆகையினால் இவர்களுக்கு விரோதமாகக் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. இவர்களைச் சிட்சிப்பதற்காகக் கர்த்தர் பாபிலோன் தேசத்தாரை வடதிசையிலிருந்து வரவழைத்திருக்கிறார். இவர்கள் வந்து யூதாவின் பட்டணத்திற்கு விரோதமாக உரத்த சத்தமிடுவார்கள். (எரே 1:13-14; எரே 3:12,18; எரே 4:6-7,16-18).

"உன் இருதயமட்டும் எட்டுகிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத்தானே" - யூதா தன்னுடைய இருதயத்தில் பொல்லாப்புடனும், துன்மார்க்கத்துடனும் இருக்கிறது. கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கு அவர்கள் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. (எரே 4:17-18).

(9) எச்சரிப்பு - பதினான்கு அம்ச காரணம்

எரே 4:19 என் குடல்கள், என் குடல்களே நோகிறது, என் உள்ளம் வேதனைப் படுகிறது; என் இருதயம் என்னில் கதறுகிறது; நான் பேசாமல் அமர்ந்திருக்கக் கூடாது; என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும், யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே.

எரே 4:20 நாசத்துக்குமேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது; தேசமெல்லாம் பாழாகிறது; அசுப்பிலே என் கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப்படுகிறது.

4 அதிகாரம்

எரே 4:21 நான் எதுவரைக்கும் கொடியைக் கண்டு, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன்.

எரே 4:22 என் ஜனங்களோ மதியற்றவர்கள், என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள், அவர்களுக்கு உணர்வே இல்லை; பொல்லாப்புச்செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்.

"என் குடல்களே நோகிறது, என் உள்ளம் வேதனைப்படுகிறது" - யூதாவின்மீது வரப் போகிற நெருக்கத்தையும், வேதனையையும், தீங்கையும் நினைத்து எரேமியா தன் இருதயத்தின் ஆழத்திலிருந்து இவ்வாறு கதறுகிறார். (எரே 4:19-22).

யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு வரக்காரணம்

1. யூதாவின் ஜனங்கள் மதியற்றவர்கள்.
2. கர்த்தரை அவர்கள் அறியா திருக்கிறார்கள்.
3. அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள்
4. அவர்களுக்கு உணர்வே இல்லை.
5. பொல்லாப்புச்செய்ய அவர்கள் அறிவாளிகள்.
6. நன்மைசெய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்.

(10) ஆதி பூமியின் ஒழுங்கின்மையின் எட்டு அம்சங்கள் - (ஆதி 1:2; ஏசா 14:12-14; 2பேது 3:5-8)

எரே 4:23 பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது; வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது.

எரே 4:24 பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன.

எரே 4:25 பின்னும் நான் பார்க்கும்போது, மனுஷனில்லை; ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின.

எரே 4:26 பின்னும் நான் பார்க்கும்போது, கர்த்தராலும், அவருடைய உக்கிரகோபத்தாலும் பயிர்நிலம் வனாந்தரமாயிற்று; அதின் பட்டணங்களெல்லாம் இடிந்து போயின.

"பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது" (ஆதி 1:3-2:25) யூதா தேசம் எவ்வாறு அழிக்கப்படும் என்பதைக் கர்த்தர் எரேமியாவிற்குக் காண்பிக்கிறார். ஆனாலும் யூதா தேசம் சர்வ சங்காரம் ஆகாது. (எரே 4:23-26)

பூமி இருந்த விதம்

1. பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது (எரே 4:23).
2. வானங்களுக்கு ஒளியில்லாதிருந்தது.
3. பர்வதங்கள் அதிர்ந்தன. (எரே 4:24).
4. எல்லாக் குன்றுகளும் அசைந்தன.
5. பூமியில் மனுஷனில்லை (எரே 4:25)
6. ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின.
7. பயிர்நிலம் வனாந்தரமாயிற்று.
8. அதின் பட்டணங்களெல்லாம் இடிந்து போயின. (எரே 4:26).

(11) பூமியின் ஒழுங்கின்மையும் யூதாவின் மீது பாபிலோனின் நியாயத்தீர்ப்பும்

எரே 4:27 தேசமெல்லாம் பாழாய்ப்போம்; ஆகிலும் சர்வசங்காரம் செய்யேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா - தொகுப்புரை

4 அதிகாரம்

எரே 4:28 இதினிமித்தம் பூமி புலம்பும், உயர இருக்கிற வானங்கள் கறுத்துப்போம்; நான் அதைச் சொன்னேன், அதை நிர்ணயம் பண்ணினேன்; நான் மனஸ்தாபப் படுவதும் இல்லை; நான் அதைவிட்டுத் திரும்புவதும் இல்லை.

எரே 4:29 குதிரைவீரரும் வில்வீரரும் இடும் சத்தத்தினாலே சகல ஊராரும் ஓடி, அடர்த்தியான காடுகளில் புகுந்து, கன்மலைகளிலும் ஏறுவார்கள்; ஒரு மனுஷனும் அவைகளிலே குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும்.

எரே 4:30 பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன செய்வாய்? நீ இரத்தாம்பரம் உடுத்தாலும், பொன்னாபரணங்களால் உன்னைச் சிங்காரித்தாலும், உன் கண்களில் மையிட்டுக்கொண்டாலும், வீணாய் உன்னை அழகுபடுத்துவாய்; சோரநாயகர் உன்னை அசட்டைபண்ணி, உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்.

எரே 4:31 கர்ப்பவேதனைப் படுகிறவளின் சத்தமாகவும், முதல்விசை பிள்ளை பெறுகிறவளின் வியாகுலமாகவும், சீயோன் குமாரத்தியின் சத்தத்தைக் கேட்கிறேன்; அவள் பெருமூச்சுவிட்டு, தன் கைகளை விரித்து: ஐயோ! கொலைபாதகர்களாலே என் ஆத்துமா சோர்ந்துபோகிறதே என்கிறாள்.

"ஒரு மனுஷனும் அவைகளிலே குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும்." - இந்த வாக்கியம் இங்கு கூறப்பட்டிருக்கிற பிரகாரமாகவே நிறைவேறிற்று. (2இராஜா 25; 2நாளா 36).

"சோரநாயகர் உன்னை அசட்டைபண்ணி, உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்" - இஸ்ரவேல் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளும் ஸ்திரீயாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவள் தன்னை அழகுபடுத்துவதினால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. (2இராஜா 9:20) இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள் அவர்களை அசட்டை பண்ணிவிடுவார்கள். இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய வேதனையினால் பெருமூச்சுவிட்டு அழுவார்கள். (எரே 4:31).

5 அதிகாரம்

(12) யூதாவின் பத்து பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 5:1 நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டுபிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களில் திரிந்துபார்த்து, விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன்.

எரே 5:2 அவர்கள்: கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறோம் என்றாலும், பொய்யாணையிடுகிறார்களே.

எரே 5:3 கர்த்தாவே, உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகின்றது; அவர்களை அடிக்கிறீர், ஆனாலும் அவர்களுக்கு நோகாது; அவர்களை நிர்மூலமாக்குகிறீர், ஆனாலும் புத்தியை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள்; தங்கள் முகங்களைக் கன்மலையைப் பார்க்கிலும் கெட்டியாக்கி, திரும்ப மாட்டோம் என்கிறார்கள்.

எரே 5:4 அப்பொழுது நான்: இவர்கள் நீசராமே, இவர்கள் மதியற்றவர்கள்; கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறியாதிருக்கிறார்கள் என்றும்,

எரே 5:5 நான் பெரியோர்களிடத்திலே போய், அவர்களோடே பேசுவேன்; அவர்கள் கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறிவார்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ ஏகமாய் நுகத்தடியை முறித்து, கட்டுகளை அறுத்துப் போட்டார்கள்.

யூதாவின் பாவங்கள்

1. நியாயத்தீர்ப்பில் நீதியில்லை. (எரே 5:1)
2. சத்தியத்தை மறுதலித்து விட்டார்கள்.
3. மாய்மாலம் பண்ணுகிறார்கள் (எரே 5:2)
4. இருதயத்தில் பரிசுத்தமில்லை. (எரே 5:3)
5. சிட்சையை ஏற்றுக்கொள்வதில்லை.
6. இருதயக்கடினமுடன் இருக்கிறார்கள்.
7. தேவனிடத்தில் திரும்பி வர மறுக்கிறார்கள்.
8. தேவனுடைய வழியை அறியாதவர்களாகவும், மதியற்றவர்களாகவும் இருக்கிறார்கள். (எரே 5:4)
9. ஏகமாய் நுகத்தடியை முறித்துப் போட்டிருக்கிறார்கள். (எரே 5:5)
10. கட்டுகளை அறுத்துப் போட்டிருக்கிறார்கள்.

“நான் பெரியோர்களிடத்திலே போய், அவர்களோடே பேசுவேன்” - பெரியோர்கள் என்னும் வார்த்தை வேதவாக்கியங்களை வாசித்து அதை வியாக்கியானம் பண்ணுகிறவர்களைக் குறிக்கும். தேவனுடைய நியாயத்தீர்ப்புக்களைப் புரிந்து கொண்டு சத்தியத்தைக் கற்றுக் கொள்கிறவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பெரியவர்களே இப்போது ஏகமாய் நுகத்தடியை முறித்து, கட்டுகளை அறுத்துப் போட்டார்கள். அவர்கள் பிரமாணத்தை மீறுகிறார்கள்.

5 அதிகாரம்

(13) நியாயத்தீர்ப்பின் மூன்று அம்ச வருணனை - (ஏசா 7:18-20)

எரே 5:6 ஆகையால் காட்டிலிருந்து வரும் சிங்கம் அவர்களைக் கொல்லும், வனாந்தரத்திலுள்ள ஓநாய்கள் அவர்களைப் பீறும், சிவிங்கி அவர்கள் பட்டணங்களின் மேல் நோக்கமாயிருக்கும்; அவைகளிலிருந்து புறப்படுகிறவன் எவனும் பீறப்படுவான்; அவர்கள் மீறுதல்கள் பெருகி, அவர்கள் சீர்கேடுகள் அதிகரித்தது.

தீர்க்கதரிசன எண் - 10

"ஆகையால் காட்டிலிருந்து வரும் சிங்கம் அவர்களைக் கொல்லும், வனாந்தரத்திலுள்ள ஓநாய்கள் அவர்களைப் பீறும்" (எரே 5:6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இந்தத் தீர்க்கதரிசனத்தில் மூன்றுவிதமான நியாயத் தீர்ப்புக்கள் உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. சிங்கம், ஓநாய்கள், சிவிங்கி ஆகியவை ஜனங்களை அழிக்கும் மிருகங்களாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. யூதா தேசத்தார் தங்களுடைய பாவங்களின் நிமித்தம் பலவீனமாக இருக்கிறார்கள். ஆகையினால் இந்த மிருகங்கள் அவர்களை எளிதாக அழித்துப் போடுகிறது. இந்த மிருகங்களெல்லாம் யூதாவை நியாயந்தீர்க்கும் பாபிலோன் தேசத்திற்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அவர்கள் மீறுதல்கள் பெருகி, அவர்கள் சீர்கேடுகள் அதிகரித்தது." - யூதாவின் ஜனங்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள். தங்களுடைய ஜீவியத்தில் சீர்கேடுகளை அதிகரித்துக் கொண்டார்கள். ஒருகாலத்தில் தேவனிடத்திலும், சத்தியத்திலும் விசுவாசம் வைத்திருந்தவர்கள் இப்போது தேவனுக்கும், சத்தியத்திற்கும் விரோதமாக ஜீவிக்கிறார்கள்.

(14) யூதாவின் ஐந்து பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 5:7 இவைகளை நான் உனக்கு மன்னிப்பது எப்படி? உன் பிள்ளைகள் என்னை விட்டுவிட்டு, தெய்வம் அல்லாதவைகள் பேரில் ஆணையிடுகிறார்கள்; நான் திருப்தியாக்கின அவர்கள் விபசாரம் பண்ணி, வேசிவீட்டிலே கூட்டங் கூடுகிறார்கள்.

எரே 5:8 அவர்கள் கொழுத்த குதிரைகளைப்போல் காலமே எழும்பி, அவனவன் தன்தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்.

யூதாவின் பாவங்கள்

1. அவர்களுடைய பிள்ளைகள் கர்த்தரை விட்டுவிட்டார்கள். (எரே 5:7).
2. தெய்வம் அல்லாதவைகள் பேரில் ஆணையிடுகிறார்கள்.
3. விபசாரம்பண்ணுகிறார்கள்.
4. வேசிவீட்டிலே கூட்டங்கூடுகிறார்கள்.
5. அவனவன் தன்தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்.

(15) பகுதி நியாயத்தீர்ப்பு - (4:27; ஆதி 1:2; 2பேது 3:5-8)

எரே 5:9 இவைகளை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 5:10 அதின் மதில்கள்மேலேறி அழித்துப் போடுங்கள்; ஆனாலும் சர்வசங்காரம் செய்யாதிருங்கள்; அதின் கொத்தளங்களை இடித்துப்போடுங்கள்; அவைகள் கர்த்தருடையவைகள் அல்ல.

எரேமியா - தொகுப்புரை

5 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 11

"இவைகளை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்......" (எரே 5:9-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இவைகளை விசாரிப்பேன். (எரே 5:9).
2. இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டும்.
3. அதின் மதில்கள்மேலேறி அழித்துப் போடுவேன். ஆனாலும் சர்வசங்காரம் செய்யாதிருப்பேன். (எரே 5:10).
4. அதின் கொத்தளங்களை இடித்துப்போடுவேன்.

"இவைகளை விசாரியாதிருப்பேனோ?" - எரே 5:9 ஆவது வசனத்திலும், எரே 5:29 ஆவது வசனத்திலும் ஒரேவிதமான வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டுள்ளது. கர்த்தர் அவர்களுடைய பாவங்களை விசாரிப்பார். அவர் விசாரிக்க வில்லையென்றால் கர்த்தரால் தம்முடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவராக இருக்க முடியாது. இதே சத்தியம் புதிய ஏற்பாட்டிலும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. (மாற்கு 7:19-22; ரோமர் 1:18-32; ரோமர் 8:12-13; 1கொரி. 6:9-11; கலா 5:19-21). யூதாவின் பாவங்களுக்காகக் கர்த்தர் அதன்மீது நியாயந்தீர்த்தார். (2இராஜா 25; 2நாளா. 36).

"ஆனாலும் சர்வசங்காரம் செய்யாதிருங்கள்" - கர்த்தர் யூதாவை முழுவதுமாக அழித்துப் போடுவதில்லை என்று இங்கு இரண்டாம் முறையாகக் கூறுகிறார். ஒருகாலத்தில் யூதா தேசத்தாரும், எருசலேம் பட்டணமும் கர்த்தருடையவைகளாக இருந்தன. ஆனால் இப்போதோ அவை தம்முடையவை அல்ல என்று கர்த்தர் அறிவிக்கிறார். (எரே 4:26-27).

(16) யூதாவின் ஐந்து பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 5:11 இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் எனக்கு விரோதமாய் மிகுதியும் துரோகம் பண்ணினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 5:12 அவர் அப்படிப்பட்டவர் அல்லவென்றும், பொல்லாப்பு நம்மேல் வராது, நாம் பட்டயத்தையாகிலும், பஞ்சத்தையாகிலும் காண்பதில்லை யென்றும்,

யூதா, இஸ்ரவேல் வம்சத்தாரின் துரோகங்கள்

1. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் மிகுதியும் துரோகம்பண்ணினார்கள் (எரே 5:11).
2. அவர்கள் கர்த்தரைப் பற்றித் தவறாக நினைக்கிறார்கள். (எரே 5:12).
3. அவர் அப்படிப்பட்டவர் அல்லவென்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக அவர் பேசவில்லை என்றும் கூறுகிறார்கள்.
4. கர்த்தரை மறுதலிக்கிறார்கள்.

(17) பகுதி நியாயத்தீர்ப்பின் ஒன்பது அம்சங்கள் - (ஏசா 5:5)

எரே 5:13 தீர்க்கதரிசிகள் காற்றாய்ப் போவார்கள்; திருவாக்கு அவர்களில் இல்லை; அவர்களுக்கே அப்படி ஆகக் கடவதென்றும், அவர்கள் சொல்லிக் கர்த்தரை மறுதலித்தார்கள்.

எரே 5:14 ஆகையால் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் இந்த வார்த்தையைச் சொன்னபடியினால், இதோ, நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன், அது அவர்களைப் பட்சிக்கும்.

5 அதிகாரம்

எரே 5:15 இஸ்ரவேல் வம்சத்தாரே, இதோ, தூரத்திலிருந்து நான் உங்கள்மேல் ஒரு ஜாதியைக் கொண்டுவருவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அது பலத்த ஜாதி, அது பூர்வகாலத்து ஜாதி, அவர்கள் நீ அறியாத பாஷையைப் பேசும் ஜாதி, அவர்கள் பேசுகிறது இன்னதென்று உனக்கு விளங்காது.

எரே 5:16 திறந்த பிரேதக்குழிகளைப் போல் அவர்கள் அம்பறாத்தூணிகள் இருக்கும்; அவர்கள் அனைவரும் பராக்கிரமசாலிகள்.

எரே 5:17 அவர்கள் உன் குமாரரும் உன் குமாரத்திகளும் சாப்பிட வேண்டிய உன் விளைச்சலையும், உன் அப்பத்தையும் சாப்பிட்டு, உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பட்சித்து, உன் திராட்சப் பழங்களையும் உன் அத்திப் பழங்களையும் சாப்பிட்டு, நீ நம்பின உன்னுடைய அரணான பட்டணங்களைப் பட்டயத்தாலே வெறுமையாக்குவார்கள்.

எரே 5:18 ஆகிலும் நான் அந்நாட்களிலும் உங்களைச் சர்வசங்காரம் செய்யாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 5:19 எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இவைகளையெல்லாம் எதினிமித்தம் செய்தார் என்று நீங்கள் கேட்டால், அப்பொழுது நீ அவர்களைப் பார்த்து: நீங்கள் என்னைவிட்டு, உங்களுடைய தேசத்திலே அந்நிய தேவர்களைச் சேவித்தது போல, உங்களுடையதல்லாத தேசத்திலே அந்நியர்களைச் சேவிப்பீர்களென்று சொல்வாயாக.

தீர்க்கதரிசன எண் - 12

"தீர்க்கதரிசிகள் காற்றாய்ப்போவார்கள்; திருவாக்கு அவர்களில் இல்லை;......." (எரே 5:13-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கள்ளத்தீர்க்கதரிசிகள் கண்டுபிடிக்கப் படுவார்கள். (எரே 5:13).
2. என் வார்த்தைகளை அக்கினியாக்குவேன். (எரே 5:14).
3. இந்த ஜனத்தை விறகு ஆக்குவேன்.
4. தூரத்திலிருந்து நான் உங்கள்மேல் ஒரு ஜாதியைக் கொண்டுவருவேன் (எரே 5:15).
5. அது பலத்த ஜாதி.
6. அது பூர்வகாலத்து ஜாதி.
7. அவர்கள் அறியாத பாஷையைப் பேசும் ஜாதி.
8. திறந்த பிரேதக்குழிகளைப்போல் அவர்கள் அம்பறாத்தூணிகள் இருக்கும் (எரே 5:16).
9. அவர்கள் உன் குமாரரும் உன் குமாரத்திகளும் சாப்பிடவேண்டிய உன் விளைச்சலையும், உன் அப்பத்தையும் சாப்பிடுவார்கள். (எரே 5:17).
10. அவர்கள் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பட்சிப்பார்கள்.
11. அவர்கள் உன் திராட்சப்பழங்களையும் உன் அத்திப்பழங்களையும் சாப்பிடுவார்கள்.
12. நீ நம்பின உன்னுடைய அரணான பட்டணங்களைப் பட்டயத்தாலே வெறுமையாக்குவார்கள்.
13. நான் அந்நாட்களில் உங்களைச் சர்வசங்காரம் செய்யாதிருப்பேன் (எரே 5:18; எரே 5:10; எரே 4:27).

எரேமியா - தொகுப்புரை

5 அதிகாரம்

14. எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இவைகளையெல்லாம் எதினிமித்தம் செய்தார் என்று நீங்கள் கேட்பீர்கள். (எரே 5:19).

15. உங்களுடைய தேசத்திலே அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்.

16. உங்களுடையதல்லாத தேசத்திலே அந்நியர்களைச் சேவிப்பீர்கள்.

"தீர்க்கதரிசிகள் காற்றாய்ப்போவார்கள்" - இந்த வாக்கியம் கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறிக்கிறது. அவர்களுக்கு அதிகாரம் எதுவுமில்லை. ஒருசில பதிப்புக்களில் இது "சுழல்காற்று" என்று கூறப்பட்டிருக்கிறது. சுழல்காற்று குழப்பத்தை வருவிக்கக்கூடியது. கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் குழப்பமாக இருக்கிறது. எரேமியாவின் வார்த்தைகளோ அக்கினியைப்போல இருக்கிறது. (எரே 5:14)

"இஸ்ரவேல் வம்சத்தாரே" - யூதா வம்சத்தார் இங்கு இஸ்ரவேல் வம்சத்தார் என்று அழைக்கப் படுகிறார்கள். யூதாவோடு சேர்ந்து எருசலேமிற்கும் இந்த அதிகாரத்தில் தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. (எரே 5:1,20).

"தூரத்திலிருந்து நான் உங்கள்மேல் ஒரு ஜாதியைக் கொண்டுவருவேன்" - பாபிலோன் தேசத்தார் இந்த வாக்கியத்தை நிறைவேற்றினார்கள். (2 இராஜா 25; 2 நாளா. 36).

"அது பூர்வகாலத்து ஜாதி" - பூமியிலுள்ள பழங்காலத்து தேசங்களில் பாபிலோன் தேசமும் ஒன்று. ஜலப்பிரளயத்திற்கு 100 வருஷங்களுக்குப் பின்பு பாபிலோன் தேசம் ஸ்தாபிக்கப்பட்டது. (ஆதி 10:9-11).

"திறந்த பிரேதக்குழிகளைப்போல் அவர்கள் அம்பறாத்தூணிகள் இருக்கும்" - பாபிலோன் தேசத்தார் யூதாவின்மீது யுத்தம் பண்ணிய பின்பு யூதாவின் நிலைமை இங்கு விவரிக்கப் பட்டிருக்கிறது. (எரே 5:16-17) அவர்கள் யூதா தேசத்தாரையும், அவர்களுடைய தானியங்களையும், கால்நடைகளையும், திராட்சைப் பழங்களையும் எடுத்துக் கொள்வார்கள். யூதாவின் பட்டணங்களை வெறுமை யாக்குவார்கள். "உங்களைச் சர்வசங்காரம் செய்யாதிருப்பேன்" - மூன்றாம் முறையாகக் கர்த்தர் இந்தச் சத்தியத்தை வலியுறுத்துகிறார். (எரே 5:10,18; எரே 4:27).

"நீங்கள் என்னைவிட்டு, உங்களுடைய தேசத்திலே அந்நிய தேவர்களைச் சேவித்தது போல" - யூதா தேசத்தார் ஒருகாலத்தில் கர்த்தரைச் சேவித்தார்கள். அதன் பின்பு அவர்கள் கர்த்தரை விட்டு விட்டு தங்களுடைய தேசத்திலேயே அந்நிய தேவர்களைச் சேவித்தார்கள். கர்த்தர் இந்தப் பாவத்திற்கு நியாயந்தீர்க்கிறார். யூதா தேசத்தார் அந்நிய தேசத்தில் அடிமைகளாக இருப்பார்கள். அங்கு அவர்கள் அந்நியர்களைச் சேவிப்பார்கள்.

(18) யூதாவின் இருபது பாவங்கள் - (எரே 5:1)

எரே 5:20 நீங்கள் யாக்கோபின் வீட்டிலே அறிவித்து, யூதாவிலே சொல்லிக் கூறவேண்டியது என்னவென்றால்,

எரே 5:21 கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கேளாமலுமிருக்கிற அறிவில்லாத ஜனங்களே, கேளுங்கள்.

எரே 5:22 எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாத படிக்கும், அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவராகிய எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ?

எரேமியா - தொகுப்புரை

5 அதிகாரம்

எரே 5:23 இந்த ஜனங்களோ முரட்டாட்டமும் கலகமுமான இருதயமுள்ளவர்கள்; முரட்டாட்டம் பண்ணிப் போய்விடுகிறார்கள்.

எரே 5:24 அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்லுகிறதில்லை.

எரே 5:25 உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி, உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது.

எரே 5:26 குருவிபிடிக்கிறவர்கள் பதுங்குகிறதுபோல் பதுங்கி, மனுஷரைப் பிடிக்கக் கண்ணிகளை வைக்கிற துன்மார்க்கர் என் ஜனங்களில் காணப்படுகிறார்கள்.

எரே 5:27 குருவிகளால் கூண்டு நிறைந்திருக்கிறதுபோல், அவர்கள் வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது; ஆதலால் அவர்கள் பெருகி ஐசுவரியவான்களாகிறார்கள்.

எரே 5:28 கொழுத்து, சளுக்குப் பண்ணுகிறார்கள்; துன்மார்க்கனுடைய செயல்களைக் கண்டிக்காமல் விடுகிறார்கள்; திக்கற்றவனுடைய வழக்கை விசாரியாமல், தாங்கள் மாத்திரம் வாழுகிறார்கள்; எளியவர்களின் நியாயத்தைத் தீரார்கள்.

யூதாவின் பாவங்கள்

1. அறிவில்லாமல் இருக்கிறார்கள். (எரே 5:21)

2. மதியீனமாக இருக்கிறார்கள்.

3. சத்தியத்திற்குத் திரும்பாமல் குருடராக இருக்கிறார்கள்.

4. சத்தியத்தைக் கேட்காமல் செவிடராக இருக்கிறார்கள்.

5. கர்த்தருக்குப் பயப்படவில்லை. (எரே 5:22)

6. முரட்டாட்டமும், கலக இருதயமும் உடையவர்களாக இருக்கிறார்கள். (எரே 5:23)

7. முரட்டாட்டம் செய்து கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போகிறார்கள்.

8. கர்த்தருக்குப் பயப்பட வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களிடத்தில் இல்லை. (எரே 5:24)

9. அக்கிரமங்களும், பாவங்களும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். (எரே 5:25)

10. தங்கள் மத்தியில் துன்மார்க்களை அனுமதித்திருக்கிறார்கள்.

11. மனுஷரைப் பாவம் செய்ய வைப்பதற்குப் பதுங்குகிறார்கள்.

12. மனுஷரைப் பிடிக்க கண்ணிகளை வைக்கிறார்கள்.

13. அவர்கள் வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது (எரே 5:27)

14. சொந்த ஆதாயத்திற்காகப் பாவம் செய்கிறார்கள்.

15. கொழுத்து, சளுக்குப்பண்ணுகிறார்கள் (எரே 5:28)

16. துன்மார்க்கனுடைய செயல்களைக் கண்டிக்காமல் விடுகிறார்கள்.

17. திக்கற்றவனுடைய வழக்கை விசாரியாமல், தாங்கள் மாத்திரம் வாழுகிறார்கள்.

18. எளியவர்களின் நியாயத்தைத் தீரார்கள்.

19. தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். (எரே 5:31)

5 அதிகாரம்

20. ஆசாரியர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாய் ஆளுகிறார்கள்.

அறிவில்லாத ஜனம் (foolish) - סָכָל - saw-kawl' - 5530

ஆ.பெ.சொ. - மூடன், பேதை, பைத்தியம், அறிவில்லாத ஜனம் (silly; foolish; sottish). "sottish" (எரே 4:22)

"கண்கள் இருந்தும் காணாமலும்" - (ஏசா 6:9-10; மத் 13:13-16)

அதிர வைக்கும் காரியங்கள்

1. தேவனுடைய பிரசன்னம் (எரே 5:22; சங் 114:7; ஏசா 64:2)
2. தேவனுடைய கட்டளைகள் (எஸ்றா 10:3)
3. தேவனுடைய வார்த்தை (எஸ்றா 9:4; ஏசா 66:2-5)
4. தேவனுடைய ராஜ்யம் (சங் 99:1)
5. தேவன் ஒருவர் உண்டு என்னும் சத்தியம் (யாக் 2:19)

"எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ?" - கர்த்தர் சமுத்திரத்திற்கு நித்தியபிரமாணத்தை வைத்திருக்கிறார். அதற்கு மணலை எல்லையாக வைத்திருக்கிறார். கடல் அலைகள் மணலைத் தாண்டி வராது. அப்படிப்பட்ட கர்த்தருக்கு முன்பாக ஜனங்கள் நிச்சயமாகவே அதிர வேண்டும். (ஏசா 57:20, எரே 5:22-23).

"முரட்டாட்டமும் கலகமுமான இருதயமுள்ளவர்கள்" - இவர்கள் ஓயாமல் மோதிக் கொண்டிருக்கும் கடலைப்போன்றவர்கள். கர்த்தருடைய அன்பையும், வல்லமையையும் எப்போதும் எதிர்த்து முரட்டாட்டம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். (ஏசா 57:20-21).

தேவனுடைய மகத்துவமான கிரியைகள்

1. அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாதபடிக்கும், அலைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறார். (எரே 5:22).
2. அந்தந்தப் பருவத்திலே மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுக்கிறார். (எரே 5:24).
3. அறுப்புக்கு நியமித்த வாரங்களை மனுஷருக்குத் தற்காக்கிறார்.
4. துன்மார்க்கருக்குக் கர்த்தருடைய ஆத்துமா நீதியைச் சரிக்கட்டுகிறது. (எரே 5:29).

"அறுப்புக்கு நியமித்த வாரங்கள்" - தேவன் இயற்கையையும், காலங்களையும் நித்திய பிரமாணமாகச் சிருஷ்டித்திருக்கிறார். அவை நித்தியமானவை. ஒருபோதும் மாறாதவை. (ஆதி 8:22).

"உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி" - மனுஷருடைய பாவங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை விலக்கிப் போடும். (கலா 6:7-8).

(19) நிச்சயமான நியாயத்தீர்ப்பு

எரே 5:29 இவைகளை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 5:30 திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்துவருகிறது.

எரே 5:31 தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்?

5 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 13

"இவைகளை விசாரியாதிருப்பேனோ?" (எரே 5:29) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இவைகளை விசாரிப்பேன். (எரே 5:29).
2. இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டும்.

"திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம்" - ஆசாரியர்கள் தங்களுடைய ஊழியங்களைச் சரிவரச் செய்யாத காலங்களில் தீர்க்கதரிசிகள் எழும்பி நின்று கர்த்தருடைய வார்த்தையை அறிவித்தார்கள். ஆனால் இப்போது தீர்க்கதரிசிகளும் கள்ளத் தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகளை ஆசாரியர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஜனங்களைத் தங்களுடைய விருப்பத்தின்படி ஆளுகை செய்கிறார்கள். (எரே 5:30-31).

"இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது" - கள்ளத்தீர்க்கதரிசனத்தை ஜனங்கள் விரும்புகிறார்கள். நீதியாக ஜீவிப்பதைவிட பாவத்தில் ஜீவிப்பதை ஜனங்கள் நேசிக்கிறார்கள். தேவனுடைய பிரமாணத்தின் நுகத்தை ஜனங்கள் அங்கிகரிக்கவில்லை. தன்னுடைய மனம்போன போக்கில் ஒவ்வொருவனும் ஜீவிக்க வேண்டுமென்று விரும்புகிறான். கர்த்தருடைய கற்பனைக்குக் கீழ்ப்படியாமல் ஜீவித்தால் முடிவில் அவனுக்கு அழிவு நிச்சயம். (மத் 24:24;2தெச 2:8-12)

எரேமியா - தொகுப்புரை

6 அதிகாரம்

(20) எச்சரிப்பு - எட்டு அம்ச காரணம்

எரே 6:1 பென்யமீன் புத்திரரே, நீங்கள் எருசலேமின் நடுவிலிருந்து ஏகமாய்க் கூடியோடி, தெக்கோவாவில் எக்காளம் ஊதி, பெத்கேரேமின்மேல் அடையாளமாகத் தீவெளிச்சங் காட்டுங்கள்; ஒரு தீங்கும் மகா சங்காரமும் வடக்கேயிருந்து தோன்றுகிறதாயிருக்கிறது.

எரே 6:2 செல்வமாய் வளர்ந்த ரூபவதியான சீயோன் குமாரத்தியைப் பாழாக்குவேன்.

எரே 6:3 மேய்ப்பர் தங்கள் மந்தைகளோடே அவளிடத்துக்கு வருவார்கள்; அவர்கள் அவளுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் கூடாரம்போட்டு, அவனவன் தன் தன் ஸ்தலத்தில் மேய்த்து,

எரே 6:4 அவளுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய ஆயத்தம்பண்ணுங்கள் என்றும், மத்தியானத்தில்தானே நாம் போயேறும்படிக்கு எழுந்திருங்கள்; ஐயோ! பொழுது சாய்ந்து, அந்தி நிழல்கள் நீண்டுபோகிறதே;

எரே 6:5 எழுந்திருங்கள், நாம் இராக்காலத்திலாகிலும் போயேறி, அவளுடைய அரமனைகளை அழிப்போம் என்றும் சொல்லுவார்கள்.

எரே 6:6 சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், மரங்களை வெட்டி, எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடுங்கள்; அதுவே விசாரிக்கப்பட வேண்டிய நகரம்; அதின் உட்புறமெல்லாம் கொடுமை.

எரே 6:7 ஊற்றானது தன் தண்ணீரைச் சுரக்கப்பண்ணுமாப் போல, அது தன் தீங்கைச் சுரக்கப்பண்ணுகிறது; அதிலே கொடுமையும் அழிம்பும் கேட்கப் படுகிறது; துக்கமும் காயங்களும் நித்தமும் எனக்கு முன்பாகக் காணப்படுகிறது.

எரே 6:8 எருசலேமே, என் ஆத்துமா உன்னை விட்டுப் பிரியாதபடிக்கும், நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசமும் ஆக்காதபடிக்கும் புத்திகேள்.

எரே 6:9 திராட்சக்குலைகளை அறுக்கிறவனைப்போல உன் கையைத் திரும்பக் கூடைகளின்மேல் போடென்று சொல்லி, அவர்கள் இஸ்ரவேலில் மீதியாயிருந்த கனியைத் திராட்சச் செடியின் கனியைப்போல் நன்றாய்ப் பொறுக்கிக்கொண்டு போவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 14

"பென்யமீன் புத்திரரே, நீங்கள் எருசலேமின் நடுவிலிருந்து ஏகமாய்க் கூடியோடி, தெக்கோவாவில் எக்காளம் ஊதி, பெத்கேரேமின்மேல் அடையாளமாகத் தீவெளிச்சங் காட்டுங்கள்........" (எரே 6:1-30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. ஒரு தீங்கும் மகா சங்காரமும் வடக்கேயிருந்து தோன்றுகிற தாயிருக்கிறது. (எரே 6:1).

2. மேய்ப்பர் (ராஜாக்கள்) தங்கள் மந்தைகளோடே அவளிடத்துக்கு (எருசலேம்) வருவார்கள்; அவர்கள் அவளுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் கூடாரம்போடுவார்கள். (எரே 6:3).

3. அவனவன் தன் தன் ஸ்தலத்தில் மேய்ப்பான்.

4. அவளுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய ஆயத்தம்பண்ணுவார்கள். (எரே 6:4).

5. மத்தியானத்தில் யுத்தம் பண்ணுவார்கள்.

6. மத்தியானத்தில் யுத்தம் பண்ணும் திட்டத்தை மாற்றி இராக்காலத்தில் யுத்தம் பண்ணுவார்கள். (எரே 6:5).

7. மரங்களை வெட்டி, எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடுவார்கள். (எரே 6:6).

எரேமியா - தொகுப்புரை

6 அதிகாரம்

8. திராட்சக்குலைகளை அறுக்கிறவனைப் போல திரும்பவும் இஸ்ரவேலில் மீதியாயிருக்கிறவர்களைப் பிடித்துக் கொண்டு போவார்கள். (எரே 6:9).

9. அவர்கள் இஸ்வேலில் மீதியாயிருந்த கனியைத்திராட்சச்செடியின் கனியைப் போல் நன்றாய்ப் பொறுக்கிக் கொண்டு போவார்கள் (எரே 6:9).

10. வீதிகளிலுள்ள பிள்ளைகளின்மேலும், வாலிபருடைய கூட்டத்தின்மேலும் ஏகமாய் என் உக்கிரத்தை ஊற்றிவிடுவேன் (எரே 6:11).

11. அவர்களுடைய வீடுகளும், அவர்களுடைய காணிபூமிகளும், அவர்களுடைய மனைவிகளோடே ஏகமாய் அந்நியர் வசமாகும் (எரே 6:12).

12. அவர்கள்மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன். (எரே 6:19).

13. நான் இந்த ஜனத்துக்கு இடறல்களை வைப்பேன் (எரே 6:21).

14. அவைகள்மேல் பிதாக்களும், பிள்ளைகளும், ஏகமாய் இடறுண்டு அழிவார்கள்

15. குடியானவனும், அவனுக்கடுத்தவனும் ஏகமாய் இடறுண்டு அழிவார்கள்.

16. வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வரும். (எரே 6:22).

17. அவர்கள் வில்லும் வேலும் பிடித்து வருவார்கள் (எரே 6:23).

18. அவர்கள் கொடியர், இரக்கம் அறியாதவர்கள்.

19. அவர்கள் சத்தம் சமுத்திர இரைச்சலுக்குச் சமானமாயிருக்கும்.

20. அவர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தசந்நத்தராய்க் குதிரைகளின் மேலேறி அணியணியாக வருவார்கள்.

21. அவர்கள் வருகிற செய்தியைக் கேட்டதும், இஸ்ரவேலின் கைகள் தளரும். (எரே 6:24).

22. சுற்றிலும் சத்துருவின் பட்டயமும் பயங்கரம் இருக்கும். (எரே 6:25).

23. பாழாக்குகிறவன் சடிதியாய் நம்மேல் வருவான். (எரே 6:26).

24. நீ என் ஜனத்தின் வழியை அறிந்து கொள்ளவும் சோதித்துப்பார்க்கவும் நான் அவர்களை அனுப்பினேன். (எரே 6:27).

“வடக்கேயிருந்து” - பாபிலோனின் சேனைகள் வடக்கேயிருந்து பாலஸ்தீன தேசத்திற்குள் வந்தது. (எரே 6:1,22; எரே 1:13-15; எரே 3:12,18; எரே 4:6; எரே 10:22;எரே 13:20; எரே 35:9,26; எரே 46:6,10,20,24; எரே 47:2; எரே 50:3,9,41; எரே 51:48).

இஸ்ரவேலின் ஒப்புமைகள்

1. வேசி (எரே 3:1; ஏசா 1:21)
2. சீயோன் குமாரத்தி (எரே 6:2; ஏசா 16:1)
3. யெகோவாவின் மனையாட்டி (ஏசா 54:5; ஓசி 2:16)
4. கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீ. (ஏசா 54:6)
5. வேசிகளின் சகோதரி (எரே 3:6-10; எசே 16)
6. பாழாய்ப்போன ஸ்திரீ. (எரே 4:30-31; எரே 31:22)
7. என் ஜனமாகிய குமாரத்தி. (எரே 8:11)
8. சீர்கெட்டுப்போன குமாரத்தி (எரே 31:22)
9. விதவை (புல. 1:1)
10. ஜாதிகளில் பெரியவள் (புல. 1:1)
11. இரண்டு ஸ்திரீகள் (எசே 23)

எரேமியா - தொகுப்புரை

6 அதிகாரம்

12. சூரியனை அணிந்திருக்கும் ஸ்திரீ. (வெளி 12)
13. கர்ப்பவேதனைப்படும் ஸ்திரீ (எரே 4:31; எரே 6:24)
14. தூரஸ்திரீ (புல 1:17)
15. வெட்கங்கெட்ட வேசி (எசே 16:30)
16. தாயைப்போல மகள் (எசே 16:44)
17. தூரஸ்திரீயின் தீட்டு (எசே 36:17)
18. சோரஸ்திரீ (ஓசி 1:2; ஓசி 2:1-23)
19. வாழ்க்கைப்பட்டவள் (ஏசா 54:1)
20. துரோகம் செய்த மனைவி(எரே 3:20)
21. விபசார ஸ்திரீ (எசே 16:32)
22. இஸ்ரவேல் என்னும் கன்னிகை (எரே 18:13)

"மேய்ப்பர் தங்கள் மந்தைகளோடே அவளிடத்துக்கு வருவார்கள்" - பாபிலோன் தேசத்தார் இந்த வசனத்தில் மேய்ப்பராகக் கூறப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சேனைகளோடு எருசலேமிற்கு விரோதமாக வந்து அந்தப் பட்டணத்தைச் சுற்றிலும் முற்றிகை போடுவார்கள். (எரே 6:3-9).

"ஐயோ! பொழுது சாய்ந்து, அந்தி நிழல்கள் நீண்டுபோகிறதே" - மத்தியான வேளையின் உஷ்ணத்தில் ஜனங்கள் ஓய்வெடுப்பார்கள். அப்போது எருசலேம் பட்டணத்தார்மீது யுத்தம் பண்ண வேண்டுமென்பது பாபிலோனியரின் திட்டம். (எரே 15:8; 2சாமு 4:5; உன் 1:7; ஏசா 32:2) ஆனால் அவர்கள் மத்தியானத்தில் யுத்தம் பண்ணுவதற்குப் பதிலாக இராக்காலத்தில் யுத்தம் பண்ணுகிறார்கள். (எரே 6:5).

"மரங்களை வெட்டி, எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடுங்கள்" - பாபிலோனின் சேனைகள் எருசலேமிற்கு விரோதமாக முற்றிக்கைப் போடுகிறார்கள். எருசலேமின் உயரமான அலங்கத்திற்குச் சமமாக அவர்கள் மரங்களை வெட்டி கொத்தளம் போடுகிறார்கள்.

எருசலேம் அழிக்கப்பட்டதற்குக் காரணம்

1. அது விசாரிக்கப்படவேண்டிய நகரம்; அதின் உட்புறமெல்லாம் கொடுமை. (எரே 6:6)
2. அது தன் தீங்கைச் சுரக்கப்பண்ணுகிறது (எரே 6:7)
3. அதிலே கொடுமையும் அழிம்பும் கேட்கப்படுகிறது.
4. கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது (எரே 6:10)
5. கர்த்தருடைய வசனத்தின் அவர்களுக்கு விருப்பமில்லை.
6. அவர்களில் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர். (எரே 6:13)
7. தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர்.
8. சமாதானமில்லாதிருந்தும்; சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள். (2இராஜா 23, எரே 6:14)
9. அவர்கள் அவருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படாமல் இருக்கிறார்கள். (எரே 6:15)
10. அவர்கள் தேவனுடைய வழிகளில் நடக்கமாட்டோம் என்கிறார்கள். (எரே 6:16)
11. அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கேட்கமாட்டோம் என்கிறார்கள். (எரே 6:17)
12. என் நியாயப்பிரமாணத்துக்குச் செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள் (எரே 6:19)
13. மாய்மாலமாக இருக்கிறார்கள். (எரே 6:20)
14. அவர்களெல்லாரும் முரட்டாட்டமான அகங்காரிகளாக இருக்கிறார்கள். (எரே 6:28)
15. தூற்றித்திரிகிறவர்களாயிருக்கிறார்கள்.

6 அதிகாரம்

16. அவர்கள் வெண்கலமும் இரும்புமானவர்கள்.

17. அவர்களெல்லாரும் கெட்டவர்கள்.

18. அவர்களுடைய பொல்லாப்புகள் அற்றுப்போகவில்லை. (எரே 6:29)

19. கர்த்தர் அவர்களைத் தள்ளிவிட்டார். (எரே 6:30)

"அது தன் தீங்கைச் சுரக்கப்பண்ணுகிறது" - இஸ்ரவேலில் தீங்கு ஏராளமாக இருக்கிறது. அவர்களுடைய இருதயத்திலிருந்து தீங்கு ஊற்றைப்போல சுரக்கிறது. (மாற்கு 7:20-23).

துக்கம் (grief) - חֳלִי - khol-ee' - 2483

ஆ.பெ.சொ. - நோய், வியாதி, துக்கம், வியாதிப்படுதல் (malady; calamity; disease; grief; sickness) "grief" (ஏசா 53:3)

காயம் (wounds) - מַכֶּה - mak-keh' - 4347

பெ.பெ.சொ. - வாதை, அடித்தல், காயம், யுத்தம், காயப்படுதல், இரணம், வடு, ரோகம்அடி, வெட்டுதல், தண்டித்தல் (blows of the flail; carnage; pestilence; beatings; slaughter; strokes; stripes).

நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிப்பதற்குக் கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகள்

1. கர்த்தருடைய புத்தியைக் கேட்க வேண்டும். (எரே 6:8).

2. வழிகளில் நின்று காணவேண்டும். (எரே 6:16).

3. பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடக்க வேண்டும்.

4. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும். (எரே 6:17,19).

5. இரட்டைக் கட்டிக்கொண்டு, சாம்பலிலே புரள வேண்டும். (எரே 6:26).

6. மனங்கசந்து புலம்ப வேண்டும்.

"இஸ்ரவேலில் மீதியாயிருந்த கனி" - பாபிலோன் தேசத்தார் யூதாவின்மீது யுத்தம் பண்ணி அதை அழித்துப்போடுவார்கள். திராட்சைச்செடியின் கனியை நன்றாகப் பொறுக்கிக் கொண்டு போவது போல் அவர்கள் யூதா தேசத்தாரைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள். (எரே 6:3-6)

(21) யூதாவின் எட்டு பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 6:10 அவர்கள் கேட்கும்படி நான் யாரோடே பேசி எச்சரிப்பேன்? அவர்களுடைய செவி விருத்த சேதனமில்லாதது; அவர்கள் கேட்கமாட்டார்கள்; கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது; அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை.

எரே 6:11 ஆகையால் நான் கர்த்தருடைய உக்கிரத்தால் நிறைந்திருக்கிறேன்; அதை அடக்கி இளைத்துப்போனேன்; வீதிகளிலுள்ள பிள்ளைகளின்மேலும், வாலிபருடைய கூட்டத்தின்மேலும் ஏகமாய் அதை ஊற்றிவிடுவேன்; புருஷரும், ஸ்திரீகளும், கிழவரும், பூரண வயதுள்ளவர்களுங்கூடப் பிடிக்கப்படுவார்கள்.

எரே 6:12 அவர்களுடைய வீடுகளும், அவர்களுடைய காணிபூமிகளும், அவர்களுடைய மனைவிகளோடே ஏகமாய் அந்நியர் வசமாகும்; என் கையை இந்தத் தேசத்தின் குடிகளுக்கு விரோதமாக நீட்டுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா - தொகுப்புரை

6 அதிகாரம்

எரே 6:13 அவர்களில், சிறியோர்முதல் பெரியோர்மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமல்லாமல் தீர்க்கதரிசிகள்முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர்.

எரே 6:14 சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்.

ஏரே 6:15 அவர்கள் அவருவருப்பானதைச் செய்ததினி மித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்கும் காலத்தில் இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:16 வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

எரே 6:17 நான் உங்கள்மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவிகொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ: நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள்.

"அவர்களுடைய செவி விருத்தசேதனமில்லாதது" - யூதா தேசத்தார் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல் இருக்கிறார்கள். (மத் 13:13-15).

கர்த்தருடைய வசனத்தை யூதா அவமதித்த விதம்

1. நிந்தை (எரே 6:10)
2. அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை.
3. அதின் வழிகளில் நடக்க மறுக்கிறார்கள். (எரே 6:16)
4. அதைக்கேட்க மறுக்கிறார்கள். (எரே 6:17,19)
5. அதை வெறுத்து விடுகிறார்கள். (எரே 6:19; எரே 8:9)
6. அசட்டை பண்ணுகிறார்கள். (எரே 17:15)
7. தேவனுடைய வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள். (எரே 23:36)

"நான் கர்த்தருடைய உக்கிரத்தால் நிறைந்திருக்கிறேன்" - எரேமியா தீர்க்கதரிசி பரிசுத்த ஆவியானவரால் கர்த்தருடைய உக்கிரத்தால் நிறைந்திருக்கிறார். கர்த்தருடைய உக்கிரத்தை அவரால் அடக்கி வைக்க முடியவில்லை. அதை எல்லோர்மேலும் ஊற்றி விடுகிறார்.

எரேமியாவின் நிலைமை

1. கர்த்தருடைய உக்கிரத்தால் நிறைந்திருக்கிறார்.
2. அதை அடக்கி இளைத்துப் போயிருக்கிறார்.
3. அதை ஏகமாய் ஊற்றிவிடுவார்.

கர்த்தருடைய உக்கிரம் ஊற்றப்படும் ஜனங்கள்

1. வீதிகளிலுள்ள பிள்ளைகள்
2. வாலிபருடைய கூட்டம்

6 அதிகாரம்

3. புருஷர்

4. ஸ்திரீகள்

5. கிழவரும், பூரணவயதுள்ளவர்களும்

யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு

1. ஒரு தீங்கும் மகா சங்காரமும் வடக்கேயிருந்து தோன்றும். (எரே 6:1)

2. மரங்களை வெட்டி, எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடப்படும். (எரே 6:6)

3. கர்த்தருடைய ஆத்துமா யூதாவை விட்டுப் பிரிந்துவிடும். (எரே 6:8)

4. தேசம் பாழாகும்.

5. பூரண சிறையிருப்பு. (எரே 6:9)

6. எல்லோர்மீதும் கர்த்தருடைய உக்கிரம் ஊற்றப்பட்டிருக்கும். (எரே 6:11)

7. யூதா ஜனத்தாரின் வீடுகளும், காணிபூமிகளும், மனைவிகளும் அந்நிய வசமாகும். (எரே 6:12)

8. அநேகர் மரித்துப்போவார்கள். (எரே 6:15)

9. விசாரிக்கும் காலத்தில் இடறுண்டு போவார்கள்.

10. ஜனங்கள்மீது தீங்கு வரும். (எரே 6:19)

11. அவர்களுக்கு முன்பாக இடறல்கள் வைக்கப்படும். (எரே 6:21)

12. பிதாக்களும், பிள்ளைகளும் ஏகமாய் இடறுண்டு அழிவார்கள்.

13. குடியானவனும், அவனுக்கு அடுத்தவனும் ஏகமாய் இடறுண்டு அழிவார்கள்.

14. ஜனங்கள் இரக்கமறியாமல் கொல்லப்படுவார்கள். (எரே 6:23)

15. எல்லா மனுஷருடைய கைகளும் தளர்ந்துபோகும். (எரே 6:24)

16. கர்ப்பவதிக்கு உண்டாகும் வேதனைக்கொப்பான வேதனை வரும்.

17. எல்லா பக்கத்திலிருந்தும் சத்துருக்கள் வருவார்கள். (எரே 6:25)

18. நியாயத்தீர்ப்பு சடிதியாய் வரும். (எரே 6:26)

19. அவர்களுடைய வழிகள் சோதித்துப் பார்க்கப்படும். (எரே 6:27)

20. கர்த்தர் அவர்களைத் தள்ளிவிடுவார். (எரே 6:30)

"என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்" - தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் கர்த்தருடைய பிள்ளைகளின் காயங்களைக் குணமாக்க முயற்சி பண்ணுகிறார்கள். சமாதானம் இல்லாமல் இருந்தாலும் அவர்களுக்குச் சமாதானம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள். "காயங்களை மேற்பூச்சாய் குணமாக்குகிறார்கள்" என்னும் வாக்கியம் மூன்று முறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எரே 6:14; எரே 8:11,21).

"உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" - (மத் 11:28-30)

(22) நியாயத்தீர்ப்பின் பன்னிரெண்டு அம்சங்கள்

எரே 6:18 ஆகையால் ஜாதிகளே, கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்துகொள்.

எரே 6:19 பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்துக்குச் செவி கொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள்மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்.

6 அதிகாரம்

எரே 6:20 சேபாவிலிருந்து வருகிற தூபவர்க்கமும், தூரதேசத்தினுடைய சுகந்தப்பட்டையும் எனக்கு என்னத்துக்கு? உங்கள் சர்வாங்கதகனங்கள் எனக்கு விருப்பமல்ல; உங்கள் பலிகள் எனக்கு இன்பமாயிராது.

எரே 6:21 ஆகையால் இதோ, நான் இந்த ஜனத்துக்கு இடறல்களை வைப்பேன்; அவைகள்மேல் பிதாக்களும், பிள்ளைகளும், குடியானவனும், அவனுக்கடுத்தவனும், ஏகமாய் இடறுண்டு அழிவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:22 இதோ, வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வந்து, பூமியின் கடையெல்லைகளிலிருந்து ஒரு பெரிய ஜாதி எழும்பும்.

எரே 6:23 அவர்கள் வில்லும் வேலும் பிடித்து வருவார்கள்; அவர்கள் கொடியர், இரக்கம் அறியாதவர்கள்; அவர்கள் சத்தம் சமுத்திர இரைச்சலுக்குச் சமானமாயிருக்கும்; சீயோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தசன்னத்தராய்க் குதிரைகளின் மேலேறி அணியணியாக வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:24 அவர்கள் வருகிற செய்தியைக் கேட்டோம்; நம்முடைய கைகள் தளர்ந்தது; இடுக்கணும், கர்ப்பவதிக்கு உண்டாகும் வேதனைக் கொப்பான வேதனையும் நம்மைப் பிடித்தது.

எரே 6:25 வயல்வெளியிலே புறப்படாதிருங்கள்; வழியிலும் நடவாதிருங்கள்;சுற்றிலும் சத்துருவின் பட்டயமும் பயங்கரமுமுண்டு.

எரே 6:26 என் ஜனமாகிய குமாரத்தியே, நீ இரட்டைக் கட்டிக்கொண்டு, சாம்பலிலே புரண்டு, ஒரே புத்திரனுக்காகத் துக்கிக்கிறது போல மனங்கசந்து புலம்பு; பாழாக்குகிறவன் சடிதியாய் நம்மேல் வருவான்.

"அதை வெறுத்துவிடுகிறார்கள்" - (எரே 6:10)

கர்த்தருக்கு விருப்பமல்லாத காரியங்கள்

1. சேபாவிலிருந்து வருகிற தூபவர்க்கம்
2. தூரதேசத்தினுடைய சுகந்தப்பட்டை
3. சர்வாங்கதகனங்கள்
4. பலிகள்

யூதா தேசத்தார் தங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரை ஆராதிக்காமல் மேற்பூச்சாக ஆராதிக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களுடைய ஆராதனையில் பிரியப்படவில்லை. (ஏசா 1:13-14; ஏசா 58:1-5) தங்களுடைய பக்தியை எல்லோருக்கும் வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக அவர்கள் கர்த்தரை மாய்மாலமாக ஆராதிக்கிறார்கள். (1சாமு 15:22; ஏசா 1:13-20; மீகா 6:6-8). கர்த்தர் இவற்றில் பிரியப்படுவதில்லை. (ஓசி 2:11) கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குப் புதிய உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

"வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வந்து" - பாபிலோன் தேசத்தார் சீரியாவின் வனாந்தரத்தைச் சுற்றி வந்து வடதிசை வழியாகப் பாலஸ்தீன தேசத்திற்குள் வருவார்கள். (எரே 6:1). இவர்கள் பெரிய ஜாதி என்றும், கொடியவர்கள் என்றும், இரக்கம் அறியாதவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். (எரே 6:22-23).

"வில்லும் வேலும்" - இவை இரண்டும் பாபிலோன் தேசத்தாரின் பொதுவான ஆயுதங்களாகும். (1சாமு 17:6).

"கொடியர்" - பாபிலோன் தேசத்தின் சேனைகள் யுத்தத்தில் இரக்கமில்லாமல் நடந்து கொள்வார்கள். தங்களிடத்தில் தோல்வியுற்றவர்களின் கைகளை வெட்டிப் போடுவார்கள். அவர்களுடையபட்டணங்களின் அலங்கங்களில் தோற்றவர்களைத் தூக்கில் போட்டு கொன்றுபோடுவார்கள்.

"அவர்கள் வருகிற செய்தியைக் கேட்டோம்" - நேபுகாத்நேச்சார் யூதா தேசத்திற்கு விரோதமாக வந்துவிடுகிறான். அந்தச் செய்தியைக் கேட்டவுடன் யூதா தேசத்தில் உள்ள அனைவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. (எரே 6:24-25).

எரேமியா - தொகுப்புரை

6 அதிகாரம்

"பாழாக்குகிறவன் சடிதியாய் நம்மேல் வருவான்." - நேபுகாத்நேச்சார் மூலமாக யூதா தேசத்தாருக்கு நெருக்கமும், துக்கமும் உண்டாகும். ஆகையினால் அவர்கள் இரட்டைக் கட்டிக்கொண்டு சாம்பலிலே புரண்டு, மனங்கசந்து புலம்ப வேண்டும்.

நேபுகாத்நேச்சாரின் நாமங்களும், அடையாளங்களும்

1. ஜாதிகளைச் சங்கரிக்கிறவன். (எரே 4:7)
2. பாழாக்குகிறவன். (எரே 6:26)
3. பாபிலோன் ராஜா (எரே 21:4,7)
4. என் ஊழியக்காரன் (எரே 27:6)
5. ராஜாதி ராஜா (தானி 2:37)
6. பொன்னான அந்தத்தலை (தானி 2:38)
7. சிங்கம் (எரே 49:19)
8. கழுகு (எரே 49:22)
9. சம்மட்டி (எரே 50:23)
10. கெடுக்கிற கேடான பர்வதம். (எரே 51:25)
11. எரிந்துபோன பர்வதம் (எரே 51:25)
12. வலுசர்ப்பம் (எரே 51:34)

(23) எரேமியாவின் மூன்றாவது ஊழியம் - (1:4-10,17-19; 11:1-6)

எரே 6:27 நீ என் ஜனத்தின் வழியை அறிந்துகொள்ளவும் சோதித்துப்பார்க்கவும் நான் உன்னை அவர்களுக்குள்ளே துருகமாகவும், அரணாகவும் வைத்தேன்.

எரே 6:28 அவர்களெல்லாரும் முரட்டாட்டமான அகங்காரிகளும், தூற்றித் திரிகிறவர் களுமாயிருக்கிறார்கள்; அவர்கள் வெண்கலமும் இரும்புமானவர்கள்; அவர்களெல்லாரும் கெட்டவர்கள்.

எரே 6:29 துருத்தி வெந்தது; ஈயம் நெருப்பினால் அழிந்தது; புடமிடுகிறனுடைய பிரயாசம் விருதாவாய்ப் போயிற்று; பொல்லாப்புகள் அற்றுப் போகவில்லை.

எரே 6:30 அவர்கள் தள்ளுபடியான வெள்ளி என்னப்படுவார்கள்; கர்த்தர் அவர்களைத் தள்ளிவிட்டார்.

"நான் உன்னை அவர்களுக்குள்ளே துருகமாகவும், அரணாகவும் வைத்தேன்" - கர்த்தர் எரேமியாவை யூதர்கள் மத்தியில் துருகமாகவும், அரணாகவும் வைத்திருக்கிறார். எரேமியா யூதா ஜனங்களையும், அவர்களுடைய வழிகளையும் அறிந்து கொள்ள வேண்டும். இது எரேமியாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மூன்றாவது ஊழியமாகும். (எரே 1:4-10,17-19; எரே 11:1-6).

தள்ளுபடியானவர்கள் (reprobate) - מָאַס - maw-as' - 3988

வினைச்சொல் - அமைதி, கைவிடு, அசட்டைபண்ணு, நிந்தி, தள்ளு, புறக்கணி **(to despise, refuse, reject, abhor)** - கர்த்தர் யூதா தேசத்தாரைப் புறக்கணித்து தள்ளிவிட்டார்.

7 அதிகாரம்

3. யூதாவுக்கு மூன்றாவது செய்தி - *(7:1-10:25)*

(1) ஆசீர்வாதத்திற்கு ஏழு நிபந்தனைகள் - *(ஏசா 1:16)*

எரே 7:1 கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 7:2 நீ கர்த்தருடைய ஆலயத்தின் வாசலிலே நின்று, அங்கே கூறிச் சொல்ல வேண்டிய வசனம் என்னவென்றால், கர்த்தரைப் பணிந்துகொள்ள இந்த வாசல்களுக்குள்ளே பிரவேசிக்கிற யூத ஜனங்களாகிய நீங்களெல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 7:3 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள், அப்பொழுது உங்களை இந்த ஸ்தலத்திலேகுடியிருக்கப்பண்ணுவேன்.

எரே 7:4 கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி, பொய்வார்த்தைகளை நம்பிக் கொள்ளாதிருங்கள்.

எரே 7:5 நீங்கள் உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் நன்றாய்ச் சீர்ப்படுத்தி, நீங்கள் மனுஷனுக்கும் மனுஷனுக்குமுள்ள வழக்கை நியாயமாய்த் தீர்த்து,

எரே 7:6 பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், குற்றமில்லாத இரத்தத்தை இந்த ஸ்தலத்திலே சிந்தாமலும்; உங்களுக்குக் கேடுண்டாக அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும் இருப்பீர்களேயாகில்,

எரே 7:7 அப்பொழுது நான் உங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசமாகிய இந்த ஸ்தலத்திலே உங்களைச் சதாகாலமும் குடியிருக்கப்பண்ணுவேன்.

தீர்க்கதரிசன எண் - 15

"கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வசனம்........" (எரே 7:1-7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. உங்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணுவேன். *(எரே 7:3).*
2. நான் உங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசமாகிய இந்த ஸ்தலத்திலே உங்களைச் சதாகாலமும் குடியிருக்கப்பண்ணுவேன்.*(எரே 7:5-7).*

எரேமியாவிற்கும், யூதாவிற்கும் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. கர்த்தருடைய ஆலயத்தின் வாசலிலே நின்று, அங்கே கர்த்தருடைய வசனத்தைச் சொல். *(எரே 7:2).*
2. உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள் என்று சொல். *(எரே 7:3).*
3. பொய்வார்த்தைகளை நம்பிக் கொள்ளாதிருங்கள் என்று சொல். *(எரே 7:4).*
4. இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம்; அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம் *(எரே 7:16).*
5. உங்கள் தகனபலிகளை மற்றப் பலிகளோடுங்கூட்டி, இறைச்சியைச் சாப்பிடுங்கள் என்று சொல். *(எரே 7:21).*
6. நீ இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குச் சொல். *(எரே 7:27).*

7 அதிகாரம்

7. நீ அவர்களை நோக்கிக் கூப்பிடு.

8. நீ உன் தலைமயிரைச் சிரைத்துக் கொள். (எரே 7:29).

9. அதை எறிந்துவிடு.

10. உயர்தலங்களிலே புலம்பிக்கொண்டிரு.

"யூத ஜனங்களாகிய நீங்களெல்லாரும்" - இந்த யூத ஜனங்கள் இஸ்ரவேல் ஜனம் என்றும், இஸ்ரவேல் வம்சத்தார் என்றும் இந்தத் தீர்க்கதரிசனப் பகுதியில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (எரே 7:12; எரே 9:26; எரே 10:1).

"கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" - எரேமியா யூதஜனங்களுக்கு மூன்று செய்திகளைக் கூறுகிறார். இவை முதல் பத்து அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளன. அந்த மூன்று செய்திகளின் விவரம்:

1. முதலாவது செய்தி (எரே 2:1-3:5)

2. இரண்டாவது செய்தி (எரே 3:6-6:30)

3. மூன்றாவது செய்தி (எரே 7:1-10:25)

"சேனைகளின் கர்த்தர்" - எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் 32 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எரே 7:3,21; எரே 9:15; எரே 16:9; எரே 19:3,15; எரே 25:27;எரே 27:4,21; எரே 28:2,14; எரே 29:4,8,21,25; எரே 31:23; எரே 32:14-15; எரே 35:13,18-19; எரே 39:16; எரே 42:15,18; எரே 43:10; எரே 44:2,11,25; எரே 46:25; எரே 48:1; எரே 50:18; எரே 51:33)

"அப்பொழுது உங்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணுவேன்." - இது நிபந்தனையுள்ள தீர்க்கதரிசனமாகும். இந்தத் தீர்க்கதரிசனம் ஆயிரம்வருஷ அரசாட்சியில் நிறைவேறும். இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கு பல நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு.

1. உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள் (எரே 7:3).

2. பொய்வார்த்தைகளை நம்பிக் கொள்ளாதிருங்கள். (எரே 7:4).

3. நீங்கள் உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் நன்றாய்ச் சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள். (எரே 7:5).

4. நீங்கள் மனுஷனுக்கும் மனுஷனுக்குமுள்ள வழக்கை நியாயமாய்த் தீர்த்து வையுங்கள்.

5. பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலிருங்கள். (எரே 7:6).

6. குற்றமில்லாத இரத்தத்தை இந்த ஸ்தலத்திலே சிந்தாமலிருங்கள்.

7. அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலிருங்கள். (எரே 7:7).

அப்பொழுது நான் உங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசமாகிய இந்த ஸ்தலத்திலே உங்களைச் சதாகாலமும் குடியிருக்கப் பண்ணுவேன். (எரே 7:3,7).

"சதாகாலமும்" - ஆபிரகாமிற்கும், அவருடைய சந்ததியாருக்கும் கானான் தேசம் நித்திய சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தர் கூறியிருக்கும் நிபந்தனைகளையெல்லாம் கைக்கொண்டால் கானான் தேசத்தை அவர்கள் நித்திய காலமாகச் சுதந்தரித்துக் கொள்ளலாம். (ஆதி 17:18).

(2) யூதாவின் எட்டு பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 7:8 இதோ, ஒன்றுக்கும் உதவாத பொய்வார்த்தைகளை நீங்கள் நம்புகிறீர்கள்.

எரே 7:9 நீங்கள் திருடி, கொலைசெய்து, விபசாரம்பண்ணி, பொய்யாணையிட்டு, பாகாலுக்குத் தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப் பின்பற்றி,

எரேமியா - தொகுப்புரை

7 அதிகாரம்

எரே 7:10 பிற்பாடு வந்து, என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று; இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோமென்று சொல்வீர்களோ?

எரே 7:11 என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்குக் கள்ளர்குகையாயிற்றோ? இதோ, நானும் இதைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 7:12 நான் முந்தி என் நாமம் விளங்கப்பண்ணின சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்கள் போய், இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள்.

"பொய்வார்த்தைகள்" - யூதாவின் புத்திரர் பொய்வார்த்தைகளை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். தேவாலயத்தில் ஆராதனை செய்வதினால் தங்களுக்கு வரும் தீங்குகளிலிருந்து தாங்கள் பாதுகாக்கப்படுவோம் என்று நம்புகிறார்கள். அதே சமயத்தில் அவர்கள் விக்கிரகங்களையும் ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய உள்ளங்களில் கர்த்தரைத் துதிக்கும் மெய்யான ஆராதனை இல்லை.

யூதாவின் பாவங்கள்

1. பொய்வார்த்தைகளை நம்புதல். (எரே 7:8)
2. திருடுதல் (எரே 7:9)
3. கொலைசெய்தல்
4. விபசாரம்பண்ணுதல்
5. பொய்யாணையிடுதல்
6. பாகாலுக்குத் தூபங்காட்டுதல்
7. அந்நிய தேவர்களைப் பின்பற்றுதல்
8. பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருப்பதாகக்கூறுதல். (எரே 7:10)
9. தேவனுக்கு உத்தரவு கொடாமல் இருப்பது. (எரே 7:13,27)
10. வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடுதல். (எரே 7:18)
11. கர்த்தருக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்ப்பது. (எரே 7:18)
12. கர்த்தருடைய சத்தத்தைக் கேளாமல் இருப்பது. (எரே 7:24,26,27)
13. தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின் படியும் கடினத்தின் படியும் நடப்பது. (எரே 7:24)
14. முன்னிட்டல்ல பின்னிட்டே போவது.
15. தங்கள் கழுத்தைக் கடினப்படுத்துதல். (எரே 7:26)
16. தேவனாகியகர்த்தருடைய சத்தத்தைக் கேளாமலிருப்பது. (எரே 7:28)
17. புத்தியை ஏற்றுக்கொள்ளாமலிருப்பது.
18. சத்தியத்தை மறுதலிப்பது.
19. கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வது. (எரே 7:30)
20. கர்த்தருடைய ஆலயத்தில் தங்கள் அருவருப்புக்களை வைப்பது.
21. தோப்பேத்தின் மேடைகளைக் கட்டுவது. (எரே 7:31)
22. தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிப்பது.

"இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோம்" - யூதாவின் ஜனங்கள் தேவாலயத்திற்குச் சென்று தங்களுடைய பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். தங்களுடைய கடந்த கால பாவங்களிலிருந்து விடுதலை பெற்றிருப்பதாக அறிவிக்கிறார்கள். அதே சமயத்தில் அந்த அருவருப்புக்களைத் தாங்கள் இனிமேலும் செய்வதற்குத் தங்களுக்கு அனுமதி கிடைத்திருப்பதாகவும் கூறுகிறார்கள்.

7 அதிகாரம்

"இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள்" - இஸ்ரவேல் ஜனங்கள் தொடர்ந்து பாவம்செய்தபோது கர்த்தர் அவர்களை நியாயந்தீர்த்தார். யூதாவின் புத்திரரைச் சீலோவிற்குச் சென்று அங்கு தமது நியாயத்தீர்ப்பைக் காணுமாறு கூறுகிறார். சீலோவில் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தின் நிமித்தம் சீலோ முழுவதுமாக அழிக்கப்பட்டது. ஏலி, சாமுவேல் ஆகியோரின் காலத்தில் இந்த அழிவு நிறைவேறிற்று. (1சாமு 4:11,17,22) நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குச் சீலோ இருந்ததுபோல ராஜாக்களின் காலத்தில் அவர்களுக்கு எருசலேம் இருந்தது.

(3) இரண்டு அம்ச நியாயத்தீர்ப்பு

> எரே 7:13 நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள், நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிவந்திருந்தும், நீங்கள் கேளாமலும், நான் உங்களைக் கூப்பிட்டும், நீங்கள் உத்தரவு கொடாமலும் போனபடியினால்,

> எரே 7:14 என் நாமம் தரிக்கப்பட்டதும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறதுமான இந்த ஆலயத்துக்கும், உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த ஸ்தலத்துக்கும், நான் சீலோவுக்குச் செய்ததுபோலச் செய்வேன்.

> எரே 7:15 நான் உங்களுடைய எல்லாச் சகோதரருமாகிய எப்பிராயீம் சந்ததி அனைத்தையும் தள்ளிப்போட்டதுபோல, உங்களையும் என் முகத்தைவிட்டுத் தள்ளிப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 16

"நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள்........" (எரே 7:13-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இந்த ஆலயத்துக்கு நான் சீலோவுக்குச் செய்ததுபோலச் செய்வேன். (எரே7:14; 1சாமு 4).
2. உங்களை என் முகத்தைவிட்டுத் தள்ளிப் போடுவேன் (எரே 7:15; 2இராஜா 17)

"நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள்" - யூதாவின் புத்திரர்கள் பல பாவங்களைச் செய்தார்கள். இதற்காகக் கர்த்தர் தேவாலயத்தை அழித்துப்போட்டார். யூதாவின் ஜனங்கள் பாபிலோன் தேசத்திற்குச் சிறைப்பட்டுப் போக அனுமதித்தார்.

"நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லி வந்திருந்தும்" - கர்த்தர் தம்முடைய செய்தியைத் தீர்க்கதரிசிகளின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்குக் கூறினார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியவில்லை. அவர்கள் கர்த்தருக்கு எதிராகத் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள். முடிவில் அழிந்தார்கள். (எரே 7:13-15).

"ஏற்கனவே" (rising up) - எரேமியாவின் புஸ்தகத்தில் இதுபோன்ற வார்த்தை 11 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எரே 7:13,25; எரே 11:7; எரே 25:3-4; எரே 26:5;எரே 29:19; எரே 32:33; எரே 35:14-15; எரே 44:4) இந்த வார்த்தை மற்றப் புஸ்தகங்களில் 2நாளா. 36:15 ஆவது வசனத்தில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"எப்பிராயீம் சந்ததி அனைத்தையும்" - வடக்கு ராஜ்யத்தின் பத்துக் கோத்திரத்தாரை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. இவர்கள் 93 வருஷங்களுக்கு முன்பாகவே அழிந்து போனார்கள்.

7 அதிகாரம்

(4) யூதாவின் விக்கிரகாராதனை

எரே 7:16 நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம்; அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம், என்னிடத்தில் அவர்களுக்காகப் பரிந்துபேசவும் வேண்டாம், நான் உனக்குச் செவிகொடுப்பதில்லை.

எரே 7:17 யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் அவர்கள் செய்கிறதை நீ காணவில்லையா?

எரே 7:18 எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பான பலிகளை வார்க்கிறார்கள்; அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள்.

எரே 7:19 அவர்கள் எனக்கா மனமடிவுண்டாக்குகிறார்கள்? தங்கள் முகங்கள் வெட்கத்துக்குட்படும்படி அவர்கள் தங்களுக்கே அல்லவோ மனமடிவுண்டாக்குகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவிற்குக் கூறும் கட்டளைகள்

1. நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம்.
2. அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம்.
3. என்னிடத்தில் அவர்களுக்காகப் பரிந்துபேசவும் வேண்டாம்.

எரே 14:7-9 ஆகிய வசனங்களில் எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் ஜனங்களுக்காகக் கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். ஆனால் எரேமியாவின் ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் கொடுக்கவில்லை.

"எருசலேமின் வீதிகளிலும்" - எருசலேமில் விக்கிரகாராதனைகளும், பாவங்களும் வீதிகளுக்கே வந்துவிட்டது. இஸ்ரவேலின் எல்லாக் குடும்பத்தாரும் இந்தப் பாவத்தைச் செய்து வருகிறார்கள். (எரே 7:17-18).

"வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள்" - பொனீஷியர்கள் பாகால் அல்லது மோளேகு தெய்வத்தை வானத்தின் ராஜாவாகக் கருதி வழிபட்டார்கள். அஸ்தரோத் என்னும் தெய்வம் சந்திரனைக் குறிக்கும். இவளைப் பாகாலின் மனைவியாக ஆராதித்தார்கள். இவள் வானராக்கினி என்று அழைக்கப்படுகிறாள். இதுபோன்ற விக்கிரகாராதனைகளில் விபசாரமும் கலந்து விடுகிறது. பாபிலோன் தேசத்தார் மெலித்தா என்னும் பெண் தெய்வத்தை வழிபட்டார்கள். சந்திரன் ஒரு ஸ்திரீயாக வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். இவளுக்கு ஆராதனை செய்யும்போது பணியாரங்களைச் சுட்டுப்படைப்பது வழக்கம்.

(5) ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 7:20 ஆதலால் இதோ, என் கோபமும் என் உக்கிரமும் இந்த ஸ்தலத்தின்மேலும், மனுஷர்மேலும், மிருகங்கள்மேலும், வெளியின் மரங்கள்மேலும், பூமியின் கனிகள்மேலும் ஊற்றப்படும்; அது அவியாமல் எரியும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 17

"ஆதலால் இதோ, என் கோபமும் என் உக்கிரமும் இந்த ஸ்தலத்தின்மேலும், மனுஷர்மேலும்" (எரே 7:20) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. என் கோபமும் என் உக்கிரமும் இந்த ஸ்தலத்தின்மேலும், மனுஷர்மேலும், மிருகங்கள்மேலும், வெளியின் மரங்கள்மேலும், பூமியின் கனிகள் மேலும் ஊற்றப்படும்.
2. அது அவியாமல் எரியும்.

7 அதிகாரம்

(6) பத்து அம்ச புத்திமதி

எரே 7:21 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறதென்னவென்றால்: உங்கள் தகனபலிகளை மற்றப் பலிகளோடுங்கூட்டி, இறைச்சியைச் சாப்பிடுங்கள்.

எரே 7:22 நான் உங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவந்த நாளிலே, தகனபலியைக்குறித்தும் மற்றப் பலிகளைக் குறித்தும் நான் அவர்களோடே பேசினதையும் கட்டளையிட்டதையும்பார்க்கிலும்,

எரே 7:23 என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்.

எரே 7:24 அவர்களோ அதைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும்போய், தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின்படியும் கடினத்தின்படியும் நடந்து, முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்கள்.

எரே 7:25 உங்கள் பிதாக்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாள்முதல் இந்நாள் மட்டும் நான் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரையெல்லாம் தினந்தினம் உங்களண்டைக்கு ஏற்கனவே அனுப்பிக்கொண்டிருந்தேன்.

எரே 7:26 ஆனாலும் அவர்கள் என் சொல்லைக்கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும்போய், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் அதிக பொல்லாப்பு செய்தார்கள்.

எரே 7:27 நீ இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குச் சொன்னாலும், அவர்கள் உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்; நீ அவர்களை நோக்கிக் கூப்பிட்டாலும், அவர்கள் உனக்கு மறுஉத்தரவு கொடுக்கமாட்டார்கள்.

எரே 7:28 ஆகையால் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளாமலும், புத்தியை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கிற ஜாதி இதுதான் என்றும், சத்தியம் அழிந்து, அது அவர்கள் வாயிலிருந்து அற்றுப்போனதென்றும் அவர்களுக்குச்சொல்.

"உங்கள் தகனபலிகளை மற்றப் பலிகளோடுங்கூட்டி, இறைச்சியைச் சாப்பிடுங்கள்" - இஸ்ரவேல் ஜனங்களின் பலிகளைக் கர்த்தர் அங்கிகரிக்காமல் வெறுத்து விடுகிறார். ஆகையினால் அந்தப் பலிகளினால் அவர்களுக்குப் பிரயோஜனம் எதுவுமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் பலிகளை மட்டும் செலுத்துவதைக் கர்த்தர் அங்கிகரிக்கவில்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் செலுத்தும் தகனபலிகளும், மற்றப் பலிகளும் விருதாவானது. மனுஷர் புசிப்பதற்கு மட்டுமே உகந்தது.

"நான் உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்த நாளிலே" - எகிப்து தேசத்திலிருந்து கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை விடுவித்து அழைத்து வந்தார். அப்போது அவர்களுக்குத் தகனபலிகளைக் குறித்தும், மற்றப் பலிகளைக் குறித்தும் கட்டளையிட்டார். ஆனால் அவர்களோ அதைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின்படியும் கடினத்தின்படியும் நடந்தார்கள். (எரே 7:22-24). யாத் 13-19 ஆகிய அதிகாரங்களில் தகனபலியைக் குறித்து ஒரு செய்தியும் கூறப்படாமல் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 15:26; யாத் 16:4; யாத் 19:5-8).

எரேமியா - தொகுப்புரை

7 அதிகாரம்

"முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்கள்." - வேதாகமத்தில் இஸ்ரவேல் புத்திரரின் நடக்கைகளை இந்த ஒரே வாக்கியம் விளக்கி கூறிவிடுகிறது. தேவன் தமது பொறுமையை இழந்துபோகும் வரையிலும் அவர்கள் பின்னிட்டுப் போனார்கள். இறுதியில் தங்களுடைய பின்மாற்றத்திற்கான தண்டனையை இஸ்ரவேல் ஜனத்தார் அனுபவித்து எல்லா ஜாதிகளின் மத்தியிலும் சிதறிப்போனார்கள். (லூக்கா 24:20-24).

"தினந்தினம் உங்களண்டைக்கு" - எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் வெளியேறி வந்த நாளிலிருந்து எரேமியா தீர்க்கதரிசியின் காலம் வரையிலும் இஸ்ரவேல் புத்திரர் முன்னிட்டுப்போகாமல் பின்னிட்டுப்போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பின்மாற்றத்திலிருந்து அவர்களைத் திரும்ப அழைத்து வருவதற்காகக் கர்த்தர் தமது தீர்க்கதரிசிகளை அனுப்பினார். ஏற்கெனவே சுமார் 78 தீர்க்கதரிசிகளும், தீர்க்கதரிசினிகளும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் கர்த்தருடைய செய்தியை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களோ தீர்க்கதரிசிகளுக்குச் செவி கொடுக்கவில்லை. (அப் 3:21)

ஜனங்களுடைய பொல்லாப்பான செயல்கள்

1. அவர்கள் தேவனுடைய சொல்லைக் கேட்கவில்லை. (எரே 7:26)
2. தேவனுடைய வார்த்தையைக் கேட்க தங்கள் செவியைச் சாய்க்கவில்லை.
3. தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள்.
4. தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் அதிக பொல்லாப்பு செய்தார்கள்.
5. அவர்கள் தேவனுடைய அழைப்புக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை. (எரே 7:27).
6. அவர்கள் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கவில்லை. (எரே 7:28)
7. புத்தியை ஏற்றுக்கொள்ளவில்லை.

"தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் அதிக பொல்லாப்பு செய்தார்கள்" - ஒவ்வொரு சந்ததியும் அதற்கு முந்திய சந்ததியைவிட மிகவும் மோசமாக இருக்கிறது. இதற்காகக் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுடைய பின்மாற்றம் அதிகரித்துவிடாமல் இருப்பதற்காகக் கர்த்தர் பல தடைகளை அவர்களுக்கு அனுமதிக்கிறார். கி.மு. 606 வருஷத்தில் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப்போக அனுமதித்து விடுகிறார். சுமார் 500 வருஷங்களாக கர்த்தர் அவர்களோடு கிரியை செய்தார். இதன்பின்பு கி.பி. 70 ஆம் வருஷத்தில் யூதர்கள் மறுபடியும் உலகமெங்கும் சிதறிப்போனார்கள். சுமார் 1900 வருஷங்களாக அவர்கள் உலகமெங்கும் சிதறிச் சுற்றி அலைந்து கொண்டிருந்தார்கள.

தீர்க்கதரிசன எண் - 18

"நீ இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குச் சொன்னாலும், அவர்கள் உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்" (எரே 7:27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்.
2. உனக்கு மறுஉத்தரவு கொடுக்க மாட்டார்கள்.

"உனக்குச் செவி கொடுக்க மாட்டார்கள்" - கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியை யூதா தேசத்தாரிடம் அனுப்பியிருக்கிறார். ஆனால் அவர்களோ எரேமியாவிற்குச் செவி கொடுக்கவில்லை. அவனுக்கு மறுஉத்தரவு கொடுக்கவுமில்லை. அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரனைப் புறக்கணித்துவிட்டார்கள். இந்தச் சூழ்நிலையிலும் கர்த்தர் நீடிய பொறுமையுடன் இருந்து தம்முடைய பிள்ளைகளை இரட்சிப்பதற்கு எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்துகிறார்.

7 அதிகாரம்

"சத்தியம் அழிந்து, அது அவர்கள் வாயிலிருந்து அற்றுப்போனது" - இஸ்ரவேல் புத்திரர் சத்தியத்திற்குக் கீழ்ப்படியவில்லை. சத்தியத்தைப் பின்பற்றவில்லை. ஒவ்வொரு தனிமனிதனும் சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். ஒருவன் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தால் அவன் இரட்சிக்கப்படுவான். அழிந்துபோகமாட்டான்.

(7) புலம்பல் - காரணம்

எரே 7:29 நீ உன் தலைமயிரைச் சிரைத்து, எறிந்துவிட்டு, உயர் தலங்களிலே புலம்பிக்கொண்டிரு; கர்த்தர் தமது சினத்துக்கு ஏதுவான சந்ததியை வெறுத்து நெகிழவிட்டார்.

எரே 7:30 யூதா புத்திரர் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் நாமம் தரித்திருக்கிற ஆலயத்தைத் தீட்டுப்படுத்தத் தங்கள் அருவருப்புகளை அதிலே வைத்தார்கள்.

எரே 7:31 தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக, அவர்கள் இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடைகளைக் கட்டினார்கள்; அதை நான் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவுமில்லை.

"நீ உன் தலைமயிரைச் சிரைத்து" - இது துக்கத்திற்கும், புலம்பலுக்கும் அடையாளம். இது அவமானத்தின் அடையாளம். (எஸ்றா 9:3; நெகே. 13:25; எசே 5:1; எசே 16:7). இஸ்ரவேல் புத்திரரின் மத்தியில் தாடியைச் சிரைப்பதும் அவமானத்திற்கு அடையாளமாகும். (எரே 41:5; 2சாமு 10:4-5)

(8) பதினெட்டு அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 7:32 ஆதலால், இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது அது அப்புறம் தோப்பேத் என்றும், இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கென்றும் சொல்லப்படாமல், சங்காரப் பள்ளத்தாக்கென்று சொல்லப்படும்; தோப்பேத்திலே இடங்கிடையாமற் போகுமட்டும் சவங்களை அடக்கம்பண்ணுவார்கள்.

எரே 7:33 இந்த ஜனத்தின் பிணங்கள் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை வெருட்டுவாரும் இல்லாதிருப்பார்கள்.

எரே 7:34 நான் யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் களிப்பின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஓயப்பண்ணுவேன்; தேசம் பாழாகும்.

தீர்க்கதரிசன எண் - 19

"ஆதலால், இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்......." (எரே 7:32-8:4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தோப்பேத்" **(Tophet)** - இது சங்காரப்பள்ளத்தாக்கு **(valley of slaughter)** (எரே 19:6) என்றும் அழைக்கப்படுகிறது. இதன் மறுபெயர் "இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கு" **(valley of the son of Hinnom)**. இந்தப் பள்ளத்தாக்கில் இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் கொல்லப்படுவார்கள். அவர்களுடைய சவங்கள் இங்கு அடக்கம் பண்ணப்படும். (எரே 7:32-34) தோப்பேத்தில் யூதாவின் ஆலோசனை அவமாக்கப்படும். (எரே 19:4-13). இங்கு புதைக்கப் பட்டவர்களின் எலும்புகளை ஜனங்கள் தோண்டி எடுத்து வானத்தின் சர்வ சேனைகளுக்கும் முன்பாகப் பரப்பி வைத்து ஆராதனை செய்வார்கள். (எரே 8:1-4) எரேமியா தோப்பேத்திற்கே ஒருமுறை சென்று கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்குக் கூறுகிறார். (எரே 19:14-15).

8 அதிகாரம்

எரே 8:1 அக்காலத்திலே யூதாவினுடைய ராஜாக்களின் எலும்புகளையும், அவர்களுடைய பிரபுக்களின் எலும்புகளையும், ஆசாரியர்களின் எலும்புகளையும், தீர்க்கதரிசிகளின் எலும்புகளையும், எருசலேமுடைய குடிகளின் எலும்புகளையும், அவர்களுடைய பிரேதக்குழிகளிலிருந்து எடுத்து,

எரே 8:2 அவர்கள் நேசித்ததும், சேவித்ததும், பின்பற்றினதும், நாடினதும், பணிந்து கொண்டதுமாயிருந்த சூரியனுக்கும், சந்திரனுக்கும், வானத்தின் சர்வசேனைக்கும் முன்பாக அவைகளைப் பரப்பிவைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் வாரி அடக்கம் பண்ணப்படாமல் பூமியின்மேல் எருவாகும்.

எரே 8:3 இந்தத் துஷ்ட வம்சத்தில் மீதியாயிருந்து, என்னால் எல்லா இடங்களிலும் துரத்திவிடப்பட்டு மீந்திருக்கிற யாவருக்கும், ஜீவனைப் பார்க்கிலும் மரணமே விருப்ப மாயிருக்குமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"எருசலேமுடைய குடிகளின் எலும்புகளையும், அவர்களுடைய பிரேதக் குழிகளிலிருந்து எடுத்து" - நேபுகாத்நேச்சார் எருசலேமை அழிக்கும்போது இந்தச் சம்பவம் நடைபெறும். உயிரோடு இருக்கிறவர்கள் கொல்லப்பட்டு அவர்களுடைய சவங்கள் தோப்பேத்தில் இடம்கிடையாமல் போகும்மட்டும் அடக்கம்பண்ணப்படும். (எரே 7:32) பாபிலோனியர் யூதாவினுடைய ராஜாக்களையும், பிரபுக்களையும், ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும், எருசலேமின் குடிகளையும் கொன்று போடுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவர்களுடைய பிரேதக்குழிகளைத் தோண்டி, எலும்புகளை எடுப்பார்கள். அவற்றை வானத்தின் சர்வசேனைக்கும் முன்பாகப் பரப்பிவைத்து, தங்களுடைய தெய்வங்களை ஆராதிப்பார்கள். (எரே 8:2).

கிரகங்களின் ஆராதனை

1. அவற்றை நேசித்தார்கள்.
2. அவற்றை சேவித்தார்கள்.
3. அவற்றைப் பின்பற்றினார்கள்.
4. அவற்றை நாடினார்கள்.
5. அவற்றைப் பணிந்துகொண்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து கர்த்தருக்குப் பிரியமானபடி ஜீவித்திருந்தால் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாக இஸ்ரவேலருக்கு இப்படிப்பட்ட பரிதாபமான நிலைமை உண்டாயிற்று. தங்களுடைய அழிவிற்கு அவர்களே காரணமாக இருந்தார்கள். அவர்களுடைய எலும்புகள் வாரி அடக்கம்பண்ணப்படாமல் பூமியின்மேல் எருவாயிற்று. (எரே 8:1-2).

"துஷ்ட வம்சம்" - யூதாவின் புத்திரர் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனபடியினால், அவர்களுடைய வம்சம் முழுவதுமே துஷ்ட வம்சம் என்று இங்கு அழைக்கப்பட்டிருக்கிறது. (எரே 8:3,5).

"ஜீவனைப்பார்க்கிலும் மரணமே விருப்பமாயிருக்கும்" - தேசத்தில் மீதியாக வைக்கப்பட்டவர்களும், அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போனவர்களும் மிகுந்த துன்பங்களை அனுபவிப்பார்கள். ஜீவிக்க வேண்டும் என்னும் விருப்பம் அவர்களுக்கு இராது. மரணமே அவர்களுடைய விருப்பமாயிருக்கும்.

(9) யூதாவின் பன்னிரெண்டு பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 8:4 நீ அவர்களை நோக்கி: விழுந்தவர்கள் எழுந்திருக்கிறதில்லையோ? வழி தப்பிப் போனவர்கள் திரும்புகிறதில்லையோ?

எரே 8:5 ஆனாலும் எருசலேமியராகிய இந்த ஜனம் என்றைக்கும் வழிதப்பிப் போகிறதென்ன? கபடத்தை உறுதியாய்ப் பிடித்திருக்கிறார்கள்; திரும்பமாட்டோம் என்கிறார்கள்.

எரேமியா - தொகுப்புரை

8 அதிகாரம்

எரே 8:6 நான் கவனித்துக்கேட்டேன், அவர்கள் யதார்த்தம் பேசவில்லை; என்ன செய்தேனென்று சொல்லி, தன் பொல்லாப்பினிமித்தம் மனஸ்தாபப் படுகிறவன் ஒருவனுமில்லை; யுத்தத்துக்குள் பாய்கிற குதிரையைப்போல அவரவர் வேகமாய் ஓடிப்போனார்கள்.

எரே 8:7 ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த்தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்.

எரே 8:8 நாங்கள் ஞானிகளென்றும், கர்த்தருடைய வேதம் எங்களிடத்திலிருக்கிறதென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி? மெய்யாகவே, இதோ, வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது.

எரே 8:9 ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போட்டார்கள்; அவர்களுக்கு ஞானமேது?

"விழுந்தவர்கள்எழுந்திருக்கிறதில்லையோ?" - தரையில் யாராவது விழுந்துவிட்டால் அவர்கள் உடனே எழுந்துவிடுவார்கள். பாதை தெரியாமல் வழிதப்பிப்போனவர்கள் எப்படியாவது விசாரித்து தாங்கள் போகவேண்டிய பாதையில் போய்விடுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களினிமித்தமாகச் சீரழிந்து விட்டார்கள். தங்களுடைய பாவங்களை உணர்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால் அவர்களுக்கு இன்னும் நம்பிக்கை உண்டு. கர்த்தர் அவர்களை முற்றிலுமாக அழித்துப் போடாமல் இரட்சிப்பார். (எரே 8:4-9).

"என்றைக்கும் வழிதப்பிப்போகிறதென்ன?" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் திரும்பி வராதபடிக்கு நித்தியமாக விலகிப்போய் விட்டார்கள். அவர்கள் வழிதப்பிப் போனதற்கு இரண்டு காரணங்கள் இங்கு கூறப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. அவர்கள் கபடத்தை உறுதியாய்ப் பிடித்திருக்கிறார்கள். கபடம் என்பது விக்கிரகாராதனையைக் குறிக்கும்.

2. அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பமாட்டோம் என்கிறார்கள். சாத்தான் முழு உலகத்தையும் வஞ்சித்திருக்கிறான். ஜனங்களும் துன்மார்க்கத்தில் ஜீவிக்கிறார்கள். ஆகையினால் கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கு அவர்களுக்கு மனமில்லை. (1யோவான் 5:19; வெளி. 12:9).

யூதாவின் பாவங்கள்

1. யூதா கிரகங்களைத் தெய்வங்களாக நேசித்தது. (எரே 8:2).

2. வானத்தின் சர்வசேனையைச் சேவித்தது.

3. தங்கள் தேவர்களைப் பின்பற்றியது.

4. விக்கிரகங்களை நாடினது.

5. சிருஷ்டிகரைப் பணிந்துகொள்ளாமல் சிருஷ்டிகளைப் பணிந்துகொண்டது.

6. விழுந்துவிட்டு எழுந்திருக்க மறுப்பது. (எரே 8:4).

7. தேவனைவிட்டு வழிதப்பிப்போனது.

8. தேவனிடத்தில் திரும்பி வர மறுப்பது. (எரே 8:4-5).

9. தேவனைவிட்டு என்றைக்கும் வழிதப்பிப்போனது. (எரே 8:5).

10. கபடத்தை உறுதியாய்ப் பிடித்துக் கொண்டது.

11. யதார்த்தம் பேசாமல் இருப்பது. (எரே 8:6).

எரேமியா - தொகுப்புரை

8 அதிகாரம்

12. பொல்லாப்பினிமித்தம் மனஸ்தாபப் படாமல் இருப்பது.

13. பாவத்தின் வழிகளில் வேகமாக ஓடிப்போவது.

14. கர்த்தரின் நியாயத்தை அறியாமல் இருப்பது. (எரே 8:7).

15. கர்த்தருடைய வேதம் தங்களிடத்தில் இருக்கிறபடியினால் தங்களை ஞானிகளென்று கூறுவது. (எரே 8:8).

16. வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குவது.

17. கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போடுவது. (எரே 8:9).

18. ஒவ்வொருவரும் பொருளாசைக் காரராயிருப்பது. (எரே 8:10).

19. ஒவ்வொருவரும் பொய்யராயிருப்பது.

20. சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்வது. (எரே 8:11)

21. தாங்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படாமல் இருப்பது. (எரே 8:12)

22. தங்கள் சுரூபங்களினாலும் அந்நியரின் மாயைகளினாலும் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினது. (எரே 8:19).

"என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள்" - எல்லா சிருஷ்டிகளும் கர்த்தருடைய நியாயத்தை இயற்கையாகவே அறிந்திருக்கிறது. மனுஷன் விதைத்ததை அறுப்பான் என்னும் இயற்கைப் பிரமாணத்தை இஸ்ரவேல் ஜனத்தார் அறியாமலிருக்கிறார்கள். (கலா 6:7). ஒவ்வொரு சிருஷ்டியும் காலங்களை அறிந்திருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரிடத்தில் திரும்பி வர வேண்டிய காலத்தையும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் காலத்தையும் அறியாதிருக்கிறார்கள்.

"நாங்கள் ஞானிகளென்றும், கர்த்தருடைய வேதம் எங்களிடத்திலிருக்கிற தென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி?" - பூமியிலுள்ள தேசங்களில் தங்களை ஞானிகளென்று யூதர்கள் கூறுகிறார்கள். கர்த்தருடைய வேதம் அவர்களிடத்தில் இருப்பதினால் இவ்வாறு கூறுகிறார்கள். வேதம் அவர்கள் கையில் இருக்கிறது. ஆனால் அது அவர்கள் இருதயத்தில் இடம்பெறவில்லை. வேதத்தின் பிரதிகள் எத்தனை இருந்தாலும் வேதவாக்கியங்களை இருதயத்தில் ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படியவில்லை என்றால் ஒரு பிரயோஜனமுமில்லை.

"வேதபாரகர்" (scribes) - யூதர் மத்தியில் வேதபாரகர் என்று ஒரு பிரிவினர் இருந்தார்கள். இவர்கள் மோசேயின் பிரமாணத்தைத் தியானிப்பதற்கும், அதைப் பிரதியெடுப்பதற்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். பழைய ஏற்பாட்டில் வேதபாரகரைப் பற்றி 56 தடவைகளும், புதிய ஏற்பாட்டில் 66 தடவைகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேதபாரகரைப் பற்றிய முதலாவது குறிப்பு தாவீதின் நாட்களில் கூறப்பட்டுள்ளது. (2சாமு 8:17; 2சாமு 20:25).

"ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குத் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தினார். தேவனுடைய வார்த்தையின் மூலமாக அவர்களுக்குத் தெய்வீக பாதுகாப்பு வாக்குப்பண்ணப்பட்டது. ஆனால் அவர்களோ தேவனுடைய வார்த்தையை அங்கிகரிக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்ததினால் அவர்கள் சபிக்கப் பட்டார்கள். ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவன் கூறியிருக்கும் நிபந்தனைகளைக் கைக்கொள்ளாமல் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டார்கள். இதனால் ஞானிகளாக இருக்கின்ற இஸ்ரவேல் புத்திரர் வெட்கமடைந்தார்கள்.

8 அதிகாரம்

(10) ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு - (ஏசா 5:5)

எரே 8:10 ஆகையால் அவர்களுடைய ஸ்திரீகளை அந்நியருக்கும், அவர்களுடைய வயல்களை அவைகளைக் கட்டிக் கொள்பவர்களுக்கும் கொடுப்பேன்; அவர்களிலே சிறியோர்தொடங்கிப் பெரியோர்மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக் காரராயிருக்கிறார்கள்; தீர்க்கதரிசிகள் தொடங்கி ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யராயிருந்து,

எரே 8:11 சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்.

எரே 8:12 தாங்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களா? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆகையால் விழுகிறவர் களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங்காலத்திலே இடறுண்டுபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 8:13 அவர்களை முற்றிலும் அழித்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; திராட்சச்செடியிலே குலைகள் இராது, அத்திமரத்திலே பழங்கள் இராது, இலையும் உதிரும், நான் அவர்களுக்குக் கொடுத்தது அவர்களை விட்டுத் தாண்டிப்போகும் என்று சொல்.

தீர்க்கதரிசன எண் - 20

"ஆகையால் அவர்களுடைய ஸ்திரீகளை அந்நியருக்கும், அவர்களுடைய வயல்களை அவைகளைக் கட்டிக்கொள்பவர்களுக்கும் கொடுப்பேன்" (எரே 8:10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அவர்களுடைய ஸ்திரீகளை அந்நியருக்குக் கொடுப்பேன்.
2. அவர்களுடைய வயல்களை அவைகளைக் கட்டிக் கொள்பவர்களுக்குக் கொடுப்பேன்.

"சமாதானமில்லாதிருந்தும்" - (எரே 6:14)

தீர்க்கதரிசன எண் - 21

"ஆகையால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்........" (எரே 8:12-22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள் (எரே 8:12).
2. விசாரிக்குங்காலத்திலே இடறுண்டு போவார்கள்.
3. அவர்களை முற்றிலும் அழித்துப் போடுவேன் (எரே 8:13).
4. திராட்சச்செடியிலே குலைகள் இராது.
5. நான் அவர்களுக்குக் கொடுத்தது அவர்களைவிட்டுத் தாண்டிப்போகும்
6. அரணான பட்டணங்களுக்குள் பிரவேசித்து, அங்கே சங்காரமாவார்கள். (எரே 8:14).
7. கர்த்தர் அவர்களைச் சங்காரம்பண்ணி, அவர்களுக்குப் பிச்சுக்கலந்த தண்ணீரைக் குடிக்கக்கொடுப்பார்.
8. சமாதானத்துக்கும், ஆரோக்கியத்திற்கும் காத்திருப்பார்கள். ஆனால் பிரயோஜனமில்லை. (எரே 8:15).
9. வடக்கிலுள்ள தாணிலிருந்து அவர்கள்மீது படையெடுப்பு வரும். (எரே 8:16).
10. அவர்களுடைய படையெடுப்பால் தேசமெல்லாம் அதிரும்.

8 அதிகாரம்

11. அவர்கள் வந்து தேசத்தைப் பட்சிப்பார்கள்.

12. அவர்கள் வந்து அதில் உள்ளவைகளையும், பட்டணத்தையும் அதின் குடிகளையும் பட்சிப்பார்கள்.

13. சர்ப்பங்களையும், கட்டுவிரியன் களையும் அவர்களுக்குள் கர்த்தர் அனுப்புவார். (எரே 8:17).

14. அந்த சர்ப்பங்கள் தடைகட்டப்படாதவை. மகுடிக்கு மயங்காதவை.

15. அவைகள் கடிக்கும்.

16. தேவனுடைய ஜனமாகிய குமாரத்தி தூரதேசத்திலிருந்து கூப்பிடும் சத்தம் கேட்கப்படும். (எரே 8:19).

17. அறுப்புக்காலம் சென்றது, கோடைக் காலமும் முடிந்தது. ஆனால் இன்னும் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. (எரே 8:20).

18. யூதாவின்மீது வரும் நியாயத்தீர்ப்பிற்குப் பரிகாரம் எதுவுமில்லை. (எரே 8:22).

"நான் அவர்களை விசாரிக்குங் காலத்திலே இடறுண்டுபோவார்கள்" - எரே 8:20 ஆவது வசனத்தில் இது அறுப்புக்காலம் எனவும், கோடைக்காலம் எனவும் கூறப்பட்டிருக்கிறது. எரேமியா புஸ்தகத்தில் 8 இடங்களில் வருஷத்தின் இந்தக்காலத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (எரே 8:12; எரே 10:15; எரே 11:23; எரே 23:12; எரே46:21; எரே 48:44; எரே 50:27; எரே 51:18). விசாரிக்கும் காலம் என்பது ஏசா 10:3; ஓசி 9:7; மீகா 7:4; லூக்கா 19:44; 1பேதுரு 2:12 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் மனந்திருந்துவதற்குக் கர்த்தர் ஒரு குறிப்பிட்ட காலத்தை நியமித்திருக்கிறார். ஆனால் அவர்களோ அக்காலத்தில் மனந்திருந்தவில்லை. ஆகையினால் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வந்தது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களையெல்லாம் மற்றவர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள். (எரே 8:13).

(11) யூதாவின்மீது பாபிலோனிய படையெடுப்பு முற்குறித்து கூறப்படுகிறது

எரே 8:14 நாம் சும்மாயிருப்பானேன்? கூடிவாருங்கள்; நாம் அரணான பட்டணங்களுக்குள் பிரவேசித்து, அங்கே சங்காரமாவோம்; நாம் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைச் சங்காரம்பண்ணி, நமக்குப் பிச்சுக்கலந்த தண்ணீரைக் குடிக்கக்கொடுக்கிறார்.

எரே 8:15 சமாதானத்துக்குக் காத்திருந்தோம், பிரயோஜனமில்லை; ஆரோக்கிய காலத்துக்குக் காத்திருந்தோம், இதோ, ஆபத்து.

எரே 8:16 தாணிலிருந்து அவர்களுடைய குதிரைகளின் மூச்செறிதல் கேட்கப்படுகிறது; அவர்களுடைய பலத்த அஸ்வங்கள் கனைக்கிற சத்தத்தினால் தேசமெல்லாம் அதிருகிறது; அவர்கள் வந்து தேசத்தையும் அதில் உள்ளவைகளையும், பட்டணத்தையும் அதின் குடிகளையும் பட்சிப்பார்கள்.

எரே 8:17 மெய்யாய், இதோ, தடைகட்டப்படாத சர்ப்பங்களையும், கட்டுவிரியன்களையும் உங்களுக்குள் அனுப்புகிறேன், அவைகள் உங்களைக் கடிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நாம் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால்" - பூமியில் மனுஷருக்குப் பிரச்சனைகளும், வேதனைகளும், சாபங்களும், உபத்திரவங்களும், இக்கட்டுக்களும் வருவதற்கு இதுவே காரணம். (எரே 8:14-15).

8 அதிகாரம்

"தாணிலிருந்து அவர்களுடைய குதிரைகளின் மூச்செறிதல் கேட்கப்படுகிறது" - நேபுகாத்நேச்சாரின் சேனை வடதிசையிலிருந்து வந்து எருசலேமைப் பட்சிக்கப் போவதை இந்த வாக்கியம் விவரிக்கிறது. (எரே 8:16-17).

"தடைகட்டப்படாத சர்ப்பங்களையும், கட்டுவிரியன்களையும்" - நேபுகாத்நேச்சாரின் சேனைகள் சர்ப்பங்களாகவும், கட்டு விரியன்களாகவும் இங்கு கூறப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மகுடிக்கு மயங்காதவர்கள். இவர்களை யாரும் தடைபண்ண முடியாது.

(12) எரேமியாவின் வருத்தம்

எரே 8:18 நான் சஞ்சலத்தில் ஆறுதலடையப்பார்த்தும், என் இருதயம் பலட்சயமாயிருக்கிறது.

எரே 8:19 இதோ, சீயோனில் கர்த்தர் இல்லையோ? அதில் ராஜா இல்லையோ? என்று, என் ஜனமாகிய குமாரத்தி தூரதேசத்திலிருந்து கூப்பிடும் சத்தம் கேட்கப்படுகிறது; ஆனால், அவர்கள் தங்கள் சுரூபங்களினாலும் அந்நியரின் மாயைகளினாலும் எனக்குக் கோபமுண்டாக்கினது என்ன என்கிறார்.

எரே 8:20 அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை.

எரே 8:21 என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களினால் நானும் காயப்பட்டேன்; கரிகறுத்திருக்கிறேன்; திகைப்பு என்னைப் பிடித்தது.

எரே 8:22 கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?

"நாமோ இரட்சிக்கப்படவில்லை" - பாபிலோன் தேசத்திலிருந்து இரட்சிக்கப் படுவதற்குக் கர்த்தர் கொடுத்த வாய்ப்பு முடிந்துவிட்டது. இனிமேல் நியாயத்தீர்ப்பின் காலமே யூதாவின் மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது.

"கரிகறுத்திருக்கிறேன்" - இரட்டிலும், சாம்பலிலும் அமர்ந்து துக்கிப்பதை இந்த வார்த்தை விவரிக்கிறது.

"கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ?" - யூதா தேசம் கடந்த காலத்தில் கர்த்தருடைய இரக்கத்தினால் நிறைந்திருந்தது. ஆனால் இப்போதோ கர்த்தருக்கு விரோதமாக எழும்பி, கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிச் சென்றுவிட்டது. இவர்களுடைய பின்மாற்றத்திலிருந்து இவர்களைக் குணப்படுத்த முடியாது. ஆகையினால் இவர்கள்மீது நியாயத்தீர்ப்பு தடையில்லாமல் வருகிறது.

9 அதிகாரம்

எரே 9:1 ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்.

(13) வருத்தத்திற்கு காரணங்கள் - யூதாவின் பதினைந்து பாவங்கள்

எரே 9:2 ஆ, வனாந்தரத்தில் வழிப்போக்கரின் தாபரம் எனக்கு இருந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் என் ஜனத்தைவிட்டு, அவர்களிடத்தில் இராதபடிக்குப் போய் விடுவேன்; அவர்களெல்லாரும் விபசாரரும் துரோகிகளின் கூட்டமுமாயிருக்கிறார்கள்.

எரே 9:3 அவர்கள் பொய்யைப் பிரயோகிக்கத்தங்கள் நாவாகிய வில்லை வளைக்கிறார்கள்; அவர்கள் இந்தத் தேசத்திலே பலத்துக்கொள்வது சத்தியத்துக்காக அல்ல; பொல்லாப்பிலிருந்து பொல்லாப்புக்கு நடந்தேறுகிறார்கள்; என்னையோ அறியாதிருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:4 நீங்கள் அவனவன் தன் தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள், எந்தச் சகோதரனையும் நம்பாதிருங்கள்; எந்தச் சகோதரனும் மோசம் பண்ணுகிறான், எந்தச் சிநேகிதனும் தூற்றித்திரிகிறான்.

எரே 9:5 அவர்கள் மெய்யைப்பேசாமல் ஒவ்வொருவரும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள்; பொய்யைப்பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள், அக்கிரமஞ் செய்ய உழைக்கிறார்கள்.

எரே 9:6 கபடத்தின் நடுவிலே குடியிருக்கிறாய்; கபடத்தினிமித்தம் அவர்கள் என்னை அறியமாட்டோ மென்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:7 ஆகையால், இதோ, நான் அவர்களை உருக்கி, அவர்களைப் புடமிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; என் ஜனமாகிய குமாரத்தியை வேறெந்தப்பிரகாரமாக நடத்துவேன்?

எரே 9:8 அவர்கள் நாவு கூர்மையாக்கப் பட்ட அம்பு, அது கபடம் பேசுகிறது; அவனவன் தன் தன் அயலானோடே தன் தன் வாயினாலே சமாதானமாய்ப் பேசுகிறான், ஆனாலும் தன் உள்ளத்திலே அவனுக்குப் பதிவிடை வைக்கிறான்.

"வனாந்தரத்தில் வழிப்போக்கரின் தாபரம்" - கிழக்கு தேசத்தில் ஜனங்கள் வனாந்தரத்தின் வழியாகப் பிரயாணம் பண்ணும்போது அவர்கள் தங்கி ஒய்வெடுப்பதற்காக அரசாங்கமே நிழல் தரும் தாபரங்களை அமைத்து தந்திருக்கும். இதைத் தங்களுடைய மார்க்கக் கடமையாக அந்தத் தேசத்தார் செய்து வந்தார்கள். இது தற்காலிகமாக இளைப்பாறும் இடம். தன்னுடைய ஜனங்கள் வாசம்பண்ணும் ஸ்தலங்களைவிட வழிப்போக்கரின் தாபரங்களே மேன்மையானது என்று எரேமியா கூறுகிறார். துன்மார்க்கரின் நடுவில் ஜீவிப்பதற்குப் பதிலாக வனாந்தரத்திலுள்ள வழிப்போக்கரின் தாபரத்தில் ஜீவிப்பது மேன்மையானது என்று எரேமியா நினைக்கிறார். தன்னுடைய ஜனங்களை விட்டுவிட்டு இதுபோன்ற தாபரங்களில் தங்க வேண்டுமென்பது எரேமியாவின் விருப்பம். இந்தத் தாபரங்களிலுள்ள ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கிரியை செய்யமாட்டார்கள். ஆனால் யூதாவிலுள்ள ஜனங்கள் எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாகக் கிரியை செய்கிறார்கள்.

யூதாவின் பாவங்கள்

1. விபசாரர். (எரே 9:2).
2. துரோகிகளின் கூட்டம்

எரேமியா - தொகுப்புரை

9 அதிகாரம்

3. பொய்யைப் பிரயோகிக்கத்தங்கள் நாவாகிய வில்லை வளைக்கிறார்கள் (எரே 9:3).

4. அவர்கள் இந்தத் தேசத்திலே பலத்துக்கொள்வது சத்தியத்துக்காக அல்ல.

5. பொல்லாப்பிலிருந்து பொல்லாப்புக்கு நடந்தேறுகிறார்கள்.

6. கர்த்தரை அறியாதிருக்கிறார்கள்.

7. எந்தச் சகோதரனும் மோசம்பண்ணுகிறான் (எரே 9:4).

8. எந்தச் சிநேகிதனும் தூற்றித்திரிகிறான்.

9. அவர்கள் மெய்யைப் பேசவில்லை. (எரே 9:5).

10. அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள்

11. பொய்யைப்பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள்.

12. அக்கிரமஞ்செய்ய உழைக்கிறார்கள்.

13. கபடத்தினிமித்தம் அவர்கள் கர்த்தரை அறியமாட்டோமென்கிறார்கள் (எரே 9:6).

14. அவர்கள் நாவு கபடம் பேசுகிறது (எரே 9:8).

15. அவனவன் தன் தன் அயலானோடே பதிவிடை வைக்கிறான்.

16. அவரவருக்கு விதித்த கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை அவர்கள் விட்டுவிட்டார்கள். (எரே 9:13).

17. கர்த்தருடைய சொல்லைக் கேளாமல் இருக்கிறார்கள்.

18. கர்த்தருடைய வழிகளில் நடவாமல் இருக்கிறார்கள்.

19. தங்களுடைய இருதயத்தின் கடினத்தின்படி பின்தொடர்ந்தார்கள். (எரே 9:14).

20. பாகால்களைப் பின்தொடர்ந்தார்கள்.

எரேமியா 9 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் அவனவன் தன் தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள், (எரே 9:4).

2. எந்தச் சகோதரனையும் நம்பாதிருங்கள்.

3. நீங்கள் யோசனைபண்ணி, புலம்பற்காரிகளை வரவழையுங்கள்.

4. அதிலே பழகின ஸ்திரீகளைக் கூப்பிடுங்கள். (எரே 9:17).

5. அவர்கள் சீக்கிரமாய் வரட்டும். (எரே 9:18).

6. நம்முடைய இமைகள் தண்ணீராய் ஓடத்தக்கதாகவும் ஒப்பாரி சொல்லக்கடவர்கள்.

7. ஸ்திரீகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். (எரே 9:20).

8. உங்கள் செவி அவருடைய வாயின் வசனத்தை ஏற்றுக்கொள்ளட்டும்.

9. நீங்கள் உங்கள் குமாரத்திகளுக்கு ஒப்பாரியைக் கற்றுக்கொடுங்கள்.

10. அவளவள் தன்தன் தோழிக்குப் புலம்பலைக் கற்றுக்கொடுங்கள்.

11. மனுஷரின் சவங்கள் வயல்வெளியின் மேல் எருவைப்போலவும், அறுக்கிறவனுக்குப் பின்னாலே ஒருவனும் வாரிக்கொள்ளாதிருக்கிற அரியைப் போலவும் கிடக்கும் என்று கர்த்தர் உரைத்தாரென்று சொல்லுங்கள். (எரே 9:22).

12. ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம் (எரே 9:23).

9 அதிகாரம்

13. பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்.

14. ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்.

15. மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன். (எரே 9:24).

"எந்தச் சகோதரனும் மோசம் பண்ணுகிறான்" - யாக்கோபின் மூலமாக ஒவ்வொருவனும் மோசம்பண்ணுகிறவனாக இருக்கிறான். (ஆதி 25:26,33; ஆதி 27:36).

தீர்க்கதரிசன எண் - 22

"ஆகையால், இதோ, நான் அவர்களை உருக்கி, அவர்களைப் புடமிடுவேன்......." (எரே 9:7-12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் அவர்களை உருக்கி, அவர்களைப் புடமிடுவேன் (எரே 9:7).

2. அவர்களுடைய பாவங்கள் நிமித்தம் அவர்களை விசாரிப்பேன். (எரே 9:9)

3. இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டும்.

4. மலைகளுக்காக அழுது துக்கங் கொண்டாடுவேன் (எரே 9:10).

5. வனாந்தரத் தாபரங்களுக்காகப் புலம்புவேன்.

6. ஆகாசத்துப் பறவைகளும் மிருக ஜீவன்களும் எல்லாம் ஓடிச் சிதறிப் போகும்.

7. நான் எருசலேமை மண்மேடுகளும் வலுசர்ப்பங்களின் தாபரமுமாக்குவேன் (எரே 9:11).

8. யூதாவின் பட்டணங்களையும் குடியில்லாதபடி பாழாக்கிப்போடுவேன்.

9. தேசம் அழிந்து அது பாழாக்கப்படும். (எரே 9:12).

10. ஒருவனும் கடந்து போகாதபடி அது பாழாக்கப்படும்.

(14) ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 9:9 இவைகளினிமித்தம் அவர்களை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:10 மலைகளுக்காக அழுது துக்கங் கொண்டாடுவேன்; வனாந்தரத் தாபரங்களுக்காகப் புலம்புவேன்; ஒருவனும் அவைகளைக் கடந்துபோகாத வண்ணமாய் அவைகள் பாழாக்கப்பட்டுக் கிடக்கின்றன; ஆடுமாடுகளின் சத்தம் கேட்கப்படுகிறதுமில்லை; ஆகாசத்துப் பறவைகளும் மிருகஜீவன்களும் எல்லாம் ஓடிச் சிதறிப்போயின.

எரே 9:11 நான் எருசலேமை மண்மேடுகளும் வலுசர்ப்பங்களின் தாபரமுமாக்குவேன்; யூதாவின் பட்டணங்களையும் குடியில்லாதபடி பாழாக்கிப்போடுவேன்.

எரே 9:12 இதை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? தேசம் அழிந்து, ஒருவனும் கடந்து போகாதபடி அது பாழாக்கப்படுகிற முகாந்தரமென்ன வென்று கர்த்தருடைய வாய் தன்னுடனே சொல்லுகிறதைக் கேட்டு அறிவிக்கத் தக்கவன் யார்?

"இவைகளினிமித்தம் அவர்களை விசாரியாதிருப்பேனோ?" - மூன்றாம் முறையாக இந்த வாக்கியம் இங்கு கூறப்பட்டிருக்கிறது. (எரே 9:9; எரே 5:9,29).

9 அதிகாரம்

(15) யூதாவின் ஐந்து பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 9:13 நான் அவரவருக்கு விதித்த என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் விட்டு, என் சொல்லைக் கேளாமலும், அதின்படி நடவாமலும்,

எரே 9:14 தங்களுடைய இருதயத்தின் கடினத்தையும், தங்கள் பிதாக்கள் தங்களுக்குக் கற்றுக்கொடுத்தபடி பாகால்களையும் பின்தொடர்ந்தார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பாகால்கள்" - பாகாலின் பன்மைச்சொல். பாகாலுக்குப் பலவிதமான வல்லமைகள் இருப்பதாகக் கருதி ஜனங்கள் பாகாலைப் பாகால்கள் என்று பன்மையில் அழைக்கிறார்கள். (எரே 9:14; எரே 2:23; நியா 2:11; நியா 3:7; நியா 8:33; நியா 10:6,10; 1சாமு 7:4; 1சாமு 12:10; 1சாமு 18:18; 2நாளா 17:3; 2நாளா 24:7; 2நாளா 28:2; 2நாளா 33:3; 2நாளா 34:4; ஓசி 2:13,17; ஓசி 11:2).

(16) ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 9:15 ஆதலால், இதோ, நான் இந்த ஜனத்துக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப்பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுத்து,

எரே 9:16 அவர்களும், அவர்கள் பிதாக்களும் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைச் சிதறடித்து, பட்டயம் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் அதை அவர்களுக்குப் பின்னாக அனுப்புவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 23

"ஆதலால், இதோ, நான் இந்த ஜனத்துக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப்பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுத்து......." (எரே 9:15-26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் இந்த ஜனத்துக்குப் புசிக்க எட்டியைக் கொடுப்பேன். (எரே 9:15).
2. குடிக்கப்பிச்சுக்கலந்த தண்ணீரைக் கொடுப்பேன்.
3. புறஜாதிகளுக்குள்ளே அவர்களைச் சிதறடிப்பேன். (எரே 9:16).
4. பட்டயம் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் அதை அவர்களுக்குப் பின்னாக அனுப்புவேன்.
5. சீயோனிலிருந்து உண்டாகிற புலம்பலின் சத்தம் கேட்கப்படும். (எரே 9:17-19).
6. சாவு பலகணிகளிலேறி, நம்முடைய அரமனைகளில் பிரவேசிக்கும். (எரே 9:20-21)
7. மனுஷரின் சவங்கள் வயல்வெளியின் மேல் எருவைப்போல கிடக்கும். (எரே 9:22; எரே 8:1-4).
8. அவை ஒருவனும் வாரிக் கொள்ளாதிருக்கிற அரியைப்போல கிடக்கும்.
9. விருத்த சேதனமில்லாதவர் களோடுங்கூட விருத்தசேதனமுள்ள யாவரையும் கர்த்தர் தண்டிப்பார். (எரே 9:25).
10. எகிப்தையும், யூதாவையும், ஏதோமையும், அம்மோன் புத்திரரையும், மோவாபையும், கடைசி எல்லைகளிலுள்ள வனாந்தரக் குடிகளான யாவரையும் கர்த்தர் தண்டிப்பார். (எரே 9:26).

9 அதிகாரம்

"எட்டி" **(wormwood)** - இது ஒரு கசப்பான தாவரம். விஷத்தன்மை உள்ளது. ஆபத்துக்கு அடையாளமாக இந்த வார்த்தை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (எரே 9:15; எரே 23:15; உபா 29:18; நீதி 5:4; புல 3:15,19; ஆமோ 5:7; வெளி 8:11) எட்டியைப் புசிப்பது என்பது மிகுந்த மனவேதனையையும், பாடுகளையும் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வாக்கியமாகும். (எரே 23:15; புல. 3:15,19).

"பிச்சு" **(gall)** - கல்லீரலிலிருந்து சுரக்கும் ஒரு திரவம். கசப்பானது. மிகுந்த பாடுகளுக்கு இது ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. (யோபு 16:13; யோபு 20:14,25; புல 2:11). கசப்பான தாவரத்திலிருந்து தயாரிக்கப்படும் ஒருவகை காசயத்திற்கும், இந்தப் பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது. (உபா 29:18).

"புறஜாதிகளுக்குள்ளே அவர்களைச் சிதறடித்து" - இஸ்ரவேல் தேசம் வடக்கு, தெற்கு என்று இரண்டு ராஜ்யங்களாகப் பிரிந்து போவதற்கு முன்பாகவே அவர்கள் தேசங்கள் மத்தியில் சிதறிப்போவதைக் கர்த்தர் முன்னறிவித்திருக்கிறார். (லேவி 26:23; உபா 4:27; உபா 28:64; உபா 30:3; உபா. 32:26) சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கு, தெற்கு என்று பிரிந்த பின்பு, அவர்கள் சிதறிப் போவதையும் கர்த்தர் முன்னறிவித்திருக்கிறார். (எரே 9:16; எரே 13:24; எரே 18:17; எரே 23:1; எரே 30:11; எரே 49:32,36; எசே 11:16-17; எசே 12:14-15; எசே 20:23,24,41; எசே 22:15; எசே 28:25; எசே 29:13; எசே 34:5-12; எசே 36:19; யோவே 3:2). யூதா மாத்திரமல்லாமல் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாருமே புறஜாதி தேசங்கள் மத்தியில் சிதறிப் போனார்கள்.

"அவர்களை நிர்மூலமாக்குமட்டும்" - யூதா தேசத்தார் அழிந்து, தங்களுடைய தேசத்திலிருந்து வெளியேறும் வரையிலும் கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு அவர்கள்மீது வந்தது.

(17) புலம்பலுக்கு அழைப்பு - ஏழு அம்ச காரணம்

எரே 9:17 நீங்கள் யோசனைபண்ணி, புலம்பற்காரிகளை வரவழைத்து, அதிலே பழகின ஸ்திரீகளைக் கூப்பிடுங்களென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:18 அவர்கள் சீக்கிரமாய் வந்து, நம்முடைய கண்கள் கண்ணீராய்ச் சொரியத்தக்கதாகவும், நம்முடைய இமைகள் தண்ணீராய் ஓடத்தக்கதாகவும், ஒப்பாரி சொல்லக்கடவர்கள்.

எரே 9:19 எத்தனையாய்ப் பாழாக்கப் பட்டோம்! மிகவும் கலங்கியிருக்கிறோம்; நாங்கள் தேசத்தை விட்டுப்போகிறோம், எங்கள் வாசஸ்தலங்களை அவர்கள் கவிழ்த்துப்போட்டார்கள் என்று சீயோனிலிருந்து உண்டாகிற புலம்பலின் சத்தம் கேட்கப்படும்.

எரே 9:20 ஆதலால் ஸ்திரீகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; உங்கள் செவி அவருடைய வாயின் வசனத்தை ஏற்றுக் கொள்ளட்டும்; நீங்கள் உங்கள் குமாரத்திகளுக்கு ஒப்பாரியையும், அவளவள் தன்தன் தோழிக்குப் புலம்பலையும் கற்றுக் கொடுங்கள்.

எரே 9:21 வீதியிலிருக்கிற குழந்தைகளையும், தெருக்களிலி ருக்கிற இளைஞரையும் சங்காரம்பண்ணச் சாவு நம்முடைய பலகணிகளிலேறி, நம்முடைய அரமனைகளில் பிரவேசித்தது.

எரே 9:22 மனுஷரின் சவங்கள் வயல்வெளியின் மேல் எருவைப்போலவும், அறுக்கிறவனுக்குப் பின்னாலே ஒருவனும் வாரிக்கொள்ளாதிருக்கிற அரியைப் போலவும் கிடக்கும் என்று கர்த்தர் உரைத்தாரென்று சொல்.

9 அதிகாரம்

"புலம்பற்காரிகளை வரவழைத்து" - யூதாவின் மீது அழிவு வரப்போகிறது. அக்காலத்தில் மரித்தோரை அடக்கம் பண்ணுவதற்கு முன்பாக புலம்பற்காரிகளைக் கூலிக்கு அமர்த்தி, அவர்களைப் புலம்பல் பாட வைப்பது வழக்கம். இவர்கள் புலம்புவதில் பழகின ஸ்திரீகள்.(எரே 9:17-18). இவர்கள் மிகுந்த நயத்தோடு புலம்பல் பாடும்போது அங்கு கூடியிருக்கும் அனைவரும் அழுதுவிடுவார்கள். புலம்பற் காரிகள் புலம்பி களைப்படைந்துவிட்டால், அவர்களுக்குப் பதிலாக அங்கு வேறொரு புலம்பற்காரி உடனடியாக வந்து புலம்பற்பாட்டு பாடுவாள். (2நாளா 35:25; பிர 12:5; ஆமோ 5:16; மத் 9:23; மாற்கு 5:38). யூதா தேசம் அழிந்து, கொள்ளையிடப்பட்டு, வெளியே துரத்தப் பட்டிருக்கிறது. ஆகையினால் அந்தத் தேசத்தில் புலம்பற்காரிகளை வரழைத்து புலம்பல் பாடுமாறு கர்த்தர் அறிவிக்கிறார். (எரே 9:19) புலம்பற்காரிகள் மட்டும் பாடினால் அவர்களுடைய துக்கம் ஓயாது. ஆகையினால் அவர்கள் எல்லோருக்கும் புலம்பல் பாடுவதைக் கற்றுத்தர வேண்டுமென்று எரேமியா அறிவிக்கிறார். (எரே 9:20-22)

"அரி" - தானியத்தை அறுவடை பண்ணுகிறவன் தன்னிடத்திலுள்ள அரிவாளினால் பயிரை அறுத்து நிலத்தில் குவித்து வைப்பான். அறுக்கிறவனுக்குப் பின்பாக வருகிறவன் அதை ஒரு சிறு கட்டாகக்கட்டுவான். அந்தக் கட்டிற்கு "அரி" **"handful"** என்று பெயர். வயல் வெளிகளில் இதுபோன்ற அரிகள் பரவிக் கிடக்கும். அதைப் பெரிய கட்டுக்களாகக் கட்டி போரடிப்பதற்கு எடுத்துச் செல்வார்கள். யூதா தேசத்தாரின் பிணங்கள் அரிக் கட்டுக்களைப்போல தேசத்தில் சிதறிக் கிடக்கும்.

(18) தேவன் பிரியமாயிருக்கிறார்

எரே 9:23 ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்.

எரே 9:24 மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மனுஷர் மேன்மை பாராட்டும் காரியங்கள்

1. ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டுகிறான்.
2. பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மைபாராட்டுகிறான்.
3. ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்டுகிறான்.

இவர்கள் யாரும் தங்களுடைய ஆசீர்வாதங்களுக்காக மேன்மைபாராட்டக் கூடாது. நித்திய காரியங்களுக்காகவே மனுஷன் மேன்மை பாராட்ட வேண்டும். அழிந்துபோகும் தற்காலிகக் காரியங்களுக்கு யாரும் மேன்மைபாராட்டக்கூடாது.

மனுஷர் மேன்மை பாராட்ட வேண்டிய காரியங்கள்

1. கர்த்தரை அறிந்து உணர்ந்திருக்கிறதற்காக மேன்மை பாராட்ட வேண்டும்.
2. கர்த்தர் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிறதற்காக மேன்மை பாராட்ட வேண்டும்.
3. கர்த்தர் ஞானம், பராக்கிரமம், ஐசுவரியம் ஆகியவற்றில் பிரியப்படாமல், கிருபை, நியாயம், நீதி ஆகியவற்றின்மேல் பிரியமாயிருப்பதற்காக மேன்மை பாராட்ட வேண்டும்.

9 அதிகாரம்

"என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே" - கர்த்தரை அறிந்து இருப்பதே ஜீவியத்தின் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரமாகும். கர்த்தரை அறிந்தால் மட்டும் போதாது. அவர்மீது நமது நம்பிக்கையை வைக்க வேண்டும். கர்த்தரை அறியாதவர்களால் அவரை நம்ப முடியாது. புறஜாதியார் கர்த்தரை அறியாதிருப்பதினால் அவர்கள் மத்தியில் துன்மார்க்கமும், நியாயக்கேடும் மிகுதியாயிருக்கிறது. (ரோமர் 1:28) இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை அறியாமல் போனதினாலேயே தேவகிருபையிலிருந்து விழுந்து, உலகமெங்கும் சிதறிப்போனார்கள். (ஏசா 1:3; லூக்கா 19:42-43). வருங்காலத்தில் மனுஷருடைய ஆசீர்வாதங்கள் கர்த்தரை அறிந்துகொள்வதைச் சார்ந்தே இருக்கும். (எரே 31:34; ஏசா 1:9; ஏசா 54:13). கர்த்தரை அறிவதற்காகவே அவர் நமக்கு தமது எழுதப்பட்ட வார்த்தையைக் கொடுத்திருக்கிறார். (2தீமோ. 3:15-17).

கர்த்தர் செய்கிற காரியங்கள்

1. கிருபை (எரே 9:24;யாத் 34:6)
2. நியாயம்
3. நீதி

(19) இஸ்ரவேலும் புறஜாதியாரும் ஒன்று போல தண்டிக்கப்படுவார்கள்

எரே 9:25 இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது விருத்த சேதனமில்லாதவர்களோடுங் கூட விருத்தசேதனமுள்ள யாவரையும்,

எரே 9:26 எகிப்தையும், யூதாவையும், ஏதோமையும், அம்மோன் புத்திரரையும், மோவாபையும், கடைசி எல்லைகளிலுள்ள வனாந்தரக் குடிகளான யாவரையும் தண்டிப்பேன்; புறஜாதியார் அனைவரும் விருத்த சேதனமில்லாதவர்கள்; ஆனாலும், இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் இருதயத்திலே விருத்தசேதன மில்லாதவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

10 அதிகாரம்

(20) விக்கிரகங்களின் எட்டு அம்சமாயை

எரே 10:1 இஸ்ரவேல் வீட்டாரே, கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள்;

எரே 10:2 புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்; வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள்.

எரே 10:3 ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது; காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள்; அது தச்சன் கையாடுகிறவாச்சியால் பணிப்படும்.

எரே 10:4 வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள்.

எரே 10:5 அவைகள் பனையைப்போல நெட்டையாய் நிற்கிறது, அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்க மாட்டாததினால் சுமக்கப்படவேண்டும்; அவைகளுக்குப் பயப்படவேண்டாம்; அவைகள் தீமை செய்யக்கூடாது, நன்மைசெய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா 10 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. கர்த்தர் சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள். (எரே 10:1).
2. புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்.
3. வானத்தின் அடையாளங்களாலே கலங்காதிருங்கள். (எரே 10:2).
4. இவ்வாறு அவர்களுக்குச் சொல்லுங்கள். (எரே 10:11).
5. தேசத்திலிருந்து உன் பொருள்களைச் சேர்த்துக்கொள். (எரே 10:17).

"இஸ்ரவேல் வீட்டாரே" - யூதா ராஜ்யம் இந்த வசனத்தில் இஸ்ரவேல் வீட்டார் என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் ஏற்கெனவே 93 வருஷங்களுக்கு முன்பாகவே சிறையிருப்புக்குச் சென்று விட்டார்கள். மீதமுள்ள யூதா தேசத்தில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் இருக்கிறார்கள். ஆகையினால் யூதா தேசம் "இஸ்ரவேல் வீட்டார்" என்று அழைக்கப்படுகிறது.

புறஜாதிகளுடைய மார்க்கத்தைப் பற்றிய காரியங்கள்

1. வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்கள். (எரே 10:2).
2. காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள் (எரே 10:3).
3. வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரிக்கிறார்கள். (எரே 10:4).
4. அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள். (எரே 10:4-5).
5. அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்கப்பட வேண்டும் (எரே 10:5).
6. அவைகள் தீமைசெய்யக்கூடாது, நன்மைசெய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லை. ஆகையினால் அவைகளுக்குப் பயப்பட வேண்டாம். (எரே 10:5).
7. அவர்கள் யாவரும் மிருககுணமும் மதியீனமுமுள்ளவர்கள் (எரே 10:8,14).
8. அந்தக் கட்டைமாயையான போதகமாயிருக்கிறது.

10 அதிகாரம்

9. மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் போனார்கள். (எரே 10:14).

10. அவர்கள் மிருககுணமுள்ளவர்களானார்கள் (எரே 10:14).

11. அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும். (எரே 10:14-15).

"வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து" - மரத்தால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் கீழே விழுந்து விடாதவாறு அதை ஆணிகளால் அடித்து நிறுத்துகிறார்கள். வெள்ளியினாலும், பொன்னினாலும் அதை அலங்கரிக்கிறார்கள். ஒரு விக்கிரகத்தைச் செய்வதைப் பற்றி ஏசா 41:7; ஏசா 44:13-17 ஆகிய வசனங்களில் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது.

(21) தேவன் இருக்கிறார் என்பதற்கு பதினெட்டு ஆதாரங்கள்

எரே 10:6 கர்த்தாவே, உமக்கு ஒப்பானவன் இல்லை; நீரே பெரியவர்; உமது நாமமே வல்லமையில் பெரியது.

எரே 10:7 ஜாதிகளின் ராஜாவே, உமக்குப் பயப்படாதிருப்பவன் யார்? தேவரீருக்கே பயப்படவேண்டியது; ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் உமக்கு ஒப்பானவன் இல்லை.

எரே 10:8 அவர்கள் யாவரும் மிருககுணமும்மதியீனமுமுள்ளவர்கள்; அந்தக் கட்டைமாயையான போதகமாயிருக்கிறது.

எரே 10:9 தகடாக்கப்பட்ட வெள்ளி தர்ஷீசிலும், பொன் ஊப்பாசிலுமிருந்து கொண்டுவரப்பட்டு, அவைகள் தொழிலாளியினாலும், தட்டான் கைகளினாலும் செய்யப்படுகிறது; இளநீலமும் இரத்தாம்பரமும் அவைகளின் உடுமானம்; அவைகளெல்லாம் தொழிலாளிகளின் கைவேலையாயிருக்கிறது.

எரே 10:10 கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா; அவருடைய கோபத்தினால் பூமி அதிரும்; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள்.

எரே 10:11 வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின்கீழும் இராதபடிக்கு அழிந்துபோகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.

எரே 10:12 அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார்.

எரே 10:13 அவர் சத்தமிடுகையில் வானத்திலே திரளான தண்ணீர் உண்டாகிறது; அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டக சாலைகளிலிருந்து புறப்படப்பண்ணுகிறார்.

"ஜாதிகளின் ராஜாவே" - இந்த வாக்கியம் கர்த்தரைக் குறிக்கிறது. கர்த்தர் யூதருடைய தேவனாக இருப்பதுபோலவே புறஜாதியாரையும் ஆளுகை செய்யும் தேவனாக இருக்கிறார். (சங் 22:28). கர்த்தரே நித்திய ராஜாவாக இருக்கிறவர். (எரே 10:10).

"அந்தக் கட்டை" - எரே 10:2-5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மரம். இந்த மரத்திலிருந்து மனுஷர் விக்கிரகத்தைச் செய்து அதை அலங்கரித்து ஆராதிக்கிறார்கள். (எரே 10:2-5,8-9; ஏசா 41:7; ஏசா 44:13-17). விக்கிரகத்தைப் பற்றிய போதகம் மாயையானது. கட்டையால் உருவாக்கப்பட்ட விக்கிரகம் ஜீவனற்றது. அது தேசத்தைப் பாதுகாக்காது.

"தர்ஷீஸ்" **(Tarshish)** - (1இராஜா 10:21-23)

எரேமியா - தொகுப்புரை

10 அதிகாரம்

"ஊப்பாஸ்" (Uphaz) - (தானி 10:5). இது ஒப்பீராக (Ophir) இருக்கலாம். (ஆதி 10:29; 1இராஜா 9:28; 1இராஜா 10:11; 1இராஜா 22:48; 1நாளா 1:23; 1நாளா 29:4; 2நாளா 8:18; 2நாளா 9:10; யோபு 22:24; யோபு 28:16; சங் 45:9; ஏசா 13:12).

தீர்க்கதரிசன எண் - 24

"கர்த்தரோ மெய்யான தெய்வம்......" (எரே 10:10-11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அவருடைய கோபத்தினால் பூமி அதிரும். (எரே 10:10).
2. அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள்.
3. விக்கிரகங்கள் அழிந்துபோகும். (எரே 10:11).

எரே 10 ஆவது அதிகாரத்தில் தேவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள்

1. இஸ்ரவேலுக்கு வசனத்தைச் சொல்லுகிறவர். (எரே10:1-5)
2. அவருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. (எரே 10:6-7)
3. அவரே பெரியவர். (எரே 10:6).
4. அவருடைய நாமமே வல்லமையில் பெரியது.
5. ஜாதிகளின் ராஜா. (எரே 10:7)
6. விக்கிரகத்தோடு அவரை ஒப்பிட முடியாது. (எரே 10:8-10).
7. கர்த்தரே மெய்யான தெய்வம். (எரே 10:10).
8. அவர் ஜீவனுள்ள தேவன்.
9. அவர் நித்திய ராஜா (எரே 10:10,24).
10. அவர்தேசத்தின் நியாயாதிபதி (எரே 10:10).
11. வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். (எரே 10:11-12).
12. பூமியை உண்டாக்கியவர். (எரே 10:12).
13. சமுதாய அமைப்பை உண்டுபண்ணியவர்.
14. காலங்களை நிர்ணயம்பண்ணுகிறவர். (எரே 10:13).
15. சேனைகளின் கர்த்தர் (எரே 10:16)

(22) விக்கிரகாராதனைக் காரரின் புத்தியீனம்

எரே 10:14 மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருககுணமுள்ளவர்களானார்கள்; தட்டார் அனைவரும் வார்ப்பித்த சுரூபங்களாலே வெட்கிப் போகிறார்கள்; அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் ஆவி இல்லை.

எரே 10:15 அவைகள் மாயையும், மகா எத்தான கிரியையுமாயிருக்கிறது; அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும்.

எரே 10:16 யாக்கோபின் பங்காயிருக்கிறவர் அவைகளைப்போல் அல்ல, அவர் சர்வத்தையும் உருவாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

சுரூபங்களையும், விக்கிரகங்களையும் பற்றிய செய்திகள்

1. மனுஷனுடைய கைகளின் கிரியை (எரே 10:3)
2. மரம் வாச்சியால் வெட்டப்படுகிறது.

10 அதிகாரம்

3. வெள்ளியினாலும் பொன்னினாலும் அது அலங்கரிக்கப்படுகிறது. (எரே 10:4)

4. அது அசையாதபடிக்கு அது ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்கப்படுகிறது.

5. அவைகள் நடக்கமாட்டாதவை.

6. அவைகள் பேசமாட்டாதவைகள் (எரே 10:5)

7. மனுஷர் அவற்றைச் சுமக்க வேண்டும்.

8. அவைகள் தீமைசெய்யக்கூடாது, நன்மைசெய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லை.

9. அவைகள் வார்ப்பித்த சுரூபங்கள். (எரே 10:14)

10. அவைகளில் ஆவி இல்லை.

11. அவைகள் மாயையானவை. (எரே 10:8,15)

12. அவைகள் மகா எத்தான கிரியைகளாயிருக்கிறது. (எரே 10:15)

(23) பன்னிரெண்டு நியாயத்தீர்ப்புகள் - காரணங்கள் - (ஏசா 1:28)

எரே 10:17 அரணில் குடியிருக்கிறவளே, தேசத்திலிருந்து உன் பொருள்களைச் சேர்த்துக்கொள்.

எரே 10:18 இதோ, நான் இந்த முறை தேசத்தின் குடிகளைக் கவண் கொண்டெறிந்து, அவர்கள் கண்டு உணரும்படி அவர்களுக்கு நெருக்கமுண்டாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 10:19 ஐயோ! நான் நொறுக்கப்பட்டேன்; என் காயம் கொடிதாயிருக்கிறது; ஆனாலும் இது நான் சகிக்கவேண்டிய என் நோய் என்று நான் சொல்லுவேன்.

எரே 10:20 என் கூடாரம் அழிந்து போயிற்று, என் கயிறுகளெல்லாம் அறுப்புண்டுபோயின; என் பிள்ளைகள் என்னை விட்டுப்போய்விட்டார்கள்; அவர்களில் ஒருவனுமில்லை; இனி என் கூடாரத்தை விரித்து, என் திரைகளைத் தூக்கிக்கட்டுவாரில்லை.

எரே 10:21 மேய்ப்பர்கள் மிருக குணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடாமற்போனார்கள்; ஆகையால், அவர்கள் காரியம் வாய்க்காமற்போய், அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது.

எரே 10:22 இதோ, யூதாவின் பட்டணங்களைப் பாழும் வலுசர்ப்பங்களின் தாவுமாக்கிப்போடும் செய்தியின் சத்தமும், வட தேசத்திலிருந்து பெரிய கொந்தளிப்பும் வருகிறது.

எரே 10:23 கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன்நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

எரே 10:24 கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப் போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும்.

எரே 10:25 உம்மை அறியாத ஜாதிகளின்மேலும், உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத வம்சங்களின் மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்; அவர்கள் யாக்கோபைப் பட்சித்து, அவனை விழுங்கி, அவனை நிர்மூலமாக்கி, அவன் வாசஸ்தலத்தைப் பாழாக்கினார்களே.

"உன் பொருள்களைச் சேர்த்துக்கொள்" - சிறையிருப்புக்குப் போகும்போது தங்களுடைய வீட்டிலுள்ள எல்லாப் பொருட்களையும் தூக்கிக் கொண்டுபோக முடியாது. தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை மட்டும் எடுத்துச் செல்ல வேண்டும். அரணில் குடியிருக்கிறவள் என்பது எருசலேமில் குடியிருக்கும் ஜனங்களைக் குறிக்கும். (எரே 10:17-18).

10 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 25

"அரணில் குடியிருக்கிறவளே, தேசத்திலிருந்து உன் பொருள்களைச் சேர்த்துக் கொள்......" (எரே 10:17-25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. தேசத்திலிருந்து உன் பொருள்களைச் சேர்த்துக்கொள். (எரே 10:17).
2. தேசத்தின் குடிகளைக் கவண் கொண்டெறிவேன்.
3. அவர்களுக்கு நெருக்க முண்டாக்குவேன் (எரே 10:18).
4. ஐயோ நான் நொறுக்கப்பட்டேன்; (எரே 10:19).
5. என் காயம் கொடிதாயிருக்கிறது.
6. என் கூடாரம் அழிந்துபோயிற்று (எரே 10:20).
7. என் கயிறுகளெல்லாம் அறுப்புண்டு போயின.
8. என் பிள்ளைகள் என்னை விட்டு சிறையிருப்புக்குப்போய்விட்டார்கள்.
9. இனி என் கூடாரத்தை விரித்து, என் திரைகளைத் தூக்கிக்கட்டுவாரில்லை.
10. மேய்ப்பர்களின் காரியம் வாய்க்காமற் போகும். (எரே 10:21).
11. அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்படும்.
12. செய்தியின் சத்தம் வரும். (எரே 10:22).
13. வடதேசத்திலிருந்து பெரிய கொந்தளிப்பு வரும்.
14. யுத்தம் பண்ண வருகிறவர்கள் யூதாவின் பட்டணங்களைப் பாழும் வலுசர்ப்பங்களின் தாவுமாக்கிப்போடுவார்கள்.

"இந்த முறை" - இதற்கு முன்பு நடைபெற்ற சத்துருக்களின் படையெடுப்புக்கள் இதுபோன்ற பெரிய சங்காரத்தை உண்டுபண்ணவில்லை. தேவனும், யூதா தேசத்தார்மீது பொறுமையோடு இருந்தார். இப்போது தேவனுடைய பொறுமை முடிந்து போயிற்று. யூதா அழிக்கப்படவேண்டிய சமயம் வந்தாயிற்று. மோசேயின் நாட்களிலிருந்து எரேமியாவின் நாள் வரையிலும் கூறப்பட்டிருக்கும் அநேக தீர்க்கதரிசனங்கள் யூதாவின் அழிவினால் நிறைவேறிற்று. (எரே 9:16).

"தேசத்தின் குடிகளைக் கவண் கொண்டெறிந்து" - தேசத்திலிருந்து ஜனங்கள் பலவந்தமாக வெளியேற்றப் படுவார்கள் என்பதை உவமையாகக் கூறும் வாக்கியம். (ஏசா 22:18).

"ஐயோ! நான் நொறுக்கப்பட்டேன்" - யூதா மிகுந்த வேதனையை அனுபவிக்கிறது. எரேமியா தன்னை யூதாவின் இடத்தில் பாவித்து, தான் நொறுக்கப்பட்டதாகக் கூறுகிறார்.

"என் கூடாரம் அழிந்துபோயிற்று" - யூதாவின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு முழுமையாக வந்திருக்கிறது. (எரே 10:17)

செய்தி (bruit) - **שְׁמוּעָה - shem-oo-aw' - 8052**

பெ.பெ.சொ. - செய்தி, பிரஸ்தாபம், உபதேசம், கேள்விப்பட்டது, உச்சரித்தல் **(a report, a rumor, or news)**

வலுசர்ப்பங்கள் **(dragons)** - **תַּנִּין - tan-neen', tan-neem' - 8577**

ஆ.பெ.சொ. - மலைப் பாம்பு, வலுசர்ப்பம், முதலை, ஆந்தை, மச்சம், திமிங்கலம் **serpent** (யாத் 7:9-12), **whale** (ஆதி 1:21; யோபு 7:12; எசே 32:2), **sea monster** (புல 4:3).

எரேமியா - தொகுப்புரை

10 அதிகாரம்

"மட்டாய்த் தண்டியும்." - எரேமியா யூதா தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரப்போவதை முன்னறிவிக்கிறார். கர்த்தருடைய தண்டனை அவர்கள்மீது வரும். அந்தத் தண்டனையை முழுவதுமாகக் கொடுக்காமல் மட்டாய்த் தண்டிக்குமாறு எரேமியா விண்ணப்பம் பண்ணுகிறார். கர்த்தர் தமது கோபத்தினாலே தண்டித்தால் ஜனங்கள் அவமாய்ப்போவார்கள்.

"உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்" - யூதாவின் சத்துருக்கள்மீது கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை ஊற்ற வேண்டுமென்று எரேமியா விண்ணப்பம் பண்ணுகிறார். ஏனெனில் அவர்களே யூதா தேசத்தைப் பட்சித்து நிர்மூலமாக்கினார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளவில்லை. கர்த்தர் யூதரைச் சிட்சிப்பதற்காக அவர்களுடைய சத்துருக்களைப் பயன்படுத்துகிறார். அதே சமயத்தில் கர்த்தர் யூதர்களுடைய சத்துருக்களையும் நியாயம் விசாரிப்பார். (எரே 25:11-29).

11 அதிகாரம்

III. அடையாளங்கள் - தீர்க்கதரிசனங்கள் - (11:1-19:15)

1. எரேமியாவின் நான்காவது ஊழியம் - (1:4-10,17-19; 6:27-30)

எரே 11:1 கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 11:2 நீங்கள் கேட்டு யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்ல வேண்டிய உடன்படிக்கையின் வார்த்தைகளாவன:

எரே 11:3 என் சத்தத்தைக்கேட்டு, நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்; அப்பொழுது நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்;

எரே 11:4 நான் உங்கள் பிதாக்களை இருப்புக்காளவாயாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே அவர்களுக்குக் கற்பித்த இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவனென்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறாரென்று அவர்களுக்குச் சொல்லு.

எரே 11:5 இன்றையதினம் இருக்கிறபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களுக்கு இட்ட ஆணையை நான் திடப்படுத்தும்படி இப்படி ஆகும் என்றார்; அதற்கு நான் பிரதியுத்தரமாக, அப்படியே ஆகக்கடவது கர்த்தாவே என்றேன்.

எரே 11:6 அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: நீ யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் இந்த வார்த்தைகளையெல்லாம் கூறி: இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நீங்கள் கேட்டு, அவைகளின்படியே செய்யுங்கள்.

எரே 11:7 நான் உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின நாள்முதல், இந்நாள்மட்டும் நான் அவர்களுக்குத் திடச்சாட்சியாய் என் சத்தத்தைக் கேளுங்களென்று ஏற்கனவே சாட்சி விளங்கத்தக்கவிதமாய் எச்சரித்து வந்தேன்.

"கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வசனம்" - எரேமியாவின் நான்காவது ஊழியம். (எரே 11:1-7; எரே 1:4-10,17-19; எரே 6:27-30).

எரே 11 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளுங்கள். (எரே11:2).
2. யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுங்கள்.
3. அவர்களுக்குச் சொல்லுங்கள். (எரே 11:4).
4. என் சத்தத்தைக்கேளுங்கள். (எரே 11:3).
5. நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்.
6. இந்த வார்த்தைகளையெல்லாம் கூறுங்கள். (எரே 11:6).
7. இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நீங்கள் கேட்டு, அவைகளின்படியே செய்யுங்கள்.
8. என் சத்தத்தைக் கேளுங்கள். (எரே 11:7).

"எருசலேமின் குடிகள்" - தேசத்தில் மீதியாக விடப்பட்டிருக்கிற இஸ்ரவேல் புத்திரரே இங்கு யூதாவின் மனுஷராகவும், எருசலேமின் குடிகளாகவும் கூறப்பட்டிருக்கிறார்கள். எரேமியா அவர்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும். எரேமியாவின் தீர்க்கதரிசனங்களில் இஸ்ரவேல் என்று கூறப்பட்டிருக்கிறவர்கள் தேசத்தில் மீதியாக இருக்கும் இஸ்ரவேல் ஜனங்களே ஆவார்கள். (எரே 11:2,6,9-10, 12-13,17).

எரேமியா – தொகுப்புரை

11 அதிகாரம்

"நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்" - (லேவி 26:1-12; உபா 7:12-26)

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" - எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் 14 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எரே 11:3; எரே 13:12; எரே 21:4; எரே 23:2; எரே 24:5; எரே 25:15; எரே 30:2; எரே 32:36; எரே 33:4; எரே 34:2,13; எரே 37:7; எரே 42:9; எரே 45:2).

எரேமியா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் சாபங்கள்

1. இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவன். (எரே 11:4).
2. கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன். (எரே 17:5).
3. நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக. (எரே 20:14).
4. என் தகப்பனுக்கு நான் பிறந்ததை நற்செய்தியாக அறிவித்து அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்படக்கடவன். (எரே 20:15).
5. கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன். (எரே 48:10).
6. இரத்தம் சிந்தாதபடிக்குத் தன் பட்டயத்தை அடக்கிக் கொள்கிறவன் சபிக்கப்பட்டவன். (எரே 48:10).

"உடன்படிக்கை" - இந்த வசனத்தில் உடன்படிக்கை என்பது கர்த்தர் சீனாய் மலையில் மோசேக்குக் கொடுத்த உடன்படிக்கையைக் குறிக்கும். (எரே 11:3-5). யோசியா, எரேமியா ஆகியோரின் நாட்களில் கர்த்தர் யூதா ஜனத்தாரோடு இந்த உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார். (2இராஜா 23:1-3).

"நான் உங்கள் பிதாக்களை இருப்புக்காளவாயாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே" - (யாத் 17:14, யாத் 20:1-24:8;)

"இருப்புக்காளவாய்" - எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரரின் அடிமைத்தனத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (உபா 4:20)

"பாலும் தேனும் ஓடுகிற தேசம்" - பஞ்சாகமப் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் 15 தடவைகளும் (யாத் 3:8,17; யாத் 13:5; யாத் 33:3; லேவி 20:24; எண் 13:27; எண் 14:8; எண் 16:13-14; உபா 6:3; உபா 11:9; உபா 26:9,15; உபா 27:3; உபா 31:20) மற்றப் புஸ்தகங்களில் 5 தடவைகளும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எரே 11:5; எரே 32:22; யோசு 5:6; எசே 20:6,15).

"அப்படியே ஆகக்கடவது" - இந்த வார்த்தை "ஆமென்" "Amen" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (உபா 27:15-26).

"அவைகளின்படியே செய்யுங்கள்" - யூதாவின் ஜனங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவருடைய கட்டளையின் பிரகாரம் செயல்பட வேண்டும். கர்த்தர் சீனாய் மலையில் இஸ்ரவேல் புத்திரரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை இங்கு இரண்டுமுறை குறிப்பிடுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கையின் படி அவருடைய ஜனங்கள் செயல்பட வேண்டியது மிகவும் அவசியமான காரியமாகும் (எரே 11:4,7).

2. யூதாவின் எட்டு பாவங்கள் - (ஏசா 1:4)

எரே 11:8 ஆனாலும் அவர்கள் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், அவரவர் தம்தம் பொல்லாத இருதய கடினத்தின்படி நடந்தார்கள்; ஆதலால் நான் அவர்கள் செய்யும்படி கட்டளையிட்டதும், அவர்கள் செய்யாமற்போனதுமான இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குப் பலிக்கப் பண்ணுவேன் என்று சொல் என்றார்.

11 அதிகாரம்

எரே 11:9 பின்னையும் கர்த்தர் என்னை நோக்கி: யூதாவின் மனுஷருக்குள்ளும் எருசலேமின் குடிகளுக்குள்ளும் ஒரு கட்டுப்பாடு காணப்படுகிறது.

எரே 11:10 அவர்கள் என் வார்த்தைகளைக் கேட்க மாட்டோமென்று அந்நிய தேவர்களைச் சேவிக்க அவைகளைப் பின்பற்றி, தங்களுடைய முன்னோர்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பினார்கள்; நான் தங்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையை இஸ்ரவேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் மீறிப்போட்டார்கள்.

தீர்க்கதரிசன எண் - 26

“ஆனாலும் அவர்கள் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், அவரவர் தம்தம் பொல்லாத இருதய கடினத்தின்படி நடந்தார்கள்.......” (எரே 11:8-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குப் பலிக்கப்பண்ணுவேன் (எரே 11:8; லேவி 26; உபா 28).
2. அவர்கள் தப்பித்துக்கொள்ளமாட்டாத தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் (எரே 11:11).
3. என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் அவர்களைக் கேளாதிருப்பேன்.
4. தாங்கள் தூபங்காட்டியிருந்த தேவர்களை நோக்கிக் கூப்பிடுவார்கள். (எரே 11:12).
5. அவைகள் அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் அவர்களை இரட்சிப்பதில்லை.
6. அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம் என்னை நோக்கிக் கூப்பிடுங்காலத்திலே நான் அவர்களைக் கேளாதிருப்பேன். (எரே 11:14).

யூதாவின் பாவங்கள்

1. அவர்கள் கேட்கவில்லை. (எரே 11:8).
2. தங்கள் செவியைச் சாய்க்கவில்லை.
3. அவரவர் தம்தம் பொல்லாத இருதய கடினத்தின்படி நடந்தார்கள்.
4. இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளின் படி அவர்கள் செய்யவில்லை.
5. கர்த்தருக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணினார்கள். (எரே 11:9).
6. தங்களுடைய முன்னோர்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பினார்கள் (எரே 11:10).
7. அந்நிய தேவர்களைச் சேவிக்க அவைகளைப்பின்பற்றினார்கள்.
8. நான் தங்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையை மீறிப்போட்டார்கள். (எரே 11:10).
9. அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டினார்கள். (எரே 11:12).
10. எல்லாப் பட்டணங்களிலும் விக்கிரகங்களை ஸ்தாபித்தார்கள். (எரே 11:13).
11. எருசலேமின் வீதிகளில் பாகாலுக்குத் தூபங்காட்டினார்கள்.
12. துர்ச்சனரோடு மகா தீவினை செய்தார்கள். (எரே 11:15).
13. பொல்லாப்பு நடக்கும்போது களிகூருகிறார்கள்.
14. தேவனுக்குக் கோபமுண்டாக்கு கிறார்கள். (எரே 11:17).

11 அதிகாரம்

15. எரேமியாவிற்கு விரோதமாகச் சதிபண்ணி அவனுடைய பிராணனை வாங்கத் தேடுகிறார்கள். (எரே 11:19-21).

16. தேவனுடைய செய்தியைத் தங்களுக்குக் கூறுவதை அவர்கள் தடை பண்ணுகிறார்கள். (எரே 11:21).

3. யூதாவின்மீது பத்து அம்ச நியாயத்தீர்ப்பு - (ஏசா 1:28)

எரே 11:11 ஆகையினால் இதோ, அவர்கள் தப்பித்துக்கொள்ளமாட்டாத தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்; அப்பொழுது என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் அவர்களைக் கேளாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 11:12 அப்பொழுது யூதா பட்டணங்களின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் போய்த் தாங்கள் தூபங் காட்டியிருந்த தேவர்களை நோக்கிக் கூப்பிட்டும், அவைகள் அவர்களுடைய ஆபத்துக்காலத்தில் அவர்களை இரட்சிப்பதில்லை.

எரே 11:13 யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும் உன் தேவர்களின் இலக்கமும் சரி; எருசலேமுடைய வீதிகளின் இலக்கமும், நீங்கள் பாகாலுக்குத் தூபங்காட்டும்படி அந்த இலச்சையான காரியத்துக்கு ஸ்தாபித்த பீடங்களின் இலக்கமும் சரி.

எரே 11:14 ஆதலால் நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் பண்ண வேண்டாம், அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம்; அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம் என்னை நோக்கிக் கூப்பிடுங்காலத்திலே நான் அவர்களைக் கேளாதிருப்பேன்.

எரே 11:15 துர்ச்சனரோடு மகா தீவினை செய்யும்போது, என் பிரியமானவளுக்கு என் வீட்டில் என்ன இருக்கிறது? பரிசுத்த மாம்சத்தை உன்னை விட்டுத் தாண்டிப்போகப்பண்ணுவார்கள்; உன் பொல்லாப்பு நடக்கும்போது நீ களிகூருகிறாயே.

எரே 11:16 நல்ல கனி உண்டாயிருக்கிற நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரமென்னும் பேரைக் கர்த்தர் உனக்கு இட்டார்; ஆனால் மகா அமளியின் சத்தமாய் அதைச் சுற்றிலும் நெருப்பைக் கொளுத்துகிறார், அதின் கொம்புகள் முறிக்கப்பட்டது.

எரே 11:17 பாகாலுக்குத் தூபங் காட்டுகிறதினாலே எனக்குக் கோபமுண்டாக்க இஸ்ரவேல் குடும்பத்தாரும், யூதா குடும்பத்தாரும் தங்களுக்குக் கேடாகச் செய்த பொல்லாப்பினிமித்தம் உன்மேல் தீங்கை வரப்பண்ணுவேன் என்று உன்னை நாட்டின சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும் உன் தேவர்களின் இலக்கமும் சரி" - யூதா தேசம் முழுவதும் விக்கிரகங்களும், விக்கிராராதனையும் நிறைந்திருக்கிறது. எருசலேம் வீதிகள் அனைத்திலும் ஜனங்கள் பாகாலுக்குத் தூபங்காட்டுகிறார்கள்.

"பிரியமானவள்" - கர்த்தர் யூதாவை இங்கு மறுபடியுமாகத் தமக்குப் பிரியமானவள் என்று அழைக்கிறார். ஆனாலும் அவள் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கும்படி தன்னுடைய வேசித்தனங்களைப் பெருகப்பண்ணினாள். (எசே 16:25) ஆகையினால் யூதா பரிசுத்த மாம்சத்தைப் புசிப்பதற்குத் தகுதியற்றவளாக இருக்கிறாள்.

"உன் பொல்லாப்பு நடக்கும்போது நீ களிகூருகிறாயே" - யூதா ஜனங்கள் விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்து அதில் களிகூருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஆபத்து வரும்போது அவர்களுடைய விக்கிரகங்களால் அவர்களை இரட்சிக்க முடியாது.

11 அதிகாரம்

"நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரம்" - ஒலிவமரம் இஸ்ரவேலுக்கு அடையாளம். (ரோமர் 11:17) பச்சையான ஒலிவமரம் என்பது யூதாவிற்கு அடையாளம். இது கொம்புகள் முறிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்படுகிறது. (எரே 11:16-17).

4. எரேமியாவிற்கு எதிராக முதலாவது சதி - அவனுடைய சகோதரர்கள் மூலமாக - (18:18; 20:1; 26:8; 37:11)

எரே 11:18 அதைக் கர்த்தர் எனக்கு அறிவித்ததினாலே அறிந்து கொண்டேன்; அவர்களுடைய செய்கைகளை அப்பொழுது எனக்குத் தெரியக்காட்டினீர்.

எரே 11:19 மரத்தை அதின் கனிகளோடுங் கூட அழித்துப் போடுவோமென்றும், அவன் ஜீவனுள்ளோருடைய தேசத்திலிராமலும், அவன் பேர் இனி நினைக்கப் படாமலும் போக அவனைச் சங்கரிப்போமென்றும், எனக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள் என்பதை அறியாதிருந்து, நான் அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப் போல இருந்தேன்.

எரே 11:20 சேனைகளின் கர்த்தாவே, உள்ளிந்திரியங் களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதியே, நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைப் பார்ப்பேனாக; என் வழக்கை உமக்கு வெளிப்படுத்தி விட்டேன் என்றேன்.

"அதைக் கர்த்தர் எனக்கு அறிவித்ததினாலே அறிந்துகொண்டேன்" - யூதாவின் பாவங்களைக் கர்த்தர் எரேமியாவிற்கு அறிவிக்கிறார். யூதாவின் ஜனங்கள் கர்த்தருக்கும், அவருடைய தீர்க்கதரிசிக்கும் விரோதமாகச் சதிபண்ணுகிறார்கள். (எரே 11:18-20).

"சாதுவான ஆட்டுக்குட்டியைப்போல இருந்தேன்" - யூதாவின் பாவங்கள் எரேமியாவிற்கு அறிவிக்கப்படுகிறது. எரேமியா அதனால் பெருமைப்படவில்லை. கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத்தாழ்த்தி தன்னுடைய ஜனங்களுக்காகக் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். ஒரு சாதுவான ஆட்டுக்குட்டி வீட்டில் வளரும்போது அது எல்லோரையும் நம்பி அனைவரிடமும் அன்பாகப் பழகும். தன்னைக் கொன்றுபோடுவதற்கு அவர்கள் நாளை நியமிப்பார்கள் என்பதைத் தெரியாதிருந்து அது அவர்களோடு நேசமாகப் பழகும். எரேமியா இதைப்போல ஒரு சாதுவான ஆட்டுக்குட்டியாக யூதா தேசத்தார் மத்தியிலே இருக்கிறார். ஜனங்கள் எரேமியாவை ஆனதோத்திற்கு அழைத்து வந்திருக்கிறார்கள். ஆனதோத்தின் மனுஷர் அவனுடைய பிராணனை வாங்க வகைதேடுகிறார்கள் என்பதைக் கர்த்தர் எரேமியாவிற்கு வெளிப்படுத்துகிறார்.

அன்றாட ஜீவியத்தில் தேவனுடைய கிரியைகள்

1. நீதியாய் நியாயம் செய்கிறார்.
2. மனுஷருடைய உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிறார். (எரே 11:20; எரே 17:10; எரே 20:12; சங் 7:9; சங் 26:2).

"என் வழக்கை உமக்கு வெளிப்படுத்தி விட்டேன்" - இதுபோன்ற ஜெபம் மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் ஏற்றுக்கப்படுகிறது. நாம் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப் படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக என்று ஜெபிக்க வேண்டும். அப்போது கர்த்தர் தம்முடைய சேனைகளோடு பூமிக்கு வந்து தமது சித்தத்தை நிறைவேற்றுவார். கர்த்தருடைய சித்தம் பூமியில் நிறைவேறும்போது பூமியிலுள்ள ஜனங்களுக்கு ஜீவசேதாரம் உண்டாக வாய்ப்புள்ளது. (ஏசா 63:1-6; யோவே 2-3; சக 14; மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி19:11-21).

11 அதிகாரம்

5. சதிகாரர்கள்மீது நியாயத்தீர்ப்பு

எரே 11:21 ஆதலால் நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம் என்று சொல்லி, உன் பிராணனை வாங்கத் தேடுகிற ஆனதோத்தின் மனுஷரைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறார்:

எரே 11:22 இதோ, இதினிமித்தம் உங்களை விசாரிப்பேன்; இளவயதுள்ளவர்கள் பட்டயத்தாலே சாவார்கள்; அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளும் பஞ்சத்தாலே சாவார்கள்.

எரே 11:23 அவர்களில் மீதியாய் இருப்பவர்களில்லை; நான் ஆனதோத்தின் மனுஷரை விசாரிக்கும் வருஷத்திலே அவர்கள்மேல் ஆபத்தை வரப் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 27

"ஆதலால் நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம்.........." (எரே 11:21-23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. உங்களை விசாரிப்பேன் (எரே 11:21-22).
2. இளவயதுள்ளவர்கள் பட்டயத்தாலே சாவார்கள் (எரே 11:22).
3. அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளும் பஞ்சத்தாலே சாவார்கள்.
4. அவர்களில் மீதியாய் இருப்பவர்களில்லை (எரே 11:23).
5. நான் விசாரிக்கும் வருஷத்திலே அவர்கள் மேல் ஆபத்தை வரப்பண்ணுவேன்.

12 அதிகாரம்

6. எரேமியாவின் ஜெபம் - (18:19-23)

எரே 12:1 கர்த்தாவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன்; ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?

எரே 12:2 நீர் அவர்களை நாட்டினீர், வேர் பற்றித் தேறிப்போனார்கள், கனியும் கொடுக்கிறார்கள்; நீர் அவர்கள் வாய்க்குச் சமீபமும், அவர்கள் உள்ளிந்திரியங்களுக்கோ தூரமுமாயிருக்கிறீர்.

எரே 12:3 கர்த்தாவே, நீர் என்னை அறிந்திருக்கிறீர், என்னைக் காண்கிறீர்; என் இருதயம் உமக்கு முன்பாக எப்படிப்பட்டதென்று சோதித்து அறிகிறீர்; அடிக்கப்படும் ஆடுகளைப்போல அவர்களைப் பிடுங்கிப்போட்டு, கொலை நாளுக்கு அவர்களை நியமியும்.

எரே 12:4 எந்தமட்டும் தேசம் புலம்பி, எல்லா வெளியின் புல்லும் வாடி, அதின் குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் மிருகங்களும் பறவைகளும் அழியவேண்டும்! எங்கள் முடிவை அவன் காண்பதில்லையென்கிறார்கள்.

"தேவரீர் நீதியுள்ளவராமே" - கர்த்தர் நீதியுள்ளவர். அவருடைய வழிகள் நீதியும், சத்தியமுமானவை. எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய நீதியை விளக்கிக் கூறுகிறார். இது தொடர்பாக எரேமியாவின் உள்ளத்தில் ஒருசில கேள்விகள் எழும்புகிறது. அவற்றை இங்கு எரேமியா ஒவ்வொன்றாகக் கூறுகிறார்.

1. ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? (எரே 12:1) பூமியில் துன்மார்க்கர் செழித்திருப்பது போன்று தோன்றுகிறது. ஆசாபும், தன்னுடைய நாளில் இதுபோன்ற நிலைமையைப் பார்த்து ஆச்சரிய மடைந்தான். (சங் 73:2-17). சாத்தான் இந்த உலகத்தின் அதிபதியாக இருக்கிறான். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் அவன் கிரியை செய்கிறான். (2கொரி 4:4; எபே 2:1-3; வெளி 12:9). அவன் துன்மார்க்கருக்கு உதவி செய்து, அவர்களைச் செழிக்க வைக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகளோ எல்லா சூழ்நிலை களிலும் கர்த்தரையே சார்ந்திருக்க வேண்டும். மெய்யான உதவி கர்த்தரிடத்திலிருந்தே வரும். ஆகாதவர்களின் வழிவாய்ப்பதற்காகக் கர்த்தருடைய பிள்ளைகள் கலங்கிவிடக்கூடாது. நாம் கர்த்தரைச் சார்ந்திருக்கும்போது அவர் நம்மைக் கைவிடமாட்டார். நம்முடைய வழிகளை வாய்க்கச் செய்வார். துன்மார்க்கரைவிட நமக்கு அதிகமான ஆசீர்வாதங்களைத் தருவார். கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள் மெய்யானவை. அவை நிலைத்து நிற்கும்.

2. துரோகஞ்செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?. துரோகம் செய்கிறவர்கள் தங்களுடைய துரோகத்தில் களிகூருகிறார்கள். ஏமாற்றுவதினால் வரும் லாபத்தில் பிரியமடைகிறார்கள்.

ஆனதோத்தின்மனுஷர் எரேமியாவிற்கு விரோதமாகத் துரோகம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களை நியாயம் விசாரிப்பார் என்று எரேமியா நம்புகிறார். ஆனாலும் அந்த நியாயத்தீர்ப்பு காலதாமதமில்லாமல் அவர்கள் மீது சடிதியாக வர வேண்டுமென்று எரேமியா விரும்புகிறார். (எரே 12:1). கர்த்தர் அவர்களை நட்டியதுபோல அவர்கள் ஜீவிக்கிறார்கள். கர்த்தரால் அவர்கள் சபிக்கப்படாதவர்கள் போல வேர்பற்றி தேறிப்போகிறார்கள். (எரே 12:1-2). ஆனால் எரேமியாவோ வேர்பிடுங்கப் பட்டு, துரத்திவிடப்பட்டவன் போல் இருக்கிறார். (எரே 12:1-3). ஆனாலும் கர்த்தர் சகலத்தையும் ஆளுகை செய்கிறார். (எரே 12:2) எரேமியாவிற்கு விரோதமாகத் துரோகம் செய்கிறவர்களை அவர் ஏற்ற வேளையில் விசாரிப்பார். (எரே 12:3-13).

12 அதிகாரம்

3. எந்தமட்டும் தேசம் புலம்ப வேண்டும். (எரே 12:4) தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறும் வரையிலும் தேசத்தில் புலம்பல் இருக்கும். எரேமியா இவ்வாறு கேள்வி கேட்பதற்காகக் கர்த்தர் அவரைக் கடிந்துகொள்கிறார். அவருக்குக் கர்த்தர் தம்முடைய சித்தத்தை விளக்கிக் கூறுகிறார். (எரே 12:5-13).

7. தேவனுடைய பதிலுரை - எரேமியாவிற்கு எச்சரிப்பு - நியாயத்தீர்ப்பின் ஏழு அம்சங்கள்

எரே 12:5 நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரை களோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்?

எரே 12:6 உன் சகோதரரும், உன் தகப்பன் வம்சத்தாரும் உனக்கு துரோகம் பண்ணி, அவர்களும் உன்னைப் பின் தொடர்ந்து மிகவும் ஆரவாரம் பண்ணினார்கள்; அவர்கள் உன்னோடே இனிய வார்த்தைகளைப் பேசினாலும் அவர்களை நம்பவேண்டாம்.

எரே 12:7 நான் என் வீட்டை விட்டுவிட்டேன், என் சுதந்தரத்தை நெகிழவிட்டேன்; என் ஆத்துமா நேசித்தவனை அவனுடைய சத்துருவின் கையிலே ஒப்புக்கொடுத்தேன்.

எரே 12:8 என் சுதந்தரம் காட்டிலுள்ள சிங்கத்தைப்போல் எனக்காயிற்று; அது எனக்கு விரோதமாய் கெர்ச்சிக்கிறது; ஆதலால் அதை வெறுக்கிறேன்.

எரே 12:9 என் சுதந்தரம் பலவர்ணமான பட்சியைப்போல எனக்காயிற்று; ஆகையால், பட்சிகள் அதைச் சுற்றிலும் வருவதாக; வெளியில் சகல ஜீவன்களே அதைப் பட்சிக்கும்படி கூடிவாருங்கள்.

எரே 12:10 அநேக மேய்ப்பர்கள் என் திராட்சைத்தோட்டத்தை அழித்து, என் பங்கைக் காலால் மிதித்து, என் பிரியமான பங்கைப் பாழான வனாந்தரமாக்கினார்கள்.

எரே 12:11 அதைப் பாழாக்கிவிட்டார்கள்; பாழாய்க் கிடக்கிற அது என்னை நோக்கி புலம்புகிறது; தேசமெல்லாம் பாழாயிற்று; ஒருவனும் அதை மனதிலே வைக்கிறதில்லை.

எரே 12:12 கொள்ளைக்காரர் வனாந்தரத்திலுள்ள எல்லா உயர்நிலங்களின் மேலும் வருகிறார்கள்; கர்த்தருடைய பட்டயம் தேசத்தின் ஒருமுனை தொடங்கித் தேசத்தின் மறுமுனைமட்டும் பட்சித்துக் கொண்டிருக்கும்; மாம்சமாகிய ஒன்றுக்கும் சமாதானமில்லை.

எரே 12:13 கோதுமையை விதைத்தார்கள், முள்ளுகளை அறுப்பார்கள்; பிரயாசப் படுவார்கள், பிரயோஜனமடையார்கள்; கர்த்தருடைய உக்கிரகோபத்தினால் உங்களுக்கு வரும் பலனைக்குறித்து வெட்கப்படுங்கள்.

தீர்க்கதரிசன எண் - 28

"நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்?............" (எரே 12:5-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. எருசலேமின் மனுஷர் மூலமாக எரேமியாவிற்குப் பாடுகளும், சோதனைகளும் வரும். (எரே 12:5).

எரேமியா – தொகுப்புரை

12 அதிகாரம்

2. நான் என் வீட்டை விட்டுவிட்டேன் (எரே 12:7).

3. என் சுதந்தரத்தை நெகிழவிட்டேன்.

4. யூதாவை அவனுடைய சத்துருவின் கையிலே ஒப்புக்கொடுத்தேன்.

5. என் சுதந்தரம் காட்டிலுள்ள சிங்கத்தைப் போல் எனக்காயிற்று; அது எனக்கு விரோதமாய் கெர்ச்சிக்கிறது (எரே 12:8).

6. என் சுதந்தரம் பலவர்ணமான பட்சியைப் போல எனக்காயிற்று (எரே 12:9).

7. பட்சிகள் அதைச் சுற்றிலும் வரும். வெளியில் சகல ஜீவன்கள் அதைப் பட்சிக்கும்படி கூடிவருவார்கள்.

8. தேசம் பாழான வனாந்தரமாகும். (எரே 12:10-11).

9. கொள்ளைக்காரர் வனாந்தரத்திலுள்ள எல்லா உயர்நிலங்களின்மேலும் வருகிறார்கள் (எரே 12:12).

10. கர்த்தருடைய பட்டயம் தேசத்தின் ஒருமுனை தொடங்கித் தேசத்தின் மறுமுனைமட்டும் பட்சித்துக் கொண்டிருக்கும்.

11. மாம்சமாகிய ஒன்றுக்கும் சமாதானமில்லை.

12. கோதுமையை விதைத்தார்கள், முள்ளுகளை அறுப்பார்கள் (எரே 12:13).

13. பிரயாசப்படுவார்கள், பிரயோஜனமடையார்கள்.

14. கர்த்தருடைய உக்கிரகோபத்தினால் தங்களுக்கு வரும் பலனைக்குறித்து வெட்கப்படுவார்கள்.

15. இஸ்ரவேலுக்குக் காணியாட்சியாகக் கொடுத்த என் சுதந்தரத்தைத் துஷ்டரான அயலார் தொடுவார்கள். (எரே 12:14).

16. யூதா வம்சத்தாரையும் அவர்கள் நடுவில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன்.

17. அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு, நான் திரும்பவும் அவர்கள் மேல் இரங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப் பண்ணுவேன். (எரே 12:15).

18. என் நாமத்தின்மேல் ஆணையிடும்படி என் ஜனத்தின் வழிகளை நன்றாய்க் கற்றுக் கொண்டால், அவர்கள் என் ஜனத்தின் நடுவிலே ஊன்றக்கட்டப் படுவார்கள். (எரே 12:16).

19. கேளார்களேயாகில், நான் அப்படிப்பட்ட ஜாதியை வேரோடே பிடுங்கிப்போட்டு அழித்துவிடுவேன் (எரே 12:17).

எரேமியாவின்மீது கூறப்படும் கடிந்துரை

1. நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரை களோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்?. தன்னுடைய சொந்த தேசத்தின் மத்தியில் எரேமியாவால் பாடுகளை அனுபவிக்க முடியவில்லை என்றால் புறஜாதி தேசத்தில் எரேமியாவால் பாடுகளை அனுபவிப்பது சிரமம்.

2. சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்? சமாதானம் உள்ள காலத்திலேயே எரேமியாவிற்கு சமாதானம் இல்லை. யுத்த காலத்தில் எரேமியாவிற்கு சமாதானம் இருப்பது சிரமம்.

“உன் சகோதரரும், உன் தகப்பன் வம்சத்தாரும் உனக்கு துரோகம் பண்ணி” - தீர்க்கதரிசியின் சகோதரரும், அவருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணுகிறார்கள். திரளான ஜனங்களைத் தீர்க்கதரிசிக்கு விரோதமாக எழுப்பி விடுகிறார்கள். தீர்க்கதரிசி தன்னுடைய சகோதரரை நம்ப வேண்டாமென்று கர்த்தரால் எச்சரிக்கப்படுகிறார்.

12 அதிகாரம்

கர்த்தர் பேசுகிறார்

எரே 12:5-17 ஆகிய வசனங்களைக் கர்த்தரே பேசுகிறார். இந்த வாக்கியங்களை எரேமியா பேசவில்லை. கர்த்தர் இந்த வசனங்களில் கூறும் காரியங்கள்.

1. என் வீடு (எரே 12:7)
2. என் சுதந்தரம் (எரே 12:7-9)
3. என் ஆத்துமா நேசித்தவன். (எரே 12:7)
4. என் திராட்சைத்தோட்டம் (எரே 12:10)
5. என் பங்கு
6. என் பிரியமான பங்கு
7. துஷ்டரான அயலார் (எரே 12:14)
8. என் ஜனமாகிய இஸ்ரவேல் (எரே 12:14,16)
9. என் நாமம் (எரே 12:16)

பலவர்ணம் (speckled) - צָבוּעַ - tsaw-boo'-ah - 6641

ஆண்பால் பெயர்ச்சொல் - பலவர்ணம் (dyed in stripes; speckled; divers colors)

"மேய்ப்பர்கள்" - இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் மேய்ப்பர்கள் ஜனங்களைத் துன்மார்க்கமாக ஆளுகை செய்கிறார்கள். (எரே 12:10; எரே 2:8; எரே 3:15; எரே 10:21; எரே 17:16; எரே 22:22; எரே 23:1-2). புதிய ஏற்பாட்டிலும் இந்த வார்த்தை ஒருமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எபே 4:11).

"கொள்ளைக்காரர்" - இந்த வார்த்தை பாபிலோனியரைக் குறிப்பிடுகிறது. (எரே 12:12; எரே 6:26; எரே 15:8; எரே 48:8,18,32; எரே 51:48,53,56) கொள்ளைக்காரர்களுடைய பட்டயம் இந்த வசனத்தில் கர்த்தருடைய பட்டயம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் யூதாவைத் தண்டிப்பதற்குக் கர்த்தரே பாபிலோன் தேசத்தாரை அனுப்பியிருக்கிறார்.

8. யூதாவின் விரோதிகள்மீது நியாயத் தீர்ப்பு

எரே 12:14 இதோ, நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்குக் காணியாட்சியாகக் கொடுத்த என் சுதந்தரத்தைத் தொடுகிற துஷ்டரான அயலார் அனைவரையும் தங்கள் தேசத்தில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன் என்று, கர்த்தர் அவர்களைக்குறித்துச் சொல்லுகிறார்; யூதா வம்சத்தாரையும் அவர்கள் நடுவில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன்.

எரே 12:15 அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு, நான் திரும்பவும் அவர்கள் மேல் இரங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப்பண்ணுவேன்.

எரே 12:16 அப்புறம் அவர்கள் என் ஜனத்துக்குப் பாகாலின்மேல் ஆணையிடக்கற்றுக் கொடுத்தது போல, கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு என்று சொல்லி, என் நாமத்தின்மேல் ஆணையிடும்படி என் ஜனத்தின் வழிகளை நன்றாய்க் கற்றுக்கொண்டால், அவர்கள் என் ஜனத்தின் நடுவிலே ஊன்றக்கட்டப்படுவார்கள்.

எரே 12:17 கேளார்களேயாகில், நான் அப்படிப்பட்ட ஜாதியை வேரோடே பிடுங்கிப்போட்டு அழித்துவிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"துஷ்டரான அயலார்" - இவர்கள் யூதா தேசத்தைச் சுற்றிலுமுள்ள ஜாதியார் ஆவர். இவர்களும், யூதா தேசத்தாரோடு பாபிலோனின் சிறையிருப்புக்குப்போனார்கள். யூதா வம்சத்தார் அவர்கள் நடுவில் இராதபடிக்குப் பிடுங்கிப் போடப்படுகிறார்கள்.

"அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு" - கர்த்தர் பலமுறை மனுஷரைப் பிடுங்கிப் போட்டிருக்கிறார். ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தர் அவர்களை நிச்சயமாகவே பிடுங்கிப்போட்டு விடுவார். (உபா 28:63)

எரேமியா - தொகுப்புரை

12 அதிகாரம்

"அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப்பண்ணுவேன்" - சிறையிருப்பிலிருந்து யூதர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பி வருவதற்காக முதன் முறையாகக் கூட்டிச் சேர்க்கப்படுவதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. இரண்டாம் முறையாக அவர்கள் கூட்டிச்சேர்க்கப்படுவது கடைசி நாட்களில் நடைபெறும்.

"என் ஜனம்" - இந்த வாக்கியம் இஸ்ரவேல் ஜனத்தையும், எரே 12:14 ஆவது வசனத்தின் பிரகாரம் யூதா ஜனத்தாரையும் குறிக்கும். (எரே 12:15-16).

"கேளார்களேயாகில்" - இது நிபந்தனையுள்ள தீர்க்கதரிசனம். யூதா ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவில்லை. ஆகையினால் அவர்கள் வேரோடே பிடுங்கப்பட்டு, அழிக்கப்படுகிறார்கள். (எரே 46:1-51:64).

எரேமியா – தொகுப்புரை

13 அதிகாரம்

9. சணல் கச்சையின் அடையாளம்

(1) சணல் கச்சை வாங்கப்படுகிறது

எரே 13:1 கர்த்தர் என்னை நோக்கி: நீ போய் உனக்கு ஒரு சணல்கச்சையை வாங்கி, அதை உன் அரையிலே கட்டிக் கொள்; அதைத் தண்ணீரிலே படவொட்டாதே என்றார்.

எரே 13:2 நான் கர்த்தருடைய வார்த்தையின்படியே ஒரு கச்சையை வாங்கி, அதை என் அரையிலே கட்டிக்கொண்டேன்.

தீர்க்கதரிசன எண் - 29

"கர்த்தர் என்னை நோக்கி............" (எரே 13:1-27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதாவுடைய பெருமையும், எருசலேமுடைய மிகுந்த பெருமையும் கெட்டுப்போகும். (எரே 13:1-11).
2. இந்தத் தேசத்தின் குடிகளெல்லாரையும் நான் வெறியினால் நிரப்புவேன். (எரே 13:13-14).
3. அவர்களை ஒருவர்மேல் ஒருவர் மோதி விழும்படிப்பண்ணுவேன் (எரே 13:14).
4. நான் அவர்களை அழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை, தப்பவிடுவது மில்லை, இரங்குவதுமில்லை.
5. நீங்கள் இதைக் கேளாமற் போனீர்களானால், என் ஆத்துமா மறைவிடங்களில் உங்கள் பெருமையினிமித்தம் துக்கிக்கும். (எரே 13:15-17).
6. உங்கள் சிரசின் சிங்காரமாகிய உங்கள் மகிமையின் கிரீடம் விழும். (எரே 13:18).
7. தெற்கிலுள்ள பட்டணங்கள் அடைக்கப் படும். அவைகளைத் திறப்பார் இல்லை (எரே 13:19).
8. யூதா அனைத்தும் குடிவிலக்கப்பட்டுப்போம்.
9. சத்துருக்கள் வடக்கேயிருந்து வவார்கள். (எரே 13:20).
10. கர்ப்பவதிக்குப் பிரசவவேதனை உண்டாகும்போது உண்டாகும் வேதனைகளைப்போல் வேதனைகள் உன்னைப் பிடிக்கும். (எரே 13:21).
11. வனாந்தரக் காற்றால் பறக்கடிக்கப்படும் துரும்பைப்போல அவர்களைச் சிதறடிப்பேன். (எரே 13:24).
12. உன் மானம் காணப்பட நான் உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டாக எடுத்துப்போடுவேன். (எரே 13:26).

எரே 13 ஆவது அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கும் கட்டளைகள்

1. போய் உனக்கு ஒரு சணல்கச்சையை வாங்கு. (எரே 13:1).
2. அதை உன் அரையிலே கட்டிக்கொள்.
3. அதைத் தண்ணீரிலே படவொட்டாதே.
4. நீ வாங்கினதும் உன் அரையிலி ருக்கிறதுமான கச்சையை எடுத்துக் கொண்டு எழுந்து, ஐப்பிராத்து நதி மட்டும் போ. (எரே 13:4).
5. அதை அங்கே ஒரு கன்மலை வெடிப்பிலே ஒளித்துவை.
6. நீ எழுந்து ஐப்பிராத்து நதிக்குப்போ. (எரே 13:6).
7. அங்கே ஒளித்து வைக்க நான் கட்டளையிட்ட கச்சையை அவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டுவா.
8. அவர்களிடம் இந்த வார்த்தையைக் கூறு. (எரே 13:12-13).

13 அதிகாரம்

9. நீங்கள் செவிகொடுத்துக் கேளுங்கள்; மேட்டிமையாய் இராதேயுங்கள் (எரே 13:15).

10. உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள். (எரே 13:16)

11. நீங்கள் ராஜாவையும் ராஜாத்தியையும் நோக்கி சொல்லுங்கள். (எரே 13:18).

12. தாழவந்து உட்காருங்கள்.

(2) சணல் கச்சை ஒளித்து வைக்கப்படுகிறது

எரே 13:3 இரண்டாம்விசை கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 13:4 நீ வாங்கினதும் உன் அரையிலிருக்கிறதுமான கச்சையை எடுத்துக் கொண்டு எழுந்து, ஐப்பிராத்து நதி மட்டும் போய், அதை அங்கே ஒரு கன்மலை வெடிப்பிலே ஒளித்துவை என்றார்.

எரே 13:5 நான் போய், கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டபடியே அதை ஐப்பிராத்து நதியின் ஓரத்தில் ஒளித்துவைத்தேன்.

"இரண்டாம்விசை" - கச்சையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் நான்கு செய்திகளில் இது இரண்டாவது செய்தியாகும். (எரே 13:1-2,3-5, 6-7,8-11).

"கச்சை" (girdle) - (தானி 10:5; வெளி 1:13; வெளி 15:6).

"ஐப்பிராத்து நதி மட்டும் போய், அதை அங்கே ஒரு கன்மலை வெடிப்பிலே ஒளித்துவை" - ஐபிராத்து நதிக்குச் செல்லும் பாதையில் கர்கேமிஸ் (Carchemish) உள்ளது. அக்காலத்தில் இதை எகிப்தியர் பிடித்திருந்தார்கள். (எரே 46:2). எரேமியா ஐபிராத்து நதிக்குக் போகவேண்டும். ஐபிராத்து நதிக்கு அப்பாலுள்ள பாபிலோன் தேசத்திலிருந்து யூதா தேசத்திற்கு நியாயத்தீர்ப்பு வரும். எருசலேமிலிருந்து ஐபிராத்து நதிக்கு போய்விட்டு, திரும்பவும் எருசலேமிற்கு வரவேண்டுமானால் சுமார் 600 அல்லது 800 மைல் பிரயாணம் பண்ண வேண்டும். (எரே 13:4-7). எரேமியா எருசலேமிலிருந்து புறப்பட்டுப் போனார். 7 வருஷங்களாக அவர் எருசலேமிற்குத் திரும்பி வரவில்லை. யோயாக்கீமின் ஆட்சிக்காலத்தின் கடைசியில் எரேமியா எருசலேமிற்குத் திரும்பி வருகிறார். எருசலேம் இறுதியாக அழிக்கப்படுவதற்கு 12 வருஷங்களுக்கு முன்பாக எரேமியா அங்கு வருகிறார். எருசலேமிற்குத் திரும்பி வரும்போது ஐபிராத்து நதியில் ஒளித்து வைத்திருந்த கச்சையை அணிந்து வருகிறார். அந்தக் கச்சை ஒன்றுக்கும் உதவாமல் போயிற்று. யூதாவுடைய பெருமையும், இந்தக் கச்சையைப்போல கெட்டுப்போகும். எரேமியா எருசலேமிலிருந்து இரண்டு முறை ஐபிராத்து நதிக்குச் சென்றாரா என்று தெரியவில்லை. (எரே 13:6-7)

(3) ஒன்றுக்கும் உதவாத கச்சை

எரே 13:6 அநேகநாள் சென்றபின்பு கர்த்தர் என்னை நோக்கி: நீ எழுந்து ஐப்பிராத்து நதிக்குப்போய் அங்கே ஒளித்து வைக்க நான் கட்டளையிட்ட கச்சையை அவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டுவா என்றார்.

எரே 13:7 அப்பொழுது நான் ஐப்பிராத்து நதிக்குப்போய், கச்சையை ஒளித்துவைத்த இடத்திலே தோண்டி அதை எடுத்தேன்; ஆனால், இதோ, அந்தக் கச்சை கெட்டு ஒன்றுக்கும் உதவாமற்போயிற்று.

"அநேகநாள் சென்றபின்பு" - எத்தனை நாள் என்று வேதாகமத்தில் கூறப்படவில்லை. ஆனால் இந்த நாட்களில் எரேமியா ஒளித்து வைத்திருந்த கச்சை ஒன்றுக்கும் உதவாமல் போயிற்று. (எரே 13:6-7). ஓசி 3:4-5 ஆகிய வசனங்களில் அநேகநாள் என்னும் வார்த்தை பயன் படுத்தப்பட்டுள்ளது. இது நீண்ட காலத்தைக் குறிக்கும்.

10. இஸ்ரவேலுக்கு இது பொருந்தும்

எரே 13:8 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரேமியா – தொகுப்புரை

13 அதிகாரம்

எரே 13:9 இப்படியே நான் யூதாவுடைய பெருமையையும், எருசலேமுடைய மிகுந்த பெருமையையும் கெட்டுப்போகப் பண்ணுவேன்.

எரே 13:10 என் வார்த்தைகளைக் கேட்கமாட்டோம் என்று மறுத்து, தங்கள் இருதயத்தின் கடினத்தின்படி நடந்து, அந்நிய தேவர்களைச் சேவிக்கவும் அவர்களைப் பணிந்துகொள்ளவும் அவர்களைப் பின்பற்றுகிற இந்தப் பொல்லாத ஜனங்கள் ஒன்றுக்கும் உதவாமற்போன இந்தக் கச்சையைப் போலாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 13:11 கச்சையானது மனுஷனுடைய அரைக்குச் சேர்க்கையாயிருக்கிறது போல, நான் இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரையும் யூதாவின் குடும்பத்தார் அனைவரையும், எனக்கு ஜனங்களாகவும், கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் சேர்க்கையாக்கிக் கொண்டேன்; ஆனாலும் அவர்கள் செவிகொடாமற்போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"இப்படியே நான் யூதாவுடைய பெருமையையும்.... கெட்டுப்போகப் பண்ணுவேன்" - யூதா தேசத்தாருக்கு வரப்போகும் நியாயத் தீர்ப்பைக் கர்த்தர் இதன் மூலமாக அறிவிக்கிறார். கச்சை ஒன்றுக்கும் உதவாமற் போயிற்று. அதுபோலவே யூதாவின் பெருமையும், எருசலேமின் பெருமையும் ஒன்றுக்கும் உதவாமல் போகும். (எரே 13:8-9) கச்சையானது மனுஷனுடைய அரைக்குச் சேர்க்கையாயிருக்கிறது. அதுபோல கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரையும் யூதாவின் குடும்பத்தார் அனைவரையும், தமக்கு ஜனங்களாகவும், கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் சேர்க்கையாக்கிக்கொண்டார். (எரே 13:11).

யூதாவின் பாவங்கள்

1. மிகுந்த பெருமை (எரே 13:9)
2. கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கமாட்டோம் என்று மறுப்பது. (எரே 13:10)
3. தங்கள் இருதயத்தின் கடினத்தின்படி நடப்பது.
4. அந்நிய தேவர்களைச் சேவிக்கவும் அவர்களைப் பணிந்துகொள்ளவும் அவர்ளைப் பின்பற்றுவது.
5. தேவனுடைய ஜனமாகச் சேருவதற்கு ஆர்வமில்லாமல் இருப்பது. (எரே 13:11)
6. குடித்து வெறித்திருப்பது. (எரே 13:13)
7. தீமை செய்ய பழகியிருப்பது. (எரே 13:23)
8. கர்த்தரை மறப்பது. (எரே 13:25)
9. பொய்யை (விக்கிரகங்கள்) நம்புவது.
10. விபசாரங்கள் (எரே 13:27)
11. காமஇச்சைகள்
12. வேசித்தனத்தின் முறைகேடுகள்
13. விக்கிரகாராதனையின் அருவருப்புக்கள்

11. ஜாடிகளின் அடையாளம்

எரே 13:12 சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார் என்கிற வார்த்தையை அவர்களுடனே சொல்; அதற்கு அவர்கள்: சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படுவது எங்களுக்குத் தெரியாதா என்று உன்னுடனே சொல்லுவார்கள்.

"சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படும்" - கர்த்தர் ராஜாக்களையும், ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும், எருசலேமின் குடிகள் எல்லாரையும் வெறியினால் நிரப்புவார். (எரே 13:13-14). மதுபான வெறியினால் நிறைந்திருப்பது

13 அதிகாரம்

இங்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஜனங்கள் ஜாடிகளுக்கும், திராட்சரசத்திற்கும் ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய கோபாக்கினை அவர்களுக்கு எதிராக எழும்பும் என்பதற்கு இதுவே அடையாளமாகும். ஜனங்களுடைய பாவங்களுக்குக் கர்த்தர் பொறுப்பல்ல. அவர்கள் தங்களுடைய குடிவெறியினால் குழப்பமடைந்து பாவம் செய்கிறார்கள். (எரே 13:15-17)

12. யூதாவுக்கு இது பொருந்தும்

எரே 13:13 அப்பொழுது நீ அவர்களை நோக்கி: இதோ, இந்தத் தேசத்தின் குடிகளெல்லாரையும், தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந் திருக்கிற ராஜாக்களையும், ஆசாரியர்களையும், தீர்க்கதரிசி களையும், எருசலேமின் குடிகள் எல்லாரையும் நான் வெறியினால் நிரப்பி,

எரே 13:14 பிதாக்களும் பிள்ளைகளுமாகிய அவர்களை ஒருவர்மேல் ஒருவர் மோதி விழும்படிப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை அழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை, தப்பவிடுவதுமில்லை, இரங்குவது மில்லை யென்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

13. பெருமையுடையவர்களுக்கு எச்சரிப்பு

எரே 13:15 நீங்கள் செவிகொடுத்துக் கேளுங்கள்; மேட்டிமையாய் இராதேயுங்கள்; கர்த்தர் விளம்பினார்.

எரே 13:16 அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவதற்கு முன்னும், இருண்ட மலைகளில் உங்கள் கால்கள் இடறுவதற்கு முன்னும், நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கும்போது, அவர் அதை அந்தகாரமும் காரிருளுமாக மாறப்பண்ணுவதற்கு முன்னும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள்.

எரே 13:17 நீங்கள் இதைக் கேளாமற் போனீர்களானால், என் ஆத்துமா மறைவிடங்களில் உங்கள் பெருமையினிமித்தம் துக்கித்து, கர்த்தருடைய மந்தை சிறைப்பட்டுப் போனதென்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும்.

“நீங்கள் செவிகொடுத்துக் கேளுங்கள்” - இஸ்ரவேல் புத்திரர் செவிகொடுத்துக் கேட்க வேண்டிய காரியங்களின் விவரம் (எரே 13:15-17):

1. கர்த்தர் அந்தகாரத்தை வரப்பண்ணுவார். (எரே 13:16).
2. இருண்ட மலைகளில் உங்கள் கால்கள் இடறும்.
3. நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கும் போது, கர்த்தர் அதை அந்தகாரமாக மாறப்பண்ணுவார்.
4. அதைக் காரிருளாக மாறப்பண்ணுவார்.
5. நீங்கள் வேறொரு தேசத்திற்குச் சிறைப்பட்டுப்போவீர்கள். (எரே 13:17).

“கர்த்தருடைய மந்தை சிறைப்பட்டுப் போனதென்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும்” - கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவித்தால் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும். இல்லையென்றால் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள். கர்த்தர் இந்த வசனங்களில் ஜனங்களுக்குப்புரியும் விதத்தில் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆகையினால் ஜனங்களுக்குச் சாக்குப்போக்கு சொல்ல இடமில்லை. (லேவி 26; உபா 28) கர்த்தருடைய சத்தத்தைக் கேளாமற்போனால் அவர்கள் சிறையிருப்புக்குப்போவார்கள். (எரே 13:17-19). கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து ஜீவித்தாலும் கர்த்தர் நம்மைத் தண்டிக்கமாட்டார், கர்த்தருடைய ஆசீர்வாதம் நம்மீது தொடர்ந்து தங்கியிருக்கும் என்று யாரும் இறுமாப்பாக இருக்கக்கூடாது. ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்க வேண்டும்.

13 அதிகாரம்

14. ஆட்சியாளர்களுக்கு எச்சரிப்பு

எரே 13:18 நீங்கள் ராஜாவையும் ராஜாத்தியையும் நோக்கி: தாழவந்து உட்காருங்கள்; உங்கள் சிரசின் சிங்காரமாகிய உங்கள் மகிமையின் கிரீடம் விழுந்ததென்று சொல்லுங்கள்.

எரே 13:19 தெற்கிலுள்ள பட்டணங்கள் அடைக்கப்பட்டன; அவைகளைத் திறப்பார் இல்லை; யூதா அனைத்தும் குடிவிலக்கப்பட்டுப்போம்; அது சமூலமாய்ச் சிறைப்பட்டுப்போம்.

எரே 13:20 உங்கள் கண்களை ஏறெடுத்து, வடக்கேயிருந்து வருகிறவர்களைப் பாருங்கள்; உனக்குக் கொடுக்கப்பட்டிருந்த மந்தையும், உன் மகிமையான ஆட்டுக்கிடையும் எங்கே?

எரே 13:21 அவர் உன்னை விசாரிக்கும்போது என்ன சொல்லுவாய்? அவர்கள் உன்மேல் ஆதிக்கக்காரரும் தலைவருமாயிருக்க, நீ அவர்களைப் பழக்குவித்தாயே; கர்ப்பவதிக்குப் பிரசவவேதனை உண்டாகும்போது உண்டாகும் வேதனைகளைப்போல் வேதனைகள் உன்னைப் பிடிப்பதில்லையோ?

எரே 13:22 இவைகள் எனக்கு நேரிட்டது ஏதென்று நீ உன் இருதயத்தில் சொன்னாயாகில், உன் திரளான அக்கிரமத்தினிமித்தமே உன் வஸ்திரத்து ஓரங்கள் விலக்கப்பட்டு, உன் பாதங்கள் பலவந்தஞ்செய்யப்படுகின்றன.

எரே 13:23 எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்.

எரே 13:24 ஆதலால் வனாந்தரக் காற்றால் பறக்கடிக்கப்படும் துரும்பைப் போல அவர்களைச் சிதறடிப்பேன்.

எரே 13:25 நீ என்னை மறந்து, பொய்யை நம்பினபடியினாலே, இது உன்னுடைய வீதமும், என்னால் உனக்கு அளக்கப்படும் உன்னுடைய பங்குமாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 13:26 உன் மானம் காணப்பட நான் உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டாக எடுத்துப்போடுவேன்.

எரே 13:27 உன் விபசாரங்களையும், உன் கனைக்குதல்களையும், வெளியிலே மேடுகளின்மேல் நீ பண்ணின வேசித்தனத்தின் முறைகேடுகளாகிய உன் அருவருப்புகளையும் நான் கண்டேன்; எருசலேமே, உனக்கு ஐயோ! நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா? இது இன்னும் எத்தனை காலத்துக்குப்பின் நடக்கும்? என்கிறார்.

"உங்கள் மகிமையின் கிரீடம் விழுந்தது" - இந்த வாக்கியம் யோயாக்கீமையும், அவனுடைய தாயாரையும் குறிக்கிறது. அவர்களுடைய சிரசின் சிங்காரம் கீழே விழும். ராஜாவாக இருக்கிறவர்கள் அடிமைகளாகச் சிறைப்பட்டுப் போவார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் யோயாக்கீமின் காலத்தில் நிறைவேறிற்று. (2இராஜா 24:12-15).

"யூதா அனைத்தும் குடிவிலக்கப்பட்டுப்போம்" - வடக்கு இஸ்ரவேல் ராஜ்யம் ஏற்கெனவே சிறைப்பட்டுப்போயிற்று. யூதா தேசம் மட்டுமே மீந்திருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனம் 12 வருஷங்களுக்குப் பின்பு யூதா தேசத்தின்மீது நிறைவேறிற்று.

"வடக்கேயிருந்து வருகிறவர்கள்" - பாபிலோன் தேசத்தார் வடதிசையிலிருந்து பாலஸ்தீன தேசத்திற்கு வருவார்கள். (எரே 1:13-15; எரே 3:12,18; எரே 4:6; எரே 6:1,22; எரே 10:22; எரே 13:20; எரே 16:15; எரே 23:8; எரே 25:9,26; எரே 31:8; எரே 46:6-24; எரே 47:2; எரே 50:3-9,41; எரே 51:48).

13 அதிகாரம்

"கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்" - யூதா தேசம் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போயிற்று. இனிமேல் அதனால் கர்த்தரிடத்தில் திரும்பி வருவது இயலாத காரியம். எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்ற முடியாது. அதுபோல யூதாவும் கர்த்தரிடத்தில் திரும்பி வராது. (எரே 13:23). யூதாவின் புத்திரர் வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் துரும்பைப்போல சிதறடிக்கப்படுவார்கள். (எரே 13:24). அவர்கள் கர்த்தரை நம்பாமல் விக்கிரகத்தை நம்பினார்கள். ஆகையினால் இதுவே அவர்களுடைய பங்குவீதமாக இருக்கும். (எரே 13:25) தங்களுடைய பாவங்களுக்காக அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். (எரே 13:25-27).

14 அதிகாரம்

15. மழைத்தாழ்ச்சியைப் பற்றிய செய்தி

(1) யூதாவின் பத்து அம்ச அழிவு

எரே 14:1 மழைத்தாழ்ச்சியைக் குறித்து எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 14:2 யூதா துக்கிக்கிறது, அதின் வாசல்கள் பெலனற்றுக் கிடக்கிறது; தரை மட்டும் குனிந்து, கரிகறுத்துத் திரிகிறார்கள்; எருசலேமின் கூக்குரல் எழும்புகிறது.

எரே 14:3 அவர்களில் பிரபலமானவர்கள் தங்கள் சிறுவர்களைத் தண்ணீருக்கு அனுப்புகிறார்கள்; இவர்கள் பள்ளங்களுக்குப் போய் தண்ணீரைக் காணாமல் வெறும் பாத்திரங்களோடே திரும்பிவருகிறார்கள்; வெட்கி நாணி, தங்கள் தலையை மூடிக்கொள்கிறார்கள்.

எரே 14:4 தேசத்தின்மேல் மழை இல்லாததினால் தரை வெடித்திருக்கிறது; பயிர் செய்கிறவர்கள் வெட்கி, தங்கள் தலையை மூடிக்கொள்ளுகிறார்கள்.

எரே 14:5 வெளியின் பெண்மானும் குட்டி போட்டு, புல்லில்லாததினால் அதை விட்டு ஓடிப்போகும்.

எரே 14:6 காட்டுக்கழுதைகள் மேடுகளில் நின்று, வலுசர்ப்பங்களைப் போல் காற்றை உட்கொள்ளுகிறது; புல் இல்லாததினால் அவைகளுடைய கண்கள் பூத்துப் போகிறது என்றார்.

தீர்க்கதரிசன எண் - 30

"மழைத்தாழ்ச்சியைக் குறித்து எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:......" (எரே 14:1-6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதா துக்கிக்கிறது (எரே 14:2).
2. சிறுவர்கள் பள்ளங்களுக்குப் போய் தண்ணீரைக் காணாமல் வெறும் பாத்திரங்களோடே திரும்பிவருகிறார்கள் (எரே 14:3)
3. வெட்கி நாணுகிறார்கள்.
4. தங்கள் தலையை மூடிக்கொள்கிறார்கள்.
5. தரை வெடித்திருக்கிறது (எரே 14:4).
6. மழை இல்லை.
7. பயிர் செய்கிறவர்கள் வெட்கமடைகிறார்கள்.
8. அவர்கள் தங்கள் தலையை மூடிக்கொள்ளுகிறார்கள்.
9. மிருகங்கள் புல்லில்லாததினால் தங்கள் குட்டிகளைவிட்டு ஓடிப்போகும். (எரே 14:5).
10. காட்டுக்கழுதைகள் மேடுகளில் நின்று, வலுசர்ப்பங்களைப் போல் காற்றை உட்கொள்ளும். (எரே 14:6).

"மழைத்தாழ்ச்சி" **(dearth)** - கர்த்தர் ஜனங்கள்மீது தமது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதற்காகத் தேசத்தில் மழைத்தாழ்ச்சியை அனுமதிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்தால் அவர்கள் தேசத்தில் மழை பெய்யாது என்று கர்த்தர் ஏற்கெனவே அவர்களை எச்சரித்திருக்கிறார். (லேவி 26:19; உபா 28:23).

(2) எரேமியாவின் பாவ அறிக்கை

எரே 14:7 கர்த்தாவே, எங்கள் அக்கிரமங்கள் எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிட்டாலும், உம்முடைய நாமத்தினிமித்தம் கிருபைசெய்யும்; எங்கள் சீர்கேடுகள் மிகுதியாயிருக்கிறது; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்.

எரேமியா – தொகுப்புரை

14 அதிகாரம்

எரே 14:8 இஸ்ரவேலின் நம்பிக்கையே, ஆபத்துக்காலத்தில் அதின் இரட்சகரே, நீர் தேசத்தில் பரதேசியைப் போலவும், இராத்தங்க இறங்குகிற வழிப் போக்கனைப் போலவும் இருப்பானேன்?

எரே 14:9 நீர் விடாய்த்துப்போன புருஷனைப் போலவும், இரட்சிக்கமாட்டாத பராக்கிரமசாலியைப்போலவும் இருப்பானேன்? கர்த்தாவே, நீர் எங்கள் நடுவிலிருக்கிறவராமே; உம்முடைய நாமம் எங்களுக்குத் தரிக்கப்பட்டிருக்கிறதே; எங்களை விட்டுப் போகாதிரும்.

"கர்த்தாவே, எங்கள் அக்கிரமங்கள் எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிட்டாலும்" - எரேமியா தன்னைத் தன்னுடைய ஜனங்களோடு சேர்த்துக் கொள்ளுகிறார். யூதா ஜனங்களுக்காக ஜெபிக்க வேண்டாமென்று கர்த்தர் எரேமியாவிற்குக் கட்டளையிட்டிருக்கிறார். (எரே 14:7-9,11; எரே 7:16; எரே 11:14). ஆகையினால், அவர்களை அழிவிலிருந்து இரட்சிக்குமாறு எரேமியா ஜெபிக்கவில்லை.

"இஸ்ரவேலின் நம்பிக்கையே" - கர்த்தரே இஸ்ரவேலின் நம்பிக்கையாகவும், புறஜாதியாரின் நம்பிக்கையாகவும் இருக்கிறார்.

(3) தேவனுடைய பதிலுரை - நியாயத்தீர்ப்பு

எரே 14:10 அவர்கள் தங்கள் கால்களை அடக்கிக்கொள்ளாமல், அலைய விரும்புகிறார்களென்று கர்த்தர் இந்த ஜனத்தைக்குறித்துச் சொல்லுகிறார்; ஆகையால், கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிராமல், இப்பொழுது அவர்கள் அக்கிரமத்தை நினைத்து, அவர்கள் பாவங்களை விசாரிப்பார்.

எரே 14:11 கர்த்தர் என்னை நோக்கி: நீ இந்த ஜனத்துக்கு நன்மையுண்டாக விண்ணப்பம்பண்ணவேண்டாம்.

எரே 14:12 அவர்கள் உபவாசித்தாலும், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பதில்லை; அவர்கள் தகனபலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினாலும், நான் அவர்கள்மேல் பிரியமாயிருப்பதில்லை; பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் நான் அவர்களை நிர்மூலமாக்குவேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 31

"அவர்கள் தங்கள் கால்களை அடக்கிக் கொள்ளாமல், அலைய விரும்புகிறார்களென்று கர்த்தர் இந்த ஜனத்தைக்குறித்துச் சொல்லுகிறார்" (எரே 14:10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிருக்க மாட்டார். (எரே 14:10).
2. இப்பொழுது அவர்கள் அக்கிரமத்தை நினைப்பார்.
3. அவர்கள் பாவங்களை விசாரிப்பார்.

"ஜனத்துக்கு நன்மையுண்டாக விண்ணப்பம் பண்ணவேண்டாம்" - (எரே 7:16, 11:14)

தீர்க்கதரிசன எண் - 32

"அவர்கள் உபவாசித்தாலும், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பதில்லை" (எரே 14:12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பதில்லை (எரே 14:12).
2. நான் அவர்கள்மேல் பிரியமாயிருப்பதில்லை.
3. பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் நான் அவர்களை நிர்மூலமாக்குவேன்

14 அதிகாரம்

(4) எரேமியாவின் முறையீடு

எரே 14:13 அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நீங்கள் பட்டயத்தைக் காண்பதில்லை, உங்களுக்குப் பஞ்சமும் வருவதில்லை; உறுதியான சமாதானத்தையே இவ்விடத்தில் உங்களுக்குத் தருவோமென்றார் என்று தீர்க்கதரிசிகள் அவர்களுக்குச் சொல்லுகிறார்களே என்றேன்.

"தீர்க்கதரிசிகள் அவர்களுக்குச் சொல்லுகிறார்களே" - எரேமியாவின் காலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள். எருசலேமில் சமாதானம் இல்லை. ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ அங்கு சமாதானம் வரும் என்கிறார்கள். எரேமியா கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிசி. எரேமியாவின் தீர்க்கதரிசனம் எரே 14:12 ஆவது வசனத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. கள்ளத் தீர்க்கதரிசிகள் எரேமியாவின் வார்த்தைக்கு நேர்மாறாகப் பேசுகிறார்கள். எரேமியாவின் புஸ்தகத்தில் மெய்யான தீர்க்கதரிசிக்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் பல வசனங்களில் தெளிவாகிறது. (எரே 20:1-18; எரே 23:1-40; எரே 27:1-28:17).

(5) தேவனுடைய பதில்வுரை - நியாயத்தீர்ப்பு

எரே 14:14 அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக் கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை; அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்.

எரே 14:15 ஆதலால், நான் அனுப்பாதிருந்தும், என் நாமத்தைக் கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, இந்தத் தேசத்திலே பட்டயமும் பஞ்சமும் வருவதில்லையென்கிற தீர்க்கதரிசிகளைக் குறித்து: இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள்.

எரே 14:16 அவர்களிடத்தில் தீர்க்கதரிசனம் கேட்கும் ஜனங்களும், எருசலேமின் வீதிகளிலே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்து, அவர்களும் அவர்கள் மனைவிகளும், அவர்கள் குமாரரும், அவர்கள் குமாரத்திகளும் அடக்கம் பண்ணுவாரில்லாமல் கிடப்பார்கள்; அவர்களுடைய பொல்லாப்பை அவர்கள்மேல் வரப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 14:17 என் கண்களிலிருந்து இரவும் பகலும் ஓயாமல் கண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும்; என் ஜனமென்கிற குமாரத்தியாகிய கன்னிகை மகா வேதனையுள்ள அடியினாலும் கொடிய காயத்தினாலும் சேதப்பட்டிருக்கிறாள்.

எரே 14:18 நான் வெளியே போனால், இதோ, பட்டயத்தால் கொல்லப்பட்டவர்கள்; நகரத்தில் வந்தால் இதோ, பஞ்சத்தால் வருந்துகிறவர்கள்; தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் ஒன்றும் அறியாமல் தேசத்தில் அலைகிறார்கள் என்னும் இந்த வார்த்தையை அவர்களுக்குச் சொல் என்றார்.

கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பற்றிய காரியங்கள்

1. என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் (எரே 14:14).
2. நான் அவர்களை அனுப்பினதுமில்லை (எரே 14:14-15).
3. அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை (எரே 14:14).
4. அவர்களோடே பேசினதுமில்லை.

14 அதிகாரம்

5. அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும் சொல்லுகிறார்கள்.

6. இல்லாத விசேஷத்தைச் சொல்லுகிறார்கள்.

7. தங்கள் இருதயத்தின் கபடத்தை ஜனங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்.

8. என்னோடு முரண்பாடுகிறார்கள். (எரே 14:15-13).

தீர்க்கதரிசன எண் - 33

"ஆதலால், நான் அனுப்பாதிருந்தும், என் நாமத்தைக் கொண்டு தீர்க்கதரிசனஞ் சொல்லி......" (எரே 14:15-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள். (எரே 14:15).

2. அவர்களிடத்தில் தீர்க்கதரிசனம் கேட்கும் ஜனங்களும், எருசலேமின் வீதிகளிலே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிவார்கள். (எரே 14:16).

3. அவர்கள் அடக்கம் பண்ணுவாரில்லாமல் கிடப்பார்கள்.

4. அவர்களுடைய பொல்லாப்பை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்.

5. என் ஜனம் மகா வேதனையுள்ள அடியினாலும் கொடிய காயத்தினாலும் சேதப்பட்டிருக்கிறார்கள். (எரே 14:17).

6. அவர்கள் வெளியே கொல்லப்பட்டு சிதறிக் கிடக்கிறார்கள். (எரே 14:18).

7. நகரத்தில் பஞ்சத்தால் வருந்துகிறார்கள்.

8. தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் சிறையிருப்புக்குப்போவார்கள்.

(6) எரேமியாவின் பாவ அறிக்கை

எரே 14:19 யூதாவை முற்றிலும் வெறுத்தீரோ? சீயோன் உம்முடைய ஆத்துமாவுக்கு அரோசிகமாயிற்றோ? நாங்கள் ஆரோக்கியம் அடையக்கூடாதபடி எங்களை ஏன் அடித்தீர்? சமாதானத்துக்குக் காத்திருந்தோம், ஒரு நன்மையுமில்லை; ஆரோக்கிய காலத்துக்குக் காத்திருந்தோம், இதோ, ஆபத்து.

எரே 14:20 கர்த்தாவே, எங்கள் தீமையையும் எங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் நாங்கள் அறிந்திருக்கிறோம்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்.

எரே 14:21 உம்முடைய நாமத்தினிமித்தம் எங்களை அருவருக்காதிரும், உமது மகிமையின் சிங்காசனத்தைக் கனவீனப் படுத்தாதேயும்; எங்களோடே உமக்கு இருக்கிற உடன்படிக்கை அபத்தமாகாதபடி எங்களை நினைத்தருளும்.

எரே 14:22 புறஜாதிகளுடைய வீணான தேவர்களுக்குள் மழை வருஷிக்கப் பண்ணத்தக்கவர்கள் உண்டோ? அல்லது, வானங்கள் தானாய் மழைகளைக் கொடுக்குமோ? எங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நீரல்லவோ அதைச் செய்கிறவர்; ஆகையால், உமக்குக் காத்திருக்கிறோம்; தேவரீர் இவைகளை யெல்லாம் உண்டுபண்ணினீர்.

"சமாதானத்துக்குக் காத்திருந்தோம், ஒரு நன்மையுமில்லை" - எரேமியா இரண்டாம் முறையாக இதை அறிக்கையிடுகிறார். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு (எரே 14:20) தேவனுடைய இரக்கத்தை எதிர்பார்க்கிறார். (எரே 14:21-22).

கர்த்தரிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம்

1. எங்களை அருவருக்காதிரும்.

2. உமது மகிமையின் சிங்காசனத்தைக் கனவீனப்படுத்தாதேயும்.

3. எங்களோடே உமக்கு இருக்கிற உடன்படிக்கையை நினைத்தருளும்.

4. அதை அபத்தமாகாதபடி செய்யும்.

எரேமியா – தொகுப்புரை

15 அதிகாரம்

(7) தேவனுடைய பதில்வுரை - நியாயத்தீர்ப்பு

எரே 15:1 கர்த்தர் என்னை நோக்கி: மோசேயும் சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச் சாராது; இவர்கள் என் முகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகும்படி இவர்களைத் துரத்திவிடு.

எரே 15:2 எங்கே புறப்பட்டுப்போவோம் என்று இவர்கள் உன்னைக் கேட்டால், நீ அவர்களை நோக்கி: சாவுக்கு ஏதுவானவர்கள் சாவுக்கும், பட்டயத்துக்கு ஏதுவானவர்கள் பட்டயத்துக்கும், பஞ்சத்துக்கு ஏதுவானவர்கள் பஞ்சத்துக்கும், சிறையிருப்புக்கு ஏதுவானவர்கள் சிறையிருப்புக்கும் நேராய்ப் போகவேண்டும் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லு.

எரே 15:3 கொன்றுபோடப் பட்டயமும், பிடித்து இழுக்க நாய்களும், பட்சித்து அழிக்க ஆகாயத்துப் பறவைகளும், பூமியின் மிருகங்களும் ஆகிய நான்கு விதமான வாதைகளை நான் அவர்கள் மேல் வரக் கட்டளையிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:4 எசேக்கியாவின் குமாரனும், யூதாவின் ராஜாவுமாகிய மனாசே எருசலேமில் செய்தவைகளினிமித்தம் அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலையப்பண்ணுவேன்.

எரே 15:5 எருசலேமே, யார் உன்மேல் இரங்குவார்கள்? யார் உன்மேல் பரிதபிப்பார்கள்? யார் உன்னிடத்திற்குத் திரும்பி, உன் சுகசெய்தியை விசாரிப்பார்கள்?

எரே 15:6 நீ என்னைவிட்டுப் பின்வாங்கிப் போனாய்; ஆகையால், என் கையை உனக்கு விரோதமாய் நீட்டி, உன்னை அழிப்பேன்; நான் பொறுத்துப் பொறுத்து இளைத்துப்போனேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:7 தேசத்தின் வாசல்களில் அவர்களைத் தூற்றுக்கூடையால் தூற்றிப் போடுவேன்; என் ஜனங்கள் தங்கள் வழிகளைவிட்டுத் திரும்பாதபடியினால் நான் அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கி அழிப்பேன்.

எரே 15:8 கடற்கரை மணலைப்பார்க்கிலும் அதிக விதவைகள் அவர்களில் உண்டாயிருப்பார்கள்; பட்டப்பகலிலே பாழாக்குகிறவனைத் தாயின்மேலும் பிள்ளைகளின் மேலும் வரப்பண்ணுவேன்; அவர்கள்மேல் பட்டணத்தின் கலகத்தையும், பயங்கரங்களையும் விழப்பண்ணுவேன்.

எரே 15:9 ஏழு பிள்ளைகளைப் பெற்றவள் களைத்துப்போகிறாள்; அவள் தன் பிராணனை விட்டுவிட்டாள்; இன்னும் பகலாயிருக்கையில் அவளுடைய சூரியன் அஸ்தமித்தது; வெட்கமும் இலச்சையும் அடைந்தாள்; அவர்களில் மீதியாகிறவர்களையோ அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாகப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 34

"கர்த்தர் என்னை நோக்கி......" (எரே 15:1-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இவர்கள் என் முகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகும்படி இவர்களைத் துரத்திவிடு. (எரே 15:1).
2. சாவுக்கு ஏதுவானவர்கள் சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (எரே 15:2).
3. பட்டயத்துக்கு ஏதுவானவர்கள் சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.
4. பஞ்சத்துக்கு ஏதுவானவர்கள் சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.
5. சிறையிருப்புக்கு ஏதுவானவர்கள் சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எரேமியா – தொகுப்புரை

15 அதிகாரம்

6. நான்கு விதமான வாதைகளை நான் அவர்கள் மேல் வரக் கட்டளையிடுவேன் (எரே 15:3).

7. கொன்றுபோடப் பட்டயம் கட்டளையிடப்படும்.

8. பிடித்து இழுக்க நாய்கள் கட்டளையிடப்படும்.

9. பட்சிக்க ஆகாயத்துப் பறவைகள் கட்டளையிடப்படும்.

10. அழிக்க பூமியின் மிருகங்கள் கட்டளையிடப்படும்.

11. அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலையப்பண்ணுவேன். (எரே 15:4).

12. என் கையை உனக்கு விரோதமாய் நீட்டுவேன். (எரே 15:6).

13. தேசத்தின் வாசல்களில் அவர்களைத் தூற்றுக்கூடையால் தூற்றிப் போடுவேன் (எரே 15:7).

14. நான் அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்குவேன்.

15. நான் அவர்களை அழிப்பேன்

16. அதிக விதவைகள் அவர்களில் உண்டாயிருப்பார்கள். (எரே 15:8).

17. பட்டப்பகலிலே பாழாக்குகிறவனைத் தாயின்மேலும் பிள்ளைகளின்மேலும் வரப்பண்ணுவேன்.

18. அவர்கள்மேல் பட்டணத்தின் கலகத்தையும், பயங்கரங்களையும் விழப்பண்ணுவேன்.

19. அவள் களைத்துப்போவாள். (எரே 15:9).

20. அவள் தன் பிராணனை விட்டுவிடுவாள்.

21. இருட்டுவதற்கு முன்பாகவே மரித்துப்போவாள்.

22. அவர்களில் மீதியாகிறவர்களையோ அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாகப் பட்டயத்துக்கு ஒப்புக் கொடுப்பேன்.

"மோசேயும் சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும்" - கர்த்தர் ஜனங்களை அழிக்காதவாறு மோசேயும், சாமுவேலும் தடுத்தார்கள். ஆனால் கர்த்தர் யூதஜனங்களை அழிக்க வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார். இவர்களை விடுவிக்க வேண்டுமென்று மோசேயும், சாமுவேலும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நின்றாலும் அவர் தம்முடைய முடிவை மாற்றிக் கொள்ள மாட்டார். யூதா தேசத்தாருக்கு அழிவு நிச்சயம்.

"மனாசே எருசலேமில் செய்தவைகளினிமித்தம்" - கர்த்தர் யூதாவை அழிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருப்பதற்கு இங்கு மறுபடியும் காரணம் கூறப்பட்டிருக்கிறது. (2 இராஜா 21:1-16)

மனாசே செய்த அருவருப்புக்கள்

1. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின் படியே, அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2. தன் தகப்பனாகிய எசேக்கியா இடித்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டினான். (2 இராஜா 21:3)

3. பாகாலுக்குப் பலிபீடங்களை எடுப்பித்தான்.

4. விக்கிரகத்தோப்பை உண்டாக்கினான்.

5. வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டான்.

6. அவைகளைச் சேவித்தான்.

7. கர்த்தருடைய ஆலயத்திலே அவன் வானத்தின் சேனைகளுக்குப் பலி பீடங்களைக் கட்டினான்.

8. தன் குமாரனைத் தீமிதிக்கப் பண்ணினான். (2 இராஜா 21:6)

15 அதிகாரம்

9. நாள்பார்க்கிறவனாக இருந்தான்.

10. நிமித்தம்பார்க்கிறவனாக இருந்தான்.

11. அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்திருந்தான்.

12. கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்தான்.

13. ஆலயத்திலே அவன் பண்ணின தோப்புவிக்கிரகத்தை வைத்தான். (2 இராஜா 21:7)

14. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகள் செய்த பொல்லாப்பைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்ய மனாசே அவர்களை ஏவிவிட்டான். (2 இராஜா 21:9,11)

15. எமோரியர் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் கேடாக அருவருப்புகளைச் செய்தான். (2 இராஜா 21:11)

16. குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான். (2 இராஜா 21:16)

யூதாவின் பாவங்கள்

1. அவர்கள் கர்த்தரைவிட்டுவிட்டார்கள். (எரே 15:6).

2. கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள்.

3. தங்கள் வழிகளைவிட்டுத் திரும்பாமல் போனார்கள். (எரே 15:7).

"நான் பொறுத்துப் பொறுத்து இளைத்துப் போனேன்" - யூதாவைப் பொறுத்தளவில் கர்த்தர் பலமுறை அவர்களை அழித்துப்போடாமல் மனம்மாறியிருக்கிறார். ஆனால் இப்போதோ அவர்களை அழிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணிவிட்டார். கர்த்தருடைய முடிவில் மாற்றம் எதுவுமில்லை. (எரே 15:6-9).

"கடற்கரை மணலைப்பார்க்கிலும் அதிக விதவைகள் அவர்களில் உண்டாயிருப்பார்கள்" - வரப்போகிற யுத்தத்தில் ஏராளமான புருஷர்கள் மரித்துப்போவார்கள். அதனால் விதவைகளின் எண்ணிக்கை தேசத்தில் அதிகரிக்கும். யுத்தத்தில் பிள்ளைகள் மரித்துப்போவதினால் அவர்களின் பெற்றோர் நியாயந்தீர்க்கப்படுவார்கள். ஏழு பிள்ளைகளைப் பெற்றவள்கூட இந்தத் துயரத்திலிருந்து தப்பிக்கமாட்டாள். (எரே 15:9). எத்தனை யுத்த வீரர்கள் இருந்தாலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து அவர்களால் தேசத்தை இரட்சிக்க முடியாது.

(8) எரேமியாவின் முறையீடு

எரே 15:10 என் தாயே, தேசத்துக்கெல்லாம் வழக்குக்கும் வாதுக்கும் உள்ளானவனாயிருக்கும்படி என்னை நீ பெற்றாயே; ஐயோ! நான் அவர்களுக்கு வட்டிக்குக் கொடுத்ததுமில்லை, அவர்கள் எனக்கு வட்டிக்குக் கொடுத்ததுமில்லை; ஆனாலும் எல்லாரும் என்னைச் சபிக்கிறார்கள்.

"என்னை நீ பெற்றாயே; ஐயோ!" - எரேமியா தன்னுடைய தீர்க்கதரிசனத்தின் நிமித்தமாக ஜனங்களுக்காகப் புலம்புகிறார். எரேமியாவை ஜனங்கள் வெறுக்கிறார்கள். அவர்களுடைய வெறுப்பிற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. ஆனாலும் ஜனங்களுடைய அழிவிற்காக எரேமியா துக்கப்படுகிறார்.

(9) தேவனுடைய பதில்மொழி - மீதியாக இருப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் - துன்மார்க்கர் தண்டிக்கப்படுவார்கள் - (ஏசா 1:9)

எரே 15:11 உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்.

எரே 15:12 வடக்கேயிருந்து வரும் இரும்பையும் வெண்கலத்தையும் இரும்பு நொறுக்குமோ?

15 அதிகாரம்

எரே 15:13 உன்னுடைய எல்லாப் பாவங்களினிமித்தமும், உன்னுடைய எல்லா எல்லைகளிலும், நான் உன் ஆஸ்தியையும், உன் பொக்கிஷங்களையும் கிரயமில்லாமல் சூறையிடுவிப்பேன்.

எரே 15:14 நீ அறியாத தேசத்தில் உன் சத்துருக்கள் வசமாக நான் உன்னைத் தாண்டிப்போகப் பண்ணுவேன்; உங்கள்மேல் எரியப்போகிற அக்கினி என் கோபத்தினாலே மூண்டது என்று கர்த்தர் சொன்னார்.

"மீதியாயிருப்பவர்கள்" - இவர்கள் சேனையில் மீதியாயிருப்பவர்கள் அல்ல. இவர்கள் தேசத்தில் ஏழைகளாக இருக்கிறவர்கள். யூதா தேசத்தார் சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட பின்பு அந்தத் தேசத்தில் பயிரிடும்படி பாபிலோன் தேசத்தார் அங்குள்ள ஏழைகளை விட்டுவிடுகிறார்கள். (எரே 39:1-18; எரே 41:1-18; 2 இராஜா 25:22-26).

"இரும்பு" - இது பலவீனமான யூதாவைக் குறிக்கும். பாபிலோன் தேசம் உருக்கிய இரும்பு. அதை யூதாவினால் மேற்கொள்ள முடியாது.

"நான் உன் ஆஸ்தியையும், உன் பொக்கிஷங்களையும் கிரயமில்லாமல் சூறையிடுவிப்பேன்." - யூதாவினுடைய ஆஸ்திகளெல்லாம் பாபிலோன் தேசத்தாருக்குக் கொள்ளை யுடைமைகளாகும். யூதா தேசத்தார் தங்களுடைய பாவங்களினிமித்தம் தங்கள் பொக்கிஷங்களையெல்லாம் இழந்து போவார்கள். அத்துடன் தாங்களும் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போவார்கள். (எரே 15:13-14).

(10) எரேமியாவின் பரிந்து பேசும் ஜெபம்

எரே 15:15 கர்த்தாவே, நீர் அதை அறிவீர்; தேவரீர் என்னை நினைத்து, என்னை விசாரித்து, என்னைத் துன்பப் படுத்துகிறவர்களுக்கு என்னிமித்தம் நீதியைச் சரிக்கட்டும்; உம்முடைய நீடிய பொறுமையினிமித்தம் என்னை வாரிக்கொள்ளாதிரும்; நான் உம்முடைய நிமித்தம் நிந்தையைச் சகிக்கிறேன் என்று அறியும்.

எரே 15:16 உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடன் அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது.

எரே 15:17 நான் பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை; உமது கரத்தினிமித்தம் தனித்து உட்கார்ந்தேன்; சலிப்பினால் என்னை நிரப்பினீர்.

எரே 15:18 என் நோவு நித்திய காலமாகவும், என் காயம் ஆறாத கொடிய புண்ணாகவும் இருப்பானேன்? நீர் எனக்கு நம்பப்படாத ஊற்றைப்போலவும், வற்றிப் போகிற ஜலத்தைப்போலவும் இருப்பீரோ?

"கர்த்தாவே, நீர் அதை அறிவீர்" - எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்குக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்ட வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறார்.

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடன் அவைகளை உட்கொண்டேன்" - எரேமியா கர்த்தருடைய வார்த்தையை நேசிக்கிறார். போஜனம் புசிப்பதுபோல எரேமியா கர்த்தருடைய வார்த்தையை உட்கொண்டு பேசுகிறார். தேவனுடைய ஊழியத்திற்காக எரேமியா பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறார். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே எரேமியாவைத் தீர்க்கதரிசன ஊழியத்திற்குப் பிரதிஷ்டை பண்ணியவர். ஆகையினால் அவருடைய நாமம் தனக்குத் தரிக்கப்பட்டிருப்பதாக இங்கு எரேமியா கூறுகிறார்.

15 அதிகாரம்

"நான் பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை" - எரேமியா பரியாசக்காரர் மத்தியில் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். ஜனங்களுடைய பாவங்களைக் குறித்து அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். ஆனால் அவர்களோ மனந்திருந்தாமல் எரேமியாவைப் பரியாசம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு அவர்கள் செவிகொடுக்கவில்லை. இதனிமித்தமாக எரேமியாவிற்கு அவர்கள்மீது வெறுப்பு உண்டாயிற்று. அவர்களுடைய கூட்டத்தில் அமராமல் எரேமியா தனித்து உட்கார்ந்திருக்கிறார்.

(11) தேவனுடைய பதிலுரை - துன்ப வேளையில் எரேமியா பாதுகாக்கப் படுவார்

எரே 15:19 இதினிமித்தம்: நீ திரும்பினால் நான் உன்னைச் திரும்பச் சீர்ப்படுத்துவேன்; என் முகத்துக்கு முன்பாக நிலைத்துமிருப்பாய்; நீ தீழ்ப்பானதினின்று விலையேறப் பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்; நீ அவர்களிடத்தில் திரும்பாமல், அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:20 உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:21 நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் என்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 35

"இதினிமித்தம்: நீ திரும்பினால் நான் உன்னைச் திரும்பச் சீர்ப்படுத்துவேன்......" (எரே 15:19-21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீ திரும்பினால் நான் உன்னைச் திரும்பச் சீர்ப்படுத்துவேன் (எரே 15:19).
2. நீ தீழ்ப்பானதினின்று விலையேறப் பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்.
3. உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன் (எரே 15:20).
4. அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்.
5. உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன்.
6. நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் (எரே 15:21).

கர்த்தர் எரேமியாவிற்கு இந்த வார்த்தைகளைக் கூறுகிறார். தன்னுடைய சத்துருக்களிடமிருந்து எரேமியாவிற்குக் கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்கும். தமக்காக எரேமியா அனுபவிக்கும் பாடுகளை கர்த்தர் நினைத்துப்பார்த்து, அவர் எரேமியாவை ஆபத்துக்களிலிருந்து விடுவிப்பார்.

"நீ அவர்களிடத்தில் திரும்பாமல்" - எரேமியா ஜனங்களிடத்திற்குப் போகவேண்டியதில்லை. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க ஜனங்களே எரேமியாவிடத்திற்கு வரவேண்டும். பொல்லாதவர்களும், பலவந்தர்களும் எரேமியாவிற்கு எதிராக எழும்பி நிற்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் கர்த்தர் எரேமியாவை அரணான வெண்கல அலங்கமாக்கியிருக்கிறார். எரேமியாவிற்கு விரோதமாக அவர்கள் யுத்தம் பண்ணினாலும், அவர்களால் எரேமியாவை மேற்கொள்ள முடியாது. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து விடுவிப்பதாக வாக்குப் பண்ணுகிறார். (எரே 15:20-21).

16 அதிகாரம்

16. திருமணமாகா தீர்க்கதரிசியின் அடையாளம் - (16:1-18)

(1) ஐந்து தடைகள் - பத்து காரணங்கள்

எரே 16:1 கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 16:2 நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்; இவ்விடத்தில் உனக்குக் குமாரரும் குமாரத்திகளும் இருக்க வேண்டாம் என்றார்.

எரே 16:3 இவ்விடத்திலே பிறக்கிற குமாரரையும் குமாரத்திகளையும், இந்த தேசத்தில் அவர்களைப் பெற்ற தாய்களையும் அவர்களைப் பெற்ற பிதாக்களையுங்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,

எரே 16:4 மகா கொடிய வியாதிகளால் சாவார்கள், அவர்களுக்காகப் புலம்புவாரும், அவர்களை அடக்கம் பண்ணுவாருமில்லை, நிலத்தின்மேல் எருவார்கள்; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் மடிந்துபோவார்கள்; அவர்களுடைய பிரேதம் ஆகாசத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.

எரே 16:5 ஆகையால் நீ துக்கவீட்டில் பிரவேசியாமலும், புலம்பிப்போகாமலும், அவர்களுக்குப் பரிதபிக்காமலும் இருப்பாயாக என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சமாதானத்தையும்,கிருபையையும், இரக்கத்தையும், இந்த ஜனத்தைவிட்டு எடுத்துப்போட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 16:6 இந்த தேசத்தில் பெரியோரும் சிறியோரும் சாவார்கள்; அவர்களை அடக்கம் பண்ணுவாரில்லை; அவர்களுக்காகப் புலம்புவாருமில்லை; அவர்கள் நிமித்தம் கீறிக்கொண்டு, மொட்டையடித்துக்கொள்வாருமில்லை.

எரே 16:7 செத்தவர்கள் நிமித்தம் உண்டான துக்கத்தை ஆற்ற அவர்களுக்கு அப்பம் பங்கிடப் படுவதுமில்லை; ஒருவனுடைய தகப்பனுக்காவது, ஒருவனுடைய தாய்க்காவது துக்கப்படுகிறவர் களுக்குத் தேற்றரவின் பாத்திரத்தைக் குடிக்கக் கொடுப்பாருமில்லை.

எரே 16:8 நீ அவர்களோடே புசித்துக் குடிக்க உட்காரும்படி விருந்துவீட்டிலும் பிரவேசியாயாக.

எரே 16:9 ஏனெனில், இதோ, இவ்விடத்திலே நான் உங்கள் கண்களுக்கு முன்பாகவும், உங்கள் நாட்களிலுமே, சந்தோஷத்தின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஒய பண்ணுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 36

“கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி,.....” (எரே 16:1-21) எரே 16:1-13 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 16:14-21 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. பெற்றோரும், பிள்ளைகளும் மகா கொடிய வியாதிகளால் சாவார்கள் (எரே 16:1-4).
2. அவர்களுக்காகப் புலம்புவார் இருக்கமாட்டார்கள். (எரே 16:4,6).
3. அவர்களை அடக்கம்பண்ணுவார் இருக்கமாட்டார்கள்.
4. பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அவர்கள் மடிந்துபோவார்கள். (எரே 16:4).
5. அவர்களுடைய பிரேதம் ஆகாசத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.
6. இந்த தேசத்தில் பெரியோரும் சிறியோரும் சாவார்கள் (எரே 16:6).

16 அதிகாரம்

7. செத்தவர்கள் நிமித்தம் உண்டான துக்கத்தை ஆற்ற அவர்களுக்கு அப்பம் பங்கிடப்படுவதுமில்லை (எரே 16:6-7).

8. துக்கப்படுகிறவர் களுக்குத் தேற்றரவின் பாத்திரத்தைக் குடிக்கக் கொடுப்பாருமில்லை. (எரே 16:7)

9. நீ அவர்களோடே புசித்துக் குடிக்க உட்காரும்படி விருந்துவீட்டில் பிரவேசிக்க மாட்டாய். (எரே 16:8).

10. இவ்விடத்திலே நான் உங்கள் கண்களுக்கு முன்பாகச் சந்தோஷத்தின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும் ஓயப்பண்ணுவேன். (எரே 16:9).

11. நீ ஜனங்களுக்கு தீர்க்கதரிசனம் கூறும்போது அவர்கள் உன்னிடத்தில் கேள்விகளைக் கேட்பார்கள். (எரே 16:10).

12. என் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் என்னை விட்டு விட்டார்களே என்று நீ அவர்களுக்குப் பதில் கூறுவாய். (எரே 16:11).

13. உங்களை இந்த தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன் (எரே 16:13).

14. அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்; அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை. (எரே 16:13).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம் பண்ணுவார்கள் (எரே 16:14-16).

2. நான் அவர்கள் பிதாக் களுக்குக்கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் (எரே 16:15).

3. நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன். அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்புவேன். (எரே 16:16).

4. முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன் (எரே 16:18).

5. புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங் களிலிருந்து உம்மிடத்தில் வருவார்கள். (எரே 16:19).

6. எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும் மாயையையும் கைப்பற்றினார்கள் என்று அறிக்கையிடுவார்கள்.

7. என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன் (எரே 16:21).

8. என் நாமம் யேகோவா என்று அறிந்துகொள்வார்கள்.

"நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்" - எருசலேமில் எரேமியா விவாகம் பண்ண வேண்டாமென்றும், பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டா மென்றும் அவருக்குக் கூறப்படுகிறது. ஏனெனில் இந்தப் பட்டணம் பிள்ளைகளை வளர்ப்பதற்கு நிலைத்திருக்காது. விரைவில் அழிந்துபோகும். (எரே 16:2-4).

"என் சமாதானத்தையும், கிருபையையும், இரக்கத்தையும், இந்த ஜனத்தைவிட்டு எடுத்துப்போட்டேன்" - கர்த்தர் ஏற்கெனவே எருசலேமை விட்டு தமது சமாதானத்தையும், கிருபையையும், இரக்கத்தையும் எடுத்துப் போட்டார். அந்தத் தேசத்தின்மீது பாபிலோனியர் மூலமாக விரைவில் அழிவு வரும். எரே 16:1-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்.

16 அதிகாரம்

மரித்தவர்களுக்காகச் செய்யப்படும் பழக்கம்

1. புலம்பல் பாடுவது. எரே 9:17)
2. தங்களைக் கீறிக்கொள்ளுதல். (எரே 16:6; லேவி 19:28)
3. தங்களை மொட்டையடித்துக் கொள்ளுதல். (எரே 16:6; உபா14:1).
4. துக்கத்தை ஆற்ற அவர்களுக்கு அப்பம் பங்கிடப்படுவது. (எரே 16:7).
5. துக்கப்படுகிறவர் களுக்குத் தேற்றரவின் பாத்திரத்தைக் குடிக்கக்கொடுப்பது. (எரே 16:7).
6. துக்கநாள் முடிந்த பின்பு விருந்து செய்தல். (எரே 16:8)

(2) யூதாவுக்கு இது பொருந்தும் - பத்து பாவங்கள் - நியாயத்தீர்ப்பு - (ஏசா 1:4)

எரே 16:10 நீ இந்த வார்த்தைகளை யெல்லாம் இந்த ஜனத்துக்கு அறிவிக்கும் போது, அவர்கள் உன்னை நோக்கி: கர்த்தர் எங்கள்மேல் இத்தனை பெரிய தீங்கைக் கூறுவானேனென்றும், நாங்கள் செய்த அக்கிரமம் என்ன? நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகச் செய்த எங்கள் பாவம் என்ன? என்றும் கேட்பார்களானால்,

எரே 16:11 நீ அவர்களை நோக்கி: உங்கள் பிதாக்கள் என்னைவிட்டு அந்நிய தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொண்டு, என் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளாமல் என்னை விட்டு விட்டார்களே.

எரே 16:12 நீங்கள் உங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக கேடாக நடந்தீர்களே; இதோ, உங்களில் ஒவ்வொருவரும் என் சொல்லைக் கேளாதபடிக்கு, உங்கள் பொல்லாத இருதய கடினத்தின்படி நடக்கிறீர்கள்.

எரே 16:13 ஆதலால், உங்களை இந்த தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன்; அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்; அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை.

எரே 16:14 ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல்,

எரே 16:15 இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக்கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 16:16 இதோ, நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள்; அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும், எல்லாக் குன்றுகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள்.

எரே 16:17 என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின் மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக் கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை.

16 அதிகாரம்

எரே 16:18 முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன்; அவர்கள் என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தைச் சீயென்று அருவருக்கப் படத்தக்க தங்கள் காரியங்களின் நாற்றமான விக்கிரகங்களினாலே நிரப்பினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 16:19 என் பெலனும், என் கோட்டையும், நெருக்கப்படுகிற நாளில் என் அடைக்கலமுமாகிய கர்த்தாவே, புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங் களிலிருந்து உம்மிடத்தில் வந்து: மெய்யாகவே, எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும் மாயையையும் கைப்பற்றினார்கள் என்பார்கள்.

எரே 16:20 மனுஷன் தனக்கு தேவர்களை உண்டுபண்ணலாமோ? அவைகள் தேவர்கள் அல்லவே.

எரே 16:21 ஆதலால், இதோ, இப்பொழுது நான் அவர்களுக்குத் தெரியப் பண்ணுவேன்; என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப் பண்ணுவேன்; என் நாமம் யேகோவா என்று அறிந்துகொள்வார்கள்.

"என்னை விட்டுவிட்டார்களே" - யூதா தேசத்தார்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்புவதற்குக் கர்த்தர் மறுபடியும் இங்கு அதற்கான காரணத்தைக் கூறுகிறார். (எரே 16:11-12).

யூதாவின் பாவங்கள்

1. கர்த்தரை விட்டுவிட்டார்கள்.(எரே 16:11)
2. அந்நியதேவர்களைப்பின்பற்றினார்கள்.
3. அவர்களைச் சேவித்தார்கள்.
4. அவர்களைப் பணிந்துகொண்டார்கள்.
5. கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவில்லை.
6. தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக கேடாக நடந்தார்கள். (எரே 16:12).
7. ஒவ்வொருவரும் கர்த்தருடைய சொல்லைக் கேளாதபடிக்கு, தங்கள் பொல்லாத இருதயக் கடினத்தின்படி நடந்தார்கள்.
8. கர்த்தருடைய தேசத்தைத் தீட்டுப்படுத்தினார்கள். (எரே 16:18).
9. கர்த்தருடைய சுதந்தரத்தைத் தங்கள் காரியங்களின் நாற்றமான விக்கிரகங்களினாலே நிரப்பினார்கள்.

"அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்" - யூதா தேசத்தார் அந்நிய தேவர்களைச் சேவித்ததினால் அவர்கள் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போனார்கள். கர்த்தருடைய கிருபை அவர்கள் மீது இராது. (எரே 16:13) அந்நிய தேவர்கள் அவர்களை இரட்சிக்காது. அவர்களுக்குப் பல வியாதிகள் வரும். இஸ்ரவேல் தேசத்தில் விக்கிர காராதனையைப் பற்றி சிறையிருப்புக்குப் பின்பு அதிகமாகக் கூறப்படவில்லை. இயேசு கிறிஸ்துவோ அப்போஸ்தலர்களோ தம்முடைய ஊழியங்களில் விக்கிரகங்களைக் குறித்து அதிகமாகக் குறிப்பிடவில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் புறஜாதியார் மத்தியிலேயேவிக்கிரகாராதனை அதிகமாகக் காணப்பட்டது. (அப் 15:29; அப் 17:16; ரோமர் 2:22; 1கொரி 5:11,1கொரி 6:9; 1கொரி 8:1-10,1கொரி 10:7, 14,19,28; 1கொரி 12:2; 1தெச 1:9).

"இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும்" - சிறையிருப்புக்குப் போன இஸ்ரவேல் புத்திரர்கள் திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். வருங்காலத்திலும் அவர்கள் பாலஸ்தீன தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது நிறைவேறும். (ஏசா 11:10-12, மத் 24:31).

எரேமியா - தொகுப்புரை

16 அதிகாரம்

"மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன்" - மீன் பிடிக்கிறவர்களும், வேட்டைக்காரரும் தாங்கள் பிடித்த மீன்களையும், மிருகங்களையும் உடனடியாகக் கொன்றுபோடுவார்கள். மீதமுள்ள மீன்களையும், மிருகங்களையும் அவை வளரவேண்டிய இடங்களில் விட்டுவிட்டு, அவற்றைப் பலுகிப்பெருகச் செய்வார்கள். (மத் 24:31; ஏசா 66:19-21) அது போலவேதேவதூதர்களும், புறஜாதியாரும் பூமியிலுள்ள யூதர்களைப் பிடித்து அவர்களுடைய சொந்த பாலஸ்தீன தேசத்திற்கு அனுப்பி வைப்பார்கள். மேசியாவின்கீழ் யூதர்கள் நித்திய தேசமாக இருப்பார்கள். (ஏசா 11:10-12)

"முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன்" - நித்திய இஸ்ரவேலை மீட்கும்போது கர்த்தர் முதலாவதாக நீதியைச் சரிக்கட்டுவார். இதனால் இஸ்ரவேல் புத்திரர்கள் முழு இருதயத்தோடு கர்த்தரிடத்திற்குத் திரும்பி வருவார்கள். (எரே 16:18) வருங்கால உபத்திரவக் காலத்திலும், மூன்றில் ஒருபங்கு ஜனங்கள் மனந்திருந்தி, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரிடத்தில் திரும்பி வருவார்கள். (சக 12:10-13:1,9; சக 14:1-15; ரோமர் 11:25-29).

நெருக்கப்படுகிற நாளில் கர்த்தர் இருக்கும் விதம்

1. என் பெலன்
2. என் கோட்டை
3. என் அடைக்கலம்

"புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உம்மிடத்தில் வந்து" - இஸ்ரவேல் ஜனத்தாரோடு சேர்ந்து புறஜாதியாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இஸ்ரவேல் தேசத்தார் மேசியாவின்கீழ் நித்திய ராஜ்யமாகக் கூட்டிச் சேர்க்கப்படும்போது இந்த ஆசீர்வாதம் புறஜாதியாருக்கு உண்டாகும். (ஏசா 11:10; ஏசா 42:1,6; ஏசா 49:6,22; ஏசா 54:3; ஏசா 60:3-5,11,16; ஏசா 61:6-9; ஏசா 62:2; ஏசா 66:12,19; மல் 1:11).

"மெய்யாகவே, எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும் மாயையையும் கைப்பற்றினார்கள்" - புறஜாதியாரும், இஸ்ரவேல் புத்திரரும் இதை அறிக்கை செய்வார்கள். (ரோமர் 1:18-32). இஸ்ரவேல் புத்திரரோடு புறஜாதியாரும் கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டும். (எரே 16:21).

17 அதிகாரம்

(3) யூதாவின் அழிக்கமுடியாத பாவம்

எரே 17:1 யூதாவின் பாவம் இரும்பெழுத்தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டு, அவர்களுடைய இருதயத்தின் பலகைகளிலும் உங்கள் பலிபீடங்களுடைய கொம்புகளிலும் பதிந்திருக்கிறது.

எரே 17:2 உயர்ந்த மேடுகளின்மேல் பச்சையான மரங்களண்டையில் இருந்த அவர்களுடைய பலிபீடங்களையும் அவர்களுடைய தோப்புகளையும் அவர்கள் பிள்ளைகள் நினைக்கும்படி இப்படிச் செய்திருக்கிறது.

எரே 17:3 வயல்நிலத்திலுள்ள என் மலையே, நீ உன் எல்லைகளிலெல்லாம் செய்த பாவத்தினிமித்தம் நான் உன் ஆஸ்தியையும், உன் எல்லாப் பொக்கிஷங்களையும், உன் மேடைகளையுங் கூடச் சூறையிடுவிப்பேன்.

எரே 17:4 அப்படி நான் உனக்குக் கொடுத்த சுதந்தரத்தை நீதானே விட்டுவிடுவாய்; நீ அறியாத தேசத்தில் உன்னை உன் சத்துருக்களுக்கு அடிமையுமாக்குவேன்; என்றென்றைக்கும் எரியத்தக்க என் கோபத்தின் அக்கினியை மூட்டிவிட்டீர்களே.

தீர்க்கதரிசன எண் - 37

"யூதாவின் பாவம் இரும்பெழுத்தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டு......" (எரே 17:1-12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. உன்எல்லாப் பொக்கிஷங்களையும் சூறையிடுவிப்பேன் (எரே 17:3).

2. உன்மேடைகளைச் சூறையிடுவிப்பேன்.

3. நான் உனக்குக் கொடுத்த சுதந்தரத்தை நீதானே விட்டுவிடுவாய் (எரே 17:4).

4. நீ அறியாத தேசத்தில் உன்னை உன் சத்துருக்களுக்கு அடிமையாக்குவேன்.

5. ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதாகக் கொடுப்பேன். (எரே 17:10).

யூதாவின் பாவம் எழுதப்பட்டிருக்கும் இடங்கள்

1. இருதயத்தின் பலகைகள்

2. பலிபீடங்களுடைய கொம்புகள்

"பலிபீடங்கள்" - இந்தப் பலிபீடம் கர்த்தருடைய பலிபீடமல்ல. இவை விக்கிரகங்களின் பலிபீடங்களாகும். யோசியா இந்தப் பலிபீடங்களையெல்லாம் அழித்துப் போட்டான். ஆனால் யோயாக்கீமோ தன்னுடைய 11 வருஷ ஆட்சிக்காலத்தில் அவைகளை மறுபடியும் கட்டுவதற்கு அனுமதித்தான். (1இராஜா 23:37).

"வயல்நிலத்திலுள்ள என் மலையே" - இது எருசலேமைக் குறிக்கும் வாக்கியமாகும். (எரே 21:13, எரே 17:3=ஏசா 39:4-7).

"நீ அறியாத தேசத்தில் உன்னை உன் சத்துருக்களுக்கு அடிமையுமாக்குவேன்" - இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தார்கள். கர்த்தர் அவர்களை அங்கிருந்து விடுவித்தார். இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களினிமித்தமாகக் கர்த்தர் அவர்களை மறுபடியும் அடிமைத்தனத்திற்கு உட்படுத்திவிடுகிறார்.

"என்றென்றைக்கும் எரியத்தக்க என் கோபத்தின் அக்கினியை மூட்டிவிட்டீர்களே" - இஸ்ரவேல் புத்திரர் நரகத்தின் அக்கினியை மூட்டி விடுவதாகக் கர்த்தர் அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார். (உபா 32:22; ஏசா 33:14) துன்மார்க்கரும், சாத்தானும், விழுந்துபோன தூதர்களும், அவர்களுக்கென்று நியமிக்கப் பட்டிருக்கும் அவியாத அக்கினியில்போய் விழுவார்கள். (மத் 25:41).

17 அதிகாரம்

(4) உண்மையான நம்பிக்கையும் தவறான நம்பிக்கையும் - *(ஏசா 8:9-13)*

எரே 17:5 மனுஷர்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 17:6 அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப் போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடி யில்லாத உவர் நிலத்திலும் தங்குவான்.

எரே 17:7 கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

எரே 17:8 அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக் கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.

எரே 17:9 எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?

எரே 17:10 கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும் படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதிக் கிறவருமாயிருக்கிறேன்.

எரே 17:11 அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங் காத்தும், குஞ்சுபொரிக்காமற் போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்.

எரே 17:12 எங்கள் பரிசுத்த ஸ்தானம் ஆதிமுதற்கொண்டு உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமாயிருக்கிறது.

"சபிக்கப்பட்டவன்" - (எரே 11:3)

சபிக்கப்பட்டவனின் சுபாவம்

1. மனுஷர்மேல் நம்பிக்கை வைக்கிறவன்.
2. மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொள்கிறவன்.
3. கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ளவன்.

மனுஷர்மேல் நம்பிக்கை வைக்கிறவனின் முடிவு

1. அவன் அந்தரவெளியில் கறளையாய்ப் போன செடியைப்போலிருக்கிறான்.
2. நன்மைவருகிறதைக் காணாமல் போகிறான்.
3. வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர் நிலத்திலும் தங்குகிறான்.

பாக்கியவானின் சுபாவம்

1. கர்த்தர்மேல் நம்பிக்கைவைக்கிறான்.
2. கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறான்.

கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கிறவனுக்கு ஆசீர்வாதம்

1. அவன் தண்ணீரண்டையில் நாட்டப்பட்ட மரத்தைப்போலிருப்பான்.
2. கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிற மரத்தைப்போலிருப்பான்.
3. உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இருக்கும் மரத்தைப் போலிருப்பான்.

17 அதிகாரம்

4. இலை பச்சையாயிருக்கிற மரத்தைப் போலிருப்பான்

5. மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிற மரத்தைப்போலிருப்பான்.

இருதயத்தைப் பற்றிய காரியம்

1. எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளது.

2. மகா கேடுள்ளது.

"இருதயத்தை ஆராய்கிறவர்" - எரே 17:9 ஆவது வசனத்தில் இருதயத்தை அறியத் தக்கவன் யார் என்னும் கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. கர்த்தரே இருதயத்தை அறிந்திருக்கிறவர். ஏனெனில்

1. அவர் இருதயத்தை ஆராய்கிறார்.

2. அவர் உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறார்.

"அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன்" - இவர்கள் கவுதாரியைப் போலிருக்கிறார்கள். இவை முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சுபொரிக்காமற்போகும். இதுபோலவே அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவர்களும் அவற்றைத் தங்கள் ஜீவியத்தில் இழந்து போவார்கள்.

(5) எரேமியாவின் ஜெபம்

எரே 17:13 இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய கர்த்தாவே, உம்மைவிட்டு விலகுகிற யாவரும் வெட்கப்படுவார்கள்; அவர்கள் ஜீவனுள்ள தண்ணீரின் ஊற்றாகிய கர்த்தரை விட்டு விலகிப்போனபடியால், உம்மைவிட்டு அகன்றுபோகிறவர்களின் பெயர் புழுதியில் எழுதப்படும்.

எரே 17:14 கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னை இரட்சியும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; தேவரீரே என் துதி.

எரே 17:15 இதோ, இவர்கள் என்னைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தை எங்கே? அது இப்பொழுது வரட்டும் என்கிறார்கள்.

எரே 17:16 நானோ உம்மைப் பின்பற்றுகிற மேய்ப்பன், இதற்கு நான் மிஞ்சி நடக்கவில்லை; ஆபத்துநாளை விரும்புகிறதுமில்லையென்று நீர் அறிவீர்; என் உதடுகளிலிருந்து புறப்பட்டது உமக்கு முன்பாகச் செவ்வையாயிருந்தது.

எரே 17:17 நீர் எனக்குப் பயங்கரமாயிராதேயும்; தீங்குநாளில் நீரே என் அடைக்கலம்.

எரே 17:18 நான் வெட்கப்படாமல், என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் வெட்கப்படுவார்களாக; நான் கலங்காமல், அவர்கள் கலங்குவார்களாக; தேவரீர் தீங்கு நாளை அவர்கள்மேல் வரப்பண்ணி, இரட்டிப்பான நொறுக்குதலால் அவர்களை நொறுக்கும்.

"இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய கர்த்தாவே" - இரண்டாம் முறையாகக் கர்த்தர் இஸ்ரவேலின் நம்பிக்கையாக இருக்கிறவர் என்று இங்கு அழைக்கப்பட்டிருக்கிறார். (எரே 17:13; எரே 14:8; எரே 50:7).

யூதாவின் பாவங்கள்

1. கர்த்தரை விட்டு விலகுகிறார்கள். (எரே 17:13)

2. கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து கேள்விகள் கேட்கிறார்கள். (எரே 17:15)

3. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்துகிறார்கள். (எரே 17:18)

4. ஓய்வுநாளில் சுமைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். (எரே 17:21)

5. தேவனுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள். (எரே 17:23)

6. கர்த்தருடைய வார்த்தைக்குத் தங்கள் செவிகளைச் சாயாமல் இருக்கிறார்கள்.

17 அதிகாரம்

7. தங்கள் கழுத்தைக் கடினப் படுத்துகிறார்கள்.

8. புத்தியை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள்.

"உம்மைவிட்டு அகன்றுபோகிறவர்களின் பெயர் புழுதியில் எழுதப்படும்" - கர்த்தரை நம்புகிறவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்படும். கர்த்தரைவிட்டு விலகிப் போகிறவர்களின் பெயர்கள் புழுதியில் எழுதப்படும். அதுவிரைவில் அழிந்துபோகும்.

சுவிசேஷத்தின் இரட்டை ஆசீர்வாதம்

1. சரீர சுகமாதல்

2. இரட்சிப்பு (மத் 13:13-15; யாக் 5:14-16).

எரேமியாவின் சாட்சி

1. நானோ உம்மைப் பின்பற்றுகிற மேய்ப்பன் (எரே 17:16).

2. யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு வரும் ஆபத்துநாளை நான் விரும்புகிறதில்லை.

3. என் உதடுகளிலிருந்து புறப்பட்டது உமக்கு முன்பாகச் செவ்வையாயிருக்கிறது.

4. தீங்குநாளில் நீரே என் அடைக்கலம். (எரே 17:17).

கர்த்தரிடம் எரேமியா ஏறெடுக்கும் விண்ணப்பம்

1. என்னைக் குணமாக்கும் (எரே 17:14).

2. என்னை இரட்சியும்.

3. நீர் எனக்குப் பயங்கரமாயிராதேயும் (எரே 17:17).

4. நான் வெட்கப்படாமல் இருப்பேனாக. (எரே 17:18).

5. என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் வெட்கப்படுவார்களாக

6. நான் கலங்காமல் இருப்பேனாக.

7. அவர்கள் கலங்குவார்களாக.

8. தீங்கு நாளை அவர்கள்மேல் வரப்பண்ணும்.

9. இரட்டிப்பான நொறுக்குதலால் அவர்களை நொறுக்கும்.

17. ஓய்வு நாளைக் குறித்த செய்தி

(1) ஐந்து கட்டளைகள்

எரே 17:19 கர்த்தர் என்னை நோக்கி: நீ போய் யூதாவின் ராஜாக்கள் வரத்தும் போக்குமாயிருக்கிற இந்த ஜனங்களின் புத்திரருடைய வாசலிலும் எருசலேமின் எல்லா வாசல்களிலும் நின்றுகொண்டு,

எரே 17:20 அவர்களுடனே சொல்ல வேண்டியது என்னவென்றால்: இந்த வாசல்களில் பிரவேசிக்கிற யூதாவின் ராஜாக்களும், எல்லா யூதரும், எருசலேமின் எல்லாக் குடிகளுமாகிய நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 17:21 நீங்கள் ஓய்வுநாளில் சுமைகளை எடுத்து, அவைகளை எருசலேமின் வாசல்களுக்குள் கொண்டு வராதபடிக்கும்,

எரே 17:22 ஓய்வுநாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகாதபடிக்கும், ஒரு வேலையையும் செய்யாதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருந்து, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடி ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 17:23 அவர்களோ கேளாமலும் தங்கள் செவிகளைச் சாயாமலும் போய், கேளாதபடிக்கும் புத்தியை ஏற்றுக் கொள்ளாதபடிக்கும், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள்.

எரேமியா - தொகுப்புரை

17 அதிகாரம்

எரே 17 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. வாசல்களில் நின்றுகொண்டு சொல். (எரே 17:19).
2. கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். (எரே 17:20).
3. ஓய்வுநாளில் சுமைகளை எடுத்துக் கொண்டு வராதிருங்கள். (எரே 17:21)
4. அவைகளை எருசலேமின் வாசல்களுக்குள் கொண்டு வராதிருங்கள்.
5. எச்சரிக்கையாயிருங்கள். (எரே 17:22).
6. ஓய்வுநாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகாதிருங்கள்.
7. ஓய்வுநாளில் ஒரு வேலையையும் செய்யாதிருங்கள்.
8. ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குங்கள்.

"இந்த ஜனங்களின் புத்திரருடைய வாசல்" - இது எருசலேம் பட்டணத்தின் பிரதான வாசலாக இருக்கலாம். அல்லது தேவாலயத்தின் பிராகாரத்திற்குச் செல்லும் முக்கியமான நுழை வாசலாக இருக்கலாம். இயேசு கிறிஸ்துவின் நாட்களில் இருந்ததுபோல அக்காலத்திலும் அங்கு போவோரும், வருவோருமாக ஏராளமான ஜனங்கள் இருந்திருப்பார்கள்.

"எருசலேமின் எல்லா வாசல்கள்" - சிறையிருப்புக்குப் பின்பு பட்டணத்தில் 12 வாசல்கள் இருந்தன. ஆகையினால் சிறை யிருப்புக்கு முன்பும் அங்கு 12 வாசல்கள் இருந்திருக்க வேண்டும். எரேமியா ஒவ்வொரு வாசலுக்கும் சென்று அங்கு பிரசங்கம் செய்ய வேண்டும். (நெகே 2:13)

ஜனங்களின் பிரிவுகள்

1. ராஜாக்களும், ஆளுகை செய்கிறவர்களும்
2. எருசலேமிற்கு வெளியே வசிக்கும் எல்லா யூதர்கள்
3. எருசலேமின் எல்லாக் குடிகள்

தீர்க்கதரிசன எண் - 38

"நீங்கள் ஓய்வுநாளில் சுமைகளை எடுத்து....." (எரே 17:21-27) எரே 17:27 ஆவது வசனம் நிறைவேறிற்று. எரே 17:21-26 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் அதின் வாசல்களில் தீக்கொளுத்துவேன் (எரே 17:27).
2. அது எருசலேமின் அரமனைகளைப் பட்சிக்கும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களும்.... இந்த நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள் (எரே 17:25)
2. எல்லா ஜனங்களும் பட்டணத்திற்குள் வருவார்கள். எல்லா ஜனங்கள் மத்தியிலும் சமாதானம் இருக்கும்.
3. இந்த நகரம் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும்.
4. எல்லா இடங்களிலுமிருந்து கர்த்தருக்குச் செலுத்தும் பலிகளைக் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருவார்கள். (எரே 17:26).

இந்தத் தீர்க்கதரிசனம் நிபந்தனைக்குட்பட்டு நிறைவேறும். இதற்குக் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகள் நிறைவேறினால் ஆசீர்வாதங்கள் உண்டாகும். (எரே 17:24-26) நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் எருசலேமின்மீது நியாயத்தீர்ப்பு வரும். (எரே 17:27). யூதா தேசத்தாரின் கீழ்ப்படியாமையினால் எரே 17:27 ஆவது வசனம் நிறைவேறிற்று. இஸ்ரவேல் புத்திரர் மேசியாவின் காலத்தில் மனந்திரும்பும் போது எரே 17:24-26 ஆகிய வசனங்கள் நிறைவேறும். (ஏசா 9:6-7; ஏசா 59:20-31; சக 12:10-13:1; சக 14:1-21; அப் 15:13-18; ரோமர் 11:25-29; வெளி 11:15; வெளி 20:1-10).

எரேமியா - தொகுப்புரை

17 அதிகாரம்

"எச்சரிக்கையாயிருந்து" - எரே 17:19 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

"நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடி" - யாத் 16 ஆவது அதிகாரத்திலிருந்து யாத் 20 ஆவது அதிகாரம் வரையிலும் மோசேயின் பிரமாணத்தில் ஓய்வுநாளை ஆசரிப்பது சம்பந்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் பின்பு ஒவ்வொரு காலத்திலும் இந்தப் பிரமாணம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. தீர்க்கதரிசிகளும், ஓய்வுநாள் பிரமாணத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். (எரே 17:21-27; ஏசா 58:2,6,13;எசே 20:12-24;எசே 22:8,26; எசே 23:38). இறுதியில், ஓய்வுநாள் பிரமாணத்தை அகற்றிப்போடுவதற்குத் தேவன் தீர்மானம் பண்ணினார். (ஓசி 2:11) ஆகையினால் புதிய ஏற்பாட்டில் ஒரு குறிப்பிட்ட நாளில் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும் என்னும் பிரமாணம் வலியுறுத்தப்படவில்லை. ஒவ்வொரு நபரும் தனக்குப் பிரியமான நாளில் ஓய்ந்திருக்கலாம். ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17).

"அவர்களோ கேளாமலும் தங்கள் செவிகளைச் சாயாமலும் போய்" - இது தொடர்பான பாவங்கள் எரே 17:13 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள்" - இஸ்ரவேல் புத்திரரின் கடினக் கழுத்தைப் பற்றி 3 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (எரே 17:23; உபா 31:27;சங் 75:5). இதுபோக கழுத்தைக் கடினப்படுத்துதல், இருதயத்தைக் கடினப் படுத்துதல் தொடர்பாக கூறப்பட்டிருக்கும் வசனங்களின் விவரம்: **"stiffened"** (2நாளா 36:13), **"stiffhearted"** (எசே 2:4), **"stiffnecked"** (யாத் 32:9; யாத் 33:3-5; யாத் 34:9; உபா 9:6-13; உபா 10:16; 2நாளா 30:8; அப் 7:31).

(2) நிபந்தனையுள்ள ஆறு ஆசீர்வாதங்கள் - (ஏசா 1:19)

எரே 17:24 நீங்களோவெனில், ஓய்வுநாளில் இந்த நகரத்தின் வாசல்களுக்குள்ளே சுமையைக் கொண்டு வராதபடிக்கும், ஓய்வுநாளில் ஒரு வேலையையும் செய்யாமல் அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் என் சொல்லைக் கேட்பீர்களானால்,

எரே 17:25 அப்பொழுது தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக் கிறவர்களும், இரதங்களின்மேலும் குதிரைகளின் மேலும் ஏறுகிறவர்களுமாகிய ராஜாக்களும் ராஜகுமாரர்களும், அவர்கள் பிரபுக்களும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் இந்த நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள்; இந்த நகரமும் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும்.

எரே 17:26 யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் சுற்றுப்புறமான ஊர்களிலும், பென்யமீன் தேசத்திலும், பள்ளத்தாக்கான சீமையிலும், மலைநாட்டிலும், தெற்கிலுமிருந்து ஜனங்கள் சர்வாங்க தகனங்களையும், பலிகளையும், போஜன பலிகளையும், தூபவர்க்கங்களையும், ஸ்தோத்திரபலி களையும் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருவார்கள்.

ஆசீர்வதிக்கப்படுவதற்கு நிபந்தனைகள்

1. கர்த்தருடைய சொல்லைக் கேட்க வேண்டும்.
2. ஓய்வுநாளில் இந்த நகரத்தின் வாசல்களுக்குள்ளே சுமையைக் கொண்டுவரக்கூடாது.
3. ஓய்வுநாளில் ஒரு வேலையையும் செய்யக் கூடாது.
4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கவேண்டும்.

எரேமியா - தொகுப்புரை

17 அதிகாரம்

"இந்த நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள்" - இந்தத் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளையெல்லாம் யூதா தேசத்தார் நிறைவேற்றினால் தேசத்தில் விக்கிர காராதனை இருக்காது. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்கள் இருக்க மாட்டார்கள். அங்கு நீதி நிலைத்திருக்கும். ராஜாக்களும் ராஜகுமாரர்களும், அவர்கள் பிரபுக்களும் எருசலேம் நகரத்தில் நித்திய காலமாக இருப்பார்கள். அங்கு சமாதானமும், சம்பூரணமும் உண்டாயிருக்கும். (எரே 17:25-26; ஏசா 2:2-4; ஏசா 9:6-7; ஏசா 59:20-21; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5).

"இந்த நகரமும் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும் எருசலேம் நகரம் தலைநகரமாகவும், நித்திய நகரமாகவும் கட்டப்படும். (ஏசா 2:2-4; எசே 48:30-35).

ஆராதிக்கிறவர்கள் பல இடங்களிலிருந்து வருவார்கள். அந்த இடங்களின் விவரம்:

1. யூதாவின் பட்டணங்கள்
2. எருசலேமின் சுற்றுப்புறமான ஊர்கள்
3. பென்யமீன் தேசம்
4. பள்ளத்தாக்கான சீமை - பெலிஸ்தியா. இது எருசலேமிற்கும், மத்தியதரைக் கடலுக்கும் நடுவிலுள்ளது.
5. மலைநாடு
6. தெற்கு தேசம்

இவர்களோடு பூமியின் எல்லாப் பாகங் களிலிருந்து புறஜாதியாரும் வருவார்கள். (எரே 16:19; ஏசா 2:2-4; ஏசா 11:10; ஏசா 60:3-16;ஏசா 66:12-21;சக 14:16-21)." கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வருவார்கள்" - ஜனங்கள் சர்வாங்க தகனங்களையும், பலிகளையும், போஜனபலி களையும், தூபவர்க்கங்களையும், ஸ்தோத்திர பலிகளையும் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவருவார்கள். இது ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் (ஏசா 56:7; எசே 45:17; சக 14:16-21) புதிய பூமியிலும் நடைபெறும் சம்பவமாகும்.(ஏசா 66:22-24; எசே 46:14).

(3) மூன்று அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 17:27 நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் ஓய்வுநாளிலே சுமையை எருசலேமின் வாசல்களுக்குள் எடுத்து வராதிருக்கும்படிக்கும், என் சொல்லைக் கேளாமற்போனீர்களாகில், நான் அதின் வாசல்களில் தீக்கொளுத்துவேன்; அது எருசலேமின் அரமனைகளைப் பட்சித்தும், அவிந்து போகாதிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அது எருசலேமின் அரமனைகளைப் பட்சித்தும், அவிந்து போகாதிருக்கும்" - கர்த்தர் இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக அவர்களைச் சபிக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதம் வரும். (எரே 17:24-26) கீழ்ப்படிய வில்லையென்றால் சாபம் வரும்.

18 அதிகாரம்

18. குயவன் வீட்டின் அடையாளம்

(1) குயவனுடைய கிரியை

எரே 18:1 கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 18:2 நீ எழுந்து, குயவன் வீட்டிற்குப் போ; அங்கே என் வார்த்தைகளை உனக்குத் தெரிவிப்பேன் என்றார்.

எரே 18:3 அப்படியே நான் குயவன் வீட்டிற்குப் போனேன்; இதோ, அவன் திரிகையினாலே வனைந்து கொண்டிருந்தான்.

எரே 18:4 குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்.

தீர்க்கதரிசன எண் - 39

"கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வசனம்............" (எரே 18:1-11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்பு

1. நான் உங்களுக்கு விரோதமாக ஒரு தீங்கை உருப்படுத்தி, உங்களுக்கு விரோதமாக ஒரு காரியத்தை யோசிக்கிறேன் (எரே 18:11)

"குயவன் வீடு" - குயவர்கள் மண்பாத்திரம் செய்யும் இடம். இது எருசலேமின் தென்பகுதியில் இன்னோம் பள்ளத்தாக்கிற்கு அப்பால் உள்ளது. (சக 11:13; மத் 27:10).

"திரிகை" - குயவர்கள் பாத்திரத்தை வனையும்போது இரண்டு திரிகைகளைப் பயன்படுத்துவார்கள். திரிகைகளைச் சுற்றி தங்கள் விரல்களால் தங்களுடைய விருப்பத்தின் பிரகாரம் மண்பாத்திரங்களைச் செய்வார்கள்.

"மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப் போயிற்று" - குயவர்கள் மண்பாண்டத்தை வனையும்போது அது கெட்டுப்போனால் அந்த மண்ணைத் தூக்கியெறிந்துவிடமாட்டார்கள். அதை மறுபடியும் மிதித்து, சேறாக்கி, திரிகையில் வைத்து மறுபடியும் மண்பாண்டமாக வனைவார்கள். தங்களுக்கு விரும்பிய பாத்திரங்கள் கிடைக்கும் வரையிலும் அவர்கள் தொடர்ந்து இதுபோன்று செய்து கொண்டிருப்பார்கள். கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரரைக் குயவன் மண்பாண்டத்தை வனைவது போல வனைந்து கொண்டிருக்கிறார். தமக்கு விருப்பமான ஜனங்களாக அவர்கள் உருவாகும் வரையிலும் அவர்களைத் திரும்பத் திரும்ப வனைந்துகொண்டிருக்கிறார். (எரே 18:4-6).

(2) யூதாவுக்கு இது பொருந்தும்

(அ) தேவனுடைய சர்வ வல்லமை

எரே 18:5 அப்பொழுது கர்த்தருடைய வசனம் எனக்கு உண்டாகி, அவர்:

எரே 18:6 இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக்கூடாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்.

எரே 18:7 பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில்,

எரே 18:8 நான் விரோதமாய்ப் பேசின அந்தஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாத படிக்கு, மனம் மாறுவேன்.

18 அதிகாரம்

எரே 18:9 கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு.

எரே 18:10 அவர்கள் என் சத்தத்தைக் கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாத படிக்கு, மனம் மாறுவேன்.

"இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக்கூடாதோ" - கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாருக்குத் தமது தீர்க்கதரிசியின் மூலமாக இரக்கத்தை வெளிப்படுத்தினார். நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. எருசலேமில் இஸ்ரவேல் தேசத்தின் ராஜாக்கள் நீண்ட நாட்களாக ஆட்சி புரிவதற்கும், எருசலேம் நகரத்தில் ஜனங்கள் எப்போதும் தங்கியிருப்பதற்கும் கர்த்தர் அவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தார். (எரே 17:24-26). கர்த்தருடைய இரக்கத்தை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். யோசியாவின் காலத்தில் ஏற்பட்ட ஆவிக்குரிய மறுமலர்ச்சி தொடர வேண்டும். ஆனால் யோயாக்கீம் ராஜாவான போது அவன் எல்லாவிதமான பாவங்களையும் செய்தான். (2இராஜா 23:37) இதனால் இஸ்ரவேல் தேசத்தின்மீது கர்த்தருடைய சாபம் வந்தது.

கர்த்தர் அவர்களை இன்னும் கைவிடவில்லை. ஒரு குயவனைப்போல தாம் இஸ்ரவேல் புத்திரரை மறுபடியும் வனைய விரும்புவதாகக் கர்த்தர் அறிவிக்கிறார். (எரே 18:1-11) ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ அது கூடாத காரியம், நாங்கள் எங்கள் யோசனைகளின்படியே நடந்து, அவரவர் தம்தம் பொல்லாத இருதயத்தினுடைய கடினத்தின்படியே செய்வோம் என்கிறார்கள். (எரே 18:12). இதனால் இஸ்ரவேல் புத்திரர்மீது கர்த்தருடைய கோபம் வெளிப்படுகிறது. ஒரு கலசத்தை உடைத்துப்போடுவதுபோல யூதா ஜனத்தையும் எருசலேம் நகரத்தையும் உடைத்துப்போடப் போவதாகக் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். (எரே 19:1-15)

குயவன் வீட்டிற்குப்போய் அவனுடைய கிரியைகளைக் கவனிக்குமாறு கர்த்தர் எரேமியாவிற்குக் கட்டளையிடுகிறார். குயவன் வனையும் மண்பாண்டம் கெட்டுப் போனால், அதை அவன் மறுபடியும் வனைந்து, திருத்தமாகச் செய்கிறான். கெட்டுப்போன மண்பாண்டம் மறுபடியும் திருத்தமாகச் செய்யப்படுவதற்கு வாய்ப்பு உண்டாகிறது. அதுபோலவே யூதா ஜனத்தாருக்கும் கர்த்தர் இன்னும் வாய்ப்பைக் கொடுக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கரங்களில் மண்பாண்டமாக இருக்கிறார்கள். (எரே 18:6-11)."இஸ்ரவேல் வீட்டார்" - இந்த வாக்கியம் யூதா ராஜ்யத்தைக் குறிக்கும். எரேமியா இவர்களுக்கே தீர்க்கதரிசனம் கூறுகிறார். இஸ்ரவேல் தேசம் 100 வருஷங்களுக்கு முன்பே அழிந்துபோயிற்று. இஸ்ரவேல் வீட்டார் யூதாவின் மனுஷர் என்றும் அழைக்கப் படுகிறார்கள். (எரே 18:6=எரே 18:11)

"அந்தஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால்" - கர்த்தர் எல்லா தேசங்களின் மீதும் தமது இரக்கங்களையும், நியாயத் தீர்ப்புக்களையும் வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு மட்டும் என்றில்லாமல் கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதியாக இருக்கிறார். (எரே 18:7-8).

(ஆ) நியாயத்தீர்ப்பைத் தவிர்க்க வாய்ப்பு

எரே 18:11 இப்பொழுதும், நீ யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் நோக்கி: இதோ, நான் உங்களுக்கு விரோதமாக ஒரு தீங்கை உருப்படுத்தி, உங்களுக்கு விரோதமாக ஒரு காரியத்தை யோசிக்கிறேன்; ஆகையால், உங்களில் ஒவ்வொருவரும் தன்தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பி, உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்படுத்துங்களென்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்.

18 அதிகாரம்

"இதோ, நான் உங்களுக்கு விரோதமாக ஒரு தீங்கை உருப்படுத்தி"- குயவன் வீட்டில் எரேமியா கற்றுக்கொண்ட சம்பவம் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் பொருந்தும். கர்த்தரிடத்தில் வந்தால் அவர்களுக்குத் தீமையிலிருந்து விடுதலை உண்டாகும். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ மனந்திரும்பவில்லை. தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளவில்லை. இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது. (எரே 18:12; எரே 19:1-13) புறஜாதியார்கூட இப்படிப்பட்ட செய்தியைக் கேள்விப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் திடுக்கிடத்தக்க காரியத்தைச் செய்கிறார்கள். (எரே 18:13).

(இ) மறுப்பு - நியாயத்தீர்ப்பு

எரே 18:12 ஆனாலும் அவர்கள்: அது கூடாத காரியம், நாங்கள் எங்கள் யோசனைகளின்படியே நடந்து, அவரவர் தம்தம் பொல்லாத இருதயத்தினுடைய கடினத்தின்படியே செய்வோம் என்கிறார்கள்.

எரே 18:13 ஆகையால் கர்த்தர் சொல்லுகிறார்: இப்படிப்பட்டவை களைக் கேள்விப்பட்டவன் யார் என்று புறஜாதிகளுக்குள்ளே விசாரித்துப் பாருங்கள்; மிகவும் திடுக்கிடத்தக்க காரியத்தை இஸ்ரவேல் என்னும் கன்னிகை செய்கிறாள்.

எரே 18:14 லீபனோனின் உறைந்த மழை வயல்வெளியின் கன்மலையிலிருந்து அற்றுப்போகிறதுண்டோ? ஓடிவருகிற அந்நியதேசத்துக்குக் குளிர்ந்த தண்ணீர்கள் வடிந்துபோகிறதுண்டோ?

எரே 18:15 என் ஜனங்களோ என்னை மறந்து, மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங் காட்டுகிறார்கள்; செப்பனிடப்படாத பாதைகளிலும் வழியிலும் அவர்கள் நடக்கும்படி, அவைகள் அவர்களைப் பூர்வ பாதைகளாகிய அவர்களுடைய வழிகளிலிருந்து இடறும்படி செய்கிறது.

எரே 18:16 நான் அவர்களுடைய தேசத்தைப் பாழாக்கவும் என்றென்றைக்கும் ஈசலிட்டு நிந்திக்கும் நிந்தையாக்கவும் செய்யும்படி இப்படிச் செய்கிறார்கள்; அதைக் கடந்து போகிறவன் எவனும் பிரமித்து, தன் தலையைத் துலுக்குவான்.

எரே 18:17 கொண்டல்காற்றுப் பறக்கடிக்குமாப்போல் நான் அவர்களை அவர்கள் சத்துருக் களுக்கு முன்பாகப் பறக்கடிப்பேன்; அவர்களுடைய ஆபத்தின் நாளிலே என் முகத்தையல்ல, என் முதுகை அவர்களுக்குக் காட்டுவேன் என்று சொல் என்றார்.

"லீபனோனின் உறைந்த மழை வயல் வெளியின் கன்மலையிலிருந்து அற்றுப் போகிறதுண்டோ?" - லீபனோன் தேசம் செழிப்பாக இருக்கிறது. அதை விட்டுவிட்டு, வறட்சியான அந்நிய தேசத்திற்கு யாரும் போக மாட்டார்கள். அதுபோல கர்த்தர் யூதா தேசத்தார்மீது மிகுந்த கிருபையோடு இருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டுவிட்டு விக்கிரகங்களைப் பின்பற்றிப் போகிறார்கள். (எரே 18:14-17).

தீர்க்கதரிசன எண் - 40

"என் ஜனங்களோ என்னை மறந்து, மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங் காட்டுகிறார்கள்............" (எரே 18:15-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. தேசம் என்றென்றைக்கும் ஈசலிட்டு நிந்திக்கும் நிந்தையாக இருக்கும். (எரே 18:16).

2. அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, தன் தலையைத் துலுக்குவான்.

3. நான் அவர்களை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகப் பறக்கடிப்பேன் (எரே 18:17).

4. அவர்களுடைய ஆபத்தின் நாளிலே என் முகத்தையல்ல, என் முதுகை அவர்களுக்குக் காட்டுவேன்

18 அதிகாரம்

யூதாவின் பாவங்கள்

1. அவிசுவாசம். (எரே 18:12)
2. நாங்கள் எங்கள் யோசனைகளின்படியே நடப்போம் என்கிறார்கள்.
3. அவரவர் தம்தம் பொல்லாத இருதயத்தினுடைய கடினத்தின்படியே செய்வோம் என்கிறார்கள்.
4. மிகவும் திடுக்கிடத்தக்க காரியத்தை இஸ்ரவேல் என்னும் கன்னிகை செய்கிறாள். (எரே 18:13-15)
5. தேவனை மறந்தார்கள். (எரே 18:15)
6. மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள்.
7. அவர்களுடைய வழிகளிலிருந்து இடறும்படி செய்கிறார்கள்.
8. தேவனுடைய மனுஷருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணுகிறார்கள். (எரே 18:18)
9. தேவனுடைய செய்தியை அறிவிப்பவரைக் குறித்துத் தவறாகப் பேசுகிறார்கள்.
10. தேவனுடைய வார்த்தைகளைக் கவனிக்க மறுக்கிறார்கள்.

19. எரேமியாவிற்கு எதிராக இரண்டாவது சதி - யூதாவின் மூலமாக - (11:18)

எரே 18:18 அதற்கு அவர்கள்: எரேமியாவுக்கு விரோதமாக ஆலோசனை செய்வோம் வாருங்கள்; ஆசாரியரிடத்திலே வேதமும், ஞானிகளிடத்திலே ஆலோசனையும், தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்து போவதில்லை. இவன் வார்த்தைகளை நாம் கவனியாமல், இவனை நாவினாலே வெட்டிப்போடுவோம் வாருங்கள் என்றார்கள்.

“எரேமியாவுக்கு விரோதமாக ஆலோசனை செய்வோம் வாருங்கள்” - எரேமியாவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக இரண்டாம் முறையாக ஆலோசனை பண்ணுகிறார்கள்.

20. எரேமியாவின் ஜெபம் - (12:1-4)

எரே 18:19 கர்த்தாவே, நீர் என்னைக் கவனித்து, என்னோடே வழக்காடுகிறவர்களின் சத்தத்தைக் கேளும்.

எரே 18:20 நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டலாமோ? என் ஆத்துமாவுக்குப் படுகுழியை வெட்டுகிறார்களே; உம்முடைய உக்கிரத்தை அவர்களை விட்டுத் திருப்பும்படிக்கு நான் அவர்களுக்காக நன்மையைப் பேச உமக்கு முன்பாக நின்றதை நினைத்தருளும்.

எரே 18:21 ஆகையால், அவர்களுடைய பிள்ளைகளைப் பஞ்சத்துக்கு ஒப்புக் கொடுத்து, அவர்களைப் பட்டயத்துக்கு இரையாக்கிவிடும்; அவர்கள் மனைவிகள் பிள்ளைகளற்றவர்களும் விதவைகளுமாகி, அவர்கள் புருஷர்கள் கொலை செய்யப்பட்டு, அவர்கள் வாலிபர்கள் யுத்தத்திலே பட்டயவெட்டால் மடியக்கடவர்கள்.

எரே 18:22 நீர் சடிதியில் அவர்கள்மேல் இராணுவத்தை வரப்பண்ணுகையால், கூக்குரல் அவர்கள் வீடுகளிலிருந்து கேட்கப்படக்கடவது; என்னைப் பிடிக்கப் படுகுழியை வெட்டி, என் கால்களுக்குக் கண்ணிகளை வைத்தார்களே.

எரே 18:23 ஆனாலும் கர்த்தாவே, அவர்கள் எனக்கு விரோதமாய்ச் செய்யும் கொலைபாதக யோசனையெல்லாம் நீர் அறிவீர்; அவர்களுடைய அக்கிரமத்தை உமது கண்ணுக்கு மறைவாக மூடாமலும், அவர்கள் பாவத்தைக் குலைக்காமலும் இருப்பீராக; அவர்கள் உமக்கு முன்பாகக் கவிழ்க்கப்படக்கடவர்கள்; உமது கோபத்தின் காலத்திலே இப்படி அவர்களுக்குச் செய்யும்.

18 அதிகாரம்

"கர்த்தாவே, நீர் என்னைக் கவனித்து" - எரேமியா தன்னுடைய பிரச்சனையைக் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணுகிறார். அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறார். ஜனங்கள்மீது கர்த்தருடைய கோபாக்கினையைக் குறைப்பதற்கு முயற்சி பண்ணுகிறார். அவர் செய்யும் நன்மைக்குப் பதிலாக ஜனங்கள் எரேமியாவிற்குத் தீமை செய்கிறார்கள். அவர்கள் நியாயந்தீர்க்கப்படவேண்டுமென்று எரேமியா விண்ணப்பம் பண்ணுகிறார். (எரே 18:19-20).

எரேமியாவின் விண்ணப்பம்

1. நீர் என்னைக் கவனியும். (எரே 18:19).
2. என்னோடே வழக்காடுகிறவர்களின் சத்தத்தைக் கேளும்.
3. உம்முடைய உக்கிரத்தை அவர்களை விட்டுத் திருப்பும்படிக்கு நான் அவர்களுக்காக நன்மையைப் பேச உமக்கு முன்பாக நின்றதை நினைத்தருளும். (எரே 18:20).
4. அவர்களுடைய பிள்ளைகளைப் பஞ்சத்துக்கு ஒப்புக்கொடும். (எரே 18:21).
5. அவர்களைப் பட்டயத்துக்கு இரையாக்கி விடும்.
6. அவர்கள் மனைவிகள் பிள்ளைகளற்றவர்களாவார்களாக.
7. அவர்கள் விதவைகளாவார்களாக.
8. அவர்கள் புருஷர்கள் கொலை செய்யப்படுவார்களாக.
9. அவர்கள் வாலிபர்கள் யுத்தத்திலே பட்டயவெட்டால் மடியக்கடவர்கள்.
10. நீர் சடிதியில் அவர்கள்மேல் இராணுவத்தை வரப்பண்ணுகையால், கூக்குரல் அவர்கள் வீடுகளிலிருந்து கேட்கப்படக் கடவது (எரே 18:22).
11. அவர்களுடைய அக்கிரமத்தை உமது கண்ணுக்கு மறைவாக மூடாமலிப்பீராக. (எரே 18:23).
12. அவர்கள் பாவத்தைக் குலைக்காமல் இருப்பீராக;.
13. அவர்கள் உமக்கு முன்பாகக் கவிழ்க்கப்படக்கடவர்கள்.
14. உமது கோபத்தின் காலத்திலே இப்படி அவர்களுக்குச் செய்யும்.

இப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுப்பத்தினால் எரேமியா கடின இருதயமுள்ள மனுஷர்போல் தெரிகிறது. ஆனால் எரேமியா அப்படிப்பட்ட சுபாவமுடையவர் அல்ல. அவர்கள் கர்த்தரை விட்டு வெகுவாகப் பின்வாங்கிப் போய் விட்டார்கள். எரேமியா அவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தைகளைப் பலமுறை தீர்க்கதரிசனமாகக் கூறினார். ஆனால் அவர்களோ தீர்க்கதரிசியின் வார்த்தைக்குச் செவிகொடுக்கவில்லை. அவர்கள்மீது நியாயத் தீர்ப்பு வருமென்று எச்சரித்தார். ஆனால் அவர்கள் அதற்கும் செவிகொடுக்கவில்லை. எரேமியா அவர்களுக்காகப் பரிந்து பேசி ஜெபித்தார். கர்த்தருடைய சமுகத்தில் அவர்களுக்காக அழுதார். (எரே 4:10,19; எரே 9:18,21; எரே 10:10) இப்போது கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் நடைபெறுவதற்கு எரேமியா யூதா தேசத்தாரை ஒப்புக்கொடுத்து விடுகிறார். கலகக்காரர்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். எரேமியாவின் ஜெபம் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒத்திருக்கிறது. (எரே 18:19-23) கர்த்தர் ஏற்கெனவே முன்னறிவித்தவைகளையே இப்போது எரேமியா ஜெபிக்கிறார். அவை நிறைவேறக்கடவது என்று அறிவிக்கிறார். எரேமியாவிற்கு யூதா ஜனத்தார்மீது தனிப்பட்ட கோபமோ, விரோதமோ இல்லை. கர்த்தருடைய சித்தத்திற்கு எரேமியா ஆமென் என்று கூறுகிறார்.

19 அதிகாரம்

21. குயவன் வேலையான கலசத்தின் அடையாளம்

(1) அடையாளம் - ஆறு பாவங்கள் - யூதாவின்மீது பத்து அம்ச நியாயத்தீர்ப்பு - (ஏசா 1:28)

எரே 19:1 கர்த்தர் சொன்னது: நீ போய்க் குயவன் வேலையான ஒரு கலசத்தைக் கொண்டு, ஜனத்தின் மூப்பரிலும் ஆசாரியர்களின் மூப்பரிலும் சிலரைக் கூட்டிக்கொண்டு,

எரே 19:2 கிழக்கு வாசலுக்கு எதிரான இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலே புறப்பட்டுப்போய், நான் உன்னோடே சொல்லும் வார்த்தைகளை அங்கே பிரசித்தப்படுத்து.

எரே 19:3 நீ அவர்களை நோக்கி: யூதாவின் ராஜாக்களே, எருசலேமின் குடிகளே, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்; இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: இதோ, நான் இந்த ஸ்தலத்தின்மேல் ஒரு பொல்லாப்பை வரப்பண்ணுவேன்; அதைக் கேட்கிற யாவருடைய காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும்.

எரே 19:4 அவர்கள் என்னை விட்டுவிட்டு, இந்த ஸ்தலத்தை அந்நிய ஸ்தலமாக்கி, தாங்களும், தங்கள் பிதாக்களும், யூதாவின் ராஜாக்களும், அறியாதிருந்த அந்நிய தேவர்களுக்கு அதிலே தூபங்காட்டி, இந்த ஸ்தலத்தைக் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தினாலே நிரப்பினபடியினாலும்,

எரே 19:5 தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி பாகாலின் மேடைகளைக் கட்டினபடியினாலும் இப்படி வரப்பண்ணுவேன்; இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை.

எரே 19:6 ஆகையால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இந்த ஸ்தலம் தோப்பேத்தென்றும், இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கென்றும் இனிச் சொல்லப்படாமல், சங்கார பள்ளத்தாக்கென்று சொல்லப்படும்.

எரே 19:7 அப்பொழுது நான் யூதாவுக்கும் எருசலேமுக்கும் கொண்டிருந்த ஆலோசனையை இந்த ஸ்தலத்திலே வெறுமையாக்கி, அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாக அவர்களைப் பட்டயத்தினாலும், அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையினாலும் விழப்பண்ணி, அவர்கள் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுத்து,

எரே 19:8 இந்த நகரத்தைப் பாழாகவும், ஈசலிட்டு நிந்திக்கிற நிந்தையாகவும் வைப்பேன்; அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, அதின் எல்லா வாதைகளினிமித்தமும் ஈசலிடுவான்.

எரே 19:9 அவர்களுடைய சத்துருக்களும் அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களும், அவர்களை இறுகப் பிடிக்கப்போகிற முற்றிக்கையிலும் இடுக்கத்திலும், நான் அவர்களைத் தங்கள் குமாரரின் மாம்சத்தையும் தங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் தின்னப்பண்ணுவேன்; அவனவன் தனக்கு அடுத்தவனுடைய மாம்சத்தைத் தின்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று நீ சொல்லி,

எரே 19:10 உன்னோடே கூடவந்த மனுஷருடைய கண்களுக்கு முன்பாக அந்தக் கலசத்தை உடைத்துப்போட்டு,

தீர்க்கதரிசன எண் - 41

“கர்த்தர் சொன்னது.........” (எரே 19:1-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

எரேமியா - தொகுப்புரை

19 அதிகாரம்

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் இந்த ஸ்தலத்தின்மேல் ஒரு பொல்லாப்பை வரப்பண்ணுவேன். அதைக் கேட்கிற யாவருடைய காதுகளிலும் அது தொனித்துக் கொண்டிருக்கும். (எரே 19:3).

2. இந்த ஸ்தலம் தோப்பேத்தென்றும், இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கென்றும் இனிச் சொல்லப் படாமல், சங்காரப் பள்ளத்தாக்கென்று சொல்லப்படும். (எரே 19:6).

3. நான் யூதாவுக்கும் எருசலேமுக்கும் கொண்டிருந்த ஆலோசனையை இந்த ஸ்தலத்திலே வெறுமையாக்குவேன். (எரே 19:7).

4. அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாக அவர்களைப் பட்டயத்தினாலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையினாலும் விழப்பண்ணுவேன்.

5. அவர்கள் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுப்பேன்.

6. இந்த நகரத்தைப் பாழாகவும், ஈசலிட்டு நிந்திக்கிற நிந்தையாகவும் வைப்பேன் (எரே 19:8).

7. அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, அதின் எல்லா வாதைகளினிமித்தமும் ஈசலிடுவான்.

8. நான் அவர்களைத் தங்கள் குமாரரின் மாம்சத்தையும் தங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் தின்னப்பண்ணுவேன் (எரே 19:9).

9. திரும்பச் செப்பனிடப்படக்கூடாத குயவனுடைய மண்பாண்டத்தை உடைத்துப் போட்டவண்ணமாக நான் இந்த ஜனத்தையும் இந்த நகரத்தையும் உடைத்துப்போடுவேன் (எரே 19:11)

10. புதைக்கிறதற்கு இடமில்லாததினால் தோப்பேத்திலே சவங்களைப் புதைப்பார்கள்.

11. இவ்விதமாக நான் இந்த ஸ்தலத்துக்கும் இதின் குடிகளுக்கும் செய்வேன். (எரே 19:12).

12. இந்த நகரத்தைத் தோப்பேத்துக்குச் சரியாக்குவேன்.

13. எருசேலமின் வீடுகளும் யூதாவுடைய ராஜாவின் வீடுகளும் தோப்பேத் என்கிற ஸ்தலத்தைப்போல் தீட்டுப் பட்டவர்களாய் இருக்கும். (எரே 19:13)

14. நான் இந்த நகரத்துக்கு விரோதமாய்ச் சொன்ன எல்லாத் தீங்கையும் இதின் மேலும் இதற்கடுத்த பட்டணங்களின் மேலும் வரப்பண்ணுவேன் (எரே 19:15).

எரே 19 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீ போய்க் குயவன் வேலையான ஒரு கலசத்தைக் கொள் (எரே 19:1).

2. ஜனத்தின் மூப்பரிலும் ஆசாரியர்களின் மூப்பரிலும் சிலரைக் கூட்டிக்கொள்.

3. நான் உன்னோடே சொல்லும் வார்த்தைகளை அங்கே பிரசித்தப்படுத்து. (எரே 19:2).

4. கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள் என்று சொல். (எரே 19:3).

5. உன்னோடே கூடவந்த மனுஷருடைய கண்களுக்கு முன்பாக அந்தக் கலசத்தை உடைத்துப்போடு. (எரே 19:10).

6. அவர்களை நோக்கி: திரும்பச் செப்பனிடப்படக்கூடாத குயவனுடைய மண்பாண்டத்தை உடைத்துப்போட்ட வண்ணமாக நான் இந்த ஜனத்தையும் இந்த நகரத்தையும் உடைத்துப்போடுவேன் என்று சொல். (எரே 19:11).

19 அதிகாரம்

யூதாவின் பாவங்கள்

1. அவர்கள் கர்த்தரை விட்டுவிட்டார்கள். (எரே 19:4).
2. இந்த ஸ்தலத்தை அந்நிய ஸ்தலமாக்கினார்கள்.
3. அந்நிய தேவர்களுக்கு அதிலே தூபங்காட்டினார்கள்.
4. இந்த ஸ்தலத்தைக் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தினாலே நிரப்பினார்கள். (எரே 19:4).
5. தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனித்தார்கள். (எரே 19:5)
6. பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள்.
7. வீடுகளின்மேல் வானத்தின் சகல சேனைக்கும் தூபங்காட்டினார்கள். (எரே 19:13).
8. அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்த்தார்கள்.
9. கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளாதபடிக்கு தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள். (எரே 19:15).

"இந்த ஸ்தலம் தோப்பேத்தென்றும்....." - (எரே 7:32; ஏசா 30:33)

"அந்தக் கலசத்தை உடைத்துப்போட்டு" - எரேமியா தோப்பேத்திற்குச் செல்கிறார். இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிற்குச் செல்கிறார். ஆசாரியருக்கும், மூப்பருக்கும் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். (எரே 19:1-2) அதன் பின்பு, தன்னோடு கூடவந்த மனுஷருடைய கண்களுக்கு முன்பாக அந்தக் கலசத்தை உடைத்துப்போடுகிறார். (எரே 19:10-13). இது மண் கலசம். ஆகையினால் இதை உடைக்க முடிகிறது. யூதா தேசமும், எருசலேம் நகரமும் இந்தக் கலசத்தைப் போல உடைந்து போகும் என்பதற்கு இது ஓர் அடையாளம். அக்காலத்தில் ஒருவர்மீது விரோதம் இருந்தால் அவர்களுக்கு முன்பாக இதுபோல ஒரு கலசத்தை உடைப்பது வழக்கம். எரேமியாவும் அந்தப் பழக்கத்தின் பிரகாரமாகவே தன்னோடுகூட வந்த மனுஷருக்கு முன்பாகக் கலசத்தை உடைத்துப்போடுகிறார். இனிமேல் அவர்கள் திரும்பவும் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்பேயில்லை. அவர்கள் நம்பிக்கையற்றவர்களாகப் போனார்கள். எரே 19:11-13 ஆகிய வசனங்களில் யூதா தேசத்தாரின் நிலைமை கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கலசம் உடைந்ததுபோல கர்த்தர் யூதாவையும், எருசலேம் நகரத்தையும் உடைத்துப்போடுவார். கலசம் பூரணமாக உடைந்துபோயிற்று. அதைமறுபடியும் ஒட்ட வைக்க முடியாது. அதுபோலவே யூதா தேசமும் முழுவதுமாக அழிக்கப்படும். அதிலுள்ள ஜனங்களெல்லாம் தோப்பேத்திலே அடக்கம் பண்ணப்படுவார்கள். அழிந்துபோகும் எல்லோரையும் அடக்கம் பண்ணுவதற்குத் தோப்பேத்திலே இடமிராது. எருசலேம் நகரமே தோப்பேத்தைப்போல இருக்கும். ராஜாக்களின் அரண்மனைகளும், ஜனங்களின் வீடுகளும் தீட்டுப்படும். ஒவ்வொரு வீட்டு மாடியிலும் ஜனங்கள் வானத்தின் சேனைகளுக்கு தூபங்காட்டுவார்கள்.

(2) யூதாவிற்கு இது பொருந்தும் - ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பு - காரணங்கள்

எரே 19:11 அவர்களை நோக்கி: திரும்பச் செப்பனிடப்படக்கூடாத குயவனுடைய மண்பாண்டத்தை உடைத்துப்போட்ட வண்ணமாக நான் இந்த ஜனத்தையும் இந்த நகரத்தையும் உடைத்துப் போடுவேன்; புதைக்கிறதற்கு இடமில்லாததினால் தோப்பேத்திலே சவங்களைப் புதைப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 19:12 இவ்விதமாக நான் இந்த ஸ்தலத்துக்கும் இதின் குடிகளுக்கும் செய்து, இந்த நகரத்தைத் தோப்பேத்துக்குச் சரியாக்குவேன்.

19 அதிகாரம்

எரே 19:13 எந்த வீடுகளின்மேல் வானத்தின் சகல சேனைக்கும் தூபங்காட்டி, அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்த்தார்களோ, அந்த வீடுகளாகிய எருசேலமின் வீடுகளும் யூதாவுடைய ராஜாவின் வீடுகளும் தோப்பேத் என்கிற ஸ்தலத்தைப்போல் தீட்டுப்பட்டவர்களாய் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

22. தேவாலயப் பிரகாரத்தில் செய்தி

எரே 19:14 பின்பு எரேமியா, கர்த்தர் தன்னைத் தீர்க்கதரிசனஞ்சொல்ல அனுப்பின தோப்பேத்திலிருந்து வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து:

எரே 19:15 இதோ, நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாதபடிக்கு உங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினபடியினால் நான் இந்த நகரத்துக்கு விரோதமாய்ச் சொன்ன எல்லாத் தீங்கையும் இதின் மேலும் இதற்கடுத்த பட்டணங்களின் மேலும் வரப்பண்ணுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

"கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து" - எரேமியா தோப்பேத்திலிருந்து இப்போது எருசலேமிற்கு வந்துவிட்டார். கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து தீர்க்கதரிசனம் உரைக்கிறார். யூதாவின் அழிவையும், எருசலேமின் அழிவையும் குறித்து தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். ஜனங்களுடைய கடினக்கழுத்துக்களும், கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளாதபடிக்கு ஜனங்கள் இறுமாப்பாக இருந்ததும் அவர்கள்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருவதற்குக் காரணமாயிற்று. (எரே 19:14-15).

20 அதிகாரம்

IV. இஸ்ரவேலின் தலைவர்களுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் - (20:1-23:40)

1. பஸ்கூருக்கு எதிரானது - (20:1-18)

(1) எரேமியாவின் மூன்றாவது உபத்திரவம் - பஸ்கூரினால் - (1:1-18)

எரே 20:1 எரேமியா இந்த வார்த்தைகளைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறதை ஆசாரியனான இம்மேருடைய குமாரனும், கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் கர்த்தனுமாகிய பஸ்கூர் கேட்டபோது,

எரே 20:2 எரேமியா தீர்க்கதரிசியைப் பஸ்கூர் அடித்து, அவனைக் கர்த்தருடைய ஆலயத்திலே பென்யமீன் கோத்திரத்தாரைச்சேர்ந்த மேல்வாசலில் இருக்கும் காவலறையிலே போட்டான்.

"பஸ்கூர்" (Pashur) - இந்தப் பெயருக்கு "நிலைத்திருக்கிறவன்" "staying on" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "பஸ்கூர்"கள்

1. ஆசாரியனாகிய இம்மேருடைய குமாரன். (எரே 20:1-6)
2. மல்கியாவின் (Melchiah) குமாரன் - யூதாவின் பிரபு. (எரே 21:1;எரே 38:1)
3. மல்கியாவின் (Malchijah) குமாரன் - ஆசாரியக் குடும்பத்திற்குத் தலைவன் (1நாளா 9:12; எஸ்றா 2:38; எஸ்றா 10:22;நெகே 7:41;நெகே 11:12)
4. உடன்படிக்கையை முத்திரையிட்ட ஆசாரியர்களில் ஒருவன்.(நெகே 10:3)

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் எரேமியாவையும், யோயாக்கீமையும் தவிர பஸ்கூரின் பெயரே முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறது. எரே 21 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பஸ்கூரும், இந்தப் பஸ்கூரும் ஒரே நபரல்ல. எரே 21 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பஸ்கூர் சிதேக்கியாவின் ஆட்சிக் காலத்தில் கடைசிப் பகுதியில் வருகிறான். இந்தக் காலம் முதலாவது பஸ்கூரின் காலத்திற்கு 19 வருஷங்களுக்குப் பின்பு வருகிறது. முதலாவது பஸ்கூர் யோயாக்கீமின் ராஜ்யபாரத்தில் பிரதான விசாரணைக் கர்த்தனாக இருக்கிறான். எரே 20 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் யோயாக்கீமின் மூன்றாம் வருஷத்து ஆட்சிக்காலத்தில் நடைபெறுகிறது. இது நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்திற்கு விரோதமாக முதன் முறையாக வருவதற்கு முன்பாக நடைபெறுகிறது. (2இராஜா 24:1)

"எரேமியா தீர்க்கதரிசியைப் பஸ்கூர் அடித்து" - மூன்றாம் முறையாக எரேமியா துன்புறுத்தப் படுகிறார். முதல் முறையாக மற்றவர்களிடமிருந்து அடி வாங்குகிறார். (எரே 20:1-2). எரேமியா தோப்பேத்திலும், எருசலேமிலும் தீர்க்கதரிசனம் கூறியதை (எரே 19) ஆட்சியாளர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு எரேமியாவின்மீது கோபம் அதிகரிக்கிறது. ஏராளமான ஜனங்கள் எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். இதனால் கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக்கர்த்தனாகிய பஸ்கூர் எரேமியாவை நாற்பதற்கு ஒன்று குறைய அதாவது 39 அடிகள் அடிப்பதற்குக் கட்டளையிடுகிறான். தேவாலயத்தின் வாசலில் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக எரேமியாவை அடித்தார்கள். (எரே 20:2). யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தில் இதுவே எரேமியா கூறிய கடைசி தீர்க்கதரிசனமாகும். தான் கூறிய தீர்க்கதரிசனத்தினால் எரேமியாவின் உயிருக்கு ஆபத்து உண்டாயிற்று. ஆகையினால் அதன் பின்பு, எரேமியா தேவாலயத்திற்கு வருவதைத் தவிர்த்துவிட்டார். (எரே 36:5)

(2)பஸ்கூருக்கும் யூதாவிற்கும் எதிராக இருபது அம்ச தீர்க்கதரிசனம்

எரே 20:3 மறுநாளிலே பஸ்கூர் எரேமியாவைக் காவலறையிலிருந்து வெளியே போகவிட்டான்; அப்பொழுது எரேமியா அவனை நோக்கி: கர்த்தர் உன்னைப் பஸ்கூர் என்று அழைக்காமல், மாகோர் மீசாபீப் என்று அழைக்கிறார்.

எரேமியா - தொகுப்புரை

20 அதிகாரம்

எரே 20:4 மேலும் கர்த்தர்: இதோ, நான் உன்னையும், உன் எல்லாச் சிநேகிதரையும் பட்டயத்துக்கு ஒப்புக் கொடுக்கிறேன்; உன் கண்கள் காண இவர்கள் சத்துருக்களின் பட்டயத்தால் விழுவார்கள்; யூதா அனைத்தையும் நான் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவன் அவர்களைச் சிறைபிடித்து, சிலரைப் பாபிலோனுக்குக் கொண்டுபோய், சிலரைப் பட்டயத்தால் வெட்டிப்போடுவான்.

எரே 20:5 இந்த நகரத்தின் எல்லாப் பலத்தையும், அதின் எல்லாச் சம்பத்தையும், அதின் அருமையான எல்லாப் பொருள்களையும், யூதா ராஜாக்களின் எல்லாப் பொக்கிஷங்களையும், நான் அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவர்கள் அவைகளைக் கொள்ளையிட்டு, பாபிலோனுக்குக் கொண்டு போவார்கள்.

எரே 20:6 பஸ்கூரே, நீயும் உன் வீட்டில் வாசமாயிருக்கிற யாவரும் சிறைப்பட்டுப் போவீர்கள்; நீயும் உன் கள்ளத் தீர்க்கதரிசனத்துக்குச் செவிகொடுத்த உன் சிநேகிதர் யாவரும் பாபிலோனுக்குப் போய், அங்கே மரித்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவீர் களென்று சொல்லுகிறார் என்றான்.

தீர்க்கதரிசன எண் - 42

“அப்பொழுது எரேமியா அவனை நோக்கி....” (எரே 20:3-6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உன்னையும், உன் எல்லாச் சிநேகிதரையும் பட்டயத்துக்கு ஒப்புக் கொடுக்கிறேன் (எரே 20:4).
2. அவர்கள் சத்துருக்களின் பட்டயத்தால் விழுவார்கள்.
3. அதை உன் கண்கள் காணும்.
4. யூதா அனைத்தையும் நான் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பேன்.
5. அவன் அவர்களைச் சிறைபிடித்து, சிலரைப் பாபிலோனுக்குக் கொண்டு போவான்.
6. சிலரைப் பட்டயத்தால் வெட்டிப்போடுவான்.
7. இந்த நகரத்தின் எல்லாப் பலத்தையும், அதின் எல்லாச் சம்பத்தையும், அதின் அருமையான எல்லாப் பொருள்களையும், யூதா ராஜாக்களின் எல்லாப் பொக்கிஷங்களையும், நான் அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன் (எரே 20:5).
8. அவர்கள் அவைகளைக் கொள்ளையிட்டு, பாபிலோனுக்குக் கொண்டுபோவார்கள்.
9. பஸ்கூரே, நீயும் உன் வீட்டில் வாசமாயிருக்கிற யாவரும் சிறைப்பட்டுப் போவீர்கள் (எரே 20:6).
10. நீயும் உன் கள்ளத்தீர்க்க தரிசனத்துக்குச் செவிகொடுத்த உன் சிநேகிதர் யாவரும் பாபிலோனுக்குப் போய், அங்கே மரித்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவீர்கள்.

“மறுநாளிலே” - எரேமியா இரவு முழுவதும் காவலறையில் இருந்திருக்கிறான். (எரே 20:2-3).

“மாகோர் மீசாபீப்” [Magor-missabib] - இந்தப் பெயருக்கு “எல்லாப் பக்கத்திலும் பயம் அல்லது பயங்கரம்” "to have terror all around or fear on every side" என்று பொருள்.

“பாபிலோன் ராஜா” -எரேமியாவின் புஸ்தகத்தில் பாபிலோன் ராஜாவைப் பற்றி 80 தடவைகள் கூறப்பட்டிருக்கிறது. அதில் இது முதலாவது தடவையாகும்.

“நான் அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்” - இந்தச் சம்பவத்தைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனம் ஏசா 39 ஆவது அதிகாரத்தில் காணப்படுகிறது.

20 அதிகாரம்

(3) எரேமியாவின் பத்து அம்ச முறையீடு

எரே 20:7 கர்த்தாவே என்னை இணங்கப் பண்ணினீர், நான் இணங்கினேன்; நீர் என்னிலும் பலத்தவராயிருந்து, என்னை மேற்கொண்டீர்; நாள்தோறும் நகைப்புக்கு இடமானேன்; எல்லாரும் என்னைப் பரிகாசம்பண்ணுகிறார்கள்.

எரே 20:8 நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன்; கொடுமையென்றும் பாழ்க்கடிப் பென்றும் சத்தமிட்டுக் கூறுகிறேன்; நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று.

எரே 20:9 ஆதலால், நான் அவரைப் பிரஸ்தாபம்பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற்போயிற்று.

எரே 20:10 அநேகர்சொல்லும் அவதூறைக் கேட்டேன்; பயஞ் சூழ்ந்திருந்தது; அறிவியுங்கள், அப்பொழுது நாங்கள் அதை அறிவிப்போம் என்கிறார்கள்; என்னோடே சமாதானமாயிருந்த அனைவரும் நான் தவறிவிழும்படிக் காத்திருந்து: ஒருவேளை இணங்குவான், அப்பொழுது அவனை மேற்கொண்டு, அவனில் குரோதந் தீர்த்துக் கொள்வோம் என்கிறார்கள்.

எரேமியாவின் முறையீடு

1. கர்த்தாவே என்னை இணங்கப் பண்ணினீர், நான் இணங்கினேன் (எரே 20:7).
2. நீர் என்னிலும் பலத்தவராயிருந்து, என்னை மேற்கொண்டீர்.
3. நாள்தோறும் நகைப்புக்கு இடமானேன்.
4. எல்லாரும் என்னைப் பரிகாசம் பண்ணுகிறார்கள்.
5. நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன் (எரே 20:8).
6. நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று.
7. ஆதலால், நான் கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன். ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று. (எரே 20:9).
8. அநேகர்சொல்லும் அவதூறைக் கேட்டேன் (எரே 20:10).
9. பயஞ்சூழ்ந்திருந்தது.
10. என்னோடே சமாதானமாயிருந்த அனைவரும் நான் தவறிவிழும்படிக் காத்திருந்து: ஒருவேளை இணங்குவான், அப்பொழுது அவனை மேற்கொண்டு, அவனில் குரோதந்தீர்த்துக் கொள்வோம் என்கிறார்கள்.

"கர்த்தாவே என்னை இணங்கப் பண்ணினீர்" - சாதாரண மனுஷரைப் போல எரேமியாவும், தனக்கு சோதனை வரும்போது கர்த்தரைக் குறை கூறுகிறார். தன்னுடைய பாடுகளுக்கும், நிந்தைகளுக்கும் கர்த்தரே காரணமென்று முறையிடுகிறார். சவுக்கால் அவரை 39 தடவைகள் அடித்தார்கள். இரவு முழுவதும் எரேமியா காவலறையில் இருந்தார். ஏராளமான ஜனங்கள் அவரைப் பரிகாசம் பண்ணினார்கள். கர்த்தர் தன்னை அழைத்திருக்காவிட்டால் தனக்கு இப்படிப்பட்ட நிந்தைகள் வந்திருக்காது என்று எரேமியா முறையிடுகிறார். இந்த வாக்கியத்தில் இணங்குதல் என்பதற்கு "ஏமாற்றி சம்மதிக்க வைத்தல்" என்று பொருள். இதற்கான எபிரெய வார்த்தை "பத்தா" **(pathah)** என்பதாகும்.

20 அதிகாரம்

இணங்குதல் (deceived) - פָּתָה - paw-thaw' - 6601

வினைச்சொல் - வஞ்சிக்கப்படு, மயக்கப்படு, புத்தியில்லாதவன், மயங்கு, பேதை, இணங்கு, வஞ்சகம் பேசு, இணங்கப் பண்ணு, மோசம் போக்கு, நயம் பண்ணு, போதனை செய், இச்சகம் பேசு, நயங்காட்டு, அலப்பு, எத்தப்பண்ணு, சம்மதிக்கப் பண்ணு, எத்தப்படு **(induced)** **"persuaded"** (நீதி 25:15); **"allure"** (ஓசி 2:15).

தான் தீர்க்கதரிசனம் உரைத்ததினால் எந்தப் பயனும் ஏற்படவில்லையென்றும், யாரும் மனந்திருந்தவில்லையென்றும், ஆகையினால் தன்னுடைய பிரயாசங்கள் எல்லாம் வீணாயிற்று என்றும், தன்னுடைய வாழ்நாட்கள் விருதாவாகக் கழிந்தது என்றும் எரேமியா நினைக்கிறார். ஆகையினால் இனிமேல் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கக் கூடாது என்று எரேமியா தீர்மானம் செய்கிறார். ஆனால் எரேமியாவால் கர்த்தருடைய வார்த்தையைப் பேசாமல் இருக்க முடியவில்லை. கர்த்தருடைய வார்த்தை எரேமியாவின் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் அவருடைய இருதயத்தில் இருக்கிறது. அதை அவரால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. ஆகையினால் தொடர்ந்து கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறார். (எரே 20:9).

"அநேகர்சொல்லும் அவதூறு" - எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்ட ஜனங்கள் அவர்மீது கோபப்படுகிறார்கள். எரேமியாவிற்கு எதிராகச் சதி ஆலோசனை பண்ணுகிறார்கள். ராஜாவிடம் எரேமியாவின் வார்த்தைகளை அறிவித்து, அவரைப் பழிவாங்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறார்கள்.

(4) எரேமியாவின் பத்து அம்ச நம்பிக்கை

எரே 20:11 கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார், ஆகையால் என்னைத் துன்பப்படுத்து கிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள்; தங்கள் காரியம் வாய்க்காதபடியால் மிகவும் வெட்கப்படுவார்கள்; மறக்கப்படாத நித்திய இலச்சை அவர்களுக்கு உண்டாகும்.

எரே 20:12 ஆனாலும் நீதிமானைச் சோதித்தறிந்து, உள்ளந்திரியங் களையும் இருதயத்தையும் பார்க்கிற சேனைகளின் கர்த்தாவே, நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைக் காண்பேனாக; என் காரியத்தை உம்மிடத்தில் சாட்டிவிட்டேன்.

எரே 20:13 கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள்; அவர் எளியவனுடைய ஆத்துமாவைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார்.

எரேமியாவின் நம்பிக்கை

1. கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார்.
2. என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் இடறுவார்கள்.
3. அவர்கள் என்னை மேற்கொள்ள மாட்டார்கள்.
4. அவர்கள் காரியம் வாய்க்காது.
5. அவர்கள் மிகவும் வெட்கப்படுவார்கள்.
6. மறக்கப்படாத நித்திய இலச்சை அவர்களுக்கு உண்டாகும்.
7. சேனைகளின் கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிந்து, உள்ளந்திரியங் களையும் இருதயத்தையும் பார்க்கிறவர். (எரே 20:12).
8. என் காரியத்தை உம்மிடத்தில் சாட்டிவிட்டேன்.
9. கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள்; அவர் எளியவனுடைய ஆத்துமாவைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார். (எரே 20:13).

எரேமியா - தொகுப்புரை

20 அதிகாரம்

(5) எரேமியாவின் பத்து அம்ச சாபம் - (ஏசா 1:28)

எரே 20:14 நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக; என் தாயார் என்னைப் பெற்ற நாள் ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக.

எரே 20:15 உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்படக்கடவன்.

எரே 20:16 அந்த மனுஷன், கர்த்தர் மனம்மாறாமல் கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப் போலிருந்து, காலமே அலறுதலையும் மத்தியான வேளையிலே கூக்குரலையும் கேட்கக்கடவன்.

எரே 20:17 என் தாயார் எனக்குப் பிரேதக்குழியும், நான் என்றைக்கும் பிரசவியாத சூலுமாய் இருக்கத்தக்கதாகக் கர்ப்பத்திலே நான் கொலைசெய்யப்படாமற்போனதென்ன?

எரே 20:18 நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு, என் நாட்கள் வெட்கமாய்க் கழியும்படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன?

எரேமியாவின் சாபம்

1. நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக (எரே 20:14)
2. அது ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக.
3. என் பிறப்பை அறிவித்த மனுஷன் சபிக்கப்படக்கடவன். (எரே 20:15).
4. அந்த மனுஷன் கர்த்தர் மனம்மாறாமல் கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப் போலிருக்கக்கடவன். (எரே 20:16).
5. அவன் காலமே அலறுதலைக் கேட்கக்கடவன்.
6. அவன் மத்தியான வேளையிலே கூக்குரலைக் கேட்கக்கடவன்.
7. என் தாயின் கர்ப்பத்தில் அவன் என்னைக் கொலைசெய்யவில்லை.
8. நான் என் தாயின் கர்ப்பத்தில் பிரசவியாத சூலாயிருக்கவில்லை. (எரே 20:17).
9. நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன? (எரே 20:18)
10. என் நாட்கள் வெட்கமாய்க் கழியும்படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்ட தென்ன?

"உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது" - கிழக்கு தேசத்தில் ஆண்பிள்ளை பிறந்த செய்தி அந்தப் பிள்ளையின் தகப்பனுக்கு மிகவும் முக்கியமான சந்தோஷச் செய்தியாக இருக்கும். பெர்சிய தேசத்தில் ஆண்குழந்தை பிறந்தவுடன் விருந்துகளுக்கு ஒழுங்கு செய்வார்கள். ஆண்பிள்ளை பிறந்த செய்தியை முதலாவதாக அறிவிக்கிறவனுக்கும் சிறந்த வெகுமதி கொடுக்கப்படும்.

21 அதிகாரம்

2. சிதேக்கியாவிற்கு எதிராக - (21:1-22:9)

(1) சிதேக்கியாவைப் பற்றி விசாரிப்பு

எரே 21:1 சிதேக்கியா ராஜா மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரையும் ஆசாரியனான மாசெயாவின் குமாரனாகிய செப்பனியாவையும் எரேமியாவினிடத்தில் அனுப்பி:

எரே 21:2 நீர் எங்களுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரியும்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எங்களுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்கிறான்; ஒருவேளை கர்த்தர் தம்முடைய எல்லா அற்புதச் செயலின்படியேயும் எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்து, அவனை எங்களை விட்டுப் போகப்பண்ணுவார் என்று சொல்லியனுப்பினபோது,

"சிதேக்கியா ராஜா...... எரேமியாவினிடத்தில் அனுப்பி" - எரே 20 ஆவது அதிகாரத்தின் கடைசி வசனம் யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தில் கூறப்பட்ட கடைசி தீர்க்கதரிசனமாகும். எரே 21-24 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் சிதேக்கியா ராஜாவின் காலத்தில் கூறப்பட்டவை. சிறையிருப்புக்கு முன்பு சிதேக்கியா யூதாவை ஆட்சி புரிந்த கடைசி ராஜா ஆவான். எருசலேம் நகரம் முழுவதுமாக அழிக்கப்படுவதற்கும், நேபுகாத்நேச்சார் யூதாவைப் பிடிப்பதற்கும் மூன்று வருஷங்களுக்கு முன்பு எரேமியா இந்தத் தீர்க்கதரிசனங்களைக் கூறுகிறார்.

இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்படும்போது நேபுகாத்நேச்சார் எருசலேமிற்கு விரோதமாக வருகிறான். சிதேக்கியா ராஜா கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்காகவும், கர்த்தரிடத்தில் ஜெபிப்பதற்காகவும் தன்னுடைய அதிகாரிகளை எரேமியாவிடம் அனுப்புகிறான். சிதேக்கியா ராஜாவிற்கோ, (எரே 21:1-22:20) அவனுடைய ஆசாரியர்களுக்கோ அல்லது தீர்க்கதரிசிகளுக்கோ (எரே 23:1-40) எரேமியா எந்த நம்பிக்கையான வார்த்தையையும் கூறவில்லை.

எருசலேம் நகரத்தின் அழிவையும், யூதா தேசத்தின் அழிவையும் எரேமியா முன்னறிவிக்கிறார். (எரே 24:1-10)

எரேமியா தன்னுடைய புஸ்தகத்தில் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட செய்திகளை எழுதுகிறார். யோயாக்கீமின் நாட்களில் உண்டாகும் அழிவையும் விவரிக்கிறார். (எரே 25:1-27:11).

எரேமியாவின் தீர்க்கதரிசன விவரம்

1. யோயாக்கீமின் ஆட்சிக்காலமும், சிதேக்கியாவின் ஆட்சிக்காலமும். (எரே 21:1-14)
2. இதற்கு முந்திய இரண்டு ராஜாக்களின் ஆட்சிக்காலங்கள். (எரே 22:1-20).
3. யோயாக்கீமின் ஆட்சிக்காலம் (எரே 25-27)
4. மறுபடியும் சிதேக்கியாவின் ஆட்சிக் காலமும், எருசலேமின் இறுதி முடிவும். (எரே 28)

"பஸ்கூரையும்......செப்பனியாவையும்" - இவர்கள் இருவரையும் சிதேக்கியா ராஜா எரேமியாவிடம் அனுப்புகிறான். நேபுகாத்நேச்சாரிடமிருந்து தேசத்தை மீட்பதற்காக எரேமியாவைக் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுமாறு கேட்டுக் கொள்வதற்கு இவர்கள் இருவரும் வருகிறார்கள். (எரே 21:1-2) இங்கு கூறப்பட்டிருக்கும் செப்பனியா எரே 29:25; எரே 37:3; எரே 52:24 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறான்.

(2) மூன்று அம்ச பதிலுரை

(அ) பதினொரு அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 21:3 எரேமியா அவர்களைப் பார்த்து, நீங்கள் சிதேக்கியாவுக்குச் சொல்ல வேண்டியது:

எரேமியா - தொகுப்புரை

21 அதிகாரம்

எரே 21:4 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, உங்களை அலங்கத்துக்கு வெளியே முற்றிக்கைபோட்ட பாபிலோன் ராஜாவோடும் கல்தேயரோடும், நீங்கள் யுத்தம்பண்ணும்படி உங்கள் கைகளில் பிடித்திருக்கிற யுத்த ஆயுதங்களை நான் திருப்பிவிட்டு, அவர்களை இந்த நகரத்தின் நடுவிலே சேர்த்து,

எரே 21:5 நான் நீட்டின கையினாலும் பலத்த புயத்தினாலும் கோபமும் உக்கிரமும் மகா கடுமையாக உங்களோடே யுத்தம்பண்ணி,

எரே 21:6 இந்த நகரத்தின் குடிகளையும், மனுஷரையும், மிருகங்களையும் சங்கரிப்பேன்; மகா கொள்ளைநோயால் சாவார்கள்.

எரே 21:7 அதற்குப்பின்பு நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும், அவன் ஊழியக்காரரையும், ஜனத்தையும், இந்த நகரத்திலே கொள்ளை நோய்க்கும் பட்டயத்துக்கும் பஞ்சத்துக்கும் தப்பி மீதியானவர்களையும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய கையிலும், அவர்கள் சத்துருக்களின் கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவன் அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டுவான்; அவன் அவர்களைத் தப்பவிடுவதுமில்லை, அவன் மன்னிப்பதுமில்லை,இரங்குவதுமில்லை என்று கர்த்தர் உரைக்கிறார் என்றான்.

"எரேமியா அவர்களைப்பார்த்து" - யூதா ஜெயிக்க வேண்டுமென்று எரேமியாவால் ஜெயிக்க முடியவில்லை. யூதா அழிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறது. அதற்கான காரணங்களை எரேமியா அவர்களிடம் கூறுகிறார். (எரே 21:3-23:40).

தீர்க்கதரிசன எண் - 43

"எரேமியா அவர்களைப்பார்த்து, நீங்கள் சிதேக்கியாவுக்குச் சொல்லவேண்டியது ...." (எரே 21:3-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீங்கள் யுத்தம்பண்ணும்படி உங்கள் கைகளில் பிடித்திருக்கிற யுத்த ஆயுதங்களை நான் திருப்பிவிடுவேன். (எரே 21:4).

2. அவர்களை இந்த நகரத்தின் நடுவிலே சேர்ப்பேன்.

3. நான் நீட்டின கையினாலும் பலத்த புயத்தினாலும் கோபமும் உக்கிரமும் மகா கடுமையாக உங்களோடே யுத்தம் பண்ணுவேன். (எரே 21:5).

4. இந்த நகரத்தின் குடிகளையும், மனுஷரையும், மிருகங்களையும் சங்கரிப்பேன் (எரே 21:6).

5. அதற்குப்பின்பு நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும், அவன் ஊழியக்காரரையும், ஜனத்தையும், இந்த நகரத்திலே கொள்ளை நோய்க்கும் பட்டயத்துக்கும் பஞ்சத்துக்கும் தப்பி மீதியானவர்களையும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய கையிலும், அவர்கள் சத்துருக்களின் கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன் (எரே 21:7).

6. அவன் அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டுவான்.

7. அவன் அவர்களைத் தப்பவிடுவதுமில்லை, அவன் மன்னிப்பதுமில்லை,இரங்குவதுமில்லை.

8. நான் உங்கள் முன்னே ஜீவவழியையும் மரணவழியையும் வைக்கிறேன். இந்த நகரத்திலே தரிக்கிறவன் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான். உங்களை முற்றிக்கைபோடும் கல்தேயர் வசமாய்ப் புறப்பட்டுப் போய் விடுகிறவனோ பிழைப்பான் (எரே 21:8-9).

எரேமியா - தொகுப்புரை

21 அதிகாரம்

9. என் முகத்தை இந்த நகரத்துக்கு விரோதமாய் நன்மைக்கு அல்ல, தீமைக்கே வைத்தேன். அது பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப் படும். (எரே 21:10).

10. அவன் அக்கினியால் அதைச் சுட்டெரிப்பான்.

11. நான் உங்கள் கிரியைகளின் பலனுக்குத் தக்கதாய் உங்களை விசாரிப்பேன். (எரே 21:14).

12. நான் அதின் காட்டிலே தீக்கொளுத்துவேன்; அது அதைச் சுற்றிலுமுள்ள யாவையும் பட்சிக்கும்.

எரேமியா தைரியமாகக் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறார். இதனால் யூதர்கள் கோபமடைந்து எரேமியாவிற்கு விரோதமாக எழும்புகிறார்கள். தேசத்துரோக வார்த்தைகளைக் கூறுவதாக எரேமியாவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள். எரேமியா கூறியது அவருடைய சொந்த வார்த்தையல்ல. அது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தருடைய தெய்வீக நீதி நிறைவேறும்.

(ஆ) ஜீவவழியும் மரணவழியும்

எரே 21:8 பின்னையும் அவர், இந்த ஜனங்களை நோக்கி: இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும் மரணவழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 21:9 இந்த நகரத்திலே தரிக்கிறவன் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் சாவான்; உங்களை முற்றிக்கைபோடும் கல்தேயர் வசமாய்ப் புறப்பட்டுப் போய்விடுகிறவனோ பிழைப்பான்; அவன் பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளை பொருளைப் போல் இருக்கும்.

எரே 21:10 என் முகத்தை இந்த நகரத்துக்கு விரோதமாய் நன்மைக்கு அல்ல, தீமைக்கே வைத்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அது பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப் படும்; அவன் அக்கினியால் அதைச் சுட்டெரிப்பானென்று சொல் என்றார்.

யூதா அழிக்கப்படும் வழிகள்

1. பட்டயம்

2. பஞ்சம்

3. கொள்ளைநோய்

"அவன் பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளைபொருளைப்போல் இருக்கும்" - கல்தேயருடைய சிறையிருப்புக்குப் போனால் மட்டுமே யூதா தேசத்தாரின் ஜீவன் தப்பும். தங்கள் தேசத்தில் அவர்கள் தங்கியிருந்தால் அவர்கள் அங்கு மரித்துப் போவார்கள். (எரே 21:9-10).

(இ) சிதேக்கியாவிற்கு கட்டளைகள்

எரே 21:11 யூதாராஜாவின் குடும்பத்தாரையும் நோக்கி: கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 21:12 தாவீதின் குடும்பத்தாரே, உங்கள் செய்கைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப் போல் புறப்பட்டு, அவிக்கிறவன் இல்லாமல் எரியாதபடிக்கு, நீங்கள் ஏற்கனவே நியாயங்கேட்டு, பறி கொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 21:13 இதோ, பள்ளத்தாக்கில் வாசம்பண்ணுகிறவளே, சமனான இடத்தில் கன்மலையாய் இருக்கிறவளே, எங்களுக்கு விரோதமாய் வருகிறவன் யார் என்றும், எங்கள் வாசஸ்தலங்களுக்குள் வருகிறவன் யார் என்றும் சொல்லுகிற உனக்கு நான் எதிராளியாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா - தொகுப்புரை

21 அதிகாரம்

எரே 21:14 நான் உங்கள் கிரியைகளின் பலனுக்குத்தக்கதாய் உங்களை விசாரிப்பேன்; நான் அதின் காட்டிலே தீக்கொளுத்துவேன்; அது அதைச் சுற்றிலுமுள்ள யாவையும் பட்சிக்கும் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

"யூதாராஜா" - இக்காலத்தில் சிதேக்கியா யூதாவின் ராஜாவாக இருக்கிறான். (எரே 21:1,11-14; 2இராஜா 24:17-30).

"ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்" - ராஜாவும், அவனுடைய ஜனங்களும் இந்தச் சூழ்நிலையிலும்கூட கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் கர்த்தருடைய இரக்கமும், கிருபையும் அவர்கள்மீது வரும். ஜனங்கள் நீதியைச் செய்ய வேண்டுமென்று தெரிந்தெடுக்க வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. ஆகையினால் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு தொடர்கிறது. (எரே 21:12-14).

"நான் அதின் காட்டிலே தீக்கொளுத்துவேன்" - இந்த வாக்கியம் எரே 52:13 ஆவது வசனத்தில் நிறைவேறிற்று.

22 அதிகாரம்

(3) தேவன் யூதாவை இன்னும் மீட்பார் - எட்டு நிபந்தனைகள் -

(ஏசா 1:19)

எரே 22:1 கர்த்தர் சொன்னது: நீ யூதா ராஜாவின் அரமனைக்குப்போய், அங்கே சொல்லவேண்டிய வசனம் என்னவென்றால்.

எரே 22:2 தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற யூதாவின் ராஜாவே, நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இந்த வாசல்களுக்குள் பிரவேசிக்கிற உம்முடைய ஜனமும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 22:3 நீங்கள் நியாயமும் நீதியும் செய்து, பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்; நீங்கள் பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், கொடுமைசெய்யாமலும், இவ்விடத்தில் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தாமலும் இருங்கள்.

எரே 22:4 இந்த வார்த்தையின்படியே நீங்கள் மெய்யாய்ச் செய்வீர்களாகில், தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாக்கள் இரதங்கள் மேலும் குதிரைகள்மேலும் ஏறி, அவனும் அவன் ஊழியக்காரரும் அவன் ஜனமுமாக இந்த அரமனை வாசல்களின் வழியாய் உட்பிரவேசிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 44

"கர்த்தர் சொன்னது: நீ யூதா ராஜாவின் அரமனைக்குப்போய், அங்கே சொல்ல வேண்டிய வசனம் என்னவென்றால்........" (எரே 22:1-30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளாமற் போனீர்களேயாகில் இந்த அரமனை பாழாய்ப்போம். கேட்டால் தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாக்கள் உங்களுக்கு இருப்பார்கள். (எரே 22:1-5)
2. நான் உன்னை வனாந்தரத்தைப்போல ஆக்கிவிடுவேன். (எரே 22:6).
3. நான் உன்னைக் குடியில்லாத பட்டணங்களைப்போல ஆக்கிவிடுவேன்.
4. சங்காரக்காரரை அவரவர் ஆயுதங்களோடுங்கூட நான் உனக்கு விரோதமாக ஆயத்தப்படுத்துவேன் (எரே 22:7).
5. உன் உச்சிதமான கேதுருக்களை அவர்கள் வெட்டி, அக்கினியிலே போடுவார்கள்.
6. அநேகம் ஜாதிகள் இந்த நகரத்தைக் கடந்துவந்து இந்தப் பெரிய நகரத்துக்குக் கர்த்தர் இப்படிச்செய்தது என்னவென்று கேட்பார்கள். (எரே 22:8).
7. அதற்குப் பிரதியுத்தரமாக: அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் உடன்படிக்கையை விட்டுவிட்டு, அந்நிய தேவர்களைப் பணிந்துகொண்டு, அவைகளுக்கு ஆராதனைசெய்த படியினால் இப்படியாயிற்று என்பார்கள். (எரே 22:9).
8. சிறைப்பட்டுப் போனவனுக்காகவே அழுங்கள்; அவன் (யோவாகாஸ்) இனித் திரும்பிவருவதுமில்லை, தன் ஜநந பூமியைக் காண்பதுமில்லை. (எரே 22:10-11).
9. தான் கொண்டுபோகப்பட்ட ஸ்தலத்திலே மரிப்பான் (எரே 22:12; 2இராஜா 23:30-34).
10. யோயாக்கீமிற்காகப் புலம்புவார்கள். (எரே 22:18).

22 அதிகாரம்

11. ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப் படுவான். (எரே 22:19).

12. உன் நேசர் அனைவரும் முறிந்தார்கள். (எரே 22:20).

13. உன் மேய்ப்பர்கள் எல்லாரையும் காற்று அடித்துக்கொண்டுபோகும். (எரே 22:22).

14. உன் நேசர் சிறைப்பட்டுப்போவார்கள்

15. அப்போது உன் எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் நீ வெட்கப்பட்டு இலச்சையடைவாய்.

16. லீபனோனில் வாசமாய் இருக்கிறவர்களுக்கு வேதனைகளும், வாதையும் வரும். (எரே 22:23).

17. என் வலது கையின் முத்திரை மோதிரமாயிருந்த கோனியாவைக் கழற்றி எறிந்து போடுவேன் (எரே 22:24).

18. உன் சத்துருக்கள் கையில் உன்னை ஒப்புக்கொடுப்பேன். (எரே 22:25).

19. உங்களை உங்கள் ஜநநபூமியல்லாத அந்நியதேசத்திலே (பாபிலோன்) துரத்தி விடுவேன். அங்கே சாவீர்கள். (எரே 22:26).

20. திரும்புவதற்குத் தங்கள் ஆத்துமா வாஞ்சிக்கும் தேசத்துக்கு அவர்கள் (ராஜாவும், அவனுடைய தாயாரும்) திரும்பவருவதில்லை. (எரே 22:27).

21. அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப் போகிறதில்லை (எரே 22:30).

யூதாவின் ராஜாக்களுக்குக் கூறப் பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் நியாயமும் நீதியும் செய்யுங்கள்.

2. பறி கொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்.

3. கொடுமைசெய்யாதிருங்கள்.

4. நீங்கள் பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமல் இருங்கள்.

5. இவ்விடத்தில் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தாமலும் இருங்கள்.

எரே 22 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீ யூதா ராஜாவின் அரமனைக்குப்போய் அங்கே இந்த வார்த்தைகளைச் சொல். (எரே 22:1).

2. கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். (எரே 22:2).

3. மரித்தவனுக்காக அழவேண்டாம். (எரே 22:10).

4. அவனுக்காகப் பரிதபிக்க வேண்டாம்.

5. சிறைப்பட்டுப் போனவனுக்காகவே அழுங்கள்.

6. லீபனோனின் மேலேறிப் புலம்புங்கள். (எரே 22:20).

7. பாசானில் உரத்த சத்தமிடுங்கள்.

8. ஆபரீமிலிருந்து கூப்பிட்டுக் கொண்டிருங்கள்.

9. இந்தப் புருஷன் சந்தானமற்றவன் என்று இவனைக் குறித்து எழுதுங்கள். (எரே 22:30).

"இந்த வார்த்தையின்படியே நீங்கள் மெய்யாய்ச் செய்வீர்களாகில்" - கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிந்தால், யூதாவில் சமாதானமும், சம்பூரணமும், ராஜரீகமும் தொடர்ந்து நிலைத்திருக்கும். கீழ்ப்படியாவிட்டால் ராஜாவின் அரமனை பாழாய்ப்போகும். (எரே 22:4-5).

22 அதிகாரம்

(4) ஏழு நியாயத்தீர்ப்புகள்

எரே 22:5 நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளாமற்போனீர்களேயாகில் இந்த அரமனை பாழாய்ப்போம் என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 22:6 யூதா ராஜாவின் அரமனையைக் குறித்துக் கர்த்தர்: நீ எனக்குக் கீலேயாத்தைப் போலவும் லீபனோனின் கொடுமுடியைப்போலவும் இருக்கிறாய்; ஆனாலும் மெய்யாகவே நான் உன்னை வனாந்தரத்தைப் போலவும், குடியில்லாத பட்டணங்களைப் போலவும் ஆக்கிவிடுவேன்.

எரே 22:7 சங்காரக்காரரை அவரவர் ஆயுதங்களோடுங்கூட நான் உனக்கு விரோதமாக ஆயத்தப்படுத்துவேன்; உன் உச்சிதமான கேதுருக்களை அவர்கள் வெட்டி, அக்கினியிலே போடுவார்கள்.

எரே 22:8 அநேகம் ஜாதிகள் இந்த நகரத்தைக் கடந்துவந்து, அவனவன் தன்தன் அயலானை நோக்கி: இந்தப் பெரிய நகரத்துக்குக் கர்த்தர் இப்படிச் செய்தது என்னவென்று கேட்பார்கள்.

எரே 22:9 அதற்குப் பிரதியுத்தரமாக: அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் உடன்படிக்கையை விட்டுவிட்டு, அந்நிய தேவர்களைப் பணிந்துகொண்டு, அவைகளுக்கு ஆராதனை செய்த படியினால் இப்படியாயிற்று என்பார்கள் என்று சொல்லுகிறார்.

"சங்காரக்காரர்" - இது கல்தேயரைக் குறிக்கும் வார்த்தையாகும். (எரே 21:4).

யூதாவின் அழிவிற்குக் காரணம்

1. தேவனாகிய கர்த்தரின் உடன்படிக்கையை விட்டுவிட்டார்கள்.

2. அந்நிய தேவர்களைப் பணிந்துகொண்டு, அவைகளுக்கு ஆராதனைசெய்தார்கள்.

3. சல்லூமுக்கு எதிராக - (2இராஜா 23:30-34; 1நாளா 3:15)

எரே 22:10 மரித்தவனுக்காக அழ வேண்டாம், அவனுக்காகப் பரிதபிக்கவும் வேண்டாம்; சிறைப்பட்டுப் போனவனுக்காகவே அழுங்கள்; அவன் இனித் திரும்பிவருவதுமில்லை, தன் ஜநந பூமியைக் காண்பதுமில்லை.

எரே 22:11 தன் தகப்பனாகிய யோசியாவின் பட்டதுக்கு வந்து, அரசாண்டு, இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போன யூதாவின் ராஜாவாயிருந்த யோசியாவின் குமாரனாகிய சல்லூமைக்குறித்து: அவன் இனி இங்கே திரும்ப வராமல்,

எரே 22:12 தான் கொண்டுபோகப்பட்ட ஸ்தலத்திலே மரிப்பான்; இந்த தேசத்தை அவன் இனிக் காண்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

"சிறைப்பட்டுப்போனவன்" - இது சல்லூம் அல்லது யோவாகாசைக் குறிக்கும். (2இராஜா 23:30-34).

4. யோயாக்கீமிற்கு எதிராக - (2இராஜா 23:34-25:5; 2நாளா 26:5-8)

எரே 22:13 தனக்கு விஸ்தாரமான வீட்டையும், காற்று வீசும் விசாலமான மேலறைகளையும் கட்டுவேனென்று சொல்லி, பலகணிகளைத் தனக்குத் திறந்து, கேதுரு பலகைகளை வைத்து, ஜாதிலிங்கவருணம் பூசி,

எரேமியா - தொகுப்புரை

22 அதிகாரம்

எரே 22:14 அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலி கொடாமல், அவனைச் சும்மா வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ!

எரே 22:15 நீ கேதுருமர மாளிகைகளில் உலாவுகிறபடியினாலே ராஜாவாயிருப்பாயோ? உன் தகப்பன் போஜன பானம்பண்ணி, நியாயமும் நீதியுஞ்செய்தபோது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ?

எரே 22:16 அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 22:17 உன் கண்களும் உன் மனதுமோவென்றால் தற்பொழிவின் மேலும், குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்துவதின் மேலும், இடுக்கமும் நொறுக்குதலும் செய்வதின்மேலுமே அல்லாமல் வேறொன்றின்மேலும் வைக்கப்படவில்லை.

எரே 22:18 ஆகையால் கர்த்தர் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவின் ராஜாவைக்குறித்து: ஐயோ! என் சகோதரனே, ஐயோ! சகோதரியே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை; ஐயோ! ஆண்டவனே, ஐயோ! அவருடைய மகத்துவமே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை.

எரே 22:19 ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான் என்று சொல்லுகிறார்.

யோயாக்கீமின்மீது தீங்குவரக் காரணம் (எரே 22:13-14)

1. தனக்கு விஸ்தாரமான வீட்டைப் பெருமையினால் திட்டம் பண்ணினான்.
2. தன்னுடைய வீட்டில் பலகணிகளைத் தனக்குத்திறந்து, கேதுரு பலகைகளை வைத்து, ஜாதிலிங்கவருணம் பூசினான். இவை எல்லாம் பெருமையினாலும், மன மேட்டிமையினாலும் செய்யப்பட்டது.
3. அநீதியினாலே தன் வீட்டைக் கட்டினான்.
4. அநியாயத்தினாலே தன் மேலறைகளைக் கட்டினான்.
5. தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலிகொடாமல் இருந்தான்.
6. அவனைச்சும்மா வேலைகொண்டான்.

ஒருவன் தனக்கு வீட்டைக் கட்டுவது தவறல்ல. ஆனால் தன்னுடைய வீட்டை யாரும் வீண் பெருமையினாலும், அகந்தையினாலும் கட்டக்கூடாது. அநீதியினாலும், அநியாயத்தினாலும் சம்பாத்தியம் பண்ணி, வீட்டைக் கட்டுவது தவறு. வீட்டைக் கட்டும் வேலையாட்களுக்கு உரிய சம்பளத்தைக் கொடுக்காமல் அவர்களை வஞ்சிப்பதும் தவறான காரியமாகும்.

"உன் தகப்பன்" - யோசியா. இவன் பக்தியுள்ள ராஜா. (2 இராஜா 22:1-23:34).

யோசியாவின் நற்கிரியைகள் (எரே 22:15-17)

1. அவன் நியாயமும் நீதியுஞ்செய்தான்.
2. அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்.

யோயாக்கீமின் துர்க்கிரியைகள்

1. அவன் கண்களும், அவன் மனதும் தற்பொழிவின்மீது வைக்கப்பட்டிருக்கிறது. (எரே 22:17)
2. குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினான்.

22 அதிகாரம்

3. ஜனங்களை ஒடுக்கினான். (எரே 22:3,13,17).

4. தன்னுடைய தேசத்தாரை நொறுக்கினான். (எரே 22:3,17).

"ஆகையால் கர்த்தர் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவின் ராஜாவைக்குறித்து" - எரே 22:3,13-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாவங்களுக்காக யோயாக்கீமின்மீது நியாயத் தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது. ஜனங்கள் அவனுக்காகப் புலம்பமாட்டார்கள். அவன் ஏராளமான பாவங்களைச் செய்தான். ஆகையினால் அவனுடைய மரணத்திற்காக ஜனங்கள் மகிழ்ச்சி அடைவார்கள். ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான். இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியதாக வேதாகமத்தில் குறிப்பு எதுவுமில்லை. ஆனாலும் யூதாவின் ராஜாக்களில் இவன் அடக்கம்பண்ணப்படுவதைப் பற்றி ஒரு குறிப்பும் காணப்படவில்லை. (எரே 22:18-19; எரே 36:29-30; 2இராஜா 24:6). ஆகையினால் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியிருக்க வேண்டும்.

"ஐயோ! என் சகோதரனே, ஐயோ! சகோதரியே" - சகோதரனோ அல்லது சகோதரியோ அல்லது ஒரு உறவினரோ மரித்துப் போனால் இங்கு கூறப்பட்டிருக்கும் வார்த்தைகள் புலம்பலில் கூறப்படும். ஆனால் யோயாக்கீமின் மரணத்திற்காக யாரும் புலம்பல் பாடவில்லை.

5. கோனியாவிற்கு எதிராக - (2இராஜா 24:6-16; 25:27; 2நாளா 36:9)

எரே 22:20 லீபனோனின் மேலேறிப் புலம்பு, பாசானில் உரத்த சத்தமிடு, ஆபாரிமிலிருந்து கூப்பிட்டுக் கொண்டிரு; உன் நேசர் அனைவரும் முறிந்தார்கள்.

எரே 22:21 நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன், நீ கேளேன் என்றாய்; உன் சிறுவயதுமுதல் நீ என் சத்தத்தைக் கேளாமற்போகிறதே உன் வழக்கம்.

எரே 22:22 உன் மேய்ப்பர்கள் எல்லாரையும் காற்று அடித்துக் கொண்டு போகும்; உன் நேசர் சிறைப்பட்டுப் போவார்கள்; அப்போதல்லவோ உன் எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் நீ வெட்கப்பட்டு இலச்சையடைவாய்.

எரே 22:23 லீபனோனில் வாசமாயிருந்து, கேதுருமரங்களில் கூடுகட்டிக் கொண்டிருக்கிறவளே, வேதனைகளும் பிள்ளைப் பெறுகிறவளுக்கொத்த வாதையும் உனக்கு வருகையில், நீ எவ்வளவு பரிதபிக்கப்படத் தக்கவளாயிருப்பாய்!

எரே 22:24 யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா, என் வலது கையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றிஎறிந்துபோடுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 22:25 உன் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும், நீ பயப்படுகிறவர்களின் கையிலும் உன்னை ஒப்புக் கொடுப்பேன்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் கல்தேயரின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்.

எரே 22:26 உன்னையும், உன்னைப் பெற்ற தாயையும், உங்கள் ஜநநபூமியல்லாத அந்நியதேசத்திலே துரத்திவிடுவேன். அங்கே சாவீர்கள்.

எரே 22:27 திரும்புவதற்குத் தங்கள் ஆத்துமா வாஞ்சிக்கும் தேசத்துக்கு அவர்கள் திரும்பவருவதில்லை.

எரேமியா - தொகுப்புரை

22 அதிகாரம்

எரே 22:28 கோனியா என்கிற இந்த மனுஷன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலையோ? ஒருவரும் விரும்பாத பாத்திரமோ? அவனும் அவன் சந்ததியும் தள்ளுண்டதும், தாங்கள் அறியாத தேசத்திலே துரத்திவிடப்பட்டதும் எது?

எரே 22:29 தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக் கேள்.

எரே 22:30 இந்தப்புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைக் குறித்து எழுதுங்கள்; அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப் போகிறதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசனம் கூறவேண்டிய இடங்கள்

1. பாலஸ்தீனத்தின் மேற்குப் பகுதியிலுள்ள லீபனோன்.
2. யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள பாசான்.
3. ஆபரீம் - யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள மலைப்பிரதேசம். இது தெற்கில் மோவாப் வரையிலும் பரவியுள்ளது. (எண் 27:12; எண் 33:37-38; உபா 32:49)

"நேசர்" - யூதா தேசத்தார்மீது பாபிலோன் படையெடுத்து வருகிறது. இவர்கள் கர்த்தரைத் தங்களுடைய பாதுகாப்பிற்காக நம்பாமல் மற்ற தேசங்களை நம்புகிறார்கள். அந்தத் தேசங்கள் இந்த வசனத்தில் "நேசர்" என்று கூறப்பட்டிருக்கிறது.

யூதாவின் பாவங்கள்

1. அநியாயமும், அநீதியும். (எரே 22:3,13)
2. ஒடுக்குதல் (எரே 22:3,13,17)
3. கொடுமை செய்தல் (எரே 22:3,13)
4. பரதேசியையும், திக்கற்றவனையும், விதவையையும் ஒடுக்குதல். (எரே 22:3,17)
5. குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்துதல்
6. வேலை செய்கிறவனுக்குக் கூலிகொடாமல் அவனைச் சும்மா வேலைகொள்ளுதல். (எரே 22:14)
7. பெருமை (எரே 22:14-15)
8. தற்பொழிவு (எரே 22:17)
9. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க மறுப்பது. (எரே 22:21)
10. தேவனுக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படியாமல் இருப்பது.

"உன் மேய்ப்பர்கள் எல்லாரையும் காற்று அடித்துக்கொண்டுபோகும்" - மேய்ப்பர்கள் என்பது ராஜாக்களையும், ஆட்சியாளர்களையும் குறிக்கும். இந்தக் காற்று நியாயத்தீர்ப்பின் காற்றாகும். இது யூதா தேசத்தாரையும், அவர்கள் கர்த்தரை நம்பாமல் யாரை நம்பினார்களோ அந்தத் தேசத்தாரையும் சிறையிருப்புக்கு அடித்துக் கொண்டு போகும்.

"உன் எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் நீ வெட்கப்பட்டு இலச்சையடைவாய்" - தன்னுடைய பொல்லாப்பிற்காக யூதா வெட்கப்படும். லீபனோன் பிள்ளைப் பெறுகிறவளுக்கொத்த வாதை அடையும்.

"யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா" - யோயாக்கீன் இங்கு கோனியா என்று அழைக்கப்படுகிறான். இந்தப் பெயருக்குக் "கர்த்தர் ஸ்தாபிக்கிறார்" **"Jehovah establishes"** என்று பொருள்.

எரேமியா - தொகுப்புரை

22 அதிகாரம்

மறுபெயர்கள் எகோனியா (Jeconiah) (1நாளா 3:16) எகோனியா (Jechonias) (மத் 1:11-12). இவன் யூதாவின்மீது மூன்று மாதங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் நேபுகாத்நேச்சார் எருசலேமிற்கு விரோதமாக வந்து, அவனையும், தேசத்திலுள்ள பிரபுக்களையும் சிறைப்பிடித்துச் சென்று விட்டான். (2இராஜா 24:3-16). கோனியாவின் ஸ்தானத்தில் நேபுகாத் நேச்சார் சிதேக்கியாவை ராஜாவாக்கினான். (2இராஜா 24:17-20). எகோனியாவின் பெயரில் "எ" "Je" என்னும் முன்னொட்டு prefix நீக்கப்பட்டிருக்கிறது. "Je" என்பது கர்த்தரைக் (Jehovah) குறிக்கும் சுருக்க வார்த்தையாகும். கோனியா கர்த்தருடைய கையின் முத்திரை மோதிரமாக இருந்தான். ஆனாலும் கர்த்தர் அவனைக் கழற்றி எறிந்துபோட சித்தம் கொண்டார். கோனியாவும், அவனுடைய தாயாரும் பாபிலோனின் சிறையிருப்புக்குச் சென்றார்கள். அந்தத் தேசத்திலேயே அவர்கள் மரித்துப் போனார்கள். (எரே 22:25-27).

பாத்திரம் (vessel, idol) - עֶצֶב - eh'-tseb - 6089

ஆண்பால் பெயர்ச்சொல் - கலசம், பாத்திரம்

"தேசமே! தேசமே! தேசமே!" - யோயாக்கீனைக் குறித்து கூறப்பட்டிருக்கும் காரியங்கள் மிகவும் முக்கியமானவை. ஆகையினால் "தேசம்" என்னும் வார்த்தை மூன்று முறை வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

"இந்தப்புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன்" - யோயாக்கீன் அல்லது கோனியாவின்மீது கர்த்தருடைய சாபம் வருகிறது. தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிவதற்குக் கோனியாவிற்குச் சந்தானம் யாரும் இருக்கமாட்டார்கள். அவனுடைய சந்ததியில் ஒருவனும் யூதாவை ஆட்சி செய்யமாட்டான். இதனால் தாவீதின் சந்ததியில் ஆட்சி புரிகிறவர்கள் கோனியாவோடு முடிவடைகிறார்கள். மேசியா தாவீதின் சந்ததியில் வரும் நித்திய ராஜாவாக இருக்கிறார். அவர் யூதருடைய ராஜாவாக இருப்பார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் தாவீதின் சிங்காசனத்தில் நித்தியமாக அமர்ந்து ஆட்சி புரிவார். கோனியாவின் சந்ததியில் யாரும் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சி புரியமாட்டார்கள்.

ஆனால் இயேசு கிறிஸ்து தாவீதின் சந்ததியில் வருகிறார். இயேசுவின் தாயார் மரியாள். இவளுடைய கணவர் யோசேப்பு. கோனியாவின் வம்சத்தில் கூறப்பட்டிருக்கும் சாபத்தின் நிமித்தமாக அவனுடைய சந்ததியில் யாரும் ஆட்சி புரியமாட்டார்கள். ஆகையினால் யோசேப்பின் வம்சத்தில் வருகிறவரும் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிய மாட்டார். ஆனால் இயேசு கிறிஸ்துவோ யோசேப்பிற்குப் பிறக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரால் பிறந்தவர். மரியாள் இயேசுவைக் கர்ப்பந்தரித்தாள். மரியாள் நாத்தானுடைய வம்சத்தின் மூலமாகத் தாவீதின் சந்ததியில் வருகிறாள். இதனால் இயேசு கிறிஸ்து தேவனாகவும், மனுஷனாகவும் இருந்து, தாவீதின் சிங்காசனத்தில் அமர்கிறார். (மத் 1:1-18; லூக்கா 1:23-38).

கோனியாவிற்கு ஆறு குமாரர்கள் பிறந்தார்கள். யோசேப்பின் காலம் வரையிலும் அவனுடைய சந்ததியார் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். (1நாளா 3:17-18; மத் 1:1-18). ஆகையினால் கோனியா சந்தானமற்றவன் என்னும் வாக்கியம் அவனுடைய சந்ததியில் யாரும் தாவீதின் சிங்காசனத்தில் அமரவில்லை என்று பொருள்படும்.

23 அதிகாரம்

6. மேய்ப்பர்களுக்கு எதிராக - (எசே 13; 22; 34; உபா 13)

(1) விசுவாசமில்லாத மேய்ப்பர்களுக்கு ஐயோ - நான்கு பாவங்கள்

எரே 23:1 என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:2 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்திவிட்டீர்கள்; இதோ, நான் உங்கள் பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 45

"என் மேய்ச்சலின் ஆடுகளைக்கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ!......" (எரே 23:1-8) எரே 23:1-2 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 23:3-8 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உங்கள்பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்பேன் (எரே 23:1-2).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நான் என் ஆடுகளில் மீதியாயிருப்பவைகளைத்துரத்திவிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து சேர்ப்பேன். (எரே 23:3).
2. அவைகளைத் திரும்ப அவைகளின் தொழுவங்களுக்குக் கொண்டுவருவேன்.
3. அவைகள் பலுகிப்பெருகும்.
4. அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவைகள் மேல் ஏற்படுத்துவேன் (எரே 23:4).
5. இனி அவைகள் பயப்படுவதுமில்லை.
6. இனி அவைகள் கலங்குவதில்லை
7. இனி அவை காணாமற்போவதுமில்லை.
8. தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன் (எரே 23:5).
9. அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணுவார்.
10. பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.
11. அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும் (எரே 23:6).
12. அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே.
13. இதோ, நாட்கள் வரும், அப்பொழுது..... அவர்களைத் துரத்திவிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து அழைத்து வழிநடத்திக் கொண்டு வந்த கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம் பண்ணுவார்கள். (எரே 23:7,8).
14. இஸ்ரவேல் வீட்டின் சந்ததியார் தங்கள் சுயதேசத்தில் குடியிருப்பார்கள்.

23 அதிகாரம்

மேய்ப்பர்களின் பாவங்கள் (எரே 23:1-2)

1. ஆடுகளைப் பராமரியாமல் இருக்கிறார்கள்.
2. அவைகளைச் சிதறடித்து விட்டார்கள்.
3. அவைகளைத் துரத்திவிட்டார்கள்.
4. ஆடுகளைக் கெடுத்துவிட்டார்கள்.

2) மேசியாவின் கீழ் மீதியாக இருப்பவர்களின் பதினான்கு அம்ச மீட்பு - (ஏசா 1:9)

எரே 23:3 நான் என் ஆடுகளில் மீதியாயிருப்பவைகளைத்துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து சேர்த்து, அவைகளைத் திரும்ப அவைகளின் தொழுவங்களுக்குக் கொண்டு வருவேன்; அப்பொழுது அவைகள் பலுகிப்பெருகும்.

எரே 23:4 அவைகளை மேய்க்கத் தக்கவர்களையும் அவைகள்மேல் ஏற்படுத்துவேன்; இனி அவைகள் பயப்படுவதுமில்லை,கலங்குவதுமில்லை, காணாமற்போவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:5 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

எரே 23:6 அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே.

எரே 23:7 ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம்பண்ணாமல்,

எரே 23:8 இஸ்ரவேல் வீட்டின் சந்ததியாரைத் தங்கள் சுயதேசத்தில் குடியிருக்கும்படிக்கு வடதேசத்திலும், நான் அவர்களைத் துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து அழைத்து வழிநடத்திக் கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம் பண்ணுவார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என் ஆடுகளில் மீதியாயிருப்பவைகளைத் துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து சேர்த்து" - இஸ்ரவேல் புத்திரரின் எல்லாக் கோத்திரங்களிலும்மீதியாயிருக்கிறவர்களைக் கர்த்தர் அவர்களுடைய சுயதேசத்திற்குத் திரும்பக் கொண்டுவருவார்.

"மேய்க்கத்தக்கவர்கள்" - ஜனங்களை ஆட்சி செய்கிறவர்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. ஆயிரம் வருஷ அரசாட்சியில் இஸ்ரவேலை ஆளுகை செய்கிறவர்களின் விவரம்.

1. இயேசு கிறிஸ்து - ராஜாதி ராஜா. (எரே 23:5-8, சங் 2; ஏசா 9:6-7; ஏசா 32:1-5; ஏசா 42:1-6; எசே 43:7; தானி 2:44-45; தானி 7:13-14; சக 6:12-13; சக 14:9; மத் 25:31-46; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10)
2. தாவீது - இயேசு கிறிஸ்துவின் கீழ் - எல்லாக் கோத்திரத்தாரையும் ஆளுகை செய்வார். (எரே 30:9; எசே 34:24; எசே 37:24-28; ஓசி 3:4-5)
3. பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் - ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோத்திரத்தாரை ஆட்சி புரிவார்கள். (மத் 19:28; லூக்கா 22:29-30)
4. பூமிக்குரிய ராஜாக்கள் - உயிர்த்தெழுந்தபரிசுத்தவான்களுக்குக் கீழ் இவர்கள் இஸ்ரவேலை ஆட்சி புரிவார்கள். (எசே 43:7; வெளி 21:24).

23 அதிகாரம்

5. உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் - இவர்கள் புறஜாதி தேசங்கள் அனைத்தையும் நித்திய காலமாக ஆட்சி புரிவார்கள். (தானி 7:18,22,27; சங் 149:4-9; 2கொரி 4:8; 2கொரி 6:2; ரோமர் 8:17; எபே 2:7; 2தீமோ 2:12; வெளி 1:6; வெளி 2:25-27; வெளி 5:9-10; வெளி 11:18; வெளி 12:5; வெளி 20:4-6; வெளி 22:4-5).

6. பூமிக்குரிய ராஜாக்கள் - உயிர்த்தெழுந்தபரிசுத்தவான்களுக்குக் கீழ் இவர்கள் புறஜாதியாரை ஆட்சி புரிவார்கள். (வெளி 21:24).

"கிளை" - இந்தக் கிளை தாவீதின் வேரிலிருந்து எழும்புகிறது. வேறு கிளையிலிருந்து இந்தக் கிளை எழும்பவில்லை. (எரே 23:5; எரே 33:15; ஏசா 11:1; ஏசா 53:2; சக 3:8; சக 6:12).

"அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்" - தாவீதின் ராஜவம்சம் தற்காலிகமாக ராஜரீகத்தை இழந்துபோகும். கோனியாவின் மூலமாக வரும் சந்ததியார் யாரும் தாவீதின் சிங்காசனத்தில் அமர மாட்டார்கள். இயேசு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தை யோசேப்பின் மூலமாகப் பெற்றுக் கொள்கிறார். இவர் சாலொமோன், கோனியா ஆகியோரின் மூலமாக வந்த தாவீதின் வித்து அல்ல. இயேசு கிறிஸ்து தேவனால் பிறந்திருக்கிறவர். ஸ்திரீயின் வித்தாக வந்திருக்கிறவர். மரியாள் நாத்தானின் வம்சத்தின் மூலமாகத் தாவீதின் சந்ததியில் வருகிறாள். இவ்வாறாக, இயேசு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிய தகுதியுடையவராக இருக்கிறார். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது தம்முடைய ராஜ்யத்தை நித்திய காலமாக ஆட்சிபுரிவார். (எரே 23:5-6; ஏசா 9:6-7; ஏசா 32:1; எசே 43:7; தானி 7:13-14; சக 6:12-13; சக 14:9; லூக்கா 1:32-33; அப் 15:13-18; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5).

(3) தீர்க்கதரிசிகளின் எட்டு பாவங்கள்

எரே 23:9 தீர்க்கதரிசிகளினிமித்தம் என் இருதயம் என் உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது; என் எலும்புகளெல்லாம் அதிருகிறது; கர்த்தர்நிமித்தமும், அவருடைய பரிசுத்த வார்த்தைகளினிமித்தமும் நான் வெறித்திருக்கிற மனுஷனைப்போலவும் மதுபானம் மேற்கொண்டவனைப் போலவும் இருக்கிறேன்.

எரே 23:10 தேசம் விபசாரக்காரரால் நிறைந்திருக்கிறது, தேசம் சாபத்தினால் துக்கிக்கிறது, வனாந்தரத்தின் மேய்ச்சல்கள் வாடிப்போகிறது; அவர்கள் ஓட்டம் பொல்லாதது; அவர்கள் பெலன் அநியாயமாயிருக்கிறது.

எரே 23:11 தீர்க்கதரிசியும் ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள்; என் ஆலயத்திலும் அவர்களுடைய பொல்லாப்பைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:12 ஆதலால், அவர்கள் வழி அவர்களுக்கு இருட்டிலே சறுக்கலான வழியாயிருக்கும், துரத்துண்டு அதிலே விழுவார்கள்; அவர்கள் விசாரிக்கப்படும் வருஷத்திலே அவர்கள்மேல் பொல்லாப்பை வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:13 சமாரியாவின் தீர்க்கதரிசிகளிலோ மதிகேட்டைக் கண்டேன்; பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தை மோசம் போக்கினார்கள்.

எரே 23:14 எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன்; விபசாரம்பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத் திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள்; அவர்கள் எல்லாரும் எனக்குச் சோதோமைப்போலும், அதின் குடிகள் கொமோராவைப் போலும் இருக்கிறார்கள்.

23 அதிகாரம்

"தீர்க்கதரிசிகளினிமித்தம் என் இருதயம் என் உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது" - எரேமியா கர்த்தருடைய வார்த்தையில் நிறைந்திருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த வார்த்தைகள் எரேமியாவிற்குள் பூரணமாய் நிறைந்திருக்கிறது. ஆனால் யூதா தேசத்தாரோ பாவத்தில் நிறைந்திருந்திருக்கிறார்கள். எரேமியாவின் பரிசுத்தமான ஆத்துமா இதைக் காணும் போது நொறுங்கிப்போகிறது. (எரே 23:9-14).

தீர்க்கதரிசியின் பாவங்கள்

1. விபசாரம் (எரே 23:10,14)
2. சாபம் (எரே 23:10)
3. துன்மார்க்கம் (எரே 23:11)
4. மதிகேடு (எரே 23:13)
5. கள்ளத்தீர்க்கதரிசனங்கள்
6. ஜனத்தை மோசம்போக்குதல் (எரே 23:13,32)
7. வஞ்சகமாய் நடப்பது. (எரே 23:14)
8. பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துதல்.
9. ஜனங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்தல். (எரே 23:16)
10. தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுதல்.
11. கர்த்தரை அசட்டை பண்ணுகிறவர்களை உற்சாகப்படுத்துதல். (எரே 23:17)
12. தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் உற்சாகப்படுத்துதல்.
13. கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிப் பொய்த்தீர்க்கதரிசனம் உரைத்தல். (எரே 23:25)
14. தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுதல். (எரே 23:26)
15. கர்த்தருடைய நாமத்தை அவர்கள் மறக்கும்படி செய்தல். (எரே 23:27)
16. பாகாலினிமித்தம் கர்த்தருடைய நாமத்தை மறத்தல்.
17. ஒவ்வொருவராய்த் தன்தன் அயலாரிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைத் திருட்டுத்தனமாய் எடுத்தல். (எரே 23:30)
18. பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுதல். (எரே 23:32)

தீர்க்கதரிசன எண் - 48

"ஆதலால், அவர்கள் வழி அவர்களுக்கு இருட்டிலே சறுக்கலான வழியாயிருக்கும், துரத்துண்டு அதிலே விழுவார்கள்" (எரே 23:12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கள்ளத்தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் ஆகியோரின் வழி அவர்களுக்கு இருட்டிலே சறுக்கலான வழியாயிருக்கும். துரத்துண்டு அதிலே விழுவார்கள் (எரே 23:12)
2. அவர்கள் விசாரிக்கப்படும் வருஷத்திலே அவர்கள்மேல் பொல்லாப்பை வரப்பண்ணுவேன்.

(4) தீர்க்கதரிசிகள்மீது நியாயத்தீர்ப்பு

எரே 23:15 ஆதலால் சேனைகளின் கர்த்தர் தீர்க்கதரிசிகளைக்குறித்து: இதோ, நான் அவர்களுக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப் பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுப்பேன்; எருசலேமின் தீர்க்கதரிசிகளிலிருந்து மாயமானது தேசமெங்கும் பரம்பிற்றே என்று சொல்லுகிறார்.

எரேமியா - தொகுப்புரை

23 அதிகாரம்

எரே 23:16 உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்; அவர்கள் உங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:17 அவர்கள் என்னை அசட்டை பண்ணுகிறவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னாரென்று சொல்லுகிறதுமல்லாமல்; தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் நோக்கி: உங்கள்மேல் பொல்லாப்பு வராதென்றும் சொல்லுகிறார்கள்.

எரே 23:18 கர்த்தருடைய ஆலோசனையில் கூட நின்று, அவருடைய வார்த்தையைக் கேட்டறிந்தவன் யார்? அவருடைய வார்த்தையைக் கவனித்துக் கேட்டவன் யார்?

எரே 23:19 இதோ, கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல் புறப்பட்டது; அது துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமாய் மோதும்.

எரே 23:20 கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய கோபம் தணியாது, கடைசிநாட்களில் அதை நன்றாய் உணருவீர்கள்.

தீர்க்கதரிசன எண் - 47

"ஆதலால் சேனைகளின் கர்த்தர் தீர்க்கதரிசிகளைக் குறித்து:............" (எரே 23:15-22) எரே 23:15-19,21-22 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 23:20 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் அவர்களுக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப் பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுப்பேன். (எரே 23:15).
2. கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல் புறப்பட்டு, அது துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமாய் மோதும். (எரே 23:19).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய கோபம் தணியாது. (எரே 23:20).
2. கடைசிநாட்களில் அதை நன்றாய் உணருவீர்கள்.

"உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்" - எரே 23 ஆவது அதிகாரத்தில் இந்தக் கட்டளை மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. இதற்கு முந்திய அதிகாரங்களில் 8 முதல் 16 வரையிலும் கட்டளைகள் கூறப்பட்டுள்ளன.

வெளிப்பாடுகளின் ஆதாரம்

1. மனுஷருடைய ஆவி (எரே 23:16-17, 20,26,23; ஏசா 44:20; எசே 13:17; எபி 3:10)
2. பிசாசுகளின் ஆவிகளும், சாத்தானுடைய ஆவியும் (1சாமு 18:8-10; 1இராஜா 22:21-24; அப் 16:16; 1தீமோ 4:1; 1யோவான் 4:1-6)
3. பரிசுத்த ஆவியானவர் (அப் 3:21; 2கொரி 12:1-11; 2தீமோ 3:15-17; 2பேதுரு 1:21)

"கர்த்தருடைய வாக்கை அல்ல" - கர்த்தருடைய வாக்கு வேதவசனத்திற்கு ஒத்திருக்கும். வேதவசனத்திற்கு ஒத்துப்போகாத வார்த்தைகளெல்லாம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவையல்ல.

23 அதிகாரம்

"அவர்கள் என்னை அசட்டை பண்ணுகிறவர்களை நோக்கி" - கர்த்தருடைய வார்த்தை அவருடைய நீதிநெறிப் பிரமாணத்திற்கு ஒருபோதும் முரண்படாது. கள்ளத்தீர்க்கதரிசிகள் துன்மார்க்கருக்குச் சமாதானத்தை அறிவிக்கிறார்கள். ஆனால் துன்மார்க்கருக்கோ ஒருபோதும் சமாதானம் இல்லையென்று கர்த்தருடைய வார்த்தை தெளிவாகக் கூறுகிறது.

"இதோ, கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல் புறப்பட்டது" - கர்த்தருடைய நியாயத்தீர்ப்பே இங்கு பெருங்காற்றாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் காற்று ஏற்கெனவே கொடிய புசல் போல் புறப்பட்டுவிட்டது. அது துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமாய் மோதும். துன்மார்க்கருக்குச் சமாதானம் இராது. அப்போது கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் பொய் என்பது தெளிவாகும். (எரே 23:17-20).

(5) தீர்க்கதரிசிகளின் ஆறு பாவங்கள்

எரே 23:21 அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள்; அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

எரே 23:22 அவர்கள் என் ஆலோசனையிலே நிலைத்திருந்தார்களே யாகில், அப்பொழுது அவர்கள் என் வார்த்தைகளை ஜனங்களுக்குத் தெரிவித்து, அவர்களைத் தங்கள் பொல்லாத வழிகளையும் தங்கள் செய்கைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திருப்புவார்கள்.

எரே 23:23 நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:24 யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:25 சொப்பனங்கண்டேன், சொப்பனங்கண்டேன் என்று, என் நாமத்தைச் சொல்லிப் பொய்த் தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள் சொல்லுகிறதைக் கேட்டேன்.

எரே 23:26 எதுவரைக்கும் இப்படியிருக்கும்? பொய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் இருதயத்தில் ஏதாகிலுமுண்டோ? இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறவர்கள்.

எரே 23:27 என் ஜனத்தின் பிதாக்கள் பாகாலினிமித்தம் என் நாமத்தை மறந்ததுபோல, இவர்கள் தங்கள் அயலாருக்கு விவரிக்கிற தங்கள் சொப்பனங்களினாலே என் நாமத்தை அவர்கள் மறக்கும்படி செய்யப் பார்க்கிறார்கள்.

"அவர்கள் என் ஆலோசனையிலே நிலைத்திருந்தார்களேயாகில்" - ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்போது அவர்களுக்குச் சமாதானம் உண்டாகும். அவர்கள் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள்.

"சொப்பனங்கண்டேன்" - கள்ளத் தீர்க்கதரிசிகளுடைய சொப்பனங்கள் சொப்பனங்களாகவே இருக்கும். அவை ஆவிக்குரிய வெளிப்பாடுகள் அல்ல. கர்த்தருடைய வார்த்தை உண்மையாக இருக்கும். (எரே 23:28).

"என் நாமத்தைச் சொல்லிப் பொய்த்தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள்" - கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தில் பொய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். கர்த்தர் சில சமயங்களில் சொப்பனங்கள் மூலமாகப் பேசுகிறார்.கள்ளத்தீர்க்கதரிசிகள்தங்களுடைய சொப்பனங்களைக் கர்த்தரிடமிருந்து வந்த செய்தியாக அறிவிக்கிறார்கள்.

23 அதிகாரம்

தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்கள். இதைக் கேட்கும் ஜனங்கள் கர்த்தரை மறந்து விடுகிறார்கள். சொப்பனத்தின்மீதே அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். இதுபோலவே முற்காலத்திலும் முற்பிதாக்கள் கர்த்தரை மறந்து பாகாலின் பின்னாகச் சென்றார்கள். (எரே 23:26-27). சொப்பனங்கள் சோதித்துப் பார்க்கப்பட வேண்டும். அவை தேவனால் ஏவப்பட்டதா என்று நிரூபிக்கப்பட வேண்டும். (1கொரி 14:29; 1யோவான் 4:1).

(6) தீர்க்கதரிசிகளின் நியாயத்தீர்ப்பு

எரே 23:28 சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக; கோதுமைக்குமுன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:29 என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:30 ஆகையால், இதோ, ஒவ்வொருவராய்த் தன்தன் அயலாரிடத்தில் என் வார்த்தையைத் திருட்டுத்தனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:31 இதோ, தங்கள் நாவின் சொல்லையே வழங்கி: அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:32 இதோ, பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும், மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை; அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:33 கர்த்தராலே சுமரும் பாரம் என்னவென்று இந்த ஜனமாகிலும் ஒரு தீர்க்கதரிசியாகிலும் ஒரு ஆசாரியனாகிலும் உன்னைக் கேட்டால், உங்களைத் தள்ளிவிடுவேன் என்பதே பாரம் என்று நீ அவர்களுடனே சொல்லவேண்டும்.

எரே 23:34 கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிற தீர்க்கதரிசியாகிலும் ஆசாரியனாகிலும் ஜனமாகிலும் சரி, அப்படிச் சொல்லுகிற மனுஷனையும் அவன் வீட்டாரையும் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:35 கர்த்தர் என்ன மறு உத்தரவு கொடுத்தார்? கர்த்தர் என்ன சொன்னார்? என்று நீங்கள் அவரவர் தங்கள் அயலானையும் அவரவர் தங்கள் சகோதரனையும் கேட்பீர்களாக.

எரே 23:36 ஆனால் கர்த்தரால் சுமரும் பாரம் என்கிற சொல்லை இனி வழங்காதிருப்பீர்களாக, அவனவன் வார்த்தையே அவனவனுக்குப் பாரமாயிருக்கும்; அதேவென்றால், நமது தேவனாகிய சேனைகளின் கர்த்தர் என்கிற ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளைப் புரட்டுகிறீர்கள்.

எரே 23:37 கர்த்தர் உனக்கு என்ன மறுஉத்தரவு கொடுத்தார்? கர்த்தர் என்ன சொன்னார்? என்று நீ தீர்க்கதரிசியைக் கேட்பாயாக.

எரேமியா - தொகுப்புரை

23 அதிகாரம்

எரே 23:38 நீங்களோவெனில், கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிறபடியினாலே: கர்த்தரின் பாரம் என்று சொல்லாதிருங்களென்று நான் உங்களுக்குச் சொல்லி அனுப்பியும், நீங்கள் இந்த வார்த்தையைக் கர்த்தரின் பாரம் என்று சொல்லுகிறீர்களே.

எரே 23:39 ஆதலால், இதோ, நான் உங்களை மறக்கவே மறந்து, உங்களையும், நான் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த நகரத்தையும், எனக்கு முன்பாக இராதபடிக்குக் கைவிட்டு,

எரே 23:40 மறக்கப்படாத நித்திய நிந்தையையும், நித்திய இலச்சையையும் உங்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய வார்த்தையின் அடையாளம்

1. அக்கினி - இது உலோகத்தைச் சுத்திகரித்து புடமிடும். அதுபோல கர்த்தருடைய வார்த்தை மனுஷருடைய ஆத்துமாவைச் சுத்திகரிக்கும்.
2. கன்மலையை நொறுக்கும் சம்மட்டி - இருதயத்திற்குள் இருக்கும் தீமையான காரியங்கள் அனைத்தையும் கர்த்தருடைய வார்த்தை நொறுக்கி இருதயத்தைச் சுத்திகரிக்கும்.

கர்த்தர் யாருக்கு விரோதி?

1. வார்த்தையைத் திருட்டுத்தனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி (எரே 23:30).
2. தங்கள் நாவின் சொல்லையே வழங்கி: கர்த்தர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி (எரே 23:31).
3. பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும், மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி (எரே 23:32).

தீர்க்கதரிசன எண் - 48

"என் வார்த்தையைத் திருட்டுதனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்..........." (எரே 23:30-40) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. உங்களைத் தள்ளிவிடுவேன் (எரே 23:33,39).
2. கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிற மனுஷனையும் அவன் வீட்டாரையும் தண்டிப்பேன் (எரே 23:34).
3. அவனவன் வார்த்தையே அவனவனுக்குப் பாரமாயிருக்கும் (எரே 23:36).
4. நான் உங்களை மறக்கவே மறப்பேன். (எரே 23:39).
5. நான் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த நகரத்தைக் கைவிடுவேன்.
6. எனக்கு முன்பாக இராதபடிக்கு உன்னைக் கைவிடுவேன்.
7. மறக்கப்படாத நித்திய நிந்தையையும், நித்திய இலச்சையையும் உங்கள்மேல் வரபண்ணுவேன் (எரே 23:40)

கள்ளத்தீர்க்கதரிசிகளின் சுபாவங்கள்

1. ஒவ்வொருவராய்த் தன்தன் அயலாரிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைத் திருட்டுத்தனமாய் எடுக்கிறான். (எரே 23:30).
2. தங்கள் நாவின் சொல்லையே வழங்கி: கர்த்தர் அதை உரைத்தார் என்று சொல்லுகிறான். (எரே 23:31).

எரேமியா - தொகுப்புரை

23 அதிகாரம்

3. தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும் ஜனங்களை மோசம்போக்குகிறான். (எரே 23:32)

வீம்பு (lightness) - פחזות - pakh-az-ooth' - 6350

பெ.பெ.சொ. - வீம்பு **(frivolity; lightness; reckless boasting)**

"அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை" - கர்த்தரால் அனுப்பப்படாதவன் கர்த்தருடைய பிள்ளைகளுக்குப் பிரயோஜனமாய் இருக்க மாட்டான். கள்ளத்தீர்க்கதரிசிகளின் உபதேசங்களைப் பின்பற்றி அதன்படி ஜீவிக்கிறவனால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஒரு பிரயோஜனமும் இராது.

"கர்த்தராலே சுமரும் பாரம்" - ஏசாயா இந்த வார்த்தையை பலமுறை பயன்படுத்தியிருக்கிறார். எரேமியாவின் தீர்க்கதரிசனங்களில் இந்த வாக்கியம் அதிகமாகப் பயன்படுத்தப்படவில்லை. பாரம் என்பதற்குக் "கடினமான நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுவது" என்று பொருள். கள்ளத்தீர்க்கதரிசிகள் எரேமியாவின் வார்த்தைகளைத் திருட்டுத்தனமாகப் பயன்படுத்துகிறார்கள். இதற்காகக் கர்த்தர் தீர்க்கதரிசிகளையும், ஆசாரியர்களையும், ஜனங்களையும் தண்டிப்பார். (எரே 23:34). அவர்கள் கூறும் வார்த்தைகள் அவர்கள்மீது நிறைவேறும் வரைக்கும் கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு அவர்கள்மீது வந்திறங்கும். (எரே 23:35-36) கர்த்தருடைய வார்த்தையைப் புரட்டியதின் நிமித்தமாக அவர்கள் தங்களுக்கே பாரமாக இருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் மேல் மறக்கப்படாத நித்திய நிந்தையையும், நித்திய இலச்சையையும் வரப்பண்ணுவார். (எரே 23:37-40).

எரேமியா - தொகுப்புரை

24 அதிகாரம்

V. பாபிலோனிய சிறையிருப்பைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

1. அத்திப்பழங்களின் அடையாளம்

(1) இரண்டு அத்திப்பழக் கூடைகள் - நல்லதும் கெட்டதும்

எரே 24:1 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்கிற யூதாவின் ராஜாவையும், யூதாவின் பிரபுக்களையும், எருசலேமிலுள்ள தச்சரையும் கொல்லரையும் சிறைப்பிடித்து, பாபிலோனுக்குக் கொண்டுபோனபின்பு, இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் முன் வைக்கப்பட்டிருந்த அத்திப் பழங்களுள்ள இரண்டு கூடைகளைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார்.

எரே 24:2 ஒரு கூடையிலே முதல் கந்தாயத்து அத்திப்பழங்களுக்குச் சமானமான மிகவும் நல்ல அத்திப் பழங்களும், மற்றக் கூடையிலே புசிக்கத் தகாத மிகவும் கெட்ட அத்திப்பழங்களும் இருந்தது.

எரே 24:3 கர்த்தர் என்னை நோக்கி: எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார்; அதற்கு நான்: அத்திப்பழங்களைக் காண்கிறேன்; நல்லவைகளான அத்திப்பழங்கள் மிகவும் நல்லவைகளும், கெட்டவைகளோ புசிக்கத்தகாத மிகவும் கெட்டவைகளுமாயிருக்கிறது என்றேன்.

தீர்க்கதரிசன எண் - 49

"இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் முன் வைக்கப்பட்டிருந்த அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார்.........." (எரே 24:1-10) எரே 24:5-7 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. எரே 24:8-10 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன் (எரே 24:5).
2. அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைப்பேன். (எரே 24:6).
3. அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணுவேன்.
4. அவர்களைக் கட்டுவேன்.
5. அவர்களை இடிக்கமாட்டேன்.
6. அவர்களை நாட்டுவேன்.
7. அவர்களைப் பிடுங்கமாட்டேன்.
8. நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் (எரே 24:7).
9. அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.
10. அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள்

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் சிதேக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய பிரபுக்களையும், இந்தத் தேசத்திலே மீதியான எருசலேமின் குடிகளையும், எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் தள்ளிவிட்டு, அவர்களுக்குத் தீமையுண்டாக அவர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்தி விட்ட எல்லா இடங்களிலும் நிந்தையாகவும், பழமொழியாகவும், வசைச்சொல்லாகவும், சாபமாகவும் வைப்பேன். (எரே 24:8-9)
2. அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்தில் அவர்கள் இராதபடிக்கு நிர்மூலமாகுமட்டும், அவர்களுக்குள்ளே பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளை நோயையும் அனுப்புவேன் (எரே 24:10)

24 அதிகாரம்

"அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகள்" - நேபுகாத்நேச்சார் எருசலேமிலுள்ள ராஜாவையும், பிரபுக்களையும், தச்சரையும், கொல்லரையும் சிறைப்பிடித்து பாபிலோனுக்குக் கொண்டுபோய்விட்டான். அதன் பின்பு, கர்த்தர் எரேமியாவிற்கு அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளைக் காண்பிக்கிறார். ஒரு கூடையில் மிகவும் நல்ல அத்திப்பழங்களும், மற்றக் கூடையிலே புசிக்கத்தகாத மிகவும் கெட்ட அத்திப்பழங்களும் இருந்தது. இந்தக் கூடைகள் யூதாவிற்கு அடையாளமாகக் காண்பிக்கப் படுகிறது. சிறைப்பட்டுப் போனவர்களில் நல்லவர்கள் திரும்பவும் மீட்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள். (எரே 24:5-7) துன்மார்க்கரோ அழிக்கப்படுவார்கள். (எரே 24:8-10). எகோனியா பாபிலோனுக்குச் சிறைப் பிடிக்கப்பட்டான். சிதேக்கியாவும், அவனோடுகூட இருந்தவர்களும் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போகும் அளவிற்குத் தாலந்து உடையவர்களாக இல்லை. அவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்களாக இருந்ததினால் நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவையும், அவனுடைய மனுஷரையும் யூதாவிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டான். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணாமல் இருந்திருந்தால் அவர்களுக்குச் சிறையிருப்பே வந்திருக்காது.

பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனவர்கள்

1. யூதாவின் ராஜா
2. யூதாவின் பிரபுக்கள்
3. தச்சர்
4. கொல்லர்

(2) நல்ல அத்திப்பழங்கள்

எரே 24:4 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 24:5 நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன்.

எரே 24:6 அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பி வரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்.

எரே 24:7 நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

"நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு" - ஜனங்கள் பொதுவாக நல்ல அத்திப்பழங்களை விரும்புவார்கள். அதுபோல கர்த்தரும் சிறைப்பட்டுப்போன யூதரில் நல்லவர்களை அங்கிகரிக்கிறார். அவர்களைப் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பவும் அழைத்து வந்து, அங்கு அவர்களை ஆசீர்வதிக்கிறார். (எரே 24:5-7).

கர்த்தர் யூதாவிற்கு வாக்குப்பண்ணியுள்ள நற்காரியங்கள்

1. அவர்களை அங்கிகரிப்பேன். (எரே 24:5).
2. என் கண்களை அவர்கள்மேல் வைப்பேன். (எரே 24:6).
3. அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பி வரப்பண்ணுவேன்.
4. அவர்களைக் கட்டுவேன்.
5. அவர்களை இடிக்கமாட்டேன்.
6. அவர்களை நாட்டுவேன்.

எரேமியா - தொகுப்புரை

24 அதிகாரம்

7. அவர்களைப் பிடுங்கமாட்டேன்.

8. நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன். (எரே 24:7).

9. அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.

10. அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள். (உபா 4:29).

(3) கெட்ட அத்திப்பழங்கள்

எரே 24:8 புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களைத் தள்ளி விடுவதுபோல, நான் சிதேக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய பிரபுக்களையும், இந்தத் தேசத்திலே மீதியான எருசலேமின் குடிகளையும், எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் தள்ளிவிட்டு,

எரே 24:9 அவர்களுக்குத் தீமையுண்டாக அவர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா இடங்களிலும் நிந்தையாகவும், பழமொழியாகவும், வசைச் சொல்லாகவும், சாபமாகவும் வைத்து,

எரே 24:10 அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்தில் அவர்கள் இராதபடிக்கு நிர்மூலமாகு மட்டும், அவர்களுக்குள்ளே பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளை நோயையும் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் சிதேக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய பிரபுக்களையும்" - ஜனங்கள் கெட்ட அத்திப்பழங்களைப் புறக்கணித்துத் தள்ளிவிடுவார்கள். சிதேக்கியாவும், அவனுடைய பிரபுக்களும், எருசலேமில் மீதுமுள்ள ஜனங்களும், எகிப்துக்கு ஓடிப்போன யூதர்களும், கெட்ட அத்திப் பழங்களைப் போல இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை ஒதுக்கித் தள்ளிவிடுகிறார். நேபுகாத்நேச்சாரின் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்து விடுகிறார். அவர்களைப் பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும் துரத்தி விடுகிறார். (எரே 24:9).

"எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்கள்" - யோவாகாசோடு எகிப்து தேசத்திற்குப் போன யூதர்கள். (2இராஜா 23:31-34). எரே 24:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களுக்கு எகிப்து தேசத்தில் குடியிருக்கும் யூதர்களும், பாபிலோன் தேசத்திற்குச் சிறைப்பட்டுப்போனவர்களும் பங்காளிகளாக இருக்கமாட்டார்கள்.

புறஜாதியார் மத்தியில் இஸ்ரவேல் வைக்கப்பட்டிருக்கும் விதம்

1. நிந்தை
2. பழமொழி
3. வசைச்சொல்
4. சாபம்

யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு வரும் விதம்

1. பட்டயம்
2. பஞ்சம்
3. கொள்ளை நோய்

25 அதிகாரம்

2. எழுபது வருஷ சிறையிருப்பைப் பற்றிய தீர்க்கதரிசனம் - *(29:10; தானி 9:2; சக 1:12; 7:5)*

(1) யூதாவின் ஏழு அம்ச கலகம் - *(ஏசா 1:2)*

எரே 25:1 யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவுடைய ராஜாவின் நாலாம் வருஷத்துக்குச் சரியான, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அரசாண்ட முதலாம் வருஷத்திலே யூதாவின் ஜனம் அனைத்தையும் குறித்து எரேமியாவுக்கு உண்டான வார்த்தை;

எரே 25:2 அதைத் தீர்க்கதரிசியாகிய எரேமியா யூதாவின் ஜனம் அனைத்துக்கும், எருசலேமின் குடிகள் எல்லாருக்கும் அறிவிக்கிறதற்காக அவர்களை நோக்கி:

எரே 25:3 ஆமோனின் குமாரனாகிய யோசியாவின் பதின்மூன்றாம் வருஷம் துவக்கி இந்நாள்மட்டும் சென்ற இந்த இருபத்துமூன்று வருஷமாகக் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிற்று; அதை நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிக்கொண்டுவந்தும் நீங்கள் கேளாமற்போனீர்கள்.

எரே 25:4 கர்த்தர் உங்களிடத்திற்குத் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய சகல ஊழியக்காரரையும் ஏற்கனவே அனுப்பிக் கொண்டேயிருந்தும், நீங்கள் கேளாமலும், கேட்கும்படிக்கு உங்கள் செவிகளைச் சாயாமலும்போனீர்கள்.

எரே 25:5 அவர்களைக்கொண்டு அவர்: உங்களில் அவனவன் தன்தன் பொல்லாத வழியையும், உங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திரும்பி, கர்த்தர் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த தேசத்தில் சதாகாலமும் குடியிருந்து,

எரே 25:6 அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும்; அவைகளுக்கு ஆராதனைசெய்யாமலும், அவைகளைப் பணியாமலுமிருந்து, நான் உங்களுக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமுண்டாக்காமலும் இருங்கள் என்று சொல்லியனுப்பினேன்.

எரே 25:7 நீங்களோ, உங்களுக்குத் தீமையாக உங்கள் கைகளின் செய்கைகளாலே எனக்குக் கோபமூட்டும் படிக்கு, என் சொல்லைக் கேளாமற் போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

"யோயாக்கீம் என்கிற யூதாவுடைய ராஜாவின் நாலாம் வருஷம்" - இது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அரசாண்ட முதலாம் வருஷமாகும். தானி 1:1 ஆவது வசனத்தில் இது "யோயாக்கீம் அரசாண்ட மூன்றாவது வருஷம்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு வசனத்தில் நாலாம் வருஷம் என்றும், மற்றொரு வசனத்தில் மூன்றாம் வருஷம் என்றும் கூறப்பட்டிருப்பதினால் இதில் கால வேறுபாடு உள்ளதுபோன்று தோன்றுகிறது. ஆனால் அப்படிப்பட்ட கால வேறுபாடு எதுவுமில்லை. நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்திலிருந்து யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்தில் புறப்பட்டார். பாலஸ்தீன தேசத்திற்கு அவர் யோயாக்கீம் அரசாண்ட நாலாம் வருஷத்தில் வந்துசேர்ந்தார். நேபுகாத்நேச்சார் பாலஸ்தீன தேசத்திற்கு வந்து சேர்ந்த பின்பே எரேமியா இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் முன்னறிவிப்புகளைத் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். யோயாக்கீம் யுத்தத்தில் தோல்வியடைந்தான். தானியேல் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டான். யோயாக்கீம் ராஜா பாபிலோனுக்குக் கீழ் கட்டுப்பட்டு மூன்று வருஷம் ஆட்சி புரிந்தான். அதன் பின்பு, பாபிலோனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான். (2இராஜா 24:1-7). நேபுகாத்நேச்சார் பல யுத்தங்களில் பங்கு பெற்றிருந்ததினால் யோயாக்கீமின் பதினொறாவது வருஷ ஆட்சிக் காலம் வரையிலும் அவன்மீது படையெடுத்து வரவில்லை. (2இராஜா 23:36-24:7). அதன் பின்பு நடைபெற்ற யுத்தத்தில் யூதா மறுபடியும் தோல்வியுற்றது. யூதர்களில் அநேகர் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார்கள்.

25 அதிகாரம்

(எரே 24:1). யோயாக்கீன் மூன்று மாதங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தான். யூததேசத்தார் அனைவரும் பாபிலோனுக்கு இறுதியாகச் சிறைப்பட்டுப் போவதற்கு முன்பாகச் சிதேக்கியா பதினொறு வருஷங்கள் யூதா தேசத்தை ஆட்சி புரிந்தான். (எரே 24:8; 2இராஜா 25; 2நாளா 36).

"யோசியாவின் பதின்மூன்றாம் வருஷம் துவக்கி" - யோசியாவின் பதின்மூன்றாம் வருஷத்திலிருந்தே எரேமியா தீர்க்கதரிசன ஊழியம் செய்ய ஆரம்பித்து விட்டார். (எரே 1:2; எரே 25:3) சுமார் 23 வருஷங்கள் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார். (எரே 25:3). இந்த 23 வருஷங்களாகக் கர்த்தருடைய வார்த்தை எரேமியாவிற்கு உண்டாயிற்று. இந்த வார்த்தைகளை எரேமியா ஜனங்களுக்குத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வந்தார். ஆயினும், அவர்கள் எரேமியாவின் வார்த்தைகளைக் கேளாமற்போனார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களையும், தீர்க்கதரிசிகளையும் அனுப்பினார். ஆனால் யோயாக்கீம் அவர்களையும், அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும் என்னும் செய்தியைத் தீர்க்கதரிசிகள் அனைவரும் கூறினார்கள். கர்த்தரை அண்டிக் கொண்டால், பாலஸ்தீன தேசத்தில் நிலைத்திருக்கலாம் என்பது கர்த்தருடைய செய்தி. கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினால் அவர்கள் அந்நிய தேசத்தின் அடிமைத்தனத்திற்கு உட்படுவார்கள். பாலஸ்தீன தேசம் முழுவதுமாக அழிக்கப்படும். (எரே 25:4-11).

"கர்த்தர் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த தேசத்தில் சதாகாலமும் குடியிருந்து" - பாலஸ்தீன தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் சதாகாலமும் குடியிருக்க வேண்டுமானால் அவர்கள் கர்த்தர் கூறியிருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். கர்த்தர் அந்த நிபந்தனைகளைப் பலமுறை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். (எரே 25:5-11).

எரேமியா 25 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும்; அவைகளுக்கு ஆராதனை செய்யாமலும் அவைகளைப் பணியாமலுமிருங்கள். (எரே 25:6).
2. உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமுண்டாக்காமல் இருங்கள்.
3. நீங்கள் குடித்து, வெறித்து, வாந்திபண்ணி, நான் உங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தாலே எழுந்திராதபடிக்கு விழுங்கள் (எரே 25:27).
4. மேய்ப்பர்களே, அலறுங்கள். (எரே 25:34).
5. மந்தையில் பிரஸ்தாபமானவர்களே, சாம்பலில் புரண்டு கதறுங்கள்.

"நான் உங்களுக்குத் தீமை செய்யாதபடிக்கு" - கர்த்தர் மனுஷரைச் சிட்சிக்கிறார். ஆனால் மனுஷரே தங்களுக்குத் தீமை செய்து கொள்கிறார்கள். கர்த்தர் யாருக்கும் தீமை செய்வதில்லை. (எரே 25:7; கலா 6:7)

யூதாவின் பாவங்கள்

1. கர்த்தருடைய சொல்லைக் கேட்கவில்லை. அதற்குக் கீழ்ப்படியவில்லை. (எரே 25:3-8).
2. அவர்களுடைய வழிகள் பொல்லாதவைகளாக இருக்கிறது. (எரே 25:5).
3. அவர்கள் கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள். (எரே 25:7).

(2) பன்னிரெண்டு அம்ச நியாயத் தீர்ப்பு

எரே 25:8 நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாமற் போனபடியினால்,

எரேமியா - தொகுப்புரை

25 அதிகாரம்

எரே 25:9 இதோ, நான் வடக்கேயிருக்கிற சகல வம்சங்களையும், என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும் அழைத்தனுப்பி, அவர்களை இந்த தேசத்துக்கு விரோதமாகவும், இதின் குடிகளுக்கு விரோதமாகவும், சுற்றிலுமிருக்கிற இந்த எல்லா ஜாதிகளுக்கும் விரோதமாகவும் வரப்பண்ணி, அவைகளைச் சங்காரத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளைப் பாழாகவும் இகழ்ச்சிக் குறியாகிய ஈசல் போடுதலாகவும், நித்திய வனாந்தரங்களாகவும் செய்வேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:10 மகிழ்ச்சியின் சத்தத்தையும், சந்தோஷத்தின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும், ஏந்திரத்தின் சத்தத்தையும் விளக்கின் வெளிச்சத்தையும் அவர்களிலிருந்து நீங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:11 இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்.

தீர்க்கதரிசன எண் - 50

"நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாமற் போனபடியினால்,........" (எரே 25:8-38) எரே 25:8-29,34-38 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 25:30-33 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் வடக்கேயிருக்கிற சகல வம்சங்களையும், என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும் அழைத்தனுப்பி,....... பாலஸ்தீன தேசத்தை நித்திய வனாந்தரங்களாகச் செய்வேன். (எரே 25:9).
2. இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும். (எரே 25:10-11).
3. இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள். (எரே 25:11).
4. எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, பாபிலோன் ராஜாவினுடைய அக்கிரமத்தை விசாரிப்பேன். (எரே 25:12).
5. கல்தேயருடைய தேசத்தை நித்திய பாழிடமாக்குவேன்.
6. நான் அந்தத் தேசத்துக்கு விரோதமாய் உரைத்த என் வார்த்தைகளையெல்லாம் அதின்மேல் வரப்பண்ணுவேன் (எரே 25:13).
7. அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவர்களை அடிமைகொள்வார்கள் (எரே 25:14).
8. நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாகவும், அவர்கள் கைகளின் செய்கைகளுக்கு தக்கதாகவும் பதில் அளிப்பேன்.
9. நான் அவர்களுக்குள் அனுப்பும் பட்டயத்தால் அவர்கள் தள்ளாடி, புத்திகெட்டுப் போவார்கள். (எரே 25:15)
10. நான் உன்னை அனுப்புகிற ஜாதிகள் இந்த உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தைக் குடிப்பார்கள். (எரே 25:15,16).

எரேமியா - தொகுப்புரை

25 அதிகாரம்

11. எருசலேமும் யூதாவின் பட்டணங்களும், அதின் ராஜாக்களும், அதின் பிரபுக்களும் கர்த்தருடைய உக்கிரமாகிய மதுபானத்தைக் குடிப்பார்கள். (எரே 25:18-26).

12. எருசலேம் வனாந்தரமும் பாழும் இகழ்ச்சிக்குறியாகிய ஈசல்போடுதலும் சாபமுமாக்கிப் போடப்படும் (எரே 25:18).

13. சேசாக்கு என்கிற ராஜாவும் (பாபிலோன் ராஜா) அவர்களுக்குப் பிற்பாடு குடிப்பான் (எரே 25:26).

14. நான் அவர்களுக்குள் அனுப்பும் பட்டயத்தாலே எழுந்திராதபடிக்கு விழுவார்கள். (எரே 25:27).

15. அவர்கள் அதைக் குடித்துத் தீரவேண்டும் (எரே 25:28).

16. எருசலேமின் மீது தீங்கைக் கட்டளையிட்டிருக்கிறேன். ஆகையினால் அது தண்டனைக்குத் தப்புவதில்லை. (எரே 25:29).

17. நான் பூமியின் எல்லாக் குடிகளின் மேலும் பட்டயத்தை வரவழைக்கிறேன்.

18. நீங்கள் வெட்டப்படவும் சிதறடிக்கப்படவும் உங்கள் நாட்கள் நிறைவேறின (எரே 25:34).

19. உச்சிதமான பாத்திரம்போல் உங்கள் மேய்ப்பர்கள் விழுந்து நொறுங்குவார்கள்.

20. மேய்ப்பர்கள் ஓடிப்போகிறதற்கும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறதற்கும் இடமிராது. (எரே 25:35).

21. மேய்ப்பர்கள் கூப்பிடுகிறதும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் அலறுகிறதுமான சத்தமுண்டாகும். (எரே 25:36).

22. அவர்கள் சுகித்திருந்த தாபரங்கள் கர்த்தருடைய கோபத்தின் எரிச்சலாலே சங்காரமாகும். (எரே 25:37).

23. கர்த்தர் பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப்போலிருப்பார் (எரே 25:38).

24. ஒடுக்குகிறவனுடைய உக்கிரத்தினாலும், அவனுடைய உக்கிர கோபத்தினாலும் அவர்கள் தேசம் பாழாகும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டுவார். (எரே 25:30).

2. தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே கெர்ச்சிப்பார்.

3. ஆலையை மிதிக்கிறவர்கள் ஆர்ப்பரிப்பதுபோல் பூமியினுடைய எல்லாக் குடிகளுக்கும் விரோதமாக ஆர்ப்பரிப்பார்.

4. ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும் (எரே 25:31).

5. ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்.

6. துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக் கொடுப்பார்.

7. ஜாதிஜாதிக்குத் தீமை பரம்பும் (எரே 25:32)

8. பூமியின் எல்லைகளிலிருந்து மகா புசல் எழும்பும்.

9. பூமியின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள் (எரே 25:33).

10. அவர்கள் புலம்பப்படாமல் இருப்பார்கள்.

11. அவர்கள் சேர்க்கப்படாமலும், அடக்கம் பண்ணப்படாமலும் இருப்பார்கள்.

12. அவர்கள் பூமியின் மேல் எருவாவார்கள்.

25 அதிகாரம்

"என் ஊழியக்காரன்" - நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஊழியக்காரனாக இங்கு கூறப்பட்டிருக்கிறான். யூதாவையும், மேலும் பல தேசங்களையும் அழிப்பதற்குக் கர்த்தர் நேபுகாத்நேச்சாரை அழைத்திருக்கிறார். பாபிலோனைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் கோரேசு ராஜாவைத் தம்முடைய மேய்ப்பனாகத் தெரிந்தெடுத்தார். பாபிலோன் தண்டிக்கப் பட்டதினால் சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேல் புத்திரர்கள் 70 வருஷங்களுக்குப் பின்பு பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். (எரே 25:8; ஏசா 45:1).

"மகிழ்ச்சியின் சத்தத்தையும்...... விளக்கின் வெளிச்சத்தையும் அவர்களிலிருந்து நீங்கப் பண்ணுவேன்" - இந்த வாக்கியம் வெளி 18:23 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப் பட்டிருக்கிறது. (எரே 7:34; எரே 16:9; எரே 33:11). ஆகையினால், இந்தத் தீர்க்கதரிசனம் இரண்டு முறை நிறைவேறும். ஒருமுறை கடந்தகால பாபிலோனில் நிறைவேறிற்று. மற்றொரு முறை வருங்கால பாபிலோனில் நிறைவேறும்.

"எழுபது வருஷம்" - யூதர்கள் பாபிலோன் தேசத்தில் எழுபது வருஷங்களாகச் சிறையிருப்பில் இருக்கிறார்கள். அதன் பின்பு, பாபிலோன் தேசம் அந்நிய தேசத்திற்கு அடிமையாகும். யூதர்கள் தங்களுடைய தேசத்திற்குத் திரும்புவார்கள். (ஏசா 23:15-17, எரே 25:11-12; எரே 29:10; தானி 9:2; சக 7:5).

(3) பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு - (ஏசா 13:1)

எரே 25:12 எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்திய பாழிடமாக்கி,

எரே 25:13 நான் அந்தத் தேசத்துக்கு விரோதமாய் உரைத்த என் வார்த்தைகளையெல்லாம், எரேமியா சகல ஜாதிகளுக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதும், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதுமான யாவையும் அதின்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:14 அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவர்களை அடிமை கொள்வார்கள்; நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாகவும், அவர்கள் கைகளின் செய்கைகளுக்குத் தக்கதாகவும் பதில் அளிப்பேன் என்கிறார்.

"அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து" - (தானி 5)

"நித்திய பாழிடம்" - பாபிலோன் நீண்ட காலமாகப் பாழடைந்து கிடந்தது. அதன் பின்பு, இது மறுபடியும் தற்காலிகமாகக் கட்டப்படும். ஆனாலும் அது மறுபடியும் அழிந்து போகும். அதன் பின்பு பாபிலோன் நித்திய பாழிடமாக இருக்கும். (ஏசா 13:19-21)

3. உக்கிரமாகிய மதுபான பாத்திரத்தின் அடையாளம்

(1) எல்லா தேசங்களும் இதைக் குடிக்க வேண்டும்

எரே 25:15 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்னை நோக்கி: நான் உன்னை அனுப்புகிற ஜாதிகள் குடித்து, நான் தங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தால் அவர்கள் தள்ளாடி, புத்திகெட்டுப் போகும்படிக்கு,

எரே 25:16 இந்த உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை நீ என் கையிலிருந்து வாங்கி, அவர்கள் எல்லாருக்கும் அதிலே குடிக்கக்கொடு என்றார்.

எரே 25:17 அப்பொழுது நான் அந்தப் பாத்திரத்தைக் கர்த்தருடைய கையிலிருந்து வாங்கி, கர்த்தர் என்னை அனுப்பின எல்லா ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தேன்.

25 அதிகாரம்

"நான் உன்னை அனுப்புகிற ஜாதிகள் குடித்து" - எரேமியாவின் காலத்தில் தேசங்கள் மீது வரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு "உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரம்" என்று உவமையாகக் கூறப்படுகிறது. எல்லா தேசங்களுமே இந்த மதுபானத்தைக் குடிக்க வேண்டும். கர்த்தர் அவர்களுக்குள் பட்டயத்தை அனுப்புவார். இதனால் அவர்கள் தள்ளாடி புத்திகெட்டுப் போவார்கள். (எரே 25:15-17).

(2) தேவனுடைய கோபத்தை இருபது தேசங்கள் குடிக்க வேண்டும்

எரே 25:18 எருசலேமுக்கும் யூதாவின் பட்டணங்களுக்கும், அதின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அவர்களை இந்நாளிலிருக்கிறபடி வனாந்தரமும் பாழும் இகழ்ச்சிக்குறியாகிய ஈசல்போடுதலும் சாபமுமாக்கிப் போடும்படி குடிக்கக்கொடுத்தேன்.

எரே 25:19 எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கும், அவன் ஊழியக்காரருக்கும், அவன் பிரபுக்களுக்கும், அவனுடைய எல்லா ஜனத்துக்கும்,

எரே 25:20 கலந்து குடியிருக்கிற அனைவருக்கும், ஊத்ஸ் தேசத்தினுடைய எல்லா ராஜாக்களுக்கும், பெலிஸ்தருடைய தேசத்தில் இருக்கிற எல்லா ராஜாக்களுக்கும், அஸ்கலோனுக்கும், காசாவுக்கும் எக்ரோனுக்கும், அஸ்தோத்தில் மீதியானவர்களுக்கும்,

எரே 25:21 ஏதோமுக்கும், மோவாபுக்கும், அம்மோன் புத்திரருக்கும்,

எரே 25:22 தீருவினுடைய எல்லா ராஜாக்களுக்கும், சீதோனுடைய எல்லா ராஜாக்களுக்கும், சமுத்திரத்துக்கு அக்கரையான தீவுகளின் ராஜாக்களுக்கும்,

எரே 25:23 தேதானுக்கும், தேமாவுக்கும், பூசுக்கும், கடையாந்தரங்களிலுள்ள அனைவருக்கும்,

எரே 25:24 அரபிதேசத்து எல்லா ராஜாக்களுக்கும், வனாந்தரத்தில் கலந்து குடியிருக்கிறவர்களுடைய எல்லா ராஜாக்களுக்கும்,

எரே 25:25 சிம்ரியினுடைய எல்லா ராஜாக்களுக்கும், ஏலாமினுடைய எல்லா ராஜாக்களுக்கும், மேதியாவினுடைய எல்லா ராஜாக்களுக்கும்,

எரே 25:26 வடக்கேயிருக்கிற எல்லா ராஜாக்களுக்கும், சமீபமானவர்களும் தூரமானவர்களுமாகிய அவரவர் களுக்கும், பூமியின்மீதிலுள்ள சகல தேசத்து ராஜ்யங்களுக்கும் குடிக்கக்கொடுத்தேன்; சேசாக்கு என்கிற ராஜாவும் அவர்களுக்குப் பிற்பாடு குடிப்பான் என்றார்.

"எருசலேமுக்கும் யூதாவின் பட்டணங்களுக்கும்" - எருசலேமும், யூதாவின் பட்டணங்களும் வனாந்தரமும், பாழுமாகும். அவை இகழ்ச்சிக்குறியாகிய ஈசல்போடுதலும் சாபமுமாக்கிப்போடப்படும். (எரே 25:18,27-29) இது முதலாவது சாபம். இதன் பின்பு மற்ற தேசங்களும் தண்டிக்கப்படும். (எரே 25:19-26).

"இந்நாளிலிருக்கிறபடி" - எரேமியாவின் காலத்தில் எருசலேம் ஏற்கெனவே பாழடைந்து கிடக்கிறது.

கர்த்தருடைய உக்கிரமாகிய மதுபானத்தைக் குடிப்பவர்கள்

1. யூதாவும், அதன் பட்டணங்களும் (எரே 25:18)

2. எகிப்தின் ராஜாவாகிய பார்வோனும், அவன் ஊழியக்காரரும் (எரே 25:19)

3. ஊத்ஸ் தேசத்தில் கலந்து குடியிருக்கிற அனைவரும் (எரே 25:20)

4. பெலிஸ்தரும், அஸ்கலோனும், காசாவும், எக்ரோனும், அஸ்தோத்தும்

25 அதிகாரம்

5. ஏதோம் (எரே 25:21)

6. மோவாப்

7. அம்மோன்

8. தீருவின் ராஜாக்கள் (எரே 25:22)

9. சீதோனுடைய ராஜாக்கள்

10. சமுத்திரத்துக்கு அக்கரையான தீவுகளின் ராஜாக்கள்.

11. தேதான் (எரே 25:23)

12. தேமா

13. பூஸ்

14. அரபிதேசத்து ராஜாக்கள் (எரே 25:24)

15. வனாந்தரத்தில் கலந்து குடியிருக்கிறவர்கள்.

16. சிம்ரியினுடைய ராஜாக்கள் (எரே 25:25)

17. ஏலாமினுடைய ராஜாக்கள்

18. மேதியாவினுடைய ராஜாக்கள்

19. வடக்கேயிருக்கிற ராஜாக்கள் (எரே 25:26)

20. சேசாக்கின் (பாபிலோன்) ராஜா

இவர்கள் எல்லோரும் கர்த்தருடைய உக்கிரமாகிய மதுபானத்தைக் குடிப்பார்கள். குடிக்கிறவர்களின் அட்டவணையை எரேமியா இங்கு குறிப்பிடுகிறார். அதில் அவர் ஒரு வரிசைக் கிரமத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். யூதாவில் ஆரம்பித்து, அதன் பின்பு, தென் திசையிலுள்ள எகிப்தைப் பற்றிக் கூறுகிறார். அதன் பின்பு கடைசியாகப் பாபிலோனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மற்றவர்களைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் பாபிலோனைப் பயன்படுத்துகிறார். அதன் பின்பு பாபிலோனுக்கும், தமது உக்கிரமாகிய மதுபானத்தைக் குடிக்கக் கொடுக்கிறார். (எரே 25:18-26).

"ஊத்ஸ் தேசம்" - இது யோபுவின் தேசமாகும். (யோபு 1:1).

"சமுத்திரத்துக்கு அக்கரையான தீவுகள்" - இது சீப்புரு தீவையும், மத்திய தரைக்கடலிலுள்ள மற்ற தீவுகளையும் குறிக்கும்.

"தேதான்" (Dedan) - ஏதோமின் எல்லைப் பகுதியில் உள்ளது. (எரே 49:8; எசே 25:13).

"தேமா" (Tema) - இது எலிப்பாசின் தேசம். (யோபு 2:11).

"பூஸ்" (Buz) - எலிகூ இந்த இடத்திலிருந்து வந்தான். (யோபு 32:2).

"சிம்ரி" (Zimri) - இது சிம்ரானின் (Zimran) தேசம். இவன் ஆபிரகாமிற்கும், கெத்தூராளுக்கும் பிறந்தவன். (ஆதி 25:2). இந்த தேசம் அரபியாவிற்கும், பெர்சியாவிற்கும் நடுவிலுள்ளது.

"ஏலாம்" (Elam) - இது பெர்சியாவைக் குறிக்கும் பெயராகும். மேதிய தேசம் இதற்கு வடக்கிலுள்ளது.

"சேசாக்கு" (Sheshach) - இது பாபிலோனின் மறுபெயர். (எரே 51:41).

(3) யூதா முதலாவது குடிக்க வேண்டும்

எரே 25:27 நீங்கள் குடித்து, வெறித்து, வாந்திபண்ணி, நான் உங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தாலே எழுந்திராதபடிக்கு விழுங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று நீ அவர்களுக்குச் சொல்லு.

எரே 25:28 அவர்கள் குடிக்கிறதற்கு அந்தப் பாத்திரத்தை உன் கையில் வாங்க மாட்டோம் என்று சொல்வார்களானால், நீ அவர்களை நோக்கி: நீங்கள் குடித்துத் தீரவேண்டும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லு.

25 அதிகாரம்

எரே 25:29 இதோ, தீங்கைக் கட்டளையிட நான் என் நாமம் தரிக்கப்பட்ட நகரத்திலே துவக்கும்போது, நீங்கள் தண்டனைக்குத் தப்புவீர்களோ? நீங்கள் தப்புவதில்லை; நான் பூமியின் எல்லாக் குடிகளின்மேலும் பட்டயத்தை வரவழைக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் உங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தாலே எழுந்திராதபடிக்கு விழுங்கள்" - கர்த்தர் தம்முடைய உக்கிரமாகிய பாத்திரத்தின் மதுபானத்தைக் குடிக்குமாறு இந்தத் தேசங்களுக்கெல்லாம் கட்டளையிடுகிறார். அவர்கள் அதைக் குடிக்க மறுத்தால் அதைக் குடிக்குமாறு கட்டாயப்படுத்தப்படுவார்கள். யூதா தேசம் தங்களுடைய பாவங்களுக்காகத் தண்டிக்கப்படுகிறது. அதோடு சேர்ந்து யூதா தேசத்தார் எந்தத் தேசங்களோடு பாவம் செய்தார்களோ அவர்களும் தண்டிக்கப் படுவார்கள். யூதா தேசத்தாரைப் பாவம் செய்ய வழிநடத்தி, அவர்களைக் கர்த்தரை விட்டுவிலகிப் போவதற்குக் காரணமாக இருந்த எல்லா தேசத்தாரும் தண்டிக்கப்படுவார்கள். (எரே 25:27-29). யூதா தேசத்தாரைப் பாவம் செய்யப் பண்ணியவர்கள் அவர்களுடைய பாவங்களுக்கும் பங்காளிகளாக இருக்கிறார்கள். ஆகையினால் பாவங்களுக்குரிய தண்டனை எல்லோருக்கும் வருகிறது.

(4) யூதாவிற்கு பிறகு எல்லா தேசங்களும் குடிக்க வேண்டும்

எரே 25:30 ஆதலால் நீ அவர்களுக்கு விரோதமாக இந்த வார்த்தைகளையெல்லாம் தீர்க்கதரிசனமாக உரைத்து, அவர்களை நோக்கி: கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே கெர்ச்சித்து, ஆலையை மிதிக்கிறவர்கள் ஆர்ப்பரிப்பதுபோல் பூமியினுடைய எல்லாக் குடிகளுக்கும் விரோதமாக ஆர்ப்பரிப்பார் என்று சொல் என்றார்.

எரே 25:31 ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்; துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:32 இதோ, ஜாதிஜாதிக்குத் தீமை பரம்பும், பூமியின் எல்லைகளிலிருந்து மகா புசல் எழும்பும்.

எரே 25:33 அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறுமுனை மட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம் பண்ணப் படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்.

"கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து" - கர்த்தர் பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப் போன்று இருப்பார். (எரே 25:38) அவர் கெர்ச்சிக்கும்போது முழு உலகமும் பயங்கரத்தால் நிறையும். உலகம் முழுவதும் குழப்பம் உண்டாகும். (எரே 25:30-33).

"ஆலையை மிதிக்கிறவர்கள் ஆர்ப்பரிப்பது போல்" - (ஏசா 63:1-6; வெளி 14:14-20; வெளி 19:15)

"துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக் கொடுப்பார்" - (ஏசா 34:8; யோவே 3; சக 14; வெளி 19)

"கர்த்தரால் கொலையுண்டவர்கள்" - (ஏசா 66:16; யோபு 3:14; சக 14; வெளி 19)

"பூமி" - இது முழு பூமியையும் குறிக்காமல், பாலஸ்தீன தேசத்தை மட்டும் அல்லது பூமியின் ஒரு பகுதியை மட்டும் குறிக்கும். (எஸ்றா 1:2). இந்த வசனத்தில் பூமி என்னும் வார்த்தை அர்மெகதோன் யுத்தம் நடைபெறும் பாலஸ்தீன தேசத்தைக் குறிக்கிறது.

"அடக்கம் பண்ணப் படாமலும்"- அர்மெகதோன் யுத்தத்தின்போது கொலையுண்டவர்களின் பிரேதங்கள் பாலஸ்தீன தேசமெங்கும் சிதறிக் கிடக்கும். தேசத்தைச் சுத்தப்படுத்துவதற்கு ஏழு மாதங்களாகும். (எசே 39:12-21).

25 அதிகாரம்

(5) தேசங்களின் தலைவர்கள் கட்டாயமாக குடிக்க வேண்டும்

எரே 25:34 மேய்ப்பர்களே, அலறுங்கள்; மந்தையில் பிரஸ்தாபமானவர்களே, சாம்பலில் புரண்டு கதறுங்கள்; நீங்கள் வெட்டப்படவும் சிதறடிக்கப்படவும் உங்கள் நாட்கள் நிறைவேறின; உச்சிதமான பாத்திரம்போல் விழுந்து நொறுங்குவீர்கள்.

எரே 25:35 மேய்ப்பர்கள் ஓடிப் போகிறதற்கும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறதற்கும் இடமிராது.

எரே 25:36 தங்கள் மேய்ச்சலைக் கர்த்தர் பாழாக்கினதினிமித்தம் மேய்ப்பர்கள் கூப்பிடுகிறதும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் அலறுகிறதுமான சத்தமுண்டாகும்.

எரே 25:37 அவர்கள் சுகித்திருந்த தாபரங்கள் கர்த்தருடைய கோபத்தின் எரிச்சலாலே சங்காரமாயின.

எரே 25:38 அவர் பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப் போலிருப்பார்; ஒடுக்குகிறவனுடைய உக்கிரத்தினாலும், அவனுடைய உக்கிரகோபத்தினாலும் அவர்கள் தேசம் பாழாயிற்றென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

மோசமான முடிவுக்குட்பட்ட யூதாவின் ராஜாக்கள்

1. யோயாக்கீம் - இவன் மரித்த போது இவனை அடக்கம் பண்ணவில்லை. இவனுக்காக யாரும் துக்கம் கொண்டாடவுமில்லை. (எரே 22:18; எரே 36:30; 2இராஜா 23:34-24:6)

2. யோயாக்கீன் - பாபிலோனுக்கு அடிமையாக இழுத்துச் செல்லப்பட்டான். (2இராஜா 24:6-16)

3. சிதேக்கியா - இவனுடைய கண்களுக்கு முன்பாக இவனுடைய குமாரர்கள் வெட்டி கொலை செய்யப்பட்டார்கள். இவனுடைய கண்கள் பிடுங்கப்பட்டன. பாபிலோனுக்கு அடிமையாக இழுத்துச் செல்லப்பட்டான். (2இராஜா 25:7)

"தப்பித்துக் கொள்ளுகிறதற்கும் இடமிராது" - பிரபுக்களாலும், பிரஸ்தாபமானவர்களாலும் தப்பித்துக் கொள்ள முடியாது. அவர்கள் பிடிக்கப்பட்டு பாலஸ்தீன தேசத்திற்கு அடிமைகளாக இழுத்துச் செல்லப்படுவார்கள். (2இராஜா 24-25).

"தங்கள் மேய்ச்சலைக் கர்த்தர் பாழாக்கினதினிமித்தம்" - கர்த்தர் யூதாவின் ஜனங்களையும், அவர்களுடைய ஆஸ்திகளையும் எருசலேம் நகரத்தையும் அழித்துப்போட்டார்.

எரேமியா - தொகுப்புரை

26 அதிகாரம்

4. தேவாலய பிரகாரத்தில் செய்தி

(1) நிபந்தனையுள்ள இரக்கம் - (ஏசா 1:19)

எரே 26:1 யோசியாவின் குமாரனும் யூதாவின் ராஜாவுமாகிய யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் உண்டான வார்த்தை:

எரே 26:2 நீ கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நின்றுகொண்டு, கர்த்தருடைய ஆலயத்திலே பணியவருகிற யூதாவுடைய பட்டணங்களின் குடிகள் அனைவரோடும் சொல்லும்படி நான் உனக்குக் கற்பித்த எல்லா வார்த்தைகளையும் அவர்களுக்குச் சொல்லு; ஒரு வார்த்தையையும் குறைத்துப்போடாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 26:3 அவர்கள் செய்கைகளுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அவர்களுக்குச் செய்ய நினைக்கிற தீங்குக்கு நான் மனஸ்தாபப் படத்தக்கதாக ஒருவேளை அவர்கள் கேட்டு, அவரவர் தம்தம் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள்.

எரே 26:4 நீ அவர்களை நோக்கி: நான் உங்களிடத்துக்கு ஏற்கனவே அனுப்பிக் கொண்டிருந்தும், நீங்கள் கேளாமற்போன என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நீங்கள் கேட்கும்படிக்கும்,

எரே 26:5 நான் உங்கள் முன் வைத்த என் நியாயப்பிரமாணத்தின்படி நீங்கள் நடக்கும்படிக்கும், நீங்கள் என் சொல்லைக் கேளாமற்போனால்,

எரே 26:6 நான் இந்த ஆலயத்தைச் சீலோவாவைப் போலாக்கி, இந்த நகரத்தைப் பூமியிலுள்ள எல்லா ஜாதிகளுக்கு முன்பாகவும் சாபமாக்கிப் போடுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 51

"யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் உண்டான வார்த்தை:......" (எரே 26:1-6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் இந்த ஆலயத்தைச் சீலோவாவைப் போலாக்குவேன். (எரே 26:4-6)
2. இந்த நகரத்தைப் பூமியிலுள்ள எல்லா ஜாதிகளுக்கு முன்பாகவும் சாபமாக்கிப் போடுவேன் (எரே 26:6)

"யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே" - பாபிலோனிய சிறையிருப்புக்கு 22 வருஷங்களுக்கு முன்பாக நடைபெற்ற சம்பவம். (2இராஜா 23:36; 2இராஜா 24:18).

"கர்த்தரால் உண்டான வார்த்தை" - எல்லா தீர்க்கதரிசனங்களும் வருங்காலத்தில் நடைபெறப்போகும் காரியங்களை முன்னறிவிக்க வேண்டுமென்னும் அவசியமில்லை. 1கொரி 14:3 ஆவது வசனத்தில் "தீர்க்கதரிசனம்சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்" என்று கூறப்பட்டிருக்கிறது. இதைப்பேசும்போது வருங்காலத்தில் நடைபெறப்போகும் சம்பவத்தை முன்னறிவிக்க வேண்டுமென்னும் அவசியம் எதுவுமில்லை. ஆனாலும் பொதுவாகத் தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளில் வருங்காலத்தில் நிறைவேறப் போகும் முன்னறிவிப்புகள் அடங்கியிருக்கும். வருங்காலத்தில் உண்டாகப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்பையோ அல்லது ஆசீர்வாதங்களையோ தீர்க்கதரிசிகள் முன்னறிவிப்பார்கள். கர்த்தருடைய சித்தத்திற்கு ஜனங்கள் கீழ்ப்படிவதைப் பொறுத்து அவர்களுக்கு தேவஆசீர்வாதம் முன்னறிவிக்கப் படும். (எரே 26:2-4).

எரேமியா - தொகுப்புரை

26 அதிகாரம்

எரே 26 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நில்.
2. கர்த்தருடைய ஆலயத்திலே பணியவருகிற யூதாவுடைய பட்டணங்களின் குடிகள் அனைவரோடும் சொல்.
3. உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்து. (எரே 26:13).
4. தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேள்.

"நான் அவர்களுக்குச் செய்ய நினைக்கிற தீங்குக்கு நான் மனஸ்தாபப்படத்தக்கதாக" - கர்த்தர் கடைசி நிமிஷத்தில்கூட தமது மனதை மாற்றி ஜனங்களுக்கு நியமித்திருக்கும் நியாயத்தீர்ப்பைத் தவிர்த்துவிடுவார். கர்த்தர் இதைச் செய்ய வேண்டுமானால் ஜனங்கள் மனம்மாறி அவரிடத்தில் திரும்பி வரவேண்டும். பாவத்தை விட்டு, விலகி கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எரே 26:3,13).

"அவரவர் தம்தம் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள்" - தம்முடைய வார்த்தைக்கு ஜனங்கள் கீழ்ப்படியமாட்டார்கள் என்பது கர்த்தருக்குத் தெரியும். நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும் வரையிலும் கர்த்தர் தம்முடைய இரக்கத்தை அவர்கள்மீது காண்பிப்பதற்கு ஆர்வத்தோடு இருக்கிறார். (எரே 26:3-6). இன்றைய தினமும்மனுஷனுடைய ஜீவியக்காலமெல்லாம் கர்த்தருடைய இரக்கமும், கிருபையும் அவனுக்குக் கிடைக்கிறது. ஆனாலும் மரணமும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. மரித்த பின்பு மனந்திரும்புவதற்கு வாய்ப்பில்லை. ஒருதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் மனுஷன் மரித்த பின்பு, எவ்வித இரக்கமும் அவனுக்குக் காண்பிக்கப்படமாட்டாது. அவன் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பெற்றுக் கொள்வான். (எபி 9:27).

"தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நீங்கள் கேட்கும்படிக்கும்" - கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டால் தேவனுடைய இரக்கம் அவர்களுக்குக் காண்பிக்கப்படும். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்காவிட்டால் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும். வரலாற்றுக் காலங்களில் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதற்கேற்ப ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் பெற்றிருக்கிறார்கள். இது ஒரு பொதுவான பிரமாணம். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், கீழ்ப்படியாவிட்டால் சாபமும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எரே 26:3-6,13)

யூதாவின் பாவங்கள்

1. பொல்லாத வழிகள் (எரே 26:3)
2. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க மறுப்பது. (எரே 26:4)
3. கர்த்தருடைய பிரமாணத்தின்படி நடக்காமலிருப்பது.
4. தீர்க்கதரிசிகளைப் புறக்கணிப்பது. (எரே 26:5-8)
5. அநீதி (எரே 26:13)
6. தேவனுக்குக் கீழ்ப்படியாமை
7. தீர்க்கதரிசிகளைக் கொலை பண்ணுவது. (எரே 26:23)

"இந்த ஆலயத்தைச் சீலோவாவைப் போலாக்கி" - சீலோவாவில் மோசேயின் ஆசரிப்புக் கூடாரம் இருந்தது. பெலிஸ்தியர் சீலோவாவின்மீது படையெடுத்து வந்தபோது அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தை அழித்துப் போட்டார்கள். கர்த்தருடைய ஆலயம் சீலோவாவிலுள்ள ஆசரிப்புக் கூடாரத்தைப் போல அழிக்கப்படும். (எரே 7:12)

(2) எரேமியா கூறியதைக் கேட்டவர்கள்

எரே 26:7 எரேமியா இந்த வார்த்தைகளையெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே சொல்லும்போது, ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சகல ஜனங்களும் கேட்டார்கள்.

26 அதிகாரம்

எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்டவர்கள்

1. ஆசாரியர்கள்
2. தீர்க்கதரிசிகள்
3. ஜனங்கள்
4. பிரபுக்களும், பிரதானமானவர்களும் (எரே 26:10-16)

"கர்த்தருடைய ஆலயம்" - இஸ்ரவேல் ஜனங்களுடைய வரலாற்றில் கர்த்தருடைய ஆலயம் மிகவும் முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. சாலொமோன் கட்டிய தேவாலயம் இஸ்ரவேலில் பல மாற்றங்களைக் கண்டிருக்கிறது. பல தீர்க்கதரிசிகள் இந்தத் தேவாலயத்திலிருந்து கர்த்தருடைய நாமத்தைப் பேசியிருக்கிறார்கள். அதே வேளையில் இதே தேவாலயத்திலிருந்து கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராகச் சதிவேலைகளும் நடைபெற்றிருக்கிறது. கர்த்தருக்கு எதிரான தேவதூஷண வார்த்தைகளும், தேவாலயத்திலிருந்து புறப்பட்டிருக்கிறது. எரேமியா இந்தத் தேவாலயத்தில் பலபாடுகளை அனுபவித்தார். ஜனங்களுக்குக் கர்த்தருடைய செய்தியை அறிவித்ததினால் எரேமியாவிற்குப் பல நெருக்கங்கள் உண்டாயிற்று. ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் எரேமியாவிற்கு எதிராகச் சதிசெய்து, அவருடைய ஜீவனை எடுத்துப்போட வகை தேடினார்கள். ஆனாலும் எரேமியாவின் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் கேட்ட பிரபுக்கள் எரேமியா மரணத்திற்குப் பாத்திரவான் அல்ல என்று தீர்மானம் பண்ணினார்கள். (எரே 26:8-16)

கடந்த காலத்தில் தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அவர்களில் சிலரை ஜனங்கள் கொன்றுபோட்டார்கள். வேறுசிலரைக் கொன்றுபோடாமல் விட்டு விட்டார்கள். (எரே 26:16-24). தேவாலயத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனம் கூறுவதை ஜனங்கள் கேட்க விரும்பவில்லை.

யோயாக்கீம் ராஜா இதே காரணத்திற்காக உரியா என்னும் தீர்க்கதரிசியைக் கொன்று போட்டான். (எரே 26:20-24). புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இதே காரணத்திற்காக இயேசு கிறிஸ்துவையும், 12 அப்போஸ்தலர்களையும் யூதா ஜனங்கள் கொலைபண்ண சதி பண்ணினார்கள். இந்தத் தேவாலயத்தில் கர்த்தர் வாசம்பண்ணுவதினால் இது கர்த்தருடைய ஆலயம் என்று அழைக்கப்படுகிறது.

(3) செய்தியைப் புறக்கணித்து விட்டார்கள் - எரேமியாவின் நான்காவது உபத்திரவம் ஆசாரியர்களாலும், ஜனங்களாலும் - (11:18)

எரே 26:8 சகல ஜனங்களுக்கும் சொல்லக் கர்த்தர் தனக்குக் கற்பித்தவைகளையெல்லாம் எரேமியா சொல்லிமுடித்தபோது, ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் சகல ஜனங்களும் அவனைப் பிடித்து: நீ சாகவே சாகவேண்டும்.

எரே 26:9 இந்த ஆலயம் சீலோவைப் போலாகி, இந்த நகரம் குடியில்லாமல் பாழாய்ப்போம் என்று, நீ கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்வானேன் என்று சொல்லி, ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்திலே எரேமியாவுக்கு விரோதமாய்க் கூடினார்கள்.

எரே 26:10 யூதாவின் பிரபுக்கள் இந்த வர்த்தமானங்களைக் கேட்டு, ராஜாவின் வீட்டிலிருந்து கர்த்தருடைய ஆலயத்துக்குப்போய், கர்த்தருடைய புதிய வாசலில் உட்கார்ந்தார்கள்.

எரே 26:11 அப்பொழுது ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும், பிரபுக்களையும் சகல ஜனங்களையும் நோக்கி: இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரன்; உங்கள் செவிகளாலே நீங்கள் கேட்டபடி, இந்த நகரத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னானே என்றார்கள்.

26 அதிகாரம்

"நீ சாகவே சாகவேண்டும்" - இதற்கு முன்பு எரேமியாவை ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் துன்புறுத்தினார்கள். இப்போதோ சகல ஜனங்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டு, எரேமியாவைத் துன்புறுத்துகிறார்கள். ஜனங்கள் தேவாலயத்தையும், எருசலேம் நகரத்தையும் வெகுவாக நேசிக்கிறார்கள். அதற்கு எதிராகக் கூறப்படும் வார்த்தைகளை ஜனங்களால் அங்கிகரிக்க முடியவில்லை. இதுபோன்ற சூழ்நிலைகளில் தேசமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறது. ஆகையினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு முழு தேசத்தின் மீதும் வந்துவிடுகிறது.

"யூதாவின் பிரபுக்கள் இந்த வர்த்தமானங்களைக் கேட்டு" - எரேமியா தீர்க்கதரிசனம் கூறியவுடன், ஜனங்கள் மத்தியில் குழப்பம் உண்டாயிற்று. ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்திலே எரேமியாவுக்கு விரோதமாய்க் கூடினார்கள். கலகம் அதிகரித்தது. ராஜாவின் வீட்டிலிருந்த பிரபுக்களுக்குக் கர்த்தருடைய ஆலயத்தில் ஏற்பட்ட கலகச் செய்தி வந்து சேருகிறது. அவர்கள் ராஜாவின் வீட்டிலிருந்து தேவாலயத்திற்கு வருகிறார்கள். எரேமியாவிற்கு எதிராகக்கூறப்படும் குற்றச்சாட்டுக்களைக் கேட்பதற்காக அவர்கள் கர்த்தருடைய புதிய வாசலில் உட்கார்ந்தார்கள். (எரே 26:10-11).

(4) எரேமியாவின் பதிலுரை

எரே 26:12 அப்பொழுது எரேமியா எல்லாப் பிரபுக்களையும், எல்லா ஜனங்களையும் நோக்கி: நீங்கள் கேட்ட எல்லா வார்த்தைகளையும் இந்த ஆலயத்துக்கும் இந்த நகரத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லக் கர்த்தர் என்னை அனுப்பினார்.

எரே 26:13 இப்பொழுதும் நீங்கள் உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்தி, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளுங்கள்; அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன தீங்குக்கு மனஸ்தாபப்படுவார்.

எரே 26:14 நானோவெனில், இதோ, உங்கள் கையில் இருக்கிறேன்; உங்கள் பார்வைக்கு நன்மையும் நியாயமுமாயிருக்கிறதை எனக்குச் செய்யுங்கள்.

எரே 26:15 ஆகிலும் நீங்கள் என்னைக் கொன்றுபோட்டால், நீங்கள் குற்றமில்லாத இரத்தப்பழியை உங்கள் மேலும் இந்த நகரத்தின்மேலும் இதின் குடிகளின்மேலும் சுமத்திக் கொள்வீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள்; இந்த வார்த்தைகளையெல்லாம் உங்கள் செவிகளிலே சொல்லக் கர்த்தர் மெய்யாகவே என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று சொன்னான்.

"அப்பொழுது எரேமியா எல்லாப் பிரபுக்களையும், எல்லா ஜனங்களையும் நோக்கி" - அப்பொழுது என்பதற்கு எரேமியா தேவாலயத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும் எதிராகத் தீர்க்கதரிசனம் கூறி முடித்தபின்பு ஜனங்கள் எல்லோரும் எரேமியாவிற்கு எதிராகக் குற்றம் சுமத்தியபோது என்று பொருள்படும். எரேமியா தன்னுடைய நிலைமையை விவரித்துக் கூறுகிறார். இந்த ஆலயத்துக்கும் இந்த நகரத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லக் கர்த்தர் தன்னை அனுப்பினதாக எரேமியா விவரித்துக்கூறுகிறார். இத்துடன் அவர்கள் தங்கள் வழிகளையும், தங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்தி, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க வேண்டும் என்று ஆலோசனையும் கூறுகிறார். (எரே 26:13).

"நானோவெனில், இதோ, உங்கள் கையில் இருக்கிறேன்" - எரேமியா கர்த்தருடைய செய்தியை அறிவித்து விட்டார். ஜனங்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எரேமியா எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. ஜனங்கள் தங்கள் பார்வைக்கு நன்மையும் நியாயமுமாயிருக்கிறதைத் தனக்குச் செய்யலாம் என்று எரேமியா அறிவிக்கிறார். தன்னைக் கொன்றுபோட்டால் அவர்கள்மீது இரத்தப் பழி வருமென்றும் எச்சரிக்கிறார். (எரே 26:14-15).

26 அதிகாரம்

(5) எரேமியாவின்மீது வாக்குவாதம்

எரே 26:16 அப்பொழுது பிரபுக்களும் சகல ஜனங்களும், ஆசாரியர்களையும் தீர்க்கதரிசிகளையும் நோக்கி: இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரனல்ல; நம்முடைய தேவனாகிய கர்த்தரின் நாமத்திலே நம்முடனே பேசினான் என்றார்கள்.

எரே 26:17 தேசத்திலே மூப்பானவர்களில் சிலர் எழும்பி, சபையாகிய ஜனங்களை நோக்கி:

எரே 26:18 யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களில் மொரேசா ஊரானாகிய மீகா தீர்க்கதரிசனஞ் சொல்லி, யூதாவின் சகல ஜனங்களையும் பார்த்து: சீயோன் வயல்வெளியாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப் போம்; இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டிலுள்ள மேடுகளாய்ப்போம் என்று சேனைகளின் கர்த்தர் உரைத்தார் என்று சொன்னான்.

எரே 26:19 அவனை யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவும் மற்ற யூதர்களும் சேர்ந்து கொன்று போட்டார்களா? அவன் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்சினானல்லவா? அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு விரோதமாகச் சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப் பட்டார்; இப்போதும், நாம் நம்முடைய ஆத்துமாவுக்கு விரோதமாக மகா பொல்லாப்பை வரப்பண்ணுகிறவர் களாயிருக்கிறோமே.

எரே 26:20 கீரியாத்யாரீம் ஊரானாகிய செமாயாவின் குமாரன் உரியா என்னும் ஒரு மனுஷனும் கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவ னாயிருந்தான்; அவன் எரேமியாவின் வார்த்தைகளுக்குச் சரியாக இந்த நகரத்துக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னான்.

எரே 26:21 யோயாக்கீம் ராஜாவும் அவனுடைய சகல பராக்கிரமசாலி களும் பிரபுக்களும் அவன் வார்த்தைகளைக் கேட்ட போது, ராஜா அவனைக் கொன்றுபோடும்படி எத்தனித்தான்; அதை உரியா கேட்டு, பயந்து, ஓடிப்போய், எகிப்திலே சேர்ந்தான்.

எரே 26:22 அப்பொழுது யோயாக்கீம் ராஜா அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானையும் அவனோடேகூட வேறே சிலரையும் எகிப்துவரைக்கும் அனுப்பினான்.

எரே 26:23 இவர்கள் உரியாவை எகிப்திலிருந்து கொண்டுவந்து, அவனையோயாக்கீம் ராஜாவினிடத்தில் விட்டார்கள்; அவன் பட்டயத்தாலே அவனை வெட்டி, அவன் உடலை நீச ஜனங்களின் பிரேதக்குழிகளிடத்திலே எறிந்து விட்டான் என்றார்கள்.

எரே 26:24 ஆகிலும் எரேமியாவைக் கொல்ல ஜனங்களின் கையில் ஒப்புக் கொடாதபடி, சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காம் அவனுக்குச் சகாயமாயிருந்தான்.

"இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரனல்ல" - எரேமியா கர்த்தருடைய நாமத்தில் தீர்க்கதரிசனம் கூறினான். ஆகையினால் அவன் மரண ஆக்கினைக்குப் பாத்திரனல்ல என்று பிரபுக்கள் அறிவிக்கிறார்கள்.

"தேசத்திலே மூப்பானவர்களில் சிலர் எழும்பி" - பிரபுக்கள் எரேமியாவைக் குற்றமற்றவர் என்று தீர்மானிக்கிறார்கள். அதன் பின்பு மூப்பர்களில் சிலர் எசேக்கியாவின் நாட்களில் மீகாவின் தீர்க்கதரிசனத்தை ஜனங்களிடம் எடுத்துரைக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் மனந்திரும்பியபோது கர்த்தர் அவர்களுக்கு விரோதமாகச் சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார். (எரே 26:17-19) இவர்களுடைய காலத்தில் உரியா என்னும் தீர்க்கதரிசி கர்த்தருடைய செய்தியைக் கூறினான். ஆனால் யோயாக்கீமும், இஸ்ரவேல் ஜனங்களும் மனந்திரும்பவில்லை. தீர்க்கதரிசனம் கூறிய உரியாவையே கொன்று போட்டார்கள். (எரே 26:20-23). இதன் பின்பு அகீக்காம் என்பவன் எரேமியாவிற்குச் சகாயம் செய்து அவருடைய ஜீவனைத் தப்புவித்தான். (எரே 26:24).

எரேமியா - தொகுப்புரை

26 அதிகாரம்

"மீகா" - இஸ்ரவேலில் தீர்க்கதரிசனம் உரைத்த ஓசியா, ஆமோஸ், ஆகியோருடைய காலத்திலும், யூதாவில் தீர்க்கதரிசனம் உரைத்த ஏசாயாவின் காலத்திலும் மீகா தீர்க்கதரிசனம் கூறினான். (மீகா 1:1).

தீர்க்கதரிசன எண் - 52

"சீயோன் வயல்வெளியாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம்; இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டிலுள்ள மேடுகளாய்ப்போம் என்று சேனைகளின் கர்த்தர் உரைத்தார்" (எரே 26:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. சீயோன் வயல்வெளியாக உழப்படும். (எரே 26:18; மீகா 3:12)
2. எருசலேம் மண்மேடுகளாய்ப்போம் (எரே 26:18)
3. இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டிலுள்ள மேடுகளாய்ப்போம்.

"நாம் நம்முடைய ஆத்துமாவுக்கு விரோதமாக மகா பொல்லாப்பை வரப் பண்ணுகிறவர்களாயிருக்கிறோமே" - மூப்பர்கள்மிகவும் ஞானமாகப் பேசுகிறார்கள். எரேமியாவைக் கொன்றுபோட்டால் தங்களுக்கு எதிராகக் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருமென்றும், அது வருவதற்குத் தாங்களே காரணமென்றும் அறிவிக்கிறார்கள்.

"செமாயாவின் குமாரன் உரியா" - வேதாகமத்தில் உரியாவின் தீர்க்கதரிசனம் பற்றி வேறுஎங்கும் கூறப்படவில்லை. இந்த உரியாவைப் பற்றிய குறிப்பு இந்த வசனத்தில் மட்டுமே காணப்படுகிறது. உரியாவின் தீர்க்கதரிசனமும், எரேமியாவின் தீர்க்கதரிசனமும்ஒத்துள்ளது.யூதாவின்மீதும், எருசலேமின்மீதும் நியாயத்தீர்ப்பு வருமென்று எரேமியாவைப்போல உரியாவும் தீர்க்கதரிசனம் கூறினான். இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் மூலமாகக் கர்த்தர் தம்முடைய செய்திகளை அறிவிக்கிறார்.

யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தில் உரியா எப்பொழுது தீர்க்கதரிசனம் கூறினான் என்று தீர்மானமாகத் தெரியவில்லை. யோயாக்கீமின் ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் உரியா தீர்க்கதரிசனம் கூறியிருந்திருக்க வேண்டும்.

எகிப்திற்குப் போனவர்கள்

1. ஆபிரகாம் (ஆதி 12:10-20)
2. யோசேப்பு (ஆதி 37:36-41:45)
3. யோசேப்பின் சகோதரர்கள் (ஆதி 42:1-44:34)
4. இஸ்ரவேல் தேசத்தார் (யாத் 2-12)
5. ஆதாத் (1இராஜா 11:17-40)
6. யெரொபெயாம் (1இராஜா 12:2-20)
7. யோவாகாஸ் (2இராஜா 23:34)
8. யூதர்கள் (எரே 42:14-43:13)
9. உரியா (எரே 26:23)
10. இயேசு கிறிஸ்து (மத் 2:13-19)

"அவன் உடலை நீச ஜனங்களின் பிரேதக்குழிகளிடத்திலே எறிந்து விட்டான்" - உரியாவின் மரணம் பரிதாபமாக இருக்கிறது. ஆனாலும் அவனைக் கொன்ற யோயாக்கீமின் மரணம் இதைவிட மிகவும் பரிதாபமாக முடிந்தது. (எரே 22:18; எரே 36:30; 1இராஜா 23:34-24:5). யோயாக்கீம் எகிப்திற்குக் கீழ்ப்படிந்திருந்ததினால் அவனால் உரியாவை எகிப்திலிருந்து எளிதாகக் கொண்டுவர முடிந்தது. (2இராஜா 23:31-37).

"சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காம் அவனுக்குச் சகாயமாயிருந்தான்" - இவன் கெதலியாவின் தகப்பன். (எரே 40:6) யோசியாவின் நம்பிக்கைக்குரிய ஊழியக்காரன். (2இராஜா 22:12) ஜனங்களுடைய கையிலிருந்து அகீக்காம் எரேமியாவை விடுவித்தான். எப்படி விடுவித்தான், அதற்காக என்ன செய்தான் என்ற விவரம் வேதாகமத்தில் கூறப்படவில்லை.

27 அதிகாரம்

5. நுகங்களின் அடையாளம்

(1) ஆறு தேசங்களுக்கு நுகங்கள் அனுப்பப்பட்டன - தீர்க்க தரிசனம்

எரே 27:1 யோசியாவின் குமாரனும் யூதாவின் ராஜாவுமாகிய யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை:

எரே 27:2 கர்த்தர் என்னை நோக்கி: நீ உனக்குக் கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணி, அவைகளை உன் கழுத்திலே பூட்டிக்கொண்டு,

எரே 27:3 அவைகளை எருசலேமுக்குச் சிதேக்கியா ராஜாவினிடத்தில் வரும் ஸ்தானாபதிகள் கையிலே ஏதோமின் ராஜாவுக்கும், மோவாபின் ராஜாவுக்கும், அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கும், தீருவின் ராஜாவுக்கும், சீதோனின் ராஜாவுக்கும் அனுப்பி,

எரே 27:4 அவர்கள் தங்கள் எஜமான்களுக்குச் சொல்லும்படிக் கற்பிக்கவேண்டுமென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்,

எரே 27:5 நான் பூமியையும் மனுஷனையும் பூமியின்மேலுள்ள மிருகஜீவன்களையும் என் மகா பலத்தினாலும் ஓங்கிய என் புயத்தினாலும் உண்டாக்கினேன்; எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுக்கிறேன்.

எரே 27:6 இப்பொழுதும் நான் இந்த தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன்; அவனுக்கு ஊழியஞ்செய்யும்படி வெளியின் மிருகஜீவன்களையும் கொடுத்தேன்.

தீர்க்கதரிசன எண் - 53

"யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை:......." (எரே 27:1-22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. ஏதோம், மோவாப், அம்மோன், தீரு, சீதோன் ஆகிய தேசத்தாரை நேபுகாத்நேச்சாரின் கையிலே கொடுப்பேன். (எரே 27:1-6).
2. அவனுக்கு ஊழியஞ்செய்யும்படி வெளியின் மிருகஜீவன்களையும் கொடுத்தேன். (எரே 27:6).
3. அவனுடைய தேசத்துக்குக் காலம் வருகிறவரையில் சகல ஜாதிகளும் அவனையும் அவனுடைய புத்திர பௌத்திரரையும் சேவிப்பார்கள் (எரே 27:7).
4. அதின் பின்பு அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவனை அடிமை கொள்வார்கள்.
5. நேபுகாத்நேச்சாருக்குச் சேவிக்காத தேசத்தை நான் தண்டிப்பேன். (எரே 27:8).
6. நேபுகாத்நேச்சாரைச் சேவிக்கும் ஜாதியை தன் தேசத்தில் குடியிருந்து தாபரிக்கப் பண்ணுவேன் (எரே 27:11).
7. உங்கள் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவனையும் அவன் ஜனத்தையும் சேவியுங்கள்; அப்பொழுது பிழைப்பீர்கள். (எரே 27:12-15).
8. நீங்கள் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பதில்லையென்று உங்களுடனே சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்; அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். (எரே 27:14-15).
9. பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்(எரே 27:17)

எரேமியா - தொகுப்புரை

27 அதிகாரம்

10. கர்த்தருடைய ஆலயத்தில் இருந்த பணிமுட்டுகளைப் பாபிலோன் ராஜா தன் தேசத்திற்கு எடுத்துச் செல்வான். (எரே 27:18-22).

11. நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும். (எரே 27:22).

12. பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப் பண்ணுவேன்.

"யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே" - எரே 26 ஆவது அதிகாரத்தைப் போலவே இந்த அதிகாரத்திலுள்ள செய்திகளும், யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே எரேமியாவிற்குக் கொடுக்கப் படுகிறது. ஆனாலும் சிதேக்கியா ராஜாவின் ஒன்பதாவது வருஷ ராஜ்யபாரம் வரைக்கும் இந்தத் தீர்க்கதரிசனம் அவனுக்கு வெளிப் படுத்தப்படவில்லை. எரேமியா ஏற்ற வேளைக்காகக் காத்திருந்தார். எரேமியா இந்தத் தீர்க்கதரிசனச் செய்தியைப் பெற்றுக் கொண்ட பின்பு, 20 வருஷங்கள் கழித்து, இது நிறைவேறிற்று. (2இராஜா 23:36; 2இராஜா 25:1). எரேமியா கயிறுகளையும், நுகங்களையும் உண்டுபண்ணி, அவைகளைத் தன் கழுத்தில் பூட்டிக் கொண்டார். சிதேக்கியா ராஜாவின் ஒன்பதாவது வருஷ ராஜ்யபாரத்தின் போது ஏராளமான ஸ்தானாபதிகள் அவனைக் காண்பதற்குப் பல தேசங்களிலிருந்தும் எருசலேமிற்கு வந்தார்கள். அக்காலத்தில் தான் அவன் பாபிலோன் ராஜாவிற்கு எதிராகக் கலகம் பண்ணினான். அவர்களுடைய கையிலே எரேமியா கயிறுகளையும், நுகங்களையும் கொடுத்து அனுப்பினார். (எரே 27:2-4). பாபிலோன் தேசம் யூதாவின்மீது யுத்தம் பண்ண வருகிறது. அவர்களிடமிருந்து யூதாவை எவ்வாறு பாதுகாப்பது என்று கலந்து பேசுவதற்காக இந்த ஸ்தானாபதிகளெல்லாம் எருசலேமிற்கு வந்திருக்க வேண்டும்.

எரே 27 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீ உனக்குக் கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணு. (எரே 27:2)
2. அவைகளை உன் கழுத்திலே பூட்டிக்கொள்.
3. அவைகளை ஏதோம், மோவாப், அம்மோன், தீரு, சீதோன், யூதா ஆகிய ராஜாக்களிடத்திற்கு அனுப்பு. (எரே 27:3).
4. நான் இந்த தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன் என்று அவர்களுக்குச் சொல். (எரே 27:6).
5. பாபிலோன் ராஜாவை நீங்கள் சேவிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிற உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், உங்கள் குறிகாரருக்கும், உங்கள் சொப்பனக் காரருக்கும், உங்கள் சூனியக்காரருக்கும் நீங்கள் செவிகொடாதிருங்கள். (எரே 27:9).
6. உங்கள் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்துங்கள். (எரே 27:12).
7. அவனையும் அவன் ஜனத்தையும் சேவியுங்கள்.
8. நீங்கள் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பதில்லையென்று உங்களுடனே சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள் (எரே 27:14).
9. கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் இப்பொழுது சீக்கிரத்திலே பாபிலோனிலிருந்து திரும்பிக் கொண்டுவரப்படுமென்று, உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற உங்களுடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள் (எரே 27:16).
10. அவர்களுக்குச் செவிகொடாதிருங்கள்; பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள் (எரே 27:17).

27 அதிகாரம்

நுகங்களைப் பெற்றுக் கொண்ட தேசங்கள்

1. ஏதோம்
2. மோவாப்
3. அம்மோன்
4. தீரு
5. சீதோன்
6. யூதா

"அவர்கள் தங்கள் எஜமான்களுக்குச் சொல்லும்படிக் கற்பிக்கவேண்டுமென்று" - எரேமியா கூறும் இந்தச் செய்திகளைப் புறஜாதி ராஜாக்கள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள் என்று தெரியவில்லை. ஏனெனில் இந்தச் செய்தி கர்த்தரிடமிருந்து வந்திருக்கிறது. அவர்களோ புறஜாதி தேசத்தார். எரேமியா கூறும் செய்தி மிகவும் தெளிவாக உள்ளது. அவர்கள் நேபுகாத்நேச்சாருக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், அவர்கள் அழிக்கப்படுவார்கள். (எரே 27:4-8).

(2) எல்லா தேசங்களும் மூன்று சந்ததிகள் கால அளவிற்கு பாபிலோனைச் சேவிக்க வேண்டும் - (25:11; தானி 5:2, 7, 11, 13, 16, 18, 29)

எரே 27:7 அவனுடைய தேசத்துக்குக் காலம் வருகிறவரையில் சகல ஜாதிகளும் அவனையும் அவனுடைய புத்திர பௌத்திரரையும் சேவிப்பார்கள்; அதின் பின்பு அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவனை அடிமை கொள்வார்கள்.

பாபிலோனின் ராஜாக்கள்

1. நேபுகாத்நேச்சார் (எரே 27:6,8,20)
2. ஏவில்மொராதாக் (Evil-Merodach) - நேபுகாத்நேச்சாரின் குமாரன்
3. நேபோநீடஸ் (Nebonidus) - ஏவில்மொராதாக்கின் குமாரன். இவனுடைய 17 ஆம் வருஷ ராஜ்ய பாரத்தில் கோரேசும், தரியுவும் பாபிலோனைக் கைப்பற்றினார்கள். (தானி 5)

"அதின் பின்பு அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவனை அடிமைகொள்வார்கள்" - பல தேசங்களைச் சிட்சிப்பதற்குக் கர்த்தர் பாபிலோனைப் பயன்படுத்தினார். அதன் பின்பு மேதிய-பெர்சிய தேசத்து ராஜாக்கள் பாபிலோனை அடிமைப்படுத்துவார்கள்.

(3) தேசங்களுக்கு எச்சரிப்பு

எரே 27:8 எந்த ஜாதியாவது, எந்த ராஜ்யமாவது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்பவனைச் சேவியாமலும், தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தாமலும்போனால், அந்த ஜாதியை நான் அவன் கையாலே நிர்மூலமாக்குமளவும், பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

(4) யூதாவிற்கு எச்சரிப்பு

எரே 27:9 பாபிலோன் ராஜாவை நீங்கள் சேவிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிற உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், உங்கள் குறிகாரருக்கும், உங்கள் சொப்பனக்காரருக்கும், உங்கள் நாட்பார்க்கிறவர்களுக்கும், உங்கள் சூனியக்காரருக்கும் நீங்கள் செவிகொடாதிருங்கள்.

27 அதிகாரம்

எரே 27:10 நான் உங்களை உங்கள் தேசத்திலிருந்து தூரப் படுத்துகிறதற்கும், உங்களைத் துரத்திவிடுகிறதற்கும், நீங்கள் அழிகிறதற்குமாக அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

யூதாவில் ஏமாற்றுகிறவர்கள்

1. கள்ளத்தீர்க்கதரிசிகள்
2. குறிகாரர்
3. சொப்பனக்காரர்
4. நாள்பார்க்கிறவர்
5. சூனியக்காரர்

மோசேயின் பிரமாணத்தில் நாள்பார்க்கிறவர்களுக்கும், சூனியக் காரருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யூதா தேசத்தாரோ கர்த்தருடைய பிரமாணத்தை விட்டு தூரமாக விலகிப் போய்விட்டார்கள். அவர்களை அழித்துப் போடாமல் ஆதரிக்கிறார்கள்.

"அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்" - கள்ளத் தீர்க்கதரிசிகளுக்குச் செவிகொடுக்கும் ஜனங்கள் கர்த்தருக்குச் செவிகொடுக்க மாட்டார்கள். இதனால் தேசம் அழிந்து போகும். நேபுகாத்நேச்சாரைச் சேவிக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார். ஆனால் கள்ளத் தீர்க்கதரிசிகளோ அவனைச் சேவிக்க வேண்டியதில்லையென்று கர்த்தருடைய வார்த்தைக்கு நேர்மாறாக கூறுகிறார்கள். (எரே 27:8, 11, 15).

(5) நிபந்தனையுள்ள ஆசீர்வாதம் - (ஏசா 1:19)

எரே 27:11 ஆனாலும் எந்த ஜாதி தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவனைச் சேவிக்குமோ, அந்த ஜாதியைத் தன் தேசத்தைப் பயிரிட்டு, அதிலே குடியிருந்து தாபரிக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அதிலே குடியிருந்து தாபரிக்கப் பண்ணுவேன்" - அந்நிய தேசத்திற்கு அடிமையாய்ப் போகாமல் சொந்த தேசத்தில் குடியிருப்பது ஒரு சிலாக்கியமாகும். நேபுகாத்நேச்சாருக்கு எதிராகக் கலகம் பண்ணாமல் அவனைச் சேவித்தால் யூதா தேசத்தார் தங்களுடைய சொந்த தேசத்தில் குடியிருக்கலாம். ஆனால் அவர்களோ நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, பாபிலோனின் சிறையிருப்புக்கு உட்பட்டார்கள். (2இராஜா 25:1).

6. சிதேக்கியாவிற்கு நுகங்களின் அடையாளம்

(1) கட்டளைகள்

எரே 27:12 இந்த எல்லா வார்த்தைகளின் படியே நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவோடு பேசி: உங்கள் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவனையும் அவன் ஜனத்தையும் சேவியுங்கள்; அப்பொழுது பிழைப்பீர்கள்.

எரே 27:13 பாபிலோன் ராஜாவைச் சேவியாமற்போகிற ஜாதிக்கு விரோதமாகக் கர்த்தர் சொன்னதின் படியே, நீயும் உன் ஜனமும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் சாவானேன்?

எரே 27:14 நீங்கள் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பதில்லையென்று உங்களுடனே சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்; அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

27 அதிகாரம்

எரே 27:15 நான் அவர்களை அனுப்பினதில்லை; நான் உங்களைத் துரத்திவிடுகிறதற்கும், நீங்களும் உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளும் அழிந்துபோகிறதற்கும் அல்லவோ இவர்கள் என் நாமத்தைச் சொல்லி, பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"உங்கள் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி" - எரேமியா காண்பித்த நுகம் இப்போது யூதாவிற்கு அடையாளமாகக் கூறப்படுகிறது. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் நுகத்துக்கு யூதா தேசத்தார் தங்களைக் கீழ்ப்படுத்த வேண்டும். பாபிலோன் ராஜாவையும் அவன் ஜனத்தையும் சேவிக்க வேண்டும். அப்பொழுது தான் யூதா தேசத்தாரால் பிழைக்க முடியும். நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினால் மற்ற தேசத்தாரைப் போல யூதா தேசத்தாரும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் சாகவேண்டும். (எரே 27:12-13).

(2) யூதா முழுவதுக்கும் கட்டளைகள்

எரே 27:16 மேலும் நான் ஆசாரியரையும் இந்த எல்லா ஜனங்களையும் நோக்கி: இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் இப்பொழுது சீக்கிரத்திலே பாபிலோனிலிருந்து திரும்பிக் கொண்டு வரப்படுமென்று, உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற உங்களுடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

எரே 27:17 அவர்களுக்குச் செவி கொடாதிருங்கள்; பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; இந்த நகரம் பாழாய்ப்போக வேண்டியதென்ன?

"கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் இப்பொழுது சீக்கிரத்திலே பாபிலோனிலிருந்து திரும்பிக் கொண்டுவரப்படும்" - யோயாக்கீம், யோயாக்கீன் ஆகியோருடைய ஆட்சிக்காலத்தில் நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைப் பாபிலோன் தேசத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டான். (2இராஜா 24:13; 2நாளா 36:7-10; தானி 1:1-2). அவையெல்லாம் சீக்கிரத்திலே பாபிலோனிலிருந்து திரும்பிக் கொண்டு வரப்படுமென்று கள்ளத்தீர்க்கதரிசிகள் கூறுகிறார்கள். ஆகையினால் தாங்கள் சிறைப்பிடிக்கப்படுவோம் என்னும் பயம் யூதா தேசத்தாருக்குத் தேவையற்றது என்று பொய்யாகத் தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள்.

(3) தேவாலயத்தில் மீதமுள்ள பொக்கிஷங்கள் பாபிலோனுக்குப் போகும் - (52:17)

எரே 27:18 அல்லது அவர்கள் தீர்க்கதரிசிகளாயிருந்து, அவர்களிடத்திலே கர்த்தருடைய வார்த்தை இருந்தால், கர்த்தருடைய ஆலயத்திலும், யூதா ராஜாவின் அரமனையிலும், எருசலேமிலும் மீதியான பணிமுட்டுகள் பாபிலோனுக்குப் போகாதபடிக்கு அவர்கள் சேனைகளின் கர்த்தரை நோக்கி மன்றாடட்டுமே.

எரே 27:19 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்னும் யூதாவின் ராஜாவையும், யூதாவிலும் எருசலேமிலிருந்த பாபிலோனுக்குச் சிறை பிடித்துக்கொண்டுபோகையில்,

எரே 27:20 எடுக்காமல் விட்ட சகல தூண்களையும், கடல்தொட்டியையும், ஆதாரங்களையும், இந்த நகரத்தில் மீதியான மற்றப் பணிமுட்டுகளையுங் குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,

27 அதிகாரம்

எரே 27:21 கர்த்தருடைய ஆலயத்திலும், யூதாராஜாவின் அரமனையிலும், எருசலேமிலும் மீதியான அந்தப் பணிமுட்டுகள் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படுமென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 27:22 நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும்; பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டு வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றேன்.

"அவர்கள் சேனைகளின் கர்த்தரை நோக்கி மன்றாடட்டுமே" - ஒருவன் கர்த்தருடைய வார்த்தையைப்பேசுகிறானா அல்லது தன்னுடைய சொந்த வார்த்தைகளைப் பேசுகிறானா என்று சோதித்துப் பார்க்க வேண்டும். கர்த்தர் இங்கு ஒரு நல்ல பரீட்சையைக் கூறுகிறார். ஒருவன் கர்த்தரோடிருந்தால் அவன் ஆசீர்வதிக்கப் படுவான். தன்னுடைய விண்ணப்பத்திற்குக் கர்த்தரிடமிருந்து பதிலைப் பெற்றுக் கொள்வான். இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், மற்ற ஊழியக்காரர்களும் தங்களுடைய ஊழிய அழைப்பை அற்புதங்களினால் உறுதி பண்ணினார்கள். அவர்கள் மூலமாக அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன. (லூக்கா 4:16-21; யோவான் 2:11; யோவான் 3:2; யோவான் 5:30-47; யோவான் 14:11; அப் 2:43; அப் 5:12-13; அப் 8:6; அப் 15:4,12; ரோமர் 1:11; ரோமர் 15:18-19,29; எபி 2:3-4).

"எடுக்காமல் விட்ட சகல தூண்களையும், கடல்தொட்டியையும்" - தேவாலயத்திலுள்ள பணிமுட்டுகளில் சிலவற்றைப் பாபிலோன் ராஜா இன்னும் தன் தேசத்திற்கு எடுத்துச் செல்லவில்லை. எகொனியாவும், அவனுடைய பிரபுக்களும், யூதாவின் பிரதானிகளும் பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுச் சென்ற போது, தேவாலயத்தின் தூண்களையும், கடல்தொட்டியையும், ஆதாரங்களையும் பாபிலோன் ராஜா தன் தேசத்திற்கு எடுத்துச் செல்லவில்லை.

(எரே 27:19-20). எடுக்காமல் விட்ட பொருட்களைப் பற்றி இங்கு தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பொருட்களும் பாபிலோன் தேசத்திற்கு எடுத்துச் செல்லப்படும். கர்த்தர் யூதர்களைப் பாபிலோன் தேசத்திலிருந்து பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பவும் அழைத்து வரும் வரையிலும் இந்தப் பணிமுட்டுகளெல்லாம் பாபிலோன் தேசத்திலேயே இருக்கும். (எரே 27:21-22). இந்தச் சம்பவம் 70 வருஷங்களின் முடிவில் நடைபெறும். இந்த வருஷங்களில் நேபுகாத்நேச்சாரும், அவனுடைய குமாரன் ஏவில்மொரோதாக்கும், அவனுடைய பேரன் நேபோநிதசும், பாபிலோனில் ஆட்சி புரிவார்கள். (எரே 27:7; எரே 25:11-14).

28 அதிகாரம்

7. தீர்க்கதரிசன போட்டி

(1) அனனியாவின் கள்ளத் தீர்க்கதரிசனம்

எரே 28:1 யூதாவுடைய ராஜாவாகிய சிதேக்கியா அரசாளத் துவக்கின நாலாம் வருஷம் ஐந்தாம் மாதத்திலே, அசூரின் குமாரனாகிய அனனியா என்னப்பட்ட கிபியோன் ஊரானாகிய தீர்க்கதரிசி கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்களும் சகல ஜனங்களும் பார்த்திருக்க என்னை நோக்கி:

எரே 28:2 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன்.

எரே 28:3 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து எடுத்துப் பாபிலோனுக்குக் கொண்டுபோன கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளை யெல்லாம் நான் இரண்டு வருஷகாலத்திலே இவ்விடத்துக்குத் திரும்பக் கொண்டுவரப் பண்ணுவேன்.

எரே 28:4 யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்கிற யூதாவுடைய ராஜாவையும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்ட யூதர் அனைவரையும் நான் இவ்விடத்துக்குத் திரும்பிவரப் பண்ணுவேன்; பாபிலோன் ராஜாவின் நுகத்தை உடைப்பேன் என்றார் என்று சொன்னான்.

"சிதேக்கியா அரசாளத் துவக்கின நாலாம் வருஷம் ஐந்தாம் மாதத்திலே" - சிதேக்கியாவின் நாலாம் வருஷ ஆட்சிக்காலத்தின் போது கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும், மெய் தீர்க்கதரிசிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகிறது. இந்த வருஷத்தில் சிதேக்கியா பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். (எரே 28:1). இந்தக் கலகத்திற்குக் காரணங்கள்:

1. கர்த்தர் யூதா தேசத்தை அழித்துப்போடும் அளவிற்கு அந்தத் தேசத்தார் அவருக்குக் கோபம் உண்டாக்கினார்கள். (2இராஜா 24:20).

2. யூதா தேசம் இனிமேல் தோல்வியைச் சந்திப்பதில்லையென்றும், பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனவர்கள் இன்னும் இரண்டு வருஷங்களில் பாலஸ்தீன தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள். (எரே 28:1-4). இதனால் சிதேக்கியாவும், யூதா தேசத்தாரும் தங்கள் மனதில் தைரியம் கொண்டு, நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள்.

"பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன்" - இது ஒரு கள்ளத்தீர்க்கதரிசனம். இரண்டு வருஷங்களில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்என்று அனனியா பொய்கூறினான். ஆனால் அது நிறைவேறவில்லை. (எரே 28:2-4). மனுஷன் தன்னுடைய சொந்த நினைவுகளைக் கூறுவது தீர்க்கதரிசனமல்ல. கர்த்தருடைய வார்த்தையை அறிவிப்பதே மெய்யான தீர்க்கதரிசனமாகும். கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறும்.

(2) எரேமியாவின் பதிலுரை

எரே 28:5 அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி ஆசாரியர்கள் பார்த்திருக்கவும், கர்த்தருடைய ஆலயத்தில் நின்றிருந்த ஜனங்களெல்லாரும் பார்த்திருக்கவும் அனனியா தீர்க்கதரிசியை நோக்கி:

28 அதிகாரம்

எரே 28:6 ஆமென், கர்த்தர் அப்படியே செய்வாராக; கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையும் சிறைப்பட்டுப்போன அனைவரையும் பாபிலோனிலிருந்து திரும்பிவஜ்ப் பண்ணுவாரென்று நீ தீர்க்கதரிசனமாகச் சொன்ன உன் வார்த்தைகளைக் கர்த்தர் நிறைவேற்றுவாராக.

எரே 28:7 ஆகிலும், உன் செவிகளும் சகல ஜனத்தின் செவிகளும் கேட்க நான் சொல்லும் வார்த்தையைக் கேள்.

எரே 28:8 பூர்வகாலமுதல் எனக்கு முன்னும் உனக்கு முன்னும் இருந்த தீர்க்கதரிசிகள் அநேகம் தேசங்களுக்கு விரோதமாகவும், பெரிய ராஜ்யங்களுக்கு விரோதமாகவும், யுத்தத்தையும் பஞ்சத்தையும் கொள்ளைநோயையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

எரே 28:9 சமாதானம் வரும் என்று தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் சொல்லியிருக்க, அந்தத் தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையின்படியே வந்தால், அப்பொழுது அவன் கர்த்தர் மெய்யாய் அனுப்பின தீர்க்கதரிசியாக விளங்குவானென்று எரேமியா தீர்க்கதரிசி சொன்னான்.

"எரேமியா தீர்க்கதரிசி.......அனனியா தீர்க்கதரிசியை நோக்கி" - அனனியா கள்ளத்தீர்க்கதரிசனம் கூறுகிறான். அதைக் குறித்து எரேமியா இப்போது பேச ஆரம்பிக்கிறார். (எரே 28:5-9). அனனியாவின் முன்னறிவிப்புகள் நிறைவேறவேண்டுமென்று எரேமியாவும் விரும்புகிறார். (எரே 28:6). தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையின்படியே நடைபெற்றால் அந்தத் தீர்க்கதரிசி கர்த்தர் மெய்யாய் அனுப்பினவனாய் இருப்பான். (எரே 28:8-9). அனனியாவின் வார்த்தைகள் நிறைவேறினால் அவனும் மெய்யான தீர்க்கதரிசியாக இருப்பான். ஆனால் அனனியாவோ எரேமியாவின் வார்த்தைக்குச் செவிகொடுக்கவில்லை. எரேமியாவிற்கு அனனியாவைக் குறித்து கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. இந்த வருஷத்திலே அனனியா செத்துப்போவான் என்று எரேமியா தீர்க்கதரிசனம் கூறினான். அப்படியே அனனியா செத்துப்போனான். (எரே 28:10-17).

(3) அனனியாவின் கள்ளத் தீர்க்கதரிசனம் - (25:11)

எரே 28:10 அப்பொழுது அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை உடைத்துப் போட்டான்.

எரே 28:11 பின்பு அனனியா சகல ஜனங்களுக்கு முன்பாகவும்: இந்தப் பிரகாரமாக இரண்டு வருஷகாலத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய நுகத்தைச் சகல ஜாதிகளின் கழுத்திலுமிருந்து விலக உடைத்துப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி தன் வழியே போனான்.

"அனனியா ....நுகத்தை எடுத்து அதை உடைத்துப்போட்டான்" - யூதாவிற்குச் சமாதானம் உண்டு என்று அனனியாவும், சமாதானம் இல்லையென்று எரேமியாவும் தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். யூதாவின் பாரத்தை அடையாளமாகக் காண்பிப்பதற்காக எரேமியா தன் கழுத்தில் நுகத்தை அணிந்திருந்தார். அனனியா அதை அவர் கழுத்திலிருந்து எடுத்து உடைத்துப்போட்டான். நேபுகாத்நேச்சாரின் நுகம் உடைக்கப்படும் என்று அனனியா மறுபடியும் பொய்த்தீர்க்கதரிசனம் கூறினான். (எரே 28:10-11). எல்லா தேசங்களின்மீதும் நேபுகாத்நேச்சாரின் நுகங்கள் சுமத்தப்படும் என்பதற்கு அடையாளமாக எரேமியா தன் கழுத்தில் நுகத்தை அணிந்திருக்கிறார். (எரே 27:1-8).

எரேமியா - தொகுப்புரை

28 அதிகாரம்

(4) எரேமியாவின் மெய் தீர்க்கதரிசனம்

எரே 28:12 அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை உடைத்துப் போட்ட பிற்பாடு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 28:13 நீ போய், அனனியாவை நோக்கி: நீ மர நுகத்தை உடைத்தாய்; அதற்குப் பதிலாக இருப்பு நுகத்தை உண்டுபண்ணு என்று கர்த்தர் சொன்னார்.

எரே 28:14 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைச் சேவிக்கும்படிக்கு இருப்பு நுகத்தை இந்த எல்லா ஜாதிகளுடைய கழுத்தின்மேலும் போட்டேன்; அவர்கள் அவனைச் சேவிப்பார்கள். வெளியின் மிருக ஜீவன்களையும் அவனுக்கு ஒப்புக் கொடுத்தேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எரே 28:15 பின்பு எரேமியா தீர்க்கதரிசி அனனியா என்கிற தீர்க்கதரிசியை நோக்கி: இப்போதும் அனனியாவே, கேள்; கர்த்தர் உன்னை அனுப்பினதில்லை; நீயோ இந்த ஜனத்தைப் பொய்யை நம்பும்படிச் செய்தாய்.

எரே 28:16 ஆகையால், இதோ, உன்னைப் பூமியின்மேல் இராதபடிக்கு அகற்றி விடுவேன்; இந்த வருஷத்திலே நீ சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் உண்டாகப் பேசினாயே என்றான்.

"கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி" • - அனனியாவுக்கும், எரேமியாவிற்கும்இடையிலுள்ளபிரச்சனையில் இப்போது எரேமியா முதன் முறையாக ஒரு தீர்க்கதரிசனத்தை இங்கு கூறுகிறார். (எரே 28:12-17).

தீர்க்கதரிசன எண் - 54

"கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி........" (எரே 28:12-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீ மர நுகத்தை உடைத்தாய்; அதற்குப் பதிலாக இருப்பு நுகம் உண்டுபண்ணப் படும். (எரே 28:13-14).

2. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை யூதா ஜனத்தார் சேவிப்பார்கள். (எரே 28:14).

3. வெளியின் மிருகஜீவன்களையும் அவனுக்கு ஒப்புக்கொடுத்தேன்.

4. உன்னைப் (அனனியா) பூமியின்மேல் இராதபடிக்கு அகற்றிவிடுவேன்; இந்த வருஷத்திலே நீ சாவாய் (எரே 28:15-16)

"எரேமியா தீர்க்கதரிசி அனனியா என்கிற தீர்க்கதரிசியை நோக்கி" - இதன் பின்பு எரேமியா பாபிலோனைக் குறித்தும், அனனியாவின் மரணத்தைக் குறித்தும் தீர்க்கதரிசனம் கூறுகிறார். (எரே 28:15-16).

(5) மெய்தீர்க்கதரிசனத்திற்கு பரீட்சை

எரே 28:17 அப்படியே அனனியா என்கிற தீர்க்கதரிசி அவ்வருஷத்திலேதானே ஏழாம் மாதத்திலே செத்துப்போனான்.

"அனனியா.....செத்துப்போனான்" - இதன் நிமித்தமாக எரேமியா மெய்யான தீர்க்கதரிசி (எரே 28:12-16) என்பதும், அனனியா ஒரு கள்ளத்தீர்க்கதரிசி (எரே 28:1-11) என்பதும் நிரூபணமாயிற்று.

29 அதிகாரம்

8. முதலாவது சிறையிருப்பிலிருந்த யூதர்களுக்கு நிருபம்

(1) வீடுகளைக் கட்டி குடியிருங்கள் - பத்து அம்ச புத்திமதி

எரே 29:1 எகொனியா என்னும் ராஜாவும், ராஜஸ்திரீயும், பிரதானிகளும், யூதாவிலும் எருசலேமிலுமுள்ள பிரபுக்களும், தச்சரும், கொல்லரும் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போன பிறபாடு,

எரே 29:2 எரேமியா தீர்க்கதரிசி சிறைப்பட்டுப்போன மூப்பர்களில் மீதியானவர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், நேபுகாத்நேச்சார் சிறைப்படுத்தி எருசலேமிலிருந்து பாபிலோனுக்குக் கொண்டுபோன சகல ஜனங்களுக்கும் எழுதி,

எரே 29:3 யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரிடத்தில் கொடுக்கும்படி சாப்பானின் குமாரனாகிய எலெயாசாரின் கையிலும், இல்க்கியாவின் குமாரனாகிய கெமரியாவின் கையிலும் கொடுத்து, எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அனுப்பின நிருபத்தின் விபரம்:

எரே 29:4 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர், தாம் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போகப்பண்ணின அனைவருக்கும் அறிவிக்கிறது என்னவென்றால்,

எரே 29:5 நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள்.

எரே 29:6 நீங்கள் பெண்களை விவாகம் பண்ணி, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்று, உங்கள் குமாரருக்குப் பெண்களைக்கொண்டு, உங்கள் குமாரத்திகளைப் புருஷருக்குக் கொடுங்கள்; இவர்களும் குமாரரையும் குமாரத்திகளையும் பெறட்டும்; நீங்கள் அங்கே குறுகாமல் பெருகி,

எரே 29:7 நான் உங்களைச் சிறைப்பட்டுப்போகப் பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்.

தீர்க்கதரிசன எண் - 55

"எகொனியா என்னும் ராஜாவும், ராஜஸ்திரீயும், பிரதானிகளும்......" (எரே 29:1-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள்.(எரே 29:4-10)
2. பாபிலோனிலே எழுபதுவருஷம் நிறைவேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரப் பண்ணும்படிக்கு உங்கள் மேல் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் (எரே 29:10)
3. அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். (எரே 29:12)
4. உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். (எரே 29:13)
5. நான் உங்களுக்குக் காணப்படுவேன் (எரே 29:14)

எரேமியா - தொகுப்புரை

29 அதிகாரம்

6. நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்ப்பேன.

7. நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப் பண்ணுவேன்.

"நிருபம்" - எரேமியா பாபிலோனின் சிறையிருப்பில் உள்ளவர்களுக்கு ஒரு நிருபத்தை எழுதி அனுப்புகிறார். எழுபது வருஷ சிறையிருப்பில் அவர்கள் அங்கு என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார். பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து இரண்டு வருஷத்திற்குள் யூதர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பி வந்துவிடுவார்கள் என்று கள்ளத் தீர்க்கதரிசிகள் பொய் கூறினார்கள். (எரே 28:1-11). பாபிலோனின் சிறையிருப்பில் இருந்த யூதர்கள் இந்தக் கள்ளத் தீர்க்கதரிசனத்தினால் மனம் குழம்பிப்போய் இருந்தார்கள். பாபிலோனில் இரண்டு வருஷம் மட்டுமே சிறையிருப்பில் இருப்போம் என்று நினைத்து அங்கு ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் எரேமியா அவர்களுக்கு ஒரு நிருபத்தை எழுதி அனுப்புகிறார். அவர்கள் பாபிலோனில் எழுபது வருஷங்களுக்குச் சிறையிருப்பில் இருப்பார்கள். ஆகையினால் அவர்கள் அங்கு வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளை எழுபது வருஷங்களுக்குச் சாப்பிடுமாறு எரேமியா ஆலோசனை கூறுகிறார். எழுபது வருஷங்களுக்குப் பின்பு கர்த்தர் அவர்களைச் சந்தித்து பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்ப அழைத்து வருவார். (எரே 29:4-7). பாபிலோனில் சிறையிருப்பிலிருந்த யூதர்களில் சிலர் பாபிலோனுக்கு எதிராகக் கலகம் பண்ண தீர்மானித்தார்கள். பாபிலோனின் நுகத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அதை முறித்துப் போட வகைதேடினார்கள். எரேமியா இதற்காகவும் ஆலோசனை கூறுகிறார். பாபிலோனின் சமாதானத்திற்காக அவர்கள் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார். பாபிலோனுக்குச் சமாதானம் இருக்கையில் அவர்களுக்கும் சமாதானம் இருக்குமென்றும் எரேமியா அறிவிக்கிறார். (எரே 29:7).

எரேமியாவின் நிருபம் அனுப்பப் பட்டவர்கள்

1. மூப்பர்கள் (எரே 29:1)
2. ஆசாரியர்கள்
3. தீர்க்கதரிசகள்
4. ராஜாவும், ராஜஸ்திரீயும்
5. பிரதானிகள்
6. பிரபுக்கள்
7. தச்சர்
8. கொல்லர்

"எலெயாசாரின் கையிலும்.......கெமரியாவின் கையிலும்" - இவர்கள் இருவரையும் சிதேக்கியா ராஜா பாபிலோன் ராஜாவினிடத்திற்கு அனுப்பினான். அவர்கள் எதற்காக அனுப்பப் பட்டார்கள் என்று தெரியவில்லை. எரேமியா இவ்விருவர் மூலமாகத் தனது நிருபத்தைக் கொடுத்து அனுப்புகிறார். இந்தச் சம்பவம் சிதேக்கியாவின் நாலாம் வருஷ ஆட்சிக் காலத்தில் நடைபெறுகிறது. (எரே 28:1).

பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போகப் பண்ணின அனைவருக்கும் கூறப் பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் வீடுகளைக் கட்டி அதில் குடியிருங்கள். (எரே 29:5).
2. தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள்.
3. நீங்கள் பெண்களை விவாகம்பண்ணி, குமாரரையும் குமாரத்திகளையும் பெறுங்கள். (எரே 29:6).

29 அதிகாரம்

4. உங்கள் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுங்கள்.

5. உங்கள் குமாரத்திகளைப் புருஷருக்குக் கொடுங்கள்.

6. பாபிலோனில் சமாதானத்தைத் தேடுங்கள். (எரே 29:7).

7. கர்த்தரிடத்தில் பாபிலோனின் சமாதானத்திற்காக விண்ணப்பம் பண்ணுங்கள்.

8. உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம்போக்க வொட்டாதிருங்கள். (எரே 29:8).

9. உங்கள் சொப்பனக்காரருக்குச் செவிகொடாமல் இருங்கள்.

10. நீங்களெல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். (எரே 29:20-23).

11. செமாயாவுக்குச் சொல்லுங்கள். (எரே 29:24).

12. சிறையிருக்கிற அனைவருக்கும் சொல்லி அனுப்புங்கள். (எரே 29:31).

"நீங்கள் அங்கே குறுகாமல் பெருகி" - யூதா தேசத்தார் பாபிலோனின் சிறையிருப்பில் இருக்கிறார்கள். அங்கு அவர்களுடைய சந்ததி குறுகிப்போய்விடக்கூடாது. அவர்கள் பெருக வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். இஸ்ரவேல் புத்திரர் அழிந்துபோகக்கூடாது. அவர்கள் ஒரு தேசமாகத் திரும்பவும் சேர்க்கப்பட வேண்டும் என்று கர்த்தர் சித்தம் கொண்டிருக்கிறார்.

"அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்" - யூதா தேசத்தார் பாபிலோனுடைய சிறையிருப்பில் இருந்தபோதிலும் அவர்கள் அந்தத் தேசத்தின் நன்மைகளில் பங்குபெற வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். பாபிலோனின் சமாதானத்திற்காக யூதா தேசத்தாரும் பாடுபட வேண்டும். பாபிலோனுக்குச் சமாதானம் இருந்தால்தான் அங்கு சிறையிருப்பில் இருக்கும் யூதா தேசத்தாருக்கும் சமாதானம் இருக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் எந்தத் தேசத்தில் இருந்தாலும் அந்தத் தேசத்தின் சமாதானத்திற்காகவும், ஆசீர்வாதத் திற்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும். (ரோமர் 13).

(2) கள்ளத்தீர்க்கதரிசிகளை நம்ப வேண்டாம்

எரே 29:8 மேலும், உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம் போக்க வொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக் காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:9 அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்; நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" - கர்த்தர் பொய் தீர்க்கதரிசிகளையும், ஏமாற்றுக்காரர்களையும், தேசத்து ரோகிகளையும் எந்தத் தேசத்திற்கும் அனுப்புவதில்லை. கர்த்தருடைய பிள்ளைகள் எந்தத் தேசத்தில் இருந்தாலும் அந்தத் தேசத்தின் நற்குடி மக்களாக இருக்க வேண்டும். (ரோமர் 13).

எரேமியா - தொகுப்புரை

29 அதிகாரம்

(3) எழுபது வருஷத்திற்கு பின்பு ஒன்பது அம்ச மீட்பு

எரே 29:10 பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரப் பண்ணும்படிக்கு உங்கள் மேல் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:11 நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே.

எரே 29:12 அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

எரே 29:13 உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.

எரே 29:14 நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து, நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பாபிலோனிலே எழுபதுவருஷம் நிறைவேறின பின்பு" - யூதர்கள் பாபிலோனில் எழுபது வருஷம் சிறையிருப்பில் இருக்க வேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்கு நியமித்து வைத்திருக்கிறார். அதன் பின்பு கர்த்தர் அவர்களை அவர்களுடைய சுயதேசத்திற்குத் திரும்ப அழைத்து வருவார். (எரே 25:11-14).

எழுபது வருஷத்திற்குப்பின்பு கர்த்தர் செய்யப் போகும் காரியம்

1. நான் உங்களைச் சந்திப்பேன்.

2. உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப்பண்ணுவேன்.

3. உங்கள் மேல் நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவேன்.

4. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் (எரே 29:11).

5. அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். (எரே 29:12).

6. உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். (எரே 29:13).

7. நான் உங்களுக்குக் காணப்படுவேன் (எரே 29:14).

8. நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்ப்பேன்.

9. நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப் பண்ணுவேன்.

29 அதிகாரம்

(4) யூதாவிலுள்ள அவர்களுடைய சகோதரரின் ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு - காரணங்கள்

எரே 29:15 கர்த்தர் எங்களுக்குப் பாபிலோனிலும் தீர்க்கதரிசிகளை எழுப்பினார் என்று சொல்லுகிறீர்கள்.

எரே 29:16 ஆனால் தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாவைக் குறித்தும், உங்களோடே கூடச் சிறையிருப்பில் புறப்பட்டுப் போகாமல் இந்த நகரத்தில் குடியிருக்கிற உங்கள் சகோதரராகிய எல்லா ஜனங்களைக் குறித்தும்,

எரே 29:17 இதோ, நான் பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அவர்களுக்குள் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; புசிக்கத்தகாத கெட்டுப்போன அத்திப்பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்குவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:18 அவர்கள் என் வார்த்தைகளைக் கேளாமற் போனபடியால், நான் அவர்களைப் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் பின்தொடர்ந்து, அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்துகிற எல்லா ஜாதிகளிடத்திலும் சாபமாகவும், பாழாகவும், ஈசலிடுதலுக் கிடமாகவும், நிந்தையாகவும் வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:19 நான் உங்களிடத்திற்குத் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக் காரரை ஏற்கனவே அனுப்பிக் கொண்டேயிருந்தும், நீங்கள் செவிகொடாமற்போனீர்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நியாயத்தீர்ப்புக்குக் காரணம்

1. கர்த்தர் எங்களுக்குப் பாபிலோனிலும் தீர்க்கதரிசிகளை எழுப்பினார் என்று சொல்லுகிறீர்கள். (எரே 29:15-18).
2. நான் உங்களிடத்திற்குத் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரை ஏற்கனவே அனுப்பிக் கொண்டேயிருந்தும், நீங்கள் செவிகொடாமற் போனீர்கள். (எரே 29:19-22).
3. அவர்கள் இஸ்ரவேலிலே மதிகெட்ட காரியத்தைச் செய்து, தங்கள் அயலாருடைய பெண்ஜாதிகளோடே விபசாரம்பண்ணி, நான் அவர்களுக்குக் கற்பியாத பொய்யான வார்த்தையை என் நாமத்தைச் சொல்லி உரைத்தார்கள் (எரே 29:23).
4. செமாயா உங்களுக்கு மீறுதலைக் கற்றுக் கொடுத்தான்.(எரே 29:25-32).
5. கர்த்தர் செமாயாவை அனுப்பாதிருந்தும், அவன் உங்களுக்குத் தீர்க்கதரிசனஞ் சொல்லி, உங்களைப் பொய்யை நம்பப் பண்ணுகிறான். (எரே 29:31-32).

“கர்த்தர் எங்களுக்குப் பாபிலோனிலும் தீர்க்கதரிசிகளை எழுப்பினார்” - கள்ளத் தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் புத்திரரை யூதா தேசத்திலும், பாபிலோன் தேசத்திலும் கர்த்தரை விட்டு வழிவிலகிப்போகப் பண்ணுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் நயமான வார்த்தைகளையும், ஆறுதலான வார்த்தைகளையும் பேசுவதினால் ஜனங்களுக்கு அவர்கள்மீது பிரியம் உண்டாயிற்று. யூதா தேசத்தில் பல கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்தாலும் அனனியாவைப் பற்றி மட்டுமே இங்கு அதிகமாகக் கூறப்பட்டிருக்கிறது. (எரே 28) பாபிலோன் தேசத்தில் எசேக்கியேல் கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிசியாக ஊழியம் செய்து வந்தான். கள்ளத் தீர்க்கதரிசிகள் எசேக்கியேலின் வார்த்தைக்கு எதிர்த்து நின்றார்கள். எரேமியாவும், எசேக்கியேலும் வெவ்வேறு தேசத்தில் இருந்த போதிலும் அவர்கள் கூறிய தீர்க்கதரிசனச் செய்தியில் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. அவர்கள் ஒரே காலத்தில் ஒரே காரியங்களைத் தீர்க்கதரிசனமாகக் கூறினார்கள். கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பற்றி பல வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (எரே 2:8,26,30; எரே 4:9; எரே 5:13,31; எரே 13:13; எரே 14:13; எரே 27:9-18; எரே 29:1,8; எரே 37:19; எசே 13:2-16; எசே 22:25,28)

எரேமியா - தொகுப்புரை

29 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 56

"புசிக்கத்தகாத கெட்டுப்போன அத்திப் பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்குவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்........" (எரே 29:17-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அவர்களுக்குள் அனுப்புவேன் (எரே 29:17).
2. புசிக்கத்தகாத கெட்டுப்போன அத்திப்பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்குவேன்.
3. நான் அவர்களைப் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் பின்தொடருவேன். (எரே 29:18).
4. அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்துகிற எல்லா ஜாதிகளிடத்திலும் சாபமாகவும், பாழாகவும், ஈசலிடுதலுக்கிடமாகவும், நிந்தையாகவும் வைப்பேன்.

யூதாவின் பாவம்

1. கள்ளத்தீர்க்க தரிசிகளையும், குறிகாரரையும் அங்கிகரிக்கிறார்கள். (எரே 29:8; லூக்கா 12:29)
2. கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள் (எரே 29:9)
3. கர்த்தர் தங்களுக்குப் பாபிலோனிலும் தீர்க்கதரிசிகளை எழுப்பினார் என்று சொல்லுகிறார்கள். (எரே 29:15)
4. கர்த்தருடைய வார்த்தைக்குச் செவி கொடாமற்போனார்கள். (எரே 29:19)
5. கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி, ஜனங்களுக்குப் பொய்யான தீர்க்க தரிசனம் உரைக்கிறார்கள். (எரே 29:21)
6. இஸ்ரவேலிலே மதிகெட்ட காரியத்தைச் செய்கிறார்கள். (எரே 29:23)
7. தங்கள் அயலாருடைய பெண் ஜாதிகளோடே விபசாரம் பண்ணுகிறார்கள்.
8. தவறான செய்திகளோடு நிருபங்களை அனுப்புகிறார்கள். (எரே 29:25)
9. ஜனங்களை பொய்யை நம்பப் பண்ணுகிறார்கள். (எரே 29:31)
10. கர்த்தருக்கு விரோதமாய்க் கலகமுண்டாகப் பேசுகிறார்கள். (எரே 29:32)

(5) பாபிலோனிலுள்ள கள்ளத் தீர்க்கதரிசிகள்மீது நியாயத் தீர்ப்பு - காரணம்

எரே 29:20 இப்போதும் சிறையிருக்கும்படி நான் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அனுப்பிவிட்ட நீங்களெல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 29:21 என் நாமத்தைச் சொல்லி, உங்களுக்குப்பொய்யானதீர்க்கதரிசனம் உரைக்கிறகொலாயாவின்குமாரனாகிய ஆகாபையும்,மாசெயாவின்குமாரனாகிய சிதேக்கியாவையுங் குறித்து: இதோ, நான் அவர்களைப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரின் கையிலே ஒப்புக் கொடுக்கிறேன்; அவன்அவர்களைஉங்கள்கண்களுக்கு முன்பாகக் கொன்றுபோடுவான்.

எரே 29:22 பாபிலோன் ராஜா அக்கினியினால் சுட்டுப்போட்ட சிதேக்கியாவுக்கும் ஆகாபுக்கும் கர்த்தர் உன்னைச் சமானமாக்கக் கடவரென்று; அவர்களைக் குறித்து ஒரு சாபவார்த்தை பாபிலோனிலே சிறையிருக்கிற யூதா அனைவருக்குள்ளும் வழங்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

29 அதிகாரம்

எரே 29:23 அவர்கள் இஸ்ரவேலிலே மதிகெட்ட காரியத்தைச் செய்து, தங்கள் அயலாருடைய பெண் ஜாதிகளோடே விபசாரம்பண்ணி, நான் அவர்களுக்குக் கற்பியாத பொய்யான வார்த்தையை என் நாமத்தைச் சொல்லி உரைத்தார்கள்; நான் அதை அறிவேன்; அதற்கு நானே சாட்சி என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதினான்.

தீர்க்கதரிசன எண் - 57

"இப்போதும் சிறையிருக்கும்படி நான் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அனுப்பிவிட்ட நீங்களெல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்........" (எரே 29:20-22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அவர்களைப் (ஆகாபையும், சிதேக்கியாவையும், கள்ளத்தீர்க்க தரிசிகளையும்) பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலே ஒப்புக்கொடுக்கிறேன் (எரே 29:21).
2. அவன் அவர்களை உங்கள்கண்களுக்கு முன்பாகக் கொன்றுபோடுவான்.
3. அவர்களைக் குறித்து ஒரு சாபவார்த்தை பாபிலோனிலே சிறையிருக்கிற யூதா அனைவருக்குள்ளும் வழங்கும் (எரே 29:22).

"ஆகாப்" - இவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. சிதேக்கியாவும் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. இதே பெயரில் ராஜாக்களும் இருக்கிறார்கள். அந்த ராஜாக்கள் வேறு. இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகள் வேறு. நேபுகாத்நேச்சார் இவர்கள் இருவரையும் அக்கினியில் சுட்டெரித்தான். (எரே 29:21-22).

"இஸ்ரவேல்" - யூதா தேசம் இந்த வசனத்தில் இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறது.

(6) செமாயாவின் பாவம்

எரே 29:24 பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: நீ நெகெலாமியனாகிய செமாயாவுக்கும் சொல்லியனுப்ப வேண்டியது என்னவென்றால்:

எரே 29:25 நீ எருசலேமிலிருக்கிற எல்லா ஜனங்களுக்கும், மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனுக்கும், மற்ற ஆசாரியர்களுக்கும் உன் நாமத்திலே நிருபத்தை எழுதியனுப்பினது என்னவென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:26 இவனுக்கு அவன் எழுதியிருந்த நிருபமாவது: நீங்கள் கர்த்தருடைய ஆலயத்தின் விசாரிப்புக் காரராயிருக்கும் படிக்கும், பிரமை கொண்டு தன்னைத் தீர்க்க தரிசியாக்கிக் கொள்ளுகிறவனாகிய எந்த மனுஷனையும் நீர் காவல் அறையிலும் தொழுவிலும் போடும்படிக்கும், கர்த்தர் உம்மை ஆசாரியனாயிருந்த யோய்தாவின் ஸ்தானத்திலே ஆசாரியனாக வைத்தாரே.

எரே 29:27 இப்போதும் உங்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறிவருகிற ஆனதோத் ஊரானாகிய எரேமியாவை நீர் கடிந்து கொள்ளாமற்போனதென்ன?

எரே 29:28 இந்தச் சிறையிருப்பு நெடுங் காலமாக இருக்கும்; நீங்கள் வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைச் சாப்பிடுங்களென்று பாபிலோனில் இருக்கிற எங்களுக்குச் சொல்லி யனுப்பினானென்று எழுதியிருந்தான்.

எரே 29:29 இந்த நிருபத்தைச் செப்பனியா என்கிற ஆசாரியன் எரேமியா தீர்க்கதரிசியின் காதுகள் கேட்க வாசித்தான்.

29 அதிகாரம்

"நெகெலாமியனாகிய செமாயா" - இவன் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்குத் தலைவன். இவன் பாபிலோனிலிருந்து எருசலேமிற்கு நிருபங்களை அனுப்பி எரேமியாவைக் காவல் அறையிலும், தொழுவிலும் போடும்படியாகக் கேட்டுக் கொண்டான். இவனுடைய பாவங்களுக்காக இவன் தண்டிக்கப்பட்டான். (எரே 29:25-27). இவன் நெகெலாமியன் "the Nehelamite" என்று அழைக்கப்படுகிறான். இதற்குச் சொப்பனம் காண்கிறவன் "dreamer" என்று பொருள்.

"பிரமைகொண்டு தன்னைத் தீர்க்கதரிசியாக்கிக் கொள்ளுகிறவனாகிய எந்த மனுஷனையும்" - கள்ளத்தீர்க்கதரிசியாகிய செமாயா எரேமியாவைப் பற்றித் தவறான வார்த்தைகளைக் கூறுகிறான். எரேமியா தன்னைத்தானே தீர்க்கதரிசியாக்கிக் கொண்டான் என்று கூறி அவனைச் சிறையில் போடவேண்டுமென்று வலியுறுத்துகிறான். (எரே 29:26-27).

"இந்தச் சிறையிருப்பு நெடுங்காலமாக இருக்கும்" - இது எரேமியா கூறின தீர்க்கதரிசன வாக்கியமாகும். (எரே 29:5).

"இந்த நிருபத்தை" - செமாயா பாபிலோனிலிருந்து அனுப்பிய நிருபத்தைச் செப்பனியா என்கிற ஆசாரியன் பெற்றுக் கொண்டான். அவன் அதை எரேமியாவிடம் வாசித்துக் காண்பிக்கிறான். நிருபத்தில் எழுதப்பட்டிருக்கும் செய்தியைக் கேட்டவுடன், எரேமியாவிற்குச் செமாயாவைக் குறித்து கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. செமாயாவையும், அவன் சந்ததியையும் தண்டிப்பதாகக் கர்த்தர் முன்னறிவிக்கிறார். (எரே 29:30-32).

(7) செமாயாவின்மீது நியாயத்தீர்ப்பு

எரே 29:30 ஆதலால், கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 29:31 சிறையிருக்கிற அனைவருக்கும் நீ சொல்லியனுப்ப வேண்டியது என்னவென்றால்: நெகெலாமியனாகிய செமாயாவைக் குறித்து, கர்த்தர்: செமாயாவை நான் அனுப்பாதிருந்தும், அவன் உங்களுக்குத் தீர்க்கதரிசனஞ் சொல்லி, உங்களைப் பொய்யை நம்பப்பண்ணுகிறபடியினால்,

எரே 29:32 இதோ, நான் நெகெலாமியனாகிய செமாயாவையும், அவன் சந்ததியையும் தண்டிப்பேன்; இந்த ஜனத்தின் நடுவிலே குடியிருப்பவன் ஒருவனும் அவனுக்கு இல்லாதிருப்பான்; நான் என் ஜனத்துக்குச் செய்யும் நன்மையை அவன் காண்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தருக்கு விரோதமாய்க் கலகமுண்டாகப் பேசினான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 58

"இதோ, நான் நெகெலாமியனாகிய செமாயாவையும், அவன் சந்ததியையும் தண்டிப்பேன்" (எரே 29:32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் நெகெலாமியனாகிய செமாயாவையும், அவன் சந்ததியையும் தண்டிப்பேன்.

2. இந்த ஜனத்தின் நடுவிலே குடியிருப்பவன் ஒருவனும் அவனுக்கு இல்லாதிருப்பான்.

3. நான் என் ஜனத்துக்குச் செய்யும் நன்மையை அவன் காண்பதில்லை.

எரேமியா - தொகுப்புரை

30 அதிகாரம்

VI. சிறையிருப்பிலிருந்து மீட்கப் படுவது பற்றிய தீர்க்கதரிசனங்கள் - (30:1-33:26)

1. யூதாவையும் இஸ்ரவேலையும் பாலஸ்தீனாவிற்கு மறுபடியுமாக கூட்டிச் சேர்ப்பது

எரே 30:1 கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வார்த்தை:

எரே 30:2 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக் கொள்.

எரே 30:3 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவேன்; அதை அவர்கள் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 59

"கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வார்த்தை........" (எரே 30:1-31:40) எரே 30:15 ஆவது வசனம் ஓரளவு நிறைவேறியுள்ளது. மற்ற வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நாட்கள் வரும். அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்புவேன். (எரே 30:3).
2. நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவேன்.
3. அதை அவர்கள் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.
4. தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம்; திகிலுண்டு, சமாதானமில்லை. (எரே 30:5).
5. பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் புருஷர் யாவரும் தங்கள் இடுப்புகளின்மேல் தங்கள்கைகளைவைத்திருக்கிறதையும், முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கிறதையும் நான் காண்கிறேன். (எரே 30:6).
6. அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் (எரே 30:7).
7. அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.
8. அந்நாளில் நான் அவன் (அந்திக்கிறிஸ்து) நுகத்தை உன் கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைத்துப்போடுவேன். (எரே 30:8).
9. உன் கட்டுகளை அறுப்பேன்.
10. அந்நியர் இனி அவனை (அந்திக்கிறிஸ்து) அடிமை கொள்வதில்லை.
11. தங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவிப்பார்கள். (எரே 30:9).
12. தங்கள் ராஜாவாகிய தாவீதை சேவிப்பார்கள்.
13. நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பேன் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன் (எரே 30:10).
14. யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்.
15. அவனைத் தத்தளிக்கப் பண்ணுகிறவனில்லை.
16. உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன் (எரே 30:11).

எரேமியா - தொகுப்புரை

30 அதிகாரம்

17. உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்.

18. உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப்படுவார்கள் (எரே 30:16).

19. உன் சத்துருக்களெல்லாரும் சிறைப்பட்டுப் போவார்கள்.

20. உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப்படுவார்கள்.

21. உன்னைக் கொள்ளையிடுகிற அனைவரையும் கொள்ளைக்கு ஒப்புக்கொடுப்பேன்.

22. நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணுவேன். (எரே 30:17).

23. உன் காயங்களை ஆற்றுவேன்.

24. யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பைத் திருப்புவேன். (எரே 30:18).

25. அவன் வாசஸ்தலங்களுக்கு இரக்கஞ் செய்வேன்.

26. நகரம் தன் மண்மேட்டின்மேல் கட்டப்படும்.

27. அரமனை முன்போல நிலைப்படும்.

28. அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும் (எரே 30:19).

29. அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன்.

30. அவர்கள் குறுகிப்போவதில்லை.

31. அவர்களை மகிமைப்படுத்துவேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை.

32. அவர்கள் பிள்ளைகள் முன் போலிருப்பார்கள். (எரே 30:20).

33. அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும்.

34. அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்.

35. அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருப்பான். (எரே 30:21).

36. அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்.

37. அவரைச் சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார்.

38. நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன். (எரே 30:22).

39. கோராவாரிக் காற்றாகிய கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி, அடிக்கும். (எரே30:23).

40. அது துன்மார்க்கருடைய தலையின்மேல் மோதும்.

41. கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய உக்கிர கோபம் தணியாது (எரே 30:24).

42. கடைசிநாட்களில் அதை உணர்ந்து கொள்வீர்கள்.

43. அக்காலத்திலே நான் இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் (எரே 31:1).

44. இஸ்ரவேலே மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய். (எரே 31:4).

45. மறுபடியும் நீ மேளவாத்தியத்தோடும் ஆடல்பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய்.

46. மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சத்தோட்டங்களை நாட்டுவாய் (எரே 31:5)

30 அதிகாரம்

47. நாட்டுகிறவர்கள் அவைகளை நாட்டி, அதின் பலனை அநுபவிப்பார்கள்.

48. எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுங்காலம் வரும். (எரே 31:6).

49. நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்; மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள். (எரே 31:8).

50. அழுகையோடு வருவார்கள். (எரே 31:9).

51. விண்ணப்பங்களோடு வருவார்கள்; அவர்களை வழி நடத்துவேன்; (எரே 31:9; சக 12:10-13:1).

52. அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன். (எரே 31:9).

53. இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார் (எரே 31:10).

54. கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். (எரே 31:11).

55. அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரிப்பார்கள். (எரே 31:12).

56. கர்த்தர் அருளும் நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்;

57. அவர்களுடைய ஆத்துமா நீர்ப் பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்.

58. அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை.

59. அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக் களிப்பாய் மகிழுவார்கள் (எரே 31:13).

60. நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றுவேன்.

61. ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன் (எரே 31:14).

62. என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்.

63. உன் கிரியைக்குப் பலனுண்டு. ஆகையினால் நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள். (எரே 31:15-16).

64. அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள் (எரே 31:16).

65. உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள். (எரே 31:17).

66. எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன். (எரே 31:18-20).

67. அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன்.

68. ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்து கொள்ளுவாள். (எரே 31:21-22).

69. நான் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும் போது, அவர்கள்..........கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக்கடவரென்று சொல்லுவார்கள். அதின் பட்டணங்களிலும் சொல்லுவார்கள். (எரே 31:23).

70. அதிலே யூதாவும், அதனுடைய எல்லாப் பட்டணங்களின் மனுஷரும் பயிரிடுங் குடிகளும், மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருப்பார்கள். (எரே 31:24).

30 அதிகாரம்

71. நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன். (எரே 31:25).

72. நாட்கள் வரும். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தையும் யூதா குடும்பத்தையும் மனுஷ வித்தினாலும், மிருகவித்தினாலும் விதைப்பேன். (எரே 31:27).

73. அப்பொழுது நான் கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் (எரே 31:28).

74. பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்ல மாட்டார்கள். (எரே 31:29)

75. அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான். (எரே 31:30)

76. அப்பொழுது இஸ்வேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். (எரே 31:31-32).

77. நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன். (எரே 31:33).

78. நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.

79. இனி ஒருவன் மற்றவனுக்குக் கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை (எரே 31:34).

80. அவர்கள் அக்கிரமத்தை மன்னிப்பேன்.

81. அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.

82. இஸ்ரவேல் சந்ததி எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போகாது. (எரே 31:35-36).

83. நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்து விடுவேன் (எரே 31:37).

84. நாட்கள் வரும். அப்பொழுது எருசலேம் நகரம் அனானெயேலின் கோபுர முதல் கோடிவாசல்மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும். (எரே 31:38-39).

85. பிரேதங்களைப் புதைக்கிறதும், சாம்பலைக் கொட்டுகிறதுமான பள்ளத்தாக்கனைத்தும், கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும் (எரே 31:40).

86. அப்புறம் எருசலேம் நகரம் என்றென்றைக்கும் பிடுங்கப் படுவதுமில்லை இடிக்கப்படுவதுமில்லை.

"நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி" - புறஜாதி தேசங்களிலிருந்து இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் கர்த்தர் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பவும் அழைத்து வருவார். அங்கு அவர்கள் மேசியாவின்கீழ் நித்திய தேசமாக இருப்பார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் வேதாகமத்தில் 15 தடவைகளுக்குமேல் கூறப்பட்டிருக்கிறது. (எரே 30:3,10,18; எரே 31:4-6,8-10, 12,16-17,23,28)

"நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவேன்" - இஸ்ரவேல் கோத்திரத்தார் பாலஸ்தீன தேசத்திற்கே திரும்பி வருவார்கள். இந்தத் தேசத்தைக் கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்குக் கொடுத்திருந்தார். இது இஸ்ரவேல் தேசத்தாரின் சொந்த தேசம். (எரே 30:3-5; எரே 32:17,23; எசே 37).

2. மகா உபத்திரவம் - (தானி 9:27; 12:1-7; மத் 24:15-31; வெளி 12:1-20:6; எசே 20:33; 22:17; 36-37)

எரே 30:4 இவைகள் கர்த்தர் இஸ்ரவேலையும் யூதாவையுங்குறித்துச் சொன்ன வார்த்தைகளே.

எரேமியா - தொகுப்புரை

30 அதிகாரம்

எரே 30:5 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம்; திகிலுண்டு, சமாதானமில்லை.

எரே 30:6 ஆணாய்ப் பிறந்தவன் பிரசவிக்கிறதுண்டோ என்று கேட்டுப் பாருங்கள்; பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் புருஷர் யாவரும் தங்கள் இடுப்புகளின் மேல் தங்கள் கைகளை வைத்திருக்கிறதையும், முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கிறதையும் நான் காண்கிறதென்ன?

எரே 30:7 ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப் படுவான்.

"இஸ்ரவேலையும் யூதாவையுங்குறித்துச் சொன்ன வார்த்தைகளே" - சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிந்த பின்பு, இஸ்ரவேல், யூதா என்னும் இரண்டு பெயர்களும் இஸ்ரவேலின் பிரிந்த ராஜ்யங்களுக்குத் தனித்தனியாகப் பயன்படுத்தப்பட்டது. இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரும் அழிக்கப்பட்ட பின்பு, எரேமியா தீர்க்கதரிசனம் கூறுகிறார். இந்த வசனத்தில் இஸ்ரவேலும், யூதாவும் என்று கூறப்பட்டிருக்கும் வார்த்தைகள் கடைசி நாட்களில் நிறைவேறப் போகும் தீர்க்கதரிசனத்தைக் குறிக்கும். இவ்விரண்டு பெயர்களும் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் குறிப்பிடுகிறது. வரப்போகிற உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு வரும் உபத்திரவங்களை எரேமியா இந்தத் தீர்க்கதரிசனத்தில் முன்னறிவிக்கிறார். இஸ்ரவேல், யூதா ஆகிய இரண்டு வார்த்தைகளும் சில சமயங்களில் ஒரே ராஜ்யத்தையும், வேறுசில சமயங்களில் இரண்டு வெவ்வேறு ராஜ்யங்களையும் குறிப்பிடுகிறது. (எரே 31:23-24).

"ஆணாய்ப் பிறந்தவன் பிரசவிக்கிறதுண்டோ" - புருஷர்கள் தங்கள் இடுப்புகளின்மேல் தங்கள் கைகளை வைத்திருப்பது அவர்களுக்கு வந்திருக்கும் துயரத்தைக் குறிப்பிடுகிறது. புருஷர்கள் யாவரும் இவ்வாறு துயரமடைவது அந்தத் தேசத்தின்மீது வந்திருக்கும் மகா பெரிய உபத்திரவத்திற்கு அடையாளமாயுள்ளது. (எரே 30:6-7; எரே 4:31; எரே 6:24; எரே 13:21; எரே 22:23; எரே 49:24; எரே 50:43; மீகா 4:9-10; மீகா 5:3; சங் 48:6; ஏசா 13:8; ஏசா 21:3; ஏசா 42:14; ஏசா 66:7-8; வெளி 12:2). இந்த வசனப்பகுதிகளில் பல வருங்கால உபத்திரவக் காலத்தில் இஸ்ரவேலின் பாடுகளையும், சில வசனங்கள் அவர்களுடைய கடந்தகால பாடுகளையும் குறிப்பிடுகிறது. இங்கு கூறப்படும் வேதனைகள் மத் 24:8 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வேதனைகளுக்குச் சமமானதாகும்.

வருங்காலத்தில் இஸ்ரவேலுக்கு வரும் வேதனை

1. ஆண்பிள்ளை பிறக்கும்போது. (எரே 30:6-7; ஏசா 66:7-8; தானி 12:1; மீகா 5:3; வெளி 12:1-6,14)

2. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது ஒரே நாளில் தேசம் பிறக்கும்போது. (எரே 30:6-7; ஏசா 66:7-8; சக 12:10-13:1; சக 14:1-15; மத் 24:15-22; ரோமர் 11:25-29)

"அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்" - உபத்திரவக்காலத்தின் கடைசி மூன்றரை வருஷம் யாக்கோபின் இக்கட்டுக்காலமாகும். இது தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசிப் பாதிப்பகுதி. இக்காலத்தில் அந்திக் கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திற்குள் பிரவேசித்து, தேவாலயத்தைத் தன்னுடைய தலைநகரமாகப் பிடித்துக் கொள்வான். தேவாலயத்தில் அந்திக் கிறிஸ்து தேவனாக ஆராதிக்கப்படுவான். (தானி 7:27; தானி 11:40-45; தானி 12:1-7; மத் 24:15-31; 2தெச 2:1-12; வெளி 12:1-20:6).

30 அதிகாரம்

3. மேசியாவின்கீழ் இஸ்ரவேல் மறுபடியுமாக கூட்டிச் சேர்க்கப் படுவதன் பதினைந்து அம்சங்கள் - (ஏசா 11:11)

எரே 30:8 அந்நாளில் நான் அவன் நுகத்தை உன் கழுத்தின்மேல் இராத படிக்கு உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அந்நியர் இனிஅவனைஅடிமை கொள்வதில்லை.

எரே 30:9 தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள்.

எரே 30:10 ஆகையால் என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே கலங்காதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பேன் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்; யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப் பண்ணுகிறவனில்லை.

எரே 30:11 உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர் மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்.

எரே 30:12 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் புண் ஆறாததாயும் உன்காயம் கொடிதாயும் இருக்கிறது.

எரே 30:13 உன் காயங்களைக் கட்டும்படிஉனக்காக ஏற்படுவாரில்லை; உன்னைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுமில்லை.

எரே 30:14 உன் நேசர் யாவரும் உன்னை மறந்தார்கள்; அவர்கள் உன்னைத் தேடார்கள்; திரளான உன் அக்கிரமத்தினி மித்தமும், உன் பாவங்கள் பலத்துப்போனதினிமித்தமும், சத்துரு வெட்டும் வண்ணமாகவும், கொடியவன் தண்டிக்கிற வண்ணமாகவும் நான் உன்னை தண்டித்தேன்.

எரே 30:15 உன் நொறுக்குதலினாலும் உன் வேதனையின் மிகுதியினாலும் நீ கூக்குரலிடுவானேன்? திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும் பலத்துப்போன உன் பாவங்களினிமித்தமும் இப்படி உனக்குச் செய்தேன்.

எரே 30:16 ஆதலால் உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப் படுவார்கள்; உன் சத்துருக்களெல்லாரும் சிறைப்பட்டுப் போவார்கள்; உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப் படுவார்கள்; உன்னைக் கொள்ளையிடுகிற அனைவரையும் கொள்ளைக்கு ஒப்புக்கொடுப்பேன்.

எரே 30:17 அவர்கள்: உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அந்நாளில் நான் அவன் நுகத்தை உன் கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைத்து" - அந்நாளில் என்பது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாளைக் குறிக்கும். இஸ்ரவேலின் கழுத்தின்மேலிருந்து தேவன் அந்திக்கிறிஸ்துவின் நுகத்தை இராதபடிக்கு உடைத்துப்போடுவார். அது அந்திக் கிறிஸ்துவுக்கு முடிவுக்காலமாக இருக்கும்.

தாவீது ராஜாவாக ஆளுகை செய்வார்

"தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள்" என்னும் வார்த்தைக்கு இயேசு கிறிஸ்துவைச் சேவிப்பார்கள் என்று ஒருசிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். ஆனால் இங்கு தாவீதே ராஜாவாக ஆளுகைசெய்வார்என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு கூறுவதற்கான காரணங்கள்:

எரேமியா - தொகுப்புரை

30 அதிகாரம்

1. இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கூறும் ஒவ்வொரு வேதவசனமும் இந்தக் கருத்தையே வலியுறுத்துகிறது. எரேமியா இந்த வசனத்தில் "தங்கள் ராஜாவாகிய தாவீது" என்றே குறிப்பிட்டிருக்கிறார். "தங்கள் ராஜாவாகிய கிறிஸ்து" என்று குறிப்பிடவில்லை. இயேசு கிறிஸ்து ஒருபோதும் இஸ்ரவேலின் ராஜாவாக இதுவரையிலும் ஆளுகை செய்ததில்லை. அவருடைய இரண்டாம் வருகை வரையிலும் அவர் இஸ்ரவேலை ஆளுகை செய்யப் போவதுமில்லை. இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது தாவீதின் ராஜ்யபாரத்தையும், சிங்காசனத்தையும் மறுபடியும் ஸ்தாபித்து தாவீதையும், இஸ்ரவேலையும் ஆளுகை செய்வார். (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; அப் 16:13-18; வெளி 11:15). யூதர்கள் இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் கூறும் போது இது தாவீதையே குறிக்குமென்று இயல்பாகவே புரிந்து கொள்வார்கள்.

2. தேவன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தாவீதை ராஜாவாக எழுப்புவார் என்று எரேமியா இங்கு கூறியிருக்கிறார். (எரே 30:9). தாவீது உயிர்த்தெழுதலின் போது மறுபடியும் எழும்புவார். தாவீது மட்டுமல்ல மரித்த பரிசுத்தவான்கள் அனைவரும் மறுபடியும் உயிரோடு எழும்புவார்கள். (தானி 12:2; யோவான் 5:28-29).

3. எசே 34:23 ஆவது வசனத்தில் "அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பனை நான் அவர்கள்மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன். இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார்" என்று கூறப்பட்டிருக்கிறது. தேவன் தாவீதை "என் தாசனாகிய தாவீது" என்று அழைக்கிறார். கிறிஸ்து ஒருபோதும் "என் தாசனாகிய தாவீது" என்று அழைக்கப்படவில்லை. பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் மேய்ப்பர்களாக இருந்து ஆளுகை செய்வதைப் போல தாவீது மேசியாவின் கீழ் இஸ்ரவேலின் மேய்ப்பனாக இருப்பார். (மத் 19:27; லூக்கா 22:30).

4. "என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்" (எசே 34:24). கிறிஸ்து எப்போதுமே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறவர். அவர் யாருக்குக்கீழும் ஆளுகை செய்வதில்லை.

5. என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள்மீது ராஜாவாக இருப்பார். அவர்கள் எல்லோருக்கும் ஒரே மேய்ப்பர் இருப்பார். (எசே 37:24).

6. என் தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார். (எசே 37:25).

7. "பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசி நாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்" (ஓசி 3:4-5). இந்த வசனத்தில் ராஜாவாகிய தாவீது என்பது தாவீதையே குறிக்கும்.

8. கிறிஸ்து ஒருபோதும் தாவீது என்று அழைக்கப்படவில்லை. அவர் தாவீதின் குமாரன் என்றே அழைக்கப்பட்டிருக்கிறார். (மத் 1:1; மத் 9:27; மத் 12:23; மத் 15:22; மத் 20:30-31; மத் 21:9,15; மத் 22:42) தாவீதின் ஆண்டவர் (மத் 22:45); தாவீதின் வித்து (ரோமர் 1:3; 2தீமோ 2:8); தாவீதின் வேர் (வெளி 5:5); தாவீதின் வேரும், சந்ததியும் (வெளி 22:16) ஆகிய வார்த்தைகள் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும்.

30 அதிகாரம்

"என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே கலங்காதே" - இந்தத் தீர்க்கதரிசனம் முழுவதிலும் யாக்கோபு, இஸ்ரவேல், யூதா ஆகிய வார்த்தைகள் ஒரே பொருளைத் தருவதாகவே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எரே 30:3-4,7,10; எரே 31:2,7,10,21,23).

"யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்" - யூதர்கள் பல தேசங்களுக்கும், சிதறிப்போயிருக்கிறார்கள். அந்தத் தேசங்களிலிருந்து எல்லாம் அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அதன் பின்பு அவர்களுடைய சொந்த தேசத்தில் அவர்களுக்கு அமைதியும், பாதுகாப்பும், நித்திய ஆசீர்வாதங்களும் உண்டாயிருக்கும். (எரே 30:10-11).

"உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்" - கர்த்தர் எல்லா ஜாதிகளையும் நிர்மூலமாக்குவதாக இங்கு கூறவில்லை. கர்த்தர் எல்லா தேசங்களையும் ஆளுகை செய்கிறார். இஸ்ரவேல் புத்திரரைச் சிதறடித்த ஜாதிகளை மட்டுமே அவர் நிர்மூலமாக்குவார். கர்த்தருடைய நித்திய கால ஆளுகையில் இயேசு கிறிஸ்து எல்லா தேசங்களையும், எல்லா ஜாதிகளையும் ஆளுகை செய்வார். (தானி 2:44-45; தானி 7:13-14, 18,22,27; வெளி 11:15; வெளி 21:24; வெளி 22:4-5).

"உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்" - இஸ்ரவேலை நிர்மூலமாக்குவது கர்த்தருடைய சித்தமல்ல. அவர்களைத் திருத்த வேண்டும். அவர்களைத் தமக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும். இதற்காகவே கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அதுவும் மட்டாய்த் தண்டிக்கிறார். எரேமியாவின் காலத்தில் இருந்த யூதர்கள் ஏற்கெனவே தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மீறுதல்களைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுமில்லை. (எரே 30:12-15) ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, அவர்களுடைய காயங்களை ஆற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். (எரே 30:16-17).

"உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப்படுவார்கள்" - இஸ்ரவேலைப் பட்சித்த எல்லா ஜாதிகளையும் கர்த்தர் தண்டிப்பார். இஸ்ரவேல் இரட்சிக்கப்படும். அவர்களுடைய காயங்கள் குணமாக்கப்படும். அவர்கள் தங்களுடைய தேசத்திற்கு மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (எரே 30:16-17).

"நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன்" - (ஏசா 30:26; ஏசா 33:24; ஏசா 35:5-6).

4. எருசலேம் மறுபடியும் கட்டப்படும்

எரே 30:18 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பைத் திருப்பி, அவன் வாசஸ் தலங்களுக்கு இரக்கஞ் செய்வேன்; நகரம் தன் மண்மேட்டின்மேல் கட்டப்பட்டு, அரமனை முன்போல நிலைப்படும்.

"நகரம் தன் மண்மேட்டின்மேல் கட்டப்பட்டு, அரமனை முன்போல நிலைப்படும்" - இந்த வாக்கியம் எருசலேமின் அழிவையும், அந்த அழிவின்மீது அது திரும்பவும் கட்டப்படுவதையும் விவரிக்கிறது. (எரே 31:38-39). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எருசலேம் நகரம் மறுபடியும் கட்டப்படும். எசே 48:30-35 ஆகிய வசனங்களிலும் இது முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

5. இஸ்ரவேலின் பன்னிரெண்டு ஆசீர்வாதங்கள்

எரே 30:19 அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும்; அவர்களை வர்த்திக்கப் பண்ணுவேன், அவர்கள் குறுகிப் போவதில்லை; அவர்களை மகிமைப் படுத்துவேன், அவர்கள் சிறுமைப் படுவதில்லை.

எரே 30:20 அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள்; அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும்; அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்.

30 அதிகாரம்

எரே 30:21 அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்; அவரைச் சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார், என்னிடத்தில் சேரும்படி, தன் இருதயத்தைப் பிணைப் படுத்துகிற இவர் யார்? என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 30:22 நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்.

"அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும்" - எருசலேமிலிருந்து சந்தோஷமும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

"அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன்" - வரப்போகும் காலங்களில் கர்த்தர் இஸ்ரவேலை வர்த்திக்கப்பண்ணுவார். அவர்களை மகிமைப் படுத்துவார். அவர்கள் குறுகிப்போவதில்லை. சிறுமைப்படுவதில்லை. அவர்களுடைய பிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். தேவனுக்கு முன்பாக அவர்களுடைய சபையும் திடப்படும். (எரே 30:20).

"அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்" - இது ஆபிரகாமின் உடன்படிக்கைக்குச் சமமானது. (எரே 30:20 =ஆதி 12:1-3).

"அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்" - இஸ்ரவேலின் பிரபுக்களும், அதிபதியும் புறஜாதி தேசத்திலிருந்து வரமாட்டார்கள். அவர்களுடைய தேசத்திலிருந்து தோன்றுவார்கள். புறஜாதியாரின் காலம் முடிவுக்கு வரும். (லூக்கா 21:24; ரோமர் 11:25-29).

6. மகா உபத்திரவம்

எரே 30:23 இதோ, கோராவாரிக் காற்றாகிய கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி, அடித்து, துன்மார்க்கருடைய தலையின் மேல் மோதும்.

எரே 30:24 கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய உக்கிர கோபம் தணியாது; கடைசிநாட்களில் அதை உணர்ந்துகொள்வீர்கள்.

"கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி" - இந்தப் பெருங்காற்று தெய்வீக நியாயத்தீர்ப்பைக் குறிப்பிடுகிறது. (ரோமர் 2:19; ரோமர் 25:32; சங் 58:9; நீதி 1:27; ஏசா 66:15; சக 7:14; சக 9:14). துன்மார்க்கர்மீது வரும் நியாயத்தீர்ப்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அர்மெகதோன் யுத்தத்தில் நிறைவேறும். (எரே 30:23-24; ஏசா 63:1-6; எசே 38-39; யோவே 2-3; சக 14; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21). இந்த நியாயத்தீர்ப்பை அவர்கள் கடைசிநாட்களில் உணர்ந்து கொள்வார்கள். (எரே 30:24).

31 அதிகாரம்

7. இஸ்ரவேலின் மனந்திரும்புதல் - *(ரோம 11:26-29; ஏசா 6:7-9; 59:20)*

எரே 31:1 அக்காலத்திலே நான் இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அக்காலத்திலே நான் இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன்" - அக்காலத்திலே என்பது இஸ்ரவேல் புத்திரர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும் காலத்தைக் குறிக்கும். (எரே 30:3-5) அப்போது மகா உபத்திரவக்காலம் முடிவு பெற்றிருக்கும். (எரே 30:6-7) அந்திக்கிறிஸ்துவின் நுகம் இஸ்ரவேலின் கழுத்தைவிட்டு அகற்றப் பட்டிருக்கும். (எரே 30:8) இக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தேவனை ஆராதிப்பார்கள். தாவீது அவர்களுடைய ராஜாவாக மறுபடியும் எழும்புவார். (எரே 30:9) இஸ்ரவேல் இரட்சிக்கப் பட்டு ஆசீர்வதிக்கப்படும். (எரே 30:10-11) எருசலேம் மறுபடியும் கட்டப்பட்டு முன்போல நிலைப்படும். (எரே 30:18-20) அவர்களுடைய ராஜாக்கள் அவர்களுடைய ஜனங்களிலிருந்தே எழும்புவார்கள். (எரே 30:21) அர்மெகதோன் யுத்தம் முடிவு பெற்றிருக்கும். (எரே 30:21-22) கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் தேவனாக இருப்பார். அவர்கள் அவருடைய ஜனமாக இருப்பார்கள். (எரே 30:22, 31:1).

8. மீட்பின் பதினான்கு அம்சங்கள்

எரே 31:2 பட்டயத்திற்குத் தப்பி, மீந்த ஜனம் வனாந்தரத்தில் இரக்கம் பெற்றது; இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிடப் போகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:3 பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பார்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.

எரே 31:4 இஸ்ரவேல் என்னும் கன்னிகையே, மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்; மறுபடியும் நீ மேளவாத்தியத்தோடும் ஆடல்பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய்.

எரே 31:5 மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சத்தோட்டங்களை நாட்டுவாய்; நாட்டுகிறவர்கள் அவைகளை நாட்டி, அதின் பலனை அநுபவிப்பார்கள்.

எரே 31:6 எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுங்காலம் வரும்.

எரே 31:7 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்; சத்தத்தைக் கேட்கப்பண்ணி, துதித்து: கர்த்தாவே, இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்.

எரே 31:8 இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்; குருடரும்; சப்பாணிகளும், கர்ப்பவதிகளும், பிள்ளைத் தாய்ச்சிகளுங் கூட அவர்களில் இருப்பார்கள்; மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள்.

எரே 31:9 அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழி நடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்.

எரேமியா – தொகுப்புரை

31 அதிகாரம்

"பட்டயத்திற்குத் தப்பி, மீந்தஜனம் வனாந்தரத்தில் இரக்கம் பெற்றது" - கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணாதவர்களுக்கு அவருடைய இரக்கம் காண்பிக்கப்படும். அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (எரே 31:2-3) இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் அவர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டு கட்டப்படுவார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். (எரே 31:4-9)

"சமாரியா" - சமாரியா வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தின் தலைநகரமாகும். இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் வடக்கு ராஜ்யமாகப் பிரிந்தார்கள். மேசியாவின் காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யத்தில் சமாரியாவும் ஒரு பகுதியாக இருக்கும். எல்லா தேசங்களிலுமிருந்தும் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அவர்களெல்லோரும் ஒரே தேசமாக ஸ்தாபிக்கப்பட்டு, நித்திய தேசமாக இருப்பார்கள். எப்பிராயீமின் பெயரும், இங்கு கூறப்பட்டுள்ளது. இது வடக்கு ராஜ்யத்தைக் குறிக்கும் பெயராகும். (எரே 31:6,9; எரே 7:15; ஏசா 7:8-9,17; ஏசா 11:13).

இக்காலத்தில் நடைபெறும் சம்பவங்கள்

1. எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 52:7; எசே 43:7; சக 14:16-21).
2. ஜனங்கள் யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய் கெம்பீரிப்பார்கள். (எரே 31:7).
3. ஜனங்கள் ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரிப்பார்கள்.
4. சத்தத்தைக் கேட்கப்பண்ணி கர்த்தரைத் துதிப்பார்கள்.
5. இஸ்ரவேலில் மீதியான ஜனம் இரட்சிக்கப்படுவார்கள்.
6. இஸ்ரவேலில் மீதியானவர்கள் எல்லா தேசங்களிலுமிருந்தும் மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள். (எரே 31:8).
7. அழுகையோடும் விண்ணப்பங்களோடும் அவர்கள் வருவார்கள் (எரே 31:9).

"சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம்" - கர்த்தர் சீயோனில் ஆளுகை செய்யும்போது இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் ஒரே தேசமாக மறுபடியும் ஒன்றுசேருவார்கள். எப்பிராயீம் என்பது இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரைக் குறிக்கும். இவர்கள் சீயோனிலுள்ள கர்த்தரிடத்திற்குப் போவோம் என்று சந்தோஷமாகக் கூறும்போது அதன் பின்பு இஸ்ரவேலில் பிரிவினையே இராது. சமஸ்த இஸ்ரவேலின் தலைநகரமாக எல்லோரும் எருசலேமை அங்கிகரிப்பார்கள்.

"நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி" - இஸ்ரவேலில் மீதியானவர்கள் அனைவரும் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். அவர்கள் அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள். தங்களுடைய கர்த்தராகிய தேவனையும், ராஜாவாகிய தாவீதையும் அவர்கள் தேடிக் கொண்டு வருவார்கள். (எரே 31:9; எரே 30:9; ஓசி 3:4-5).

9. இஸ்ரவேலின் பத்து ஆசீர்வாதங்கள்

எரே 31:10 ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்.

எரே 31:11 கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.

எரே 31:12 அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்; அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை.

31 அதிகாரம்

எரே 31:13 அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக் களிப்பாய் மகிழுவார்கள்; நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப் படுத்துவேன்.

எரே 31:14 ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவை களினால் பூரிப்பாக்குவேன்; என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு" - இது புறஜாதியாருக்குக் கூறப்படும் அழைப்பாகும். இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும் காரியத்தில் புறஜாதியாரும் பங்கு பெறவேண்டும். (ஏசா 66:19-21).

"கர்த்தர் யாக்கோபை மீட்டு" - இஸ்ரவேல் தேசம் வருங்காலத்தில் மீட்கப்படும். அப்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். இந்த நிகழ்ச்சி ஏற்கெனவே நடைபெற்று விட்ட மொழிநடையில் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

யாக்கோபிலும் பலத்தவர்கள்

1. சாத்தான் - இவன் அந்திக்கிறிஸ்துவிற்கு அதிகாரம் கொடுப்பான். பூமியிலுள்ள ஒவ்வொரு யூதனையும் அழிப்பதற்கு இவன் அந்திக் கிறிஸ்துவிற்கு உதவி புரிவான். (வெளி 13:1-18; தானி 8:24-25; தானி 11:40-45)

2. அந்திக்கிறிஸ்து - இவன் சாத்தானிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வான். இஸ்ரவேல் தேசத்தாரை அவர்களுடைய தேசத்திலிருந்து மூன்றரை வருஷங்களுக்குத் துரத்திவிடுவான். எருசலேமின்மீது யுத்தம் பண்ணி அதை முற்றிக்கை போடுவான்.

அந்நாளில் கிறிஸ்து இந்தப் பூமிக்குத் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்க வருவார். (தானி 8:24; தானி 11:37-39; சக 14; 2தெச 2:8-12; வெளி 13:2; வெளி 16:13-16; வெளி 19:11-21; வெளி 20:1-3)

"அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து" - அர்மெகதோன் யுத்தத்தில் யூதர்கள் சாத்தானிடமிருந்தும், அந்திக் கிறிஸ்துவினிடமிருந்தும் மீட்கப்படுவார்கள். அவர்கள் சீயோனிலிருந்து சந்தோஷமாக ஆர்ப்பரிப்பார்கள். கர்த்தருடைய நன்மையைப் பெற்றுக் கொள்வார்கள். உலகரீதியாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஆசீர்வதிக்கப் படுவார்கள். அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்து போவதில்லை. அவர்களுடைய ஆசாரியர்களின் ஆத்துமா கொழுமையானவை களினால் பூரிப்பாக்கப்படும். தேவனுடைய நன்மையினால் எல்லோரும் திருப்தியாவார்கள். (எரே 31:12-14).

10. அழவேண்டாம் என்று நான்கு அம்ச புத்திமதி

எரே 31:15 ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:16 நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள்.

எரே 31:17 உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள்.

எரேமியா – தொகுப்புரை

31 அதிகாரம்

"ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது" - இந்த வாக்கியம் மத் 2:18 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து குழந்தையாக இருந்த காலத்தில் ஏரோது ராஜா இரண்டு வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகளைக் கொன்றுபோட்டான். அக்காலத்தில் அந்தப் பிள்ளைகளின் பெற்றோர் துக்கத்தினால் அழுதார்கள். இங்கு கூறப்பட்டிருக்கும் புலம்பலும், அழுகையும் இனிமேல் வருங்காலத்தில் நடைபெறப்போகும் சம்பவமாகும். இஸ்ரவேல் தேசம் அப்போது புலம்பி அழும். வரப்போகிற உபத்திரவக் காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில் மூன்றில் ஒரு பகுதி அழிந்துபோகும். (ஏசா 66:7-8; தானி 12:1; சக 12:10-13:1,9; ரோமர் 11:25-29).

இந்த வசனத்தில் ராகேல் என்று கூறப்பட்டிருப்பது பென்யமீன், மனாசே, எப்பிராயீம் ஆகிய மூன்று கோத்திரங்களின் தாயாரைக் குறிக்கும். அதே சமயத்தில் பென்யமீன் தெற்கு ராஜ்யத்தையும், எப்பிராயீம் வடக்கு ராஜ்யத்தையும் குறிப்பதினால் ராகேல் இஸ்ரவேல் கோத்திரத்தார் அனைவருக்கும் தாயாராகக் கருதப்படுகிறாள்.

யாக்கோபும், ராகேலும் பெத்தேலை விட்டுப் பிரயாணம் புறப்பட்டார்கள். எப்பிராத்தாவுக்கு வர இன்னும் கொஞ்சம் தூரமிருக்கும்போது, ராகேல் பிள்ளைபெற்றாள். பிரசவத்தில் அவளுக்குக் கடும்வேதனை உண்டாயிற்று. பிரசவிக்கும் போது, அவளுக்குக் கடும் வேதனையாயிருக்கையில், மருத்துவச்சி அவளைப் பார்த்து: பயப்படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய் என்றாள். மரணகாலத்தில் அவள் ஆத்துமா பிரியும்போது, அவள் அவனுக்கு பெனொனி என்று பேரிட்டாள். அவன் தகப்பனோ அவனுக்கு பென்யமீன் என்று பேரிட்டான். ராகேல் மரித்து, பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே ராமாவில் அடக்கப்பண்ணப்பட்டாள். (ஆதி 35:18-19, 1சாமு 10:2). ராகேல் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். ஆனாலும் பென்யமீன் பிறக்கும்போது அவள் மரித்து விட்டாள். பிள்ளையைப் பெற்றெடுத்த சந்தோஷம் அவளுடைய மரணத்தினால் அகன்றுபோயிற்று. அவள் தன் பிள்ளைகளோடு மறுபடியும் உயிர்த்தெழுவாள். அப்போது தன்னுடைய சந்தோஷத்தைத் திரும்பவும் பெற்றுக் கொள்வாள்.

தன்னுடைய பிள்ளைகளுக்காக அழும் தாயாக இங்கு ராகேல் கூறப்பட்டிருக்கிறாள். மேசியாவின்கீழ் எல்லா இஸ்ரவேல் புத்திரரும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்பது ராகேலுக்கு ஆறுதலான விஷயமாக இருக்கும். அவளுடைய வித்து, சத்துருக்களின் தேசத்திலிருந்து திரும்பி வரும். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அவளுடைய சுய தேசத்திற்கு வரும்போது, அவளுடைய முடிவைப் பற்றி அவளுக்கு நம்பிக்கை உண்டாகும். (எரே 31:15-17).

எரே 31:18-19 ஆகிய வசனங்களில் எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக் கொண்டிருக்கும் வாக்கியங்கள் கூறப்பட்டிருக்கிறது. இவன் யோசேப்புக்கும், ராகேலுக்கும் பிறந்தவன். வடக்கு ராஜ்யத்தின் பத்துக் கோத்திரங்களுக்கு இவனுடைய பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய கடந்தகால பாவங்களுக்காக எப்பிராயீம் மனஸ்தாபப்படுகிறான். வெட்கி நாணமடைகிறான். தன் இளவயதின் நிந்தையைச் சுமந்து வருகிறான்.

இதன் பின்பு கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஆதரவான வார்த்தைகளைக் கூறுகிறார். எப்பிராயீமைக் கர்த்தர் அவனுடைய பாவங்களுக்காகச் சபித்தாலும், இன்னும் அவன்மீது உருக்கமாக இரங்குகிறார். (எரே 31:20).

11. இஸ்ரவேலின் மனந்திரும்புதல்

எரே 31:18 நீர் என்னை தண்டித்தீர், நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன்; என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன்; நீரே என் தேவனாகிய கர்த்தர்.

எரே 31:19 நான் திரும்பின பின்பு மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்துகொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக் கொண்டிருக்கிறேன், வெட்கி, நாணிக்கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்து வருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன்.

31 அதிகாரம்

எரே 31:20 எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:21 உனக்குக் குறிப்படையாளங்களை நிறுத்து; உனக்குத் தூண்களை நாட்டு; நீ நடந்த வழியாகிய பாதையின்மேல் உன் மனதை வை; இஸ்ரவேலாகிய குமாரத்தியே, திரும்பு; இந்த உன்னுடைய பட்டணங்களுக்கே திரும்பு.

எரே 31:22 சீர்கெட்டுப்போன குமாரத்தியே, எந்தமட்டும் விலகித் திரிவாய்? கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையைச் சிருஷ்டிப்பார், ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்துகொள்ளுவாள்.

"ஸ்திரீயானவள்" - இவள் இஸ்ரவேலாகிய குமாரத்தி. (எரே 31:21). இஸ்ரவேல் ஒரு ஸ்திரீயாகவும், (ஏசா 54:6; வெளி 12), கன்னிகையாகவும் (எரே 31:21), குமாரத்தியாகவும் (எரே 31:22), கர்த்தருக்கு விவாகம் செய்யப்பட்ட ஸ்திரீயாகவும் (ஏசா 54:5) கூறப்பட்டிருக்கிறாள்.

சூழ்ந்து கொள் (compass) - סָבַב - **moo-sawb' - 5437**

வினைச்சொல் - சூழு, சுற்று, காரணமாயிரு, சூழ்ந்து கொள், திரி, வளைந்துகொள், சுற்றிலும்செல், செலுத்து, திரும்பு, போ, பந்தியிரு, விலகு,விழு, ஆடு, திருத்தப்படு, திருப்பு, அப்புறப்படுத்து, சார்ந்திருக்கப்பண்ணு, இழுத்துப்போடு, மாற்று, பதிந்திரு, பதிக்கப்படு, வேறேகொடு, விடு, சுற்றிலும் வளை, சூழ்ந்திரு, வகைபார், சுற்றிப்போ, சுற்றித்திரி, சுற்றிவா, விலகு, ஆடு, மறுபடியும், சுற்றிக்கொள், திரும்பிக் கொண்டு, மடக்கு, சுற்றிப்போகப் பண்ணு **(to revolve around; surround; be on every side; beset; cause to come about; circuit; compass about or around; beset round about; enclose; turn back to) "compass"** (எரே 31:22,39; எரே 52:21; யோசு 6:3-7; **etc.); "beset"** (நியா 19:22; நியா 20:5; ஓசி 7:2); **"turn back to"** (1சாமு 22:17-18).

புருஷன் **(man)** - גֶּבֶר - **gheh'-ber - 1397**

ஆ.பெ.சொ. - புருஷர், மனுஷர், பேர், தலைவர், ஆண் **(a valiant man; a warrior; a mighty man)** - இஸ்ரவேல் என்னும் ஸ்திரீயானவள் இயேசு கிறிஸ்து என்னும் புருஷனைச் சூழ்ந்துகொள்வாள்.

12. இஸ்ரவேலின் பத்து ஆசீர்வாதங்கள்

எரே 31:23 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, அவர்கள்: நீதியின் வாசஸ்தலமே, பரிசுத்த பர்வதமே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக் கடவரென்கிற வார்த்தையை யூதாவின் தேசத்திலும் அதின் பட்டணங்களிலும் சொல்லுவார்கள்.

எரே 31:24 அதிலே யூதாவும், அதனுடைய எல்லாப் பட்டணங்களின் மனுஷரும் பயிரிடுங் குடிகளும், மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருப்பார்கள்.

எரே 31:25 நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப் பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்.

எரே 31:26 இதற்காக நான் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; என்நித்திரை எனக்கு இன்பமாயிருந்தது.

31 அதிகாரம்

எரே 31:27 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தையும் யூதா குடும்பத்தையும் மனுஷ வித்தினாலும், மிருகவித்தினாலும் விதைப்பேன்.

எரே 31:28 அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் தீங்குசெய்யவும் அவர்கள்பேரில் எப்படி ஜாக்கிரதையாயிருந்தேனோ, அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:29 பிதாக்கள் திராட்சக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள்.

எரே 31:30 அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்.

“நான் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது” - இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்களிலிருந்து பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். எல்லோரும் திரும்பி வந்த பின்பு, அவர்கள் தங்களுடைய தேசத்தை நீதியின் வாசஸ்தலம் என்றும், பரிசுத்த பர்வதம் என்றும் கூறி, கர்த்தர் பாலஸ்தீன தேசத்தை ஆசீர்வதிக்கக்கடவர் என்று கூறுவார்கள். அக்காலத்தில் பாலஸ்தீன தேசத்தில் மனுஷரும் பயிரிடுங் குடிகளும், மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருப்பார்கள். கர்த்தர் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணுவார். தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவார். (எரே 31:24-25).

“இதோ, நாட்கள் வரும்” - கர்த்தர் வரப்போகிற இந்த நாளைக் குறித்து அறிவிக்கிறார். இந்த நாளில் நடைபெறும் சம்பவங்களாவன:

1. அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தையும் யூதா குடும்பத்தையும் மனுஷ வித்தினாலும், மிருகவித்தினாலும் விதைப்பேன்.
2. அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் தீங்கு செய்யவும் அவர்கள்பேரில் எப்படி ஜாக்கிரதையாயிருந்தேனோ, அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன். (எரே 31:28)
3. அந்நாட்களில் “பிதாக்கள் திராட்சக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின” என்று சொல்ல மாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்கிறானோ அவனுடைய பற்களே கூசிப்போகும். (எரே 31:29-30).

வரப்போகிற இந்த நாட்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிக்கும். அப்போது சீயோனைக் கட்டுவதற்கும், கலகக்காரர்கள் அனைவரையும் ஒடுக்குவதற்கும் கர்த்தர் இந்தப் பூமிக்கு இயேசு கிறிஸ்துவை அனுப்புவார். (1கொரி 15:24-28). இக்காலத்தில் பாவமும் தொடரும், ஆனாலும் பாவம் நியாயந்தீர்க்கப் படும். தங்களுடைய பாவங்களுக்கு உரிய தண்டனையைப் பாவம் செய்தவர்கள் அனுபவிப்பார்கள். ஒருவருடைய பாவத்திற்குரிய பலனை மற்றவர்கள் அனுபவிக்க மாட்டார்கள். பாவம் செய்தவனே அதன் பலனை அனுபவிப்பான். பாவத்தின் சம்பளம் மரணம். (எரே 31:29-30).

13. புதிய உடன்படிக்கையின் பத்து ஆசீர்வாதங்கள் - (ஏசா 59:20)

எரே 31:31 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும்யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.

எரே 31:32 நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

31 அதிகாரம்

எரே 31:33 அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கை யாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:34 இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.

“இதோ, நாட்கள் வரும்” - கர்த்தர் மறுபடியும் வரப்போகிற நாளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்த நாளில் நடைபெறப்போகும் சம்பவங்களாவன:

1. இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் கர்த்தர் புது உடன்படிக்கை பண்ணுவார். (எரே 31:31; எபி 8:6-13).

2. அந்நாட்களுக்குப் பிற்பாடு, கர்த்தர் தமது நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவார். (எரே 31:33).

4. கர்த்தர் அவர்கள் தேவனாயிருப்பார். அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள்.

5. அந்நாளில் கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் கர்த்தரை அறிந்துகொள்வார்கள் (எரே 31:34).

“புது உடன்படிக்கை” - புதிய ஏற்பாடே இங்கு புது உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குப் பதிலாகப் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் பிரமாணம் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 42:6; ஏசா 49:8; ஏசா 55:3; ஏசா 59:21; ஏசா 61:8; எபி 8:6-13; எபி 10:16; எபி 12:24; எபி 13:20).

“அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன் படிக்கையின்படி அல்ல” - புது உடன்படிக்கையும், பழைய உடன்படிக்கையும் ஒன்றல்ல. மோசேயின் பிரமாணத்திற்குப் பதிலாகக் கர்த்தர் இங்கு புதிய உடன்படிக்கையை அறிவிக்கிறார். பழைய உடன்படிக்கை கற்பலகைகளில் எழுதப்பட்டது. புதிய உடன்படிக்கையோ அவர்களுடைய இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு பழைய உடன்படிக்கை வேறொன்றின்மீது எழுதப்படுவதினால் அது புதிய உடன்படிக்கை ஆகாது. உடன்படிக்கையிலுள்ள செய்தியின் சாரம் மாறினால் மட்டுமே அது புதிய உடன்படிக்கையாகும். கர்த்தர் இங்கு இரண்டு வெவ்வேறு உடன்படிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1. பழைய ஏற்பாடு (Old Testament) (2கொரி 3:14) - புதிய ஏற்பாடு (New Testament) (2கொரி 3:6)

2. முதலாவது உடன்படிக்கை (First covenant) (எபி 8:7; எபி 9:1) - இரண்டாவது உடன்படிக்கை (Second covenant) (எபி 8:7; எபி 10:1-9)

3. மோசேயின் மூலமாக வந்தது (Came by Moses) (யோவான் 1:17) - இயேசு கிறிஸ்துவின் மூலமாக வந்தது. (Came by Christ) (எபி 8:6; எபி 9:15)

எரேமியா – தொகுப்புரை

31 அதிகாரம்

4. மோசேயின் பிரமாணம் **(Law of Moses)** (அப் 13:38-39) - கிறிஸ்துவின் பிரமாணம் **(Law of Christ)** (கலா 6:2)

5. பாவத்தின் பிரமாணம் **(Law of sin)** (ரோமர் 7:23; ரோமர் 8:2) - நீதியின் பிரமாணம் **(Law of righteousness)** (ரோமர் 9:31)

6. மாம்சத்தின் பிரமாணம் **(Law of the flesh)** (ரோமர் 7:5-6) - ஆவியின் பிரமாணம் **(Law of the Spirit)** (ரோமர் 8:2)

7. விசுவாசத்தின் பிரமாணமல்ல **(Not of faith)** (கலா 3:12) - விசுவாசத்தின் பிரமாணம் **(Law of faith)** (ரோமர் 3:27)

8. அடிமைத்தனத்தின் நுகம் **(Yoke of bondage)** (கலா 5:1) - விடுதலையின் பிரமாணம் **(Law of liberty)** (யாக் 1:25)

9. கிறிஸ்துவால் முடிவு பெற்றது **(Ended by Christ)** (ரோமர் 10:4) - கிறிஸ்துவால் ஆரம்பிக்கப்பட்டது **(Started by Christ)** (எபி 8:6; எபி 10:9)

10. மரணத்தைத் தருகிறது **(Brought death)** (2கொரி 3:7) - ஜீவனைத் தருகிறது **(Brought life)** (ரோமர் 8:2; கலா 3)

11. குற்ற உணர்வு உண்டாக்குகிறது **(Makes guilty)** (2கொரி 3:9 - விடுவிக்கிறது **(Makes free)** (கலா 5:1; யோவான் 8)

12. நிழல் **(A shadow)** (கொலோ 2:14-17) - பிரத்தியேட்சம் **(The reality)** (எபி 10:1-18)

13. நிறைவேறிற்று **(Fulfilled)** (மத் 5:17-18) - நடைமுறையில் உள்ளது **(Now in force)** (எபி 8:6; எபி 10:9)

14. நீதியை எதிர்பார்க்கிறது **(Demands righteousness)** (லூக்கா 10:28) - நீதியைத் தருகிறது **(Gives righteousness)** (யோவான் 1:17; யோவான் 3:16)

15. பூரண குறைச்சலாக்குகிறது **(Makes imperfect)** (எபி 7:19) - பரிபூரணமாக்குகிறது **(Makes perfect)** (எபி 7:19)

16. மகிமையுள்ளது **(Glorious)** (2கொரி 3:7) - அதிக மகிமையுள்ளது **(More glorious)** (2கொரி 3:8-10)

17. இரட்சிக்க வல்லமையற்றது **(Powerless to save)** (எபி 9:9; எபி 10:4) - முற்றும் முடிய இரட்சிக்கிறது **(Saves to uttermost)** (எபி 7:25)

18. பல பலிகள் **(Many sacrifices)** (எபி 9:12-13) - ஒரே பலி **(One sacrifice)** (எபி 10:12)

19. தற்காலிக ஆசாரியர் **(Temporary priest)** (எபி 7:23) - நித்திய ஆசாரியர் **(Eternal priest)** (எபி 7:17)

20. பாவங்களை நினைவுகூருகிறது **(Remembers sins)** (எபி 10:3) - பாவங்களை மன்னிக்கிறது **(Forgets sins)** (எபி 8:12; எபி 10:17)

21. வருஷாந்திர பாவநிவாரணம் **(Yearly atonement)** (எபி 10:3) - நித்திய பாவநிவாரணம் **(Eternal atonement)** (எபி 10:14)

22. பாவமுள்ள ஊழியம் **(Sinful ministry)** (எபி 5:1-4) - பாவமில்லாத ஊழியம் **(Sinless ministry)** (எபி 7:26)

எரேமியா – தொகுப்புரை

31 அதிகாரம்

23. ஆரோனின் ஆசாரியத்துவ முறைமை **(Aaronic priesthood)** (எபி 7:11) - மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமை **(Melchisedek)** (எபி 5:5-10; எபி 7:21)

24. லேவி கோத்திரத்திற்குரியது **(Of Levi)** (எபி 7:11) - யூதா கோத்திரத்திற்குரியது **(Of Judah)** (எபி 7:14)

25. மிருகங்களின் பலிகள் **(Animal sacrifices)** (எபி 9:12) - இயேசு கிறிஸ்துவின் (மனுஷ) பலி **(Human sacrifice)** (எபி 9:14-28)

26. பூமிக்குரிய கூடாரம் **(Earthly tabernacle)** (எபி 9:2) - பரலோகத்திற்குரிய கூடாரம் **(Heavenly tabernacle)** (எபி 8:2)

27. பாவமுள்ள மத்தியஸ்தர் **(Sinful mediator)** (கலா 3:19) - பாவமில்லாத மத்தியஸ்தர் **(Sinless mediator)** (1தீமோ 2:5)

28. சுதந்திரமில்லை **(No inheritance)** (ரோமர் 4:13) - நித்திய சுதந்தரம் **(Eternal inheritance)** (எபி 9:15)

29. மிருகத்தின் இரத்தத்தினால் நிவாரணம் உண்டாயிற்று **(Ratified by animal blood)** (எபி 9:16-22) - கிறிஸ்துவின் இரத்தத்தினால் நிவாரணம் உண்டாயிற்று **(Ratified by the blood of Christ)** (மத் 26:28)

30. கிரியைகளின் பிரமாணம் **(Law of works)** (ரோமர் 3:26-31) - கிருபையின் பிரமாணம் **(Law of grace)** (யோவான்1:17)

31. கோபாக்கினையை உண்டாக்குகிறது **(Works wrath)** (ரோமர் 4:15) - கோபாக்கினை யிலிருந்து விடுவிக்கிறது **(Saves from wrath)** (ரோமர் 5:9)

32. இரட்சிக்கக்கூடாதது **(Could not redeem)** (எபி 10:4) - இரட்சிக்கிறது **(Redeems)** (கலா 3:13; எபி 9:12-15)

33. திருப்திப்படுத்தக்கூடாதது **(Could not satisfy)** (ஏசா 1:13-14) - தேவனைத் திருப்திபடுத்துகிறது. **(Does satisfy God)** (எபி 10:15-18)

34. அற்புதம் செய்யும் வல்லமை இல்லை **(No miracle power)** (எபி 7:18) - அற்புதங்கள் செய்கிறது **(Miracles)** (கலா 3:1-5; யோவான் 14:12)

35. அழிவு முன்னறிவிக்கப்பட்டது **(Abolishment predicted)** (ஓசி 2:11) - நிலைநிறுத்துவது முன்னறிவிக்கப் பட்டது **(Establishment predicted)** (எபி 8:7)

36. விருத்தசேதனம் உண்டு **(Circumcision)** (யாத் 12:48) - விருத்தசேதனம் இல்லை. **(No circumcision)** (ரோமர் 4:9-25)

37. மாற்றம் அடைந்தது **(Made to change)** (எபி 9; கலா 3) - நித்தியமாக்கப்பட்டது **(Made eternal)** (எபி 13:20)

38. தவறானது **(Faulty)** (எபி 8:7) - பரிபூரணமானது **(Perfect)** (யாக் 1:25)

39. பலவீனமானது **(Weak)** (எபி 7:18) - பலமுள்ளது **(Strong)** (எபி 7:25)

40. பிரயோஜனமற்றது **(Unprofitable)** (எபி 7:18) - பிரயோஜனம் உள்ளது **(Profitable)** (எபி 7:19,25)

31 அதிகாரம்

41. இயல்பான நடத்தை (Natural program) (எபி 9:10-13) - ஆவிக்குரிய நடத்தை (Spiritual program) (2கொரி 3:6,13)

42. அன்றாட செயல் (Daily program) (எபி 7:27) - முடிவு பெற்ற செயல் (Finished program) (எபி 10:10-18)

43. பலவீனமுள்ள ஆசாரியர்கள் (Weak priests) (எபி 5:2; எபி 7:28) - பரிபூரணமான ஆசாரியர் (Perfect priest) (எபி 7:26)

44. நியாயப்பிரமாணத்தினால் ஆசாரியர்கள் (Priests by law) (எபி 7:28) - ஆணையிடுவதினால் ஆசாரியர் (Priest by an oath) (எபி 7:21,28)

45. இரட்சிப்பு இல்லை (No salvation) (எபி 10:2-4) - நித்திய இரட்சிப்பு உண்டு. (Eternal salvation) (எபி 5:9; எபி 10:10)

46. சுயமகிமை உடையது (Self-honored) (எபி 5:4) - தேவனால் மகிமைப் படுத்தப்படும் ஆசாரியர் (God-honored priest) (எபி 5:5)

47. பரிபூரணமானது ஒன்றுமில்லை (Nothing perfect) (எபி 7:19) - பரிபூரணப்படுத்துகிறது (Makes perfect) (எபி 7:19; எபி 10:14)

48. மத்தியஸ்தர் யாருமில்லை (No intercessors) (ஏசா 59:16) - மத்தியஸ்தர் உண்டு (Two intercessors) (ரோமர் 8:26,34; எபி 7:25)

49. அதிகக் கிரயம் செலுத்த வேண்டும் (Costly program) (எபி 5:1; எபி 9:9) - எல்லோருக்கும் இலவசமானது (Free for all) (எபே 2:8; வெளி 22:17)

50. பூமிக்குரிய பிரதிநிதிகள் (Earthly agents) (எபி 5:1-4) - பரலோகத்துப் பிரதிநிதி (Heavenly agent) (எபி 9:24; எபி 10:12)

51. எப்போதும் தோல்வி (Monotonous failure) (எபி 10:11) - மகிமையுள்ள வெற்றி (Glorious success) (எபி 10:10-18)

52. தேவனிடத்தில் கிட்டிச் சேரமுடியாது (No personal access to God) (எபி 9:7) - தேவனிடத்தில் கிட்டிச் சேரமுடியும் (Personal access to God) (எபி 4:14-16; எபி 10:19)

53. பலபலிகள் (Many offerings) (எபி 9:12-13) - ஒரே பலி (One offering) (எபி 10:10-14)

54. நல்ல வாக்குத்தத்தங்கள் (Good promises) (உபா 28:1-14) - விசேஷித்த வாக்குத்தத்தங்கள் (Better promises) (எபி 8:6)

55. நல்ல உடன்படிக்கை (A good covenant) (ரோமர் 7:12) - விசேஷித்த உடன்படிக்கைகள் (A better covenant) (எபி 7:22; எபி 8:6)

56. பல ஆசாரியர்கள் (Many priests) (எபி 7:23) - ஒரே ஆசாரியர் (One priest) (எபி 7:24-28)

57. பல பாடுகள் (Many sufferings) (எபி 9:12-13) - ஒரே பாடு (One suffering) (எபி 9:26; எபி 10:14)

58. தற்காலத்து காரியங்கள் (Present things) (எபி 9:9) - வரப்போகிற காரியங்கள் (Things to come) (எபி 10:1)

59. ஆசரிப்புக் கூடாரத்திற்கு அடையாளம் (Typical tabernacle) (எபி 9) - மெய்யான ஆசரிப்புக்கூடாரம் (True tabernacle) (எபி 8:2; எபி 9:11)

31 அதிகாரம்

60. செத்த கிரியைகள் (Dead works) (எபி 9:14) - ஜீவனுள்ள சேவை (Living service) (எபி 9:14)

61. சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்டது (Made at Sinai) (கலா 4:24) - கல்வாரியில் ஏற்படுத்தப்பட்டது (Made at Calvary) (மத் 26:28)

62. இரக்கம் இல்லை (No mercy) (எபி 10:28) - பூரண இரக்கம் (Complete mercy) (எபி 8:12)

63. கையால் செய்யப்பட்ட காரியங்கள் (Handmade things) (எபி 9:1-5,24) - கையால் செய்யப்பட்டதல்ல (Not handmade) (எபி 9:23-24)

64. தூதர்களால் கொடுக்கப்பட்டது (Given by angels) (கலா 3:19) - பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது (By the Holy Spirit) (எபி 10:15-18)

சாம்பலைக் கொட்டுகிறதுமான பள்ளத்தாக்கனைத்தும், கீதரோன் வாய்க்காலுக்கு இப்பாலே கிழக்கே இருக்கிற குதிரைவாசலின் கோடிமட்டும் உண்டான சகல நிலங்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்; அப்புறம் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவது மில்லை இடிக்கப்படுவதுமில்லை என்கிறார்.

65. பழைய வழி (An old way) (எபி 8:13) - புதிய ஜீவனுள்ள வழி (New and living way) (எபி 10:19-20)

66. உதவி புரிய முடியாத ஊழியக்காரர்கள் (Helpless ministers) (எபி 7:18) - உதவி புரியும் ஊழியக்காரர்கள் (Able ministers) (2கொரி 3:6)

67. மாம்ச ஊழியம் (Carnal ministry) (எபி 9:9-10) - ஆவிக்குரிய ஊழியம் (Spiritual ministry) (2கொரி 3:6)

68. மரணத்துக்கேதுவான ஊழியம் (Ministration of) (2கொரி 3:6,8) - ஜீவனுக்கேதுவான பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் (Ministration of Spirit and life) (2கொரி 3:7)

69. ஆக்கினைத்தீர்ப்பு கொடுக்கும் ஊழியம் (Ministration of condemnation) (2கொரி 3:9) - நீதியைக் கொடுக்கும் ஊழியம் (Ministration of righteousness) (2கொரி 3:9)

70. மகிமை முக்காடு போட்டுக் கொண்டது (Glory covered) (2கொரி 3:13) - மகிமை வெளியரங்கமாக இருக்கிறது. (Glory uncovered) (1கொரி 18)

71. அடிமைத்தனத்தைத் தருகிறது (Brings bondage) (கலா 4:24-25) - விடுதலையைத் தருகிறது. (Brings liberty) (2கொரி 3:17)

72. நியாயந்தீர்க்க முடியாது (Cannot justify) (கலா 2:16) - நியாயந்தீர்க்கும் (Can justify) (அப் 13:38-39)

73. சாபத்தைத் தருகிறது (Brings a curse) (கலா 3:10) - சாபத்திலிருந்து விடுவிக்கிறது (Redeems from it) (கலா 3:13)

74. கிரியைகளினால் ஜீவிக்கிறது (Live by works) (கலா 3:10) - விசுவாசத்தினால் ஜீவிக்கிறது (Live by faith) (கலா 3:11)

75. ஜீவனைக் கொடுக்க முடியாது (Cannot give life) (கலா 3:21) - ஜீவனைக் கொடுக்க முடியும். (Can give life) (யோவான் 6:63-68)

76. பாவத்தை வெளிப்படுத்துகிறது (Exposes sin) (கலா 3:19) - பாவத்தை மூடுகிறது (Covers sin) (ரோமர் 4:1-8)

31 அதிகாரம்

77. நியாயப்பிரமாணத்தின்கீழ் உள்ளது **(Under law)** (ரோமர் 6:14-15) - கிருபையின்கீழ் உள்ளது. **(Under grace)** (கலா 3:22-25)

78. துன்பத்தை உண்டாக்குகிறது **(Engenders persecution)** (கலா 4:29) - பொறுமையைத் தருகிறது **(Engenders tolerance)** (1கொரி 13)

79. நீங்கிப்போயிற்று **(Done away)** (2கொரி 3:7-14) - நீங்கவில்லை **(Not done away)** (2கொரி 3:11)

80. ஒழிந்துபோயிற்று **(Abolished)** (2கொரி 3:13) - இன்னும் இருக்கிறது. **(Remains)** (2கொரி 3:11)

81. புறம்பே தள்ளப்பட்டது **(Cast out)** (கலா 4:30) - புறம்பே தள்ளப்படவில்லை. **(Not cast out)** (எபி 8:6)

82. எடுத்துப் போடப்பட்டது **(Taken away)** (எபி 10:9) - எடுத்துப்போடப்படவில்லை **(Not taken away)** (எபி 10:9)

83. குலைத்துப்போடப்பட்டது **(Blotted out)** (கொலோ 2:14-17) - குலைத்துப் போடப்படவில்லை **(Not blotted out)** (எபி 8:6)

84. ஆணையினால் உண்டாக்கப்படவில்லை **(Not by an oath)** (எபி 7:20-21) - ஆணையினால் உண்டாக்கப்பட்டது **(Made by an oath)** (எபி 7:20-21)

85. இஸ்ரவேல் ஜனங்களுக்கு மட்டும் உரியது **(For Israel only)** (உபா 4:7-8; உபா 5:3) - எல்லா ஜனங்களுக்கும் உரியது **(For all people)** (மத் 26:28)

14. சந்திரன், சூரியனைப் போன்று இஸ்ரேல் நித்திய காலமாக இருக்கும் - (சங் 72:5; 89:29,36,37)

எரே 31:35 சூரியனைப் பகல் வெளிச்சத்துக்காகவும் சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்துக் காகவும் கட்டளையிட்டவரும், அலைகள் கொந்தளிக்கத்தக்கதாகச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவரும், சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவருமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

எரே 31:36 இந்த நியமங்கள் எனக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்து போனால், அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:37 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: மேலே இருக்கிற வானங்கள் அளக்கப்படவும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்கள் ஆராயப்படவும் கூடுமானால், நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்து விடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மகாப்பெரிய சத்தியங்கள்

1. சூரியனைப் பகல் வெளிச்சத்துக்காக கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். (எரே 31:35; ஆதி 1:14-19).

2. சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்துக்காகக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். (எரே 31:35).

3. அலைகள் கொந்தளிக்கத்தக்கதாகக் கர்த்தர் சமுத்திரத்தைக் குலுக்குகிறார். (எரே 31:35; ஆதி 1:9-13; யோபு 38:11).

4. இந்த நியமங்களைக் கர்த்தர் நித்தியமாக நியமித்திருக்கிறார். (எரே 31:36; சங் 72:5,17; சங் 89:29,35-37).

31 அதிகாரம்

5. மேலே இருக்கிற வானங்களை அளக்க முடியாது. (எரே 31:37).

6. கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்களை ஆராயமுடியாது.

7. கர்த்தர் இஸ்ரவேலோடு நித்திய உடன்படிக்கை செய்திருக்கிறார். (எரே 31:37; ஏசா 9:6-7; லூக்கா 1:32-33).

"அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம்" - சூரியன் பகலில் வெளிச்சத்தைக் கொடுக்கும். சந்திர நட்சத்திரங்கள் இரவில் வெளிச்சத்தைக் கொடுக்கும். இவை இயற்கையின் நித்திய பிரமாணம். அதுபோலவே இஸ்ரவேல் சந்ததி கர்த்தருக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாக இருக்கும். இதில் மாற்றம் எதுவுமிராது. இது ஒரு நித்திய பிரமாணம்.

"ஆராயப்படவும் கூடுமானால்" - பூமியின் அஸ்திரபாரங்களை ஆராய்வதற்கோ, வானங்களை அளப்பதற்கோ வழிவகை எதுவுமில்லை. அதுபோலவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வெறுத்து விடுவதற்கும், வழி எதுவுமில்லை. அவர்கள் பாவம் செய்தாலும் கர்த்தர் அவர்கள்மீது இரங்கி, அவர்களைத் தமது ஜாதியாக ஆக்கிக் கொள்வார். (ஏசா 66:7-8; சக 12:10-13:1; ரோமர் 11:25-29; எபி 10:17).

15. எருசலேம் நித்திய நகரமாக இருக்கும்

எரே 31:38 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது இந்த நகரம் அனானெயேலின் கோபுர முதல் கோடிவாசல்மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும்.

எரே 31:39 அப்புறமும் அளவுநூல் அதற்கு எதிராய்க் காரேப் என்னும் மேட்டின்மேல் சென்று கோவாத்புறமாக சுற்றிப்போம்.

எரே 31:40 பிரேதங்களைப் புதைக்கிறதும், சாம்பலைக் கொட்டுகிறதுமான பள்ளத்தாக் கனைத்தும், கீதரோன் வாய்க்காலுக்கு இப்பாலே கிழக்கே இருக்கிற குதிரைவாசலின் கோடிமட்டும் உண்டான சகல நிலங்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்; அப்புறம் அது என்றென்றைக்கும் பிடுங்கப் படுவதுமில்லை இடிக்கப்படுவதுமில்லை என்கிறார்.

"இதோ, நாட்கள் வரும்" - வரப்போகிற இந்த நாளைப் பற்றி கர்த்தர் மறுபடியும் இங்கு கூறுகிறார். இந்த நாளில் நடைபெறப்போகும் சம்பவங்களின் விவரம்:

1. இந்த நகரம் அனானெயேலின் கோபுர முதல் கோடிவாசல்மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும். அப்புறமும் அளவுநூல் அதற்கு எதிராய்க் காரேப் என்னும் மேட்டின்மேல் சென்று கோவாத் புறமாக சுற்றிப்போம். பிரேதங்களைப் புதைக்கிறதும், சாம்பலைக் கொட்டுகிறதுமான பள்ளத்தாக்கனைத்தும், கீதரோன் வாய்க்காலுக்கு இப்பாலே கிழக்கே இருக்கிற குதிரைவாசலின் கோடிமட்டும் உண்டான சகல நிலங்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும் (எரே 31:38-40).

2. அப்புறம் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை இடிக்கப் படுவதுமில்லை (எரே 31:40).

"இந்த நகரம் அனானெயேலின் கோபுர முதல் கோடிவாசல்மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும்." - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எருசலேம் நகரம் மறுபடியும் கட்டப்படுவதை இந்த வாக்கியம் விளக்குகிறது. (எரே 31:38-40). நகரத்தின் அளவுகள் எசே 48:30-35 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளன. அந்நாளிலே இயேசு கிறிஸ்துவினுடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின் மேல்நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம். அதினாலே ஒரு பாதி வடபக்கத்திலும் ஒருபாதி தென்பக்கத்திலும் சாயும். (சக 14:1-5) அந்நேரத்திலே பூமி மிகவும் அதிரும்.

எரேமியா – தொகுப்புரை

31 அதிகாரம்

எருசலேம் நகரத்தில் பத்தில் ஒரு பங்கு இடிந்துவிழும். எருசலேம் நகரத்தில் மட்டும் பூமி அதிர்ச்சியினால் 7,000பேர் அழிவார்கள். (வெளி 11:13) அப்பொழுது எருசலேம் மூன்று பங்காகப் பிரிக்கப்படும். அதின் பல பகுதி அழிந்துபோகும். (வெளி 16:19). எருசலேம் முழுவதுமாக அழிந்துபோனதினால் அது மறுபடியும் கட்டப்பட வேண்டியது அவசியமாயிற்று. மேசியா எருசலேமைத் தமது தலைநகரமாக ஆக்கி, பூமியிலுள்ள எல்லா தேசங்களையும் ஆளுகை செய்யும்போது அவர் அதைத் திரும்பவும் கட்டுவார். அந்நாளிலிருந்து எருசலேம் நகரம் "யேகோவா ஷம்மா" என்று அழைக்கப்படும். இதற்கு "கர்த்தர் அங்கு இருக்கிறார்" என்று பொருள். **"The Lord is there"** (எசே 48:35).

"கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்" - எருசலேம் நகரம் மட்டுமல்லாமல் அங்குள்ள சகல நிலங்களும், யூதாவிலுள்ள எல்லாப் பானைகளும், பாத்திரங்களும், குதிரைகளின் மணிகளும், கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும். (சக 14:10-21).

"அது என்றென்றைக்கும் பிடுங்கப் படுவதுமில்லை இடிக்கப்படுவதுமில்லை" - எருசலேம் நித்திய நகரமாக இருக்கும். வேதாகமத்தில் பல வசனங்கள் இந்தச் சத்தியத்தை விளக்கிக் கூறுகின்றன.

32 அதிகாரம்

16. உறவின் முறை மீட்பின் அடையாளம்

(1) சிதேக்கியாவின் கேள்வி

எரே 32:1 நேபுகாத்நேச்சரின் பதினெட்டாம் வருஷத்துக்குச் சரியான யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அரசாண்ட பத்தாம் வருஷத்தில், கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை:

எரே 32:2 அப்பொழுது பாபிலோன் ராஜாவின் சேனை எருசலேமை முற்றிக்கை போட்டிருந்தது; எரேமியா தீர்க்கதரிசியோ, யூதா ராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருந்தான்.

எரே 32:3 ஏனென்றால், இதோ, இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கிறேன்; அவன் இதைப் பிடிப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும்,

எரே 32:4 யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா கல்தேயருடைய கைக்குத் தப்பிப்போகாமல், பாபிலோன் ராஜாவின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப் படுவான்; அவன் வாய் இவன் வாயோடே பேசும்; அவன் கண்கள் இவன் கண்களைக் காணும்.

எரே 32:5 அவன் சிதேக்கியாவைப் பாபிலோனுக்குக் கொண்டுபோவான்; நான் அவனைச் சந்திக்குமட்டும் அங்கே அவன் இருப்பான்; நீங்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணினாலும் உங்களுக்கு வாய்ப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும், நீ தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டியது என்ன என்று சொல்லி, யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அங்கே அவனை அடைத்து வைத்தான்.

தீர்க்கதரிசன எண் - 60

"கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை......" (எரே 32:1-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கிறேன்; அவன் இதைப் பிடிப்பான் (எரே 32:3).
2. சிதேக்கியா கல்தேயருடைய கைக்குத் தப்பிப்போகமாட்டான். (எரே 32:4).
3. அவன் பாபிலோன் ராஜாவின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படுவான்.
4. அவன் வாய் இவன் வாயோடே பேசும்; அவன் கண்கள் இவன் கண்களைக் காணும்.
5. அவன் சிதேக்கியாவைப் பாபிலோனுக்குக் கொண்டுபோவான் (எரே 32:5).
6. நான் அவனைச் சந்திக்குமட்டும் அங்கே அவன் இருப்பான்.
7. நீங்கள் கல்தேயரோடே யுத்தம் பண்ணினாலும் உங்களுக்கு வாய்ப்பதில்லை.

"சிதேக்கியா அரசாண்ட பத்தாம் வருஷத்தில்" - எருசலேமின் வீழ்ச்சிக்கு ஒரு வருஷத்திற்கு முன்பாக இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. யூதர்களின் கடைசி ஜனத்தார் பாபிலோனின் சிறையிருப்புக்குப் போகிறார்கள். (எரே 32:1; 2இராஜா 25:1-2).

"எரேமியா தீர்க்கதரிசியோ, யூதா ராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருந்தான்" - எரேமியா எவ்வளவு காலம் காவற்சாலையின் முற்றத்தில் அடைக்கப்பட்டிருந்தார் என்று தெரிய வில்லை. தான் கூறின தீர்க்கதரிசனங்களின் நிமித்தமாக எரேமியா சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். (எரே 32:1, 3,8,12; எரே 33:1).

32 அதிகாரம்

"இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கிறேன்" - இந்தத் தீர்க்கதரிசனம் பல சமயங்களில் கூறப் பட்டிருக்கிறது. (எரே 32:3-5; எரே 21:3-7; எரே 24:8-10; எரே 25:8-29). இந்த வாக்கியம் 2இராஜா 25; 2நாளா 36 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் நிறைவேறிற்று.

"அவன் சிதேக்கியாவைப் பாபிலோனுக்குக் கொண்டுபோவான்" - சிதேக்கியா பாபிலோன் தேசத்திற்குச் சிறைப்பட்டுப் போவான் என்பதை எரேமியா முன்னறிவிக்கிறார். சிதேக்கியா பாபிலோனைப் காணமாட்டான் என்றும், ஆனாலும் அங்கே அவன் சாவான் என்றும் எசேக்கியேல் தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார். (எசே 12:13). இரண்டு தீர்க்கதரிசனங்களும் மெய்யாய் நிறைவேறின. சிதேக்கியா பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டான். அங்கு அவனுடைய கண்கள் பிடுங்கப் பட்டதினால் அவனால் பாபிலோனைக் காண முடியவில்லை. (2இராஜா 25:6-7).

(2) உறவின் முறை மீட்பின் நிறைவேற்றம் - (லேவி 25:25-34; ரூத் 3-4)

எரே 32:6 அதற்கு எரேமியா சொன்னது: கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 32:7 இதோ, உன்பெரிய தகப்பனாகிய சல்லூமின் குமாரன் அனாமெயேல் உன்னிடத்தில் வந்து: ஆனதோத்திலிருக்கிற என் நிலத்தை நீ வாங்கிக்கொள்; அதைக் கொள்ளுகிறதற்கு உனக்கே மீட்கும் அதிகாரம் அடுத்ததென்று சொல்வான் என்று உரைத்தார்.

எரே 32:8 அப்படியே என் பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேல், கர்த்தருடைய வார்த்தையின்படி காவற்சாலையின் முற்றத்தில் என்னிடத்துக்கு வந்து: பென்யமீன் நாட்டு ஆனதோத்தூரிலுள்ள என் நிலத்தை நீர் வாங்கிக்கொள்ளும்; சுதந்தரபாத்தியம் உமக்குண்டு, அதை மீட்கும் அதிகாரம் உமக்கு அடுத்தது; அதை வாங்கிக்கொள்ளும் என்றான்; அப்பொழுது அது கர்த்தருடைய வார்த்தை என்று அறிந்துகொண்டேன்.

எரே 32:9 ஆகையால் என் பெரியதகப்பன் மகனாகிய அனாமெயேலின் கையில், நான் ஆனதோத்திலிருக்கிற அவனுடைய நிலத்தைக்கொண்டு, அதின் விலைக் கிரயமாகிய பதினேழு சேக்கலிடை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக் கொடுத்தேன்.

எரே 32:10 நான் பாத்திரத்தில் கையெழுத்தையும், முத்திரையையும் போட்டு சாட்சிகளை வைத்து, வெள்ளியைத் தராசிலே நிறுத்துக் கொடுத்த பின்பு,

எரே 32:11 நான் சட்டத்துக்கும் வழக்கத்துக்கும் ஏற்றபடி முத்திரைபோடப்பட்ட கிரயப் பத்திரத்தையும் திறந்திருக்கிற பிரதியையும் எடுத்து,

எரே 32:12 என்பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேலுடைய கண்களுக்கு முன்பாகவும், கிரயப்பத்திரத்தில் கையெழுத்துப் போட்ட சாட்சிகளுடைய கண்களுக்கு முன்பாகவும், காவற் சாலையின் முற்றத்தில் உட்கார்ந்திருந்த எல்லா யூதருடைய கண்களுக்கு முன்பாகவும், அதை மாசெயாவின் குமாரனாகிய நேரியாவின் மகனான பாருக்கினிடத்தில் கொடுத்து,

எரே 32:13 அவர்களுடைய கண்களுக்கு முன்பாகப் பாருக்கை நோக்கி:

எரே 32:14 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீ முத்திரைபோடப்பட்ட கிரயப்பத்திரமும், திறந்திருக்கிற பிரதிபத்திரமுமாகிய இந்தச் சாசனங்களை வாங்கி, அவைகள் அநேகநாளிலிருக்கும் படிக்கு அவைகளை ஒரு மண்பாண்டத்திலே வை.

32 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 61

"அதற்கு எரேமியா சொன்னது: கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி......" (எரே 32:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இந்தத் தீர்க்கதரிசனத்தில் எரேமியாவின் உறவினனான அனாமெயேலைப் பற்றியும், ஆனதோத்திலிருக்கிற தன்னுடைய நிலத்தை எரேமியா வாங்கிக் கொள்ள வேண்டுமென்று அனாமெயேல் கேட்டுக் கொள்வது பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தரே இந்தக் காரியங்களை வாய்க்கச் செய்கிறார். (எரே 32:8). எரேமியா அனாமெயேலின் கையில் ஆனதோத்திலிருக்கிற அவனுடைய நிலத்தை விலைக்கிரயமாக வாங்கிக் கொண்டார். இதன் மூலமாக எரேமியாவிற்கு யூதாவிற்குக் கூறும்படியான கர்த்தருடைய வார்த்தை மறுபடியும் உண்டாயிற்று. (எரே 32:8-15).

"அப்பொழுது அது கர்த்தருடைய வார்த்தை என்று அறிந்து கொண்டேன்" - எரேமியாவின் பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேல், கர்த்தருடைய வார்த்தையின்படி காவற்சாலையின் முற்றத்தில் எரேமியாவைப் பார்க்க வருகிறான். பென்யமீன் நாட்டு ஆனதோத்தூரிலுள்ள என் நிலத்தை நீர் வாங்கிக்கொள்ளும் என்று எரேமியாவிடம் கூறுகிறான். இதைக் கர்த்தர் ஏற்கெனவே எரேமியாவிற்கு முன்னறிவித்திருக்கிறார். (எரே 32:7). கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் காரியம் நடைபெறுகிறது. இது கர்த்தருடைய சித்தமென்று அறிந்து, எரேமியா அந்த நிலத்தை விலைக்கிரயம் செலுத்தி வாங்குகிறார். (எரே 32:9-11).

"முத்திரைபோடப்பட்ட கிரயப்பத்திரம்" - கிரயப்பத்திரத்திற்கு அக்காலத்தில் பிரதியெடுக்கும் வழக்கமும் இருந்தது. கிரயப் பத்திரத்திற்கு முத்திரைபோட்டு அதைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருப்பார்கள். அதற்குப் பிரதியெடுத்து அதில் முத்திரை போடாமல் திறந்திருக்கிற பிரதியாகப் பொது இடத்தில் வைப்பார்கள். இந்தப் பத்திரத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இதைப் பார்த்துக் கொள்ளலாம். எருசலேம் பட்டணம் அழியப் போகிறது. ஆகையினால் இந்த சாசனங்களை அநேகநாள் இருக்கும்படிக்கு ஒரு மண்பாண்டத்தில் வைக்குமாறு கர்த்தர் எரேமியாவிற்குக் கூறுகிறார். (எரே 32:12-14).

"அதை மாசெயாவின் குமாரனாகிய நேரியாவின் மகனான பாருக்கினிடத்தில் கொடுத்து" - பத்திர சாசனங்களை எரேமியா பாருக்கிடம் கொடுக்கிறார். இது அனாமெயேலுடைய கண்களுக்கு முன்பாக நடைபெறுகிறது. பாருக்கிடம் கொடுத்ததற்கு அனாமெயேல் சாட்சியாக இருக்கிறான். இந்தப் பத்திரம் அநேகநாள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அநேகநாள் என்பது எழுபது வருஷங்களைக் குறிக்கும். (எரே 25:9-14) எழுபது வருஷங்களுக்குப் பின்பு யூதர்கள் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். அப்போது இந்த தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படும். (எரே 32:12-15).

"பாருக்" (Baruch) - இந்தப் பெயருக்கு "ஆசீர்வதிக்கப்பட்டவன்" "blessed" என்று பொருள்.

தீர்க்கதரிசன எண் - 62

"அவர்களுடைய கண்களுக்கு முன்பாகப் பாருக்கை நோக்கி:......" (எரே 32:13-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

எழுபது வருஷங்களுக்குப் பின்பு யூதர்கள் தங்களுடைய பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவார்கள் என்பதை இந்த வாக்கியம் முன்னறிவிக்கிறது.

"அநேகநாள்" - இது எழுபது வருஷச் சிறையிருப்பைக் குறிக்கிறது. (எரே 25:9-14)

(3) யூதாவிற்கு பொருந்தும்

எரே 32:15 ஏனெனில் இனி இந்த தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றேன்.

எரேமியா – தொகுப்புரை

32 அதிகாரம்

17. எரேமியாவின் ஜெபம் - தேவனுடைய பதினாறு அம்ச மகத்துவம்

எரே 32:16 நான் கிரயப்பத்திரத்தை நேரியாவின் குமாரனாகிய பாருக்கினிடத்தில் கொடுத்தபின்பு, நான் கர்த்தரை நோக்கிப் பண்ணின விண்ணப்பமாவது:

எரே 32:17 ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.

எரே 32:18 ஆயிரம் தலைமுறைகளுக்கும் கிருபை செய்கிறவரும், பிதாக்களுடைய அக்கிரமத்தை பின்னடியார் பிள்ளைகளின் மடியிலே சரிக்கட்டுகிறவருமாகிய சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள

எரே 32:19 யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்; அவனவனுக்கு அவனவனுடைய வழிக்குத் தக்கதாகவும், அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் மேலும்நோக்கமாயிருக்கின்றன.

எரே 32:20 இஸ்ரவேலிலும் மற்ற மனுஷருக்குள்ளும் இந்நாள்வரைக்கும் விளங்குகிற அடையாளங்களையும் அற்புதங்களையும் தேவரீர் எகிப்துதேசத்திலே செய்து, இந்நாளில் நிற்கும் கீர்த்தியை உமக்கு உண்டாக்கி,

எரே 32:21 இஸ்ரவேலாகிய உமது ஜனத்தை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரத்தினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி,

எரே 32:22 அவர்களுடைய பிதாக்களுக்கு நீர் கொடுப்பேன் என்று ஆணையிட்ட பாலும் தேனும் ஓடிய தேசமாயிருக்கிற இந்த தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தீர்.

எரே 32:23 அவர்கள் அதற்குள் பிரவேசித்து, அதைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்; ஆனாலும் அவர்கள் உமது சத்தத்துக்குச் செவிகொடாமலும், உமது நியாயப்பிரமாணத்தில் நடவாமலும், செய்யும்படி நீர் அவர்களுக்குக் கற்பித்ததொன்றையும் செய்யாமலும் போனார்கள்; ஆதலால் இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணினீர்.

எரே 32:24 இதோ, கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது; நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்; பட்டயத்தினிமித்தமும், பஞ்சத்தினிமித்தமும், கொள்ளை நோயினிமித்தமும் இந்த நகரம் அதற்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயரின் கையிலே கொடுக்கப் படுகிறது; நீர் சொன்னபடி சம்பவிக்கிறது; இதோ, நீர் அதைப்பார்க்கிறீர்.

எரே 32:25 கர்த்தராகிய ஆண்டவரே, நகரம் கல்தேயரின் கையிலே கொடுக்கப் படுகிறதாயிருந்தும், தேவரீர் என்னை நோக்கி: நீ உனக்கு ஒரு நிலத்தை விலைக்கிரயமாகக் கொண்டு, அதற்குச் சாட்சிகளை வையென்று சொன்னீரே என்றேன்.

தேவனுடைய மகத்துவம்

1. உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர் (எரே 32:17).
2. உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.
3. ஆயிரம் தலைமுறைகளுக்கும் கிருபை செய்கிறவர். (எரே 32:18).
4. பிதாக்களுடைய அக்கிரமத்தை பின்னடியார் பிள்ளைகளின் மடியிலே சரிக்கட்டுகிறவர்.

32 அதிகாரம்

5. சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவர்.

6. மகத்துவமுள்ளவர்.

7. வல்லமையுள்ளவர்.

8. யோசனையிலே பெரியவர். (எரே 32:19).

9. செயலிலே வல்லவர்.

10. அவனவனுக்கு அவனவனுடைய வழிக்குத் தக்கதாகவும், அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் அளிக்கும்படி, கர்த்தருடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் மேலும்நோக்கமாயிருக்கின்றன.

11. இஸ்ரவேலிலும் மற்ற மனுஷருக்குள்ளும் இந்நாள்வரைக்கும் விளங்குகிற அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவர். (எரே 32:20).

12. இந்நாளில் நிற்கும் கீர்த்தியை தமக்கு உண்டாக்குகிறவர்.

13. இஸ்ரவேலாகிய தமது ஜனத்தை அடையாளங்களினாலும், அற்புதங் களினாலும், பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரத்தினாலும் எகிப்து தேசத்திலி ருந்து புறப்படப்பண்ணினவர். (எரே 32:21).

14. அவர்களுடைய பிதாக்களுக்கு தாம் கொடுப்பேன் என்று ஆணையிட்ட பாலும் தேனும் ஓடிய தேசமாயிருக்கிற இந்த தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தவர். (எரே 32:22).

15. அவர்களுடைய கீழ்ப்படியாமைக்கு இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப் பண்ணியவர். (எரே 32:23).

16. கர்த்தர் சொன்னபடி சொன்னபடி சம்பவிக்கிறது. எருசலேம் நகரத்தை அதற்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிற கல்தேயரின் கையில் கொடுக்கிறவர். (எரே 32:24-25).

"உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" - கர்த்தருடைய பிள்ளைகள் இந்த வாக்கியத்தை விசுவாசிக்க வில்லை. தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுடைய எல்லாத் தேவைகளையும் சந்திப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். வாக்குப் பண்ணியவர் உண்மையுள்ளவர். அவரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. (எரே 32:27; ஆதி 18:14).

"அடையாளங்களையும் அற்புதங்களையும் தேவரீர் எகிப்துதேசத்திலே செய்து" - இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தார்கள். அவர்களை அந்தத் தேசத்திலிருந்து விடுவித்து அழைத்து வருவதற்காகக் கர்த்தர் பத்து வாதைகளை அனுப்பினார். (யாத் 3-12, எரே 32:21)

இஸ்ரவேலின் அழிவிற்குக் காரணம்

1. அவர்கள் உமது சத்தத்துக்குச் செவி கொடுக்கவில்லை.

2. அவர்கள் உமது நியாயப்பிரமாணத்தில் நடக்கவில்லை.

3. செய்யும்படி நீர் அவர்களுக்குக் கற்பித்ததொன்றையும் செய்யாமல் போனார்கள்.

"நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்" - எருசலேம் நகரத்தைப் பிடிப்பதற்காக அதன் அலங்கத்தைச் சுற்றிலும் சத்துருக்கள் மண்மேடுகளைக் குவிக்கிறார்கள். அவர்கள் அந்த மண்மேடுகள்மீது ஏறி எருசலேமின் அலங்கத்தைத் தாண்டி, பட்டணத்திற்குள் புகுந்து விடுவார்கள். (எரே 6:6; எரே 33:4).

நகரம் பிடிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தவை

1. பட்டயம்
2. பஞ்சம்
3. கொள்ளைநோய்

32 அதிகாரம்

"நீர் சொன்னபடி சம்பவிக்கிறது" - கர்த்தருடைய தீர்க்கதரிசனம் நிறைவேறும். கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் தவறுவதில்லை. கர்த்தர் தாம் சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றுவதில் வல்லமையும், உண்மையும் உடையவர்.

"நகரம் கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறதாயிருந்தும்" - கர்த்தர் எருசலேம் நகரத்தைக் கல்தேயரின் கையில் கொடுத்து விட்டார். ஆனாலும் அந்தச் சூழ்நிலையிலும் தனக்கு ஒரு நிலத்தைக் கிரயத்திற்கு வாங்குமாறு கர்த்தர் எரேமியாவிற்குக் கூறுகிறார். இந்த நகரத்தைப் பாபிலோனியர் பிடித்துக் கொள்வார்கள். எரேமியா விலைக்கிரயம் கொடுத்து வாங்கிய நிலம் பாபிலோனியர் வாசமாகும். ஆனாலும் அந்தத் தேசத்திலிருந்து பாலஸ்தீன தேசத்திற்குக் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அழைத்து வருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். இந்தத் தீர்க்கதரிசனம் மெய்யாகவே நிறைவேறும். அதை எதிர்பார்த்தே எரேமியா எருசலேமில் ஒரு நிலத்தை விலைக்கிரயமாகக் கொண்டார். எழுபது வருஷங்களுக்குப் பின்பு எருசலேமில் மறுபடியும் வீடுகளும், நிலங்களும், திராட்சைத் தோட்டங்களும் கொள்ளப்படும். (எரே 32:25 = எரே 32:15,43-44).

18. தேவனுடைய பதிலுரை

(1) ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு - பத்து அம்ச காரணம் - (ஏசா 5:5)

எரே 32:26 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 32:27 இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?

எரே 32:28 ஆதலால், இதோ, நான் இந்த நகரத்தைக் கல்தேயரின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் ஒப்புக்கொடுக்கிறேன், அவன் இதைப் பிடிப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 32:29 இந்த நகரத்துக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயர் உட்பிரவேசித்து, இந்த நகரத்தைத் தீக்கொளுத்தி, இதைச் சுட்டெரிப்பார்கள்; எனக்குக் கோபமுண்டாக்கும்படி எந்த வீடுகளின்மேல் பாகாலுக்குத் தூபங்காட்டி, அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்த்தார்களோ, அந்த வீடுகளையும் சுட்டெரிப்பார்கள்.

எரே 32:30 இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் தங்கள் சிறுவயதுமுதல் என் பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்து வந்தார்கள்; இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளின் செய்கையினாலே எனக்குக் கோபத்தையே உண்டாக்கி வந்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 32:31 அவர்கள் இந்த நகரத்தைக் கட்டின நாள் முதற்கொண்டு, இந்நாள் வரைக்கும் அது எனக்குக் கோபமுண்டாகவும், எனக்கு உக்கிரமுண்டாகவும், நான் அதை என் முகத்தை விட்டு அகற்றுகிறதற்கு ஏதுவாகவும் இருந்தது.

எரே 32:32 எனக்குக் கோபமுண்டாகும் படிக்கு இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் செய்த எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் இப்படி நடக்கும்.

எரே 32:33 முகத்தையல்ல, முதுகை எனக்குக் காட்டினார்கள்; நான் ஏற்கனவே அவர்களுக்கு உபதேசித்தும் அவர்கள் புத்தியை ஏற்றுக்கொள்ளச் செவிகொடாமற் போனார்கள்.

எரே 32:34 அவர்கள் என் நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்தைத் தீட்டுப்படுத்தும் படிக்கு, தங்கள் அருவருப்புகளை அதிலே வைத்தார்கள்.

எரேமியா – தொகுப்புரை

32 அதிகாரம்

எரே 32:35 அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப் பண்ணும் படி இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள்; யூதாவைப் பாவஞ்செய்யப் பண்ணுவதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை.

எரே 32:36 இப்படியிருக்கையில் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும், பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டுப்போம் என்று நீங்கள் சொல்லுகிற இந்த நகரத்தைக் குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

தீர்க்கதரிசன எண் - 63

"அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:....." (எரே 32:26-44) எரே 32:26-36 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 32:37-44 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் இந்த நகரத்தைக் கல்தேயரின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் ஒப்புக் கொடுப்பேன். (எரே 32:28).
2. இந்த நகரத்துக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயர் உட்பிரவேசித்து, இந்த நகரத்தைத் தீக்கொளுத்தி, இதைச் சுட்டெரிப்பார்கள் (எரே 32:29).
3. பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும், பாபிலோன் ராஜாவின் கையில் இந்த நகரம் ஒப்புக்கொடுக்கப்படும். (எரே 32:36).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தின எல்லா தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு வருவேன். (எரே 32:37).
2. அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பிவரப் பண்ணுவேன்.
3. இதிலே சுகமாய்த் தங்கியிருக்கப் பண்ணுவேன்.
4. அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன். (எரே 32:38).
5. அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மை யுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும் படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிடுவேன். (எரே 32:39).
6. அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லை யென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணுவேன். (எரே 32:40).
7. அவர்கள் என்னைவிட்டு அகன்றுபோகாத படிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைப்பேன்.
8. அவர்களுக்கு நன்மைசெய்யும்படி அவர்கள்மேல் சந்தோஷமாயிருப்பேன். (எரே 32:41).
9. என்முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்த தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன்.

எரேமியா – தொகுப்புரை

32 அதிகாரம்

10. நான் இந்த ஜனத்தின்மேல் இந்தப் பெரிய தீங்கையெல்லாம் வரப்பண்ணினதுபோல, அவர்களைக் குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும் அவர்கள்மேல் வரப் பண்ணுவேன் (எரே 32:42).

11. இந்த தேசத்திலே நிலங்கள் கொள்ளப்படும். (எரே 32:43).

12. இந்தத் தேசத்தில் நிலங்கள் விலைக்கிரயமாகக் கொள்ளப்படுகிற பத்திரங்களில் கையெழுத்துப் போடுகிறதும் முத்திரையிடுகிறதும் அதற்குச் சாட்சிவைக்கிறதும் உண்டாயிருக்கும். அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவேன். (எரே 32:44).

"என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" - (எரே 32:17,27; ஆதி 18:14)

இஸ்ரவேலின் பாவம்

1. தங்கள் சிறுவயதுமுதல் என் பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்துவந்தார்கள் (எரே 32:30).

2. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளின் செய்கையினாலே எனக்குக் கோபத்தையே உண்டாக்கி வந்தார்கள்.

3. முகத்தையல்ல, முதுகை எனக்குக் காட்டினார்கள் (எரே 32:33).

4. நான் ஏற்கனவே அவர்களுக்கு உபதேசித்தும் அவர்கள் புத்தியை ஏற்றுக்கொள்ளச் செவிகொடாமற் போனார்கள்.

5. அவர்கள் என் நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்தைத் தீட்டுப்படுத்தும்படிக்கு, தங்கள் அருவருப்புகளை அதிலே வைத்தார்கள். (எரே 32:34).

6. அவர்கள் மோளேகுக்கென்று பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள் (எரே 32:35).

7. அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப் பண்ணினார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளின் செய்கையினாலே எனக்குக் கோபத்தையே உண்டாக்கி வந்தார்கள்" - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் தங்கள் பாவங்களினால் கர்த்தருக்கு கோபத்தை உண்டாக்கி வந்தார்கள். யூதா தேசம் மட்டும் என்றல்லாமல் எல்லாக் கோத்திரத்தாருமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். இஸ்ரவேலின் ராஜாக்களும், பிரபுக்களும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேலின் எல்லா ஜனங்களும் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்பு செய்தார்கள். (எரே 32:30,32).

(2) இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவதின் பதினைந்து அம்சங்கள் - (ஏசா 11:11)

எரே 32:37 இதோ, என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தின எல்லா தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பி வரவும் இதிலே சுகமாய்த் தங்கியிருக்கவும் பண்ணுவேன்.

எரே 32:38 அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.

எரே 32:39 அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு,

எரே 32:40 அவர்களுக்கு நன்மை செய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்றுபோகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து,

எரேமியா – தொகுப்புரை

32 அதிகாரம்

எரே 32:41 அவர்களுக்கு நன்மைசெய்யும் படி அவர்கள்மேல் சந்தோஷமாயிருந்து, என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்த தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன்.

எரே 32:42 நான் இந்த ஜனத்தின்மேல் இந்தப் பெரிய தீங்கையெல்லாம் வரப்பண்ணினது போல, அவர்களைக் குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 32:43 மனுஷனும் மிருகமுமில்லாத படிக்குப் பாழாய்ப்போயிற்று என்றும், கல்தேயரின் கையிலே ஒப்புக்கொடுக்கப் பட்டுப் போயிற்று என்றும், நீங்கள் சொல்லுகிற இந்த தேசத்திலே நிலங்கள் கொள்ளப்படும்.

எரே 32:44 பென்யமீன் தேசத்திலும், எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் பட்டணங்களிலும், மலைக் காடான பட்டணங்களிலும், பள்ளத்தாக்கான பட்டணங்களிலும், தென்திசைப் பட்டணங்களிலும், நிலங்கள் விலைக்கிரயமாகக் கொள்ளப்படுகிற பத்திரங்களில் கையெழுத்துப் போடுகிறதும் முத்திரையிடுகிறதும் அதற்குச் சாட்சிவைக்கிறதும் உண்டாயிருக்கும்; அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

“நித்திய உடன்படிக்கை” - (எரே 31:31)

33 அதிகாரம்

19. தாவீதின் இராஜ்ஜியம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும்

(1) முதலாவதாக அழிவு

எரே 33:1 எரேமியா இன்னும் காவற் சாலையின் முற்றத்திலே அடைக்கப் பட்டிருக்கையில், கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் அவனுக்கு உண்டாகி, அவர்:

எரே 33:2 இதைச் செய்கிற கர்த்தருமாய், இதைத் திடப்படுத்தும்படிக்கு இதை உவேற் படுத்துகிற கர்த்தருமாயிருக்கிற யேகோவா என்னும் நாமமுள்ளவர் சொல்லுகிறது என்னவென்றால்:

எரே 33:3 என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.

எரே 33:4 எதிர்க் கொத்தளங்களினாலும் பட்டயத்தாலும் இடிக்கப்பட்டவைகளாகிய இந்த நகரத்தின்வீடுகளையும், யூதா ராஜாக்களின் வீடுகளையுங்குறித்து:

எரே 33:5 இந்த நகரத்தின் எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் நான் என் முகத்தை மறைத்தபடியினாலே என் கோபத்திலும் உக்கிரத்திலும் வெட்டுண்ட மனுஷப் பிரேதங்களினாலே அவைகளை நான் நிரப்பும் படியாகவே, அவர்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணப் போகிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 64

“கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் அவனுக்கு உண்டாகி, அவர்:.....” (எரே 33:1-18) எரே 33:1-5 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 33:6-18 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இந்த நகரத்தின் வீடுகளும், யூதா ராஜாக்களின் வீடுகளும் எதிர்க் கொத்தளங்களினாலும் பட்டயத்தாலும் இடிக்கப்படும். (எரே 33:4).
2. கல்தேயரோடே யுத்தம்பண்ணும்போது, வெட்டுண்ட மனுஷப் பிரேதங்களினாலே அந்த வீடுகளை நான் நிரப்புவேன். (எரே 33:5).
3. இந்த நகரத்தின் எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் நான் என் முகத்தை மறைத்தபடியினாலே என் கோபத்திலும் உக்கிரத்திலும் அவர்கள் வெட்டப்படுவதற்கு நான் அனுமதிப்பேன்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணுவேன். (எரே 33:6).
2. அவர்களைக் குணமாக்குவேன்.
3. அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.
4. நான் யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்புவேன். (எரே 33:7).
5. முன்னிருந்தது போல அவர்களைக் கட்டுவிப்பேன்.
6. அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரிப்பேன். (எரே 33:8).
7. அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்.
8. நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்குமுன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும் (எரே 33:9).

33 அதிகாரம்

9. நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லாச் சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள்.

10. எருசலேமில் களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும் கேட்கப்படும். (எரே 33:10-11).

11. சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ள தென்று சொல்லுகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும். (எரே 33:11).

12. அவர்கள் முன்னிருந்ததுபோலி ருக்கும்படி தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன்.

13. இவ்விடத்திலும், இதற்கடுத்த பட்டணங்களிலும், ஆட்டுமந்தையை மேய்த்துமடக்குகிற மேய்ப்பர்களின் தாபரங்கள் உண்டாயிருக்கும் (எரே 33:12).

14. எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் பட்டணங்களிலும், ஆட்டு மந்தைகள் தங்களைத் தொகையிடுகிற வனுடைய கைக்குள்ளாகக் கடந்துவரும். (எரே 33:13).

15. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன். (எரே 33:14).

16. அந்நாட்களிலும், அக்காலத்திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப் பண்ணுவேன். (எரே 33:15).

17. அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

18. அந்நாட்களில் யூதா இரட்சிக்கப்பட்டு, எருசலேம் சுகமாய்த் தங்கும். (எரே 33:16).

19. அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

20. இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இல்லாமற் போவதில்லை. (எரே 33:17).

21. தகனபலியிட்டு, போஜனபலி செலுத்தி, நாள்தோறும் பலியிடும் புருஷன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற் போவதுமில்லை (எரே 33:18).

"கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் அவனுக்கு உண்டாகி, அவர்" - கர்த்தருடைய வார்த்தை எரேமியாவிற்கு இரண்டாம் முறையாக உண்டாகும்போது அவர் இன்னும் காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப் பட்டிருக்கிறார். இதற்கு முன்பு எருசலேமின் அழிவைக் குறித்தும், அது கல்தேயர் மூலமாக அழிக்கப்படும் என்பது குறித்தும் கர்த்தர் எரேமியாவிற்கு முன்னறிவித்தார். அந்தத் தீர்க்கதரிசனம் இங்கு மறுபடியும் உறுதிபண்ணப் படுகிறது.

எருசலேமின் அழிவுக்குப்பின்பு இஸ்ரவேல் தேசத்தார் தங்கள் சொந்த தேசத்திற்கு மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். மேசியாவின் கீழ் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் ஆசீர்வதிக்கப் படுவார்கள். தாவீதின் சிங்காசனமும் ராஜ்யமும் நித்தியமாக ஸ்தாபிக்கப்படும். தேவாலயத்தில் பலிகளும், ஆசாரியத்துவ முறைமைகளும் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும்.

இந்த முன்னறிவிப்புக்களெல்லாம் கர்த்தருடைய இருதயத்தை வெளிப்படுத்துகிறது. தம்முடைய இஸ்ரவேல் ஜனத்தார் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் தங்கள் தேசத்தில் மறுபடியுமாகக் கூட்டிச் சேர்க்கப்பட வேண்டுமென்றும், இஸ்ரவேல் தேசம் மேசியாவின்கீழ் எல்லா தேசங்களுக்கும் தலைமையாக இருக்க வேண்டுமென்றும் கர்த்தர் விரும்புகிறார். அத்துடன் முழு உலகத்திலும் சமாதானம் இருக்க வேண்டுமென்றும், ஜனங்கள் கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்றும் ஒரு குறைவுமில்லாமல் எல்லா வளமும் பெற்று, ஜனங்கள் சந்தோஷமாக ஜீவிக்க வேண்டுமென்றும் கர்த்தர் விரும்புகிறார்.

33 அதிகாரம்

இஸ்ரவேல் தேசத்தை நித்திய தேசமாக இரட்சிக்க வேண்டுமென்று கர்த்தர் சித்தம் கொண்டிருக்கிறார். அத்துடன் தாவீதின் ராஜ்யத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்றும், கர்த்தர் தீர்மானம் பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆசாரியர்களும், லேவியர்களும் துதிகளையும், பலிகளையும் நித்திய காலமாகச் செலுத்துவார்கள். இவையெல்லாம் கிறிஸ்துவின் பலிக்கு அடையாளமாக இருக்கும். இயேசு கிறிஸ்து விலைக்கிரயம் செலுத்தி மீட்டுக் கொண்ட இரட்சிப்பை வரப்போகிற சந்ததியார் அனுபவிப்பார்கள். (எரே 33:18, எசே 40-48).

"இந்த நகரத்தின் வீடுகளையும், யூதா ராஜாக்களின் வீடுகளையுங்குறித்து." - எரே 33:4-5 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் கி.மு. 606 ஆம் வருஷத்தில் நிறைவேறிற்று. பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவையும், எருசலேமையும் அழித்தான். இஸ்ரவேல் தேசத்தாரைச் சிறையிருப்புக்கு உட்படுத்தினான். கடைசி காலங்களில் இஸ்ரவேல் தேசத்தார் எல்லா தேசங்களிலுமிருந்தும் கூட்டிச் சேர்க்கப் படுவார்கள் என்றும், அவர்கள் மேசியாவின்கீழ் நித்திய ராஜ்யமாக ஸ்தாபிக்கப் படுவார்கள் என்றும் எரே33:6-18 ஆகிய வசனங்களில் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனம் இனிமேல் நிறைவேறும்.

"என் கோபத்திலும் உக்கிரத்திலும் வெட்டுண்ட மனுஷப் பிரேதங்களினாலே அவைகளை நான் நிரப்பும்படியாகவே" - எருசலேம் நகரத்திலுள்ள எல்லா வீடுகளிலும் மனுஷருடைய பிரேதங்கள் நிறைந்திருக்கும். இந்த நகரத்தில் தரிக்கிறவன் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான். கல்தேயர் வசமாய் புறப்பட்டுப் போய் விடுகிறவனோ பிழைப்பான் என்று எரே 21:9 ஆவது வசனத்தில் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதன்படி நகரத்தில் வெட்டுண்ட மனுஷருடைய பிரேதங்களாகக் கிடக்கிறவர்கள் பாபிலோனின் சிறையிருப்புக்குத் தங்களை உட்படுத்தாமல் கல்தேயருக்கு எதிர்த்து நின்றோராவர்.

(2) மீட்பின் பதினாறு அம்சம்

எரே 33:6 இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.

எரே 33:7 நான் யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி, முன்னிருந்தது போல அவர்களைக் கட்டுவித்து,

எரே 33:8 அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்.

எரே 33:9 நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்குமுன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லாச் சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 33:10 மனுஷனில்லாமலும் மிருகமில்லாமலும் அவாந்தர வெளியாய்க் கிடக்கிறதென்று, நீங்கள் சொல்லுகிற இவ்விடத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் மனுஷனாவது மிருகமாவது இல்லாத பாழான எருசலேமின் வீதிகளிலும்,

எரே 33:11 இன்னும் களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும்: சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், கர்த்தருடைய ஆலயத்துக்கு ஸ்தோத்திர பலிகளைக் கொண்டுவருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும்என்று கர்த்தர்

33 அதிகாரம்

சொல்லுகிறார். அவர்கள் முன்னிருந்தது போலிருக்கும்படி தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 33:12 மனுஷனும் மிருகமும் இல்லாமல் அவாந்தர வெளியாய்க்கிடக்கிற இவ்விடத்திலும், இதற்கடுத்த பட்டணங்களிலும், ஆட்டுமந்தையை மேய்த்துமடக்குகிற மேய்ப்பர்களின் தாபரங்கள் உண்டாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 33:13 மலைத்தேசமான பட்டணங்களிலும், பள்ளத்தாக்குகளான பட்டணங்களிலும், தென்திசைப் பட்டணங்களிலும் பென்யமீன் நாட்டிலும், எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் பட்டணங்களிலும், ஆட்டுமந்தைகள் தங்களைத் தொகையிடுகிறவனுடைய கைக்குள்ளாகக் கடந்துவரும் என்றுகர்த்தர் சொல்லுகிறார்.

"முன்னிருந்தது போல அவர்களைக் கட்டுவித்து" - எருசலேம் அழிந்தது. அது அழிவதற்கு முன்பாக இருந்ததுபோலவே அதைக் கட்டுவதாகக் கர்த்தர் வாக்குப் பண்ணுகிறார். (எரே 33:7,11). "உன் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோல" கர்த்தர் திரும்பக் கட்டுவார் என்று ஏசாயா கூறியிருக்கிறார். (ஏசா 1:26).

"யூதாவின் பட்டணங்களிலும் மனுஷனாவது மிருகமாவது இல்லாத பாழான எருசலேமின் வீதிகளிலும்" - யூதாவின் எல்லா பட்டணங்களிலும் மனுஷனோ, மிருகமோ காணப்படமாட்டார்கள். அவை முற்றிலுமாக அழிந்துபோயிருக்கும். இந்தத் தீர்க்கதரிசனம் இரண்டுமுறை நிறைவேறிற்று. கி.மு. 606 ஆம் வருஷத்தில் எருசலேம் அழிந்தபோது முதலாவது முறையும், கி.பி. 70 ஆம் வருஷத்தில் எருசலேம் அழிந்தபோது இரண்டாவது முறையும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. வருங்காலத்தில் எருசலேம் திரும்பவும் கட்டப்படும். அப்போது அங்கு மனுஷரும், மிருகங்களும் நிறைந்திருப்பார்கள். (எரே 33:12-13).

இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும் போது ஆசீர்வாதம்

1. சவுக்கியமும் ஆரோக்கியமும் (எரே 33:6)
2. பரிபூரண சமாதானமும், சத்தியமும்
3. தேசம் திரும்பக் கட்டப்படுதல் (எரே 33:7)
4. அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் நீங்கி சுத்திகரிப்படுவது. (எரே 33:8)
5. அவர்களுடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படுவது.
6. பூமியின் எல்லா ஜாதிகளுக்குமுன்பாக மகிழ்ச்சியும், கீர்த்தியும், புகழ்ச்சியும், மகிமையும் உண்டாயிருக்கும். (எரே 33:9)
7. நன்மை நிரம்பியிருக்கும்.
8. எல்லா சமாதானமும் நிரம்பியிருக்கும்.
9. எல்லோருக்கும் களிப்பும், மகிழ்ச்சியும் உண்டாயிருக்கும். (எரே 33:11)
10. தேவாலயத்தில் கர்த்தருடைய ஆராதனை நடைபெறும்.
11. சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் புத்திரர்கள் திரும்பி வருவார்கள். (எரே 33:7,11)
12. எல்லா இடங்களிலும் மந்தைகள் மேயும். (எரே 33:12-13)
13. மேசியா ஆளுகை செய்வார். (எரே 33:15)
14. அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.
15. யூதாவும், எருசலேமும் இரட்சிக்கப்படும்.
16. அவர்கள் சுகமாய்த் தங்குவார்கள். (எரே 33:16)
17. தாவீதின் சிங்காசனத்தின்மீது உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இருப்பான். (எரே 33:17-21)

33 அதிகாரம்

18. நித்திய ஆசாரியத்துவமும், பலிகளும் இருக்கும். (எரே 33:18-21)

19. தாவீதோடு நித்திய உடன்படிக்கை. (எரே 33:20-21)

20. நித்திய பகலும், இரவும். (எரே 33:20)

21. நித்திய சந்ததியார். (எரே 33:21)

22. இஸ்ரவேலின் நித்திய தேசம். (எரே 33:24-26)

(3) மேசியாவின் ஆளுகை - தாவீதின் உடன்படிக்கையும் லேவியரின் உடன்படிக்கையும் உறுதி பண்ணப்படுகிறது

எரே 33:14 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்.

எரே 33:15 அந்நாட்களிலும், அக்காலத்திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன்; அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

எரே 33:16 அந்நாட்களில் யூதா இரட்சிக்கப்பட்டு, எருசலேம் சுகமாய்த் தங்கும்; அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

எரே 33:17 இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இல்லாமற் போவதில்லை.

எரே 33:18 தகனபலியிட்டு, போஜனபலி செலுத்தி, நாள்தோறும் பலியிடும் புருஷன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற் போவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

"யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்" - இந்த வாக்கியத்தில் நல்வார்த்தை என்பதன் விவரம்: (எரே 33:14-18,20-21,24-26)

1. மேசியாவின் வருகை

2. இஸ்ரவேல் புத்திரர் முழுமையாக மீட்கப்படுவது.

3. இஸ்ரவேல் புத்திரர் மேசியாவின்கீழ் கூட்டிச் சேர்க்கப்படுவது.

"நீதியின் கிளை" - இது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் வாக்கியமாகும். தம்மைப் பற்றி தீர்க்கதரிசிகளால் கூறப் பட்டிருக்கும் பல தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதற்காக இயேசு கிறிஸ்து வருவார். பல வசனங்களில் இயேசு கிறிஸ்து "நீதியின் கிளை" என்று அழைக்கப்பட்டிருக்கிறார். (எரே 33:15; எரே 23:5; ஏசா 4:2; ஏசா 11:1; சக 3:8; சக 6:12)

அந்நாட்களில் நடைபெறும் காரியம்

1. யூதா இரட்சிக்கப்படும்.

2. எருசலேம் சுகமாய்த் தங்கும்.

"யூதா இரட்சிக்கப்பட்டு, எருசலேம் சுகமாய்த் தங்கும்" - தீர்க்கதரிசனம் இன்னும் யூதாவையும், எருசலேமையும் குறித்தே கூறப்பட்டு வருகிறது. இஸ்ரவேலையும், சமாரியாவையும், குறித்து இங்கு கூறப்படவில்லை. முழு இஸ்ரவேலுக்கும் யூதாவே இங்கு பிரதிநிதியாக இருக்கிறது. ஆயினும் வருங்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தார் தங்கள் சுய தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படும் போது அதில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் இருப்பார்கள். (எசே 37).

"சிங்காசனத்தின் மேல் உட்காரத்தக்க புருஷன்" - தாவீதின் வம்சத்தில் இயேசு கிறிஸ்து நித்திய ராஜாவாக இருப்பார். (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33). தாவீதும் மேசியாவின்கீழ் இஸ்ரவேலின் நித்திய ராஜாவாக இருப்பார். (எரே 30:9).

"நாள்தோறும் பலியிடும் புருஷன்" - ஆசாரியரும், லேவியரும் கர்த்தருக்குத் தகனபலிகளையும், போஜனபலிகளையும் நித்திய காலமாகச் செலுத்துவார்கள். (எரே 33:18,21, எசே 40-48)

33 அதிகாரம்

(4) சந்திரன், சூரியனைப் போல தாவீதின் உடன்படிக்கை நித்தியமாய் இருக்கும் - *(31:35-40; ஆதி 1:14-19)*

எரே 33:19 பின்னும் எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 33:20 குறித்த நேரங்களில் பகற்காலமும் இராக்காலமும் உண்டாகாத படிக்கு, நீங்கள் பகற்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும், இராக்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும் அவமாக்கினால்,

எரே 33:21 அப்பொழுது என் தாசனாகிய தாவீதோடே நான் பண்ணின உடன்படிக்கையும், அவன் சிங்காசனத்தில் அரசாளும் குமாரன் அவனுக்கு இல்லாமற்போகும்படியாக அவமாகும்; என் ஊழியக்காரராகிய லேவியரோடும் ஆசாரியரோடும் நான் பண்ணின உடன்படிக்கையும் அப்பொழுது அவமாகும்.

எரே 33:22 வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாயிருக்கிறது போல, நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழியஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 65

"பின்னும் எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:......" (எரே 33:19-22) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. என் தாசனாகிய தாவீதோடே நான் பண்ணின உடன்படிக்கை முறிக்கப்படாது. (எரே 33:19-21).
2. லேவியரும், ஆசாரியரும் கர்த்தருடைய நித்திய ஊழியக்காரராக இருப்பார்கள். (எரே 33:21).
3. என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழியஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப் பண்ணுவேன் (எரே 33:22).

இந்த அதிகாரத்தில் இரண்டாம் முறையாக நித்திய ராஜ்யம், நித்திய சிங்காசனம், நித்திய சந்ததி, நித்திய ஆசாரியர், நித்திய லேவியர், நித்திய பலிகள் ஆகியவற்றைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. வேதாகமம் முழுவதிலும் பல வசனங்களில் இந்தக் கருத்து வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. (எரே 33:15-18, 20-21,24-26).

"நான் பண்ணின உடன்படிக்கையையும் அவமாக்கினால்" - சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றோடு கர்த்தர் நித்திய உடன்படிக்கையைச் செய்திருக்கிறார். (ஆதி 4:14-19; ஆதி 8:22). அதனால் குறித்த நேரங்களில் பகற்காலமும், இராக்காலமும் உண்டாகிறது. இதில் மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை. கர்த்தர் தாம் பண்ணிய இந்த நித்திய உடன்படிக்கையை அவமாக்குவதில்லை. அதுபோலவே கர்த்தர் தாவீதோடு பண்ணிய உடன்படிக்கையையும் நித்திய உடன்படிக்கையாகப் பண்ணியிருக்கிறார். அதை அவர் அவமாக்கமாட்டார். தேவனுடைய ராஜ்யத்தில் தாவீதின் சந்ததியார் அமர்ந்து நித்திய காலமாக ஆட்சி புரிவார்கள். (எரே 33:20-21,25-26). இப்போது தாவீதுக்குச் சிங்காசனம் இல்லை. தாவீதின் ராஜ்யமென்று எதுவுமில்லை. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு கர்த்தர் தாவீதின் கூடாரத்தைத் திரும்பக் கட்டுவார். விழுந்துபோன தாவீதின் கூடாரத்தைக் கர்த்தர் மறுபடியும் எடுப்பித்து அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி அதைச் செவ்வையாக நிறுத்துவார். (அப் 15:13-18). அப்போது தாவீதின் ராஜ்யத்தில் கிறிஸ்து ஆட்சி புரிவார். தமது ராஜ்யத்தைக் கிறிஸ்து நித்திய ராஜ்யமாக ஸ்தாபிப்பார். (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5).

33 அதிகாரம்

(5) சந்திரன், சூரியனைப் போல இஸ்ரேல் நித்திய காலமாயிருக்கும்

எரே 33:23 பின்னும் எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 33:24 கர்த்தர் தெரிந்துகொண்ட இரண்டு வம்சங்களையும் வெறுத்துப் போட்டாரென்று இந்த ஜனம் சொல்லி, தங்களுக்கு முன்பாக என் ஜனம்இனி ஒரு ஜாதியல்லவென்று அதைத் தூஷிக்கிறார்களென்பதை நீ காணகிறதில்லையோ?

எரே 33:25 வானத்துக்கும் பூமிக்கும் குறித்திருக்கிற நியமங்களை நான் காவாமல், பகற்காலத்தையும் இராக் காலத்தையுங்குறித்து நான் பண்ணின உடன்படிக்கை அற்றுப் போகிறது உண்டானால்,

எரே 33:26 அப்பொழுது நான் யாக்கோபின் சந்ததியையும், என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் தள்ளி, நான் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் சந்ததியை ஆளத்தக்கவர்களை அதிலிருந்து எடுக்காதபடிக்கு வெறுத்துப் போடுவேன்; அவர்களுடைய சிறையிருப்பை நான் திருப்பி, அவர்களுக்கு இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 08

"பின்னும் எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:......" (எரே 33:23-26) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. தாவீதோடும், அவனுடைய சந்ததியோடும் கர்த்தர் பண்ணின உடன்படிக்கை அற்றுப் போகாமல் நித்தியமாக இருக்கும். (எரே 33:23-26).
2. கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பைத் திருப்புவார். (எரே 33:26).
3. கர்த்தர் அவர்களுக்கு இரங்குவார்.

இந்த அதிகாரத்தில் மூன்றாம் முறையாக தாவீதின் சிங்காசனத்தைப் பற்றியும், ராஜ்யத்தைப் பற்றியும், அவருடைய சந்ததியைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. (எரே 33:19-20).

34 அதிகாரம்

VII. பாபிலோனிய சிறையிருப்பைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் - (34:1-39:18)

1. சிதேக்கியாவின் பன்னிரெண்டு அம்ச பதவி இழப்பும் சிறையிருப்பும்

எரே 34:1 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய சர்வசேனையும், அவன் ஆளுகைக்குட் பட்ட பூமியின் சகல ராஜ்யங்களும், சகல ஜனங்களும் எருசலேமுக்கும் அதைச் சேர்ந்த சகல பட்டணங்களுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணுகையில் எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வார்த்தை:

எரே 34:2 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நீ போய், யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவினிடத்தில் பேசி, அவனுக்குச் சொல்லவேண்டியது: இதோ, நான் இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறேன்; அவன் இதை அக்கினியால் சுட்டெரிப்பான்.

எரே 34:3 நீ அவன் கைக்குத்தப்பிப் போகாமல், நிச்சயமாய்ப் பிடிபட்டு, அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாய்; உன் கண்கள் பாபிலோன் ராஜாவின் கண்களைக் காணும்; அவன் வாய் உன்வாயோடே பேசும்; நீ பாபிலோனுக்குப் போவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 34:4 ஆகிலும் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவே, கர்த்தருடைய வார்த்தையைக் கேள்; உன்னைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ பட்டயத்தாலே சாவதில்லை.

எரே 34:5 சமாதானத்தோடே சாவாய்; உனக்கு முன்னிருந்த ராஜாக்களாகிய உன் பிதாக்களினிமித்தம் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினது போல உன்னிமித்தமும் கொளுத்தி, ஐயோ! ஆண்டவனே, என்று சொல்லி, உனக்காகப் புலம்புவார்கள்; இது நான் சொன்ன வார்த்தையென்று கர்த்தர் உரைத்தார் என்று சொல் என்றார்.

எரே 34:6 இந்த வார்த்தைகளையெல்லாம் தீர்க்கதரிசியாகிய எரேமியா எருசலேமிலே யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவினிடத்தில் சொன்னான்.

எரே 34:7 அப்பொழுது பாபிலோன் ராஜாவின் சேனைகள் எருசலேமுக்கு விரோதமாகவும், யூதாவின் எல்லாப் பட்டணங்களிலும் மீந்த பட்டணங்களாகிய லாகீசுக்கும், அசெக்காவுக்கும் விரோதமாகவும் யுத்தம் பண்ணிக் கொண்டிருந்தது; யூதாவின் அரணிப்பான பட்டணங்களில் இவைகளே மீந்திருந்தவைகள்.

தீர்க்கதரிசன எண் - 67

“எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வார்த்தை:......” (எரே 34:1-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறேன் (எரே 34:2).
2. அவன் இதை அக்கினியால் சுட்டெரிப்பான்.
3. நீ அவன் கைக்குத்தப்பிப்போகாமல், நிச்சயமாய்ப் பிடிபட்டு, அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாய். (எரே 34:3).
4. உன் கண்கள் பாபிலோன் ராஜாவின் கண்களைக் காணும்.
5. அவன் வாய் உன்வாயோடே பேசும்.
6. நீ பாபிலோனுக்குப் போவாய்.

34 அதிகாரம்

7. நீ பட்டயத்தாலே சாவதில்லை. (எரே 34:4).

8. சமாதானத்தோடே சாவாய் (எரே 34:5).

9. உனக்கு முன்னிருந்த ராஜாக்களாகிய உன் பிதாக்களினிமித்தம் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினது போல உன்னிமித்தமும் கொளுத்துவார்கள்.

10. ஐயோ! ஆண்டவனே, என்று சொல்லி, உனக்காகப் புலம்புவார்கள்.

"லாகீசுக்கும், அசெக்காவுக்கும் விரோதமாகவும் யுத்தம் பண்ணிக் கொண்டிருந்தது" - இவை இரண்டும் அரணான பட்டணங்கள். யூதாவின் எல்லாப் பட்டணங்களிலும் இவ்விரண்டு பட்டணங்கள் மட்டுமே அழிந்துபோகாமல் மீதமாக இருந்தது. இவ்விரண்டு பட்டணங்களும் சமபூமியில் எகிப்துக்கு நேராக இருந்தன. இதனால் பாபிலோன் ராஜாவின் சேனைகள் எருசலேமைப் பிடிப்பதற்கு முன்பாக இவ்விரண்டு பட்டணங்களையும் பிடிப்பதற்கு யுத்தம் பண்ணினார்கள். பாபிலோனுக்கு எதிராக நடைபெறும் யுத்தத்தில் எகிப்தியர்கள் தங்களுக்கு ஆதரவாக யுத்தம் பண்ண வருவார்கள் என்று சிதேக்கியாவும், யூதாவும் நம்பினார்கள். ஆனால் எகிப்தியர்கள் அவர்களுக்கு உதவியாக வரவில்லை. நேபுகாத்நேச்சாரின் காலத்திற்கு முன்பு எகிப்தியர்கள் ஐபிராத்து நதி வரையிலுமுள்ள தேசங்களை ஆளுகை செய்தார்கள். ஐபிராத்து நதியில் நடைபெற்ற கர்கேமிஷ் யுத்தத்தில் நேபுகாத்நேச்சார் எகிப்தியரை ஜெயித்தான்.

2. சிதேக்கியாவின் நீதியான ஆணை

(1) செயல் இழந்தது

எரே 34:8 ஒருவனும் யூதஜாதியானாகிய தன் சகோதரனை அடிமை கொள்ளாத படிக்கு, அவனவன் எபிரெயனாகிய தன் வேலைக்காரனையும், எபிரெய ஸ்திரீயாகிய தன் வேலைக்காரியையும் சுயாதீனராக அனுப்பிவிட வேண்டுமென்று அவர்களுக்கு விடுதலையைக் கூறும்படி,

எரே 34:9 ராஜாவாகிய சிதேக்கியா எருசலேமில் இருக்கிற எல்லா ஜனத்தோடும் உடன்படிக்கை பண்ணினபின்பு, எரேமியாவுக்குக் கர்த்தரால் வார்த்தை உண்டாயிற்று.

எரே 34:10 ஒவ்வொருவனும் தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியையும் இனி அடிமை கொள்ளாதபடிக்கு, சுயாதீனராக அனுப்பிவிடவேண்டுமென்று உடன் படிக்கைக்கு உட்பட்ட எல்லாப் பிரபுக்களும் எல்லா ஜனங்களும் கேட்டபோது, செவிகொடுத்து அவர்களை அனுப்பி விட்டார்கள்.

எரே 34:11 ஆனாலும் அதற்குப்பின்பு அவர்கள் மாறாட்டம்பண்ணி, தாங்கள் சுயாதீனராக அனுப்பிவிட்ட வேலைக் காரரையும் வேலைக்காரிகளையும் மறுபடியும் அழைப்பித்து, அவர்களை வேலைக்காரரும் வேலைக் காரிகளுமாயிருக்கும் படி அடிமைப் படுத்திக் கொண்டார்கள்.

தீர்க்கதரிசன எண் - 68

"எரேமியாவுக்குக் கர்த்தரால் வார்த்தை உண்டாயிற்று........" (எரே 34:8-22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உங்களைப் பட்டயத்துக்கும், கொள்ளைநோய்க்கும், பஞ்சத்துக்கும் ஒப்புக்கொடுக்கிற விடுதலையை உங்களுக்குக் கூறுகிறேன் (எரே 34:17).

2. பூமியின் ராஜ்யங்களிலெல்லாம் அலைகிறதற்கு உங்களை ஒப்புக் கொடுப்பேன் (எரே 34:17).

3. நான் அவர்களை அவர்கள் சத்துருக்களின்கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன் (எரே 34:18-20).

34 அதிகாரம்

4. அவர்களுடைய பிரேதம் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும். (எரே 34:20).

5. யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும் அவனுடைய பிரபுக்களையும் பாபிலோன் ராஜாவினுடைய சேனைகளின் கையில் ஒப்புக்கொடுப்பேன். (எரே 34:21).

6. நான் கட்டளைகொடுத்து, அவர்களை இந்த நகரத்துக்குத் திரும்பப்பண்ணுவேன். (எரே 34:22).

7. அவர்கள் அதற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடிப்பார்கள்.

8. அதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்

9. யூதாவின் பட்டணங்களையும், ஒருவரும் அவைகளில் குடியிராதபடிப் பாழாய்ப் போகப் பண்ணுவேன்.

"எல்லா ஜனத்தோடும் உடன்படிக்கை பண்ணினபின்பு" - சிதேக்கியா இந்த உடன்படிக்கையை மறுபடியும் செய்ய வேண்டிய அவசியம் எதுவுமில்லை. ஏனெனில் அவன் ஏற்கெனவே இந்த உடன்படிக்கையைச் செய்வதற்குக் கர்த்தருக்கு உட்பட்டிருக்கிறான். (லேவி 25:10,39-46; உபா 15:12). இந்த உடன்படிக்கை ஏற்கெனவே பண்ணப் பட்டிருக்கிறது. யூதா தேசத்தார் முதலில் இதற்குக் கீழ்ப்படிந்து, அதன்பின்பு உடன்படிக்கையை மீறிப்போட்டார்கள். ஆகையினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து இங்கு தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. (எரே 34:10-11,17).

(2) தேவனுடைய கடிந்து கொள்ளுதல்

எரே 34:12 ஆதலால், கர்த்தராலே எரேமியாவுக்கு வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 34:13 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், அவனவன் தனக்கு விற்கப்பட்ட எபிரெயனாகிய தன் சகோதரனை முடிவிலே நீங்கள் ஏழாம் வருஷத்திலே அனுப்பிவிடவேண்டும் என்றும், அவன் உனக்கு ஆறுவருஷம் அடிமையாயிருந்த பின்பு, அவனை உன்னிடத்தில் வைக்காமல் சுயாதீனனாக அனுப்பிவிட வேண்டும் என்றும்,

எரே 34:14 நான் உங்கள் பிதாக்களை அடிமைவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே அவர்களோடே உடன்படிக்கை பண்ணினேன்; ஆனாலும் உங்கள் பிதாக்கள் என் சொல்லைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போனார்கள்.

எரே 34:15 நீங்களோ, இந்நாளிலே மனந்திரும்பி, அவனவன் தன் அயலானுக்கு விடுதலையைக் கூறின விஷயத்திலே என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, என் நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்திலே இதற்காக என் முகத்துக்குமுன் உடன்படிக்கை பண்ணியிருந்தீர்கள்.

"நீங்கள் ஏழாம் வருஷத்திலே அனுப்பி விடவேண்டும்" - (லேவி 25:10,39-46; உபா 15:12)

"அவர்களோடே உடன்படிக்கை பண்ணினேன்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுதலை செய்து அழைத்து வந்தபோது அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார். ஆனால் இஸ்ரவேலரோ உடன்படிக்கையைக் காத்துக் கொள்ளவில்லை. இதனால் இஸ்ரவேல் புத்திரருக்குப் பல இன்னல்கள் உண்டாயிற்று. அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போகப்போகிறார்கள். (எரே 34:12-22).

"நீங்களோ, இந்நாளிலே மனந்திரும்பி" - கர்த்தர் இந்த உடன்படிக்கையை இஸ்ரவேல் புத்திரரின் நன்மைக்காகவே செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ உடன்படிக்கையைக் காத்துக் கொள்ளாமல் அதை மீறிவிட்டார்கள். சிதேக்கியாவின் ஒன்பதாவது வருஷ ஆட்சிக்காலத்தில் நேபுகாத்நேச்சார் எருசலேமிற்கு விரோதமாக முற்றிக்கையிட்டான். எருசலேமில் இருக்கிற ஜனத்தோடு சிதேக்கியா உடன்படிக்கை பண்ணினான். எருசலேமிலுள்ள

34 அதிகாரம்

ஒவ்வொருவனும் தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியையும் இனி அடிமை கொள்ளாதபடிக்கு, சுயாதீனராக அனுப்பிவிட வேண்டுமென்று சிதேக்கியா உடன்படிக்கை செய்தான்.

நேபுகாத்நேச்சாரின் சேனை யூதா தேசத்திற்கு விரோதமாக வந்தபோது, தேசத்திலிருந்த செல்வந்தர்கள் எருசலேம் பட்டணத்திற்கு ஓடி வந்துவிட்டார்கள். தங்களுடைய குடும்பத்தாரோடும், தங்களுடைய வேலைக்காரரோடும் அவர்கள் எருசலேம் பட்டணத்திற்கு வந்தார்கள். பட்டணத்தில் மோசேயின் பிரமாணம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எருசலேமிற்கு வெளியிலிருந்து வந்த செல்வந்தர்கள் மோசேயின் பிரமாணத்தைக் கடைப்பிடிக்காமல் போனார்கள். இந்தச் சூழ்நிலையில் சிதேக்கியா எருசலேமிலுள்ள எல்லா ஜனத்தாரோடும், அவர்களுடைய வேலைக்காரரைக் குறித்து உடன்படிக்கை பண்ணினான். எல்லோரும் உடன்படிக்கைக்கு உட்பட்டு, தங்கள் வேலைக்காரரைச் சுயாதீனராக அனுப்பிவிட்டார்கள்.

ஆனால் அதற்குப் பின்பு அவர்கள் மறுபடியும் சுயாதீனராக அனுப்பிவிட்டவர்களைத் தங்களுடைய வேலைக்காரராகவும், வேலைக்காரிகளாகவும் அடிமைப்படுத்திக் கொண்டார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்காகச் சிதேக்கியா எருசலேமிலுள்ள ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணினான்.

நேபுகாத்நேச்சார் எருசலேமின்மீது முதன் முறையாக முற்றிக்கை போட்டபோது, எகிப்தியர்கள் எருசலேம் நகரத்தாருக்கு ஆதரவாக யுத்தம் பண்ண வந்தார்கள். நேபுகாத்நேச்சார் எருசலேமின்மீது யுத்தம் பண்ணாமல் அவர்களை விட்டு பேர்ந்து போனான். (எரே 34:21). கல்தேயர்கள் எருசலேமைவிட்டு புறப்பட்டுச் சென்ற பின்பு, எருசலேம் நகரத்தாருக்குக் கர்த்தர்மீதுள்ள பயம் குறைந்துபோயிற்று. உடன்படிக்கையை மறந்துவிட்டார்கள். மறுபடியும் வேலைக்காரரை அடிமை கொண்டார்கள். இந்தச் சூழ்நிலையில் கர்த்தர் எரேமியாவைத் தம்முடைய செய்தியோடு அனுப்புகிறார். பேர்ந்துபோன கல்தேயர் திரும்பவும் வந்து எருசலேமை அழிப்பார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனம் கூறுகிறார்.

(3) தேவனுடைய கடிந்து கொள்ளுதல் - பதினான்கு அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 34:16 ஆனாலும் நீங்கள் மாறாட்டம்பண்ணி, என்நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, நீங்கள் அவனவன் விடுதலையாகவும் சுயாதீனராகவும் அனுப்பிவிட்ட தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியையும் திரும்ப அழைத்து வந்து, அவர்களை உங்களுக்கு வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாயிருக்கும்படி அடிமைப்படுத்தினீர்கள்.

எரே 34:17 ஆகையால் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் அவனவன் தன் சகோதரனுக்கும் அவனவன் தன் அயலானுக்கும் விடுதலையைக் கூறினவிஷயத்தில் என் சொல்லைக் கேளாமற்போனீர்களே; இதோ, நான் உங்களைப் பட்டயத்துக்கும், கொள்ளைநோய்க்கும், பஞ்சத்துக்கும் ஒப்புக்கொடுக்கிற விடுதலையை உங்களுக்குக் கூறுகிறேன்; பூமியின் ராஜ்யங்களிலெல்லாம் அலைகிறதற்கும் உங்களை ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 34:18 என் முகத்துக்குமுன் பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை மீறின மனுஷரை நான் துண்டங்களின் நடுவாகக் கடந்து போகும்படி அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப்போல் ஆக்குவேன்.

எரே 34:19 கன்றுக்குட்டியின் துண்டுகளின் நடுவே கடந்துபோன யூதாவின் பிரபுக்களையும், எருசலேமின் பிரபுக்களையும், பிரதானிகளையும், ஆசாரியர்களையும், தேசத்தின் சகல ஜனங்களையும் அப்படிச் செய்து,

எரே 34:20 நான் அவர்களை அவர்கள் சத்துருக்களின்கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவர்களுடைய பிரேதம் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.

எரேமியா - தொகுப்புரை

34 அதிகாரம்

எரே 34:21 யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும் அவனுடைய பிரபுக்களையும் அவர்கள் சத்துருக்களின் கையிலும்; அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும், உங்களை விட்டுப்போர்ந்துபோன பாபிலோன் ராஜாவினுடைய சேனைகளின் கையிலும் ஒப்புக் கொடுப்பேன்.

எரே 34:22 இதோ, நான் கட்டளை கொடுத்து, அவர்களை இந்த நகரத்துக்குத் திரும்பப்பண்ணுவேன்; அவர்கள் அதற்கு விரோதமாக யுத்தம் பண்ணி, அதைப்பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்; யூதாவின் பட்டணங்களையும், ஒருவரும் அவைகளில் குடியிராதபடிப் பாழாய்ப் போகப் பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

"விடுதலையை உங்களுக்குக் கூறுகிறேன்" - கர்த்தர் எருசலேம் ஜனத்தாரைப் பட்டயத்துக்கும், கொள்ளைநோய்க்கும், பஞ்சத்துக்கும் ஒப்புக்கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் வேலைக்காரரை அடிமை கொள்ளுகிற விஷயத்தில் கர்த்தருடைய பிரமாணத்தை முறித்துப் போட்டார்கள். இதனால் தேசத்தில் சாபம் வந்தது. எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தார் வெளியேறி வந்த நாளிலிருந்து அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையை மீறியதினால் அவர்கள்மீது சாபம் வந்துகொண்டேயிருக்கிறது. அவர்களுடைய பாவம் அதிகரித்தது. இதனால் தண்டனையும் அதிகரித்தது. அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் தேசமே இந்தப் பூமியில் இல்லாதவாறு அவர்கள் எல்லோரும் அந்நிய தேசத்தில் அடிமைகளானார்கள்.

"துண்டங்களின் நடுவாகக் கடந்து போகும்படி" - பூர்வ காலத்தில் உடன்படிக்கை பண்ணும்போது ஒரு மிருகத்தை இரண்டாகத் துண்டிப்பார்கள். அதன் பின்பு, துண்டிக்கப்பட்ட அந்தத் துண்டங்களின் நடுவாக உடன்படிக்கை பண்ணியவர்கள் கடந்துபோவார்கள். உடன்படிக்கை பண்ணியவரில் யாராவது ஒருவர் இந்த உடன்படிக்கையை மீறினால் அவரும் அந்த மிருகத்தைப் போன்று துண்டிக்கப்படுவார் என்பது இதன் பொருளாகும். கர்த்தரோடு உடன்படிக்கை செய்து, அதை மீறிய யூதா தேசத்தார் பாபிலோனியரின் கைகளில் ஒப்புக்கொடுக்கப் படுவார்கள். அவர்களுடைய பிரேதங்கள் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும். (எரே 34:19). எருசலேம் நகரம் குடியிராதபடி முற்றிலுமாகப் பாழாகும். (எரே 34:21-22).

35 அதிகாரம்

3. ரேகாபியரின் அடையாளம்

(1) ரேகாபியரின் கீழ்ப்படிதல்

எரே 35:1 யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாட்களில் எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வார்த்தை:

எரே 35:2 நீ ரேகாபியருடைய வீட்டுக்குப் போய், அவர்களோடே பேசி, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தின் அறைகளில் ஒன்றிலே அழைத்துவந்து, அவர்களுக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடு என்றார்.

எரே 35:3 அப்பொழுது நான் அபசினியாவின் குமாரனாகிய எரேமியாவுக்கு மகனான யசினியாவையும், அவனுடைய சகோதரரையும், அவனுடைய குமாரர் எல்லாரையும், ரேகாபியருடைய குடும்பத்தார் அனைவரையும் அழைத்து;

எரே 35:4 கர்த்தருடைய ஆலயத்திலே பிரபுக்களுடையஅறையின் அருகேயும், வாசலைக்காக்கிற சல்லூமின் குமாரனாகிய மாசெயாவினுடைய அறையின்மேலுமுள்ள இத்தலியாவின் குமாரனும் தேவனுடைய மனுஷனுமாகிய ஆனான் என்னும் புத்திரருடைய அறையிலே அவர்களைக் கூட்டிக் கொண்டுவந்து,

எரே 35:5 திராட்சரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும் கிண்ணங்களையும் ரேகாபியருடைய குடும்பத்தைச் சேர்ந்த புத்திரரின் முன்னே வைத்து,அவர்களை நோக்கி: திராட்சரசம் குடியுங்கள் என்றேன்.

எரே 35:6 அதற்கு அவர்கள்: நாங்கள் திராட்சரசம்குடிக்கிறதில்லை; ஏனென்றால், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப், நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு,

எரே 35:7 நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், விதையை விதையாமலும், திராட்சத்தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், உங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக என்று எங்களுக்குக் கட்டளையிட்டார்.

எரே 35:8 அப்படியே எங்களுடைய எல்லா நாட்களிலும் நாங்களும் எங்கள் ஸ்திரீகளும் எங்கள் குமாரரும் எங்கள் குமாரத்திகளும் திராட்சரசம் குடியாமலும்,

எரே 35:9 நாங்கள் குடியிருக்க வீடுகளைக் கட்டாமலும், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாபின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம்; எங்களுக்குத் திராட்சத்தோட்டமும் வயலும் விதைப்பாடுமில்லை.

எரே 35:10 நாங்கள் கூடாரங்களில் குடியிருந்து, எங்கள் தகப்பனாகிய யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்ட படியெல்லாம் கீழ்ப்படிந்து செய்து வந்தோம்.

எரே 35:11 ஆனாலும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இந்த தேசத்தில் வந்தபோது, நாம் கல்தேயருடைய இராணுவத்துக்கும் சீரியருடைய இராணுவத்துக்கும் தப்பும்படி எருசலேமுக்குப் போவோம் வாருங்கள் என்று சொன்னோம்; அப்படியே எருசலேமில் தங்கியிருக்கிறோம் என்றார்கள்.

"யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம்" - இந்த அதிகாரம் யோயாக்கீமின் நாட்களில் நடைபெறும் சம்பவத்தை விளக்குகிறது. இவன் சிதேக்கியாவிற்கு 11 வருஷங்களுக்கு முன்பு ஆட்சி புரிந்தான். (2இராஜா 23:34-37).

எரேமியாவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. ரேகாபியருடைய வீட்டுக்குப் போ.
2. அவர்களோடே பேசு.

35 அதிகாரம்

3. அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தின் அறைகளில் ஒன்றிலே அழைத்துவா.

4. அவர்களுக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடு.

இந்த வசனத்தை மேற்போக்காக வாசிக்கும்போது கர்த்தரும், எரேமியாவும் ரேகாபியருக்கு எதிராகச் சதிசெய்து, அவர்களைத் திராட்சரசம் குடிக்கப் பண்ணுவது போன்று தோன்றும். ஆனால் இந்தச் சம்பவம் அவர்களுக்கு எதிராக விரிக்கப்படும் சதியல்ல. யூதாவுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். ரேகாபியர் திராட்சரசம் குடிக்க மாட்டார்கள். இதை ஒரு உடன்படிக்கையாகச் செய்து அவர்கள் பல சந்ததியாக கடைப்பிடித்து வருகிறார்கள். யூதா தேசத்தாரும் பல சந்ததியாகத் திராட்சரசம் குடிக்காமல் இருந்தார்கள். அதன் பின்பு தங்கள் உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கி திராட்சரசம் பருக ஆரம்பித்து விட்டார்கள். ரேகாபியருக்கும், யூதா தேசத்தாருக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவதற்காக இந்தச் சம்பவம் இங்கு கூறப்பட்டிருக்கிறது. ரேகாபியர் தங்கள் பெற்றோரின் வாக்குக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். ஆனால் யூதா தேசத்தாரோ தங்களுடைய பெற்றோரின் வாக்குக்கும் கீழ்ப்படியவில்லை. கர்த்தருக்கும் கீழ்ப்படிய வில்லை. கர்த்தர் யூதா தேசத்தார் மீது மிகுந்த கிருபையோடு நன்மைகளைச் செய்து வருகிறார். அவர்கள் பாவம் செய்தபோதும் கர்த்தர் அவர்கள்மீது மனந்திரங்கி அவர்களைப் பராமரித்துப் பாதுகாத்து வருகிறார். (எரே 35:12-19).

"ரேகாபியர்" - இவர்கள் ஒபாவின் **(Hobab)** சந்ததியார். ஒபா மோசேயின் மைத்துனன். இவன் கேனியவம்சத்தைச் சேர்ந்தவன். இவர்கள் கானான் தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்குக் குடியேறி வந்தவர்கள். (எண் 10:29=நியா 1:16; நியா 4:11-17; நியா 5:24; 1சாமு 15:6). இவர்கள் புறஜாதி மார்க்கத்தாராக இருந்த போதிலும் இஸ்ரவேலின் தேவனைத் தங்கள் தேவனாக ஏற்றுக் கொண்டார்கள். யூதாவின் தென்பகுதியிலுள்ள வனாந்தரத்தில் குடியேறினார்கள். (1சாமு 27:10; 1சாமு 30:29). வனாந்தரத்தில் சஞ்சரிப்பதை இவர்கள் தெரிந்து கொண்டார்கள். யெகூவின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த யோனதாபின் அதிகாரத்திற்கு உட்பட்டார்கள். யோனதாப் கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாக இருந்தான். (2இராஜா 10:15-17) நிலங்களைப் பயிரிட்டு வந்தான். இந்தக் கோத்திரத்தார் கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாக ஜீவித்தார்கள். கர்த்தர் இவர்களைக் குறித்து மேன்மையாகப் பேசுகிறார். யூதாவிற்குப் பாடம் கற்பிப்பதற்குக் கர்த்தர் ரேகாபியரை ஓர் எடுத்துக்காட்டாகப் பயன் படுத்துகிறார். (எரே 35:16-19). யோனதாபும், அவனுடைய பிள்ளைகளும் திராட்சரசம் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், விதையை விதையாமலும், திராட்சத்தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், தங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருந்தார்கள். இதற்கான காரணங்களின் விவரம்:

1. அவர்கள் வனாந்தரத்தில் சஞ்சரிக்கும் போது நீதிநெறி வாழ்வில் சிறந்து விளங்க வேண்டுமென்று விரும்பினார்கள்.

2. தங்களுடைய சுதந்தரத்தைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றும், தங்களுடைய கோத்திரத்தின் தலைமைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டுமென்றும் விரும்பினார்கள். (எரே 35:14).

"ஆலயத்தின் அறைகளில் ஒன்றிலே" - தேவாலயத்தில் பல அறைகள் உள்ளன. அவை வெவ்வேறு ஊழியங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டு வந்தன. (எரே 35:3-4; எரே 46:10; 1இராஜா 6:5; 1நாளா 9:27).

"யசினியாவையும்..........ரேகாபியருடைய குடும்பத்தார் அனைவரையும் அழைத்து" - யசினியா எரேமியாவின் குமாரன். இந்த எரேமியாவும், தீர்க்கதரிசியாகிய எரேமியாவும் வெவ்வேறான நபர்கள். எரேமியா தீர்க்கதரிசி எல்லோரையும் அழைத்துக் கொண்டு, தேவாலயத்திலுள்ள ஓர் அறைக்கு வருகிறார். அங்கு திராட்சரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும் கிண்ணங்களையும் ரேகாபியருடைய குடும்பத்தைச் சேர்ந்த புத்திரரின் முன்னே வைத்து, அவர்களை

35 அதிகாரம்

நோக்கி திராட்சரசம் குடியுங்கள் என்று எரேமியா கூறுகிறார். (எரே35:3-5). ஆனால் அவர்களோ நாங்கள் திராட்சரசம் குடிக்கிறதில்லை என்று கூறி திராட்சரசம் குடிக்க மறுத்து விடுகிறார்கள். அதற்கான காரணத்தையும் எரேமியா தீர்க்கதரிசியிடம் விளக்கிக் கூறுகிறார்கள். (எரே 35:6-11). இதன் பின்பு எரேமியா இந்தச் சம்பவத்தை யூதாவிற்குப் பொருந்துமாறு விளக்கிக் கூறுகிறார். (எரே 35:12-19).

"யசினியா" **(Jaazaniah)** - இந்தப் பெயருக்குக் "கர்த்தர் கேட்கிறார்" **"Jehovah hears"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "யசினியா"க்கள்

1. ரேகாபியரின் தலைவன் - இவன் பாபிலோனின் சேனைக்குப் பயந்து ரேகாபியரை எருசலேமிற்கு அழைத்து வந்தான். (எரே 35:11)

2. மாகாத்தியனின் குமாரன் - இவன் யூதருடைய படைத்தவன். கெதலியாவோடு நேசமாக ஒப்பந்தம் செய்து கொண்டான். (2இராஜா 25:23). மறுபெயர் யெசனியா **Jezaniah** (எரே 40:8)

3. சாப்பானின் குமாரன். (எசே 8:11)

4. ஆசூரின் குமாரன். (எசே 11:1)

"சல்லூமின் குமாரனாகிய மாசெயாவினுடைய அறை" - இக்காலத்தில் மாசெயா உதவி பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்கிறான். (எரே 35:4; எரே 21:1; எரே 29:25; எரே 37:3; எரே 52:24; 2இராஜா 25:18). இங்கு கூறப்பட்டிருக்கும் அறை மாசெயாவினுடைய அறையாகும். ஆசாரியர்கள் தங்களுடைய தேவாலயத்து ஊழியங்களை நிறைவேற்றுவதற்காகத் தேவாலயத்தில் அவர்களுக்குத் தனித்தனியாக அறைகள் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த வசனத்தில் மூன்று அறைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஒன்று ஆனான் என்னும் புத்திரருடைய அறை. (2நாளா 16:7). ஆனானியர் எரேமியாவோடு நட்பாகப் பழகினார்கள். ஆகையினால் ரேகாபியரைச் சோதித்துப் பார்ப்பதற்கு அவர்கள் தங்கள் அறையை எரேமியாவிற்குக் கொடுத்தார்கள். (எரே 35:4-11).

ரேகாபியரின் பிரதியுத்தரம்

1. நாங்கள் திராட்சரசம்குடிக்கிறதில்லை (எரே 35:6).

2. என்றைக்கும் திராட்சரசம் குடிக்கக் கூடாது என்று எங்களுடைய தகப்பன் யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறான்.

3. நாங்கள் வீட்டைக் கட்டமாட்டோம். (எரே 35:7).

4. நாங்கள் விதையை விதைக்க மாட்டோம்.

5. நாங்கள் திராட்சத்தோட்டத்தை நாட்டமாட்டோம்.

6. நாங்கள் திராட்சத்தோட்டத்தைக் கையாளமாட்டோம்.

7. நாங்கள் எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்போம்.

8. எங்களுடைய தகப்பன் யோனதாபின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் (எரே 35:8-9).

9. கல்தேயருடைய இராணுவத்துக்கும் சீரியருடைய இராணுவத்துக்கும் தப்பும்படி எருசலேமில் தங்கியிருக்கிறோம். (எரே 35:11).

(2) யூதாவிற்கு பொருந்தும் - (ஏசா 5:7)

எரே 35:12 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 35:13 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீ போய், யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் நோக்கி: நீங்கள் என் வார்த்தைகளைக் கேட்டு, புத்தியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

35 அதிகாரம்

எரே 35:14 திராட்சரசம் குடியாதபடிக்கு, ரேகாபின் குமாரனாகிய யோனதாப் தன் புத்திரருக்குக் கட்டளையிட்ட வார்த்தைகள் கைக்கொள்ளப்பட்டு வருகிறது; அவர்கள் இந்நாள்மட்டும் அதைக்குடியாமல், தங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள்; ஆனாலும் நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிக் கொண்டேயிருந்தும், எனக்குக் கீழ்ப்படியாமற்போனீர்கள்.

எரே 35:15 நீங்கள் அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்களைப் பின்பற்றாமல், அவனவன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி, உங்கள் நடக்கைகளைச் சீர்திருத்துங்கள், அப்பொழுது உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்ததேசத்திலே குடியிருப்பீர்கள் என்று சொல்லி, தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக் காரரையெல்லாம் நான் உங்களிடத்துக்கு ஏற்கனவே அனுப்பிக்கொண்டிருந்தும், நீங்கள் உங்கள் செவியைச் சாயாமலும் எனக்குக் கீழ்ப்படியாமலும் போனீர்கள்.

"அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி" - ரேகாபியர் தங்கள் முன்னோர் மூலமாகத் தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கட்டளைகளை எரேமியாவிடம் எடுத்துக் கூறுகிறார்கள். அதன் பின்பு எரேமியா இந்தச் செய்தியை யூதா புத்திரரிடம் கூறுகிறார். (எரே 35:13) ரேகாபியர் தங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். ஆனால் யூதா புத்திரரோ கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளின் மூலமாகச் சொல்லிக் கொண்டேயிருந்தும் அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள். (எரே 35:14-15).

"அவனவன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி" - யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு வரப்போகிறது. அவர்களுடைய தேசம் அழியப் போகிறது. இந்த அழிவிலிருந்து யூதா தேசத்தார் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் தங்களுடைய பொல்லாத வழியை விட்டுத்திரும்பி தங்களுடைய நடக்கையைச் சீர்திருத்தி, கர்த்தரிடத்திற்குத் திரும்பி வரவேண்டும். அவர்கள் உண்மையாகவே தங்கள் இருதயத்தில் மனந்திரும்பினால் கர்த்தர் அவர்களுக்கு இரக்கம் காண்பிப்பார்.

நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்குச் செய்ய வேண்டிய காரியங்கள்

1. அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்களைப் பின்பற்றக்கூடாது.
2. அவனவன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பவேண்டும்.
3. தங்களுடைய நடக்கையைச் சீர்திருத்த வேண்டும்.

யூதா செய்யாத காரியங்கள்

1. தங்கள் செவியைக் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்குச் சாய்க்கவில்லை. (எரே 35:15,17)
2. கர்த்தருக்குக் கீழ்ப்படியவில்லை.

(3) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு

எரே 35:16 இப்போதும், ரேகாபின் குமாரனாகிய யோனதாபின் புத்திரர் தங்கள் தகப்பன் தங்களுக்குக் கட்டளையிட்ட கற்பனையைக் கைக் கொண்டிருக்கும் போது, இந்த ஜனங்கள் எனக்குக் கீழ்ப்படியாமற்போன படியினாலும்,

எரே 35:17 இதோ, நான் அவர்களிடத்தில் பேசியும் அவர்கள் கேளாமலும், நான் அவர்களை நோக்கிக் கூப்பிட்டும் அவர்கள் மறுஉத்தரவு கொடாமலும் போனபடியினாலும், யூதாவின் மேலும் எருசலேமின் குடிகள் எல்லாரின் மேலும் நான் அவர்களுக்கு விரோதமாகச் சொன்ன எல்லாத்தீங்கையும் வரப் பண்ணுவேன் என்று இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 69

"இப்போதும், ரேகாபின் குமாரனாகிய யோனதாபின் புத்திரர்......." (எரே 35:16-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

எரேமியா – தொகுப்புரை

35 அதிகாரம்

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதாவின் மேலும் எருசலேமின் குடிகள் எல்லாரின் மேலும் நான் அவர்களுக்கு விரோதமாகச் சொன்ன எல்லாத் தீங்கையும் வரப்பண்ணுவேன் (எரே 35:17).

2. சகல நாட்களிலும் எனக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷன் ரேகாபின் குமாரனாகிய யோனதாபுக்கு இல்லாமற் போவதில்லை. (எரே 35:19).

"நான் அவர்களிடத்தில் பேசியும் அவர்கள் கேளாமலும்" - எரே 35:15 ஆவது வசனத்திலுள்ள செய்தி இங்கு மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தையைக் கேளாமலும், அவருக்கு மறுஉத்தரவு கொடாமலும் போனார்கள். (எரே 35:15).

(4) ரேகாபிய உடன்படிக்கை

எரே 35:18 பின்னும் எரேமியா ரேகாபியருடைய குடும்பத்தாரை நோக்கி: நீங்கள் உங்கள் தகப்பனாகிய யோனதாபின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவனுடைய கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு, அவன் உங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து வந்தீர்களென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 35:19 ஆதலால் சகல நாட்களிலும் எனக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷன் ரேகாபின் குமாரனாகிய யோனதாபுக்கு இல்லாமற்போவதில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

"நீங்கள் உங்கள் தகப்பனாகிய யோனதாபின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து" - ரேகாபியரின் குடும்பத்தார் தங்களுடைய தகப்பனாகிய யோனதாபின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். (எரே 35:18-19). இப்போது அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் இதற்குப் பின்பு கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யாமல், யூதாவைப் போல தங்களைத் தீட்டுப்படுத்தாமல் இருந்திருந்தால், அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின்படி ஜீவிப்பார்கள். (எரே 35:18-19).

36 அதிகாரம்

4. யோயாக்கீமுக்கு எரேமியாவின் புஸ்தகம் - (29:1; 30:2)

(1) நியாயத்தீர்ப்புகளின் புஸ்தகம் எழுதப்பட்டது

எரே 36:1 யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம்என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலேகர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை என்னவென்றால்:

எரே 36:2 நீ ஒரு புஸ்தகச்சுருளை எடுத்து, யோசியாவின் நாட்களிலே நான் உன்னுடனே பேசின நாள் முதற்கொண்டு இந்நாள்மட்டும் இஸ்ரவேலைக் குறித்தும், யூதாவைக்குறித்தும், சகல ஜாதிகளைக் குறித்தும் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுது.

எரே 36:3 யூதாவின் குடும்பத்தார், அவரவர் தங்கள்பொல்லாத வழியை விட்டுத் திரும்பும்படியாகவும், தங்கள் அக்கிரமத்தையும் தங்கள் பாவத்தையும் நான் மன்னிக்கும்படியாகவும், தங்களுக்கு நான் செய்ய நினைத்திருக்கிற தீங்குகளைக் குறித்து ஒருவேளை அவர்கள் கேட்பார்கள் என்றார்.

எரே 36:4 அப்பொழுது எரேமியா நேரியாவின் குமாரனாகிய பாருக்கை அழைத்தான்; பாருக்கு என்பவன் கர்த்தர் எரேமியாவுடனே சொல்லி வந்த எல்லா வார்த்தைகளையும் அவன் வாய் சொல்ல ஒரு புஸ்தகச்சுருளில் எழுதினான்.

"யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே" - எரே 36-44 ஆகிய அதிகாரங்களில் எரேமியாவின் முன்னறிவிப்புக்களோடு தொடர்புடைய வரலாற்று நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. எரே 36 ஆவது அதிகாரத்தில் எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்பும், பின்பும் எரேமியாவின் வாழ்வில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

யோயாக்கீமின் நாலாம் வருஷம் என்பது எருசலேம் அழிவதற்கு 18 வருஷங்களுக்கு முந்திய காலமாகும். எரே 32-34 ஆவது அதிகாரத்தின் காலம் சிதேக்கியா ராஜாவின் பத்தாவது வருஷ ஆட்சிக் காலமாகும். இது எருசலேம் நகரம் வீழ்வதற்கு ஒரு வருஷத்திற்கு முந்திய காலம். (எரே 32:1). எரே 35 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்களும், யோயாக்கீமின் நாட்களில் நடைபெற்றன. எரே 36 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவமும், இதே காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். எருசலேம் நகரத்தின்மீது பாபிலோன் ராஜா யுத்தம் பண்ண வந்து, அதைப் பிடிப்பான் என்னும் செய்தியை யோயாக்கீமால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மிகுந்த கோபமுற்றான். (எரே 36:29) எரேமியா தன்னுடைய முன்னறிவிப்புக்களை ஒரு சுருளில் எழுதி அதை ராஜாவிடம் அனுப்பினான். பாபிலோனுக்குப் பணிந்து போகுமாறு யோயாக்கீமிற்குக் கூறப்பட்டது. ஆனால் யோயாக்கீமோ கர்த்தருடைய செய்தியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். அந்தச் சுருளைத் தீயில் வெட்டி எறிந்துவிட்டான். மறுபடியுமாக முதல் சுருளைவிட பெரிய சுருளை எரேமியா யோயாக்கீமிற்கு அனுப்புகிறாா். (எரே 36:4,10-32).

"ஒரு புஸ்தகச்சுருள்" - அக்காலத்தில் விலங்குகளின் தோல்களைக் காயவைத்து, அவற்றைத் தைத்து, அதை ஒரு சுருளாக்கி, அதில் எழுதுவது வழக்கம். சுருளின் ஒவ்வொரு முனையிலும் அதைச் சுருட்டுவதற்கு வசதியாக மரத்தினால் செய்யப்பட்ட கைப்பிடி ஒன்றும் இருக்கும்.

எரேமியா - தொகுப்புரை

36 அதிகாரம்

"யோசியாவின் நாட்களிலே நான் உன்னுடனே பேசின நாள் முதற்கொண்டு" - இது சுமார் 22 வருஷங்களாகக் கூறப்பட்ட முன்னறிவிப்புக்களைக் குறிக்கும். யோசியாவின் 13 ஆம் வருஷத்திலிருந்து யோயாக்கீமின் 4 ஆம் வருஷம் வரையிலும் உள்ள இடைப்பட்ட காலம் சுமார் 22 வருஷங்களாகும். (எரே 36:1; எரே 1:1).

"இந்நாள்மட்டும் இஸ்ரவேலைக்குறித்தும், யூதாவைக்குறித்தும், சகல ஜாதிகளைக் குறித்தும்" - பாபிலோனைக் குறித்து இஸ்ரவேலுக்கும், யூதாவுக்கும், சகல ஜாதிகளுக்கும் கூறப்பட்டுள்ள முன்னறிவிப்புக்கள்.

"அவரவர் தங்கள்பொல்லாத வழியைவிட்டுத் திரும்பும்படியாகவும்" - கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்க வேண்டுமென்றால் அவர்கள் கர்த்தரிடம் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும். தங்களுடைய பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்ப வேண்டும். (எரே 36:4). இதுவே மெய்யான மனந்திரும்புதல். (2கொரி 10:7; 1யோவான் 1:9).

"தங்களுக்கு நான் செய்ய நினைத்திருக்கிற தீங்குகளைக் குறித்து ஒருவேளை அவர்கள் கேட்பார்கள்" - யூதா கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. புஸ்தகச்சுருளை யோயாக்கீம் ராஜா அக்கினியிலே எரித்துவிட்டான். (எரே 36:20-26). இந்தச் சூழ்நிலையில் கர்த்தர் அவர்கள்மீது தமது நியாயத்தீர்ப்பை அனுப்புவதற்குச் சித்தம் கொள்கிறார்.

"பாருக்கு" **(Baruch)** - இவன் எரேமியாவின் சம்பிரதி. எரேமியா தன் வாயினால் சொல்லும் செய்திகளைப் பாருக்கு புஸ்தகச் சுருளில் எழுதினான்.

(2) நியாயத்தீர்ப்புகளின் புஸ்தகம் யூதாவிற்கு வாசிக்கப்பட்டது (36:5-10)

எரே 36:5 பின்பு எரேமியா பாருக்கை நோக்கி: நான் அடைக்கப்பட்டவன்; நான் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது.

எரே 36:6 நீ உள்ளே பிரவேசித்து, என் வாய் சொல்ல நீ எழுதின சுருளிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளைக் கர்த்தருடைய ஆலயத்தில் உபவாச நாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்க வாசிப்பதுமன்றி, தங்கள் பட்டணங்களிலிருந்துவருகிற எல்லா யூதா கோத்திரத்தாரும் கேட்கும்படி அவைகளை வாசிப்பாயாக.

எரே 36:7 ஒருவேளை அவர்கள் கர்த்தருடைய முகத்துக்கு முன்பாகப் பணிந்து விண்ணப்பம்பண்ணி, அவரவர் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள்; கர்த்தர்இந்தஜனத்துக்கு விரோதமாகக் கூறியிருக்கிற கோபமும் உக்கிரமும் பெரியது என்று சொன்னான்.

எரே 36:8 அப்படியே நேரியாவின் குமாரனாகிய பாருக்கு அந்தப் புஸ்தகத்தில், கர்த்தருடைய ஆலயத்தில் கர்த்தருடைய வார்த்தைகளை வாசிக்கும் படி எரேமியா தீர்க்கதரிசி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்.

எரே36:9 யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் ஐந்தாம் வருஷத்து ஒன்பதாம் மாதத்திலே, எருசலேமிலிருக்கிற எல்லா ஜனத்துக்கும், யூதாவின் பட்டணங்களிலிருந்து எருசலேமுக்கு வருகிறஎல்லாஜனத்துக்கும்,கர்த்தருக்கு முன்பாக உபவாசம் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டது.

எரே 36:10 அப்பொழுது பாருக்கு கர்த்தருடைய ஆலயத்தின் மேற்பிராகாரத்தில், கர்த்தருடைய ஆலயத்து வாசலின் நடைக்கு அருகானசாப்பானுடைய குமாரனாகிய கெமரியா என்னும் சம்பிரதியின் அறையிலே, அந்தப் புஸ்தகத்திலுள்ள எரேமியாவின் வார்த்தைகளை ஜனங்கள் எல்லாரும் கேட்க வாசித்தான்.

36 அதிகாரம்

"நான் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது" - எரேமியா காவல்சாலையின் முற்றத்திலே அடைக்கப் பட்டிருக்கிறான். (எரே 33:1) ஆகையினால் அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது. ஆலயத்தில் உபவாசம் நடைபெறும் நாளின்போது எரேமியா பாருக்கை புஸ்தகச்சுருளோடு அங்கு அனுப்புகிறார். (எரே 36:6). ஆலயத்தில் குடியிருக்கும் ஜனங்களுக்கு அந்த உபவாச நாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்க பாருக்கு புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருக்கும் செய்திகளை வாசிக்க வேண்டும்.

"ஒருவேளை அவர்கள் கர்த்தருடைய முகத்துக்கு முன்பாகப் பணிந்து விண்ணப்பம் பண்ணி" - எரேமியா நல்ல நோக்கத்தோடு புஸ்தகச்சுருளைத் தேவாலயத்தில் வாசிப்பதற்கு ஆவன செய்கிறார். ஜனங்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்டு கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணுவார்கள் என்று எரேமியா நினைத்தார். அவர்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பும்போது கர்த்தருடைய கோபம் தணியும் என்று எரேமியா எதிர்பார்த்தார். கர்த்தர் இந்த ஜனத்துக்கு விரோதமாகக் கூறியிருக்கிற கோபமும் உக்கிரமும் பெரியதாயிருக்கிறது.

"அப்படியே நேரியாவின் குமாரனாகிய பாருக்கு" - பாருக்கு எரேமியாவிற்குக் கீழ்ப்படிந்து, தேவாலயத்திற்குச் சென்று, அங்கு புஸ்தகச் சுருளிலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளை ஜனங்களுக்கு முன்பாக வாசிக்கிறான். ஐந்தாம் வருஷத்து ஒன்பதாம் மாதத்திலே, எருசலேமிலிருக்கிற எல்லா ஜனங்களும், யூதாவின் பட்டணங்களிலிருந்த எல்லா ஜனங்களும், தேவாலயத்திற்குக் கர்த்தரை ஆராதிக்க வருவார்கள். அந்தச் சமயத்தில் பாருக்குப் புஸ்தகச்சுருளை வாசிக்கிறான். (எரே 36:8-10). புஸ்தகச்சுருள் நாலாம் வருஷத்தில் எழுத ஆரம்பிக்கப்பட்டது. இதை எழுதி முடிப்பதற்கு ஒரு வருஷமாயிற்று. எல்லா தீர்க்கதரிசனங்களையும் சேகரித்து, இந்தப் புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டிருக்கிறது. (எரே 36:1,9).

"கெமரியா" (Gemariah) - இவன் அகீக்காமின் சகோதரன். (எரே 26:24) இவனும், எரே 29:3 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கெமரியாவும் வெவ்வேறு நபர்கள். இவன் இல்க்கியாவின் குமாரன்.

"சாப்பான் என்னும் சம்பிரதி" - யோசியாவின் நாளில் சம்பிரதியாக இருந்தவன். (2இராஜா 22:3-12). இக்காலத்தில் எலிசாமா என்பவனும் சம்பிரதியாக இருந்திருக்கிறான். (எரே 36:12,20-21) ஒரே காலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சம்பிரதிகளாக இருந்திருக்கிறார்கள்.

(3) மிகாயாவின்மீது ஏற்பட்ட விளைவு

எரே 36:11 சாப்பானுடைய குமாரனாகிய கெமரியாவின் மகன் மிகாயா அந்தப் புஸ்தகத்திலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் வாசிக்கக் கேட்டபோது,

எரே 36:12 அவன் ராஜாவின் அரமனைக்குப் போய், சம்பிரதியின் அறையில் பிரவேசித்தான்; இதோ, அங்கே எல்லாப்பிரபுக்களும் சம்பிரதியாகிய எலிசாமாவும் செமாயாவின் குமாரனாகிய தெலாயாவும், அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானும், சாப்பானின் குமாரனாகிய கெமரியாவும், அனனியாவின் குமாரனாகிய சிதேக்கியாவும், மற்ற எல்லாப் பிரபுக்களும் உட்கார்ந்தார்கள்.

எரே 36:13 பாருக்கு ஜனத்தின் செவிகள் கேட்கப் புஸ்தகத்திலுள்ள வைகளை வாசிக்கையில், தான் கேட்ட எல்லா வார்த்தைகளையும் மிகாயா அவர்களுக்குத் தெரிவித்தான்.

"கெமரியாவின் மகன் மிகாயா" - மிகாயா பாருக்கு வாசித்த எல்லா வார்த்தைகளையும் கேட்டான். ஜனங்கள் அந்த வார்த்தைகளை யெல்லாம் கேட்ட விதத்தையும் கவனித்தான். உடனடியாக ராஜாவின் அரமனைக்குச் சென்று அங்கு கூடியிருந்த பிரபுக்களிடம் பாருக்கு வாசித்த தீர்க்கதரிசன வார்த்தைகளையெல்லாம் அறிவித்தான். (எரே 36:11-13).

எரேமியா - தொகுப்புரை

36 அதிகாரம்

(4) பிரபுக்களின்மீது ஏற்பட்ட விளைவு

எரே 36:14 அப்பொழுது எல்லாப் பிரபுக்களும் கூஷியின் குமாரனாகிய செலேமியாவின் மகனான நெத்தானியாவினுடைய குமாரனாயிருக்கிற யெகுதியைப் பாருக்கினிடத்தில் அனுப்பி, ஜனங்கள் கேட்க நீ வாசித்துக்கொண்டிருந்த சுருளை உன் கையில் எடுத்துக்கொண்டு வா என்று சொல்லச் சொன்னார்கள்; ஆகையால், நேரியாவின் குமாரனாகிய பாருக்கு சுருளைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, அவர்களிடத்துக்கு வந்தான்.

எரே 36:15 அவர்கள் அவனை நோக்கி: நீ உட்கார்ந்துகொண்டு, நாங்கள் கேட்கவாசி யென்றார்கள்; அவர்கள் கேட்க வாசித்தான்.

எரே 36:16 அப்பொழுது அவர்கள் எல்லா வார்த்தைகளையும் கேட்கையில் பயமுற்றவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து, பாருக்கை நோக்கி: இந்த எல்லா வார்த்தைகளையும் ராஜாவுக்கு நிச்சயமாய் அறிவிப்போம் என்றார்கள்.

எரே 36:17 அவன் வாய் சொல்ல, நீ இந்த வார்த்தைகளையெல்லாம் எவ்விதமாய் எழுதினாய். அதை எங்களுக்குச் சொல் என்று பாருக்கைக் கேட்டார்கள்.

எரே 36:18 அதற்குப் பாருக்கு: அவர் தமது வாயினால் இந்த எல்லா வார்த்தைகளையும் உரைத்து, என்னுடனே சொன்னார், நான் மையினால் புஸ்தகத்தில் எழுதினேன் என்றான்.

எரே 36:19 அப்பொழுது பிரபுக்கள் பாருக்கை நோக்கி: நீயும் எரேமியாவும் போய் ஒளித்துக்கொள்ளுங்கள்; நீங்கள் இருக்கும் இடத்தை ஒருவரும் அறியப்படாது என்று சொல்லி,

"அப்பொழுது எல்லாப் பிரபுக்களும்" - பிரபுக்கள் ஒரு செய்தியாளரை அனுப்பி, பாருக்கைத் தங்களிடத்தில் வருமாறு அழைத்தார்கள். தங்களிடம் புஸ்தகச் சுருளை வாசிக்குமாறு கூறுகிறார்கள். பாருக்கும், அவர்கள் சொற்படியே பிரபுக்கள் மத்தியில் வந்து, அவர்கள் கேட்க புஸ்தகச்சுருளை வாசித்தான். (எரே 36:12-15). பிரபுக்கள் அந்த வார்த்தைகளைக் கேட்டபோது, இந்த வார்த்தைகளெல்லாம் எவ்விதமாய் எழுதினாய். அதை எங்களுக்குச் சொல் என்று பாருக்கைக் கேட்டார்கள். எரேமியா தனது வாயினால் உரைத்த எல்லா வார்த்தைகளையும் தான் மையினால் எழுதியதாக பாருக்கு அவர்களுக்குக் கூறுகிறான். பிரபுக்கள் பாருக்கையும், எரேமியாவையும் யாரும் அறியப்படாத ஒரிடத்தில் தங்களை ஒளித்துக் கொள்ளுமாறு கூறுகிறார்கள். (எரே 36:14-19) ஆனால் எரேமியாவோ காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார். அவரால் எங்கும் தப்பித்துப் போகமுடியாது. எங்கும் ஓடி ஒளிந்து கொள்ளவும் முடியாது.

"அவர் தமது வாயினால் இந்த எல்லா வார்த்தைகளையும் உரைத்து" - 22 வருஷங்களாக எரேமியா தன்னுடைய வாயினால் கூறிய தீர்க்கதரிசன வார்த்தைகளையெல்லாம் பாருக்கிடம் மறுபடியும் கூறுகிறார். அத்துடன் மேலும் புதியதீர்க்கதரிசனங்களும், சேர்க்கப்படுகிறது. (எரே 36:2)

(5) யோயாக்கீமின்மீது ஏற்பட்ட விளைவு - புஸ்தகம் அழிக்கப்பட்டது

எரே 36:20 சுருளைச் சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலே வைத்து, ராஜாவினிடத்துக்கு அரமனையிலே போய், ராஜாவின் செவிகளுக்கு இந்த வார்த்தை களையெல்லாம் அறிவித்தார்கள்.

எரே 36:21 அப்பொழுது ராஜா அந்தச்சுருளை எடுத்துக்கொண்டுவர யெகுதியை அனுப்பினான்; யெகுதி அதைச் சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலிருந்து எடுத்துக் கொண்டுவந்து, ராஜா கேட்கவும், ராஜாவினிடத்தில் நின்ற எல்லாப் பிரபுக்களும் கேட்கவும் வாசித்தான்.

36 அதிகாரம்

எரே 36:22 ஒன்பதாம் மாதத்திலே ராஜா, குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டில் உட்கார்ந்திருந்தான்; அவனுக்கு முன்பாக கணப்பு மூட்டியிருந்தது.

எரே 36:23 யெகுதி மூன்று நாலு பத்திகளை வாசித்த பின்பு, ராஜா ஒரு சூரிக்கத்தியினால் அதை அறுத்து, சுருளனைத்தும் கணப்பிலுள்ள அக்கினியிலே வெந்துபோகும்படி, கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்து போட்டான்.

எரே 36:24 ராஜாவாயினும், அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியக் காரராயினும் பயப்படவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளவுமில்லை.

எரே 36:25 எல்நாத்தானும், தெலாயாவும், கெமரியாவுமோ: அந்தச் சுருளைச் சுட்டெரிக்கவேண்டாம் என்று ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணினார்கள்; ஆனாலும், அவர்களுக்கு அவன் செவி கொடாமல்,

எரே 36:26 பாருக்கு என்னும் சம்பிரதியையும் எரேமியா தீர்க்க தரிசியையும் பிடிக்கும்படிக்கு, ராஜா அம்மெலேகின் குமாரனாகிய யெரமெயேலுக்கும், அஸ்ரியேலின் குமாரனாகிய செராயாவுக்கும், அப்தெயேலின் குமாரனாகிய செலேமியாவுக்கும் கட்டளை கொடுத்தான்; ஆனாலும் கர்த்தர் அவர்களை மறைத்தார்.

"ராஜாவின் செவிகளுக்கு இந்த வார்த்தைகளையெல்லாம் அறிவித்தார்கள்" - பாருக்கு எரேமியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பிரபுக்களிடம் வாசிக்கிறான். அதன் பின்பு பிரபுக்கள் அரமனைக்குச் சென்று, யோயாக்கீம் ராஜாவினிடத்தில் இந்த வார்த்தை களையெல்லாம் கூறுகிறார்கள்.

புஸ்தகச்சுருள் பாருக்கிடம் இருக்கிறது. யோயாக்கீம் அந்தப் புஸ்தகச்சுருளை எடுத்துக் கொண்டு வருவதற்கு யெகுதி என்பவனை அனுப்பினான். அவன் அந்தப் புஸ்தகச்சுருளை எடுத்து வந்து, ராஜாவுக்கும், பிரபுக்களுக்கும் முன்பாக வாசித்தான். (எரே 36:21). புஸ்தகச்சுருள் வாசிக்கப்படும் போது ராஜா குளிர்காலத்திற்குத் தங்கும் வீட்டில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு முன்பாக கணப்பு மூட்டிருந்தது. யெகுதி மூன்று நாலு பத்திகளை வாசித்த பின்பு, ராஜா ஒரு சூரிக்கத்தியினால் அதை அறுத்து, சுருளனைத்தும் கணப்பிலுள்ள அக்கினியிலே வெந்துபோகும்படி, கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்துபோட்டான். புஸ்தகச்சுருள் முழுவதுமாக எறிந்துபோயிற்று. (எரே 36:22-23). ராஜாவும், அவனுடைய பிரபுக்களும் கடின இருதயமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கவில்லை.

"எல்நாத்தானும், தெலாயாவும், கெமரியாவுமோ" - இந்த மூவரும் அந்தச் சுருளைச் சுட்டெரிக்கவேண்டாம் என்று ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணினார்கள். ஆனால் பிரயோஜனமொன்றும் ஏற்படவில்லை. ராஜா புஸ்தகச்சுருளைச் சுட்டெரித்துவிட்டான். ராஜாவின் கோபம் அத்துடன் அடங்கவில்லை.பாருக்கையும்,எரேமியாவையும் பிடிக்கும்படி ராஜா கட்டளையிடுகிறான். ஆனாலும் கர்த்தர் அவர்களை மறைத்தார். (எரே 36:26).

(6) அதிக நியாயத்தீர்ப்புக்களோடு புஸ்தகம் மறுபடியும் எழுதப்பட்டது - யோயாக்கீம் தண்டிக்கப்பட்டான்

எரே 36:27 ராஜா அந்தச் சுருளையும், அதிலே எரேமியாவின் வாய்சொல்லப் பாருக்கு எழுதியிருந்த வார்த்தைகளையும் சுட்டெரித்த பின்பு, எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 36:28 நீ திரும்ப வேறொரு சுருளை எடுத்து, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் சுட்டெரித்த முதலாம் சுருளிலிருந்த முந்தின வார்த்தைகளையெல்லாம் அதிலே எழுது என்றார்.

எரேமியா - தொகுப்புரை

36 அதிகாரம்

எரே 36:29 மேலும் நீ யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமை நோக்கி: பாபிலோன் ராஜா நிச்சயமாய் வருவான் என்பதையும், அவன் இந்த தேசத்தை அழித்து இதிலிருந்து மனுஷரையும் மிருகங்களையும் ஒழியப்பண்ணுவான் என்பதையும் நீ அதில் எழுதினதேதென்று சொல்லி, அந்தச் சுருளை நீ சுட்டெரித்தாயே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 36:30 ஆகையால் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமைக்குறித்து: தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்; அவனுடைய பிரேதமோ வென்றால், பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்து விடப்பட்டுக் கிடக்கும்.

எரே 36:31 நான் அவனிடத்திலும், அவன் சந்ததியினிடத்திலும், அவன் பிரபுக்களினிடத்திலும் அவர்கள் அக்கிரமத்தை விசாரித்து, அவன்மேலும் எருசலேமின் குடிகள்மேலும், யூதா மனுஷர்மேலும், நான் அவர்களுக்குச் சொன்னதும், அவர்கள் கேளாமற் போனதுமான தீங்களைத்தையும் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

எரே 36:32 அப்பொழுது எரேமியா வேறொரு சுருளை எடுத்து, அதை நேரியாவின் குமாரனாகிய பாருக்கு என்னும் சம்பிரதியினிடத்தில் கொடுத்தான்; அவன் யூதாவின் ராஜாவாகியயோயாக்கீம் அக்கினியால் சுட்டெரித்த புஸ்தகத்தின் வார்த்தைகளை யெல்லாம், அதிலே எரேமியாவின் வாய் சொல்ல எழுதினான்; இன்னும் அவைகளுக்கொத்த அநேகம் வார்த்தைகளும் அவைகளோடே சேர்க்கப்பட்டது.

"எரேமியாவின் வாய்சொல்லப் பாருக்கு எழுதியிருந்த வார்த்தைகளையும் சுட்டெரித்த பின்பு" - யோயாக்கீம் தீர்க்கதரிசன வார்த்தைகள் எழுதப்பட்டிருந்த புஸ்தகச்சுருளைச் சுட்டெரித்து விட்டான். அதன் பின்பு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவிற்கு மறுபடியும் உண்டாயிற்று. மறுபடியும் புஸ்தகச் சுருள் எழுதப்படுகிறது. அதில் யோயாக்கீமின்மீது நியாயத்தீர்ப்புக்கு மேல் நியாயத்தீர்ப்பாகச் சேர்க்கப்பட்டு எழுதப்படுகிறது. (எரே 36:27-32).

தீர்க்கதரிசன எண் - 70

"எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி......" (எரே 36:27-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. பாபிலோன் ராஜா நிச்சயமாய் வருவான். அவன் இந்த தேசத்தை அழித்து இதிலிருந்து மனுஷரையும் மிருகங்களையும் ஒழியப் பண்ணுவான். (எரே 36:29).

2. தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான் (எரே 36:30).

3. அவனுடைய பிரேதமொவென்றால், பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்து விடப்பட்டுக்கிடக்கும். (எரே 36:30; எரே 22:18).

4. நான் அவனிடத்திலும், அவன் சந்ததியினிடத்திலும், அவன் பிரபுக்களினிடத்திலும் அவர்கள் அக்கிரமத்தை விசாரிப்பேன். (எரே 36:31).

5. அவன்மேலும் எருசலேமின் குடிகள்மேலும், யூதா மனுஷர்மேலும், நான் அவர்களுக்குச் சொன்னதும், அவர்கள் கேளாமற்போனதுமான தீங்களைத்தையும் வரப்பண்ணுவேன்.

"அப்பொழுது எரேமியா வேறொரு சுருளை எடுத்து" - யோயாக்கீம் அக்கினியில் சுட்டெரித்த புஸ்தகச்சுருளுக்குப் பதிலாக எரேமியா வேறொரு சுருளையெடுத்து அதைப் பாருக்கிடம் கொடுத்து கர்த்தருடைய வார்த்தைகளை அதில் எழுதுமாறு கூறுகிறார். இந்தச் சுருளில் ஏற்கெனவே எழுதப்பட்ட வார்த்தைகளும், இன்னும் அவைகளுக்கொத்த அநேகம் வார்த்தைகளும் அவைகளோடே சேர்க்கப்பட்டது.

37 அதிகாரம்

5. சிதேக்கியாவின் ஆட்சி

(1) ஆட்சிக்கு வருவதும் சுபாவமும்

எரே 37:1 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் யூதாதேசத்தில் ராஜாவாக நியமித்த யோயாக்கீமுடைய குமாரனாகிய கோனியாவின் பட்டத்துக்கு யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா வந்து அரசாண்டான்.

எரே 37:2 கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைக்கொண்டு சொன்ன வார்த்தைகளுக்கு அவனாகிலும், அவனுடைய ஊழியக்காரராகிலும், தேசத்தின் ஜனங்களாகிலும் செவிகொடுக்கவில்லை.

"கோனியா" (Coniah) - இவன் யோயாக்கீமின் குமாரன். மறுபெயர் எகோனியா, யோயாக்கீன். இவன் எருசலேமில் மூன்று மாதங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தான். அதன் பின்பு பாபிலோன் தேசத்திற்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டான். கோனியாவிற்குப் பின்பு அவனுடைய ஸ்தானத்தில் சிதேக்கியா 11 வருஷங்களாக ஆட்சி புரிந்தான். அதன் பின்பு யூதா தேசத்தார் தங்களுடைய இறுதி சிறையிருப்புக்குச் சென்றார்கள். (2இராஜா 24:6-20). கோனியா (எரே 37:1; எரே 22:24,28)

"யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா வந்து அரசாண்டான்" - எரே 37-39 ஆகிய அதிகாரங்கள் சிதேக்கியா ராஜாவின் 11 வருஷ ஆட்சிக் காலத்தை விவரிக்கிறது. இந்த ராஜா எரேமியாவிற்குச் சாதகமாக இருந்தான். ஆனாலும் எரேமியாவைக் கொல்ல வேண்டுமென்று விரும்பிய தன்னுடைய பிரபுக்களுக்கு சிதேக்கியா பயந்து நடந்தான். இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் சிதேக்கியா ராஜா எரேமியா தீர்க்கதரிசியைப் பாதுகாத்தான். எரே 37-38 ஆகிய அதிகாரங்கள் எருசலேம் முற்றிக்கையிடப்பட்ட காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை விளக்குகிறது. எரே 39 ஆவது அதிகாரத்தில் எருசலேம் நகரத்தைப் பாபிலோனியர்கள் கைப்பற்றுகிறார்கள். எருசலேம் அழிக்கப்பட்ட பின்பு நடைபெற்ற சம்பவங்கள் எரே 40-45 ஆகிய அதிகாரங்களில் விளக்கப்பட்டிருக்கிறது.

"தேசத்தின் ஜனங்களாகிலும் செவி கொடுக்கவில்லை" - கோனியா தன் தகப்பனாகிய யோயாக்கீமைப் போல துன்மார்க்கமாகவே ஆட்சி புரிந்தான். இவனும் இவனுடைய ஊழியக்காரரும் யூதா தேசத்தின் ஜனங்களும் எரேமியா மூலமாகக் கர்த்தர் வெளிப்படுத்திய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்லை.

(2) ஜெபிக்குமாறு சிதேக்கியாவின் விண்ணப்பம்

எரே37:3சிதேக்கியாராஜாவோவெனில், செலேமியாவின் குமாரனாகிய யூகாலையும், மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனையும் எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்பி: நீ நம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி எங்களுக்காக விண்ணப்பம் பண்ணவேண்டும் என்று சொல்லச் சொன்னான்.

எரே 37:4 அப்பொழுது எரேமியா ஜனத்தின் நடுவே வரத்தும் போக்குமாயிருந்தான்; அவனை அவர்கள் காவல் வீட்டில் இன்னும் போடவில்லை.

"நீ நம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி எங்களுக்காக விண்ணப்பம் பண்ணவேண்டும்" - சிதேக்கியா தனக்கு முந்தி ஆட்சி புரிந்த இரண்டு ராஜாக்களைப் போல் அல்லாமல் சற்று வித்தியாசமாக எரேமியாவிடம் பழகினான். தனக்காக ஜெபிக்குமாறு எரேமியாவிடம் கேட்டுக் கொண்டான். அதற்காக செலேமியாவின் குமாரனாகிய யூகாலையும், மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனையும் சிதேக்கியா எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்பினான். எரேமியாகாவலறையில் அடைக்கப்படுவதற்கு முன்பாக இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (எரே 37:3-4). ஏசாயா செய்ததைப் போல எரேமியாவும் இந்த நகரம் சத்துருவின் கைகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்று எரேமியா ஜெபிப்பார் என்று சிதேக்கியாராஜாஎதிர்பார்த்தான். (ஏசா 37:6) ஆனால் அது கர்த்தருடைய சித்தமல்ல.

37 அதிகாரம்

(3) கல்தேயர் எருசலேமை விட்டு புறப்பட்டுப் போனார்கள்

எரே 37:5 பார்வோனின் சேனை யோவென்றால், எகிப்திலிருந்து புறப்பட்டது; எருசலேமை முற்றிக்கை போட்ட கல்தேயர் அவர்களுடைய செய்தியைக்கேட்டு, எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள்.

"பார்வோனின் சேனையோவென்றால், எகிப்திலிருந்து புறப்பட்டது" - சிதேக்கியாவின் ஆட்சிக் காலத்தில் யூதா தேசத்திற்கு எகிப்திலிருந்து உதவி வருகிறது. பாபிலோன் தேசத்தார் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்ட போது, பார்வோனின் சேனை யூதா தேசத்தாருக்கு உதவியாக எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிறார்கள். (எசே 17:15-17) இந்தச் சூழ்நிலையில் நேபுகாத்நேச்சார் எகிப்தியரோடு யுத்தம் பண்ண விரும்பவில்லை. பாபிலோனியர் எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள். எருசலேம் நகரத்தார் ஆறுதலடைந்தார்கள். (எரே 37:5; எரே 34:11) இதன் பின்பு நடைபெற்ற யுத்தத்தில் நேபுகாத்நேச்சார் எகிப்தை ஜெயித்து அதைத் தனக்கு அடிமைப் படுத்தினான். அதன் பின்பு சிதேக்கியாவின் ஒன்பதாவது வருஷ ராஜ்யபாரத்தின் போது நேபுகாத்நேச்சார் எருசலேமிற்கு எதிராக மறுபடியும் வந்தான். எரேமியா முன்னறிவித்து எச்சரித்த பிரகாரம் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (எரே 37:5-14).

(4) அவர்கள் திரும்பி வருவதைப் பற்றிய தீர்க்கதரிசனம்

எரே 37:6 அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 37:7 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், என்னிடத்தில் விசாரிக்கும்படி உங்களை என்னிடத்துக்கு அனுப்பின யூதாவின் ராஜாவை நீங்கள் நோக்கி: இதோ, உங்களுக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை தன் தேசமாகிய எகிப்துக்குத் திரும்பிப்போகும்.

எரே 37:8 கல்தேயரோவென்றால், திரும்பிவந்து இந்த நகரத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து, அக்கினியால் சுட்டெரிப்பார்கள்.

எரே 37:9 கல்தேயர் நம்மைவிட்டு நிச்சயமாய்ப் போய்விடுவார்களென்று சொல்லி, நீங்கள் மோசம் போகாதிருங்கள், அவர்கள் போவதில்லை.

எரே 37:10 உங்களோடே யுத்தம் பண்ணுகிற கல்தேயருடைய சேனையை யெல்லாம் நீங்கள் முறிய அடித்தாலும், மீந்தவர்கள் எல்லாரும் காயம்பட்டவர் களாயிருந்தாலும், அவர்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து எழும்பி, இந்த நகரத்தை அக்கினியால் சுட்டெரிப்பார்கள் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லுங்கள் என்றார்.

"அப்பொழுது" - பாபிலோனியர் எருசலேமின்மீது போட்டிருந்த முற்றிக்கையைத் தளர்த்திய காலத்தில் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. எருசலேம் நகரத்தாருக்குத் தற்காலிகமாக ஓர் ஆறுதல் உண்டாயிற்று. இந்தச் சூழ்நிலையில் எரேமியா இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கூறுகிறார். (எரே 37:6-10).

தீர்க்கதரிசன எண் - 71

"எரேமியா தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி....." (எரே 37:6-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

37 அதிகாரம்

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. உங்களுக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை தன் தேசமாகிய எகிப்துக்குத் திரும்பிப்போகும். (எரே 37:7).

2. கல்தேயரோவென்றால், திரும்பிவந்து இந்த நகரத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடிப்பார்கள். (எரே 38:8)

3. அதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்.

4. நம்மை அழிக்கும் வரையிலும், கல்தேயர் நம்மைவிட்டு நிச்சயமாய்ப் போய்விட மாட்டார்கள். (எரே 37:9).

5. உங்களோடே யுத்தம் பண்ணுகிற கல்தேயருடைய சேனையையெல்லாம் நீங்கள் முறிய அடித்தாலும், மீந்தவர்கள் எல்லாரும் காயம்பட்டவர்களாயிருந்தாலும், அவர்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து எழும்பி, இந்த நகரத்தை அக்கினியால் சுட்டெரிப்பார்கள் (எரே 37:10).

(5) எரேமியாவின் ஐந்தாவது உபத்திரவம் - (11:18)

(அ) தவறாக குற்றம் சாட்டப்பட்டு கைதானான்

எரே 37:11 பார்வோனின் சேனை வருகிறதென்று, கல்தேயருடைய சேனை எருசலேமைவிட்டுப் போன போது,

எரே 37:12 எரேமியா அவ்விடத்தைவிட்டு, ஜனத்தின் நடுவே ஜாடையாய் விலகி, பென்யமீன் தேசத்துக்குப்போக மனதாய் எருசலேமிருந்து புறப்பட்டுப் போனான்.

எரே 37:13 அவன் பென்யமீன் வாசலில் வந்தபோது, காவற்சேர்வையின் அதிபதியாகிய யெரியா என்னும் நாமமுள்ள ஒருவன் அங்கே இருந்தான்; அவன் அனனியாவின் குமாரனாகிய செலேமியாவின் மகன்; அவன்: நீ கல்தேயரைச் சேரப்போகிறவன் என்று சொல்லி, எரேமியா தீர்க்கதரிசியைப் பிடித்தான்.

எரே 37:14 அப்பொழுது எரேமியா: அது பொய், நான் கல்தேயரைச் சேரப் போகிறவனல்ல என்றான்; ஆனாலும் யெரியா எரேமியாவின் சொல்லைக் கேளாமல், அவனைப்பிடித்து, பிரபுக்களிடத்தில் கொண்டுபோனான்.

"எரேமியா அவ்விடத்தைவிட்டு, ஜனத்தின் நடுவே ஜாடையாய் விலகி" - எகிப்தின் சேனை யூதா தேசத்தாருக்கு உதவி புரிவதற்காக எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிறது. இதைக் கேள்விப்பட்ட கல்தேயருடைய சேனை எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போனது. இந்தச் சூழ்நிலையில் எரேமியா பென்யமீன் தேசத்துக்குப்போக மனதாய் எருசலேமிருந்து புறப்பட்டுப்போனார். எருசலேமிலுள்ள ஜனங்கள் தன்னைத் துன்புறுத்துவதினால் அவர்களிடமிருந்து விலகி, பென்யமீன் தேசத்திற்குப் போக வேண்டுமென்று எரேமியா விரும்பினார். (எரே 37:11-12). எரேமியா பென்யமீன் வாசல் வரையிலும் வந்துவிட்டார். எரேமியா கல்தேயருடைய தேசத்திற்குத் தப்பித்துப் போகிறார் என்று காவற்சேர்வையின் அதிபதியாகிய யெரியா என்பவன் தவறாக நினைத்து எரேமியாவைப் பிடித்து பிரபுக்களிடத்தில் கொண்டுபோனான். பிரபுக்களோ எரேமியாவின்பேரில் கடுங்கோபங்கொண்டு, அவரைப் பிடித்து, சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டில் காவற்படுத்தினார்கள். (எரே 37:13). அங்கு எரேமியா காவற்கிடங்கின் நிலவறைகளில் பிரவேசித்து, அங்கே அநேகநாள் இருந்தார். (எரே 37:14-16).

(ஆ) காவற்கிடங்கில் தள்ளப்பட்டான்

எரே 37:15 அப்பொழுது பிரபுக்கள்: எரேமியாவின்பேரில் கடுங்கோபங் கொண்டு, அவனை பிடித்து, அவனைச் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டில் காவற்படுத்தினார்கள்; அவர்கள் அதைக் காவற்கூடமாக்கியிருந்தார்கள்.

37 அதிகாரம்

எரே 37:16 அப்படியே எரேமியா காவற்கிடங்கின் நிலவறைகளில் பிரவேசித்து, அங்கே அநேகநாள் இருந்தான்.

(இ) எரேமியா விடுவிக்கப்பட்டான்

எரே 37:17 பின்பு சிதேக்கியா ராஜா அவனை அழைத்தனுப்பி: கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ என்று ராஜா அவனைத் தன் வீட்டிலே இரகசியமாய்க் கேட்டான். அதற்கு எரேமியா: உண்டு, பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவீர் என்று சொன்னான்.

"பின்பு சிதேக்கியா ராஜா அவனை அழைத்தனுப்பி" - எரேமியாவை யோனத்தானுடைய வீட்டில் காவல்படுத்திய செய்தியைச் சிதேக்கியா ராஜா கேள்விப்படுகிறான். காவற்கிடங்கிலிருந்து எரேமியாவைத் தன்னிடத்திற்கு அழைத்து வருவதற்கு ஆட்களை அனுப்புகிறான். எரேமியாவை ராஜாவின் அரமனைக்கு இரகசியமாக அழைத்து வந்தார்கள். சிதேக்கியா ராஜா எரேமியாவிடம் கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து விசாரிக்கிறான்.

தீர்க்கதரிசன எண் - 72

"பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவீர்" (எரே 37:17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (2இராஜா 25:4-10).

(ஈ) இரக்கத்திற்காக எரேமியா கெஞ்சுகிறான்

எரே 37:18 பின்னும் எரேமியா, சிதேக்கியா ராஜாவை நோக்கி: நீங்கள் என்னைக் காவல் வீட்டிலே அடைப்பதற்கு, நான் உமக்கும் உம்முடைய ஊழியக்காரருக்கும் இந்த ஜனத்துக்கும் விரோதமாக என்ன குற்றஞ்செய்தேன்?

எரே 37:19 பாபிலோன் ராஜா உங்களுக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாக வருவதில்லையென்று உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொன்ன உங்களுடைய தீர்க்கதரிசிகள் எங்கே?

எரே 37:20 இப்போதும் ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குச் செவி கொடுத்து, என் விண்ணப்பத்துக்கு தயைசெய்து, என்னைச் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டிற்குத்திரும்ப அனுப்பவேண்டாம்; அனுப்பினால் நான் அங்கே செத்துப்போவேன் என்றான்.

"என்னைச் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டிற்குத் திரும்ப அனுப்பவேண்டாம்" - எரேமியா சிதேக்கியா ராஜாவிடம் தன்னுடைய ஜீவனுக்காக விண்ணப்பம் பண்ணுகிறார். (எரே 37:18-20) எரேமியாவின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. யோனத்தானுடைய வீட்டுச் சிறைக்கூடத்திலிருந்து நகரத்தின் காவற்சாலையின் முற்றத்தில் எரேமியாவைக் காவற்படுத்துவதற்குச் சிதேக்கியா ராஜா அனுமதி கொடுக்கிறான். (எரே 37:21).

எரேமியாவின் சிறைச்சாலை அனுபவங்கள்

1. தவறான குற்றச்சாட்டுக்களின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டார். (எரே 37:11-15).
2. யோனத்தானுடைய சிறைக் கூடத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, காவற்சாலையின் முற்றத்தில் அடைக்கப்பட்டார். (எரே 37:21).
3. தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்த துரவிலே எரேமியாவை இறக்கி விட்டார்கள். (எரே 38:1-6).
4. இந்தத்துரவிலிருந்துவிடுவிக்கப்பட்டார். (எரே 38:13-28).
5. நேபுகாத்நேச்சார் எரேமியாவை விலங்கிடப்பட்டு சிறைக்கைதியாகப் பிடித்துச் சென்றான். (எரே 40:1).
6. ராமாவிலே எரேமியாவின் கைகளில் இடப்பட்ட விலங்குகள் நீக்கிப்போடப் படுகிறது. (எரே 40:1-4).

(உ) காவற்கிடங்கிலிருந்து காவற் சாலையின் முற்றத்திற்கு

எரே 37:21 அப்பொழுது எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்திலே காக்கவும், நகரத்திலே அப்பமிருக்கு மட்டும் அப்பஞ்சுடுகிறவர்களின் வீதியிலே தினம் ஒரு அப்பத்தை அவனுக்கு வாங்கிக் கொடுக்கவும் கட்டளையிட்டான்; அப்படியே எரேமியா காவற்சாலையின் முற்றத்திலே இருந்தான்.

38 அதிகாரம்

(ஊ) பிரபுக்கள் எரேமியாவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள் - மரண தண்டனை கொடுக்க வேண்டுமென்று கோருகிறார்கள்

எரே 38:1 இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப் போகிறவனோ உயிரோடிருப்பான்; அவனுடைய பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளையுடைமையைப் போலிருக்கும்; அவன் பிழைப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும்,

எரே 38:2 இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய இராணுவத்தின் கையில் நிச்சயமாக ஒப்புக் கொடுக்கப்படும்; அவன் அதைப் பிடிப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும்,

எரே 38:3 எரேமியா எல்லா ஜனத்தோடும் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகளை மாத்தானின் குமாரனாகிய செப்பத்தியாவும், பஸ்கூரின் குமாரனாகிய கெதலியாவும், செலேமியாவின் குமாரனாகிய யூகாலும், மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரும் கேட்டார்கள்.

எரே 38:4 அப்பொழுது பிரபுக்கள் ராஜாவை நோக்கி: இந்த மனுஷன் கொல்லப்பட உத்தரவாக வேண்டும்; அதேனென்றால், இந்த நகரத்தில் மீதியாயிருக்கிற யுத்த மனுஷரிடத்திலும், மற்றுமுள்ள சகல ஜனங்களிடத்திலும், இவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதினாலே அவர்களுடைய கைகளைத் தளர்ந்துபோகப் பண்ணுகிறான்; இவன் இந்த ஜனத்தின் க்ஷேமத்தைத் தேடாமல்,அவர்கள் கேட்டையே தேடுகிறான் என்றார்கள்.

தீர்க்கதரிசன எண் - 73

“அவன் அதைப் பிடிப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார்......” (எரே 38:2-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் சாவான் (எரே 38:1).
2. கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப் போகிறவனோ உயிரோடிருப்பான்.
3. இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய இராணுவத்தின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படும் (எரே 38:2).

“மாத்தானின் குமாரனாகிய செப்பத்தியாவும்” - எரேமியா மேலும் ஒரு தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறார். அதை செப்பத்தியாவும், கெதலியாவும், யூகாலும், பஸ்கூரும் கேட்டார்கள். எரேமியா கூறிய செய்திகளை அவர்கள் பிரபுக்களிடம் அறிவித்தார்கள். எரேமியாவைக் கொல்வதற்கு ராஜா உத்தரவிட வேண்டும் என்று பிரபுக்கள் கேட்டுக் கொண்டார்கள். (எரே 38:1-4).

“பிரபுக்கள் ராஜாவை நோக்கி” - பிரபுக்கள் சிதேக்கியா ராஜாவிடம் எரேமியாவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள். யூதாவின் யுத்த மனுஷரும், ஜனங்களும் எரேமியாவின் தீர்க்கதரிசனச் செய்தியினால் தளர்ந்து போகிறார்கள் என்று குற்றம் சுமத்துகிறார்கள். எரேமியா எருசலேம் நகரத்து ஜனத்தின் க்ஷேமத்தையே தேடுகிறார். ஆனால் அவர்களோ அதை நம்ப மறுக்கிறார்கள். எரேமியாவின்மீது தவறாகக் குற்றம் சுமத்துகிறார்கள். ராஜாவும், பிரபுக்களுடைய வார்த்தையை அங்கிகரிக்கிறான்.

(எ) பிரபுக்கள் கையில் ஒப்புக் கொடுக்கப் படுகிறான் - இரண்டாவது காவற்கிடங்கில் போடப்படுகிறான்

எரே 38:5 அப்பொழுது சிதேக்கியா ராஜா: இதோ, அவன் உங்கள் கைகளில் இருக்கிறான்; உங்களுக்கு விரோதமாய் ராஜா ஒன்றும் செய்யக்கூடாது என்றான்.

38 அதிகாரம்

எரே 38:6 அப்பொழுது அவர்கள் எரேமியாவைப் பிடித்து, அவனைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்த அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போட்டார்கள்; எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே இறக்கி விட்டார்கள்; அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினான்.

"உங்களுக்கு விரோதமாய் ராஜா ஒன்றும் செய்யக்கூடாது" - பிரபுக்கள் சிதேக்கியா ராஜாவிடம் எரேமியாவைக் குறித்து குற்றம் கூறுகிறார்கள். ராஜா பிரபுக்களுக்கு விரோதமாக ஒன்றும் செய்ய விரும்பவில்லை. பிரபுக்களின் விண்ணப்பத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். ராஜா பலவீனமாக இருக்கிறான். தேசத்தில் பிரச்சனை மிகுந்திருப்பதினால் ராஜா பிரபுக்களுக்கு விரோதமாக ஒன்றும் செய்ய விரும்பவில்லை.

"அவர்கள் எரேமியாவைப் பிடித்து" - எரேமியா கொல்லப்பட உத்தரவாக வேண்டுமென்று பிரபுக்கள் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். ராஜா எரேமியாவைப் பிரபுக்கள் கையில் ஒப்புக்கொடுத்து விடுகிறான். அவர்கள் எரேமியாவை காவற்சாலையின் முற்றத்திலிருந்த அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போட்டார்கள்; எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே இறக்கிவிட்டார்கள்; அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினார். யூதா தேசத்தின் பிரபுக்கள் பாவத்தின் உளையில் அமிழ்ந்திருக்கிறார்கள். பாவத்தின் உளையில் அமிழ்ந்திருப்பதைவிட இந்தத் துரவிலுள்ள உளையில் அமிழ்ந்திருப்பது நலமானது என்று எரேமியா நினைத்திருக்கலாம்.

"அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது" - எருசலேமில் உள்ள வீடுகளில் இதுபோல பல துரவுகள் இருந்தன. எதிரி தேசத்தார் எருசலேமை முற்றிக்கையிடும் போது நகரத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்படக்கூடாது என்பதற்காக எல்லா வீடுகளிலும், இதுபோல துரவுகளைத் தோண்டியிருக்கிறார்கள். துரவில் தண்ணீர் இல்லாமல் போனபோது அதை சிறைச்சாலையாகவும், பயன்படுத்துகிறார்கள். (சக 9:11). ஒருவனைத் துரவில் போட்டு விட்டால், அவனுக்கு உணவும் கொடுக்க மாட்டார்கள். அவன் துரவிலேயே பட்டினி கிடந்து செத்துப்போவான். எரேமியா கர்த்தருடைய வார்த்தையை மெய்யாகக் கூறியதினால் அவருக்கு இப்படியொரு தண்டனை கொடுக்கப் பட்டிருக்கிறது.

(ஏ) ஒரு எத்தியோப்பியன் அவனை விடுவிக்கிறான் - காவற் சாலையின் முற்றத்தில் வைக்கப்படுகிறான்

எரே 38:7 அவர்கள் எரேமியாவைத் துரவிலே போட்டதை ராஜாவின் அரமனையில் இருந்த எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் என்னும் ஒரு பிரதானி கேள்விப்பட்டான்; ராஜாவோ பென்யமீன் வாசலிலே உட்கார்ந்திருந்தான்.

எரே 38:8 அப்பொழுது எபெத்மெலேக் ராஜாவின் அரமனையிலிருந்து புறப்பட்டுப் போய், ராஜாவை நோக்கி:

எரே 38:9 ராஜாவாகிய என் ஆண்டவனே, இந்தப் புருஷர் எரேமியா தீர்க்கதரிசியைத் துரவிலே போட்டுச் செய்தது எல்லாம் தகாத செய்கையாயிருக்கிறது; அவன் இருக்கிற இடத்திலே பட்டினியினால் சாவானே, இனி நகரத்திலே அப்பமில்லை என்றான்.

எரே 38:10 அப்பொழுது ராஜா எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியனை நோக்கி: நீ இவ்விடத்திலிருந்து முப்பது மனுஷரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோய், எரேமியா தீர்க்கதரிசி சாகாததற்கு முன்னே அவனைத் துரவிலிருந்து தூக்கிவிடு என்று கட்டளையிட்டான்.

எரேமியா - தொகுப்புரை

38 அதிகாரம்

எரே 38:11 அப்பொழுது எபெத்மெலேக் அந்த மனுஷரைத் தன்னுடனே கூட்டிக் கொண்டு, ராஜாவின் அரமனைப் பொக்கிஷசாலையின் கீழிருந்த அறைக்குள் புகுந்து, கிழிந்துபோன பழம்புடவைகளையும் கந்தைத் துணிகளையும் எடுத்துக் கொண்டுபோய், அவைகளைக் கயிறுகளினால் எரேமியா வண்டைக்குத் துரவிலே இறக்கிவிட்டு,

எரே 38:12 எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியன் எரேமியாவுடனே: கிழிந்துபோன இந்தப் பழம் புடவைகளையும் கந்தைகளையும் உம்முடைய அக்குள்களில் கயிறுகளுக்குள் அடங்க வைத்துப் போட்டுக்கொள்ளும் என்றான்; எரேமியா அப்படியேசெய்தான்.

எரே 38:13 அப்பொழுது எரேமியாவைக் கயிறுகளால் தூக்கி, அவனைத் துரவிலிருந்து எடுத்துவிட்டார்கள்; எரேமியா காவற்சாலையின் முற்றத்தில் இருந்தான்.

"எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் என்னும் ஒரு பிரதானி" - எபெத்மெலேக் ராஜாவின் அடிமையாக அரமனையில் சேவை புரிந்து வருகிறான். இவன் எரேமியாவைத் துரவில்போட்ட செய்தியை ராஜாவிடம்கூறி எரேமியாவை விடுவிக்குமாறு விண்ணப்பம் பண்ணுகிறான். பிரபுக்களின் சொல்லைக் கேட்டு, எரேமியாவை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுத்த சிதேக்கியா ராஜா இப்போது மனம் மாறுகிறான். தன்னிடத்திலுள்ள முப்பது மனுஷரை எபெத்மெலேக்கிடம் கொடுத்து எரேமியாவை மீட்டு வருமாறு ராஜா அனுப்புகிறான். பிரபுக்கள் எரேமியாவை விடுதலை பண்ணுவதை எதிர்ப்பார்கள் என்று நினைத்து எபெத்மெலேக்கோடு ராஜா முப்பது மனுஷரை அனுப்புகிறான். (எரே 38:7-13).

"எபெத்மெலேக் அந்த மனுஷரைத் தன்னுடனே கூட்டிக்கொண்டு" - எபெத்மெலேக்கும், அவனோடு கூடப்போன மனுஷரும் எரேமியாவைத் துரவிலிருந்து தூக்கி விடுகிறார்கள். அதன் பின்பு எரேமியா காவற்சாலையின் முற்றத்தில் இருந்தான். (எரே 38:11-13)

(ஜ) சிதேக்கியாவோடு தனியாக சந்திப்பு - இரக்கத்திற்காக விண்ணப்பம்

எரே 38:14 பின்பு சிதேக்கியா ராஜா, எரேமியா தீர்க்கதரிசியைக் கர்த்தருடைய ஆலயத்தில் இருக்கும் மூன்றாம் வாசலிலே தன்னிடத்திற்கு வரவழைத்தான்; அங்கே ராஜா, எரேமியாவை நோக்கி: நான் உன்னிடத்தில் ஒரு காரியம் கேட்கிறேன்; நீ எனக்கு ஒன்றும் மறைக்கவேண்டாம் என்றான்.

எரே 38:15 அப்பொழுது எரேமியா சிதேக்கியாவை நோக்கி: நான் அதை உமக்கு அறிவித்தால் என்னை நிச்சயமாய்க் கொலைசெய்வீரல்லவா? நான் உமக்கு ஆலோசனை சொன்னாலும், என்சொல்லை கேட்கமாட்டீர் என்றான்.

எரே 38:16 அப்பொழுது சிதேக்கியா ராஜா: நான்உன்னைக் கொல்லாமலும், உன் பிராணனை வாங்கத்தேடுகிற இந்த மனுஷர் கையில் உன்னை ஒப்புக் கொடாமலும் இருப்பேன் என்பதை, நமக்கு இந்த ஆத்துமாவை உண்டுபண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று எரேமியாவுக்கு இரகசியமாய் ஆணையிட்டான்.

"கர்த்தருடைய ஆலயத்தில் இருக்கும் மூன்றாம் வாசல்" - எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் எரேமியாவைத் துரவிலிருந்து தூக்கிவிடுகிறான். எரேமியாவின் மீதுள்ள உளையைக் கழுவி, சுத்தம் பண்ணுகிறார்கள். அதன் பின்பு, சிதேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் மூன்றாம் வாசலில் இருக்கிறான். எரேமியாவைத் தன்னிடத்தில் அழைத்து வருமாறு ராஜா கூறுகிறான். கர்த்தருடைய வார்த்தையைத் தனக்கு ஒன்றும் மறைக்காமல் அறிவிக்குமாறு சிதேக்கியா ராஜா எரேமியாவிடம் கேட்டுக் கொள்கிறான்.

38 அதிகாரம்

"அப்பொழுது எரேமியா சிதேக்கியாவை நோக்கி" - சிதேக்கியாவிடம் எரேமியா கர்த்தருடைய வார்த்தையை மறைக்காமல் அறிவிக்க முன்வருகிறார். அதை அறிவித்தால் தனது ஜீவனுக்கு ஆபத்து வரும் என்றும் கூறுகிறார். சிதேக்கியா எரேமியாவைக் கொல்லமாட்டேன் என்று ஆணையிட்ட பின்பு, எரேமியா கர்த்தருடைய வார்த்தையை மறைக்காமல் அறிவிக்கிறார். (எரே 38:15-16).

(ஓ) நிபந்தனையுள்ள இரக்கம் குறித்த தீர்க்கதரிசனம் - (ஏசா 1:19)

எரே 38:17 அப்பொழுது எரேமியா சிதேக்கியாவை நோக்கி: நீர் பாபிலோன் ராஜாவின் பிரபுக் களண்டைக்குப் புறப்பட்டுப்போவீரானால், உம்முடைய ஆத்துமா உயிரோடிருக்கும்; இந்தப் பட்டணம் அக்கினியால் சுட்டெரிக்கப் படுவதில்லை; நீரும் உம்முடைய குடும்பமும் உயிரோடிருப்பீர்கள்.

எரே 38:18 நீர் பாபிலோன் ராஜாவின் பிரபுக்களிடத்திற்குப் புறப்பட்டுப்போகா விட்டால், அப்பொழுது இந்த நகரம் கல்தேயர் கையில் ஒப்புக் கொடுக்கப்படும், அவர்கள் இதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்; நீர் அவர்களுக்குத் தப்பிப்போவதில்லை என்கிறதை இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

எரே 38:19 அப்பொழுது சிதேக்கியா ராஜா எரேமியாவை நோக்கி: கல்தேயர் தங்களைச் சேர்ந்துபோன யூதரின் கையிலே என்னைப் பரியாசம்பண்ண ஒப்புக் கொடுப்பார்களோ என்று நான் ஐயப்படுகிறேன் என்றான்.

எரே 38:20 அதற்கு எரேமியா: உம்மை ஒப்புக்கொடார்கள்; நான் உம்மிடத்தில் சொல்லுகிற கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடும், அப்பொழுதுஉமக்குநன்மையாயிருக்கும், உம்முடைய ஆத்துமா பிழைக்கும்.

எரே 38:21 நான் புறப்படுகிறதில்லை என்பீரேயாகில், கர்த்தர் எனக்குத் தெரியப்படுத்தின வார்த்தையாவது:

எரே 38:22 இதோ, யூதா ராஜாவின் வீட்டிலே மீதியான எல்லா ஸ்திரீகளும் வெளியே பாபிலோன் ராஜாவின் பிரபுக்களண்டையில் கொண்டுபோகப் படுவார்கள்; அப்பொழுது, இதோ, அவர்கள்தானே உம்முடைய இஷ்டர்கள்; அவர்கள் உமக்குப் போதனை செய்து, உம்மை மேற்கொண்டார்கள் என்றும், உம்முடைய கால்கள் உளையிலே அமிழ்ந்தின பின்பு அவர்கள் பின்வாங்கிப் போனார்கள் என்றும் அந்த ஸ்திரீகளே சொல்லுவார்கள்.

எரே 38:23 உம்முடைய எல்லா ஸ்திரீகளையும், உம்முடைய பிள்ளைகளையும் வெளியே கல்தேயரிடத்தில் கொண்டு போவார்கள்; நீரும் அவர்கள் கைக்குத் தப்பிப்போகாமல் பாபிலோன் ராஜாவின் கையினால் பிடிக்கப்பட்டு, இந்த நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படக் காரணமாயிருப்பீர் என்றான்.

"அப்பொழுது எரேமியா சிதேக்கியாவை நோக்கி" - சிதேக்கியா எரேமியாவிடம் ஆணையிட்ட பின்பு எரேமியா அவனுக்கு ஆலோசனை கூறுகிறார். சிதேக்கியா தன்னையும், தன் குடும்பத்தையும், எருசலேம் நகரத்தாரையும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று எரேமியா ஆலோசனை கூறுகிறார். ஆனால் சிதேக்கியா எரேமியாவின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. (எரே 38:17-23).

தீர்க்கதரிசன எண் - 74

"இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறார்"....... (எரே 38:17-23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

38 அதிகாரம்

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீர் பாபிலோன் ராஜாவின் பிரபுக்களிடத்திற்குப் புறப்பட்டுப்போகா விட்டால், அப்பொழுது இந்த நகரம் கல்தேயர் கையில் ஒப்புக் கொடுக்கப்படும் (எரே 38:17-18).

2. அவர்கள் இதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள் (எரே 38:18).

3. நீர் அவர்களுக்குத் தப்பிப் போவதில்லை.

4. யூதா ராஜாவின் வீட்டிலே மீதியான எல்லா ஸ்திரீகளும் வெளியே பாபிலோன் ராஜாவின் பிரபுக் களண்டையில் கொண்டு போகப் படுவார்கள் (எரே 38:22).

5. அப்பொழுது, இதோ, அவர்கள்தானே உம்முடைய இஷ்டர்கள்; அவர்கள் உமக்குப் போதனை செய்து, உம்மை மேற்கொண்டார்கள் என்றும், உம்முடைய கால்கள் உளையிலே அமிழ்ந்தின பின்பு அவர்கள் பின்வாங்கிப் போனார்கள் என்றும் அந்த ஸ்திரீகளே சொல்லுவார்கள்.

6. உம்முடைய எல்லா ஸ்திரீகளையும், உம்முடைய பிள்ளைகளையும் வெளியே கல்தேயரிடத்தில் கொண்டு போவார்கள். (எரே 38:23).

7. நீரும் அவர்கள் கைக்குத் தப்பிப்போகாமல் பாபிலோன் ராஜாவின் கையினால் பிடிக்கப்படுவீர்.

8. இந்த நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படக் காரணமாயிருப்பீர்.

கர்த்தருடைய வார்த்தைக்குச் சிதேக்கியா கீழ்ப்படிந்தால், என்ன சம்பவிக்கும் என்பதையும் எரேமியா தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். ஆனால் சிதேக்கியா கர்த்தருடையவார்த்தைக்குக்கீழ்ப்படியவில்லை. கர்த்தருடைய வார்த்தை சிதேக்கியாவுக்கு நிறைவேறிற்று. (எரே 38:20). சிதேக்கியா கல்தேயருக்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து நின்றான். அவர்கள் கோபமுற்று எருசலேம் நகரத்தைச் சுட்டெரித்து விட்டார்கள்.

"உம்முடைய எல்லா ஸ்திரீகளையும், உம்முடைய பிள்ளைகளையும் வெளியே கல்தேயரிடத்தில் கொண்டு போவார்கள்" - சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, கல்தேயரிடம் தன்னை ஒப்புக் கொடுத்தால் இவர்களெல்லாம் தப்பித் திருப்பார்கள். கல்தேயருக்கு விரோதமாகச் சிதேக்கியா இறுமாப்பாயிருந்தான். இதனால் இவனுடைய ஸ்திரீகளும், பிள்ளைகளும் பாபிலோன் ராஜாவினால் பிடிக்கப்பட்டார்கள். எருசலேம் நகரம் அக்கினியினால் சுட்டெரிக்கப் படுவதற்கும் சிதேக்கியா காரணமானான். (எரே 38:17-23).

(ஓ) சிதேக்கியா பிரபுக்களுக்காக பயப்படுகிறான்

எரே 38:24 அப்பொழுது சிதேக்கியா எரேமியாவை நோக்கி: இந்த வார்த்தைகளை ஒருவருக்கும் அறிவிக்க வேண்டாம்; அப்பொழுது நீ சாவதில்லை.

எரே 38:25 நான் உன்னோடே பேசினதைப் பிரபுக்கள் கேள்விப்பட்டு, உன்னிடத்தில் வந்து: நீ ராஜாவோடே பேசிக் கொண்டதை எங்களுக்குத் தெரிவி, எங்களுக்கு ஒன்றும் மறைக்காதே, அப்பொழுது உன்னைக் கொல்லாதிருப்போம்; ராஜா உன்னோடு என்ன பேசினார் என்று உன்னைக் கேட்பார்களேயாகில்,

எரே 38:26 நான் யோனத்தானுடைய வீட்டிலே சாகாதபடிக்கு ராஜா என்னை அங்கே திரும்ப அனுப்பவேண்டாம் என்று, அவர் முகத்துக்கு முன்பாக விண்ணப்பம் பண்ணினேன் என்று சொல்வாயாக என்றான்.

எரே 38:27 பின்பு எல்லாப் பிரபுக்களும், எரேமியாவினிடத்தில் வந்து, அவனைக் கேட்டார்கள்; அப்பொழுது அவன்: ராஜா கற்பித்த இந்த எல்லா வார்த்தைகளின் படியே அவர்களுக்கு அறிவித்தான்; காரியம் கேள்விப்படாமற் போனபடியினால், அவனோடேபேசாமலிருந்துவிட்டார்கள்.

எரேமியா - தொகுப்புரை

38 அதிகாரம்

"இந்த வார்த்தைகளை ஒருவருக்கும் அறிவிக்கவேண்டாம்; அப்பொழுது நீ சாவதில்லை" - எருசலேமின் ஜனங்கள்மீதும், நகரத்தின்மீதும் அழிவு வரப்போகிறது. இது கர்த்தருடைய சித்தம். எரேமியா இந்த வார்த்தைகளைப் பிரபுக்களிடம் கூறினால் அவர்கள் எரேமியாவைக் கொன்று போடுவார்கள். எரேமியாவைச் சாவதற்கு ஒப்புக்கொடுப்பதில்லை என்று சிதேக்கியாவும் ஆணையிட்டிருக்கிறான். ஆகையினால் இந்த வார்த்தைகளை ஒருவருக்கும் அறிவிக்க வேண்டாம் என்று சிதேக்கியா எரேமியாவிடம் கூறுகிறான். ராஜா கூறியதுபோலவே எரேமியா பிரபுக்களிடம் பதில் கூறிவிடுகிறார். ஆகையினால் எரேமியா ராஜாவிடம் இரகசியமாகக் கூறிய கர்த்தருடைய வார்த்தை மற்றவர்களுக்குத் தெரியாமல் போயிற்று. (எரே 38:24-27)

"நான் யோனத்தானுடைய வீட்டிலே சாகாதபடிக்கு" - எரேமியா பொய்கூறாமல் இங்கும் உண்மையையே கூறுகிறார். (எரே 38:26-27). ஆயினும் தான் ராஜாவிடம் கூறிய எல்லா செய்திகளையும் பிரபுக்களிடம் கூறவில்லை. எரேமியாவை எருசலேமில் காவற்சாலையின் முற்றத்தில் பிரபுக்கள் மறுபடியும் அடைத்து விடுகிறார்கள். (எரே 38:28).

(ஔ) சிறையிருப்பு வரையிலும் எரேமியா தொடர்ந்து கைதியாகவே இருக்கிறான்

எரே 38:28 அப்படியே எரேமியா, எருசலேம்பிடிபடுகிற நாள்மட்டாக காவற்சாலையின் முற்றத்தில் இருந்தான்; எருசலேம் பிடிபட்டுப்போனபோதும் அங்கேயே இருந்தான்.

39 அதிகாரம்

(6) யூதாவின் கடைசி சிறையிருப்பு - (52:4-17; 2இராஜா 25:1-7; 2நாளா 36:17-21)

(அ) எருசலேம் பிடிக்கப்பட்டது

எரே 39:1 யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அரசாண்ட ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதை முற்றிக்கைபோட்டார்கள்.

எரே 39:2 சிதேக்கியா அரசாண்ட பதினோராம் வருஷம் நாலாம் மாதம், ஒன்பதாம் தேதியிலே நகரத்து மதிலில் திறப்புக்கண்டது.

எரே 39:3 அப்பொழுது பாபிலோன் ராஜாவின் பிரபுக்களாகிய நெர்கல் சரேத்சேர், சம்கார்நேபோ, சர்சேகீம், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் என்பவர்களும், பாபிலோன் ராஜாவின் மற்ற எல்லாப் பிரபுக்களும் உட்பிரவேசித்து, நடுவாசலில் இருந்தார்கள்.

எரே 39:4 அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவும் சகல யுத்த மனுஷரும் அவர்களைக் கண்டபோது, ஓடி, இராத்திரிகாலத்தில் ராஜவுடைய தோட்டத்துவழியே, இரண்டு மதில்களுக்கு நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டுப் போனார்கள்; அவன் வயல்வெளியின் வழியே போய்விட்டான்.

"யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அரசாண்ட ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதத்திலே" - இந்த மாதத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதை முற்றிக்கை போட்டார்கள். இதற்கு முன்பு ஏற்கெனவே நேபுகாத்நேச்சார் எருசலேமைச்சிறிது காலம் முற்றிக்கை போட்டான். எகிப்தியரின் சேனை தனக்கு விரோதமாக வருவதை அறிந்தவுடன், நேபுகாத்நேச்சார் எருசலேமைவிட்டுப் போய்விட்டான். அதன் பின்பு நடைபெற்ற யுத்தத்தில் நேபுகாத்நேச்சார் எகிப்தைக் கைப்பற்றினான். அதன் பின்பு யூதா, மோவாப், அம்மோன், ஏதோம் ஆகிய தேசங்களையும் முழுவதுமாகக் கைப்பற்றினான். சிதேக்கியா ராஜாவின் பதினொறாவது வருஷம் நாலாவது மாத ஆட்சிக்காலத்தில் எருசலேம் நகரத்தை நேபுகாத்நேச்சார் முழுவதுமாகப் பிடித்துக் கொண்டான். எருசலேமின்மீது பதினாறு மாதங்களாக முற்றிக்கைபோட்டான். (எரே 39:1-2). ஒன்பதாவது வருஷம் பத்தாம் நாள் என்று எரே 54:4-6 ஆகிய வசனங்களில் மிகவும் விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 11 ஆம் வருஷம் 4 ஆம் மாதம் 9 ஆம் தேதியில் எருசலேம் நகரத்தின் மதிலில் திறப்புக் கண்டது.

பாபிலோன் ராஜாவின் பிரபுக்கள்

1. நெர்கல்சரேத்சேர் (Nergal-sharezer)
2. சம்பார்நேபோ (Samgar-nebo)
3. சர்சேகிம் (Sarsechim), ரப்சாரீஸ் (Rab-saris)
4. நெர்கல்சரேத்சேர் (Nergal-sharezer), ரப்மாக் (Rab-mag)

"பாபிலோன் ராஜாவின் மற்ற எல்லாப் பிரபுக்களும்" - பாபிலோன் ராஜாவிற்கு மொத்தம் எத்தனை பிரபுக்கள் இருந்தார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் எல்லோருமே எருசலேமிற்குள் பிரவேசித்து அதன் நடுவாசலில் அமர்ந்திருந்தார்கள். சிதேக்கியாவும், அவனுடைய யுத்த மனுஷரும் எருசலேம் நகரத்திற்குள் பாபிலோனியரைக் கண்டவுடன் நகரத்தை விட்டுத் தப்பித்து ஓடிப்போய் விட்டார்கள். (எரே 39:4). கல்தேயருடைய சேனை அவர்களைத் துரத்திச் சென்று, எரிகோவின் சமபூமியில் சிதேக்கியாவைப் பிடித்தார்கள். (எரே 39:5).

(ஆ) சிதேக்கியாவின்மீது நியாயத் தீர்ப்பு (39:5-7)

எரே 39:5 ஆனாலும், கல்தேயருடைய இராணுவம் அவர்களைப் பின்தொடர்ந்து, எரிகோவின் சமபூமியில் சிதேக்கியாவைக் கிட்டி, அவனைப் பிடித்து, அவனை ஆமாத்தேசத்தின் ஊராகிய ரிப்லாவுக்கு, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடத்தில் கொண்டு போனார்கள்; அங்கேஇவன் அவனைக் குறித்துத் தீர்ப்புச்செய்தான்.

39 அதிகாரம்

எரே 39:6 பின்பு பாபிலோன் ராஜா ரிப்லாவிலே, சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டுவித்தான்; யூதா பிரபுக்கள் அனைவரையும் பாபிலோன் ராஜா வெட்டி,

எரே 39:7 சிதேக்கியாவின் கண்களைக் கெடுத்து, அவனை பாபிலோனுக்குக் கொண்டுபோக அவனுக்குஇரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டான்.

"ஆமாத் தேசத்தின் ஊராகிய ரிப்லா" - எரே 32:4; எரே 34:3 ஆகிய வசனங்களில் "உன் கண்கள் பாபிலோன் ராஜாவின் கண்களைக் காணும். அவன் வாய் உன் வாயோடே பேசும்" என்று கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. சிதேக்கியாவை ரிப்லாவிற்கு இழுத்து வருகிறார்கள். அங்கு நேபுகாத்நேச்சார் இருக்கிறான். அவன் சிதேக்கியாவிற்குத் தீர்ப்புச் செய்தான்.

"சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டுவித்தான்" - சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திருந்தால் அவனுடைய வாழ்க்கையில் இந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றிருக்காது. எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சிதேக்கியாவிற்குக் கூறிவந்தான். ஆனால் சிதேக்கியா அதற்குக் கீழ்ப்படியவில்லை. (எரே 38:17-23).

"அவனை பாபிலோனுக்குக் கொண்டுபோக" - "நீ பாபிலோனுக்குப் போவாய்" (எரே 34:3) என்று சிதேக்கியாவைக் குறித்து ஏற்கெனவே தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. அது நிறைவேறுகிறது. அதே சமயத்தில் அங்கு அவனுடைய கண்கள் பிடுங்கப்படுகின்றன. ஆகையினால் "அவன் பாபிலோனைக் காணமாட்டான்" (எசே 12:13) என்னும் தீர்க்கதரிசனமும் நிறைவேறுகிறது.

(இ) எருசலேம் அழிக்கப்பட்டது

எரே 39:8 கல்தேயர் ராஜாவின் அரமனையையும் ஜனத்தின் வீடுகளையும் அக்கினியால் சுட்டெரித்து, எருசலேமின் மதில்களை இடித்துப் போட்டார்கள்.

"கல்தேயர் ராஜாவின் அரமனையையும் ஜனத்தின் வீடுகளையும் அக்கினியால் சுட்டெரித்து" - சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போனதினிமித்தமாக இந்தச் சம்பவங்களெல்லாம் நடைபெறுகின்றன. எரேமியா கூறியபடி, சிதேக்கியா எருசலேம் நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவதற்குக் காரணமானான். (எரே 39:8=எரே 38:17,23).

(ஈ) கடைசியாக கடந்து போனவர்கள் - (52:28-30)

எரே 39:9 நகரத்தில் தங்கியிருந்த ஜனங்களையும், தன் பட்சத்தில் ஓடிவந்து விட்டவர்களையும், மீதியான மற்ற ஜனங்களையும், காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோனான்.

"மீதியான மற்ற ஜனங்களையும்" - எருசலேமின் ஜனங்கள் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் மடிந்தார்கள். இதில் மடிந்துபோகாமல் மீதமுள்ள ஜனங்களை நேபுசராதான் என்னும் காவற்சேனாதிபதி பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோனான்.

(உ) ஒருசிலர் மீதியாக வைக்கப் பட்டார்கள் - (ஏசா 1:9)

எரே 39:10 காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் ஒன்றுமில்லாத ஏழைகளில் சிலரை யூதா தேசத்திலே வைத்து, அவர்களுக்கு அந்நாளிலே திராட்சத் தோட்டங்களையும் வயல்நிலங்களையும் கொடுத்தான்.

எரேமியா - தொகுப்புரை

39 அதிகாரம்

"ஒன்றுமில்லாத ஏழைகளில் சிலரை யூதா தேசத்திலே வைத்து" - எருசலேமிலுள்ள ஜனங்களில் சிலர் சிறைகளாகக் கொண்டு போவதற்குக் கூட தகுதியற்றவர்களாக இருந்தார்கள். அவர்களை நேபுசராதான் பாபிலோனுக்குக் கொண்டுபோகாமல், யூதாவிலேயே விட்டுவிட்டான். அவர்களுக்கு யூதாவில் ஒரு சொத்துக்கூட கிடையாது. அவர்களுடைய ஜீவாதாரத்திற்காக நேபுசராதான் அவர்களுக்கு திராட்சத் தோட்டங்களையும் வயல் நிலங்களையும் கொடுத்தான்.

(ஊ) எரேமியா தப்புவிக்கப்பட்டான் - *(15:11)*

எரே 39:11 ஆனாலும் எரேமியாவைக் குறித்து, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் காவற் சேனாதிபதியாகிய நேபுசராதானை நோக்கி:

எரே 39:12 நீ அவனை அழைப்பித்து, அவனுக்கு ஒரு பொல்லாப்பும் செய்யாமல், அவனைப் பத்திரமாய்ப் பார்த்து, அவன் உன்னோடே சொல்லுகிறபடியெல்லாம் அவனை நடத்தென்று கட்டளை கொடுத்தான்.

எரே 39:13 அப்படியே காவற் சேனாதிபதியாகிய நேபுசராதானும், நேபுசஸ்பான், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் என்பவர்களும், பாபிலோன் ராஜாவின் எல்லாப் பிரபுக்களும்,

எரே 39:14 எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்து வரவழைத்து, அவனை வெளியே வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகும் படிக்கு அவனைச்சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலி யாவினிடத்தில் ஒப்புவித்தார்கள்; அப்படியே அவன் ஜனத்துக்குள்ளே தங்கியிருந்தான்.

"நேபுகாத்நேச்சார் காவற் சேனாதிபதியாகிய நேபுசராதானை நோக்கி" - எரேமியாவிற்குக் கர்த்தருடைய கண்களில் நேபுகாத்நேச்சார் மூலமாகக் கிருபை கிடைக்கிறது. எரேமியாவிற்கு ஒருபொல்லாப்பும் செய்யாமல் அவரைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நேபுசராதானுக்கு நேபுகாத்நேச்சார் கட்டளையிடுகிறான். *(எரே 39:11-12).*

"பாபிலோன் ராஜாவின் எல்லாப் பிரபுக்களும்" - இந்த வசனத்தில் பாபிலோனின் மற்றப் பிரபுக்களின் பெயர்களும் கூறப்பட்டிருக்கிறது. (எரே 39:3). இவர்கள் எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்து வரவழைத்து, கெதலி யாவினிடத்தில் ஒப்புவித்தார்கள். யூதா தேசத்தில் விட்டுவிடப்பட்ட ஜனங்களுக்குள் தங்கியிருக்குமாறு எரேமியாவிற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. (எரே 39:14).

(எ) எத்தியோப்பியனுக்குச் செய்தி

எரே 39:15 இதுவுமல்லாமல், எரேமியா இன்னும் காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப் பட்டிருக்கையில், அவனுக்குக் கர்த்தரால் உண்டான வசனம்:

எரே 39:16 நீ போய், எத்தி யோப்பியனாகிய எபெத்மெலேக்குக்குச் சொல்லவேண்டியது என்னவென்றால், இதோ, என்னுடைய வார்த்தைகளை இந்த நகரத்தின்மேல் நன்மையாக அல்ல,தீமையாகவே வரப்பண்ணுவேன்; அவைகள் அந்நாளிலே உன் கண்களுக்கு முன்பாக நிறைவேறும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர்சொல்லுகிறார்.

எரே 39:17 ஆனால் அந்நாளிலே உன்னைத் தப்புவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை.

எரே 39:18 உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை; நீ என்னை நம்பின படியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்தகொள்ளைப் பொருளைப்போல இருக்குமென்றுகர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

39 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 75

"கர்த்தரால் உண்டான வசனம்........" (எரே 39:15-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. என்னுடைய வார்த்தைகளை இந்த நகரத்தின்மேல் நன்மையாக அல்ல, தீமையாகவே வரப்பண்ணுவேன் (எரே 39:16).
2. அவைகள் அந்நாளிலே உன் கண்களுக்கு முன்பாக நிறைவேறும்.
3. அந்நாளிலே உன்னைத் (எபெத்மெலேக்) தப்புவிப்பேன் (எரே 39:17).
4. நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை.
5. உன்னை நிச்சயமாக விடுவிப்பேன் (எரே 38:18).
6. நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை.

"நீ என்னை நம்பினபடியினால்" - தம்மை நம்புகிறவர்களைக் கர்த்தர் ஒருபோதும் கைவிடமாட்டார். எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் எரேமியாவிற்கு நன்மை செய்தான். அவனுடைய அன்பிற்காகக் கர்த்தர் அவனுடைய ஜீவனைப் பாதுகாக்கிறார். (எரே 38:13).

40 அதிகாரம்

VIII. மீதியாக இருப்பவர்களுக்கு தீர்க்கதரிசனங்கள் - (40:1-45:5; 2இராஜா 25:22-26; ஏசா 1:9)

1. எரேமியா விடுவிக்கப்பட்டான்

எரே 40:1 பாபிலோனுக்குக் கொண்டு போகும் படி எருசலேமிலும் யூதாவிலும் சிறைகளாய்ப் பிடித்துவைக்கப்பட்ட ஜனங்களுக்குள் விலங்கிடப்பட்டிருந்த எரேமியாவைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் விடுதலையாக்கி ராமாவிலிருந்து அனுப்பிவிட்ட பின்பு, எரேமியாவுக்குக் கர்த்தரால்உண்டான வசனம்:

எரே 40:2 காவற்சேனாதிபதி எரேமியாவை அழைப்பித்து, அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தர் இந்த ஸ்தலத்துக்கு இந்தத் தீங்கு வருமென்று சொல்லியிருந்தார்.

எரே 40:3 தாம் சொன்னபடியே கர்த்தர் வரப்பண்ணியுமிருக்கிறார்; நீங்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்து, அவருடைய சத்தத்துக்குச் செவி கொடாமற் போனீர்கள்; ஆகையால் உங்களுக்கு இந்தக் காரியம் வந்தது.

எரே 40:4 இப்போதும், இதோ, உன் கைகளிலிடப்பட்ட விலங்குகளை இன்று நீக்கிப் போட்டேன்; என்னோடேகூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்மையாய்த் தோன்றினால் வா, நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்வேன்; என்னோடே கூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்றாய்த் தோன்றாவிட்டால், இருக்கட்டும்; இதோ, தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது, எவ்விடத்துக்குப்போக உனக்கு நன்மையும் செவ்வையுமாய்க் காண்கிறதோ அவ்விடத்துக்குப்போ என்றான்.

எரே 40:5 அவன் இன்னும் போகாமலிருக்கும்போது, அவன் இவனை நோக்கி: நீ பாபிலோன் ராஜா யூதா பட்டணங்களின்மேல் அதிகாரியாக வைத்த சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின்மகனான கெதலியாவினிடத்துக்குத் திரும்பிப் போய், அவனோடே ஜனங்களுக்குள்ளே தங்கியிரு; இல்லாவிட்டால், எவ்விடத்துக்குப் போக உனக்குச் செவ்வையாய்த் தோன்றுகிறதோ, அவ்விடத்துக்குப் போ என்று சொல்லி, காவற்சேனாதிபதி அவனுக்கு வழிச்செலவையும் வெகுமதியையும் கொடுத்து அவனை அனுப்பிவிட்டான்.

எரே 40:6 அப்படியே எரேமியா மிஸ்பாவுக்கு அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் போய், தேசத்தில் மீதியான ஜனங்களுக்குள் அவனோடே தங்கியிருந்தான்.

"ஜனங்களுக்குள் விலங்கிடப்பட்டிருந்த எரேமியா" - பாபிலோனின் காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான் எருசலேமிலுள்ள ஜனங்களையெல்லாம் விலங்கிட்டுச் சிறைக்கைதியாக ராமாவிற்கு அழைத்துச் சென்றான். அந்தக் கைதிகளோடு எரேமியாவும் விலங்கிடப்பட்டு ராமாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். ராமாவிலே நேபுசராதான் எல்லாக் கைதிகளையும் கூட்டிச் சேர்த்து, அவர்களைச் சோதித்துப் பார்த்தான். அவன் எரேமியாவை மற்றக் கைதிகளிடமிருந்து தனியாகப் பிரித்தான். இந்த யுத்தத்தில் பாபிலோன் ராஜாவிற்குச் சாதகமாக எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்ததினால் எரேமியாவின் மீது நேபுசராதானுக்கு விசேஷித்த இரக்கமுண்டாயிற்று. எரேமியாவிற்கு விசேஷித்த சலுகையைக் காண்பித்தான். (எரே 40:2).

எரேமியா - தொகுப்புரை

40 அதிகாரம்

"எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வசனம்" - தீர்க்கதரிசிகள் வரப்போகிற சம்பவங்களை முன்னறிவிப்பதோடு 1கொரி 14:3 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் பக்திவிருத்திக்காகவும், புத்திமதி கூறுவதற்காகவும்,ஆறுதல் செய்வதற்காகவும் பேசுகிறார்கள். எரே 40-44 ஆகிய அதிகாரங்களில் பாலஸ்தீன தேசத்தில் மீதமுள்ள ஜனங்களுக்கு கூறப்பட்டிருக்கிற செய்தி இடம் பெற்றுள்ளது. இந்தச் செய்திகளில் ஒருசில முன்னறிவிப்புக்களே இடம்பெற்றுள்ளன. வரலாற்றுச் செய்திகளை யூதர்கள் கர்த்தருடைய வார்த்தையாகவே அங்கிகரித்தார்கள். தீர்க்கதரிசிகளினால் ஏவப்பட்டு எழுதப்படும் எல்லா வார்த்தைகளுக்கும் யூதர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். யூதர்களின் வரலாற்றுப் புஸ்தகங்கள் அவர்களுடைய வரலாற்றுக் காலத்து தீர்க்கதரிசிகள் என்றும் அழைக்கப்படுகிறது.

"உன் தேவனாகிய கர்த்தர் இந்த ஸ்தலத்துக்கு இந்தத் தீங்கு வருமென்று சொல்லியிருந்தார்" - இந்த வாக்கியங்களை காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் கூறுகிறான். கர்த்தர் முன்னறிவித்த வார்த்தைகளைப் பாபிலோன் தேசத்துக்காரன் கூறுகிறான். யூதா தேசத்தாரின் பாவத்தின் நிமித்தமாகவும், கர்த்தருடைய சத்தத்திற்கு அவர்கள் செவிகொடாமற்போனதின் நிமித்தமாகவும் இந்தத் தீங்கு அவர்கள்மீது வந்ததாக நேபுசராதான் அறிவிக்கிறான். (எரே 40:2-3) எரேமியாவின் கைகளிலிடப்பட்ட விலங்குகளை அவன் நீக்கிப்போட்டான். எரேமியாவின் விருப்பம்போல அவர் பாபிலோனுக்குப் போகலாம் அல்லது யூதா தேசத்திலேயே தங்கிக் கொள்ளலாம் என்று நேபுசராதான் எரேமியாவை விடுவித்துவிட்டான். (எரே 40:4-5) அத்துடன் எரேமியாவிற்கு வழிசெலவையும், வெகுமதியையும் கொடுத்து, அவரை அனுப்பிவிடுகிறான். (எரே 40:6).

2. யூதர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள்

எரே 40:7 பாபிலோன் ராஜா அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை தேசத்தின் மேல் அதிகாரியாக்கினான் என்றும், பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டு போகப்பட்டிராத குடிகளில் ஏழைகளான புருஷரையும் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் அவனுடைய விசாரிப்புக்கு ஒப்புவித்தான் என்றும், வெளியிலிருக்கிற இராணுவச் சேர்வைக்காரர் அனைவரும் அவர்களுடைய மனுஷரும் கேட்டபோது,

எரே 40:8 அவர்கள் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடத்தில் வந்தார்கள்; யாரெனில், நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலும், கரேயாவின் குமாரராகிய யோகனானும், யோனத்தானும், தன்கூமேத்தின் குமாரனாகிய செராயாவும், நெத்தோபாத்தியனாகிய ஏப்பாயின் குமாரரும், மாகாத்தியனான ஒருவனுடைய குமாரனாகிய யெசனியாவும் ஆகிய இவர்களும் இவர்களைச் சேர்ந்தவர்களுமே.

எரே 40:9 அப்பொழுது சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகன் கெதலியா அவர்களையும் அவர்கள் மனுஷரையும் நோக்கி: நீங்கள் கல்தேயரைச் சேவிக்கப் பயப்படவேண்டாம், நீங்கள் தேசத்திலிருந்து பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள்; அப்பொழுது உங்களுக்கு நன்மையுண்டாகும்.

எரே 40:10 நானோவெனில், இதோ, நம்மிடத்திலே வருகிற கல்தேயரிடத்தில் சேவிக்கும்படி மிஸ்பாவிலே குடியிருக்கிறேன்; நீங்களோ போய், திராட்சரசத்தையும் பழங்களையும் எண்ணெயையும் சேர்த்து, உங்கள் பாண்டங்களில் வைத்து, உங்கள் வசமாயிருக்கிற ஊர்களில் குடியிருங்கள் என்று ஆணையிட்டுச் சொன்னான்.

40 அதிகாரம்

எரே 40:11 மோவாபிலும் அம்மோன் புத்திரரிடத்திலும் ஏதோமிலும் சகல தேசங்களிலும் இருக்கிற யூதரும், பாபிலோன் ராஜா யூதாவில் சிலர் மீதியாயிருக்கக் கட்டளையிட்டானென்றும், சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவை அவர்கள் மேல் அதிகாரியாக் கினானென்றும், கேட்டபோது,

எரே 40:12 எல்லா யூதரும் தாங்கள் துரத்துண்ட எல்லா இடங்களிலுமிருந்து, யூதாதேசத்தில் கெதலியாவினிடத்தில் மிஸ்பாவுக்கு வந்து, திராட்சரசத்தையும் பழங்களையும் மிகுதியாய்ச் சேர்த்து வைத்தார்கள்.

"வெளியிலிருக்கிற இராணுவச் சேர்வைக்காரர்" - கல்தேயர் எருசலேமின்மீது படையெடுத்து வந்தபோது சிதேக்கியாவின் இராணுவச்சேர்வைக்காரரில் அநேகர் தப்பி ஓடிவிட்டார்கள். பாபிலோனியர் எருசலேமைப் பிடித்து, அங்குள்ளவர்களைச் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டார்கள். ஏழைகளையும், தரித்திரர்களையும் எருசலேமில் பயிரிடும் குடிகளாக விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். அத்துடன் யூதா பட்டணங்களின்மீது கெதலியா என்பவனை பாபிலோன் ராஜா அதிகாரியாக நியமித்தான். இதை எருசலேமிற்கு வெளியிலிருக்கிற சிதேக்கியாவின் இராணுவச் சேர்வைக்காரர் கேள்விப்பட்டு, கெதலியாவிடம் திரும்ப வருகிறார்கள். இராணுவச் சேர்வைக்காரரில் ஐந்துபேரின் பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவர்களின் பெயர்கள் தெரியவில்லை. கெதலியா அவர்களையும், அவர்களுடைய மனுஷரையும் பாலஸ்தீன தேசத்தில் மறுபடியும் குடியேறி பாபிலோனைச் சேவிக்குமாறு வரவேற்கிறான். (எரே 40:7-10). அவர்களில் ஒருவனாகிய இஸ்மவேல் துரோகம் செய்து, கெதலியாவைக் கொன்றுபோட்டான். அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலிஸ் (Baalis) என்பவனின் சதியாலோசனை இஸ்மவேல் மூலமாக நிறைவேறிற்று. (எரே 40:14; எரே 41:1-2).

"சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகன் கெதலியா" - சிதேக்கியா நேபுகாத்நேச்சாருக்கு எதிராகக் கலகம் செய்து, யுத்தம் பண்ணிய போது கெதலியா அந்த யுத்தத்திற்கு எதிர்த்து நின்றான். இதற்காகப் பாபிலோன் ராஜா கெதலியாவை யூதாவின் பட்டணங்களின்மீது அதிகாரியாக நியமித்தான். இஜ்ஞணுவச் சேர்வைக்காரரையும், அவர்களோடு இருந்த யூத ஜனங்களையும் பாலஸ்தீன தேசத்தில் குடியிருக்குமாறும், நேபுகாத்நேச்சாரைச் சேவிக்குமாறும், இதனால் அவர்களுக்கு நன்மையுண்டாகும் என்றும், கெதலியா அறிவித்தான். மிஸ்பாவைத் தனது தலைநகரமாக வைத்துக் கொண்டான். எருசலேமிற்கு வடக்கே ஆனாதோத்திற்கு அருகில் மிஸ்பா அமைந்துள்ளது. (எரே 40:10; எரே 41:5-9; யோசு 18:26; 1சாமு 7:16; 1சாமு 10:17; 1இராஜா 15:22). இஸ்ரவேலின் வரலாற்றில் பல சம்பவங்கள் மிஸ்பாவில் நடைபெற்றுள்ளன. ஆசாவின் கோட்டை இங்குள்ளது. (எரே 41:9-10) அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், எருசலேமைப் பிடித்த ரோமப்பேரரசனான தீத்து ஆகியோர் மிஸ்பாவிலிருந்துதான் எருசலேமை முதன் முறையாகப் பார்த்தார்கள்.

"மோவாபிலும் அம்மோன் புத்திரரிடத்திலும் ஏதோமிலும் சகல தேசங்களிலும் இருக்கிற யூதர்" - மோவாப், அம்மோன், ஏதோம் ஆகிய தேசங்களுக்கெல்லாம் யூதர்கள் தப்பி ஓடிப் போய்விட்டார்கள். அவர்களெல்லோரும் திரும்பி வந்து, யூதாவில் மீதமாக உள்ள ஜனங்களோடு சேர்ந்து கொள்கிறார்கள். கர்த்தர் எரேமியாவின் மூலமாக முன்னறிவித்த பிரகாரம் இவர்கள் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். பாபிலோன் ராஜாவின் கைக்குத் தப்புவிக்கப் படுவார்கள். பாபிலோனின் சிறையிருப்புக்குப் போன யூதர்கள் அங்கு எழுபது வருஷம் சிறையிருப்பில் இருப்பார்கள். இந்தக் காலத்தில் யூதா தேசத்தில் மீதமுள்ள ஜனங்கள் அந்தத் தேசத்திலேயே தங்கியிருந்து, நன்மைகளைப் பெறுவார்கள். 70 வருஷத்திற்குப் பின்பு பாபிலோனின் சிறையிருப்பிலுள்ள யூதர்கள் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். (எரே 41:9-22).

40 அதிகாரம்

"சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவை அவர்கள் மேல் அதிகாரியாக்கினான்" - சிதேக்கியாவின் இராணுவச்சேர்வைக்காரர் இந்தச் செய்தியைக் கேள்விப்படுகிறார்கள். அவர்கள் மிஸ்பாவிலுள்ள கெதலியாவிடம் வருகிறார்கள். இஸ்மவேல் இவர்களோடு வரவில்லை. கெதலியாவிற்கு எதிராக இஸ்மவேலின் சதியாலோசனையைப் பற்றி இராணுவச்சேர்வைக்காரர் அவனிடம் எச்சரித்துக் கூறுகிறார்கள். ஆனால் கெதலியாவோ அவர்களை நம்பவில்லை. இராணுவச் சேர்வைக்காரரில் ஒருவன் இஸ்மவேலைக் கொன்றுபோடுவதற்கும் முன்வந்தான். ஆனால் கெதலியாவோ அதைத் தடுத்து விடுகிறான். கெதலியா அந்தளவிற்கு இஸ்மவேலை முழுமையாக நம்புகிறான். (எரே 40:13-16).

3. கெதலியாவிற்கு எதிரான சதி

எரே 40:13 அப்பொழுது கரேயாவின் குமாரனாகிய யோகனானும் வெளியிலே இருந்த சகல இராணுவச் சேர்வைக்காரரும் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடத்தில் வந்து,

எரே 40:14 உம்மைக் கொன்றுபோடும் படிக்கு, அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலிஸ் என்பவன், நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலை அனுப்பினானென்பதை நீர் அறியவில்லையோ என்றார்கள்; ஆனாலும் அகிக்காமின் குமாரனாகிய கெதலியா அவர்கள் வார்த்தையை நம்பவில்லை.

எரே 40:15 பின்னும் கரேயாவின் குமாரனாகிய யோகனான் மிஸ்பாவிலே கெதலியாவோடே இரகசியமாய்ப் பேசி: நான் போய் ஒருவரும் அறியாமல் நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலை வெட்டிப்போட உத்தரவாக வேண்டும்; உம்மிடத்தில் சேர்ந்த யூதரெல்லாரும் சிதறுண்டு போகவும் யூதாவில் மீந்தவர்கள் அழியவும் அவன் உம்மைக் கொன்றுபோட வேண்டியதென்ன என்றான்.

எரே 40:16 ஆனாலும் அகிக்காமின் குமாரனாகிய கெதலியா கரேயாவின் குமாரனாகிய யோகனானை நோக்கி: நீ இந்தக் காரியத்தைச் செய்யாதே; இஸ்மவேலின்மேல் நீ பொய் சொல்லுகிறாய் என்றான்.

"அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலிஸ்" - கெதலியாவைக் கொல்வதற்கு இவனே சதியாலோசனை பண்ணினான். இந்தச் சதியினால் இவனுக்கு என்ன ஆதாயம் கிடைக்குமென்று வேதாகமத்தில் கூறப்படவில்லை. சிதேக்கியாவும், அம்மோன் ராஜாவும் உடன்படிக்கை செய்திருந்தார்கள். சிதேக்கியாவோடு அம்மோனின் ராஜா உடன்படிக்கை பண்ணுவதற்கு அகிக்காமின் குடும்பத்தார் விரோதமாக இருந்தார்கள். (எரே 27:3). பாபிலோன் ராஜாவோடு யூதா தேசத்தார் யுத்தம்பண்ணும் போது கெதலியா அதை முழுவதுமாக எதிர்த்து நின்றான். அப்படி எதிர்த்து நின்றவன் இப்போது யூதாவின் பட்டணங்களின்மீது அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறான். ஆகையினால் அவனைக் கொன்றுபோட வேண்டுமென்று இஸ்மவேல் சதி பண்ணியிருந்திருக்கலாம். மேலும் இஸ்மவேல் தாவீதின் வம்சத்தில் பிறந்தவன். இதனால் தனக்கே யூதாவை ஆளுகை செய்யும் அதிகாரம் வரவேண்டுமென்று இஸ்மவேல் ஒருவேளை நினைத்து, இந்தச் சதிச்செயலில் ஈடுபட்டிருக்கலாம். (எரே 41:1).

41 அதிகாரம்

4. சதி நிறைவேறுகிறது

எரே 41:1 பின்பு ஏழாம் மாதத்திலே ராஜவம்சத்தில் பிறந்தவனும், எலிசாமாவின் குமாரனாகிய நெத்தானியாவின் மகனுமான இஸ்மவேலும், அவனுடனே கூட ராஜாவின் பிரபுக்களான பத்துப்பேரும் மிஸ்பாவுக்கு அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் வந்து, அங்கே ஏகமாய் போஜனம் பண்ணினார்கள்.

எரே 41:2 அப்பொழுது நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலும், அவனோடிருந்த பத்துப்பேரும் எழும்பி, பாபிலோன் ராஜா தேசத்தின்மேல் அதிகாரியாக வைத்த சாப்பானின் குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவைப் பட்டயத்தால் வெட்டினார்கள்.

எரே 41:3 மிஸ்பாவிலே கெதலியாவினிடத்தில் இருந்த எல்லா யூதரையும், அங்கே காணப்பட்ட யுத்தமனுஷராகிய கல்தேயரையும் இஸ்மவேல் வெட்டிப் போட்டான்.

எரே 41:4 அவன் கெதலியாவைக் கொன்ற பின்பு, மறுநாளிலே அதை ஒருவரும்இன்னும்அறியாதிருக்கையில்:

எரே 41:5 தாடியைச் சிரைத்து, வஸ்திரங்களைக் கிழித்து, தங்களைக் கீறிக்கொண்டிருந்த எண்பதுபேர் சீகேமிலும் சீலோவிலும் சமாரியாவிலுமிருந்து, தங்கள் கைகளில் காணிக்கைகளையும் தூபவர்க்கங்களையும், கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுபோகும்படி வந்தார்கள்.

எரே 41:6 அப்பொழுது நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து புறப்பட்டு, அவர்களுக்கு எதிராக அழுதுகொண்டே நடந்துவந்து, அவர்களைச் சந்தித்தபோது, அவர்களை நோக்கி: அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் வாருங்கள் என்றான்.

எரே 41:7 அவர்கள் நகரத்தின் மத்தியில் வந்தபோது, நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலும், அவனோடிருந்த மனுஷரும் அவர்களை வெட்டி ஒரு பள்ளத்திலே தள்ளிப் போட்டார்கள்.

எரே 41:8 ஆனாலும் அவர்களில் பத்துப்பேர் மீந்திருந்தார்கள்; அவர்கள் இஸ்மவேலைப்பார்த்து: எங்களைக் கொலை செய்ய வேண்டாம்; கோதுமையும் வாற்கோதுமையும் எண்ணெயும் தேனுமுள்ள புதையல்கள் எங்களுக்கு நிலத்தின் கீழ் இருக்கிறது என்றார்கள்; அப்பொழுது அவர்களை அவர்கள் சகோதரரோடுங்கூடக் கொலை செய்யாமல் விட்டுவைத்தான்.

எரே 41:9 இஸ்மவேல் கெதலியாவினிமித்தம் வெட்டின மனுஷருடைய பிரேதங்களையெல்லாம் எறிந்துபோட்ட பள்ளமோவெனில், ஆசா என்னும் ராஜாஇஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவினிமித்தம் உண்டுபண்ணின பள்ளந்தானே; அதை நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் வெட்டுண்ட பிரேதங்களால் நிரப்பினான்.

எரே 41:10 பின்பு இஸ்மவேல் மிஸ்பாவில் இருக்கிற மீதியான ஜனத்தையெல்லாம் சிறைப்படுத்திக் கொண்டு போனான்; ராஜாவின் குமாரத்திகளையும் காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான் அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவின் விசாரிப்புக்கு ஒப்புவித்துப் போன மிஸ்பாவிலுள்ள மீதியானசகல ஜனங்களையும் நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் சிறைப்படுத்திக் கொண்டு அம்மோன் புத்திரர் பட்சத்தில் போகப் புறப்பட்டான்.

"ஏழாம் மாதத்திலே" - யூதாவின் பட்டணங்கள்மீது கெதலியா மூன்று மாதங்கள் மட்டுமே அதிகாரியாக இருந்தான். ஏழாவது மாதத்தில் கெதலியா கொலைசெய்யப்பட்டான். நான்காம் மாதத்தில் எருசலேம் அழிக்கப்பட்டது. (எரே 52:4-6; 2இராஜா 25:25).

எரேமியா - தொகுப்புரை

41 அதிகாரம்

"ராஜாவின் பிரபுக்களான பத்துப்பேரும் மிஸ்பாவுக்கு அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் வந்து" - இஸ்மவேலும், ராஜாவின் பிரபுக்கள் பத்துப்பேரும் கெதலியாவிடம் ஆயுதபாணிகளாக வருகிறார்கள். ஆனால் கெதலியாவோ அவர்களை முழுவதுமாக நம்புகிறான். தன்னுடைய ஜீவனைக் காத்துக் கொள்வதற்குக் கெதலியா முன்னேற்பாடாக எதையும் செய்யவில்லை. தனக்கு விரோதமாக வருகிறவர்களை நம்பி, அவர்களோடு ஏகமாய் போஜனம் பண்ணினான். ஆனால் அவர்களோ கெதலியாவைப் பட்டயத்தால் வெட்டி கொன்று போட்டார்கள். (எரே 41:1-2).

இஸ்மவேலின் துன்மார்க்கமான கிரியைகள்

1. கெதலியாவைக் கொன்றுபோட்டான். (எரே 41:2).
2. கெதலியாவோடு இருந்த எல்லா யூதரையும் வெட்டிப்போட்டான். (எரே 41:3).
3. யுத்தமனுஷரையும் வெட்டிப்போட்டான்.
4. கல்தேயரையும் வெட்டிப் போட்டான்.
5. கர்த்தருடைய ஆலயத்துக்கு வந்த 70 பேரை வெட்டிப்போட்டான். (எரே 41:5-8).
6. அழுது மற்றவர்களை வஞ்சித்தான். (எரே 41:6-7).
7. மிஸ்பாவில் இருக்கிற மீதியான ஜனத்தையும், ராஜாவின் குமாரத்திகளையும், சிறைப் படுத்தினான். (எரே 41:10).

"இஸ்மவேல்" (Ishmael) - இந்தப் பெயருக்குத் "தேவன் கேட்கிறார்" "God hears" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "இஸ்மவேல்"கள்

1. ஆபிரகாமின் குமாரன் (ஆதி 16:11-16; ஆதி 17:18-26; ஆதி 25:9-17; ஆதி 28:9)
2. செபதியாவின் முன்னோர்களில் ஒருவன். (2நாளா 19:11)
3. ஆசேரின் குமாரன் (1நாளா 8:38; 1நாளா 9:44)
4. யோகனானின் குமாரன்(2நாளா 23:1)
5. பஸ்கூரின் குமாரன் (எஸ்றா 10:22)
6. நெதனியாவின் குமாரன் (எரே 41:8-16; எரே 21:1-18).

இங்கு கூறப்பட்டிருக்கும் இஸ்மவேல் துன்மார்க்கமான மனுஷன். இவனுடைய துர்க்கிரியைக்காக ஐந்தாம் மாதத்திலும், ஏழாம் மாதத்திலும் உபவாசம்பண்ணி துக்கங் கொண்டாடப்பட்டது. (சக 7:5; சக 8:9).

"கோதுமையும் வாற் கோதுமையும் எண்ணெயும் தேனுமுள்ள புதையல்கள் எங்களுக்கு நிலத்தின் கீழ் இருக்கிறது" - கிழக்கு தேசத்தில் உணவுதானியங்களைப் பூமிக்கடியில் புதைத்து வைப்பது வழக்கம். எதிரி தேசத்தார் இதைக் கண்டுபிடிக்காதவாறு பூமிக்குள் இவற்றைப் புதைத்து, அதன்மீது வைக்கோல் முதலிய பொருட்களால் அதைப் பரப்பி மூடிவிடுவார்கள். சில இடங்களில் இந்தப் புதையலுக்குமேல் கல்லை வைத்து மூடி அதன்மீது சிறிய பிரமிடைப்போலவும் கட்டி விடுவார்கள். இந்தப் புதையல்கள் எங்கிருக்கிறது என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும். ஒருசில தேசங்களில் ஒவ்வொரு குழந்தைபிறக்கும் போதும், அந்தக் குழந்தைக்கென்று இதைப் போல உணவுதானியப் புதையலைப் புதைத்து வைப்பது வழக்கம். (மத் 13:44).

5. யோகனான் தலைவனானான்

எரே 41:11 நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் செய்த பொல்லாப்பையெல்லாம் கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரும் கேட்ட போது,

41 அதிகாரம்

எரே 41:12 அவர்கள் புருஷரையெல்லாம் கூட்டிக்கொண்டு, நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலோடே யுத்தம் பண்ணப்போய், அவனைக் கிபியோனிலிருக்கும் பெருங்குளத்துத் தண்ணீரண்டையிலே கண்டார்கள்.

எரே 41:13 அப்பொழுது இஸ்மவேலோடிருந்த சகல ஜனங்களும் கரேயாவின் குமாரனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரையும் கண்டு சந்தோஷப்பட்டு,

எரே 41:14 இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து சிறைப்பிடித்துக்கொண்டுபோன ஜனங்களெல்லாம் பின்னிட்டுத் திரும்பி, கரேயாவின் குமாரனாகிய யோகனானிடத்தில் வந்துவிட்டார்கள்

எரே 41:15 நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலோ, எட்டுப் பேரோடுங்கூட யோகனானின் கைக்குத் தப்பி, அம்மோன் புத்திரரிடத்தில் போனான்.

எரே 41:16 கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரும், அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை வெட்டிப்போட்ட நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் கொண்டு போனதும், தாங்கள் கிபியோனிலே விடுதலையாக்கித் திரும்பப் பண்ணினதுமான மீதியான சகல ஜனமுமாகிய சேவகரான மனுஷரையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும், அரமனைப் பிரதானிகளையும் சேர்த்துக்கொண்டு,

எரே 41:17 பாபிலோன் ராஜா தேசத்தின் மேல் அதிகாரியாக்கின அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் வெட்டிப்போட்டதினிமித்தம், கல்தேயருக்குப் பயந்தபடியினால்,

எரே 41:18 தாங்கள் எகிப்துக்குப் போகப் புறப்பட்டு, பெத்லகேமூருக்கு அருகான கிம்காமின் பேட்டையில் தங்கியிருந்தார்கள்.

“கிம்காமின் பேட்டையில் தங்கியிருந்தார்கள்” - யூதாவில் மீதமுள்ளவர்கள் கல்தேயருக்காகப் பயப்படுகிறார்கள். கெதலியாவை யூதாவிலுள்ள பட்டணங்களின் அதிகாரியாக கல்தேயர்கள் நியமித்திருந்தார்கள். கெதலியாவையும், மிஸ்பாவிலுள்ள கல்தேயரையும், இஸ்மவேலும், அவனுடைய மனுஷரும் கொன்றுபோட்டதினால் கல்தேயர் தங்களுக்கு எதிராக வந்து, தங்களை அழித்துப்போடுவார்கள் என்று யூதாவில் மீதமுள்ள ஜனங்கள் பயப்படுகிறார்கள். கல்தேயரிடமிருந்து தப்பித்து, அவர்கள் எகிப்துக்குப் போகப்புறப்படுகிறார்கள். (எரே 41:16-18).

எரேமியா - தொகுப்புரை

42 அதிகாரம்

6. யூதர்கள் எரேமியாவிடம் விசாரிக்கிறார்கள்

எரே 42:1 அப்பொழுது எல்லா இராணுவச் சேர்வைக்காரரும், கரேயாவின் குமாரனாகிய யோகனானும், ஓசாயாவின் குமாரனாகிய யெசனியாவும், சிறியோர் முதல் பெரியோர்மட்டுமான சகல ஜனங்களும் சேர்ந்துவந்து,

எரே 42:2 தீர்க்கதரிசியாகிய எரேமியாவை நோக்கி: உம்முடைய தேவனாகிய கர்த்தர் நாங்கள் நடக்க வேண்டிய வழியையும், செய்யவேண்டிய காரியத்தையும் எங்களுக்குத் தெரியப் பண்ணும்படிக்கு, நீர் எங்கள் விண்ணப்பத்துக்கு இடங்கொடுத்து, மீதியாயிருக்கிற இந்தச் சகல ஜனங்களாகிய எங்களுக்காக உம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்,

எரே 42:3 உம்முடைய கண்கள் எங்களைக் காண்கிறபடியே திரளான ஜனங்களில் கொஞ்சப்பேரே மீந்திருக்கிறோம் என்றார்கள்.

"அப்பொழுது எல்லா இராணுவச் சேர்வைக்காரரும்" - யூதாவில் மீதமுள்ள ஜனங்கள் கெதலியா மரித்த பின்பு, என்ன செய்வது என்று ஒன்றுகூடி யோசனை பண்ணுகிறார்கள். எரேமியாவிடம் சென்று கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அதற்குக் கீழ்ப்படிவது என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். (எரே 42:2-3). எரேமியா அவர்களுக்காகக் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணி, கர்த்தர் கொடுத்த செய்தியை அவர்களிடம் அறிவிக்கிறார். (எரே 42:4) கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாக ஜனங்களும் வாக்குப்பண்ணுகிறார்கள். ஆனால் வாக்குப்பண்ணியபடி கர்த்தருடைய வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. (எரே 42:5-6).

7. எரேமியா தேவனிடம் விசாரிக்கிறான்

எரே 42:4 அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி அவர்களை நோக்கி: நீங்கள் சொன்னதைக் கேட்டேன்; இதோ, உங்கள் வார்த்தையின்படியே உங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுவேன்; கர்த்தர் உங்களுக்கு மறு உத்திரவாகச் சொல்லும் எல்லா வார்த்தைகளையும் நான் உங்களுக்கு ஒன்றையும் மறைக்காமல் அறிவிப்பேன் என்றான்.

8. யூதர்கள் கீழ்ப்படிவதாக வாக்குப் பண்ணுகிறார்கள்

எரே 42:5 அப்பொழுது அவர்கள் எரேமியாவை நோக்கி: உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மைக்கொண்டு எங்களுக்குச் சொல்லியனுப்பும் எல்லா வார்த்தைகளின் படியும் நாங்கள் செய்யாவிட்டால், கர்த்தர் நமக்கு நடுவே சத்தியமும் உண்மையுமான சாட்சியாயிருக்கக்கடவர்.

எரே 42:6 அது நன்மையானாலும் தீமையானாலும் சரி, எங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்கு நாங்கள் கீழ்ப்படிவதினால் எங்களுக்கு நன்மையுண்டாகும்படி நாங்கள் உம்மை அனுப்புகிற எங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.

9. மீதியாக இருப்பவர்களுக்கு தேவனுடைய செய்தி - (ஏசா 1:9)

(1) ஆசீர்வாதம் - நிபந்தனை

எரே 42:7 பத்துநாள் சென்றபின்பு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று.

எரே 42:8 அப்பொழுது அவன், கரேயாவின் குமாரனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரையும், சிறியோர்முதல் பெரியோர்மட்டும் உண்டான சகல ஜனங்களையும் அழைத்து,

42 அதிகாரம்

எரே 42:9 அவர்களை நோக்கி: உங்களுக்காக விண்ணப்பஞ் செய்யும்படிக்கு நீங்கள் என்னை அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்,

எரே 42:10 நீங்கள் இந்த தேசத்திலே தரித்திருந்தால், நான் உங்களைக் கட்டுவேன், உங்களை இடிக்கமாட்டேன்; உங்களை நாட்டுவேன், உங்களைப் பிடுங்கமாட்டேன்; நான் உங்களுக்குச் செய்திருக்கிற தீங்குக்கு மனஸ்தாபப்பட்டேன்.

எரே 42:11 நீங்கள் பயப்படுகிற பாபிலோன் ராஜாவுக்கு பயப்படவேண்டாம், அவனுக்குப் பயப்படாதிருப்பீர்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார், உங்களை இரட்சிக்கும்படிக்கும், உங்களை அவன் கைக்குத் தப்புவிக்கும்படிக்கும் நான் உங்களுடனே இருந்து,

எரே 42:12 அவன் உங்களுக்கு இரங்குகிறதற்கும், உங்கள் சுயதேசத்துக்கு உங்களைத் திரும்பிவரப் பண்ணுகிறதற்கும் உங்களுக்கு இரக்கஞ்செய்வேன்.

"பத்துநாள் சென்றபின்பு" - எரேமியா பத்து நாட்களாகக் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார். யூதா தேசத்தில் மீதமுள்ள ஜனங்களுக்குக் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றுக் கொள்வதற்காக பத்து நாட்களாகக் காத்திருக்கிறார். பத்துநாள் சென்றபின்பு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று. அவர்களுடைய தலைவனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரையும், சிறியோர் முதல் பெரியோர்மட்டும் உண்டான சகல ஜனங்களையும் எரேமியா அழைக்கிறார். (எரே 42:8) அவர்களிடம் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறார். (எரே 42:9-22).

தீர்க்கதரிசன எண் - 76

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்,........" (எரே 42:9-22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீங்கள் இந்த தேசத்திலே தரித்திருந்தால், நான் உங்களைக் கட்டுவேன்............ நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குச் செவி கொடாமல் போனால்............ நீங்கள் பயப்படுகிற பட்டயம் எகிப்து தேசத்திலே உங்களைப் பிடிக்கும்; நீங்கள் ஐயப்படுகிற பஞ்சம் எகிப்திலே உங்களைத் தொடர்ந்து வரும், அங்கே சாவீர்கள். (எரே 42:10-16).
2. எகிப்திலே தங்கவேண்டுமென்று அவ்விடத்துக்குத் தங்கள் முகங்களைத் திருப்பின எல்லா மனுஷருக்கும் அங்கு முடிவு உண்டாகும். (எரே 42:17).
3. அங்கு அவர்கள் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவார்கள்.
4. நான் அவர்கள்மேல் வரப்பண்ணும் தீங்கினாலே அவர்களில் மீதியாகிறவர்களும் தப்புகிறவர்களுமில்லை.
5. என் கோபமும் என் உக்கிரமும் எருசலேமின் குடிகள்மேல் எப்படி மூண்டதோ, அப்படியே என் உக்கிரம் நீங்கள் எகிப்துக்குப் போகும்போது, உங்கள்மேல் மூளும் (எரே 42:18).
6. நீங்கள் சாபமாகவும் பாழாகவும் பழிப்பாகவும் நிந்தையாகவும் இருப்பீர்கள்.
7. இவ்விடத்தை இனிக் காணாதிருப்பீர்கள்.
8. இப்போதும் தங்கியிருப்பதற்கு நீங்கள் போக விரும்புகிற ஸ்தலத்தில்தானே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் சாவீர்கள். (எரே 42:20-22)

எரேமியா - தொகுப்புரை

42 அதிகாரம்

கீழ்ப்படிந்தால் வரும் ஆசீர்வாதம்

1. நான் உங்களைக் கட்டுவேன். (எரே 42:10).
2. உங்களை இடிக்கமாட்டேன்.
3. உங்களை நாட்டுவேன்.
4. உங்களைப் பிடுங்க மாட்டேன்.
5. நான் உங்களுக்குச் செய்திருக்கிற தீங்குக்கு மனஸ்தாபப்படுவேன்.
6. பாபிலோன் ராஜாவிடமிருந்து உங்களை இரட்சிப்பேன். (எரே 42:11).
7. பாபிலோன் ராஜாவின் கையிலிருந்து உங்களைத் தப்புவிப்பேன்.
8. நான் உங்களுக்கு இரக்கஞ்செய்வேன். (எரே 42:12).
9. அவன் (பாபிலோன் ராஜா) உங்களுக்கு இரங்குவான்.
10. உங்கள் சுயதேசத்துக்கு உங்களைத் திரும்பிவரப்பண்ணுவேன்.

(2) சாபம் - நிபந்தனை

எரே 42:13 நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குச் செவி கொடாமல், நாங்கள் இந்த தேசத்திலே இருக்கிறதில்லையென்றும்,

எரே 42:14 நாங்கள் யுத்தத்தைக் காணாததும், எக்காள சத்தத்தைக் கேளாததும், அப்பத்தாழ்ச்சியினால் பட்டினியாய் இராததுமான எகிப்து தேசத்துக்கே போய், அங்கே தரித்திருப்போம் என்றும் சொல்வீர்களேயாகில்,

எரே 42:15 யூதாவில் மீந்திருக்கிறவர்களே, அதைக்குறித்து உண்டானகர்த்தருடையவார்த்தையைக் கேளுங்கள்: நீங்கள் எகிப்துக்குப்போக உங்கள் முகங்களை திருப்பி, அங்கே தங்கப் போவீர்களானால்,

எரே 42:16 நீங்கள் பயப்படுகிற பட்டயம் எகிப்து தேசத்திலே உங்களைப் பிடிக்கும்; நீங்கள் ஐயப்படுகிற பஞ்சம் எகிப்திலே உங்களைத் தொடர்ந்துவரும், அங்கே சாவீர்கள்.

எரே 42:17 எகிப்திலே தங்க வேண்டுமென்று அவ்விடத்துக்குத் தங்கள் முகங்களைத் திருப்பின எல்லாமனுஷருக்கும் என்ன சம்பவிக்குமென்றால்,பட்டயத்தாலும்,பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவார்கள்; நான் அவர்கள்மேல் வரப்பண்ணும் தீங்கினாலே அவர்களில் மீதியா கிறவர்களும் தப்புகிறவர்களுமில்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 42:18 என் கோபமும் என் உக்கிரமும் எருசலேமின் குடிகள்மேல் எப்படி மூண்டதோ, அப்படியே என் உக்கிரம் நீங்கள் எகிப்துக்குப் போகும் போது, உங்கள்மேல் மூளும்; நீங்கள் சாபமாகவும் பாழாகவும் பழிப்பாகவும் நிந்தையாகவும் இருந்து, இவ்விடத்தை இனிக்காணாதிருப்பீர்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே42:19 யூதாவில் மீதியானவர்களே, எகிப்துக்குப் போகாதிருங்கள் என்று கர்த்தர் உங்களைக் குறித்துச் சொன்னாரென்பதை இந்நாளில் உங்களுக்குச் சாட்சியாக அறிவித்தேன் என்று அறியுங்கள்.

எரே 42:20 உங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதமாய் உங்களை மோசம் போக்கினீர்கள்; நீ எங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி: எங்களுக்காக விண்ணப்பம் பண்ணி, எங்கள் தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் எங்களுக்கு அறிவிக்கவேண்டும்; அதின்படியே செய்வோம் என்று நீங்கள் சொல்லி, என்னை உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்துக்கு அனுப்பினீர்கள்.

எரேமியா - தொகுப்புரை

42 அதிகாரம்

எரே 42:21 நான் இந்நாளில் அதை உங்களுக்கு அறிவித்தேன்; ஆனாலும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்கும், அவர் என்னைக்கொண்டு உங்களுக்குச் சொல்லியனுப்பின எந்தக்காரியத்துக்கும் செவிகொடாமற் போனீர்கள்.

எரே 42:22 இப்போதும் தங்கியிருப்பதற்கு நீங்கள் போக விரும்புகிற ஸ்தலத்தில் தானே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள் என்றான்.

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குச் செவி கொடாமல்" - யூதா தேசத்தில் மீதியாய் இருக்கும் ஜனத்தார் கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடுக்க வில்லையென்றால் அவர்கள்மீது சாபம் வரும். (எரே 42:13-22).

இஸ்ரவேலின் கலகம்

1. நாங்கள் இந்த தேசத்திலே இருக்கிறதில்லையென்று சொல்லுகிறார்கள். (எரே 42:13).
2. கர்த்தருடைய சத்தத்துக்குச் செவி கொடாமல் இருக்கிறார்கள்.
3. எகிப்து தேசத்துக்கே போவோம் என்று சொல்லுகிறார்கள். (எரே 42:14)
4. அங்கே தரித்திருப்போம் என்று சொல்லுகிறார்கள்.

எகிப்தில் எதிர்பார்த்த காரியங்கள்

1. அது யுத்தத்தைக் காணாதது
2. அது எக்காள சத்தத்தைக் கேளாதது.
3. அது அப்பத்தாழ்ச்சியினால் பட்டினியாய் இராதது.

"நீங்கள் பயப்படுகிற பட்டயம் எகிப்து தேசத்திலே உங்களைப் பிடிக்கும்" - யூதா தேசத்தில் மீதமுள்ள ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் எகிப்து தேசத்திற்குப் போனால் அவர்கள்மீது சாபங்கள் வரும். (எரே 42:16-22).

"எகிப்திலே தங்கவேண்டுமென்று அவ்விடத்துக்குத் தங்கள் முகங்களைத் திருப்பின எல்லா மனுஷருக்கும்" - இவர்களெல்லாம் எகிப்திலே சாவார்கள். (எரே 42:16-17). எரேமியா, பாருக் இவர்களோடு மேலும் சிலர் எகிப்துக்குப் போகுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஆகையினால் இந்த வாக்கியம் எகிப்துக்குப் போகுமாறு கட்டாயப் படுத்தப்பட்ட எரேமியாவிற்கும், பாருக்கும் பொருந்துமா என்று கூறப்படவில்லை. எகிப்து தேசத்திலிருந்து யூதாதேசத்திற்குக் கொஞ்சம் பேராய் திரும்புவார்கள் என்று கூறப் பட்டிருக்கிறது. (எரே 44:28). எரேமியாவும், சிதேக்கியாவின் குமாரத்திகளும் எகிப்தில் மரித்துவிட்டார்களா அல்லது யூதா தேசத்திற்குத் திரும்பி வந்தார்களா என்று தெளிவாகக் கூறப்படவில்லை.

"என் உக்கிரம் நீங்கள் எகிப்துக்குப் போகும்போது, உங்கள்மேல் மூளும்" - எகிப்து தேசத்துக்குப் போகிறவர்களில் அநேகர் இனிமேல் கானான் தேசத்தைக் காண மாட்டார்கள். எகிப்து தேசத்திலும் அவர்கள் சாபமாகவும் பாழாகவும் பழிப்பாகவும் நிந்தையாகவும் இருப்பார்கள். கர்த்தருடைய உக்கிரம் அவர்கள்மீது மூளும்.

"யூதாவில் மீதியானவர்களே, எகிப்துக்குப் போகாதிருங்கள்" - யூதா தேசத்தில் மீதியாக இருக்கும் ஜனங்களிடம் கர்த்தர் மிகவும் தெளிவாகப் பேசுகிறார். யூதா தேசத்தில் அவர்கள் தங்கியிருந்தால் கர்த்தருடைய ஆசீர்வாதமும், பாதுகாப்பும், பராமரிப்பும் அவர்களுக்குக் கிடைக்கும்.

"அதின்படியே செய்வோம் என்று நீங்கள் சொல்லி" - எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்குக் கூறிய போது அவர்கள் அந்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள் என்னும் சத்தியத்தையும் கர்த்தர் எரேமியாவிற்கு வெளிப்படுத்தியிருக்கிறார். முதலில் கீழ்ப்படிவோம் என்று சொன்னவர்கள் பின்பு கீழ்ப்படியாமற்போனார்கள்.

"செவிகொடாமற்போனீர்கள்" - "அதன் படியே செய்வோம்" என்று சொன்னவர்கள் அதன்படி செய்யமாட்டார்கள் என்பதையும் கர்த்தர் முன்னறிவிக்கிறார்.

எரேமியா - தொகுப்புரை

43 அதிகாரம்

10. மீதியாக இருப்பவர்களின் கலகம் - (ஏசா 1:2)

எரே 43:1 எரேமியா சகல ஜனங்களுக்கும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தன்னைக் கொண்டு அவர்களுக்குச் சொல்லி யனுப்பின எல்லா வார்த்தைகளையும் சொன்னான்; அவர்களுடைய தேவனாகிய கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் அவன் அவர்களுக்குச் சொல்லிமுடித்தபின்பு,

எரே 43:2 ஒசாயாவின் குமாரனாகிய அசரியாவும், கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அகங்காரிகளான எல்லா மனுஷரும் எரேமியாவை நோக்கி: நீ பொய் சொல்லுகிறாய்; எகிப்திலே தங்கும்படிக்கு அங்கே போகாதிருங்கள் என்று சொல்ல, எங்கள் தேவனாகிய கர்த்தர் உன்னை எங்களிடத்துக்கு அனுப்பவில்லை.

எரே 43:3 கல்தேயர் எங்களைக் கொன்று போடவும், எங்களைப் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோகவும், எங்களை அவர்கள் கையில் ஒப்புக் கொடுக்கும்படி, நேரியாவின் குமாரனாகிய பாருக்குத்தானே உன்னை எங்களுக்கு விரோதமாக ஏவினான் என்றார்கள்.

எரே 43:4 அப்படியே யூதாவின் தேசத்திலே தரித்திருக்கவேண்டும் என்றும் கர்த்தருடைய சத்தத்துக்குக் கரேயாவின் குமாரனாகிய யோகனானும், சகல இராணுவச் சேர்வைக்காரரும், சகல ஜனங்களும் செவிகொடாமற்போனார்கள்.

"நீ பொய் சொல்லுகிறாய்" - எரேமியா கர்த்தருடைய வார்த்தையை யூதாவில் மீதமுள்ள ஜனங்களுக்குக் கூறுகிறார். ஆனால் அது அவர்கள் எதிர்பார்த்த வார்த்தைகளல்ல. இதனால் ஏமாற்றமடைந்த ஜனங்கள் எரேமியா பொய்கூறுவதாக அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். பாருக்கின் தூண்டுதலினால் எரேமியா கள்ளத்தீர்க்கதரிசனம் கூறுவதாகவும், குற்றம்சாட்டுகிறார்கள். (எரே 42:1-3). கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவோம் என்று வாக்குப்பண்ணியவர்கள் ஆரம்பத்திலேயே கலகம்பண்ணுகிறார்கள்.

11. அவர்கள் எகிப்திற்கு ஓடிப் போனார்கள்

எரே 43:5 யூதா தேசத்தில் தங்கியிருப்பதற்கு, தாங்கள் துரத்துண்டிருந்த சகல ஜாதி களிடத்திலுமிருந்து திரும்பிவந்த மீதியான யூதரெல்லாரையும், புருஷரையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும், ராஜாவின் குமாரத்திகளையும், காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான், சாப்பானின் குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலி யாவினிடத்தில் விட்டுப்போன சகல ஆத்துமாக்களையும், தீர்க்கதரிசியாகிய எரேமியாவையும், நேரியாவின் குமாரனாகிய பாருக்கையும்,

எரே 43:6 கரேயாவின் குமாரனாகிய யோகனானும் சகல இராணுவச் சேர்வைக்காரரும் கூட்டிக்கொண்டு,

எரே 43:7 கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாத படியினாலே, எகிப்து தேசத்துக்குப்போக எத்தனித்து, அதிலுள்ள தக்பானேஸ் மட்டும்போய்ச் சேர்ந்தார்கள்.

"ராஜாவின் குமாரத்திகள்" - இந்த வாக்கியத்தில் ராஜாவின் குமாரத்திகள் என்று பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் சிதேக்கியாவின் குமாரத்திகள் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். கோனியாவோடு தாவீதின் ராஜவம்சம் முடிவுபெறுகிறது. ஆகையினால் இந்தக் குமாரத்திகளுக்குத் தாவீதின் மூலமாகச் சிம்மாசனத்தில் அமரும் உரிமையும் வராது. (எரே 22:24-30)

43 அதிகாரம்

"எகிப்து தேசத்துக்குப்போக எத்தனித்து, அதிலுள்ள தக்பானேஸ் மட்டும்போய்ச் சேர்ந்தார்கள்" - கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவோம் என்று யூதா தேசத்தில் மீதியானவர்கள் வாக்குப்பண்ணினார்கள். அவர்கள் எகிப்துக்குப் போகக்கூடாது என்று கர்த்தர் தெளிவாக அறிவித்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக எகிப்திலுள்ள தக்பானேஸ் மட்டும்போய்ச்சேர்ந்தார்கள்.

12. எகிப்தில் முதலாவது தீர்க்கதரிசனம்

(1) புதைத்து வைக்கப்பட்ட கற்களின் அடையாளம்

எரே 43:8 தக்பானேசிலே கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 43:9 நீ உன் கையிலே பெரிய கற்களை எடுத்துக்கொண்டு, யூதா ஜனங்களுக்கு முன்பாக அவைகளைத் தக்பானேசில் இருக்கிற பார் வோனுடைய அரமனையின் ஒலி முகவாலில் இருக்கிற சூளையின் களிமண்ணிலே புதைத்து வைத்து,

தீர்க்கதரிசன எண் - 77

"தக்பானேசிலே கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:......" (எரே 43:8-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவை நான் அழைத்தனுப்பி, நான் புதைப்பித்த இந்தக் கற்களின்மேல் அவனுடைய சிங்காசனத்தை வைப்பேன் (எரே 43:10).
2. அவன் தன் ராஜகூடாரத்தை அவைகளின் மேல் விரிப்பான்.
3. அவன் வந்து, எகிப்துதேசத்தை அழிப்பான் (எரே 43:11).
4. எகிப்தின் தேவர்களுடைய கோவில்களில் அக்கினியைக் கொளுத்துவேன் (எரே 43:12).
5. அவர்களுடைய வீடுகளைச் சுட்டெரிப்பான்.
6. எகிப்தின் தேவர்களைச் சிறைபிடிப்பான்.
7. ஒரு மேய்ப்பன் தன் கம்பளியைப் போர்த்துக்கொள்ளுமாப்போல் எகிப்து தேசத்தைப் போர்த்துக் கொள்வான்.
8. அவ்விடத்திலிருந்து சுகமாய்ப் புறப்பட்டுப் போவான்.
9. அவன் எகிப்துதேசத்தில் இருக்கிற பெத்ஷிமேசின் சிலைகளை உடைப்பான். (எரே 43:13).
10. எகிப்தின் தேவர்களுடைய கோவில்களை அக்கினியால் சுட்டுப்போடுவான்.

(2) யூத ராஜ்ஜியத்திற்கு இது பொருந்தும்

எரே 43:10 அவர்களை நோக்கி: இதோ, என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவை நான் அழைத்தனுப்பி, நான் புதைப்பித்த இந்தக் கற்களின்மேல் அவனுடைய சிங்காசனத்தை வைப்பேன்; அவன் தன் ராஜகூடாரத்தை அவைகளின் மேல் விரிப்பான்.

எரே 43:11 அவன் வந்து, எகிப்துதேசத்தை அழிப்பான்; சாவுக்கு ஏதுவானவன் சாவுக்கும், சிறையிருப்புக்கு ஏதுவானவான் சிறையிருப்புக்கும், பட்டயத்துக்கு ஏதுவானவன் பட்டயத்துக்கும் உள்ளாவான்.

எரேமியா - தொகுப்புரை

43 அதிகாரம்

எரே 43:12 எகிப்தின் தேவர்களுடைய கோவில்களில் அக்கினியைக் கொளுத்துவேன்; அவன் அவைகளைச் சுட்டெரித்து, அவைகளைச் சிறைபிடித்துப் ஒரு மேய்ப்பன் தன் கம்பளியைப் போர்த்துக் கொள்ளுமாப்போல் எகிப்துதேசத்தைப் போர்த்துக் கொண்டு, அவ்விடத்திலிருந்து சுகமாய்ப் புறப்பட்டுப்போவான்.

எரே 43:13 அவன் எகிப்துதேசத்தில் இருக்கிற பெத்ஷிமேசின் சிலைகளை உடைத்து, எகிப்தின் தேவர்களுடைய கோவில்களை அக்கினியால் சுட்டுப் போடுவான் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

எகிப்து தேசத்தின் அழிவுகள்

1. யோயாக்கீமின் ஆட்சிக்காலத்தில் கர்கேமிசில் ஐபிராத்து நதிக்கரையில் எகிப்தியர்கள் தோற்றுப்போனார்கள். (எரே 46:2).
2. சிதேக்கியா ராஜாவின் காலத்தில் கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கை போட்டார்கள். எருசலேமிற்கு உதவிபுரிய எகிப்தியர்கள் வந்தபோது அவர்கள் தோற்றுப்போனார்கள். (எரே 37:5-10).
3. எருசலேம் வீழ்ந்தபிறகு நேபுகாத்நேச்சார் எகிப்திற்குள் பிரவேசித்து அந்தத் தேசத்தை முழுவதுமாக ஜெயித்தான். (எரே 43:8-13; எரே 46:13-26).

"பெத்ஷிமேஸ்" (Bethshemesh) - இதற்குச் "சூரியனின் ஆலயம்" "the temple of the sun" என்று பொருள். கெய்ரோவிற்கு வடகிழக்கே 10 மைல் தூரத்திலுள்ளது. கிரேக்கர்கள் இதை "ஹேலியோபோலிஸ்" (Heliopolis) என்று அழைக்கிறார்கள்.

44 அதிகாரம்

13. எகிப்தில் இரண்டாவது தீர்க்கதரிசனம்

(1) யூதாவின் அழிவு - காரணம்

எரே 44:1 எகிப்துதேசத்தில் குடியேறி, மிக்தோலிலும், தக்பானேசிலும், நோப்பிலும், பத்ரோஸ் சீமையிலும் வாசமான எல்லா யூதரையுங்குறித்து, எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 44:2 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் எருசலேமின் மேலும், யூதாவின் சகல பட்டணங்களின் மேலும், வரப்பண்ணின தீங்கையெல்லாம் நீங்கள் கண்டீர்கள்.

எரே 44:3 இதோ, அவர்களும் நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேவர்களுக்கு தூபங்காட்டவும், ஆராதனைசெய்யவும் போய், எனக்குக் கோபமூட்டும்படிக்குச் செய்த அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம், அவைகள் இந்நாளில் பாழாய்க்கிடக்கிறது, அவைகளில் குடியில்லை.

எரே 44:4 நான் வெறுக்கிற இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யாதிருங்களென்று, தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரைக் கொண்டு உங்களுக்கு ஏற்கனவே சொல்லியனுப்பிக்கொண்டிருந்தேன்.

எரே 44:5 ஆனாலும் அவர்கள் அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டாதபடிக்கு, என் சொல்லைக்கேளாமலும், பொல்லாப்பை விட்டுத் திரும்புவதற்குச் செவியைச் சாய்க்காமலும் போனார்கள்.

எரே 44:6 ஆகையால், என் உக்கிரமும் என் கோபமும் மூண்டு, யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் பற்றியெரிந்தது; அவைகள் இந்நாளில் இருக்கிறபடி வனாந்தரமும் பாழுமாய்ப் போயிற்று.

"எரேமியாவுக்கு உண்டான வசனம்" - எரேமியா இந்த வார்த்தைகளை எகிப்திலுள்ள யூதருக்குக் கூறுகிறார். அவர்களுடைய விக்கிரகாராதனையை எரேமியா தைரியமாகக் கடிந்து கூறுகிறார். அவர்களுடைய உபத்திரவ நாட்களில் விக்கிரகாராதனையும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. எரேமியா இந்த வார்த்தைகளை ஒருவேளை ஒரு பண்டிகை நாளில் கூறியிருக்கலாம். எகிப்திலுள்ள யூதர்கள் யூதாவிற்கு திரும்பிப் போவோம் என்னும் நம்பிக்கையில் இருக்கிறார்கள். எகிப்து தேசம் முழுவதிலும் யூதர்கள் பரவியிருக்கிறார்கள். எகிப்திலுள்ள மிக்தோலிலும், தக்பானேசிலும், நோப்பிலும், பத்ரோஸ் சீமையிலும் யூதர்கள் ஜீவிக்கிறார்கள். எரேமியாவின் வார்த்தையைக் கேட்பதற்கு அவர்களெல்லோரும் ஒன்றுகூடி வருகிறார்கள்.

"தக்பானேஸ்" (Tahpanhes) - இங்கு பார்வோனின் அரமனை உள்ளது. கீழ் எகிப்தின் கிழக்கு எல்லைப் பகுதியில் இந்தப் பட்டணம் அமைந்துள்ளது. (எரே 44:1; எரே 2:16; எரே 45:7-9; எரே 46:14).

"நோப்" (Noph) - மறுபெயர் மெம்பிஸ் (Memphis) என்பதாகும். (எரே 44:1; எரே 2:16; எரே 46:14-19; ஏசா 19:13; எசே 30:13-16).

"பத்ரோஸ்" (Pathros) - மெம்பிசிற்குத் தெற்கே மேல் எகிப்திலுள்ள பகுதி. (எரே 44:1,15; ஏசா 11:11; எசே 29:14; எசே 30:14).

யூதாவின் பாவங்கள்

1. பொல்லாப்புச் செய்து கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள். (எரே 44:3)
2. அறியாத தேவர்களுக்கு தூபங் காட்டினார்கள். (எரே 44:3,5)

44 அதிகாரம்

3. அறியாத தேவர்களை ஆராதனை செய்தார்கள். (எரே 44:3)

4. தேவனுடைய சொல்லைக் கேளாமற் போனார்கள். (எரே 44:5)

5. தங்கள் பொல்லாப்பை விட்டுத் திரும்புவதற்குச் செவியைச் சாய்க்காமல் போனார்கள்.

(2) யூதர்களின்மீது குற்றச்சாட்டு

எரே 44:7 இப்போதும் இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் யூதாவின் ஒருவரையும் உங்களுக்கு மீதியாக வைக்காமல், உங்களில் புருஷனையும் ஸ்திரீயையும் பிள்ளையையும் பால்குடிக்கிற குழந்தையையும் வேரற்றுப்போகப் பண்ணும்படிக்கு, உங்கள் கைகளின் கிரியைகளாலே எனக்குக் கோபமூட்டுகிற பெரியபொல்லாப்பை உங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதமாகச் செய்து,

எரே 44:8 உங்களை வேரற்றுப்போகப் பண்ணுவதற்காகவும், நீங்கள் பூமியின் சகல ஜாதிகளுக்குள்ளும் சாபமும் நிந்தையுமாயிருப்பதற்காகவும், நீங்கள் தங்கியிருக்கவந்த எகிப்துதேசத்திலே அந்நிய தேவர்களுக்கு தூபங் காட்டுவானேன்?

எரே 44:9 யூதாதேசத்திலும் எருசலேமின் வீதிகளிலும் உங்கள் பிதாக்கள் செய்த பொல்லாப்புகளையும், யூதாவின் ராஜாக்கள் செய்த பொல்லாப்புகளையும், அவர்கள் ஸ்திரீகள் செய்த பொல்லாப்புகளையும், நீங்கள் செய்த பொல்லாப்புகளையும், உங்கள் ஸ்திரீகள் செய்த பொல்லாப்புகளையும் மறந்து போனீர்களோ?

எரே 44:10 அவர்கள் இந்நாள்மட்டும் மனம் நொறுங்குண்டதுமில்லை, அவர்கள் பயப்படுகிறதுமில்லை; நான் உங்கள் முன்பாகவும் உங்கள் பிதாக்கள் முன்பாகவும் வைத்த என் வேதத்தின் படியும் என் கட்டளையின்படியும் நடக்கிறதுமில்லை.

தீர்க்கதரிசன எண் - 78

"இப்போதும் இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்............" (எரே 44:7-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. உங்களை வேரற்றுப் போகப்பண்ணுவேன். (எரே 44:8)

2. நீங்கள் பூமியின் சகல ஜாதிகளுக்குள்ளும் சாபமும் நிந்தையு மாயிருப்பீர்கள். (எரே 44:8)

பொல்லாப்புச் செய்தவர்கள்

1. உங்கள் பிதாக்கள்

2. யூதாவின் ராஜாக்கள்

3. அவர்கள் ஸ்திரீகள்

4. இப்போதுள்ள சந்ததியார்

5. அவர்கள் ஸ்திரீகள்

பொல்லாப்பு செய்த இடங்கள்

1. யூதாதேசம்

2. எருசலேமின் வீதிகள்

பொல்லாப்பு செய்வதற்குக் காரணம்

1. அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறதில்லை.

2. அவர்கள் கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிறதில்லை.

3. அவர்கள் கர்த்தருடைய கட்டளையின்படி நடக்கிறதில்லை.

44 அதிகாரம்

(3) பன்னிரெண்டு அம்ச நியாயத் தீர்ப்பு

எரே 44:11 ஆகையால், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உங்களுக்குத் தீங்குண்டாகவும், யூதாவனைத்தையும் சங்கரிக்கத் தக்கதாகவும், என் முகத்தை உங்களுக்கு விரோதமாகத் திருப்பி,

எரே 44:12 எகிப்துதேசத்திலே தங்கும்படிக்கு வரத் தங்கள் முகங்களைத் திருப்பின மீதியான யூதரை வாரிக் கொள்ளுவேன்; அவர்கள் அனைவரும் எகிப்துதேசத்திலே நிர்மூலமாவார்கள்; அவர்கள் சிறியவன்முதல் பெரியவன் வரைக்கும், பட்டயத்துக்கு இரையாகி பஞ்சத்தாலும் நிர்மூலமாக்குவார்கள்; அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் செத்து, சாபமும் பாழும்பழிப்பும் நிந்தையுமாவார்கள்.

எரே 44:13 நான் எருசலேமை தண்டித்தபடி எகிப்துதேசத்திலே குடியிருக்கிறவர்களையும் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் தண்டிப்பேன்.

எரே 44:14 எகிப்துதேசத்திலே தங்கவும், மறுபடியும் தங்கள் ஆத்துமா வாஞ்சித்திருக்கிற யூதா தேசத்திலே குடியேறுவதற்கு அங்கே திரும்பிப் போகவும் வேண்டுமென்று இங்கே வந்த மீதியான யூதரிலே மீதியாயிருக்கிறவர்களும் தப்புகிறவர்களுமில்லை; யென்றார் என்று சொன்னான்.

தீர்க்கதரிசன எண் - 79

"ஆகையால், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்.........." (எரே 44:11-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உங்களுக்குத் தீங்குண்டாகவும், யூதாவனைத்தையும் சங்கரிக்கத் தக்கதாகவும், என் முகத்தை உங்களுக்கு விரோதமாகத் திருப்புவேன். (எரே 44:11).
2. எகிப்துதேசத்திலே தங்கும்படிக்கு வரத் தங்கள் முகங்களைத்திருப்பின மீதியான யூதரை வாரிக் கொள்ளுவேன் (எரே 44:12).
3. அவர்கள் அனைவரும் எகிப்துதேசத்திலே நிர்மூலமாவார்கள்.
4. அவர்கள் சாபமும் பாழும்பழிப்பும் நிந்தையுமாவார்கள்.
5. நான் எருசலேமை தண்டித்தபடி எகிப்து தேசத்திலே குடியிருக்கிறவர்களையும் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் தண்டிப்பேன். (எரே 44:13).
6. எகிப்துதேசத்திலே தங்கவும், மறுபடியும் தங்கள் ஆத்துமா வாஞ்சித்திருக்கிற யூதா தேசத்திலே குடியேறுவதற்கு அங்கே திரும்பிப்போகவும் வேண்டுமென்று இங்கே வந்த மீதியான யூதரிலே மீதியாயிருக்கிறவர்களும் தப்புகிறவர் களுமில்லை. (எரே 44:14).
7. அவர்களில் ஒருசிலர் மட்டுமே தப்பிப் போவார்கள்.

(4) புறக்கணிக்கப்பட்ட கலகம் - (ஏசா 1:2)

எரே 44:15 அப்பொழுது தங்கள் ஸ்திரீகள் அந்நியதேவர்களுக்குத் தூபங் காட்டினதாக அறிந்திருந்த எல்லாப் புருஷரும், பெரிய கூட்டமாய் நின்றிருந்த எல்லா ஸ்திரீகளும், எகிப்துதேசத்தில் பத்ரோசிலே குடியிருந்த சகல ஜனங்களும் எரேமியாவுக்குப் பிரதியுத்தரமாக:

எரே 44:16. நீ கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குச் சொன்ன வார்த்தையின் படியே நாங்கள் உனக்குச் செவிகொடாமல்,

44 அதிகாரம்

எரே 44:17 எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின் படியேயும் நாங்கள் செய்து, வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம்.

எரே 44:18 நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதற் கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம்.

எரே 44:19 மேலும் நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்த்தபோது, நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகள வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ? என்றார்கள்.

"தங்கள் ஸ்திரீகள் அந்நியதேவர்களுக்குத் தூபங்காட்டினதாக அறிந்திருந்த எல்லாப் புருஷரும்" - எகிப்து தேசத்திலுள்ள யூதர்கள் அனைவரும் ஒரு மார்க்கப் பண்டிகைக்காக ஓரிடத்தில் கூடிவந்திருக்கிறார்கள். அங்கு அவர்கள் மத்தியில் எரேமியா கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறார். இஸ்ரவேலின் எல்லாப் பிரிவு ஜனத்தாரையும் எரேமியா கடிந்து கூறுகிறார். ஆயினும் இஸ்ரவேல் தேசத்தின் புருஷரோ தீர்க்கதரிசியின் வார்த்தைகளை அங்கிகரிக்காமல் புறக்கணித்து விடுகிறார்கள். (எரே 44:15-19).

"எகிப்துதேசத்தில் பத்ரோசிலே குடியிருந்த சகல ஜனங்களும் எரேமியாவுக்குப் பிரதியுத்தரமாக" - பத்ரோசிலே வானராக்கினிக்கு ஒரு பண்டிகை நடைபெறுகிறது. இவள் சந்திரனின் பெண் தெய்வமாக வணங்கப்படுகிறாள். ஜனங்கள் எல்லோரும் வானராக்கினியை வணங்கு வதற்காகவும், தூபங் காட்டுவதற்காகவும், பானபலிகளை வார்ப்பதற்காகவும் கூடிவந்திருக்கிறார்கள். (எரே 44:17). எகிப்திலுள்ள இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் பொருத்தனை பண்ணுவதற்குப் பதிலாக வானராக்கினியினிடத்தில் பொருத்தனை பண்ணுகிறார்கள். கர்த்தருடைய செய்தியை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும், வானராக்கினிக்குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்க்கப் போவதாகவும், எகிப்திலுள்ள யூதர்கள் எரேமியாவிடம் தெளிவாகக் கூறுகிறார்கள். யூதாவிலுள்ள பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும் வானராக்கினியைத் தாங்களும், தங்கள் முன்னோர்களும், தங்கள் ராஜாக்களும், பிரபுக்களும் ஆராதித்ததுபோல எகிப்திலும் ஆராதிக்கப்போவதாக ஆணையிடுகிறார்கள். வானராக்கினியை ஆராதிக்கும்போது அவர்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்ததாக அறிவிக்கிறார்கள். வானராக்கினிக்குத் தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதற்கொண்டு, அவர்களுக்கு எல்லாம் குறைவுபட்டதாகவும், பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அவர்கள் அழிந்துபோனதாகவும் கூறுகிறார்கள். (எரே 44:16-19).

"ஒரு பொல்லாப்பையும் காணாமல்" - எகிப்திலுள்ள யூதர்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போய்விட்டார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால் தங்களுக்குப் பொல்லாப்பு வந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளாமல் வானராக்கினியைச் சேவிக்காமல் போனதினால் தங்களுக்குப் பொல்லாப்பு வந்ததாக நினைக்கிறார்கள். (எரே 44:17-18).

"நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகள வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ?" - வானராக்கினியை நமஸ்கரிப்பதற்குத் தங்களுடைய புருஷரும் அனுமதி கொடுத்திருப்பதாக ஸ்திரீகள் கூறுகிறார்கள்.

44 அதிகாரம்

14. எகிப்தில் மூன்றாவது தீர்க்கதரிசனம்

(1) யூதாவின் அழிவு - காரணம்

எரே 44:20 அப்பொழுது எரேமியா, தனக்கு இப்படிப்பட்ட மறுமொழி கொடுத்த சகல ஜனங்களாகிய ஸ்திரீ புருஷர்களையும் மற்ற யாவரையும் நோக்கி:

எரே 44:21 யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும், நீங்களும் உங்கள் பிதாக்களும் உங்கள் ராஜாக்களும், உங்கள் பிரபுக்களும், தேசத்தின் ஜனங்களும் காட்டின தூபங்களை அல்லவோ கர்த்தர் நினைத்துத் தம்முடைய மனதிலே வைத்துக்கொண்டார்.

எரே 44:22 உங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும், நீங்கள் செய்த அருவருப்புகளையும், கர்த்தர் அப்புறம் பொறுத்திருக்கக்கூடாதபடியினால் அல்லவோ, உங்கள் தேசம் இந்நாளில் இருக்கிறபடி குடியற்ற அந்தரவெளியும் பாழும் சாபமுமாயிற்று.

எரே 44:23 நீங்கள் தூபங்காட்டி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, கர்த்தருடைய சத்தத்துக்குச் செவி கொடாமலும், அவருடைய வேதத்துக்கும், அவருடைய கட்டளைகளுக்கும், அவருடைய சாட்சிகளுக்கும் இணங்கி நடவாமலும் போனபடியினாலே இந்நாளில் இருக்கிறபடி இந்தத்தீங்கு உங்களுக்கு நேரிட்டது என்றான்.

"அப்பொழுது எரேமியா" - தீர்க்கதரிசனம் கூறிய எரேமியாவிடம் எகிப்திலுள்ள யூதர்கள் மறுமொழி கூறுகிறார்கள். வானராக்கினியைத் தொடர்ந்து நமஸ்கரிக்கப் போவதாக வாக்குப் பண்ணுகிறார்கள். எகிப்திலுள்ள யூதர்களின் பொல்லாப்புக்குக் கர்த்தருடைய கோபமே காரணம் என்பதை எரேமியா வலியுறுத்துகிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால் இந்நாளில் அவர்களுக்கு இருக்கிறபடி இந்தத் தீங்கு அவர்களுக்கு நேரிட்டிருக்கிறது என்று எச்சரிக்கிறார். (எரே 44:20-23).

"கர்த்தர் அப்புறம் பொறுத்திருக்கக் கூடாத படியினால் அல்லவோ" - எகிப்திலுள்ள யூதர்மீது தீங்கு வருவதற்கு இதுதான் காரணம். வானராக்கினிக்கு ஆராதனை செய்யாமல் போனதினால் அவர்களுக்குப் பொல்லாப்பு வரவில்லை. அவர்களுடைய பாவங்களின் நிமித்தமும், அருவருப்புக்களின்நிமித்தமும் அவர்களுக்குத் தீங்கு வந்திருக்கிறது. (எரே 44:22-23).

(2) ஆறு அம்ச நியாயத்தீர்ப்பு

எரே 44:24 பின்னும் எரேமியா சகல ஜனங்களையும், சகல ஸ்திரீகளையும் நோக்கி: எகிப்துதேசத்தில் இருக்கிற யூதராகிய நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 44:25 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், வானராக்கினிக்கு தூபங்காட்டவும், அவளுக்குப் பானபலி களை வார்க்கவும், நாங்கள் நேர்ந்து கொண்ட பொருத்தனைகளை எவ்விதத்திலும் செலுத்துவோமென்று, நீங்களும் உங்கள் ஸ்திரீகளும், உங்கள் வாயினாலேசொல்லி, உங்கள் கைகளினாலே நிறைவேற்றினீர்கள்; நீங்கள் உங்கள் பொருத்தனைகளை ஸ்திரப்படுத்தினது மெய்யே, அவைகளைச் செலுத்தினதும் மெய்யே.

எரே 44:26 ஆகையால், எகிப்துதேசத்தில் குடியிருக்கிற யூதா ஜனங்களாகிய நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; இதோ, கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை என்று, எகிப்து தேசமெங்கும் ஒரு யூதா மனுஷன் வாயினாலும் இனி என் நாமம் வழங்கப்படுவதில்லையென்று நான் என் மகத்தான நாமத்தைக் கொண்டு ஆணையிடுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

44 அதிகாரம்

எரே 44:27 இதோ, நான் அவர்கள்மேல் நன்மைக்கல்ல தீமைக்கே ஜாக்கிரதையாயிருப்பேன்; எகிப்து தேசத்திலிருக்கிற யூதா மனுஷர் எல்லாரும் ஒழிந்து தீருமளவும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சங்காரமாவார்கள்.

எரே 44:28 ஆனாலும் பட்டயத்துக்குத் தப்புகிறவர்கள் எகிப்து தேசத்திலிருந்து யூதா தேசத்துக்குக் கொஞ்சம் பேராய்த் திரும்புவார்கள்; அப்படியே எகிப்து தேசத்திலே தங்கியிருக்கவந்த யூதாவில் மீதியான அனைவரும் அக்காலத்திலே தங்களுடைய வார்த்தையோ, என் வார்த்தையோ, யாருடைய வார்த்தை மெய்ப்படும் என்று அறிவார்கள்.

எரே 44:29 நான் இவ்விடத்தில் உங்களை தண்டிப்பேன் என்று உங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன என் வார்த்தைகள் மெய்ப்படுமென்று நீங்கள் அறிவதற்கு உங்களுக்கு இதுவே அடையாளம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 44:30 இதோ, நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவை, அவனுடைய சத்துருவும் அவன் பிராணனை வாங்கத் தேடினவனுமாகிய நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்ததுபோல, நான் பார்வோன் ஒப்பிரா என்னும் எகிப்தின் ராஜாவையும், அவனுடைய சத்துருக்களின் கையிலும், அவன் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக் கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

"சகல ஸ்திரீகளையும் நோக்கி" - இந்த வேதவசனங்கள் ஸ்திரீகளுக்கென்று விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஸ்திரீகளே வானராக்கினியை நமஸ்கரிப்பதில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்களுடைய புருஷரும் இந்தப் பாவச் செயலுக்குத் துணைபோகிறார்கள். (எரே 44:15,19). ஆகையினால், எரேமியா தீர்க்கதரிசி இந்த வாக்கியங்களை விசேஷமாக எகிப்து தேசத்திலுள்ள யூதஸ்திரீகளுக்குக் கூறுகிறார். (எரே 44:24-25).

தீர்க்கதரிசன எண் - 80

"ஆகையால், எகிப்துதேசத்தில் குடியிருக்கிற யூதா ஜனங்களாகிய நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.........." (எரே 44:26-30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை என்று, எகிப்து தேசமெங்கும் ஒரு யூதா மனுஷன் வாயினாலும் இனி என் நாமம் வழங்கப்படுவதில்லை (எரே 44:26).
2. நான் அவர்கள்மேல் நன்மைக்கல்ல தீமைக்கே ஜாக்கிரதையாயிருப்பேன் (எரே 44:27).
3. எகிப்து தேசத்திலிருக்கிற யூதா மனுஷர் எல்லாரும் ஒழிந்து தீருமளவும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சங்காரமாவார்கள்.
4. ஆனாலும் பட்டயத்துக்குத் தப்புகிறவர்கள் எகிப்துதேசத்திலிருந்து யூதாதேசத்துக்குக் கொஞ்சம் பேராய்த் திரும்புவார்கள். (எரே 44:28).
5. எகிப்துதேசத்திலே தங்கியிருக்கவந்த யூதாவில் மீதியான அனைவரும் அக்காலத்திலே தங்களுடைய வார்த்தையோ, என் வார்த்தையோ, யாருடைய வார்த்தை மெய்ப்படும் என்று அறிவார்கள்.

44 அதிகாரம்

6. என் வார்த்தைகள் மெய்ப்படுமென்று நீங்கள் அறிவதற்கு உங்களுக்கு இதுவே அடையாளமாக இருக்கும். (எரே 44:29).

7. நான் பார்வோன் ஒப்பிரா என்னும் எகிப்தின் ராஜாவையும், அவனுடைய சத்துருக்களின் கையிலும், அவன் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன் (எரே 44:30).

"இதோ, கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை" - எகிப்திலுள்ள யூதர்கள் இந்த வார்த்தைகளைக் கூறமாட்டார்கள். கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தமாட்டார்கள். தேவதூஷணம் சொல்வதற்காக அவர்கள் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

"எகிப்துதேசத்திலிருந்து யூதா தேசத்துக்குக் கொஞ்சம் பேராய்த் திரும்புவார்கள்" - எத்தனை பேர் திரும்பினார்கள் என்று கூறப்படவில்லை. எரேமியா திரும்பி வந்தாரா, சிதேக்கியாவின் குமாரத்திகள் திரும்பி வந்தார்களா என்று வேதாகமத்தில் உறுதியாகக் கூறப்படவில்லை.

"இதுவே அடையாளம்" - எகிப்திலுள்ள யூதர்கள் அழிக்கப்படுவார்கள். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஒப்பிரா பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவான். (எரே 44:29-30). இவையெல்லாம் கர்த்தருடைய நியாயத் தீர்ப்புக்கு அடையாளம்.

45 அதிகாரம்

இடைக்காட்சி - பாருக்கிற்கு தீர்க்கதரிசனம் - (36:1-32)

எரே 45:1 யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே நேரியாவின் குமாரனாகிய பாருக் இந்த வசனங்களை எரேமியாவின் வாய் சொல்ல ஒரு புஸ்தகத்தில் எழுதுகையில், எரேமியா தீர்க்கதரிசி அவனிடத்தில் பேசி,

எரே 45:2 பாருக்கே, உன்னைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,

எரே 45:3 நீ: இப்பொழுது எனக்கு ஐயோ! கர்த்தர் என் நோவைச் சஞ்சலத்தால் வர்த்திக்கப்பண்ணினார், என் தவிப்பினால் இளைத்தேன், இளைப்பாறுதலைக் காணாதேபோனேன் என்று சொன்னாய் என்கிறார்.

எரே 45:4 இதோ, நான் கட்டினதையே நான் இடிக்கிறேன்; நான் நாட்டினதையே நான் பிடுங்குகிறேன்; இந்த முழுத் தேசத்துக்கும் இப்படியே நடக்கும்.

எரே 45:5 நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே; இதோ, மாம்சமான யாவர்மேலும் தீங்கை வரப் பண்ணுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும், நீ போகும் சகல ஸ்தலங்களிலும் உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப் பொருளாகத் தருகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று அவனுடனே சொல் என்றார்.

"யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே" - இந்தத் தீர்க்கதரிசனம் காலவரிசைக் கிரமத்தின்படி இங்கு எழுதப்படவில்லை. நேபுகாத்நேச்சார் எருசலேமை அழிப்பதற்கு 18 வருஷத்திற்கு முன்பாக இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. (எரே 45:1; 2இராஜா 23:36; 2இராஜா 24:18).

தீர்க்கதரிசன எண் - 81

"பாருக்கே, உன்னைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,............" (எரே 45:2-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. எரேமியா இஸ்ரவேல் தேசத்தைக் குறித்துக் கூறிய கடைசி தீர்க்கதரிசனம் இதுதான். எரேமியாவின் புஸ்தகத்தில் காணப் படும் மற்ற தீர்க்தகரிசனங்கள் புறஜாதி தேசத்தாருக்கு விசேஷமாகக் கூறப் பட்டிருக்கிறது.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் கட்டினதையே நான் இடிக்கிறேன்; நான் நாட்டினதையே நான் பிடுங்குகிறேன்; இந்த முழுத்தேசத்துக்கும் இப்படியே நடக்கும். (எரே 45:4)
2. மாம்சமான யாவர்மேலும் தீங்கை வரப்பண்ணுகிறேன். நீ போகும் சகல ஸ்தலங்களிலும் உன் பிராணனை உனக்குக் கிடைக்கும்கொள்ளைப் பொருளாகத் தருகிறேன் (எரே 45:5) கர்த்தர் இரண்டாம் முறையாக மனுஷனுக்குப் பாதுகாப்பைத் தருவதாக வாக்குப்பண்ணுகிறார். (எரே 45:5=39:18).

எரேமியா - தொகுப்புரை

46 அதிகாரம்

IX. பன்னிரெண்டு புறஜாதியருக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் - (46-21; ஏசா 13-23; எசே 25-32; ஆமோ 1-2; செப் 2)

1. எகிப்திற்கு எதிராக - (46:1-28; ஏசா 19)

(1) யுத்தத்திற்கு அழைப்பு

எரே 46:1 புறஜாதிகளுக்கு விரோதமாய் எரேமியா தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 46:2 எகிப்தைக்குறித்தும், ஐப்பிராத்து நதியண்டையிலே கர்கேமிசிலே இருந்ததும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே முறிய அடித்ததுமான பார்வோன்நேகோ என்னப்பட்ட எகிப்து ராஜாவின் ராணுவத்தைக்குறித்தும் அவர் சொல்லுகிறது என்னவென்றால்:

எரே 46:3 கேடகங்களையும் பரிசைகளையும் ஆயத்தம்பண்ணி, யுத்தத்துக்கு வாருங்கள்.

எரே 46:4 குதிரைவீரரே, குதிரைகளின் மேல் சேணங்களை வைத்து ஏறி, தலைச்சீராயை அணிந்துகொண்டு நில்லுங்கள்; ஈட்டிகளைத் துலக்கி, கவசங்களைத் தரித்துக்கொள்ளுங்கள்.

தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கும் புறஜாதி தேசங்கள்

1. எகிப்து - தெற்கு (எரே 46:1-28)
2. பெலிஸ்தியா - மேற்கு (எரே 47:1-7)
3. தீரு - வடமேற்கு (எரே 47:4)
4. சீதோன் - வடமேற்கு (எரே 47:4)
5. மோவாப் - தென்மேற்கு (எரே 48:1-47)
6. அம்மோன் - கிழக்கு (எரே 49:1-6)
7. ஏதோம் - தென்கிழக்கு (எரே 49:7-22)
8. சீரியா - வடக்கு (எரே 49:23-27)
9. கேதார் - வடக்கு (எரே 49:28-33)
10. ஆத்சோர் - வடக்கு (எரே 49:28-33)
11. ஏலாம் - வடகிழக்கு (எரே 49:34-39)
12. பாபிலோன் - வடகிழக்கு (எரே 50:1-51:64)

தீர்க்கதரிசன எண் - 82

"புறஜாதிகளுக்கு விரோதமாய் எரேமியா தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:........" (எரே 46:1-28) எரே 46:1-26 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 46:26-28 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. எகிப்து ஐப்பிராத்து நதியண்டையிலே கர்கேமிசில் தோற்கடிக்கப்படும். (எரே 46:1-2).
2. இரண்டு சேனைகளுக்கு எதிராக யுத்தம் நடைபெறும். (எரே 46:3-4).
3. எகிப்தியர் கலங்கி பின்வாங்கிப் போவார்கள். (எரே 46:5).
4. அவர்களுடைய பராக்கிரமசாலிகள் முறியுண்டு, திரும்பிப்பாராமல் ஓட்டமாய் ஓடிப்போகிறார்கள்.
5. சுற்றிலும் பயங்கரம் உண்டாயிருக்கும்.
6. வடக்கே ஐப்பிராத்து நதியண்டையிலே அவர்கள் இடறிவிழுவார்கள். (எரே 46:6).

எரேமியா - தொகுப்புரை

46 அதிகாரம்

7. எகிப்தியன் பிரவாகத்தைப் போல் புரண்டுவருகிறான். அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல எழும்பி வருகிறான். யுத்தத்தில் ஜெயித்து விடுவோம் என்னும் நம்பிக்கையிலும், பெருமையிலும் எகிப்தியர் இவ்வாறு வருகிறார்கள். (எரே 46:7-8).

8. எத்தியோப்பியா, லீதியா, லீபியா ஆகியோரின் சேனைகள்மீது கர்த்தர் நீதியைச் சரிகட்டுவார். (எரே 46:9-10).

9. பட்டயம் பட்சித்து, அவர்களுடைய இரத்தத்தால் திருப்தியாகி வெறித்திருக்கும் (எரே 46:10).

10. எகிப்து தோல்வியுறும். அதற்கு ஆரோக்கியமுண்டாகாது. (எரே 46:11).

11. ஜாதிகள் எகிப்தின் இலச்சையைக் கேள்விப்படுவார்கள். (எரே 46:12).

12. எகிப்துதேசத்தை அழிக்கப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வருவான். (எரே 46:13).

13. எகிப்தின் எல்லாப் பட்டணங்களிலும் யுத்தத்தின் செய்திகள் பிரசித்தம் பண்ணப்படும். (எரே 46:14).

14. எகிப்தின் வீரர் வாரிக்கொள்ளப் படுவார்கள். (எரே 46:15).

15. கர்த்தர் அவர்களைத் தள்ளினதால் அவர்கள் நிலைநிற்கவில்லை.

16. பாபிலோன் அநேகரை இடறப்பண்ணும். (எரே 46:16).

17. பாபிலோனின் பட்டயத்துக்குத் தப்ப எகிப்தின் சேனைகள் நமது ஜனத்தண்டைக்கும், நாம் பிறந்த தேசத்துக்கும் திரும்பிப்போவோம் என்று கூறுவார்கள்.

18. பார்வோனுக்குக் குறித்த காலம் முடிந்ததென்று அங்கே சத்தமிட்டுச் சொல்வார்கள். (எரே 46:17).

19. பர்வதங்களில் தாபோரும், சமுத்திரத்தின் அருகே கர்மேலும் இருக்கிற நிச்சயம் போல் அவன் வருவான். (எரே 46:18).

20. எகிப்து சிறையிருப்புக்குப் போகும் (எரே 46:19).

21. நோப் பாழாகும்; அது குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும்.

22. எகிப்தை அடிக்கிறவன் வடக்கேயிருந்து வருவான். (எரே 46:20).

23. எகிப்தின் கூலிப்படைகள் யுத்தத்தின் போது நிற்கமாட்டார்கள். (எரே 46:21).

24. அவர்கள் திரும்பிக்கொண்டு ஏகமாய் ஓடிப்போவார்கள்.

25. அவர்கள் விசாரிக்கப்படுகிற அவர்களுடைய ஆபத்துநாள் அவர்கள் மேல் வந்தது.

26. எகிப்தியர் பாம்பைப்போல் சீறி ஓடிப்போய்விடுவார்கள். (எரே 46:22).

27. பாபிலோனியர் காடுவெட்டிகளைப் போல் கோடரிகளோடு எகிப்தின்மேல் வருவார்கள்.

28. கல்தேயர் எகிப்தியரை எண்ணப்படாத மரங்களாயிருந்தாலும் அந்தக் காட்டை வெட்டுவதைப்போல வெட்டுவார்கள். (எரே 46:23).

29. கல்தேயர் வெட்டுக்கிளிகளைப் பார்க்கிலும் அதிகமானவர்கள், அவர்களுக்குத் தொகையில்லை.

30. எகிப்து கலங்கும். (எரே 46:24).

31. வடதிசை ஜனத்தின் கையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

32. நோ என்னும் பட்டணத்திலுள்ள திரளான ஜனங்களைக் கர்த்தர் தண்டிப்பார். (எரே 46:25).

33. பார்வோனை நம்பியிருக்கிறவர்களைக் கர்த்தர் விசாரிப்பார்.

46 அதிகாரம்

34. அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையில் கர்த்தர் அவர்களை ஒப்புக்கொடுப்பார். (எரே 46:26).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. எகிப்து பூர்வகாலத்தில் இருந்ததுபோல் குடியேற்றப்படும் (எரே 46:26).
2. நான் உன்னைத் (யூதாவை) தூரத்திலும், உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன் (எரே 46:27).
3. யாக்கோபு திரும்பிவரும்.
4. அவன் அமைதியோடும் சாங்கோபாங்கத்தோடும் இருப்பான்.
5. அவனைத் தத்தளிக்கப்பண்ணுவார் யாரும் இருக்கமாட்டார்கள்.
6. கர்த்தர் யூதாவை நிர்மூலமாக்கமாட்டார். (எரே 46:28).
7. யூதாவை மட்டாய்த் தண்டிப்பார்.
8. கர்த்தர் யூதாவைக் குற்றமில்லாமல் நீங்கலாக விடமாட்டார்.

“எகிப்தைக் குறித்தும்” - எரேமியா புறஜாதிகளுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் கூறுகிறார். முதலாவதாக எகிப்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் கூறப்படுகிறது. கர்த்தர் யூதாவைத் தண்டிக்க வேண்டுமென்று சித்தம் கொண்டிருந்தார். அதற்காக நேபுகாத்நேச்சாரின் சேனையை யூதருக்கு விரோதமாக அனுப்பினார். அவர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டார்கள். (எரே 46:2; எரே 37:6-17). அப்போது எகிப்தியர்கள் யூதருக்கு ஆதரவாகவும், கர்த்தரால் அனுப்பப் பட்ட பாபிலோனியருக்கு எதிராகவும் யுத்தம் பண்ண வந்தார்கள். நேபுகாத்நேச்சார் பார்வோன்நேகோவைக் கர்கேமிசில் ஜெயித்தான். இந்தத் தீர்க்கதரிசனம் இந்தச் சம்பவத்திற்கு முன்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

“யுத்தத்துக்கு வாருங்கள்” - எதிரெதிரான இரண்டு சேனைகள் யுத்தத்துக்கு அழைக்கும் என்பதை எரே 46:3-4 ஆகிய வசனங்கள் முன்னறிவிக்கின்றன.

(2) எகிப்தின் கலக்கம்

எரே 46:5 அவர்கள் கலங்கி, பின் வாங்குகிறதை நான் காண்கிறதென்ன? சுற்றிலுமுண்டான பயங்கரத்தினிமித்தம் அவர்களுடைய பராக்கிரமசாலிகள் முறியுண்டு, திரும்பிப்பாராமல் ஓட்டமாய் ஓடிப்போகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 46:6 வேகமாய் ஓடுகிறவன் ஓடிப்போகவேண்டாம்; பராக்கிரமசாலி தப்பிப் போகவேண்டாம்; வடக்கே ஐப்பிராத்து நதியண்டையிலே அவர்கள் இடறிவிழுவார்கள்.

“அவர்கள் கலங்கி, பின்வாங்குகிறதை நான் காண்கிறதென்ன?” - நேபுகாத்நேச்சாருக்கும், எகிப்தியருக்கும் இன்னும் யுத்தம் ஆரம்பமாக வில்லை. ஆனால் இந்த யுத்தத்தை எரேமியா தரிசனத்தில் காண்கிறார். அதில் எகிப்தியர்கள் கலங்கிப் பின்வாங்கிப் போய் விடுகிறார்கள். (எரே 46:5-6). எகிப்தியர்கள் எண்ணிக்கையில் திரளானவர்கள். அவர்கள் ஆரவாரத்தோடும், யுத்தத்தில் ஜெயித்து விடலாம் என்னும் நம்பிக்கையோடும் கல்தேயருக்கு எதிராக யுத்தம் பண்ண வருகிறார்கள். எகிப்தியர் இந்த யுத்தத்தில் தோல்வியுற்றனர். இந்தத் தோல்வியை அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. (எரே 46:7-8)

(3) எகிப்தின் ஆணவம்

எரே 46:7 பிரவாகம்போல் புரண்டுவருகிற இவன் யார்? அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல் எழும்பிவருகிற இவன் யார்?

எரே 46:8 எகிப்தியனே பிரவாகத்தைப் போல் புரண்டுவருகிறான், அவனே அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல எழும்பிவருகிறான்; நான் போய், தேசத்தை மூடி, நகரத்தையும் அதில் குடியிருக்கிறவர்களையும் அழிப்பேன் என்றான்.

46 அதிகாரம்

(4) யுத்தத்திற்கு அழைப்பு - வருங்காலம்

எரே 46:9 குதிரைகளே, போய் ஏறுங்கள்; இரதங்களே, கடகட என்று ஓடுங்கள்; பராக்கிரமசாலிகளும், கேடகம் பிடிக்கிற எத்தியோப்பியரும், பூத்தியரும், வில்லைப்பிடித்து நாணேற்றுகிற லீதியரும் புறப்படக்கடவர்கள்.

எரே 46:10 ஆனாலும், இது சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரின் நாளும், அவர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற நாளுமாயிருக்கிறது; ஆகையால், பட்டயம் பட்சித்து, அவர்களுடைய இரத்தத்தால் திருப்தியாகி வெறித்திருக்கும்; வடதேசத்தில் ஐப்பிராத்து நதியண்டையிலே சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவருக்கு ஒரு யாகமும் உண்டு.

"இது சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரின் நாளும், அவர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற நாளுமாயிருக்கிறது" - இது கர்த்தருடைய மகாப்பெரிய நாள்போன்று இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இது அந்த நாளல்ல. இது கர்த்தர் எகிப்தின்மீது நியாயத்தை விசாரிக்கும் சாதாரணமான நாள். இஸ்ரவேல் ஜனத்தாரைத் தண்டிக்க வேண்டுமென்று கர்த்தர் சித்தம் கொண்டிருந்தார். எகிப்தியர் கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதற்கு இடையூறாக இருந்தார்கள். ஆகையினால் கர்த்தர் எகிப்தியர்மீது இந்த நாளில் தம்முடைய நீதியைச் சரிக்கட்டுகிறார். இந்த நாளுக்கும், அர்மெகதோன் யுத்தத்திற்கும் சம்பந்தமில்லை. அர்மெகதோன் யுத்தம் பாலஸ்தீன தேசத்தில் எருசலேமைச் சுற்றிலும் நடைபெறும். (சக 14) இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற யுத்தம் ஐப்பிராத்து நதிக்கரையில் நடைபெறுகிறது. அதுமட்டுமல்லாமல் கர்த்தர் எகிப்தியர்மீதே இந்தயுத்தத்தில் தமது நீதியைச் சரிக்கட்டுகிறார். அர்மெகதோன் யுத்தத்திலோ கர்த்தர் அந்திக்கிறிஸ்துவின்மீதும், அவனுடைய திரளான சேனைகளின்மீதும் கர்த்தர் தமது நீதியைச் சரிக்கட்டுவார். (வெளி 19:11-21; யோவே 2-3; சக 14).

5) எகிப்தின் வீழ்ச்சி

எரே 46:11 எகிப்தின் குமாரத்தியாகிய கன்னிகையே, நீ கீலேயாத்துக்குப் போய், பிசின் தைலம் வாங்கு; திரளான அவிழ்தங்களை நீ கூட்டுகிறது விருதா, உனக்கு ஆரோக்கியமுண்டாகாது.

எரே 46:12 ஜாதிகள் உன் இலச்சையைக் கேள்விப்பட்டார்கள்; உன் கூக்குரலால் தேசம் நிறைந்தது; பராக்கிரமசாலியின் மேல் பராக்கிரமசாலி இடறி, இருவரும் ஏகமாய் விழுந்தார்கள் என்றார்.

"நீ கீலேயாத்துக்குப் போய், பிசின் தைலம் வாங்கு" - எரே 46:11-12 ஆகிய வசனங்களில் ஐப்பிராத்து நதிக்கரையில் கர்கேமிசில் நடைபெறும் யுத்தத்தைப் பற்றி விவரிக்கப் பட்டிருக்கிறது. இதில் எகிப்தியர் தோல்வியடைவார்கள். அவர்கள் கீலேயாத்திற்குப் போய் பிசின் தைலம் வாங்கி யுத்தத்தில் தங்களுக்கு உண்டான காயங்களுக்குக் கட்டுப்போட்டாலும் அவர்களுக்கு ஆரோக்கியமுண்டாகாது.

(6) பாபிலோனிலிருந்து நியாயத்தீர்ப்பு

எரே 46:13 எகிப்துதேசத்தை அழிக்கப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வருவானென்பதைக் குறித்து, எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் கர்த்தர் சொன்ன வசனம்:

எரே 46:14 ஆயத்தப்பட்டு நில், பட்டயம் உன்னைச் சுற்றிலும் உண்டானதைப் பட்சித்துப் போடுகிறதென்று சொல்லி, எகிப்திலே அறிவித்து, மிக்தோலிலே கூறி, நோப்பிலும் தக்பானேசிலும் பிரசித்தம் பண்ணுங்கள்.

எரே 46:15 உன் வீரர் வாரிக்கொள்ளப் படுகிறதென்ன? கர்த்தர் அவர்களைத் தள்ளினதால் அவர்கள் நிலைநிற்க வில்லை.

எரே 46:16 அநேகரை இடறப் பண்ணுகிறார்; அவனவன் தனக்கடுத்தவன்மேல் விழுகிறான்; அவர்கள்: எழுந்திருங்கள், கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப நமது ஜனத்தண்டைக்கும், நாம் பிறந்த தேசத்துக்கும் திரும்பிப்போவோம் என்கிறார்கள்.

46 அதிகாரம்

எரே 46:17 எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பாழாக்கப்பட்டான்; அவனுக்குக் குறித்த காலம் முடிந்ததென்று அங்கே சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள்.

"எகிப்துதேசத்தை அழிக்கப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வருவான்" - நேபுகாத்நேச்சார் எகிப்தின்மீது படையெடுத்து வருவான் என்னும் உண்மை சம்பவத்தை இந்த வசனம் முன்னறிவிக்கிறது. அவன் எகிப்து தேசத்தை அழிப்பான். யூதாவை ஜெயித்து, எருசலேமை அழித்த பின்பு, பாபிலோன் ராஜா எகிப்தின்மீது படையெடுத்து வருவான். யோயாக்கீமின் நாலாவது வருஷத்தில் நேபுகாத்நேச்சார் கர்கேமிசில் எகிப்தின்மீது யுத்தம் பண்ணுவான். நேபுகாத்நேச்சார் பாபிலோனின் ராஜாவாகி முதலாம் வருஷத்தில் இந்த யுத்தம் நடைபெறுகிறது. (எரே 25:1). எருசலேம் அழிக்கப்படுவதற்கு 18 வருஷங்களுக்கு முன்பாக இந்த யுத்தம் நடைபெறுகிறது.

கர்கேமிசில் நடைபெற்ற யுத்தத்திற்கு 15 வருஷங்களுக்கு முன்பாக எகிப்தின் ராஜா நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக வந்தான். அப்போது நேபுகாத்நேச்சாரின் சேனை எருசலேமை முற்றிக்கையிட்டிருந்தது. எகிப்தின் சேனை வருவதைக் கேள்விப்பட்ட நேபுகாத்நேச்சார், எருசலேமை முற்றிக்கையிடுவதை நிறுத்தி விட்டு, எகிப்தின் மீது தற்காலிகமாக யுத்தம் பண்ணுவதற்குப் புறப்பட்டுப்போனான். அதன் பின்பு, நேபுகாத்நேச்சார் மறுபடியும் எருசலேமிற்கு விரோதமாக வந்தான். (எரே 37:1-10).

எருசலேமைப் பிடித்த பின்பு, நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்திற்குச் சிறிது காலம் புறப்பட்டுப்போனான். அதன் பின்பு, இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக, அவன் எகிப்தின்மீது படையெடுத்து வருகிறான். இந்த யுத்தத்தில் நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தை முழுவதுமாகப் பிடித்து அழித்துப் போட்டான். இதன் மூலமாக இக்காலத்தில் பாபிலோன் தேசத்தின் செல்வாக்கு உலக நாடுகளின் மத்தியில் அதிகரித்தது. (தானி 2:37-42; தானி 7:4).

"எகிப்திலே அறிவித்து" - கல்தேயரோடு நடைபெறும் யுத்தத்தில் எகிப்தியர் தோற்றுப் போவார்கள். இந்தத் தோல்வியை எகிப்திலே அறிவிக்க வேண்டுமென்று எரேமியா தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார்.

"நாம் பிறந்த தேசத்துக்கும் திரும்பிப் போவோம்" - எகிப்து தேசத்தின் இராணுவத்தில் எத்தியோப்பியர், லீதியர், லிபியர் ஆகியோர் கூலிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். கல்தேயரோடு நடைபெறும் யுத்தத்தில் எகிப்தியர் தோல்வியுறுவதைக் காணும்போது கூலிக்கு அமர்த்தப்பட்ட ஜனங்கள் தொடர்ந்து யுத்தம் பண்ண விருப்பமில்லாமல் தாங்கள் பிறந்த தேசத்திற்குத் திரும்பிப் போய்விடலாம் என்று கூறிவிடுகிறார்கள்.

"அவனுக்குக் குறித்த காலம் முடிந்தது" - எகிப்தின் சேனையிலுள்ள கூலிப்படையினர் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனைக் குறித்து அவதூறாகப் பேசுகிறார்கள். அதையும் சத்தமிட்டுச் சொல்கிறார்கள். பார்வோனுக்கு நியமிக்கப்பட்ட ஆட்சிக்காலமும், அவனுடைய ஆடம்பரமும், செழுமையும், ஐசுவரியமும் எல்லாம் முடிந்துபோய்விட்டது. இனிமேல் அவனுக்கு அழிவைத் தவிர வேறொன்றும் மீதமாக இல்லை.

(7) சிறையிருப்பும் அழிவும்

எரே 46:18 பர்வதங்களில் தாபோரும், சமுத்திரத்தின் அருகே கர்மேலும் இருக்கிற நிச்சயம்போல் அவன் வருவானென்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா தம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார்.

எரே 46:19 எகிப்துதேசவாசியாகிய குமாரத்தியே, சிறையிருப்புக்குப் போகும் பிரயாண சாமான்களை ஆயத்தப்படுத்து, நோப் பாழாகும்; அது குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும்.

எரே 46:20 எகிப்து மகா நேர்த்தியான கடாரி, அடிக்கிறவன் வடக்கேயிருந்து வருகிறான்.

எரேமியா - தொகுப்புரை

46 அதிகாரம்

எரே 46:21 அதின் நடுவில் இருக்கிற அதின் கூலிப் படைகள் கொழுத்த காளைகள் போலிருக்கிறார்கள்; இவர்களும் நிற்காமல், திரும்பிக் கொண்டு ஏகமாய் ஓடிப்போவார்கள்; அவர்கள் விசாரிக்கப்படுகிற அவர்களுடைய ஆபத்துநாள் அவர்கள்மேல் வந்தது.

எரே 46:22 அவன் பாம்பைப்போல் சீறிவருவான், இராணுவபலத்தோடே நடந்து காடுவெட்டிகளைப் போல் கோடரிகளோடு அதின் மேல் வருவார்கள்.

எரே 46:23 எண்ணப்படாத மரங்களாயிருந்தாலும் அந்தக் காட்டை வெட்டுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் வெட்டுக்கிளிகளைப் பார்க்கிலும் அதிகமானவர்கள், அவர்களுக்குத் தொகையில்லை.

எரே 46:24 எகிப்தின் குமாரத்தி கலங்குவாள்; வடதிசை ஜனத்தின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாள்.

எரே 46:25 இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் நோ என்னும் பட்டணத்திலுள்ள திரளான ஜனங்களையும், பார்வோனையும், எகிப்தையும், அதின் தேவர்களையும், அதின் ராஜாக்களையும், பார்வோனையும், அவனை நம்பியிருக்கிறவர்களையும் விசாரித்து,

எரே 46:26 அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும், அவனுடைய சேவகரின் கையிலும், அவர்களை ஒப்புக்கொடுப்பேன்; அதற்குப்பின்பு அது பூர்வகாலத்தில் இருந்ததுபோல் குடியேற்றப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா தம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார்" - பர்வதங்களில் தாபோர் இருக்கிறது. சமுத்திரத்தின் அருகே கர்மேல் இருக்கிறது. இவையெல்லாம் இயற்கையான காரியங்கள். இவை நிச்சயமானவை. அதுபோலவே நேபுகாத்நேச்சார் எகிப்துக்கு விரோதமாக வந்து எகிப்தை அழிப்பான் என்பதும் நிச்சயம் என்று கர்த்தர் அறிவிக்கிறார்.

"எகிப்து தேசவாசியாகிய குமாரத்தியே" - எகிப்து தேசம் சிறையிருப்புக்குப் போகும் ஒரு குமாரத்தியாக இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. நோப் தேசம் பாழாகும் என்றும், அது குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும் என்றும் முன்னறிவிக்கப்படுகிறது. எகிப்து மகா நேர்த்தியான கடாரியைப் போல இருக்கிறது. ஆனாலும் நேபுகாத்நேச்சார் வடக்கேயிருந்து அடிக்கும் புயல்காற்றைப்போல வருவான். எகிப்து என்னும் கடாரியால் நேபுகாத்நேச்சார் என்னும் புயல்காற்றுக்கு எதிர்த்து நிற்க முடியாது. (எரே 46:20).

"கூலிப்படைகள் கொழுத்த காளைகள் போலிருக்கிறார்கள்" - எத்தியோப்பியர், லீபியர், லீதியர் ஆகியோர் எகிப்தின் சேனையில் கூலிப்படைகளாக இருக்கிறார்கள். (எரே 46:9). அவர்கள் கூலியையும், போஜனத்தையும் பெற்றுக் கொண்டு கொழுத்தக் காளைகளைப் போல இருக்கிறார்கள். நேபுகாத்நேச்சார் எகிப்துக்கு விரோதமாக வருகிறான் என்று கேள்விப் பட்டவுடன், அவர்கள் எதிர்த்து யுத்தம் பண்ணாமல் அவனுக்குப் பயந்து ஓடி விடுகிறார்கள். அவர்களால் நேபுகாத்நேச்சாருக்கு எதிராக எதிர்த்து நிற்கமுடியாது. ஏனெனில் அந்தநாள் அவர்கள் விசாரிக்கப்படுகிற அவர்களுடைய ஆபத்து நாளாகும்.

எகிப்தியர்கள் பாம்பின் சீற்றம் போல இருப்பார்கள். காட்டை வெட்டுகிறவர்கள் போலிருக்கும் கல்தேயருக்கு எதிராகப் பாம்பால் எதிர்த்து நிற்க முடியாது. (எரே 46:22) கல்தேயர் காட்டை வெட்டுகிறவர்கள் போல வருவார்கள். அவர்களுடைய எண்ணிக்கை வெட்டுக்கிளிகளைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கும். (எரே 46:23) எகிப்து கலங்கும். வடதிசை ஜனமான கல்தேயரின் கையில் எகிப்தியர் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். (எரே 46:24)

46 அதிகாரம்

நோ பட்டணத்திலுள்ள திரளான ஜனங்களும், அவர்களுடைய தெய்வங்களும் தண்டிக்கப்படுவார்கள். (எரே 46:25) அவர்கள் எல்லோருமே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும், அவனுடைய சேவகரின் கையிலும், ஒப்புக்கொடுக்கப் படுவார்கள்.

"அதற்குப்பின்பு அது பூர்வகாலத்தில் இருந்ததுபோல் குடியேற்றப்படும்" - எரே 46:26-28 ஆகிய வசனங்களில் எகிப்து தேசத்தில் இனிமேல் நிறைவேறப்போகிற முன்னறிவிப்பைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. எகிப்து தேசம் பூர்வகாலத்தில் இருந்ததுபோல் குடியேற்றப்படும். (எரே 46:26) இஸ்ரவேல் தேசம் திரும்பிவந்து, அமைதியோடும் சாங்கோபாங்கத்தோடும் இருக்கும். (எரே 46:27) ஆயினும் அதற்கு தேசங்களுக்குரிய தண்டனை கொடுக்கப்படும். (எரே 46:28).

(8) இஸ்ரேல் மீட்கப்படும்

எரே 46:27 என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே, நீ கலங்காதே; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன்; அப்பொழுது யாக்கோபு திரும்பிவந்து, அமைதியோடும் சாங்கோபாங்கத்தோடும் இருப்பான்; அவனைத் தத்தளிக்கப் பண்ணுவார் இல்லை.

எரே 46:28 என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னுடனே இருக்கிறேன்; உன்னைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமல், உன்னை மட்டாய் தண்டிப்பேன்; ஆனாலும் உன்னை நான் குற்றமில்லாமல் நீங்கலாக விடுவதில்லை யென்கிறார்.

47 அதிகாரம்

2. பெலிஸ்தியா, தீரு, சீதோன், காப்தோர் ஆகியவற்றிற்கு எதிராக - (47:1-7; ஏசா 14:28-32; 23:1-18; எசே 25:15-28:26; ஆமோ 1:6-10)

(1) பாபிலோனிய படையெடுப்பு

எரே 47:1 பார்வோன் காத்சாவை அழிக்குமுன்னே, பெலிஸ்தருக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசியாகிய எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 47:2 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, வடக்கேயிருந்து ஜலம் பொங்கி பிரவாகமாகி தேசத்தின் மேலும், அதிலுள்ள எல்லாவற்றின் மேலும், நகரத்தின் மேலும், அதில் குடியிருக்கிறவர்களின்மேலும் புரண்டு ஓடும்; அப்பொழுது மனுஷர் கூக்குரலிட்டு, தேசத்தின் குடிகளெல்லாரும் அலறுவார்கள்.

எரே 47:3 அவர்களுடைய பலத்த குதிரைகளுடைய குளம்புகளின் சத்தத்தையும், அவர்களுடைய இரதங்களின் கடகடப்பையும், அவர்களுடைய உருளைகளின் இரைச்சலையும் கேட்டு, தகப்பன்மார் தங்கள் கை அயர்ந்துபோனதினால் தங்கள் பிள்ளைகளையும் நோக்கிப் பாராதிருப்பார்கள்.

எரே 47:4 பெலிஸ்தரையெல்லாம் பாழாக்கவும், தீருவுக்கும் சீதோனுக்கும் மீதியான சகாயரையெல்லாம் சங்காரம் பண்ணவும் வருகிற நாளிலே இப்படியாகும்; கப்தோர் என்னும் கடற்கரையான தேசத்தாரில் மீதியாகிய பெலிஸ்தரையும் கர்த்தர் பாழக்குவார்.

எரே 47:5 காத்சா மொட்டையடிக்கப்படும்; அவர்களுடைய பள்ளத்தாக்கிலே மீதியாகிய அஸ்கலோன் சங்காரமாகும்; நீ எந்தமட்டுந்தான் உன்னைக் கீறிக்கொள்ளுவாய்.

தீர்க்கதரிசன எண் - 83

"பெலிஸ்தருக்கு விரோதமாய்...... கர்த்தருடைய வசனம்:........" (எரே 47:1-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. வடக்கேயிருந்து ஜலம் பொங்கி பிரவாகமாகி பெலிஸ்திய தேசத்தின்மேல் வரும். (எரே 47:2).
2. அது பெலிஸ்தரின் நகரத்தின்மேலும், அதில் குடியிருக்கிறவர்களின்மேலும் புரண்டு ஓடும்.
3. அப்பொழுது மனுஷர் கூக்குரலிட்டு, தேசத்தின் குடிகளெல்லாரும் அலறுவார்கள்.
4. தகப்பன்மார் தங்கள் கை அயர்ந்து போனதினால் தங்கள் பிள்ளைகளையும் நோக்கிப் பாராதிருப்பார்கள். (எரே 47:3).
5. பெலிஸ்தரும், தீருவிலும், சீதோனிலும் உள்ள அனைவரும் சங்காரம்பண்ணப் படுவார்கள். (எரே 47:4-5).
6. கர்த்தர் அவர்களைப் பாழக்குவார். (எரே 47:4).

(2) தேவனுடைய நோக்கம்

எரே 47:6 ஆ கர்த்தரின் பட்டயமே, எந்த மட்டும் அமராதிருப்பாய்? உன் உறைக்குள் திரும்பிவந்து, ஓய்ந்து அமர்ந்திரு.

எரே 47:7 அது எப்படி அமர்ந்திருக்கும்? அஸ்கலோனுக்கு விரோதமாகவும் கடல்துறை தேசத்துக்கு விரோதமாகவும் கர்த்தர் அதற்குக் கட்டளைகொடுத்து, அவ்விடங்களுக்கென்று அதைக் குறித்தாரே.

எரேமியா - தொகுப்புரை

47 அதிகாரம்

"கர்த்தரின் பட்டயமே" - பாபிலோனின் பட்டயம் இங்கு கர்த்தரின் பட்டயம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் கர்த்தரே இந்தப் பட்டயத்திற்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். தம்முடைய நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாக இருக்கும் தேசங்களின் குடிகளைச் சங்காரம் பண்ணுமாறு கர்த்தர் பாபிலோனின் பட்டயத்திற்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். ஆகையினால் பாபிலோனின் பட்டயம் கர்த்தரின் பட்டயம் என்று அழைக்கப்படுகிறது.

எரேமியா - தொகுப்புரை

48 அதிகாரம்

3. மோவாபிற்கு எதிராக - (48:1-47; ஏசா 15:1; எசே 25:8; ஆமோ 2:1; செப் 2:8)

(1) பாபிலோனிய படையெடுப்பு

எரே 48:1 மோவாபைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், ஐயோ! நேபோ பாழாக்கப்பட்டது; கீரியாத்தாயீம் வெட்கப்பட்டு, பிடிக்கப் பட்டுப் போயிற்று; மிஸ்காப் வெட்கப்பட்டு, கலங்கிப்போயிற்று.

எரே 48:2 எஸ்போனைக்குறித்து மோவாபுக்கு இருந்த பெத்தரிக்கம் இனி இராது; அது ஒரு ஜாதியாயிராதபடிக்கு அதை நிர்மூலமாக்குவேன் வாருங்களென்று அதற்கு விரோதமாகப் பொல்லாப்பை நினைத்திருக்கிறார்கள்; மத்மேனே, நீயும் சங்காரமாவாய்; பட்டயம் உன்னைத் தொடரும்.

எரே 48:3 பாழ்க்கடிப்பினாலும் பெரிய நொறுக்குதலினாலும் உண்டாகிற கூப்பிடுதலின் சத்தம் ஒரொனாயிமிலிருந்து கேட்கப்படும்.

எரே 48:4 மோவாப் நொறுங்குண்டது; அதிலுள்ள சிறுவர்கள் கூப்பிடும் சத்தம் கேட்கப்படுகிறது.

எரே 48:5 லூகித்துக்கு ஏறிப்போகிற வழியிலே அழுகையின்மேல் அழுகை எழும்பும்; ஒரொனாயிமுக்கு இறங்கிப் போகிற வழியிலே நொறுக்குதல் செய்கிறதினால் உண்டாகிய கூக்குரலைச் சத்துருக்கள் கேட்கிறார்கள்.

"மோவாப்" - மோவாப் எப்போதுமே இஸ்ரவேலுக்குச் சத்துருக்களாக இருந்தார்கள். இதற்காகக் கர்த்தர் மோவாபியரை நியாயம் விசாரிக்கிறார். (ஆதி 12:1-3, நியா 3:12,28; 1சாமு 14:47; 2சாமு 8:2; 2இராஜா 1:1; 2இராஜா 3:4-27; 2இராஜா 13:20) யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தில் மோவாபியர் கல்தேயரோடு சேர்ந்து கொண்டார்கள். ஆனால் அதே கல்தேயரே இப்போது மோவாபியருக்கு எதிராக எழும்பியிருக்கிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 84

"மோவாபைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்....." (எரே 48:1-47) எரே 48:1-46 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 48:47 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. ஐயோ! நேபோ பாழாக்கப்பட்டது (எரே 48:1).
2. கீரியாத்தாயீம் வெட்கப்பட்டு, பிடிக்கப் பட்டுப் போயிற்று.
3. மிஸ்காப் வெட்கப்பட்டு, கலங்கிப் போயிற்று.
4. எஸ்போனைக்குறித்து மோவாபுக்கு இருந்த பெத்தரிக்கம் இனி இராது (எரே 48:2).
5. மோவாப் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அதை நிர்மூலமாக்குவேன் வாருங்களென்று அதற்கு விரோதமாக எஸ்போனிலே பொல்லாப்பை நினைத்திருக்கிறார்கள்.
6. மத்மேனே, நீயும் சங்காரமாவாய்; பட்டயம் உன்னைத் தொடரும்.
7. பாழ்க்கடிப்பினாலும் பெரிய நொறுக்குதலினாலும் உண்டாகிற கூப்பிடுதலின் சத்தம் ஒரொனாயிமிலிருந்து கேட்கப்படும். (எரே 48:3,5).

எரேமியா - தொகுப்புரை

48 அதிகாரம்

8. மோவாப் நொறுங்குண்டது (எரே 48:4).

9. அதிலுள்ள சிறுவர்கள் கூப்பிடும் சத்தம் கேட்கப்படுகிறது.

10. லூகித்துக்கு ஏறிப்போகிற வழியிலே அழுகையின்மேல் அழுகை எழும்பும். (எரே 48:5).

11. மோவாப் பிடிக்கப்படும். (எரே 48:7).

12. கேமோஷ் சிறையாக்கப்பட்டுப்போம்.

13. பாழாக்குகிறவன் எல்லாப் பட்டணங்களின் மேலும் வருவான் (எரே 48:8).

14. பள்ளத்தாக்குகளும் கெட்டுப்போகும்; சமனான பூமியும் அழிக்கப்படும்.

15. மோவாப் பறந்து போகும். அதின் பட்டணங்கள் குடிகளில்லாமல் பாழாய்ப்போகும். (எரே 48:9).

16. கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்படுவான். (எரே 48:10).

17. கோழைகள் சபிக்கப்படுவார்கள்.

18. கவிழ்த்துப் போடுகிறவர்களை மோவாபிற்கு அனுப்புவேன்; அவர்கள் அதைக் கவிழ்த்து, அதின் பாத்திரங்களை வெறுமையாக்கி, அதின் ஜாடிகளை உடைத்துப் போடுவார்கள். (எரே 48:12).

19. மோவாப் கேமோஷாலே (மோவாபியரைப் பாதுகாக்கும் அவர்களுடைய தேசிய தெய்வம்) வெட்கப்படும். இஸ்ரவேல் பெத்தேலில் பொன்கன்றுக்குட்டியை வைத்து வெட்கப் பட்டதுபோல மோவாபியரும் வெட்கப்படுவார்கள். (எரே 48:13).

20. மோவாப் அழிந்தது, அதின் பட்டணங்கள் எரிந்து போயின (எரே 48:15).

21. அதின் திறமையுள்ள வாலிபர் கொலைக்களத்துக்கு இறங்குகிறார்கள்.

22. மோவாபின் ஆபத்துவரச் சமீபமாயிருக்கிறது; அதின் தீங்கு மிகவும் தீவிரித்து வருகிறது. (எரே 48:16).

23. தீபோனின் குடிகள் தன் மகிமையை விட்டிறங்கி, தாகத்தோடே உட்கார்ந்திருக்கும். (எரே 48:18).

24. மோவாபைப் பாழாக்குகிறவன் உனக்கு விரோதமாய் வந்து, உன் அரண்களை அழித்துப்போடுவான்.

25. மோவாபிலிருந்து வெளியேறி வருகிறவர்கள் ஆரோவேரின் வழியாகக் கடந்து வந்து யுத்தத்தைப் பற்றி விசாரிப்பார்கள். (எரே 48:19).

26. மோவாப் முறிய அடிக்கப்பட்ட படியினால் கலங்கிப்போயிற்று. (எரே 48:20).

27. சமனான பூமியாகிய ஒலோனின் மேலும், யாத்சாவின்மேலும், மேப்காத்தின் மேலும், தீபோனின்மேலும், நேபோவின் மேலும், பெத்திப்லாத்தாயீமின் மேலும், கீரியாத்தாயீமின்மேலும், பேத்கமூலின்மேலும், பெத்மெயோனின் மேலும், கீரியோத்தின்மேலும், போஸ்றாவின் மேலும், மோவாப் தேசத்திலே தூரத்திலும் சமீபத்திலும் இருக்கிற எல்லாப் பட்டணங்களின்மேலும் நியாயத்தீர்ப்பு வரும். (எரே 48:21-24).

28. மோவாபின் கொம்பு வெட்டுண்டது; அவன் புயம் முறிக்கப்பட்டது (எரே 48:25).

29. மோவாப் தான் வாந்திபண்ணி அதிலே புரளுவான். அவன் பரியாசத்துக் கிடமாவான். (எரே 48:26).

30. மோவாபினிமித்தம் நான் அலறி, மோவாப் தேசம் அனைத்தினிமித்தமும் கூக்குரலிடுவேன் (எரே 48:31-32).

எரேமியா - தொகுப்புரை

48 அதிகாரம்

31. பாழாக்குகிறவன் உன் வசந்தகாலத்துப் பழங்களின்மேலும், உன் திராட்சப்பழ அறுப்பின்மேலும் விழுந்தான். (எரே 48:32).

32. பயிர் வெளியிலும் மோவாப் தேசத்திலுமிருந்து சந்தோஷமும் களிப்பும் நீங்கிப்போயிற்று. (எரே 48:33).

33. திராட்சரசம் ஆலைகளிலிருந்து பொழிகிறதை ஒயப்பண்ணினேன்.

34. மோவாப் தேசத்து மேடைகளில் பலியிடுகிறவனையும் தன் தேவர்களுக்கு தூபங்காட்டுகிறவனையும் ஒயப் பண்ணுவேன் (எரே 48:34-35).

35. மோவாபினிமித்தம் என் இருதயம் நாகசுரம்போல் துயரமாய் தொனிக்கும்; (எரே 48:36).

36. மோவாபின் சகல வீடுகளின் மேலும் அதின் தெருக்களிலேயும் ஏகப் புலம்பல் உண்டாகும். (எரே 48:37-39).

37. மோவாப் தன் சுற்றுப்புறத்தார் அனைவருக்கும் பரியாசமும் திகைப்புமாயிருக்கும். (எரே 48:39).

38. ஒருவன் கழுகைப்போல பறந்துவந்து, மோவாபின்மேல் தன் செட்டைகளை விரிப்பான். (எரே 48:40).

39. மோவாபின் பராக்கிரமசாலிகளுடைய இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம் போல இருக்கும். (எரே 48:40-41).

40. மோவாப் ஒரு ஜனமாயிராதபடிக்கு அழிக்கப்படும். (எரே 48:42).

41. திகிலும், படுகுழியும், கண்ணியும் மோவாபின்மேல் வரும் (எரே 48:43).

42. திகிலுக்கு விலக ஓடுகிறவன் படுகுழியிலே விழுவான் (எரே 48:44).

43. நெருப்பு எஸ்போனிலும், அக்கினி ஜூவாலை சீகோன் நடுவிலுமிருந்து புறப்பட்டு, மோவாப் தேசத்தின் எல்லைகளையும், கலகஞ் செய்கிறவர்களின் உச்சந்தலையையும் பட்சிக்கும். (எரே 48:45).

44. மோவாபே, உனக்கு ஐயோ! கேமோஷ் விக்கிரகத்தையடுத்த ஜனம் அழியும், உன் குமாரரும் சிறை பிடிக்கப்படுகிறார்கள்; உன் குமாரத்திகளும் சிறைபிடிக்கப்பட்டுப் போகிறார்கள். (எரே 48:46).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கடைசி நாட்களில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவேன் (எரே 48:47). மோவாபைப் பற்றி மேலும் பல முன்னறிவிப்புகள் ஏசா 15-16 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன.

"அதற்கு விரோதமாகப் பொல்லாப்பை நினைத்திருக்கிறார்கள்" - கல்தேயர்கள் எஸ்போனில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அதை அவர்கள் தங்களுடைய தலைமை ஸ்தலமாகப் பயன்படுத்தி மோவாபின்மீது யுத்தம் பண்ணுகிறார்கள். (எரே 48:3,45).

(2) மோவாபியர் தப்பி ஓடினார்கள்

எரே 48:6 உங்கள் பிராணன் தப்ப ஓடிப்போங்கள்; வனாந்தரத்திலுள்ள கறளையாய்ப்போன செடியைப்போலிருப்பீர்கள்.

எரே 48:7 நீ உன் சம்பத்தையும் உன் பொக்கிஷங்களையும் நம்புகிறபடியினாலே நீயும் பிடிக்கப்படுவாய், அப்பொழுது கேமோஷ் சிறையாக்கப்பட்டுப்போம்; அதின் ஆசாரியரும் பிரபுக்களும் ஏகமாய்ச் சிறைப்பட்டுப்போவார்கள்.

எரே 48:8 பாழாக்குகிறவன் எல்லாப் பட்டணங்களின்மேலும் வருவான்; ஒரு பட்டணமும் தப்பிப்போவதில்லை; பள்ளத்தாக்குகளும் கெட்டுப்போகும்; சமனான பூமியும் அழிக்கப்படும் என்று கர்த்தர் சொன்னார்.

48 அதிகாரம்

எரே 48:9 மோவாபுக்குச் செட்டைகளைக் கொடுங்கள்; அது பறந்து போகட்டும்; அதின் பட்டணங்கள் குடிகளில்லாமல் பாழாய்ப்போகும்.

எரே 48:10 கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்; இரத்தம் சிந்தாதபடிக்குத் தன் பட்டயத்தை அடக்கிக் கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன்.

"கேமோஷ்" (Chemosh) - இது மோவாபியரின் தேசிய தெய்வம். (எரே 48:7,13,46; எண் 21:29; நியா 11:24; 1இராஜா 11:7,33; 2இராஜா 23:13).

"கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" - மோவாபைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் சிலரைத் தமது கருவிகளாகப் பயன்படுத்துகிறார். அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையை உண்மையாகவும், முழுமனதோடும், தைரியமாகவும் நிறைவேற்ற வேண்டும். அசதியாகவும், கோழையாகவும், கர்த்தருடைய சித்தத்தைச் செய்கிறவர்கள் மீது கர்த்தருடைய சாபம் வரும்.

(3) மோவாபின் அழிவு

எரே 48:11 மோவாப் தன் சிறுவயதுமுதல் சுகமாய் வாழ்ந்தது; அது ஒரு பாத்திரத்திலிருந்து மறு பாத்திரத்தில் வார்க்கப்படாமலும், அதின் வண்டல்களின் மேல் அசையாமலும் இருந்தது; அது சிறையிருப்புக்குப் போனதில்லை; ஆதலால் அதின் ருசி அதில் நிலைத்திருந்தது; அதின் வாசனை வேறுபடவில்லை.

எரே 48:12 ஆகையால், இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது கவிழ்த்துப்போடுகிறவர்களை அதற்கு அனுப்புவேன்; அவர்கள் அதைக் கவிழ்த்து, அதின் பாத்திரங்களை வெறுமையாக்கி, அதின் ஜாடிகளை உடைத்துப்போடுவார்கள்.

எரே 48:13 அப்பொழுது இஸ்ரவேல் சந்ததி தங்கள் நம்பிக்கையான பெத்தேலாலே வெட்கப்பட்டதுபோல, மோவாப் கேமோஷாலே வெட்கப்படும்.

எரே 48:14 நாங்கள் பராக்கிரமசாலிகளென்றும், நாங்கள் யுத்த சன்னத்தரென்றும் நீங்கள் சொல்லுகிறதென்ன?

எரே 48:15 மோவாப் அழிந்தது, அதின் பட்டணங்கள் எரிந்துபோயின; அதின் திறமையுள்ள வாலிபர் கொலைக்களத்துக்குஇறங்குகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜாசொல்லுகிறார்.

எரே 48:16 மோவாபின் ஆபத்துவரச் சமீபமாயிருக்கிறது; அதின் தீங்கு மிகவும் தீவிரித்துவருகிறது.

எரே 48:17 அதின் சுற்றுப்புறத்தாரும் அதின் பேரை அறிந்தவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் அதற்காக அங்கலாய்த்துக் கொள்ளுங்கள்; பெலனானதடியும் அலங்காரமான கோலும் எப்படி உடைந்ததென்று சொல்லுங்கள்.

எரே 48:18 தீபோன் பட்டணவாசியான குமாரத்தியே, நீ உன் மகிமையை விட்டிறங்கி, தாகத்தோடே உட்கார்ந்திரு; மோவாபைப் பாழாக்குகிறவன் உனக்கு விரோதமாய் வந்து, உன் அரண்களை அழித்துப்போடுவான்.

எரே 48:19 ஆரோவேரில் குடியிருக்கிறவளே, நீ வழியிலே நின்று பார்த்துக் கொண்டிரு; நடந்ததென்னவென்று ஓடி வருகிறவனையும் தப்பி வருகிறவளையும் கேள்.

எரே 48:20 மோவாப் முறிய அடிக்கப்பட்ட படியினால் கலங்கிப் போயிற்று; அலறிக் கூப்பிடுங்கள்; மோவாப் பாழாக்கப் பட்டதென்று அர்னோனில் அறிவியுங்கள்.

எரே 48:21 சமனான பூமியாகிய ஒலோனின் மேலும், யாத்சாவின் மேலும், மேப்காத்தின் மேலும்,

48 அதிகாரம்

எரே 48:22 தீபோனின்மேலும், நேபோவின் மேலும், பெத்திப்லாத்தாயீமின் மேலும்,

எரே 48:23 கீரியாத்தாயீமின்மேலும், பேத்கமூலின்மேலும், பெத்மெயோனின் மேலும்,

எரே 48:24 கீரியோத்தின்மேலும், போஸ்றாவின்மேலும், மோவாப் தேசத்திலே தூரத்திலும் சமீபத்திலும் இருக்கிற எல்லாப் பட்டணங்களின் மேலும் நியாயத்தீர்ப்பு வரும்.

எரே 48:25 மோவாபின் கொம்பு வெட்டுண்டது; அவன் புயம் முறிக்கப்பட்டது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"மோவாப் தன் சிறுவயதுமுதல் சுகமாய் வாழ்ந்தது" - மோவாபியர் ஏமியரை ஜெயித்து, அவர்களுடைய தேசத்தில் குடியிருந்தார்கள். (உபா 2:9-10) மோவாபியர் அந்தத் தேசத்தில் வளம்பெற்றார்கள். கர்த்தரைச் சார்ந்திருக்க வேண்டும் என்றும், நீதியாக ஜீவிக்க வேண்டுமென்றும் அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை.

"அது சிறையிருப்புக்குப் போனதில்லை" - ஒரு தேசம் சிறையிருப்புக்குப் போகும்போது, அது பலபாடங்களைப் படித்துக் கொள்ளும். பல உபத்திரவங்களை அனுபவிக்கும்போது அந்தத் தேசம் திருந்தும். ஆனால் மோவாபியரோ இதுவரையிலும் சிறையிருப்புக்கே போனதில்லை. ஆகையினால் மோவாபியர் திருந்தாமல் இறுமாப்பாய் இருக்கிறார்கள்.

கவிழ்த்துப்போடுகிறவர்கள் (wanderers)
- צָעָה - tsaw-aw' - 6808

வினைச்சொல் - சிறைப்பட்டுப் போனவனாயிரு, வா, திரி, கவிழ்த்திரு, கவிழ்த்துப்போடு

(to incline or tip)

"தங்கள் நம்பிக்கையான பெத்தேலாலே வெட்கப்பட்டதுபோல" - யெரொபெயாம் பெத்தேலிலே ஒரு பொன்கன்றுக்குட்டியையும், தாணிலே ஒரு பொன்கன்றுக்குட்டியையும் வைத்தான். இவை இஸ்ரவேலரின் தெய்வங்கள் என்று அறிவித்தான். இஸ்ரவேலர் விக்கிரகாராதனையினாலும், மற்றப் பாவங்களினாலும் அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனார்கள். இதனால் கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தையே ஒரு தேசமாக இராதவாறு அழித்துப்போட்டார். அசீரியர்கள் கி.மு. 722 ஆம் வருஷத்தில் இஸ்ரவேல் ஜனங்களைச் சிறைபிடித்தார்கள். அவர்கள் ஆராதித்த பொன்கன்றுக்குட்டி அவர்களை அசீரியரின் கைகளிலிருந்து விடுவிக்கவில்லை. (2இராஜா 17) அதுபோலவே மோவாபியரின் தெய்வங்களும் அவர்களை விடுவிக்காது.

"மோவாபின் ஆபத்துவரச் சமீபமாயிருக்கிறது" - இந்தத் தீர்க்கதரிசனம் யோயாக்கீமின் நாலாம் வருஷத்து ஆட்சிக் காலத்தில் கூறப்பட்டிருக்கலாம். யூதாவின் சிறையிருப்பு, மோவாபியரின் தோல்வி ஆகியவை இதற்கு 18 வருஷங்களுக்குப் பின்பு நடைபெறுகிறது.

கலங்கிப்போன தேசங்கள்

1. கீரியாத்தாயீம் (Kiriathaim) (எரே 48:1)
2. மிஸ்காப் (Misgab)
3. மோவாப் (Moab) (எரே 48:20)

(4) நியாயத் தீர்ப்பிற்கு பத்து காரணங்கள்

எரே 48:26 அவனை வெறிகொள்ளச் செய்யுங்கள்; கர்த்தருக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினான்; மோவாப் தான் வாந்தி பண்ணின அதிலே புரளுவான்; அவன் பரியாசத்துக்கிடமாவான்.

எரே 48:27 இஸ்ரவேல் உனக்குப் பரியாசமாயிருந்தான் அல்லவோ? அவன் திருடருக்குள் கண்டுபிடிக்கப் பட்டானோ? நீ அவனைக்குறித்துப் பேசுகிற போதெல்லாம், தலையைத் துலுக்குகிறாயே.

48 அதிகாரம்

எரே 48:28 மோவாப் தேசத்தின் குடிகளே, நீங்கள் பட்டணங்களை விட்டுப்போய், கன்மலையில் தங்கி, குகையின் வாய் ஓரங்களில் கூடுகட்டுகிற புறாவுக்கு ஒப்பாயிருங்கள்.

எரே 48:29. அவன் மெத்தப் பெருமைக்காரன், மோவாபின் பெருமையையும், அவன் மேட்டிமையையும், அவன் அகந்தையையும், அவன் பெத்தரிக்கத்தையும், அவன் இருதயத்தின் மேட்டிமையையும் குறித்துக் கேட்டேன்.

எரே 48:30 அவன் மூர்க்கத்தை நான் அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அப்படியாகாது, அவன் வீம்பு செல்லாது என்கிறார்.

நியாயத்தீர்ப்பிற்குக் காரணம்

1. வெறிகொண்டார்கள்.
2. கர்த்தருக்கு விரோதமாகப் பெருமை பாராட்டினார்கள்.
3. இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பகைமை பாராட்டினார்கள். (எரே 48:27)
4. திருடினார்கள்.
5. இஸ்ரவேலைப் பரியாசம் பண்ணினார்கள்.
6. இஸ்ரவேலின் வீழ்ச்சியில் சந்தோஷப் பட்டார்கள்.
7. பெருமையும், அகந்தையும் உடையவர்கள். (எரே 48:29)
8. இருதயத்தில் மேட்டிமையுடையவர்கள்.
9. இஸ்ரவேலுக்கு விரோதமாக மூர்க்கமாக இருந்தார்கள். (எரே 48:30)
10. பொய்கூறினார்கள்.

மோவாபின் பெருமை

1. மெத்தப் பெருமை
2. மேட்டிமை
3. அகந்தை
4. இருதயத்தின் மேட்டிமை

(5) மோவாபிற்காக புலம்பல்

எரே 48:31 ஆகையால் மோவாபினிமித்தம் நான் அலறி, மோவாப் தேசம் அனைத்தினிமித்தமும் கூக்குரலிடுவேன்; கீராரேஸ் மனுஷரினிமித்தம் பெருமூச்சு விடப்படும்.

எரே 48:32 சிப்மாவூரின் திராட்சச்செடி, யாசேருக்காக நான் அழுததுபோல உனக்காகவும் அழுவேன்; உன் கொடிகள் கடலைக் கடந்துபோயின; அவைகள் யாசேர் கடல்மட்டும் போய் எட்டின; பாழாக்குகிறவன் உன் வசந்தகாலத்துப் பக்ஷங்களின் மேலும், உன் திராட்சப்பழ அறுப்பின்மேலும் விழுந்தான்.

எரே 48:33 பயிர்வெளியிலும் மோவாப் தேசத்திலுமிருந்து சந்தோஷமும் களிப்பும் நீங்கிப்போயிற்று; திராட்சரசம் ஆலைகளிலிருந்து பொழிகிறதை ஒயப்பண்ணினேன்; ஆலையை மிதிக்கிறவர்களின் பாடல் இல்லை; அது ஆரவாரமேயல்லாமல் ஆலை மிதிக்கும் பாடலல்ல.

எரே 48:34 எஸ்போன் துவக்கி எலெயாலேமட்டும் யாகாஸ்வரைக்கும் உண்டாகும் கூக்குரலினிமித்தம் அவர்கள் மூன்றுவயதுக் கடாரியைப்போல், சோவார்துவக்கி ஒரொனாயிம்மட்டும் சத்தமிடுவார்கள்; நிம்ரீமின் ஜலங்களும் வற்றிப்போகும்.

எரே 48:35 மோவாப் தேசத்து மேடைகளில் பலியிடுகிறவனையும் தன் தேவர்களுக்கு தூபங் காட்டுகிறவனையும் ஒயப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

48 அதிகாரம்

எரே 48:36 ஆகையால், மோவாபினிமித்தம் என் இருதயம் நாகசுரம் போல் துயரமாய் தொனிக்கும்; கீராரேஸ் மனுஷரினிமித்தம், என் இருதயம் நாகசுரம் போல் துயரமாய் தொனிக்கும்; அவர்கள் சம்பாதித்த ஐசுவரியம் அழிந்து போகிறபடியினால் அப்படி தொனிக்கும்.

எரே 48:37 தலைகள் எல்லாம் மொட்டையிடப்பட்டும், தாடிகள் எல்லாம் கத்தரிக்கப்பட்டும் இருக்கும்; கைகளில் எல்லாம் கீறுதல்களும், அரைகளில் இரட்டுடுப்பும் உண்டு.

எரே 48:38 மோவாபின் சகல வீடுகளின் மேலும் அதின் தெருக்களிலேயும் ஏகப் புலம்பல் உண்டாகும்; ஒருவரும் விரும்பப்படாத பாத்திரம்போல மோவாபை உடைத்துப் போட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 48:39 மோவாப் எவ்வளவாய் முறிந்து போயிற்றென்று அலறுகிறார்கள்; அது முதுகைக்காட்டி எவ்வளவாய் வெட்கப்படும்? இப்படி மோவாப் தன் சுற்றுப்புறத்தார் அனைவருக்கும் பரியாசமும் திகைப்புமாயிருக்கும்.

மோவாபினிமித்தம் துக்கம்

1. நான் அலறுவேன். (எரே 48:31).
2. மோவாப் தேசம் அனைத்தினிமித்தமும் கூக்குரலிடுவேன்.
3. கீராரேஸ் மனுஷரினிமித்தம் பெருமூச்சு விடுவேன்.
4. உனக்காக அழுவேன். (எரே 48:32).
5. மோவாபினிமித்தம் என் இருதயம் நாகசுரம்போல் துயரமாய் தொனிக்கும். (எரே 48:36).
6. கீராரேஸ் மனுஷரினிமித்தம், என் இருதயம் நாகசுரம் போல் துயரமாய் தொனிக்கும்.

"யாசேருக்காக நான் அழுததுபோல உனக்காகவும் அழுவேன்" - வேதாகமத்தில் யாசேருக்கு ஏற்பட்ட துயரத்தைப் பற்றி விளக்கப்படவில்லை. இந்த அழுகை எதனால் உண்டாயிற்று என்று தெரியவில்லை. அங்கு மகாப்பெரிய சங்காரம் உண்டாயிருக்க வேண்டும். சீகோனியர் மோவாபைக் கைப்பற்றிய போது இந்த அழிவு ஏற்பட்டிருக்கலாம். ஏசாயாவிலும், எரேமியாவிலும் இந்த அழுகையைப் பற்றிய குறிப்பு உள்ளது. (எரே 48:32; ஏசா 16:8-9). யாசேர் (Jazer) (எண் 32:1-3; யோசு 13:25; யோசு 21:39; 2சாமு 24:5; 1நாளா 6:81; 1நாளா 26:31)

"மோவாப் தேசத்திலுமிருந்து சந்தோஷமும் களிப்பும் நீங்கிப்போயிற்று" - சத்துருக்கள் மோவாபின்மீது யுத்தம் பண்ணி திராட்சத் தோட்டங்களையும், திராட்சை ஆலைகளையும் அழித்துப் போட்டார்கள்.

"நாகசுரம்" (pipes) - துக்க காலங்களில் ஒப்பாரி பாடும்போது சோககீதம் வாசிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வாத்தியம். (மத் 9:23).

"மோவாபின் சகல வீடுகளின் மேலும்" - விக்கிரகாராதனைக்காரர்கள் தங்களுடைய வீடுகளின் மாடிகளில் தங்களுடைய விக்கிரகங்களை வழிபடுவது வழக்கம். ஆனால் மோவாபியருக்கு அழிவு உண்டாயிற்று. அவர்களுடைய விக்கிரகங்களினால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. இதனால் மோவாபியர் தங்களுடைய வீடுகளின் மாடிகளில் விக்கிரகங்களை ஆராதிப்பதற்குப் பதிலாகப் புலம்புகிறார்கள். (எரே 48:38-39).

(6) பாபிலோனிய படையெடுப்பு - காரணம்

எரே 48:40 இதோ, ஒருவன் கழுகைப் போல பறந்துவந்து, மோவாபின்மேல் தன் செட்டைகளை விரிப்பான்.

எரே 48:41 கீரியோத் பிடிக்கப்படும், கோட்டைகள் கைவசமாகும்; அந்நாளிலே மோவாபின் பராக்கிரமசாலிகளுடைய இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம் போல இருக்கும்.

48 அதிகாரம்

எரே 48:42 மோவாப் கர்த்தருக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினபடியால், அது ஒரு ஜனமாயிராதபடிக்கு அழிக்கப்படும்.

எரே 48:43 மோவாப் தேசத்தின் குடியானவனே, திகிலும், படுகுழியும், கண்ணியும் உன்மேல் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"ஒருவன் கழுகைப்போல பறந்துவந்து" - நேபுகாத்நேச்சார் மிக வேகமாக வந்து யுத்தம் பண்ணக்கூடியவன். பகைஞரின் இருதயங்களைக் கரைந்து போகப் பண்ணுவான். கழுகைப்போல அவன் வேகமாக வருவான். (எரே 48:40-41).

"அது ஒரு ஜனமாயிராதபடிக்கு அழிக்கப் படும்" - மோவாபியர் முற்றிலுமாக அழிக்கப் படுவார்கள். பாபிலோன் தேசத்தார் மோவாபியரைச் சிறைப்பிடித்துச் சென்றார்கள். சிறையிருப்புக்குப் பின்பு ஒருசில மோவாபியரே திரும்பி வந்தார்கள். அவர்களால் தங்களை மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்க முடிய வில்லை. கடைசி நாட்களில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 48:47). அவர்கள் எந்தளவுக்கு ஒரு தேசமாக ஸ்தாபிக்கப் படுவார்கள் என்பது கடைசி நாட்களில் தெரியவரும்.

(7) மோவாபியர் தப்பி ஓடினார்கள்

எரே 48:44 திகிலுக்கு விலக ஓடுகிறவன் படுகுழியிலே விழுவான்; படுகுழியிலிருந்து ஏறுகிறவனோ கண்ணியிலே பிடிபடுவான்; அவர்கள் விசாரிக்கப்படும் வருஷத்தை அதின்மேல், அதாவது மோவாபின்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 48:45 வல்லடிக்குத் தப்ப ஓடிப்போகிறவர்கள் எஸ்போனின் நிழலில் தரித்து நின்றார்கள், ஆனாலும் நெருப்பு எஸ்போனிலும், அக்கினி ஜுவாலை சீகோன் நடுவிலுமிருந்து புறப்பட்டு, மோவாப் தேசத்தின் எல்லைகளையும், கலகஞ் செய்கிறவர்களின் உச்சந்தலையையும் பட்சிக்கும்.

எரே 48:46 மோவாபே, உனக்கு ஐயோ! கேமோஷ் விக்கிரகத்தையடுத்த ஜனம் அழியும், உன் குமாரரும் சிறைபிடிக்கப் படுகிறார்கள்; உன் குமாரத்திகளும் சிறைபிடிக்கப்பட்டுப் போகிறார்கள்.

"திகிலுக்கு விலக ஓடுகிறவன் படுகுழியிலே விழுவான்" - மோவாபியர் பல வழிகளில் அழிக்கப்படுவார்கள். யுத்தத்தில் பட்டயங்களால் வெட்டப்படுவார்கள். படுகுழியில் விழுந்து அழிவார்கள். கண்ணியில் பிடிபட்டு மடிவார்கள்.

"வல்லடிக்குத் தப்ப ஓடிப்போகிறவர்கள் எஸ்போனின் நிழலில் தரித்து நின்றார்கள்" - எஸ்போனில் நேபுகாத்நேச்சாரின் தலைமைச் செயலகம் இருக்கிறது. பாபிலோனியர் எஸ்போனிலிருந்து திட்டம் பண்ணி மோவாபியர்மீது யுத்தம் பண்ணுகிறார்கள். மோவாப் தேசத்தை முழுவதுமாக அழித்துப் போட்டாகள். (எரே 48:2).

(8) மோவாபின் மீட்பு

எரே 48:47 ஆனாலும் கடைசி நாட்களில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். மோவாபின் மேல் வரும் நியாயத்தீர்ப்பின் செய்தி இத்தோடே முடிந்தது.

"ஆனாலும் கடைசிநாட்களில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவேன்" - மோவாபைக் குறித்து கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசன வசனங்களில் இந்த வசனம் மட்டுமே மோவாபியருக்கு வருங்காலத்தில் நடைபெறப்போகும் சம்பவத்தைப் பற்றி முன்னறிவிக்கிறது. கடைசி நாட்களில் மோவாபியர் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். லோத்தின் பிள்ளைகளாகிய மோவாபும், அம்மோனும் மேசியாவின்கீழ் ஆசீர்வதிக்கப் படுவார்கள். (எரே 49:6).

49 அதிகாரம்

4. அம்மோனுக்கு எதிராக - (49:1-6; எசே 21:28; 25:1; ஆமோ 1:13; செப் 2:8-11)

(1) பாபிலோனிய படையெடுப்பு

எரே 49:1 அம்மோன் புத்திரரைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலுக்குக் குமாரர் இல்லையோ? அவனுக்குச் சுதந்தரவாளி இல்லையோ? அவர்கள் ராஜா காத் தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டு, அதின் ஜனம் இவன் பட்டணங்களில் குடியிருப்பானேன்?

எரே 49:2 ஆகையால், இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவிலே யுத்தத்தின் ஆர்ப்பரிப்பைக் கேட்கப்பண்ணுவேன்; அது பாழான மண்மேடாகும்; அதற்கடுத்த ஊர்களும் அக்கினியால் சுட்டெரிக்கப் படும்; ஆனாலும் இஸ்ரவேல் தன் தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டவர்களின் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 85

"அம்மோன் புத்திரரைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்......" (எரே 49:1-6) எரே 49:1-5 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 49:6 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவிலே யுத்தத்தின் ஆர்ப்பரிப்பைக் கேட்கப்பண்ணுவேன் (எரே 49:2).
2. அது பாழான மண்மேடாகும்.
3. அதற்கடுத்த ஊர்களும் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்.
4. இஸ்ரவேல் தன் தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டவர்களின் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்.
5. அம்மோனுக்காக அழுகை உண்டாகும். (எரே 49:3).
6. அவர்கள் ராஜா அதின் ஆசாரியர்களோடும் அதின் பிரபுக்களோடுங்கூடச் சிறைப்பட்டுப் போவான்.
7. உன் சுற்றுப்புறத்தார் எல்லாராலும் உன்மேல் திகிலை வரப்பண்ணுவேன் (எரே 49:5).
8. நீங்கள் அவரவர் தம்தம் முன் இருக்கும் வழியை ஓடத் துரத்தப்படுவீர்கள்.
9. வலசை வாங்கி ஓடுகிறவர்களைச் சேர்ப்பார் ஒருவருமில்லை.
10. அம்மோன் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்புவேன் (எரே 49:6; எரே 49:39; எரே 48:47).

"அவர்கள் ராஜா காத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அதின் ஜனம் இவன் பட்டணங்களில் குடியிருப்பானேன்?" - அம்மோனியர் காத் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்புகிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் சுதந்தரவாளி யாரும் இல்லாததுபோல அம்மோனியர் அவர்களை நெருக்குகிறார்கள். யெப்தாவின் நாட்களிலிருந்து அம்மோன் இஸ்ரவேலின் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பிற்று. (நியா 11). தாவீது, சாலொமோன் ஆகியோருடைய ஆட்சிக்குப் பின்பு வந்த ராஜாக்களுடைய ஆட்சிக் காலத்தில் அம்மோனியர் சிறிது சிறிதாக காத்தியரை அப்புறப்படுத்தினார்கள். கிலேயாத்தியரை அசீரியர் வென்றபோது அம்மோனியரின் கை காத்தியரின்மீது ஓங்கிற்று. (2இராஜா 15:27-31; 2இராஜா 17:1-41).

எரேமியா - தொகுப்புரை

49 அதிகாரம்

"அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவிலே யுத்தத்தின் ஆர்ப்பரிப்பைக் கேட்கப்பண்ணுவேன்" - யூதாவின் வீழ்ச்சிக்குப் பின்பு நேபுகாத்நேச்சார் பாலஸ்தீன தேசத்தையும், எகிப்து தேசத்தையும் கைப்பற்றினான். அப்போது எரே 49:6 ஆவது வசனத்தைத் தவிர இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (எரே 37:1-10).

(2) அம்மோனுக்காக புலம்பல்

எரே 49:3 எஸ்போனே, அலறு; ஆயி பாழாக்கப்பட்டது; ரப்பாவின் குமாரத்திகளே, ஓலமிடுங்கள்; இரட்டை உடுத்திக் கொண்டு, புலம்பி, வேலிகளில் சுற்றித்திரியுங்கள்; அவர்கள் ராஜா அதின் ஆசாரியர்களோடும் அதின் பிரபுக்களோடுங்கூடச் சிறைப்பட்டுப் போவான்.

(3) நியாயத்தீர்ப்பு - காரணம்

எரே 49:4 எனக்கு விரோதமாய் வருகிறவன் யார் என்று சொல்லி, உன் செல்வத்தை நம்பின சீர்கெட்ட குமாரத்தியே, நீ பள்ளத்தாக்குகளைப் பற்றிப் பெருமை பாராட்டுவானேன்? உன் பள்ளத்தாக்குக் கரைந்து போகிறது.

எரே 49:5 இதோ, உன் சுற்றுப்புறத்தார் எல்லாராலும் உன்மேல் திகிலை வரப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் அவரவர் தம்தம் முன் இருக்கும் வழியை ஓடத் துரத்தப்படுவீர்கள்; வலசைவாங்கி ஓடுகிறவர்களைச் சேர்ப்பார் ஒருவருமில்லை.

4) அம்மோனின் மீட்பு

எரே 49:6 அதற்குப்பின்பு அம்மோன் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அம்மோன் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்புவேன்" - கடைசி நாட்களில் அம்மோனும், மோவாபும் சிறையிருப்பிலிருந்து திருப்பப்படும். (எரே 48:47).

5. ஏதோமிற்கு எதிராக - (49:7-22; எசே 25:12-14; 32:29; 35:1-15; ஆமோ 1:11-12; ஏசா 34; புல 4:21; மல 1:1; ஒப 1-18; எண் 20:14)

(1) உடனடி அழிவு

எரே 49:7 ஏதோமைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தேமானிலே இனி ஞானமில்லையோ? ஆலோசனை விவேகிகளை விட்டு அழிந்ததோ? அவர்களுடைய ஞானம் கெட்டுப் போயிற்றோ?

எரே 49:8 தேதானின் குடிகளே, ஓடுங்கள், முதுகைக் காட்டுங்கள், பள்ளங்களில் பதுங்குங்கள்; ஏசாவை விசாரிக்கும் காலத்தில் அவன் ஆபத்தை அவன் மேல் வரப்பண்ணுவேன்.

எரே 49:9 திராட்சப்பழங்களை அறுக்கிறவர்கள் உன்னிடத்திலே வந்தார்களாகில், பின்பறிக்கிறதற்குக் கொஞ்சம் வையார்களோ? இராத்திரியில் திருடர்வந்தார்களாகில், தங்களுக்குப் போதுமென்கிறமட்டும் கொள்ளையடிப்பார்கள் அல்லவோ?

எரே 49:10 நானோ ஏசாவை வெறுமையாக்கி, அவன் ஒளித்துக் கொள்ளக்கூடாதபடிக்கு அவனுடைய மறைவிடங்களை வெளிப்படுத்திப் போடுவேன்; அவனுடைய சந்ததியாரும் அவனுடைய சகோதரரும் அவனுடைய அயலாரும் அழிக்கப்படுவார்கள்; அவன் இனி இரான்.

எரேமியா - தொகுப்புரை

49 அதிகாரம்

எரே 49:11 திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்; உன் விதவைகள் என்னை நம்புவார்களாக.

எரே 49:12 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, பாத்திரத்தில் குடிக்க வேண்டுமென்கிற நியாயத்தீர்ப்புக்கு உள்ளாயிராதவர்கள் அதில் குடித்தார்கள்; நீ குற்றமற்று நீங்கலாயிருப்பாயோ? நீ நீங்கலாயிராமல் அதில் நிச்சயமாய்க் குடிப்பாய்.

"ஏதோம்" - ஏதோம் யூதாவின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இதன் அருகில் சவக்கடலும், மத்தியதரைக்கடலும், அரபியரின் பாலைவனமும் அமைந்துள்ளன. மோவாபியரும், அம்மோன்புத்திரரும் வடக்கு இஸ்ரவேல் தேசத்தோடு விரோதமாக இருந்தார்கள். அதுபோல ஏதோமியர் யூதாவின்மீது விரோதமாக இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்கள் சத்துருக்களாக இருக்கிறார்கள். ஆகையினால் எருசலேம் நகரம் கல்தேயரால் அழிக்கப்பட்ட போது அவர்கள் சந்தோஷமடைந்தார்கள். யூதர்கள் ஏதோமியரிடத்தில் அடைக்கலமாக ஓடி வந்த போது, அவர்களைத் துன்புறுத்தினார்கள்.

"தேமான்" (Teman) - இது ஏதோமின் வடகிழக்கிலுள்ள பிரதேசம். தேமானிலுள்ள ஜனங்கள் புத்திசாலிகள். மிகுந்த ஞானமுள்ளவர்கள். விவேகிகள். ஞானவார்த்தைகளையும், நீதிமொழிகளையும், பழமொழிகளையும் கூறும் ஆற்றலுடையவர்கள். (எரே 49:7,20).

தீர்க்கதரிசன எண் - 86

"ஏதோமைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:......" (எரே 49:7-22)

இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. ஏசாவை விசாரிக்கும் காலத்தில் அவன் ஆபத்தை அவன் மேல் வரப்பண்ணுவேன். (எரே 49:8).
2. நான் ஏசாவை வெறுமையாக்குவேன். (எரே 49:10).
3. அவன் ஒளித்துக்கொள்ளக் கூடாதபடிக்கு அவனுடைய மறைவிடங்களை வெளிப்படுத்திப் போடுவேன்.
4. அவனுடைய சந்ததியார் அழிக்கப் படுவார்கள்.
5. அவனுடைய சகோதரரும் அவனுடைய அயலாரும் அழிக்கப்படுவார்கள்.
6. திக்கற்றவர்களை உயிரோடே காப்பாற்றுவேன் (எரே 49:11).
7. ஏதோம் நியாயத்தீர்ப்பின் பாத்திரத்தில் குடிக்கும். (எரே 49:12).
8. போஸ்றா பாழும் நிந்தையும் அவாந்தரமும் சாபமுமாக இருக்கும். (எரே 49:13).
9. போஸ்றாவின் பட்டணங்கள் எல்லாம் நித்திய வனாந்தரங்களாயிருக்கும்.
10. புறஜாதியார் கூடிக்கொண்டு, போஸ்றாவிற்கு விரோதமாக வந்து, யுத்தம்பண்ணுகிறதற்கு எழும்புவார்கள். (எரே 49:14).
11. ஏதோமை ஜாதிகளுக்குள்ளே சிறியதும், மனுஷருக்குள்ளே அசட்டை பண்ணப் பட்டதுமாக்குவேன். (எரே 49:15).
12. நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப்பண்ணுவேன் (எரே 49:16).
13. ஏதோம் பாழாகும் (எரே 49:17).
14. அதைக் கடந்துபோகிறவன் எவனும் அதின் எல்லா வாதைகளினிமித்தமும் பிரமித்து ஈசல்போடுவான்.

49 அதிகாரம்

15. சோதோமும் கொமோராவும் அவைகளின் சுற்றுப்புறங்களும் கவிழ்க்கப்பட்டதுபோல ஏதோமும் கவிழ்க்கப்படும் (எரே 49:18).

16. புரண்டு ஓடுகிற யோர்தானிடத்திலிருந்து சிங்கம் வருவதுபோல் நேபுகாத்நேச்சார் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருவான். (எரே 49:19).

17. நேபுகாத்நேச்சார் ஏதோமை ஜெயித்து சடிதியில் அங்கிருந்து ஓடிப்போவான்.

18. அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் மெய்யாகவே பாழாக்குவார். (எரே 49:20).

19. அவைகளுக்குள் இடிந்துவிழும் சத்தத்தினாலே பூமி அதிரும் (எரே 49:21).

20. கூக்குரலின் சத்தம் சிவந்த சமுத்திர மட்டும் கேட்கப்படும்.

21. ஒருவன் கழுகைப்போல எழும்பி, பறந்துவந்து, தன் செட்டைகளைப் போஸ்றாவின்மேல் விரிப்பான். (எரே 49:22).

22. அந்நாளிலே ஏதோமுடைய பராக்கிரமசாலிகளின் இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம்போல இருக்கும்.

"தேதானின் குடிகள்" **(Dedanites)** - இவர்கள் கெத்தூராள் மூலமாக வந்த ஆபிரகாமின் சந்ததியார். (ஆதி 25:1-3). ஏதோமின்மீது வரும் நியாயத்தீர்ப்பின் நிமித்தம் தேதானின் குடிகள் எச்சரிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏதோமைவிட்டு ஓடிப்போகுமாறு அவர்களுக்கு எச்சரிப்பு கூறப்படுகிறது.

"தங்களுக்குப்போதுமென்கிற மட்டும் கொள்ளையடிப்பார்கள்" - திருடர்கள் இராத்திரியிலே திருடும்போது முழுவதுமாகத் திருடிக் கொண்டு போய்விடாமல் தங்களுக்குப் போதுமானதைத் திருடி மீதமானதை விட்டு விட்டுச் சென்றுவிடுவார்கள். அதுபோலவே திராட்சப்பழங்களை அறுக்கிறவர்களும் பின்பறிக்கிறதற்குக் கொஞ்சம் பழங்களை வைத்து விட்டு, மீதமுள்ள பழங்களைப் பறிப்பார்கள். ஆனால் கல்தேயரோ ஏதோமின்மீது யுத்தம் பண்ண வரும்போது அவர்களுக்குக் கொஞ்சமும் மீதம் வைக்காமல் அவர்களை முற்றிலுமாக வெறுமையாக்கிப் போடுவார்கள். (ஆதி 49:10).

"மறைவிடங்கள்" - சேயீர்-சேலா **(Seir-Sela)** போன்ற பர்வதங்கள்.

"அவனுடைய சந்ததியார்" - ஏதோமோடு சேர்ந்துகொண்ட பல தேசத்தார். (ஆதி 36).

"அவனுடைய அயலார்" - தேதான், தேமா, பூஸ், மேலும் அரபிய பாலைவனத்திலுள்ள தேசத்தார்.

"உன் விதவைகள் என்னை நம்புவார்களாக" - கர்த்தர் திக்கற்றவர்களையும், விதவைகளையும் காப்பாற்றுவதாக வாக்குப் பண்ணுகிறார். ஆனால் ஏதோமின் யுத்த வீரர்கள் அழிக்கப்படுவார்கள். (ஆதி 49:11-12).

(2) வருங்கால அழிவு - (ஏசா 34)

எரே 49:13 போஸ்றா பாழும் நிந்தையும் அவாந்தரமும் சாபமுமாக இருக்கு மென்றும், அதின் பட்டணங்கள் எல்லாம் நித்திய வனாந்தரங்களாயிருக்கும் என்றும் என்னைக்கொண்டு ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"போஸ்றா பாழும் நிந்தையும் அவாந்தரமும் சாபமுமாக இருக்கும்" - போஸ்றாவிற்கு நித்திய அழிவு உண்டாகும். (ஏசா 34) புதிய பூமியில் வசிப்பவர்கள் போஸ்றாவிலிருந்து நரகத்தைப் பார்ப்பார்கள். (ஏசா 66:22-24) புதிய பூமியில் வாழும் மாம்சமான யாவருக்கும் இந்தப் பிரேதங்கள் அரோசிகமாக இருக்கும்.

49 அதிகாரம்

பாவத்தின் பயங்கரத்தையும், அதன் விளைவையும் புதிய பூமியில் வாழும் ஜனங்கள் காணவேண்டும் என்பதற்காக நரகத்தைப் பற்றிய காரியம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. இது அவர்களுக்கு எச்சரிப்பாக இருக்கும். புதிய பூமியிலுள்ள மனுஷர்கள் மட்டுமல்லாமல் தேவதூதர்களும் இந்த அரோசிகமான காட்சியைக் காண்பார்கள். (வெளி 14:9-11) இதுபோன்ற இடங்கள் எத்தனை இருக்கும் என்று தெரியவில்லை. பரலோகத்தில் சந்தோஷமாக இருக்கும் ஜனங்களுக்கும், பாதாளத்தில் வேதனைகளை அனுபவிக்கும் ஜனங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை வெளிப்படுத்துவதற்காகக் கர்த்தர் நரகத்தின் காட்சிகளை வெளிப்படுத்துகிறார்.

(3) பாபிலோனிய படையெடுப்பு

எரே 49:14 நீங்கள் கூடிக்கொண்டு, அதற்கு விரோதமாக வந்து, யுத்தம் பண்ணுகிறதற்கு எழும்புங்கள் என்று சொல்ல, ஜாதிகளிடத்தில் ஸ்தானாதிபதியை அனுப்புகிற செய்தியைக் கர்த்தரிடத்திலே கேள்விப்பட்டேன்.

எரே 49:15 இதோ, உன்னை ஜாதிகளுக்குள்ளே சிறியதும், மனுஷருக்குள்ளே அசட்டை பண்ணப் பட்டதுமாக்குகிறேன் என்கிறார்.

"ஜாதிகளுக்குள்ளே சிறியது" - கல்தேயரோடு நடைபெறும் யுத்தத்தில் ஏதோம் அழிக்கப்படும். அதன் பின்பு ஏதோம் ஜாதிகளுக்குள்ளே சிறியதும், மனுஷருக்குள்ளே அசட்டை பண்ணப்பட்டதுமாக ஆகும். (எரே 49:14,15).

(4) நியாயத்தீர்ப்பிற்குக் காரணம்

எரே 49:16 கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி, மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிற உன்னால் உன் பயங்கரமும் உன் இருதயத்தின் அகந்தையும் உன்னை மோசம்போக்கிற்று; நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கன்மலை வெடிப்புகள்" - பல வருஷங்களாக ஏதோமியர் கன்மலை வெடிப்புகளில் பாதுகாப்பாக வாசம்பண்ணினார்கள். ஆனால் இனிமேல் அவர்களுக்குக் கன்மலை வெடிப்புகள் பாதுகாப்பாக இராது. கர்த்தர் அங்கிருந்து அவர்களை விழப்பண்ணுவார். அந்திக் கிறிஸ்துவின் நாட்களில் யூதர்கள் இதைப் போன்ற கன்மலை வெடிப்புகளில் ஓடி ஒளிந்துகொள்வார்கள்.

கற்பாறை(rock) - סֶלַע - seh'-lah - 5553

ஆ.பெ.சொ. - கன்மலை, கற்பாறை, சேலா, பாறை, மேடு, கல்

கற்பாறை(rock) - πέτρα - petra - பெட்ரா - 4073

பெண்பால் பெயர்ச்சொல் - கன்மலை, கல், கற்பாறை - "அரணான பட்டணம்" - ஏதோமின் தலைநகரமான சேலாவைக் குறிக்கும் (சங் 108:10; 2இராஜா 14:7; ஏசா 16:1). சேலா என்பதற்கு கற்பாறை என்று பொருள் (நியா 1:36; ஏசா 42:11; எரே 48:28; எரே 49:16; ஒப 1:3). இது போஸ்றா என்றும் அழைக்கப்படுகிறது (ஏசா 34:5-6; ஏசா 63:1-5; எரே 48:24; எரே 49:13,22; ஆமோ 1:12).

"உன் பயங்கரமும் உன் இருதயத்தின் அகந்தையும் உன்னை மோசம்போக்கிற்று" - இந்த வாக்கியம் ஏதோமியரின் விக்கிரகமாகிய ஆசேராவைக் (Asherah) குறிப்பிடுகிறது. இந்த விக்கிரகம் உருவத்தில் பெரியதாக இருக்கும். இதைப் பார்க்கும் போதே ஜனங்கள் பயப்படுவார்கள்.

எரேமியா - தொகுப்புரை

49 அதிகாரம்

(5) வருங்கால் அழிவு - (ஏசா 34)

எரே 49:17 அப்படியே ஏதோம் பாழாகும்; அதைக் கடந்துபோகிறவன் எவனும் அதின் எல்லா வாதைகளினிமித்தமும் பிரமித்து ஈசல்போடுவான்.

எரே 49:18 சோதோமும் கொமோராவும் அவைகளின் சுற்றுப்புறங்களும் கவிழ்க்கப் பட்டதுபோல இதுவும் கவிழ்க்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அங்கே ஒருவனும் குடியிருப்பதில்லை, அதில் ஒரு மனுபுத்திரனும் தங்குவதில்லை.

"ஏதோம் பாழாகும்" - ஏதோம் முழுவதுமாக அழிந்து பாழாகும். (எரே 49:17-18).

"சோதோமும் கொமோராவும் அவைகளின் சுற்றுப்புறங்களும் கவிழ்க்கப்பட்டது போல இதுவும் கவிழ்க்கப்படும்" - ஏதோமின் அழிவைக் கர்த்தர் சோதோம், கொமோரா அழிவோடு ஒப்பிடுகிறார். ஏதோமிலுள்ள போஸ்றாவைப் போன்ற சில இடங்கள் நித்தியமாக அழிந்துபோகும். (எரே 49:13). கர்த்தருடைய நாளில் பாபிலோனும் பாழாகும். (ஏசா 13:19).

(6) பாபிலோனிய படையெடுப்பு

எரே 49:19 இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிடத்திலிருந்து சிங்கம் வருவது போல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்; அவனைச் சடிதியிலே அங்கேயிருந்து ஓடிவரப் பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாய்க் கட்டளையிட்டு அனுப்பத் தெரிந்து கொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்கு மட்டுக்கட்டுகிறவன் யார்? எனக்கு முன்பாக நிலைநிற்கப்போகிற மேய்ப்பன் யார்?

எரே 49:20 ஆகையால் கர்த்தர் ஏதோமுக்கு விரோதமாக யோசித்த ஆலோசனையும், அவர் தேமானின் குடிகளுக்கு விரோதமாக நினைத்திருக்கிற நினைவுகளையும் கேளுங்கள்; மந்தையில் சிறியவர்கள் மெய்யாகவே அவர்களைப் பிடித்திழுப்பார்கள், அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் மெய்யாகவே பாழாக்குவார்.

எரே 49:21 அவைகளுக்குள் இடிந்து விழும் சத்தத்தினாலே பூமி அதிரும்; கூக்குரலின் சத்தம் சிவந்த சமுத்திரமட்டும் கேட்கப்படும்.

எரே 49:22 இதோ, ஒருவன் கழுகைப் போல எழும்பி, பறந்துவந்து, தன் செட்டைகளைப் போஸ்றாவின்மேல் விரிப்பான்; அந்நாளிலே ஏதோமுடைய பராக்கிரமசாலிகளின் இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம்போல இருக்கும் என்கிறார்.

"சிங்கம் வருவதுபோல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்" - இந்த வாக்கியம் நேபுகாத்நேச்சாரைக் குறிப்பிடுகிறது. (எரே 37:1-10; எரே 48:40). அவன் ஏதோமின்மீது சிங்கம் பாய்வதைப் போல பாய்வான். யோர்தான் நதி புரண்டு ஓடுவதைப் போல அவன் ஏதோமியர்மீது புரண்டு ஓடுவான். ஏதோமைச் சடிதியாக ஜெயிப்பான். அதன் பின்பு, மற்ற தேசங்களை ஜெயிப்பதற்காக அங்கிருந்து புறப்பட்டுப் போய்விடுவான்.

"அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் மெய்யாகவே பாழாக்குவார்." - நேபுகாத்நேச்சார் தேசத்திலுள்ள மனுஷரையும், மந்தைகளையும் அழிப்பான். அவர்கள் கூக்குரலிடும் சத்தம் சிவந்த சமுத்திரம் மட்டும் கேட்கப்படும். (எரே 49:20-21) நேபுகாத்நேச்சார் ஒரு சிங்கமாகவும், (எரே 49:19; தானி 7:2), ஒரு கழுகாகவும் (எரே 49:22; எரே 48:20; எசே 17:3,7) வர்ணிக்கப்பட்டிருக்கிறான். இவனுக்கு எதிராக யுத்தம் பண்ணும் ஏதோமுடைய பராக்கிரமசாலிகளின் இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம் போல இருக்கும் (எரே 49:22).

49 அதிகாரம்

6. தமஸ்குவிற்கு எதிராக - (49:23-27; ஏசா 17:1-14; ஆமோ 1:3-5)

(1) கலக்கமும் பலவீனமும்

எரே 49:23 தமஸ்குவைக் குறித்துச் சொல்வது: ஆமாத்தும் அர்ப்பாத்தும் கலங்குகிறது; பொல்லாத செய்தியை அவர்கள் கேட்டபடியினால் கரைந்து போகிறார்கள்; சமுத்திரத்தோரமாய்ச் சஞ்சலமுண்டு; அதற்கு அமைதலில்லை.

எரே 49:24 தமஸ்கு தளர்ந்துபோம், புறங்காட்டி ஓடிப்போம்; திகில் அதைப் பிடித்தது; பிரசவ ஸ்திரீயைப்போல இடுக்கமும் வேதனைகளும் அதைப் பிடித்தது.

தீர்க்கதரிசன எண் - 87

"தமஸ்குவைக் குறித்துச் சொல்வது:......" (எரே 49:23-27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. பொல்லாத செய்தியைக் கேட்ட படியினால் ஆமாத்தும் அர்ப்பாத்தும் கலங்கும். (எரே 49:23).
2. அவர்களுடைய இருதயம் கரைந்து போகும்.
3. அவர்களுடைய இருதயத்தில் சஞ்சலம் இருக்கும். அமைதி இருக்கும்.
4. தமஸ்கு தளர்ந்துபோம், புறங்காட்டி ஓடிப்போம் (எரே 49:24).
5. திகில் அதைப்பிடிக்கும்.
6. பிரசவ ஸ்திரீயைப்போல இடுக்கமும் வேதனைகளும் அதைப்பிடிக்கும்.
7. அதின் வாலிபர் அதின் வீதிகளில் விழுவார்கள். (எரே 49:26).
8. யுத்தமனுஷர் எல்லாரும் அந்நாளிலே சங்காரமாவார்கள்.
9. தமஸ்குவின் மதில்களில் தீக்கொளுத்தப் படும். (எரே 49:27).
10. அது பெனாதாத்தின் அரமனைகளைப் பட்சிக்கும்.

(2) பாபிலோனிய படையெடுப்பு

எரே 49:25 சந்தோஷமான என் ஊராகிய அந்தப் புகழ்ச்சியுள்ள நகரம் தப்பவிடப் படாமற்போயிற்றே!

எரே 49:26 ஆதலால் அதின் வாலி பர் அதின் வீதிகளில் விழுந்து, யுத்தமனுஷர் எல்லாரும் அந்நாளிலே சங்காரமாவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 49:27 தமஸ்குவின் மதில்களில் தீக்கொளுத்துவேன்; அது பெனாதாத்தின் அரமனைகளைப் பட்சிக்கும் என்கிறார்.

"பெனாதாத்" (Benhadad) - சீரிய தேசத்து ராஜாக்கள் பெனாதாத் என்று அழைக்கப் படுகிறார்கள். (எரே 49:27; 1இராஜா 15:18; 2இராஜா 13:3,25).

7. கேதார்,காத்சோர் ஆகியவற்றிற்கு எதிராக - (49:28-33)

(1) படையெடுக்கும் கட்டளை

எரே 49:28 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முறியடிக்கும் கேதாரையும் காத்சோருடைய ராஜ்யங்களையும் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: எழும்பி, கேதாருக்கு விரோதமாகப் போய், கீழ்த்திசைப்புத்திரரைப் பாழாக்குங்கள்.

எரே 49:29 அவர்களுடைய கூடாரங்களையும் அவர்களுடைய மந்தைகளையும் வாங்கி, அவர்களுடைய திரைகளையும் அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்களுடைய ஒட்டகங்களையும் தங்களுக்கென்று கொண்டுபோய், எத்திசையும் பயம் என்று சொல்லி, அவர்கள்மேல் ஆர்ப்பரிப்பார்கள்.

49 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 88

"கேதாரையும் காத்சோருடைய ராஜ்யங்களையும் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்........" (எரே 49:28-33) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கேதாரையும் காத்சோருடைய ராஜ்யங்களையும் முறியடிப்பான். (எரே49:28).
2. கல்தேயர்கள் அவர்களுடைய கூடாரங்களையும் அவர்களுடைய மந்தைகளையும் வாங்குவார்கள். (எரே 49:29).
3. அவர்களுடைய திரைகளையும் அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்களுடைய ஒட்டகங்களையும் தங்களுக்கென்று கொண்டுபோவார்கள்.
4. அவர்கள்மேல் ஆர்ப்பரிப்பார்கள்.
5. எத்திசையும் பயம் உண்டாயிருக்கும்.
6. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அவர்களுக்கு விரோதமாக ஆலோசனை செய்து, அவர்களுக்கு விரோதமாக உபாயங்களைச் சிந்தித்திருப்பான். (எரே 49:30).
7. கேதாரின் ஒட்டகங்கள் கொள்ளையாகும். (எரே 49:32).
8. அவர்களுடைய ஆடுமாடுகளின் ஏராளம் சூறையுமாகும்.
9. கர்த்தர் அவர்களைச் சகல திசைகளுமான கடையாந்தர மூலைகளில் இருக்கிறவர் களிடத்துக்குச் சிதறடித்து விடுவார்.
10. அதினுடைய சகல பக்கங்களிலுமிருந்து அவர்களுக்கு ஆபத்தை வரப்பண்ணுவார்.
11. ஆத்சோர் வலுசர்ப்பங்களின் தாபரமாகி, என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கும் (எரே 49:33).
12. ஒருவனும் அங்கே குடியிருப்பதில்லை, ஒரு மனுபுத்திரனும் அதிலே தங்குவதுமில்லை.

(2) ஓடுவதற்குக் கட்டளை

எரே 49:30 காத்சோரின் குடிகளே, ஓடி, தூரத்தில் அலையுங்கள்; பள்ளத்தில் ஒதுங்கிப் பதுங்குங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் உங்களுக்கு விரோதமாக ஆலோசனை செய்து, உங்களுக்கு விரோதமாக உபாயங்களைச் சிந்தித்திருக்கிறான்.

(3) படையெடுக்கும் கட்டளை

எரே 49:31 அஞ்சாமல் நிர்விசாரமாய்க் குடியிருக்கிற ஜாதிக்கு விரோதமாக எழும்பிப் போங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு வாசல்களுமில்லை, தாழ்ப்பாள்களுமில்லை; அவர்கள் தனிப்படத் தங்கியிருக்கிறார்கள்.

எரே 49:32 அவர்களுடைய ஒட்டகங்கள் கொள்ளையும், அவர்களுடைய ஆடுமாடுகளின் ஏராளம் சூறையுமாகும்; நான் அவர்களைச் சகல திசைகளுமான கடையாந்தர மூலைகளில் இருக்கிறவர்களிடத்துக்குச் சிதறடித்து விட்டு, அதினுடைய சகல பக்கங்களிலுமிருந்து அவர்களுக்கு ஆபத்தை வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அவர்கள் தனிப்படத் தங்கியிருக்கிறார்கள்" - கேதாரும், காத்சோருடைய ராஜ்யங்களும், செல்வச்செழிப்பில் இருந்தார்கள். தங்களுக்குப் பாதுகாப்பு எதையும் உண்டாக்கவில்லை. மற்றவர்களோடு சமாதானமாக இருந்தார்கள். மற்றவர்களும் தங்களோடு சமாதானமாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள்.

49 அதிகாரம்

இவர்கள் கூடாரங்களில் குடியிருந்தார்கள். ஆகையினால் கல்தேயரைப் போன்ற சத்துருக்கள் இவர்களை எளிதாக ஜெயித்தார்கள். ஐப்பிராத்து நதியின் அருகிலும், பெர்சிய வளைகுடாவிலும் காத்சோர் அமைந்துள்ளது.

(4) ஆத்சோரின் அழிவு

எரே 49:33 ஆத்சோர் வலுசர்ப்பங்களின் தாபரமாகி, என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கும்; ஒருவனும் அங்கே குடியிருப்பதில்லை, ஒரு மனுபுத்திரனும் அதிலே தங்குவதுமில்லையெனகிறார்.

8. ஏலாமிற்கு எதிராக

(1) பாபிலோனியர்களால் ஏற்பட்ட அழிவு

எரே 49:34 யூதா ராஜாவாகிய சிதேக்கியாவினுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே, ஏலாமுக்கு விரோதமாக எரேமியா என்னும் தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 49:35 சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் ஏலாமின் வில்லென்னும் அவர்களுடைய பிரதான வல்லமையை முறித்துப்போட்டு,

எரே 49:36 வானத்தின் நாலு திசைகளிலுமிருந்து நாலு காற்றுகளை ஏலாமின் மேல் வரப்பண்ணி, அவர்களை இந்த எல்லாத் திசைகளிலும் சிதறடிப்பேன்; ஏலாம் தேசத்திலிருந்து துரத்துண்டவர்கள் சகல ஜாதிகளிலும் சிதறப்படுவார்கள்.

எரே 49:37 நான் ஏலாமியரை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகவும், அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களுக்கு முன்பாகவும் கலங்கப்பண்ணி, என் கோபத்தின் உக்கிரமாகிய தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் பட்டயத்தை அவர்களுக்குப் பின்னாக அனுப்பி,

"ஏலாம்" - டைகீரிஸ் நதிக்கு கிழக்குப் பகுதியிலுள்ள தேசம். நேபுகாத்நேச்சாருக்கும், பாபிலோனைச் சுற்றிலுமுள்ள தேசத்தாருக்கும், ஏலாம் அடிமையாக இருந்தது. (எரே 49:34-39; எரே 25:25; தானி 2:37-38).

"சிதேக்கியாவினுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே" - எருசலேம் அழிக்கப்படுவதற்கு 11 வருஷங்களுக்கு முன்பாக இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்படுகிறது. யூதா வீழ்ந்த பிறகு பாபிலோனியர் ஏலாமைப் பிடிக்கிறார்கள். (தானி 49:34; 2இராஜா 24:18; 2இராஜா 25:2-3).

தீர்க்கதரிசன எண் - 89

"ஏலாமுக்கு விரோதமாக எரேமியா என்னும் தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:........" (எரே 49:34-39) எரே 49:34-38 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. எரே 49:39 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. ஏலாமின் வில்லென்னும் அவர்களுடைய பிரதான வல்லமையை முறித்துப் போடுவேன். (எரே 49:35).

2. வானத்தின் நாலு திசைகளிலுமிருந்து நாலு காற்றுகளை ஏலாமின் மேல் வரப்பண்ணி, அவர்களை இந்த எல்லாத் திசைகளிலும் சிதறடிப்பேன். (எரே 49:36).

3. ஏலாம் தேசத்திலிருந்து துரத்துண்டவர்கள் சகல ஜாதிகளிலும் சிதறப்படுவார்கள்.

எரேமியா - தொகுப்புரை

49 அதிகாரம்

4. நான் ஏலாமியரை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகவும், அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களுக்கு முன்பாகவும் கலங்கப்பண்ணுவேன். (எரே 49:37).

5. என் கோபத்தின் உக்கிரமாகிய தீங்கை அவர்கள்மேல் வரப் பண்ணுவேன்.

6. நான் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் பட்டயத்தை அவர்களுக்குப் பின்னாக அனுப்புவேன்.

7. என் சிங்காசனத்தை ஏலாமிலே வைப்பேன். (எரே 49:38).

8. அங்கேயிருந்து ராஜாவையும் பிரபுக்களையும் அழித்துப்போடுவேன்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கடைசிநாட்களிலே நான் ஏலாமின் சிறையிருப்பைத் திருப்புவேன் (எரே 49:39).

"ஏலாமின் வில்" - ஏலாமியர் தங்களுடைய பாதுகாப்பிற்கு வில்லையே நம்புகிறார்கள். வில் எறிவதில் அவர்கள் சிறந்தவர்கள். அதுவே அவர்களுடைய பிரதான வல்லமை.

"நாலு காற்றுகள்" - இந்த வாக்கியம் வேதாகமத்தில் அடையாளமாகக் கூறப் பட்டிருக்கிறது. இதற்கு நாலுதிசைகள் என்று பொருள். (தானி 7:2; மத் 24:31).

"என் கோபத்தின் உக்கிரமாகிய தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்" - தீங்கு என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பையும், பாவத்திற்கான தண்டனையையும் குறிக்கும் வார்த்தையாகும். ஏலாமியர் என்ன தவறு செய்தார்கள் என்று இங்கு கூறப்படவில்லை. மற்ற தேசங்கள் தண்டிக்கப்படுவதற்கு என்ன காரணமோ அதே காரணமே இவர்களுக்கும் பொருந்தும்.

(2) கலக்கம் - நியாயத்தீர்ப்பு

எரே 49:38 என் சிங்காசனத்தை ஏலாமிலே வைத்து, அங்கேயிருந்து ராஜாவையும் பிரபுக்களையும் அழித்துப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என் சிங்காசனத்தை ஏலாமிலே வைத்து" - நேபுகாத்நேச்சாரின் சிங்காசனம் இங்கு தேவனுடைய சிங்காசனம் என்று கூறப் பட்டிருக்கிறது. ஏனெனில் தேவனே நேபுகாத்நேச்சாருக்குப் பாபிலோன் ராஜ்யத்தின் மேன்மையைத் தந்தருளினார். (தானி 2:37-38; தானி 4:17).

(3) ஏலாமின் மீட்பு

எரே 49:39 ஆனாலும் கடைசிநாட்களிலே நான் ஏலாமின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் கடைசி நாட்களிலே சிறையிருப்பைத் திருப்பும் தேசங்கள்

1. ஏலாம் (எரே 49:39)
2. மோவாப் (எரே 48:47)
3. அம்மோன் (எரே 48:6)
4. இஸ்ரவேல் (எரே 23:20; எரே 30:24; உபா 4:30; ஓசி 3:5; அப் 15:13-19)

50 அதிகாரம்

9. பாபிலோனிற்கு எதிராக - (50:1-51:64; 25:11-14; ஏசா 13:1-14:27; 21:1-10; 47:1-15; தானி 5:1-31)

(1) மேதிய - பெர்சியாவின் படையெடுப்பு

எரே 50:1 கர்த்தர் தீர்க்கதரிசியாகிய எரேமியாவைக் கொண்டு பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்துக்கும் விரோதமாக உரைத்த வசனம்:

எரே 50:2 பாபிலோன் பிடிபட்டது; பேல் வெட்கப்பட்டது; மெரொதாக் நொறுங்குண்டது; அதினுடைய சிலைகள் இலச்சையடைந்தது; அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப்போயின என்று ஜாதிகளுக்குள்ளே அறிவித்துப் பிரசித்தம்பண்ணுங்கள்; இதை மறைக்காமல் கொடியேற்றி விளம்பரம் பண்ணுங்கள்.

எரே 50:3 அதற்கு விரோதமாய் வடக்கேயிருந்து ஒரு ஜாதி வந்து, அதின் தேசத்தைப் பாழாக்கிப்போடும்; அதிலே குடியிருப்பாரில்லை; மனுஷரோடே மிருகங்களும் ஓடிப்போய்விடும்.

தீர்க்கதரிசன எண் - 90

"பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்துக்கும் விரோதமாக உரைத்த வசனம்......" (எரே 50:1-51:64) எரே 50:1-12, 14-18,21-38,41-46; எரே 51:1-4,9-25, 27-35, 38-61 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று.எரே 50:13,19-20,39-40; எரே 51:5-8,26, 36-37,62-64 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. பாபிலோன் பிடிபடும். (எரே 50:2).
2. பேல் வெட்கப்படும்.
3. மெரொதாக் நொறுங்கிப்போகும்.
4. அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப் போகும்.
5. அதற்கு விரோதமாய் வடக்கேயிருந்து ஒரு ஜாதி வரும். (எரே 50:3).
6. அதின் தேசத்தைப் பாழக்கிப்போடும்.
7. மனுஷரோடே மிருகங்களும் ஓடிப்போய் விடும்.
8. அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும் தங்கள் தேசத்திற்கு வருவார்கள். (எரே 50:4).
9. அவர்கள் அழுது, நடந்துவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள்.
10. சீயோனுக்கு நேராய் முகங்களைத் திருப்பி, சீயோனுக்குப் போகிற வழி எதுவென்று கேட்டு விசாரிப்பார்கள். (எரே 50:5).
11. மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள் என்று இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும் கூறுவார்கள்.
12. நான் பாபிலோனுக்கு விரோதமாக வடதேசத்தில் இருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டத்தை எழுப்பி, அதை வரப்பண்ணுவேன் (எரே 50:9).
13. அங்கேயிருந்து வருகிறவர்களால் அது பிடிக்கப்படும்.
14. அவர்களுடைய அம்புகள் சாமர்த்தியமுள்ள பராக்கிரமசாலியின் அம்புகளைப்போல் இருக்கும்.
15. அந்த அம்புகள் விருதாவாய்த் திரும்புவதில்லை.

எரேமியா - தொகுப்புரை

50 அதிகாரம்

16. கல்தேயா கொள்ளையாகும். (எரே 50:10).

17. அதைக் கொள்ளையிடுகிறவர்கள் எல்லாரும் பரிபூரணமடைவார்கள்.

18. என் சுதந்தரத்தைக் கொள்ளையிட்ட நீங்கள் சந்தோஷித்ததினால் தண்டிக்கப் படுவீர்கள். (எரே 50:11).

19. உங்கள் தாய் மிகவும் வெட்கமடைவாள். (எரே 50:12).

20. உங்களைப் பெற்றவள் நாணமடைவாள்.

21. அவள் ஜாதிகளுக்குள்ளே கடைசியாவதுமன்றி, வனாந்தரமும் வறட்சியும் அந்தரவெளியுமாவாள்.

22. பாபிலோனின் சத்துருக்கள் அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் ஆர்ப்பரிப்பார்கள். (எரே 50:14-15).

23. அதின் அஸ்திபாரங்கள் விழும். (எரே 50:15).

24. அதின் மதில்கள் இடிக்கப்படும்.

25. விதைவிதைக்கிறவர்கள் பாபிலோனில் இராதபடிச் சங்காரம் பண்ணப்படுவார்கள். (எரே 50:16).

26. அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப் போவார்கள்.

27. நான் அசீரியா ராஜாவை தண்டித்தது போல் பாபிலோன் ராஜாவையும் அவன் தேசத்தையும் தண்டிப்பேன். (எரே 50:18).

28. மெரதாயீம் குடிகளும், பேகோடு குடிகளும் சங்காரம் பண்ணப்படுவார்கள். (எரே 50:21).

29. சத்துருக்கள் நான் கட்டளையிட்ட படியெல்லாம் செய்வார்கள்.

30. தேசத்திலே யுத்தத்தின் சத்தமும் மகா சங்காரமும் உண்டாகும். (எரே 50:22).

31. சர்வ பூமியின் சம்மட்டி முறித்து உடைக்கப்படும். (எரே 50:23).

32. ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் பாழாய்ப்போகும்.

33. பாபிலோனுக்கு விரோதமாக நான் கண்ணியை வைப்பேன். (எரே 50:24).

34. நீ அதை அறியாமல் அதிலே சிக்குண்டு போவாய். (எரே 50:24; தானி 5).

35. நீ கர்த்தரோடு யுத்தங்கலந்ததினால் நீ அகப்பட்டும் பிடிபட்டும் போவாய். (எரே 50:24).

36. கர்த்தர் தம்முடைய ஆயுதசாலையைத் திறந்து, தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை எடுத்துக் கொண்டு கல்தேயர் தேசத்திற்கு வருவார். (எரே 50:25)

37. கடையாந்தரத்திலிருந்து அதற்கு விரோதமாக வருவார்கள். (எரே 50:26).

38. அதின் களஞ்சியங்களைத் திறப்பார்கள்.

39. குவியல் குவியலாகக் குவிப்பார்கள்.

40. அதில் ஒன்றும் மீதியாகாதபடிக்கு அதை முற்றிலும் அழித்துப் போடுவார்கள்.

41. அதின் காளைகளெல்லாம் வெட்டப்படும். (எரே 50:27).

42. அவர்கள் விசாரிக்கப்படும் நாள் வரும்.

43. பாபிலோன் தேசத்திலிருந்து தப்பியோடி வந்தவர்களின் சத்தம் கேட்கப்படும். (எரே 50:28).

44. பாபிலோனுக்கு விரோதமாய் வில்வீரர் சுற்றிலும் பாளயமிறங்குவார்கள். (எரே 50:29).

45. அதின் கிரியைக்குத்தக்க பலனை அதற்குச் சரிக்கட்டப்படும். (எரே 50:29).

எரேமியா - தொகுப்புரை

50 அதிகாரம்

46. அதின் வாலிபர் அதின் வீதிகளில் விழுவார்கள். (எரே 50:30).

47. அதின் யுத்தவீரர் எல்லாரும் அந்நாளிலே சங்காரமாவார்கள்.

48. இடும்புள்ளவனுக்கு விரோதமாகக் கர்த்தர் வருவார். (எரே 50:31)

49. இடும்புள்ளவன் இடறிவிழுவான். (எரே 50:32)

50. அவனை எடுத்து நிறுத்துவாரில்லை.

51. அவனுடைய பட்டணங்களில் அக்கினியைக் கொளுத்துவேன், அது அவன் சுற்றுப்புறத்தார் எல்லாரையும் பட்சிக்கும்.

52. அவர்களுடைய மீட்பர் வல்லமையுள்ளவர். பாபிலோன் குடிகளைத் தத்தளிக்க ப்பண்ணுவதற்கும் அவர்களுடைய வழக்கை அவர் நடத்துவார். (எரே 50:34).

53. பட்டயம் கல்தேயர்மேலும், பாபிலோன் குடிகள்மேலும், அதினுடைய பிரபுக்கள் மேலும், அதினுடைய ஞானிகள்மேலும் வரும். (எரே 50:35-37).

54. அவர்கள் பைத்தியக்காரராவார்கள். அவர்கள் கலங்குவார்கள். (எரே 50:36).

55. பாபிலோனின் பொக்கிஷங்கள் கொள்ளையாகும். (எரே 50:37).

56. பாபிலோனில் வறட்சி வரும். (எரே 50:38).

57. வடக்கேயிருந்து ஒரு ஜனமும் பெரிய ஜாதியும் பாபிலோன்மீது வரும். (எரே 50:41).

58. அவர்கள் வில்லும் வேலும் பிடித்து வருவார்கள். (எரே 50:42).

59. அவர்கள் இரக்கமில்லாத கொடியர்.

60. அவர்கள் இரைச்சல் சமுத்திர இரைச்சல் போல் இருக்கும்.

61. அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட ஆட்களாய்க் குதிரைகளின்மேல் ஏறி வருவார்கள்.

62. அவர்கள் வருகிற செய்தியை பாபிலோன் ராஜா கேட்கையில் அவன் கைகள் தளரும் (எரே 50:43; தானி 5).

63. இடுக்கமும் பிரசவ வேதனைப் படுகிறவளுக்குண்டாகும் வேதனையைப் போன்ற வேதனையும் அவனைப் பிடிக்கும். (எரே 50:43).

64. புரண்டு ஓடுகிற யோர்தானிலிருந்து சிங்கத்தைப்போல் அவன் வருவான். (எரே 50:44).

65. அவன் பாபிலோனை சடிதியிலே ஜெயிப்பான்.

66. அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் பாழாக்குவார். (எரே 50:45).

67. பாபிலோன் பிடிப்பட்டதின் சத்தத்தினால் பூமி அதிரும். (எரே 50:46).

68. அதின் கூப்பிடுதல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படும்.

69. நான் பாபிலோனுக்கு விரோதமாக அழிக்கும் காற்றை எழும்பப்பண்ணுவேன். (எரே 51:1).

70. தூற்றுவாரைப் பாபிலோனுக்கு அனுப்புவேன். அவர்கள் அதைத் தூற்றி வெறுமையாக்கிப் போடுவார்கள். (எரே 51:2).

71. ஆபத்துநாளிலே அதற்கு விரோதமாய்ச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள்.

72. அதின் சேனை சங்காரம்பண்ணப்படும். (எரே 51:3).

50 அதிகாரம்

73. குத்திப்போடப்பட்டவர்கள் கல்தேயரின் தேசத்திலும், கொலை செய்யப்பட்டவர்கள் அதின் வீதிகளிலும் விழுவார்கள். (எரே 51:4).

74. பாபிலோன் கைவிடப்படும். அவரவர் அவர்களுடைய தேசங்களுக்குப் போய் விடுவார்கள். (எரே 51:9).

75. கர்த்தர் நம்முடைய நீதியை வெளிப் படுத்துவார். (எரே 51:10).

76. கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்புவார். (எரே 51:11-12).

77. பாபிலோனுக்கு முடிவு வரும். (எரே 51:13).

78. பச்சைக்கிளிகளைப் போல் திரளான மனுஷரால் உன்னை நிரம்பப்பண்ணுவேன் (எரே 51:14).

79. விக்கிரகங்கள் அழியும். (எரே 51:18).

80. நான் உன்னைக் கொண்டு (கோரேஸ்) ஜாதிகளை நொறுக்குவேன்; உன்னைக் கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன். (எரே 51:20).

81. உன்னைக்கொண்டு குதிரையையும், குதிரை வீரனையும் நொறுக்குவேன் (எரே 51:21).

82. உன்னைக்கொண்டு புருஷனையும் ஸ்திரீயையும் நொறுக்குவேன். உன்னைக் கொண்டு அதிபதிகளையும் அதிகாரிகளையும் நொறுக்குவேன். (எரே 51:21-23).

83. சீயோனில் செய்த அவர்களுடைய (பாபிலோனுக்கும், கல்தேயருக்கும்) எல்லாப் பொல்லாப்புக்காகவும் பழிவாங்குவேன் (எரே 51:24).

84. என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைக் கன்மலையிலிருந்து உருட்டி, உன்னை எரிந்துபோன பர்வதமாக்கிப் போடுவேன் (எரே 51:25).

85. தேசத்திலே கொடியேற்றப்படும். ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதப்படும். (எரே 51:27)

86. சுணையுள்ள வெட்டுக்கிளிகள்போன்ற குதிரைகள் அதற்கு விரோதமாக வரும்.

87. மேதியாதேசத்தின் ராஜாக்களுக்கு விரோதமாக தேசங்கள் ஆயத்தமாகும். (எரே 51:28).

88. தேசம் அதிர்ந்து வேதனைப்படும் (எரே 51:29).

89. பாபிலோனின் பராக்கிரமசாலிகள் யுத்தம் பண்ணாமல் இருப்பார்கள். (எரே 51:30).

90. அவர்கள் கோட்டைகளில் இருந்து விடுவார்கள்

91. அவர்கள் பராக்கிரமம் அழிந்துபோகும்.

92. அவர்கள் ஸ்திரீகளைப் போல பேடிகளாவார்கள்.

93. அதின் வாசஸ்தலங்களைக் கொளுத்திப் போடுவார்கள்.

94. அதின் தாழ்ப்பாள்களை உடைத்துப் போடுவார்கள்.

95. பாபிலோன் குமாரத்தி மிதிக்கப்படுங் களத்துக்குச் சமானம்; அதைப் போரடிக்குங் காலம் வந்தது என்று அஞ்சற்காரர் கூறுவார்கள். (எரே 51:32-33).

96. இன்னும் கொஞ்சக்காலத்திலே அறுப்புக்காலம் அதற்கு வரும் (எரே 51:33).

97. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னைப் பட்சித்தான் என்று இஸ்ரவேல் கூறும். (எரே 51:34).

எரேமியா - தொகுப்புரை

50 அதிகாரம்

98. எனக்கும் என் இனத்தாருக்கும் செய்த கொடுமையின் பழி பாபிலோன் மேல் வரக்கடவதென்று சீயோனில் வாசமானவள் சொல்லுவாள். (எரே 51:35).

99. ஏகமாய் அவர்கள் சிங்கங்களைப் போலக் கெர்ச்சித்து, சிங்கக்குட்டிகளைப் போலச் சத்தமிடுவார்கள். (எரே 51:38).

100. அவர்கள் களிக்கும் சமயத்திலே நான் அவர்கள் குடிக்கும் பானத்தை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்து அவர்கள் துள்ளத்தக்கதாக அவர்களை வெறியாக்குவேன். (எரே 51:39)

101. அதினால் அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத நித்திரை அடைவார்கள் (எரே 51:39; எரே 50:57).

102. அவர்களை ஆட்டுக்குட்டிகளைப் போல அடிக்கப்பட இறங்கிப்போகப் பண்ணுவேன். (எரே 51:40).

103. பாபிலோன் பிடிக்கப்படும். பூமி முழுவதும் பிரமிப்பு உண்டாகும். (எரே 51:41).

104. ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் பிரமிப்பாகும்.

105. சமுத்திரம் (ஐப்பிராத்து நதி) பாபிலோன் மேல் புரண்டுவரும். (எரே 51:42).

106. அதின் பட்டணங்கள் பாழாய்ப்போகும். (எரே 51:43).

107. நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன் (எரே 51:44).

108. அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்.

109. ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடிவரமாட்டார்கள்.

110. பாபிலோனின் மதிலும் விழும்.

111. கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோன் நடுவிலிருந்து புறப்பட்டு, அவருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பித்துக் கொள்வார்கள்.(எரே 51:45).

112. ஒரு வருஷத்திலே ஒரு செய்தி கேட்கப்பட்டு, பின்பு மறுவருஷத்திலே வேறு செய்தி கேட்கப்படும் (எரே 51:46).

113. நான் பாபிலோனின் விக்கிரகங்களை தண்டிக்கும் நாட்கள் வரும். (எரே 51:47).

114. அதின் தேசம் எல்லாம் கலங்கும்.

115. அதில் கொலையுண்கிற யாவரும் அதின் நடுவில் விழுந்துகிடப்பார்கள்.

116. வானமும் பூமியும் அவைகளிலுள்ள யாவும் பாபிலோன்மேல் கெம்பீரிக்கும். (எரே 51:48).

117. பாழ்க்கடிக்கிறவர்கள் அதற்கு வடக்கேயிருந்து வருவார்கள்.

118. பாபிலோன் இஸ்ரவேலில் கொலையுண்டவர்களை விழப் பண்ணினது போல, பாபிலோனிலும் சமஸ்த தேசங்களிலும் கொலையுண்கிறவர்கள் விழுவார்கள். (எரே 51:49).

119. கர்த்தருடைய ஆலயத்திற்கு அந்நியர்கள் வருவார்கள். (எரே 51:51).

120. நான் அதின் விக்கிரகங்களுக்கு விரோதமாய் விசாரிக்கும் நாட்கள் வரும் (எரே 51:52).

121. அதின் தேசமெங்கும் கொலையுண்கிறவர்கள் கத்துவார்கள்.

122. பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும், அதைப் பாழாக்குகிறவர்கள்என்னிடத்திலிருந்து வருவார்கள். (எரே 51:53).

123. பாபிலோனிலிருந்து கூக்குரலின் சத்தமும், கல்தேயர் தேசத்திலிருந்து மகா சங்காரமும் கேட்கப்படும். (எரே 51:54-55).

எரேமியா - தொகுப்புரை

50 அதிகாரம்

124. பாபிலோனைப் பாழாக்குகிறவன் அதின்மேல் வருகிறான்; அதின் பராக்கிரமசாலிகள் பிடிபடுவார்கள் (எரே 51:56).

125. பாபிலோனியருடைய வில்லுகள் முறிந்துபோகும்.

126. அதின் பிரபுக்களையும் அதின் ஞானிகளையும் அதின் தலைவரையும் அதின் அதிகாரிகளையும் அதின் பராக்கிரமசாலிகளையும் வெறிக்கப் பண்ணுவேன் (எரே 51:57; எரே 50:39).

127. பாபிலோனின் விஸ்தீரணமான மதில்கள் முற்றிலும் தரையாக்கப்படும். (எரே 51:58).

128. அதின் உயரமான வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்.

129. ஜனங்கள் பிரயாசப்பட்டது விருதாவாக இருக்கும்.

130. ஜாதிகள் வருத்தப்பட்டுச் சம்பாதித்தது அக்கினிக்கு இரையாகும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தரின் கோபத்தினாலே அது குடியற்றதும் பெரும்பாழுமாயிருக்கும் (எரே 50:13).

2. பாபிலோனைக் கடந்துபோகிற எவனும் அதின் எல்லா வாதைகளினிமித்தமும் பிரமித்து, ஈசல்போடுவான்.

3. இஸ்ரவேலை அதின் வாசஸ்தலத்துக்குத் திரும்பி வரப்பண்ணுவேன் (எரே 50:19).

4. அது கர்மேலிலும் பாசானிலும் மேயும்.

5. எப்பிராயீமின் மலைகளிலும் கிலேயாத்திலும் அதின் ஆத்துமா திருப்தியாகும்.

6. அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும் (எரே 50:20)

7. காட்டுமிருகங்கள் அதிலே குடியிருக்கும். (எரே 50:39)

8. ஓரிகள் அதிலே குடியிருக்கும்.

9. இனி என்றென்றைக்கும் அது குடியேற்றப்படுவதில்லை; தலைமுறை தலைமுறையாக ஒருவரும் அதில் சஞ்சரிப்பதுமில்லை.

10. தேவன் சோதோமையும் கொமோராவையும் அதின் சுற்றுப்புறங்களையும் கவிழ்த்துப் போட்டது போல இதையும் கவிழ்த்துப்போடுவார். (எரே 50:40).

11. பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவிப்பார்கள். (எரே 51:6).

12. இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் சொல்லுவார்.

13. பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணும். (எரே 51:7).

14. பாபிலோன் சடிதியில் விழுந்து தகரும். (எரே 51:8).

15. மூலைக்கல்லுக்காகிலும் அஸ்திபாரக் கல்லுக்காகிலும் ஒரு கல்லையும் பாபிலோனிலிருந்து எடுக்க மாட்டார்கள். (எரே 51:26).

16. பாபிலோன் என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாகும்.

17. இதோ, நான் உனக்காக வழக்காடி, உன் பழிக்குப் பழிவாங்கி, அதின் கடலை வறளவும் அதின் ஊற்றைச் சுவறவும் பண்ணுவேன். (எரே 51:36).

18. பாபிலோன் குடியில்லாத மண்மேடுகளும், வலுசர்ப்பங்களின் தாபரமும், பாழும், ஈசல் போடப்படுதலுக்கு இடமுமாய்ப் போகும். (எரே 51:37).

50 அதிகாரம்

19. இந்த ஸ்தலத்திலே மனுஷனும் மிருகமுமுதலாய்த் தங்கித் தரிக்காத படிக்கும், அது என்றென்றைக்கும் பாழாய்க் கிடக்கும் படிக்கும், கர்த்தர் இதற்கு விரோதமாக உரைத்திருக்கிறார். (எரே 51:62).

20. பாபிலோன் முழுகிப்போகும். நான் அதின்மேல் வரப்பண்ணும் தீங்கினால் எழுந்திருக்கமாட்டாமல் இருப்பார்கள். (எரே 51:64).

21. அவர்கள் இளைத்து விழுவார்கள்.

பேல் (Bel) - בֵּל - bale - 1078

ஆ.பெ.சொ. - பேல் - இது பாகால் என்னும் தெய்வத்தின் அரமாயிக் மொழிப்பெயர்.

பாகால் - בַּעַל - bah'-al - 1167

ஆ.பெ.சொ. - பாகால் - இது பாபிலோனின் தேசிய தெய்வம். (எரே 51:44; ஏசா 46:1).

"மெரொதாக் நொறுங்குண்டது" - இது பாபிலோனின் மற்றொரு தேசிய தெய்வம். பேல், மெராதாக் ஆகிய எல்லா விக்கிரகங்களும் நொறுங்குண்டு போகும்.

"அதற்கு விரோதமாய் வடக்கேயிருந்து ஒரு ஜாதி வந்து" - மேதிய பெர்சிய தேசத்தார் வடக்கேயிருந்து வந்து பாபிலோன்மீது யுத்தம் பண்ணுவார்கள். பாபிலோனுக்கு வடக்கேயுள்ள தேசங்களை ஜெயித்த பின்பு அவர்கள் பாபிலோன்மீது யுத்தம் பண்ண வருவார்கள். மேதிய தேசம் பாபிலோனுக்கு வடகிழக்கில் உள்ளது.

(2) இஸ்ரவேலர் மறுபடியுமாக கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள்

எரே 50:4 அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேல் புத்திரர் வருவார்கள்; அவர்களும் யூதா புத்திரரும் ஏகமாய் அழுது, நடந்துவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:5 மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள் என்று சீயோனுக்கு நேராய் முகங்களைத் திருப்பி, சீயோனுக்குப் போகிற வழி எதுவென்று கேட்டு விசாரிப்பார்கள்.

எரே 50:6 என் ஜனங்கள் காணாமற்போன ஆடுகள், அவர்களுடைய மேய்ப்பர்கள் அவர்களைச் சிதறப்பண்ணி, பர்வதங்களில் அலைய விட்டார்கள்; ஒரு மலையிலிருந்து மறுமலைக்குப் போனார்கள்; தங்கள் தொழுவத்தை மறந்து விட்டார்கள்.

எரே 50:7 அவர்களைக் கண்டு பிடித்தவர்கள் எல்லாரும் அவர்களைப் பட்சித்தார்கள்; அவர்களுடைய சத்துருக்கள்: எங்கள் மேல் குற்றமில்லை; அவர்கள் நீதியின் வாசஸ்தலத்திலே கர்த்தருக்கு விரோதமாக, தங்கள் பிதாக்கள் நம்பின கர்த்தருக்கு விரோதமாகவே, பாவஞ்செய்தார்கள் என்றார்கள்.

"அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேல் புத்திரர் வருவார்கள்" - மேதிய-பெர்சிய தேசத்தார் பாபிலோனைப் பிடித்துக் கொள்வார்கள். அக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரும், யூதாவின் புத்திரரும் பாபிலோன் தேசத்திலிருந்து தங்களுடைய தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். (எரே 50:4-7). பாலஸ்தீனதேசத்திற்கு அவர்கள் மறுபடியும் வரும்போது இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் அதில் இடம் பெற்றிருப்பார்கள்.

"என் ஜனங்கள் காணாமற்போன ஆடுகள்" - எரே 50:4 ஆவது வசனத்தில் கூறப் பட்டிருக்கும் இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும் இங்கு "என் ஜனங்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் புறஜாதியார் மத்தியில் சிதறிப் போனார்கள். கர்த்தர் இவர்களுடைய முற்பிதாக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையை இஸ்ரவேலின் எந்தக் கோத்திரத்தாரும் நிறைவேற்றவில்லை.

எரேமியா - தொகுப்புரை

50 அதிகாரம்

"தங்கள் பிதாக்கள் நம்பின கர்த்தருக்கு விரோதமாகவே, பாவஞ் செய்தார்கள்" - இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் புறஜாதியாரை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். இஸ்ரவேலைத் தண்டிக்கும்போது தாங்கள் தவறு ஏதும் செய்ய வில்லையென்று புறஜாதியார் நினைக்கிறார்கள். சில சமயங்களில் கர்த்தர் தங்களுக்கு அனுமதித்த அளவுக்கு மீறி அவர்களைத் தண்டித்து விடுகிறார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு புறஜாதியார்மீது வருகிறது. (எரே 25:9-26; ஏசா 10:4-12; ஏசா 37:36-38; ஏசா 41:25; ஏசா 44:28; ஏசா 45:1-4,13; எஸ்றா 1:1-3)

(3) படையெடுப்பு

எரே 50:8 பாபிலோனின் நடுவிலிருந்தோடி, கல்தேயரின் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, மந்தையின் முன்நடக்கும் கடாக்களைப்போல் இருங்கள்.

எரே 50:9 இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாக வடதேசத்தில் இருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டத்தை எழுப்பி, அதை வரப்பண்ணுவேன்; அவர்கள் அதற்கு விரோதமாக ஆயத்தம் பண்ணுவார்கள்; அங்கேயிருந்து வருகிறவர்களால் அது பிடிக்கப்படும்; அவர்களுடைய அம்புகள் சாமர்த்தியமுள்ள பராக்கிரமசாலியின் அம்புகளைப்போல் இருக்கும்; அவைகள் விருதாவாய்த் திரும்புவதில்லை.

எரே 50:10 கல்தேயா கொள்ளையாகும்; அதைக் கொள்ளையிடுகிறவர்கள் எல்லாரும் பரிபூரணமடைவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:11 என் சுதந்தரத்தைக் கொள்ளையிட்ட நீங்கள் சந்தோஷித்தீர்களே, களிகூர்ந்தீர்களே, புல்மேய்ந்து கொழுத்த கடாரியைப்போல் பூரித்து, வலி யரிஷபம்போல் முக்காரம் போடுகிறீர்களே.

எரே 50:12 உங்கள் தாய் மிகவும் வெட்கி, உங்களைப் பெற்றவள் நாணமடைவாள்; இதோ, அவள் ஜாதிகளுக்குள்ளேகடைசியாவதுமன்றி, வனாந்தரமும் வறட்சியும் அந்தரவெளியுமாவாள்.

எரே 50:13 கர்த்தரின் கோபத்தினாலே அது குடியற்றதும் பெரும் பாழுமாயிருக்கும்; பாபிலோனைக் கடந்துபோகிற எவனும் அதின் எல்லா வாதைகளினிமித்தமும் பிரமித்து, ஈசல் போடுவான்.

எரே 50:14 நீங்கள் எல்லாரும் பாபிலோனுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் அணிவகுத்து நின்று, வில்லை நாணேற்றி, அதின்மேல் அம்புகளை எய்யுங்கள்; அம்புச்செலவைப் பாராதேயுங்கள்; அது, கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தது.

எரே 50:15 அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் ஆர்ப்பரியுங்கள்; அது தன்னைக் கையளித்தது; அதின் அஸ்திபாரங்கள் விழுந்தது, அதின் மதில்கள் இடிக்கப்பட்டது; இது கர்த்தர் வாங்கும் பழி; அதினிடத்தில் பழி வாங்குங்கள்; அது செய்ததுபோலவே நீங்களும் அதற்குச் செய்யுங்கள்.

எரே 50:16 விதைவிதைக்கிறவனையும் அறுப்புக்காலத்தில் அரிவாளைப் பிடிக்கிறவனையும் பாபிலோனில் இராதபடிச் சங்காரம்பண்ணுங்கள்; கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப அவரவர் தங்கள் ஜனத்தண்டைக்குத் திரும்பிக்கொண்டு, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.

50 அதிகாரம்

"பாபிலோனின் நடுவிலிருந்தோடி" - பாபிலோன் முழுவதுமாக அழிக்கப்படும். ஆகையினால் அது அழிவதற்கு முன்பாகத் தம்முடைய ஜனங்கள் பாபிலோனின் நடுவிலிருந்து புறப்பட்டுப் போய்விட வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.

"வடதேசத்தில் இருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டம்" - பாபிலோன் தேசத்திற்கு எதிராக மேதிய-பெர்சிய தேசத்தாரும் மற்றும் பல தேசத்தாரும் வருகிறார்கள். இவர்கள் பாபிலோனுக்கு எதிராக வடதிசையிலிருந்து வருகிறார்கள்.

"கல்தேயா கொள்ளையாகும்" - பாபிலோன்மீது யுத்தம் பண்ண வருகிறவர்கள் கல்தேயாவைக் கொள்ளையிடுவார்கள். பாபிலோனில் கிடைக்கும் கொள்ளைப் பொருளினால் கொள்ளையிடுகிறவர்கள் எல்லாரும் பரிபூரணமடைவார்கள். (எரே 50:10).

தேவன் கல்தேயரைத் தண்டிப்பதற்குக் காரணம்

1. இஸ்ரவேல் அழிக்கப்பட்ட போது அவர்கள் சந்தோஷமடைந்தார்கள்.
2. அவர்கள் கொழுத்த கடாரியைப்போல் பூரித்து, வலியரிஷபம்போல் முக்காரம் போடுகிறார்கள்.

"நீங்கள் எல்லாரும் பாபிலோனுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் அணிவகுத்து நின்று" - இந்தக் கட்டளை பாபிலோனுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வரும் மேதிய-பெர்சிய தேசத்தாருக்குக் கூறப்பட்டிருக்கிறது. பாபிலோன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபடியினால், அது நியாயந்தீர்க்கப்படும் காலம் வந்திருக்கிறது. (எரே 50:14-16).

எரே 50-51 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. ஜாதிகளுக்குள்ளே அறிவித்துப் பிரசித்தம் பண்ணுங்கள் (எரே 50:2).
2. இதை மறைக்காமல் விளம்பரம் பண்ணுங்கள்.
3. கொடியேற்றுங்கள்.
4. பாபிலோனின் நடுவிலிருந்தோடுங்கள். (எரே 50:8).
5. கல்தேயரின் தேசத்தைவிட்டுப் புறப்படுங்கள்.
6. நீங்கள் எல்லாரும் பாபிலோனுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் அணிவகுத்து நில்லுங்கள். (எரே 50:14).
7. வில்லை நாணேற்றி, அதின்மேல் அம்புகளை எய்யுங்கள்.
8. அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் ஆர்ப்பரியுங்கள் (எரே 50:15).
9. விதைவிதைக்கிறவனையும் அறுப்புக் காலத்தில் அரிவாளைப் பிடிக்கிறவனையும் பாபிலோனில் இராதபடிச் சங்காரம் பண்ணுங்கள் (எரே 50:16).
10. தேசத்துக்கு விரோதமாகப் போங்கள். (எரே 50:21).
11. அவர்களைத் துரத்தி, யாவையும் பாழாக்கிச் சங்காரம்பண்ணுங்கள்.
12. அதற்கு விரோதமாக வாருங்கள். (எரே 50:26).
13. அதின் களஞ்சியங்களைத் திறந்து விடுங்கள்.
14. குவியல் குவியலாகக் குவியுங்கள்.
15. அதில் ஒன்றும் மீதியாகாதபடிக்குப் பாருங்கள்.
16. அதை முற்றிலும் அழித்துப்போடுங்கள்.
17. அதின் காளைகளையெல்லாம் வெட்டுங்கள் (எரே 50:27).

எரேமியா - தொகுப்புரை

50 அதிகாரம்

18. அவைகள் கொலைக்களம் சேரக்கடவது.

19. வில்வீரரை அழையுங்கள் (எரே 50:29).

20. நீங்கள் எல்லாரும் அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் பாளயமிறங்குங்கள்.

21. ஒருவரையும் தப்பவிடாதிருங்கள்.

22. அதின் கிரியைக்குத்தக்க பலனை அதற்குச் சரிக்கட்டுங்கள்.

23. அது செய்ததின்படியெல்லாம் அதற்குச் செய்யுங்கள்.

24. கர்த்தருடைய ஆலோசனையைக் கேளுங்கள். (எரே 50:45).

25. அதின் வாலிபரைத் தப்பவிடாமல் இருங்கள். (எரே 51:3).

26. அதின் சேனையை எல்லாம் சங்காரம் பண்ணுங்கள்.

27. பாபிலோனின் நடுவிலிருந்து ஓடுங்கள். (எரே 51:6).

28. அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்.

29. பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்குப் பாருங்கள்.

30. பாபிலோனுக்காக அலறுங்கள். (எரே 51:8).

31. அதின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்.

32. பாபிலோனை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக் கடவோம். (எரே 51:9).

33. அம்புகளைத் துலக்குங்கள். (எரே 51:11).

34. கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள்.

35. பாபிலோனின் மதில்கள்மேல் கொடியேற்றுங்கள் (எரே 51:12).

36. காவலைப் பலப்படுத்துங்கள்.

37. ஜாமங் காக்கிறவர்களை நிறுத்துங்கள்.

38. பதிவிருப்பாரை வையுங்கள்.

39. தேசத்திலே கொடியேற்றுங்கள். (எரே 51:27).

40. ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதுங்கள்.

41. ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்.

42. ராஜ்யங்களை அதற்கு விரோதமாக வரக்கூப்பிடுங்கள்.

43. அதற்கு விரோதமாகத் தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள்.

44 கணையுள்ள வெட்டுக்கிளிகள்போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள்.

45. ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள். (எரே 51:28).

46. நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள் (எரே 51:45).

47. அவனவன் தன்தன் ஆத்துமாவை இரட்சித்துக்கொள்ளக்கடவன்.

48. தங்கித்தரியாமல் நடந்துவாருங்கள் (எரே 51:50).

49. தூரத்திலே கர்த்தரை நினையுங்கள்.

50. எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது.

51. இந்தப் புஸ்தகத்திலே ஒரு கல்லைக் கட்டி, அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்து விடுங்கள். (எரே 51:63)

50 அதிகாரம்

(4) பாபிலோன் தண்டிக்கப்பட்டது - இஸ்ரவேல் பாலஸ்தீனாவிற்கு திரும்ப வந்தது

எரே 50:17 இஸ்ரவேல் தெறிப்பட்டுப்போன ஆடு, சிங்கங்கள் அதைத் துரத்தின; முதலில் அசீரியா ராஜா அதைப் பட்சித்தான்; கடைசியில் பாபிலோன் ராஜாவாகிய இந்த நேபுகாத்நேச்சார் அதின் எலும்புகளை முறித்தான்.

எரே 50:18 ஆகையால், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் அசீரியா ராஜாவை தண்டித்தது போல் பாபிலோன் ராஜாவையும் அவன் தேசத்தையும் தணடித்து,

எரே 50:19 இஸ்ரவேலை அதின் வாசஸ்தலத்துக்குத் திரும்பிவரப் பண்ணுவேன்; அப்பொழுது அது கர்மேலிலும் பாசானிலும் மேயும்; எப்பிராயீமின் மலைகளிலும் கிலேயாத்திலும் அதின் ஆத்துமா திருப்தியாகும்.

எரே 50:20 அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்; யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும்; நான் மீதியாக வைக்கிறவர்களுக்கு மன்னிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"இஸ்ரவேல் தெறிப்பட்டுப்போன ஆடு" - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் சிதறிப் போன ஆடுகளைப் போல இருக்கிறார்கள். அவர்கள் சிதறிப்போனது போலவே எஸ்றா, நெகேமியாவின் காலத்திலும் பாபிலோனுடைய சிறையிருப்பின் முடிவிலும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (எரே 50:4-5). இந்த வசனத்தில் இஸ்ரவேல் என்று கூறப்பட்டிருப்பதினால் அசீரியாவின் ராஜாவும், பாபிலோனின் ராஜாவும் அவர்களைச் சிதறிப்போகப் பண்ணினார்கள் என்பது தெரியவருகிறது. அசீரியர் வடக்கு ராஜ்யத்திலுள்ள பத்துக் கோத்திரத்தாரைச் சிறைப்பிடித்தார்கள். (2இராஜா 17) பாபிலோனியர் யூதா தேசத்திலுள்ள இரண்டு கோத்திரத்தாரைச் சிறைப்பிடித்தார்கள். (2இராஜா 23-25). இவ்விரண்டு ராஜாக்களும் தண்டிக்கப் படுவார்கள். (எரே50:18) இவர்களால் சிறைப் பிடிக்கப்பட்டவர்கள் மறுபடியும் தங்கள் வாசஸ்தலமாகிய பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். (எரே 50:19). இந்தத் தீர்க்கதரிசனத்தில் இஸ்ரவேலும், யூதாவும் சேர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. (எரே 50:20).

"அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்" - இஸ்ரவேலும், யூதாவும் பாலஸ்தீன தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்ட பின்பு அவர்கள் தங்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் கழுவி, சுத்திகரிக்கப் படுவார்கள். (சக 12:1-13:1; ரோமர் 11:25-29). அவர்களிடத்தில் பாவம் காணப்படாதிருக்கும். ஆகையினால் எரே 50:19-20 ஆகிய வசனங்கள் கடைசி நாட்களில் யூதர்கள் இறுதியாகக் கூட்டிச் சேர்க்கப்படுவதைக் குறிப்பிடுகிறது. ஆயினும் எரே 50:4-5 ஆகிய வசனங்கள் பாபிலோன் சிறையிருப்புக்குப் பின்பு அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவதைக் குறிப்பிடுகிறது.

(5) பாபிலோனை அழிக்கும் கட்டளை

எரே 50:21 மெரதாயீம் தேசத்துக்கு விரோதமாகவும் பேகோடு குடிகளுக்கு விரோதமாகவும் நீ போய், அவர்களைத் துரத்தி, யாவையும் பாழாக்கிச் சங்காரம்பண்ணி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:22 தேசத்திலே யுத்தத்தின் சத்தமும் மகா சங்காரமும் உண்டு.

எரே 50:23 சர்வ பூமியின் சம்மட்டி எப்படி முறித்து உடைக்கப்பட்டது! ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் எப்படிப் பாழாய்ப்போயிற்று!

எரேமியா - தொகுப்புரை

50 அதிகாரம்

எரே 50:24 பாபிலோனே, உனக்குக் கண்ணியை வைத்தேன், நீ அதை அறியாமல் அதிலே சிக்குண்டுபோனாய்; நீ அகப்பட்டும் பிடிபட்டும் போனாய், நீ கர்த்தரோடே யுத்தங்கலந்தாயே.

எரே 50:25 கர்த்தர் தம்முடைய ஆயுதசாலையைத் திறந்து, தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை எடுத்துக் கொண்டு வந்தார்; இது கல்தேயர் தேசத்திலே சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் செய்கிற கிரியை.

எரே 50:26 கடையாந்தரத்திலிருந்து அதற்கு விரோதமாக வந்து, அதின் களஞ்சியங்களைத் திறந்து, குவியல் குவியலாகக் குவித்து, அதில் ஒன்றும் மீதியாகாதபடிக்கு அதை முற்றிலும் அழித்துப்போடுங்கள்.

எரே 50:27 அதின் காளைகளையெல்லாம் வெட்டுங்கள்; அவைகள் கொலைக்களம் சேரக்கடவது; ஐயோ! அவர்கள் விசாரிக்கப்படும் நாள் வந்ததே.

எரே 50:28 நம்முடைய தேவன் பழிவாங்கினதை, அவர் தமது ஆலயத்துக்காகப் பழிவாங்கினதையே, சீயோனிலே அறிவிக்கும்படிக்கு, பாபிலோன் தேசத்திலிருந்து தப்பியோடி வந்தவர்களின் சத்தம் கேட்கப்படும்.

எரே 50:29 பாபிலோனுக்கு விரோதமாய் வரும்படி வில்வீரரை அழையுங்கள்; வில் வளைக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் பாளயமிறங்குங்கள், ஒருவரையும் தப்பவிடாதிருங்கள்; அதின் கிரியைக்குத் தக்க பலனை அதற்குச் சரிக்கட்டுங்கள்; அது செய்ததின்படியெல்லாம் அதற்குச் செய்யுங்கள்; அது இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தருக்கு விரோதமாக இடும்புசெய்தது.

எரே 50:30 ஆகையால் அதின் வாலிபர் அதின் வீதிகளில் விழுவார்கள்; அதின் யுத்தவீரர் எல்லாரும் அந்நாளிலே சங்காரமாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:31 இதோ, இடும்புள்ளவனே, நான் உனக்கு விரோதமாக வருகிறேன் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நான் உன்னை விசாரிக்குங்காலமாகிய உன்னுடைய நாள் வந்தது.

எரே 50:32 இடும்புள்ளவன் இடறிவிழுவான்; அவனை எடுத்து நிறுத்துவாரில்லை; நான் அவனுடைய பட்டணங்களில் அக்கினியைக் கொளுத்துவேன், அது அவன் சுற்றுப்புறத்தார் எல்லாரையும் பட்சிக்கும்.

பாபிலோனின் அடையாளப் பெயர்கள்

1. மெரதாயீம் **(Merathaim)**
2. பேகோடு **(Pekod)** (எசே 23:23).
3. சேசாக்கு **(Sheshach)** (எரே 25:26; எரே 51:41).

"சர்வ பூமியின் சம்மட்டி எப்படி முறித்து உடைக்கப்பட்டது" - நேபுகாத்நேச்சார் இங்கு சம்மட்டியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறான். இவன் பல தேசங்களை உடைத்துப்போட்டான். அப்படிப்பட்ட சம்மட்டியே இப்போது உடைந்து போயிற்று. அது ஏற்ற காலத்தில் அழிந்துபோகும். (எரே 50:21-32). இதுவும் இனிமேல் நிறைவேறப்போகும் தீர்க்கதரிசனமாகும்.

"சீயோனிலே அறிவிக்கும்படிக்கு" - பாபிலோனின் அழிவிலிருந்து யூதர்களில் மீதமுள்ளோர் மீட்கப்படுவார்கள். பாபிலோன் அழிந்துபோன செய்தியை அவர்கள் சீயோனில் அறிவிப்பார்கள்.

"அதின் கிரியைக்குத்தக்க பலனை அதற்குச் சரிக்கட்டுங்கள்" - பாபிலோன் விதைத்ததை அறுக்க வேண்டும். அது எருசலேமையும், யூதாவையும் அழித்துப்போட்டது. ஆகையினால் பாபிலோன் அழிக்கப்பட வேண்டும்.

50 அதிகாரம்

"அதின் வாலிபர் அதின் வீதிகளில் விழுவார்கள்" - பாபிலோனின் முழுமையான அழிவு எரே 50:30-32 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. வாலிபர், யுத்தவீரர், பெருமைக்காரர், ஆகியோரும் பாபிலோனின் எல்லாப் பட்டணங்களும் அழியும்.

(6) பாபிலோன் இஸ்ரவேலையும் யூதாவையும் அடக்கி வைத்திருந்தது

எரே 50:33 சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் ஏகமாய் ஒடுங்குண்டார்கள்; அவர்களைச் சிறையாக்கின யாவரும் அவர்களை விடமாட்டோம் என்று கெட்டியாய்ப்பிடித்துக் கொண்டார்கள்.

எரே 50:34 அவர்களுடைய மீட்பரோவெனில் வல்லமையுள்ளவர், சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்; தேசத்தை இளைப்பாறப் பண்ணுவதற்கும், பாபிலோன் குடிகளைத் தத்தளிக்கப் பண்ணுவதற்கும் அவர்களுடைய வழக்கை அவர் நடத்துவார்.

"இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் ஏகமாய் ஒடுங்குண்டார்கள்" - இஸ்ரவேலின் இரண்டு வீட்டாரும் ஒரே தேசங்களில் சிறையிருப்பில் வைக்கப்படுகிறார்கள். ஒரே ஜனங்கள் அவர்களை ஒடுக்குகிறார்கள். அதன் பின்பு சிறையிருப்பிலிருந்து அவர்கள் ஏகமாய் மீட்கப்படுகிறார்கள்.(எரே 50:33-34). இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் முதலாவதாக அசீரியரால் சிறைப்பிடிக்கப் பட்டார்கள். அதன் பின்பு, மீதமுள்ள இரண்டு கோத்திரத்தாரைப் பாபிலோனியர் சிறைப் பிடித்தார்கள். இவ்விரண்டு சிறையிருப்புக்கும் இடையில் 133 வருஷங்கள் காலஇடைவெளி உள்ளது. இக்காலத்தில் பாபிலோன் அரசு பேரரசாக மாறி, அசீரியாவைக் கைப்பற்றியது. இதன் மூலமாக அசீரியாவினால் சிறைபிடிக்கப் பட்டிருந்த இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரும் பாபிலோன் சிறையிருப்புக்கு உட்படுகிறார்கள். அக்காலத்தில்தான் யூதாவின் இரண்டு கோத்திரத்தாரையும் பாபிலோனியர் சிறைபிடிக்கிறார்கள். இவ்வாறாக, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் பாபிலோனின் சிறையிருப்புக்கு உட்படுகிறார்கள். அவர்கள் ஏகமாய் ஒடுங்குண்டார்கள்.

இக்காலத்தில் மேதிய-பெர்சிய அரசு பேரரசாக விளங்கிற்று. இவர்கள் பாபிலோனிய பேரரசை வீழ்த்தி, இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரையும் தங்கள் ஆளுகைக்குட் படுத்தினார்கள். இதன் பின்பு, கோரேசு ராஜா ஆட்சிபுரிந்தபோது பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிப்போகவேண்டுமென்று விரும்புகிற இஸ்ரவேல் புத்திரர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிப் போகலாம் என்று ஆணையிட்டான். அப்போது இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில் அநேகரும் லேவியரில் ஏராளமானோரும் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையோடு இந்தச் சம்பவம் நிறைவேறுகிறது.

இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு முதன் முறையாக வந்தபோது, இஸ்ரவேலர் அனைவரும் மேசியாவின் ஊழியத்திற்குச் சாட்சிகளாக இருந்தார்கள். மேசியாவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டுமா அல்லது ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்க வேண்டுமா என்று இஸ்ரவேல் புத்திரர் தீர்மானம் பண்ணினார்கள். தங்களுடைய தீர்மானத்திற்கு இவர்கள் பொறுப்பேற்கிறார்கள். கிபி 70 ஆம் வருஷத்தில் யூதர்கள் தேசமெங்கும் சிதறிப்போன போது, அதில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் பங்கு பெறுகிறார்கள். புதிய ஏற்பாட்டில், யூதர்கள், இஸ்ரவேல், இஸ்ரவேலின் வீட்டார், யாக்கோபின் வீட்டார், யூதாவின் வீட்டார் ஆகிய வார்த்தைகள் ஒரே ஜனத்தையே குறிக்கிறது. (மத் 2:2; மத் 10:6; லூக்கா 1:33; யோவான் 20:19; அப் 2:5,10,36; எபி 8:8-10).

(7) உடனடி நியாயத்தீர்ப்பு

எரே 50:35 பட்டயம் கல்தேயர்மேலும், பாபிலோன் குடிகள்மேலும், அதினுடைய பிரபுக்கள்மேலும், அதினுடைய ஞானிகள் மேலும் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

50 அதிகாரம்

எரே 50:36 பட்டயம் பொய்களைப் பிணைக்கிறவர்கள்மேலும் வரும்; அவர்கள் பைத்தியக்காரராவார்கள்; பட்டயம் அதின் பராக்கிரமசாலிகள்மேலும் வரும், அவர்கள் கலங்குவார்கள்.

எரே 50:37 பட்டயம் அதின் குதிரைகள் மேலும், அதின் இரதங்கள்மேலும், அதின் நடுவில் இருக்கிற பலஜாதியான ஜனங்கள் யாவர்மேலும் வரும், அவர்கள் பேடிகளாவார்கள்; பட்டயம் அதின் பொக்கிஷங்களின் மேல் வரும், அவைகள் கொள்ளையாகும்.

எரே 50:38 வறட்சி அதின் தண்ணீர்கள் மேல் வரும், அவைகள் வறண்டுபோம்; அது விக்கிரக தேசம்; அருக்களிப்பான சிலைகளின் மேல் மனமயங்கியிருக்கிறார்கள்.

"பட்டயம் கல்தேயர்மேலும்......வரும்" - மேதிய-பெர்சிய தேசத்தாரின் பட்டயங்கள் பாபிலோனில் குடியிருக்கும் கல்தேயரை அழிக்கும். அந்த அழிவில் பாபிலோனின் பிரபுக்களும், ஞானிகளும் அழிந்துபோவார்கள். கல்தேயரில் எல்லாப் பிரிவினர்மீதும் மேதிய-பெர்சிய தேசத்தாரின் பட்டயம் வரும். (எரே 50:35-37).

"வறட்சி அதின் தண்ணீர்கள்மேல் வரும்" - ஐப்பிராத்து நதியின் நீரோட்டம் தன்னுடைய இயற்கையான திசையிலிருந்து திருப்பி விடப்படும். இதன் மூலமாக மேதிய-பெர்சிய தேசத்தார் பாபிலோன் நகரத்திற்குள் ஐப்பிராத்து நதியின் வழியாகக் கடந்த வரலாம்.

(8) வருங்கால நியாயத்தீர்ப்பு - (ஏசா 13:19-22; 14:4-23; வெளி 14:8; 18:1-23)

எரே 50:39 ஆகையால் காட்டு மிருகங்களும் ஓரிகளும் அதிலே குடியிருக்கும்; கோட்டான்கள் அதிலே தங்கும்; இனி என்றென்றைக்கும் அது குடியேற்றப்படுவதில்லை; தலைமுறை தலைமுறையாக ஒருவரும் அதில் சஞ்சரிப்பதுமில்லை.

எரே 50:40 தேவன் சோதோமையும் கொமோராவையும் அதின் சுற்றுப்புறங்களையும் கவிழ்த்துப் போட்டதுபோல இதையும் கவிழ்த்துப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஒருவரும் அதில் குடியிருப்பதில்லை, ஒரு மனுபுத்திரனும் அதில் தங்குவதுமில்லை.

"காட்டுமிருகங்களும் ஓரிகளும் அதிலே குடியிருக்கும்" - எரே 50:39-40 ஆகிய இரண்டு வசனங்களும், கர்த்தருடைய நாளில் பாபிலோன் மீது வரும் முழுமையான இறுதியான அழிவை முன்னறிவிக்கிறது. (ஏசா 13:6,9,19-22; வெளி 16:17-21; வெளி 18:1-24). கடைசி நாளில் பாபிலோன் அழிக்கப்பட்ட பின்பு, அதில் யாரும் குடியேறுவதில்லை. பாபிலோன் வருங்காலத்தில் மறுபடியும் பெரிய நகரமாக இருக்கும். ஆகையினால் இந்தத் தீர்க்கதரிசனம் வருங்காலத்தில் நிறைவேறப்போகிற முன்னறிவிப்பாகும்.

"தேவன் சோதோமையும் கொமோராவையும் அதின் சுற்றுப்புறங்களையும் கவிழ்த்துப் போட்டதுபோல" - சோதோம் கொமோராவைப் போல பாபிலோன் இன்னும் முழுமையாக அழிக்கப்படவில்லை. வெளி 16:17-21; வெளி 18:1-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பூமியதிர்ச்சியினால் கர்த்தர் பாபிலோனைச் சடிதியாகவும், முழுமையாகவும் அழிப்பார்.

(9) உடனடியாக படையெடுத்து வந்தவர்கள் - மேதியா - பெர்சியா - (ஏசா 13:17; 44:28; தானி 5)

எரே 50:41 இதோ, வடக்கேயிருந்து ஒரு ஜனமும் பெரிய ஜாதியும் வரும்; பூமியின் எல்லைகளிலிருந்து பலத்த ராஜாக்கள் எழும்புவார்கள்.

எரே 50:42 அவர்கள் வில்லும் வேலும் பிடித்துவருவார்கள்; அவர்கள் இரக்கமில்லாத கொடியர்; அவர்கள் இரைச்சல் சமுத்திர இரைச்சல்போல் இருக்கும்; பாபிலோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட ஆட்களாய்க் குதிரைகளின்மேல் ஏறி வருவார்கள்.

50 அதிகாரம்

எரே 50:43 அவர்கள் வருகிற செய்தியை பாபிலோன் ராஜா கேட்கையில் அவன் கைகள் தளரும்; இடுக்கமும் பிரசவ வேதனைப் படுகிறவளுக்குண்டாகும் வேதனையைப்போன்ற வேதனையும் அவனைப் பிடிக்கும்.

எரே 50:44 இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிலிருந்து சிங்கத்தைப்போல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்; அவனை அங்கேயிருந்து சடிதியிலே ஓடிவரப்பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாகக் கட்டளையிட்டு, அனுப்பத் தெரிந்து கொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்குத் திட்டஞ்சொல்பவன் யார்? எனக்கு முன்பாக நிற்கப்போகிற மேய்ப்பன் யார்?

எரே 50:45 ஆகையால் கர்த்தர் பாபிலோனுக்கு விரோதமாக யோசித்த ஆலோசனையையும், அவர் கல்தேயர் தேசத்துக்கு விரோதமாக நினைத்திருக்கிற நினைவுகளையும் கேளுங்கள்; மெய்யாகவே மந்தையில் சிறியவர்கள் அவர்களைப் பிடித்திழுப்பார்கள்; மெய்யாகவே அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் பாழாக்குவார்.

எரே 50:46 பாபிலோன் பிடிபட்டதின் சத்தத்தினால் பூமி அதிரும், அதின் கூப்பிடுதல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படும்.

"இதோ, வடக்கேயிருந்து ஒரு ஜனமும் பெரிய ஜாதியும் வரும்" - மேதிய-பெர்சிய தேசத்தார் வடக்கேயிருந்து வரும் ஜனமாக இங்கு கூறப்பட்டிருக்கிறார்கள். (எரே 50:21; எரே 25:25; எரே 51:11,28; ஏசா 13:17; தானி 5:28).

"அவன் கைகள் தளரும்" - இந்த வாக்கியம் எழுதப்பட்டிருக்கிற பிரகாரம் நிறைவேறிற்று. (தானி 5).

"சிங்கத்தைப்போல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்" - இரண்டாம் முறையாக இதுபோன்ற விளக்கம் எரேமியாவில் கூறப்பட்டிருக்கிறது. எரே 49:19 ஆவது வசனத்தில் நேபுகாத்நேச்சார் சிங்கம்போல வந்தான். இந்த வசனத்தில் மேதிய-பெர்சிய தேசத்தார் அல்லது அவனுடைய தலைவனாகிய கோரேசு சிங்கம் போல வருகிறான். யோர்தான் நதி புரண்டு ஓடுகிறது போல கோரேசு பாபிலோன்மீது வருகிறான்.

"கர்த்தர் பாபிலோனுக்கு விரோதமாக யோசித்த ஆலோசனை" - கர்த்தருடைய ஆலோசனை நிறைவேறிற்று. பாபிலோன் அழிந்தது. அது பாழாயிற்று.

"பாபிலோன் பிடிபட்டதின் சத்தம்" - பாபிலோன் வலிமையான பேரரசு. இதை யாராலும் வீழ்த்த முடியாது என்று எல்லா தேசத்தாரும் பல வருஷங்களாக நினைத்தார்கள். கோரேசு ராஜா பாபிலோனை வீழ்த்தினான். இதனால் அக்காலத்தில் கோரேசின் புகழ், எல்லா தேசத்தார் மத்தியிலும் பிரபல்யமாயிற்று.

51 அதிகாரம்

எரே 51:1 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாகவும், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் மத்தியில் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகவும் அழிக்கும் காற்றை எழும்பப்பண்ணி,

எரே 51:2 தூற்றுவாரைப் பாபிலோனுக்கு அனுப்புவேன்; அவர்கள் அதைத் தூற்றி வெறுமையாக்கிப் போடுவார்கள்; ஆபத்துநாளிலே அதற்கு விரோதமாய்ச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள்.

எரே 51:3 வில்லை நாணேற்றுகிறவனுக்குவிரோதமாகவும், தன் கவசத்தில் பெருமை பாராட்டுகிறவனுக்கு விரோதமாகவும், வில்வீரன் தன் வில்லை நாணேற்றக் கடவன்; அதின் வாலிபரைத் தப்பவிடாமல் அதின் சேனையை எல்லாம் சங்காரம்பண்ணுங்கள்.

எரே 51:4 குத்திப்போடப்பட்டவர்கள் கல்தேயரின் தேசத்திலும், கொலைசெய்யப்பட்டவர்கள் அதின் வீதிகளிலும் விழுவார்கள்.

மேதிய-பெர்சிய தேசத்தின் அடையாளங்கள்

1. சிங்கம் (எரே 50:44)
2. அழிக்கும் காற்று (எரே 51:1)
3. தூற்றுவார் (எரே 51:2)
4. பச்சைக்கிளிகள் (எரே 51:14,27)
5. பாழாக்குகிறவர்கள் (எரே 51:53-56)
6. தண்டாயுதம் (எரே 51:20)
7. அஸ்திராயுதம் (எரே 51:20)

(10) யூதாவும் இஸ்ரவேலும் இன்னும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனமாக இருக்கிறார்கள்

எரே 51:5 அவர்கள் தேசம் இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாகச் செய்த அக்கிரமத்தினால் நிறைந்திருந்தும், யூதா தன் தேவனாலும் இஸ்ரவேல் சேனைகளின் கர்த்தராலும் கைவிடப்பட வில்லை.

"யூதா தன் தேவனாலும் இஸ்ரவேல் சேனைகளின் கர்த்தராலும் கைவிடப்படவில்லை" - பாபிலோன் சடிதியாக அழிக்கப்படும்போது, எரே 51:5-8 ஆகிய வசனங்கள் வருங்காலத்தில் நிறைவேறும். கர்த்தர் இஸ்ரவேலையும், யூதாவையும் கைவிடவில்லை. இன்னும் அவர்கள் தேவனுடைய ஜனமாகவே இருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும், அவர்கள் மத்தியில் இன்னும் நிறைவேற்றுவார். பாபிலோனின் வருங்காலத்து ராஜா அந்திக்கிறிஸ்துவாக இருப்பான். அவன் இஸ்ரவேலரோடு ஏழு வருஷ உடன்படிக்கை பண்ணி, அதைப் பாதியில் முறித்துப்போடுவான். பாலஸ்தீன தேசத்தையும் கைப்பற்றுவான். இஸ்ரவேல் ஜனங்களைப் பூமியில் இராதவாறு அழித்துப்போடுவதற்கு முயற்சி பண்ணுவான். தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குக் கர்த்தர் இந்தச் சம்பவங்களையெல்லாம் பயன்படுத்துவார். இஸ்ரவேல் புத்திரர்களுக்கு வருங்காலத்தில் உபத்திரவம் வரும்போது, அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்புவார்கள். மனந் திரும்புவார்கள். அப்போது கர்த்தர் தம்முடைய ஜனத்திற்குச் செய்ய வேண்டிய காரியங்களை நீதியாய் நிறைவேற்றுவார். (சக 12:10-13:1,9; ரோமர் 11:25-29; தானி 9:24-27; மத் 24:15-22)

(11) வருங்கால அழிவு - (வெளி 14:8; 16:17-21; 18:1-24)

எரே 51:6 நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் சொல்லுவார்.

51 அதிகாரம்

எரே 51:7 பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப் போனார்கள்.

எரே 51:8 பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்; ஒருவேளை குணமாகும்.

"இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது" - (வெளி 18:4)

"பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்" - (வெளி 17:1-18)

"பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது" - (வெளி 16:17-21;18:8,17,19)

(12) உடனடி அழிவு

எரே 51:9 பாபிலோனைக் குணமாக்கும் படிப் பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக் கடவோம்; அதின் ஆக்கினை வான மட்டும் ஏறி ஆகாயமண்டலங்கள் பரியந்தம் எட்டினது.

எரே 51:10 கர்த்தர் நம்முடைய நீதியை வெளிப்படுத்தினார்; நம்முடைய தேவனாகிய கர்த்தரின் செயலைச் சீயோனில் விவரிப்போம் வாருங்கள்.

எரே 51:11 அம்புகளைத் துலக்குங்கள்; கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள்; கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார்; பாபிலோனை அழிக்க வேண்டுமென்பதே அவருடைய நினைவு; இது கர்த்தர் வாங்கும் பழி, இது தமது ஆலயத்துக்காக அவர் வாங்கும் பழி.

எரே 51:12 பாபிலோனின் மதில்கள்மேல் கொடியேற்றுங்கள், காவலைப் பலப்படுத்துங்கள், ஜாமங் காக்கிறவர்களை நிறுத்துங்கள், பதிவிருப்பாரை வையுங்கள்; ஆனாலும் கர்த்தர் எப்படி நினைத்தாரோ அப்படியே தாம் பாபிலோனின் குடிகளுக்கு விரோதமாகச் சொன்னதைச் செய்வார்.

எரே 51:13 திரளான தண்ணீர்களின் மேல் வாசம்பண்ணுகிறவளே, திரண்ட சம்பத்துடையவளே, உனக்கு முடிவும் உன் பொருளாசைக்கு ஒழிவும் வந்தது.

எரே 51:14 மெய்யாகவே, பச்சைக் கிளிகளைப் போல் திரளான மனுஷரால் உன்னை நிரம்பப் பண்ணுவேன்; அவர்கள் உன்மேல் ஆரவாரம் பண்ணுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டார்.

எரே 51:15 அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்.

எரே 51:16 அவர் சத்தமிடுகையில் திரளான தண்ணீர் வானத்தில் உண்டாகிறது; அவர் பூமியின் எல்லைகளிலிருந்து மேகங்களை எழும்பப் பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார்.

எரே 51:17 மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருக குணமானார்கள்; தட்டார் அனைவரும் சுரூபங்களாலே வெட்கிப் போகிறார்கள்; அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் சுவாசம் இல்லை.

எரே 51:18 அவைகள் மாயையும் மகா எத்துமான கிரியையாயிருக்கிறது; அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும்.

51 அதிகாரம்

தேவனுடைய மகத்துவம் (எரே 51:15-16)

1. அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கினார்.
2. பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்தார்.
3. வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்.
4. அவர் சத்தமிடுகையில் திரளான தண்ணீர் வானத்தில் உண்டாகிறது.
5. அவர் பூமியின் எல்லைகளிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணுகிறார்.
6. மழையுடனே மின்னல்களை உண்டாக்குகிறார்.
7. காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார்.

"அவைகள் மாயையும் மகா எத்துமான கிரியையாயிருக்கிறது" - விக்கிரகங்கள் மனுஷனுக்கு மாயையாகவும், மகா எத்துமான கிரியையாகவும் இருக்கிறது. (எரே 51:17-18).

(13) யாக்கோபின் பங்குவீதம்

எரே 51:19 யாக்கோபின் பங்காயிருக்கிறவர் அவைகளைப்போல அல்ல, அவர் சர்வத்தையும் உண்டாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

"யாக்கோபின் பங்காயிருக்கிறவர் அவைகளைப்போல அல்ல" - கர்த்தரே யாக்கோபின் பங்காயிருக்கிறவர். அவர் மனுஷருடைய கரங்களால் செய்யப்பட்ட விக்கிரகங்களைப்போலல்ல. அவர் சர்வ வல்லமையுள்ளவர். சகலத்தையும் சிருஷ்டித்தவர்.

(14) பாபிலோனைத் தண்டிப்பதற்கு கோரேஸ் தேவனுடைய கோல்

எரே 51:20 நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்; நான் உன்னைக் கொண்டு ஜாதிகளை நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன்.

எரே 51:21 உன்னைக்கொண்டு குதிரையையும், குதிரை வீரனையும் நொறுக்குவேன்; உன்னைக் கொண்டு இரதத்தையும் இரதவீரனையும் நொறுக்குவேன்.

எரே 51:22 உன்னைக்கொண்டு புருஷனையும் ஸ்திரீயையும் நொறுக்குவேன்; உன்னைக் கொண்டு கிழவனையும் இளைஞனையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு வாலிபனையும் கன்னிகையையும் நொறுக்குவேன்.

எரே 51:23 உன்னைக் கொண்டு மேய்ப்பனையும் அவனுடைய மந்தையையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு உழவனையும் அவனுடைய உழவு காளைகளையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு அதிபதிகளையும் அதிகாரிகளையும் நொறுக்குவேன்.

எரே 51:24 பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்தின் சகல குடிகளுக்கும், அவர்கள் உங்கள் கண்களுக்கு முன்பாகச் சீயோனில் செய்த அவர்களுடைய எல்லாப் பொல்லாப்புக்காகவும் பழி வாங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:25 இதோ, பூமியை எல்லாம் கெடுக்கிற கேடான பர்வதமே, நான் உனக்கு விரோதமாக வந்து, என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைக் கன்மலையிலிருந்து உருட்டி, உன்னை எரிந்துபோன பர்வதமாக்கிப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

51 அதிகாரம்

"நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்" - கர்த்தர் கோரேசை இவ்வாறு குறிப்பிடுகிறார். பாபிலோனைத் தண்டிப்பதற்காகவும், தம்முடைய ஜனங்களை அந்நிய தேசத்தின் சிறையிருப்பிலிருந்து விடுவித்து, பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்ப அழைத்து வருவதற்காகவும், கர்த்தர் கோரேசைத் தம்முடைய தண்டாயுதமாகவும், அஸ்திராயுதமாகவும் பயன்படுத்துகிறார். (ஏசா 44:28; ஏசா 45:1-4).

கோரேசு தேவனுக்காக செய்யும் காரியங்கள்

1. ஜாதிகள் (எரே 51:20)
2. ராஜ்யங்கள்
3. குதிரையையும், குதிரை வீரனையும் (எரே 51:21)
4. இரதத்தையும் இரதவீரனையும்
5. புருஷனையும் ஸ்திரீயையும் (எரே 51:22)
6. கிழவனையும் இளைஞனையும்
7. வாலிபனையும் கன்னிகையையும்
8. மேய்ப்பனையும் அவனுடைய மந்தையையும் (எரே 51:23)
9. உழவனையும் அவனுடைய உழவுகாளைகளையும்
10. அதிபதிகளையும் அதிகாரிகளையும்

"பழி வாங்குவேன்" - கல்தேயர்கள் சீயோனில் ஏராளமான பொல்லாப்புக்களைச் செய்தார்கள். இதற்காகக் கர்த்தர் கல்தேயரைப் பழிவாங்குவார். கர்த்தர் கோரேசிற்குக் கட்டளை கொடுத்து அவன் மூலமாக கல்தேயரைப் பழிவாங்குகிறார். இந்த வாக்கியம் கோரேசு மூலமாக நிறைவேறிற்று. (ஏசா 44:28; ஏசா 45:1-4).

"கெடுக்கிற கேடான பர்வதமே.....உன்னை எரிந்துபோன பர்வதமாக்கிப் போடுவேன்" - நேபுகாத்நேச்சார் இங்கு கெடுக்கிற கேடான பர்வதமாகக் கூறப்பட்டிருக்கிறான். இவன் மற்றவர்களை அழித்தான். இப்போது இவனே அழிந்துபோய்விட்டான். ஆகையினால் இவன் எரிந்துபோன பர்வதமாக்கப்பட்டிருக்கிறான்.

(15) பாபிலோன் நித்தியமாக அழிக்கப்படும் - (ஏசா 13:19-22; வெளி 18)

> எரே 51:26 மூலைக்கல்லுக்காகிலும் அஸ்திபாரக்கல்லுக்காகிலும் ஒரு கல்லையும் உன்னிலிருந்து எடுக்க மாட்டார்கள்; நீ என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நீ என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாவாய்" - இந்த வாக்கியம் இன்னும் நிறைவேறவில்லை. ஏழாம் கலசத்தின்போது உண்டாகும் அழிவில் இது நிறைவேறும். (வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24). பழங்கால பாபிலோன் நகரத்திலிருந்து கற்களைப் பெயர்த்தெடுத்து, அருகிலுள்ள ஊர்களில் ஜனங்கள் தங்கள் வீடுகளைக் கட்டினார்கள். வருங்காலத்து பாபிலோன் சோதோமைப் போல அழிக்கப்படும். (எரே 50:40) அப்போது பாபிலோன் என்றென்றைக்கும் பாழாய்க் கிடக்கிற ஸ்தலமாக ஆகும். அழிந்துபோன பாபிலோனிலிருந்து யாரும் கற்களையெடுத்து, கட்டிடங்களைக் கட்டமாட்டார்கள்.

(16) உடனடி நியாயத்தீர்ப்பு

> எரே 51:27 தேசத்திலே கொடியேற்றுங்கள்; ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதுங்கள்; ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்; ஆரராத், மின்னி, அஸ்கெனாஸ் என்னும் ராஜ்யங்களை அதற்கு விரோதமாக வரக்கூப்பிடுங்கள்; அதற்கு விரோதமாகத் தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள்; சுணையுள்ள வெட்டுக்கிளிகள்போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள்.

51 அதிகாரம்

எரே 51:28 மேதியாதேசத்தின் ராஜாக்களும் அதின் தலைவரும் அதின் சகல அதிகாரிகளும் அவரவருடைய ராஜ்யபாரத்துக்குக் கீழான சகல தேசத்தாருமாகிய ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்.

எரே 51:29 அப்பொழுது தேசம் அதிர்ந்து வேதனைப்படும்; பாபிலோன் தேசத்தைக் குடியில்லாதபடிப் பாழாக்க, பாபிலோனுக்கு விரோதமாய்க் கர்த்தர் நினைத்தவைகள் நிலைக்கும்.

எரே 51:30 பாபிலோனின் பராக்கிரம சாலிகள் யுத்தம் பண்ணாமல், கோட்டைகளில் இருந்துவிட்டார்கள்; அவர்கள் பராக்கிரமம் அழிந்து பேடிகளானார்கள்; அதின் வாசஸ்தலங்களைக் கொளுத்திப் போட்டார்கள்; அதின் தாழ்ப்பாள்கள் உடைக்கப்பட்டது.

எரே 51:31 கடையாந்தர முனைதுவக்கி அவனுடைய பட்டணம் பிடிபட்டது என்றும், துறைவழிகள் அகப்பட்டுப் போய், நாணல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப் பட்டது என்றும், யுத்த மனுஷர் கலங்கியிருக்கிறார்கள் என்றும் பாபிலோன் ராஜாவுக்கு அறிவிக்க,

எரே 51:32 அஞ்சற்காரன்மேல் அஞ்சற்காரனும் தூதன்மேல் தூதனும் ஓடுகிறான்.

எரே 51:33 பாபிலோன் குமாரத்தி மிதிக்கப்படுங் களத்துக்குச் சமானம்; அதைப் போரடிக்குங் காலம் வந்தது; இன்னும் கொஞ்சக்காலத்திலே அறுப்புக் காலம் அதற்கு வரும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

“தேசத்திலே கொடியேற்றுங்கள்” - மேதிய-பெர்சிய தேசத்தாரால் பாபிலோன் சடிதியாக அழியும் என்னும் அறிவிப்பு எரே 51:27-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

“பாபிலோனின் பராக்கிரமசாலிகள் யுத்தம் பண்ணாமல்” - பாபிலோனியர் பலவீனமானார்கள். மேதிய-பெர்சிய தேசத்தாரின் வல்லமையைக் கேள்விப்பட்டு, பயப்படுகிறார்கள். அவர்களோடு யுத்தம் பண்ணாமல், பாபிலோனியர் தங்கள் கோட்டைகளிலேயே இருந்துவிடுகிறார்கள். (எரே 51:30-32). இந்தப் பயம் தேவனுடைய கிரியையினால் பாபிலோனியரிடத்தில் உண்டாயிற்று.

“துறைவழிகள் அகப்பட்டுப் போய், நாணல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது” - கோரேசு ராஜா பாபிலோன் நகரத்தைப் பிடிக்கிறான். ஐப்பிராத்து நதியின் வழியாக படகுகளில் வந்து, துறைவழிகளைக் கைப்பற்றுகிறான். நாணல்கள் பாபிலோனுக்குப் பாதுகாப்பாக வளர்ந்திருக்கின்றன. கோரேசு அந்த நாணல்களையெல்லாம் அக்கினியினால் சுட்டெரித்து விடுகிறான். இதனால் ஐப்பிராத்து நதியிலிருந்தவாறே கோரேசுவினாலும், அவனுடைய சேனையினாலும் பாபிலோன் நகரத்தை எல்லா திசைகளிலுமிருந்தும் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

“அஞ்சற்காரன்மேல் அஞ்சற்காரனும் தூதன்மேல் தூதனும் ஓடுகிறான்” - பாபிலோன் நகரத்தின் அரமனை வலுவான கோட்டைகளுக்கு நடுவில் நகரத்தின் மையத்தில் அமைந்துள்ளது. மேதிய-பெர்சிய தேசத்து சேனைகள் பாபிலோனின் துறைவழிகள் வழியாக வருவதை அஞ்சற்காரர்களும், தூதர்களும் அரமனையிலுள்ளவர்களுக்கு அறிவிக்க ஓடுகிறார்கள்.

“பாபிலோன் குமாரத்தி மிதிக்கப்படுங் களத்துக்குச் சமானம்” - களத்தில் அறுவடை செய்த தானியத்தைப் போரடிப்பார்கள். பாபிலோன் தேசம் போரடிக்கப்படும் களத்தைப் போலிருக்கிறது. அதன்மீது நியாயத்தீர்ப்பு வருகிறது.

51 அதிகாரம்

(17) இஸ்ரவேலின் முறையிடு

எரே 51:34 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னைப் பட்சித்தான், என்னைக் கலங்கடித்தான், என்னை வெறும் பாத்திரமாக வைத்துப்போனான்; வலுசர்ப்பம்போல என்னை விழுங்கி, என் சுவையுள்ள பதார்த்தங்களால் தன் வயிற்றை நிரப்பினான், என்னைத் துரத்திவிட்டான்.

எரே 51:35 எனக்கும் என் இனத்தாருக்கும் செய்த கொடுமையின் பழி பாபிலோன் மேல் வரக்கடவதென்று சீயோனில் வாசமானவள் சொல்லுகிறாள்; என் இரத்தப்பழி கல்தேயர் தேசத்துக் குடிகளின்மேல் வரக்கடவதென்று எருசலேம் என்பவளும் சொல்லுகிறாள்.

"பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னைப் பட்சித்தான்" - இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் ராஜாவைப் பிடித்து, முறையிடுகிறார்கள். எரே 51:34 ஆவது வசனத்தில் "என்னைப் பட்சித்தான்" என்று ஒருமையில் கூறப்பட்டிருப்பது, எரே 51:35 ஆவது வசனத்தில் "எனக்கும் என் இனத்தாருக்கும்" என்று பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. நேபுகாத்நேச்சார் இஸ்ரவேல் ஜனத்தாரை வெறும் பாத்திரமாக வைத்துப் போனான். பாலஸ்தீன தேசத்திலிருந்து அவர்களுடைய பொக்கிஷங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு, இஸ்ரவேலரைத் துரத்திவிட்டான். (எரே 51:34-35). இந்த அநியாயத்திற்காகக் கர்த்தர் பாபிலோனைத் தண்டிப்பதாக வாக்குப் பண்ணுகிறார். (எரே 51:36-44).

(18) தேவன் இஸ்ரவேலைப் பழிவாங்குகிறார்

எரே 51:36 ஆகையால் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் உனக்காக வழக்காடி, உன் பழிக்குப் பழிவாங்கி, அதின் கடலை வறளவும் அதின் ஊற்றைச் சுவறவும் பண்ணுவேன்.

எரே 51:37 அப்பொழுது பாபிலோன் குடியில்லாத மண்மேடுகளும், வலுசர்ப்பங்களின் தாபரமும், பாழும், ஈசல்போடப்படுதலுக்கு இடமுமாய்ப் போகும்.

எரே 51:38 ஏகமாய் அவர்கள் சிங்கங்களைப் போலக் கெர்ச்சித்து, சிங்கக்குட்டிகளைப்போலச் சத்தமிடுவார்கள்.

எரே 51:39 அவர்கள் களிக்கும் சமயத்திலே நான் அவர்கள் குடிக்கும் பானத்தை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்து அவர்கள் துள்ளத்தக்கதாக அவர்களை வெறியாக்குவேன்; அதினால் அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத நித்திரை அடைவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:40 அவர்களை ஆட்டுக் குட்டிகளைப் போலவும், ஆட்டுக்கடாக்களைப் போலவும், வெள்ளாட்டுக்கடாக்களைப் போலவும் அடிக்கப்பட இறங்கிப் போகப் பண்ணுவேன்.

எரே 51:41 சேசாக்கு பிடியுண்டு, பூமிமுழுதும் புகழும் புகழ்ச்சி அகப்பட்டது எப்படி? ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் பிரமிப்பானது எப்படி?

எரே 51:42 சமுத்திரம் பாபிலோன்மேல் புரண்டுவந்தது; அதின் அலைகளின் திரட்சியினால் அது மூடப்பட்டது.

எரே 51:43 அதின் பட்டணங்கள் பாழுமாய், வறட்சியும் வனாந்தரமுமான பூமியுமாய், ஒரு மனுஷனும் குடியிராததும் ஒரு மனுபுத்திரனும் கடவாததுமான நிலமுமாய்ப்போயிற்று.

எரே 51:44 நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன்; அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்; ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும்.

"சேசாக்கு" (Sheshach) - பாபிலோனின் அடையாளப்பெயர். (எரே 50:21).

51 அதிகாரம்

(19) பாபிலோனை விட்டு வெளியேறுமாறு கட்டளை

எரே 51:45 என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள்; கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பும்படி அவனவன் தன்தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ளக்கடவன்.

எரே 51:46 உங்கள் இருதயம் துவளாமலும், தேசத்தில் கேட்கப்படும் செய்தியினால் நீங்கள் பயப்படாமலும் இருங்கள்; ஒரு வருஷத்திலே ஒரு செய்தி கேட்கப்பட்டு, பின்பு மறுவருஷத்திலே வேறு செய்தி கேட்கப்படும்; தேசத்திலே கொடுமை உண்டாகும்; ஆளுகிறவன் மேல் ஆளுகிறவன் வருவான்.

"என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள்" - பாபிலோனின் நடுவிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் புறப்பட்டுப் போகவேண்டுமென்று நான்காம் முறையாகக் கட்டளையிடுகிறார். இதனால் அவர்கள் பாபிலோனுக்கு வரும் நியாயத்தீர்ப்பில் பங்குபெறாமல் தப்பித்துக் கொள்வார்கள். (எரே 51:45-46; எரே 51:6,9,45,50; எரே 50:8).

"தேசத்தில் கேட்கப்படும் செய்தியினால் நீங்கள் பயப்படாமலும் இருங்கள்" - பாபிலோன் வீழ்வதற்கு முன்பாக தேசத்தில் பலவிதமான செய்திகள் உண்டாயிற்று. உள்நாட்டுக் கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. என்ன செய்திகள் வந்தாலும், கர்த்தருடைய சித்தமே நிறைவேறும்.

(20) காரணம் - நியாயத்தீர்ப்பு

எரே 51:47 ஆகையால், இதோ, நான் பாபிலோனின் விக்கிரகங்களை தண்டிக்கும் நாட்கள் வரும், அப்பொழுது அதின் தேசம் எல்லாம் கலங்கும்; அதில் கொலையுண்கிற யாவரும் அதின் நடுவில் விழுந்துகிடப்பார்கள்.

எரே 51:48 வானமும் பூமியும் அவைகளிலுள்ள யாவும் பாபிலோன்மேல் கெம்பீரிக்கும்; பாழ்க்கடிக்கிறவர்கள் அதற்கு வடக்கேயிருந்து வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;

எரே 51:49 பாபிலோன் இஸ்ரவேலில் கொலையுண்டவர்களை விழப் பண்ணினது போல, பாபிலோனிலும் சமஸ்த தேசங்களிலும் கொலையுண்கிறவர்கள் விழுவார்கள்.

"நான் பாபிலோனின் விக்கிரகங்களை தண்டிக்கும் நாட்கள் வரும்" - ஒரு காலத்தில் எருசலேம் பாபிலோன் கையில் சிக்கி அழிந்தது. அதுபோல பாபிலோன் கர்த்தருடைய கையில் சிக்கி அழியும். (எரே 51:47-49).

(21) சீயோனுக்கு திரும்புமாறு கட்டளை

எரே 51:50 பட்டயத்துக்குத் தப்பினவர்களே, தங்கித்தரியாமல் நடந்துவாருங்கள்; தூரத்திலே கர்த்தரை நினையுங்கள்; எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது.

எரே 51:51 நிந்தையைக் கேட்டதினால் வெட்கப்பட்டோம்; கர்த்தருடைய ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலங்களின்மேல் அந்நியர் வந்ததினால் நாணம் நம்முடைய முகங்களை மூடிற்று.

"எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது" - கோரேசு ராஜா யூதர்களை விடுவிப்பான். அப்போது எருசலேம் அவர்களுடைய ஞாபகத்திற்கு வரவேண்டும். இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் பாபிலோன் தேசத்திலிருந்து பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். (எரே 51:6,9,45,50; எரே 50:8; எஸ்றா 1:1-2).

51 அதிகாரம்

(22) காரணம் - பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு - சிறையிருப்பு முடிந்தது - (25:11-14)

எரே 51:52 ஆகையால், கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் அதின் விக்கிரகங்களுக்கு விரோதமாய் விசாரிக்கும் நாட்கள் வரும்; அப்பொழுது அதின் தேசமெங்கும் கொலையுண்கிறவர்கள் கத்துவார்கள்.

எரே 51:53 பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும், அது தன் பலமான அரணை உயர்த்தினாலும், அதைப் பாழாக்குகிறவர்கள் என்னிடத்திலிருந்து வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:54 பாபிலோனிலிருந்து கூக்குரலின் சத்தமும், கல்தேயர் தேசத்திலிருந்து மகா சங்காரமும் கேட்கப்படும்.

எரே 51:55 கர்த்தர் பாபிலோனைப் பாழாக்கி அதிலுள்ள பெரிய சத்தத்தை ஒழியப்பண்ணுவார்; அவர்களுடைய அலைகள் திரளான தண்ணீர்களைப் போல இரையும், அவர்களுடைய சத்தம் அமளியாயிருக்கும்.

எரே 51:56 பாபிலோனைப் பாழாக்குகிறவன் அதின்மேல் வருகிறான்; அதின் பராக்கிரமசாலிகள் பிடிபடுவார்கள்; அவர்களுடைய வில்லுகள் முறிந்துபோகும்; சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர் நிச்சயமாகப் பதில் அளிப்பார்.

எரே 51:57 அதின் பிரபுக்களையும் அதின் ஞானிகளையும் அதின் தலைவரையும் அதின் அதிகாரிகளையும் அதின் பராக்கிரமசாலிகளையும் வெறிக்கப் பண்ணுவேன்; அப்பொழுது அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத தூக்கமாய்த் தூங்கி விழுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா சொல்லுகிறார்.

எரே 51:58 பாபிலோனின் விஸ்தீரணமான மதில்கள் முற்றிலும் தரையாக்கப்பட்டு, அதின் உயரமான வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்; அப்படியே ஜனங்கள் பிரயாசப்பட்டது விருதாவும், ஜாதிகள் வருத்தப்பட்டுச் சம்பாதித்தது அக்கினிக்கு இரையுமாகுமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

“நான் அதின் விக்கிரகங்களுக்கு விரோதமாய் விசாரிக்கும் நாட்கள் வரும்” - பாபிலோன் இஸ்ரவேலை எரே 51:34-35,50-51 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் ஒடுக்கினார்கள். அதற்காகக் கர்த்தர் பாபிலோனை விசாரிப்பார். (எரே 51:52-58).

“பாபிலோனின் விஸ்தீரணமான மதில்கள் முற்றிலும் தரையாக்கப்பட்டு” - பாபிலோனின் மதில்கள் 75 அடி அகலமும், 300 அடி உயரமும் கொண்டது. பாபிலோன் நகரத்தில் ஒவ்வொரு திசையிலும் 25 வெண்கல வாசல்கள் இருந்தன.

(23) புஸ்தகத்தின் அடையாளம்

எரே 51:59 பாபிலோன்மேல் வரும் எல்லாத் தீங்கையும், பாபிலோனுக்கு விரோதமாக எழுதப்பட்ட இந்த எல்லா வசனங்களையும் எரேமியா ஒரு புஸ்தகத்தில் எழுதினான்.

எரே 51:60 யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா ராஜ்யபாரம்பண்ணும் நாலாம் வருஷத்திலே பாபிலோனுக்குப் போன சமயத்தில் அவனோடே கூடப்போன மசெயாவின் மகனாகிய நேரியாவின் குமாரனும் சாந்தகுணமுள்ள பிரபுவுமாகிய செராயாவுக்கு எரேமியா தீர்க்கதரிசி கற்பித்த வார்த்தை.

எரே 51:61 எரேமியா செராயாவை நோக்கி: நீ பாபிலோனுக்கு வந்தபின்பு நீ இதைப் பார்த்து, இந்த எல்லா வசனங்களையும் வாசித்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால்:

எரேமியா - தொகுப்புரை

51 அதிகாரம்

எரே 51:62 கர்த்தாவே, இந்த ஸ்தலத்திலே மனுஷனும் மிருகமுமுதலாய்த் தங்கித் தரிக்காதபடிக்கும், அது என்றென்றைக்கும் பாழாய்க் கிடக்கும் படிக்கும், அதை அழித்துப்போடுவேன் என்று தேவரீர் அதைக்குறித்து உரைத்தீர் என்பதை நீசொல்லி,

"பாபிலோனுக்கு விரோதமாக எழுதப்பட்ட இந்த எல்லா வசனங்களையும்" - பாபிலோனுக்கு எதிராகக் கூறப்பட்ட எல்லா வசனங்களையும் எரேமியா ஒரு புஸ்தகத்தில் எழுதினார். அதை செராயாவின் கையில் கொடுத்து, பாபிலோன் நகரத்திற்கு அனுப்பினான். பாபிலோனில் சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு இதிலுள்ள முன்னறிவிப்புகளை வாசித்துக் காண்பிக்குமாறு எரேமியா செராயாவிடம் கூறியிருக்கிறார். (2இராஜா 51:60-61). இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை செராயா வாசித்த பின்பு, எரே 51:62 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஜெபத்தையும் அவன் ஏறெடுக்க வேண்டும். (2இராஜா 51:62) அதன் பின்பு அந்தப் புஸ்தகத்தில் ஒரு கல்லைக் கட்டி, அதை ஐப்பிராத்து நதியின் நடுவில் எறிந்துவிட வேண்டும். அந்தப் புஸ்தகம் நதியில் முழுகிப்போகும். அதுபோலவே பாபிலோன் முழுகிப்போகும். மறுபடியும் ஒரு தேசமாக எழும்பிவராது. (எரே 51:63-64).

"சிதேக்கியா ராஜ்யபாரம்பண்ணும் நாலாம் வருஷத்திலே" - செராயா சிதேக்கியாவோடு பாபிலோனிற்குப் போனான். அங்கு அந்த தேசத்தோடு உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டான். சிதேக்கியா யூதாவிற்குத் திரும்பி வந்தவுடன் தான் செய்த உடன்படிக்கையை முறித்துப்போட்டு, பாபிலோன் ராஜாவிற்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். (2இராஜா 24:17-20).

"மசெயாவின் மகனாகிய நேரியாவின் குமாரனும் சாந்தகுணமுள்ள பிரபுவுமாகிய செராயா" - இவன் பாருக்கின் சகோதரன். எரேமியாவின் சம்பிரதி. நேபுகாத்நேச்சாரைச் சந்தித்து, உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்வதற்காகச் சிதேக்கியா ராஜாவோடு இவனும் பாபிலோனுக்குப் போனான். (எரே 27:1; எரே 28:1).

(24) முக்கியத்துவம் - பாபிலோனின் வீழ்ச்சி

எரே 51:63 நீ இந்தப் புஸ்தகத்தை வாசித்துத் தீர்ந்தபோது, அதிலே ஒரு கல்லைக் கட்டி, அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்துவிட்டு,

எரே 51:64 இப்படியே பாபிலோன் முழுகிப் போகும், நான் அதின்மேல் வரப்பண்ணும் தீங்கினால் எழுந்திருக்க மாட்டாமல் இளைத்து விழுவார்கள் என்றார் என்று சொல்லுவாயாக என்றான். எரேமியாவின் வசனங்கள் இவ்வளவோடே முடிந்தது.

52 அதிகாரம்

X. யூதாவின் சிறையிருப்பு - (52:1-34; 39:1-18; 2இராஜா 25; 2நாளா 36)

1. யூதாவின் கலகம்

எரே 52:1 சிதேக்கியா ராஜாவாகிற போது இருபத்தொரு வயதாயிருந்தான்; அவன் பதினொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம் பண்ணினான்; அவனுடைய தாயின் பேர் அமூத்தாள், அவள் லீப்னாஊரானாகிய எரேமியாவின் குமாரத்தி.

எரே 52:2 யோயாக்கீம் செய்த படியெல்லாம் அவனும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்.

எரே 52:3 எருசலேமையும் யூதாவையும் கர்த்தர் தம்முடைய சமுகத்தைவிட்டு அகற்றித் தீருமளவும், அவைகளின் மேலுள்ள அவருடைய கோபத்தினால் இப்படி நடந்ததும் அல்லாமல், சிதேக்கியா பாபிலோனிலே ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்.

"சிதேக்கியா" - எரே 52 ஆம் அதிகாரத்தில் எரேமியா புஸ்தகத்திற்கு ஒரு வரலாற்றுப் பின்னிணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எருசலேம் நகரம் பிடிக்கப்பட்ட சம்பவம் எரே 39 ஆவது அதிகாரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் கூடுதல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எரே 51:64 ஆவது வசனத்தில் "எரேமியாவின் வசனங்கள் இவ்வளவோடே முடிந்தது" என்று எழுதப் பட்டிருப்பதினால் எரே 52 ஆவது அதிகாரத்தை எரேமியா எழுதவில்லை என்பது தெரிய வருகிறது. (2இராஜா 24:17-25:30) இஸ்ரவேலின் வரலாற்று ஆவணங்களைப் பத்திரமாக வைத்திருந்த ஒருவர் இந்த அதிகாரத்தை எழுதியிருக்க வேண்டும். நேபுகாத்நேச்சாரால் சிறைபிடித்துச் செல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையும் இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. (எரே 52:28-30).

"அவன் பதினொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம் பண்ணினான்" - சிதேக்கியா ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்தபோது, அவனுக்கு 21 வயது. அவன் எருசலேமில் பதினொரு வருஷம் ஆட்சி புரிந்தான். இவனே யூதாவின் கடைசி ராஜா. எரே 52:1). ஓசியா 135 வருஷங்களுக்கு முன்பு, முன்னறிவித்த தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறுகிறது. "இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலி இல்லாமலும், சிலை இல்லாமலும், ஏபோத் வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும் இருப்பார்கள்." (ஓசி 3:4).

இஸ்ரவேலின் அடுத்த ராஜா இயேசு கிறிஸ்து. அவர் தமது இரண்டாம் வருகையில் இஸ்ரவேலின் ராஜாவாக ஆட்சி புரிவார். சிதேக்கியாவின் காலத்திலிருந்து இயேசு கிறிஸ்து இஸ்ரவேலை ஆளுகை செய்யும் நாள்வரையிலும் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகை செய்வதற்கு முறைப்படியான ராஜவம்சத்தைச் சேர்ந்தவர் யாரும் இருக்க மாட்டார்கள். கோனியாவின் காலத்திலும் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர் யாருமில்லை. இயேசு கிறிஸ்து யோசேப்பின் மூலமாகவும், மரியாளின் மூலமாகவும், தாவீதின் வம்சத்தில் வருகிறார். யோசேப்பிற்கு வரும் ராஜவம்சம் இயேசு கிறிஸ்துவிற்கு கடந்து வருகிறது. அவர் மறுபடியும் வரும்போது தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து, தாவீதின் ராஜ்யத்தை நித்தியமாக ஸ்தாபிப்பார். (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; அப் 15:13-18; வெளி 11:15; வெளி 20:1-10).

"கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்" - இஸ்ரவேலின் ராஜாக்களும், யூதாவின் ராஜாக்களும் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்தார்கள். (எரே 52:2-3). இதற்காக யூதாவும், எப்பிராயீமும் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போனார்கள்.

2. எருசலேமின் வீழ்ச்சி

எரே 52:4 அவன் ராஜ்யபாரம் பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிராகப் பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள்.

52 அதிகாரம்

எரே 52:5 அப்படியே சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் நகரம் முற்றிக்கை போடப்பட்டிருந்தது.

எரே 52:6 நாலாம் மாதம் ஒன்பதாம் தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்துக்கு ஆகாரமில்லாமல் போயிற்று.

எரே 52:7 நகரத்தின் மதில் இடிக்கப் பட்டது; அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையில், யுத்தமனுஷர் எல்லாரும் இராத்திரிகாலத்தில் ஓடி, ராஜாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கும் நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டு, வயல் வெளியின் வழியே போய்விட்டார்கள்.

"அவன் ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம்" - இந்த வருஷத்தில் யூதா பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணிற்று. எருசலேம் நகரம் பிடிக்கப்பட்டது. கலகம் ஒடுக்கப்பட்டது. (எரே 52:4-6). நகரத்தில் பஞ்சம் அதிகரித்தது. யுத்த மனுஷர் நகரத்தை விட்டு ஓடிப்போனார்கள். நேபுகாத்நேச்சாரின் இராணுவத்தினர் அவர்களைப் பிடித்து, சிறையிருப்புக்கு உட்படுத்தினார்கள். (எரே 52:7-11; 2இராஜா 25).

3. சிதேக்கியாவின்மீது நியாயத்தீர்ப்பு

- (39:4-7; 2இராஜா 24:5-7)

எரே 52:8 ஆனாலும் கல்தேயருடைய இராணுவத்தார் ராஜாவைப் பின்தொடர்ந்து, எரிகோவின் சமனான பூமியில் சிதேக்கியாவைக் கிட்டினார்கள்; அப்பொழுது அவனுடைய இராணுவத்தார் எல்லாரும் அவனைவிட்டுச் சிதறிப் போயிருந்தார்கள்.

எரே 52:9 அவர்கள் ராஜாவைப் பிடித்து, அவனை ஆமாத்தேசத்தின் ஊராகிய ரிப்லாவுக்குப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரிடத்துக்குக் கொண்டு போனார்கள்; அங்கே இவனுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுத்தான்.

எரே 52:10 பின்பு பாபிலோன் ராஜா சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான்; யூதாவின் பிரபுக்களெல்லாரையும் ரிப்லாவிலே வெட்டினான்.

எரே 52:11 சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவனுக்கு இரண்டு விலங்குகளைப் போடுவித்தான்; பின்பு பாபிலோன் ராஜா அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோய், அவன் மரணமடையும் நாள்மட்டும் அவனைக் காவல் வீட்டில் அடைத்துவைத்தான்.

சிதேக்கியாவிற்குக் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு

1. பாபிலோன் ராஜா சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாகவெட்டினான்(2இராஜா 52:10).
2. யூதாவின் பிரபுக்களெல்லாரையும் ரிப்லாவிலே வெட்டினான்.
3. சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கினான். (2இராஜா 52:11).
4. அவனுக்கு இரண்டு விலங்குகளைப் போடுவித்தான்.
5. பாபிலோன் ராஜா அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்.
6. அவன் மரணமடையும் நாள்மட்டும் அவனைக் காவல் வீட்டில் அடைத்து வைத்தான்.
7. நேபுசராதான் என்னும் காவற்சேனாதிபதி கர்த்தருடைய ஆலயத்தைச் சுட்டெரித்துப் போட்டான். (2இராஜா 52:13).
8. ராஜாவின் அரமனையைச் சுட்டெரித்துப் போட்டான்.
9. எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும் சுட்டெரித்துப்போட்டான்.
10. ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான்.

52 அதிகாரம்

11. காவற் சேனாதிபதியோடிருந்த கல்தேயரின் இராணுவத்தாரெல்லாரும் எருசலேமைச் சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப்போட்டார்கள். (2 இராஜா 52:14).

12. தேசத்தாரில் ஏழைகளான சிலரைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் திராட்சத் தோட்டக்காரராகவும் பயிரிடுங் குடிகளாகவும் விட்டுவைத்தான். மற்ற ஜனங்களைச் சிறைகளாகக் கொண்டு போனான். (2 இராஜா 52:16).

13. கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வெண்கலத் தூண்களையும், ஆதாரங்களையும், வெண்கலக் கடல் தொட்டியையும் கல்தேயர் உடைத்துப் போட்டு, அவைகளின் வெண்கலத்தையெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். (2 இராஜா 52:17-18).

14. பசும்பொன்னும் சுத்த வெள்ளியுமான கிண்ணங்களையும், தூபகலசங்களையும், கலங்களையும், சட்டிகளையும், விளக்குத் தண்டுகளையும், கலயங்களையும், கரகங்களையும் காவற்சேனாதிபதி எடுத்துக் கொண்டான். (2 இராஜா 52:19).

4. எருசலேம் அழிக்கப்பட்டது

எரே 52:12 ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்கிறவனாகிய காவற்சேனாதிபதியான நேபுசராதான் எருசலேமுக்கு வந்தான்; அது நேபுகாத்நேச்சார்என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது.

எரே 52:13 அவன் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான்.

எரே 52:14 காவற் சேனாதிபதியோடிருந்த கல்தேயரின் இராணுவத்தாரெல்லாரும்எருசலேமைச் சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப்போட்டார்கள்.

5. யூதாவின் கடைசி சிறையிருப்பு

எரே 52:15 ஜனத்தில் ஏழைகளான சிலரையும் நகரத்தில் மீதியான மற்ற ஜனத்தையும், பாபிலோன் ராஜாவின் வசமாக ஓடிவந்துவிட்டவர்களையும், மற்ற ஜனங்களையும் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் சிறைகளாகக் கொண்டுபோனான்.

6. ஒரு சிலர் மீதியாக வைக்கப்பட்டார்கள் - (ஏசா 1:9)

எரே 52:16 ஆனால் தேசத்தாரில் ஏழைகளான சிலரைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் திராட்சத் தோட்டக்காரராகவும் பயிரிடுங்குடிகளாகவும் விட்டு வைத்தான்.

7. தேவாலயத்தின் பொக்கிஷங்களை எடுத்துச் சென்றார்கள் - (27:18-22)

எரே 52:17 கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வெண்கலத் தூண்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த ஆதாரங்களையும், வெண்கலக் கடல் தொட்டியையும் கல்தேயர் உடைத்துப் போட்டு, அவைகளின் வெண்கலத்தையெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்.

எரே 52:18 செப்புச்சட்டிகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், வெட்டுக் கத்திகளையும், கலசங்களையும், கலயங்களையும், ஆராதனைக்குரிய சகல வெண்கலப்பணி முட்டுகளையும் எடுத்துக் கொண்டு போனார்கள்.

52 அதிகாரம்

எரே 52:19 பசும்பொன்னும் சுத்த வெள்ளியுமான கிண்ணங்களையும், தூபகலசங்களையும், கலங்களையும், சட்டிகளையும், விளக்குத் தண்டுகளையும், கலயங்களையும், கரகங்களையும் காவற்சேனாதிபதி எடுத்துக்கொண்டான்.

எரே 52:20 சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்து வைத்த இரண்டு தூண்களும் ஒரு கடல் தொட்டியும் ஆதாரங்களின் கீழ்நின்ற பன்னிரண்டு வெண்கல ரிஷபங்களும் ஆகிய இவைகளுக்குரிய வெண்கலத்துக்கு நிறையில்லை.

எரே 52:21 அந்தத் தூண்களோவெனில், ஒவ்வொரு தூண் பதினெட்டுமுழ உயரமாயிருந்தது; பன்னிரண்டு முழ நூல் அதைச் சுற்றும்; நாலு விரற்கடை அதின் கனம்; உள்ளே குழாயாயிருந்தது.

எரே 52:22 அதின்மேல் வெண்கலக் குமிழ் இருந்தது; ஒரு குமிழின் உயரம் ஐந்து முழம், குமிழிலே சுற்றிலும் பின்னலும் மாதளம்பழங்களும் செய்திருந்தது; எல்லாம் வெண்கலமாயிருந்தது; அதற்குச் சரியாய் மற்றத் தூணுக்கும் மாதளம்பழங்களும் செய்திருந்தது.

எரே 52:23 தொண்ணூற்றாறு மாதளம் பழங்கள் நான்கு திசைகளுக்கும் எதிராகச் செய்திருந்தது; குமிழைச் சுற்றிலும் செய்திருந்த மாதளம்பழங்கள் நூறு.

"குமிழைச் சுற்றிலும் செய்திருந்த மாதளம்பழங்கள் நூறு" - (2நாளா 3:16; 2நாளா 4:13=1இராஜா 7:20)

8. ஆசாரியர்களையும் பிரபுக்களையும் வெட்டிக் கொன்று போட்டார்கள்

எரே 52:24 காவற்சேனாதிபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசற்படியின் மூன்று காவற்காரரையும் பிடித்துக்கொண்டு போனான்.

எரே 52:25 நகரத்திலோவென்றால் அவன் யுத்த மனுஷரின் விசாரிப்புக் காரனாகிய பிரதானி ஒருவனையும், ராஜாவின் மந்திரிகளில் நகரத்தில் அகப்பட்ட ஏழுபேரையும், தேசத்தின் ஜனத்தைச் சேவகம் எழுதுகிற தலைமையான சம்பிரதியையும், தேசத்து ஜனத்திலே பட்டணத்தின் நடுவில் அகப்பட்ட அறுபது பேரையும் பிடித்துக் கொண்டு போனான்.

எரே 52:26 அவர்களைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் பிடித்து, அவர்களை ரிப்லாவுக்குப் பாபிலோன் ராஜாவினிடத்திற்குக் கொண்டுபோய்விட்டான்.

எரே 52:27 அப்பொழுது பாபிலோன் ராஜா ஆமாத் என்னும் தேசத்தின் பட்டணமாகிய ரிப்லாவிலே அவர்களை வெட்டிக் கொன்றுபோட்டான்; இவ்விதமாக யூதர்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறைகளாய்க் கொண்டு போகப்பட்டார்கள்.

"அவர்களை வெட்டிக்கொன்றுபோட்டான்" - நகரத்தில் விட்டு வைக்கப்பட்ட ஆசாரியரும், பெரிய மனிதர்களும் கொல்லப்பட்டார்கள். இதனால் எரே 38:2-3,17-23 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. (எரே 52:24-27).

9. நாட்டை விட்டு மூன்று வெளியேற்றங்கள்

எரே 52:28 நேபுகாத்நேச்சார் சிறை பிடித்துப்போன ஜனங்களின் தொகை எவ்வளவென்றால், ஏழாம் வருஷத்தில் மூவாயிரத்து இருபத்துமூன்றுயூதரும்,

52 அதிகாரம்

எரே 52:29 நேபுகாத்நேச்சாருடைய பதினெட்டாம் வருஷத்தில் எருசலேமிலிருந்து எண்ணூற்று முப்பத்திரண்டு பேர்களும் கொண்டு போகப்பட்டார்கள்.

எரே 52:30 நேபுகாத்நேச்சாருடைய இருபத்துமூன்றாம் வருஷத்தில் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் யூதரில் எழுநூற்று நாற்பத்தைந்து பேர்களைச் சிறைபிடித்துக்கொண்டு போனான்; ஆக நாலாயிரத்து அறுநூறு பேர்களாம்.

பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன சம்பவங்கள்

1. நேபுகாத்நேச்சாரின் ஏழாம் வருஷத்தில் = 3023 யூதர்கள்
2. நேபுகாத்நேச்சாருடைய 18 ஆம் வருஷத்தில் = 832 பேர்
3. நேபுகாத்நேச்சாருடைய 23 ஆம் வருஷத்தில் = 745 யூதர்கள்

ஆக மொத்தம் = 4,600 பேர்

10. யோயாக்கீனின் பிந்தைய நாட்கள் - (2இராஜா 25:27-30)

எரே 52:31 யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தைந்தாம் தேதியிலே, ஏவில்மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிருந்து வெளிப்படப் பண்ணி, அவன் தலையை உயர்த்தி,

எரே 52:32 அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய ஆசனத்தைத் தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக்களுடைய ஆசனங்களுக்கு மேலாகவைத்து,

எரே 52:33 அவனுடைய சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் தன் சமுகத்தில் நித்தம் போஜனம்பண்ணும்படி செய்தான்.

எரே 52:34 அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுடைய மரணநாள் பரியந்தமும், அவனுடைய செலவுக்காகப் பாபிலோன் ராஜாவினால் கட்டளையான அநுதினத் திட்டத்தின்படி, அநுதினமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டுவந்தது.

"யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம்" - இந்த வருஷத்தில் பாபிலோனின் ராஜாவாகிய ஏவில்மெரொதாக் யோயாக்கீனை விடுவித்தான். ஏவில்மெரொதாக் நேபுகாத்நேச்சாரின் குமாரன். (2இராஜா 25:27, எரே 52:31-32). யோயாக்கீனின் மறுபெயர்கள் எகொனியா **(Jechoniah)** (எரே 24:1; எரே 29:2), கோனியா **(Coniah)** (எரே22:24,28). "அவன் தலையை உயர்த்தி" என்பதற்கு "அவனைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்தது" என்று பொருள்.

"தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக்கள்" - நேபுகாத்நேச்சார் பல தேசங்களின்மீது படையெடுத்து அந்தத் தேசங்களின் ராஜாக்களையெல்லாம் சிறைபிடித்து வந்திருக்கிறான். சிதேக்கியா சாகும் வரையிலும் சிறையில் அடைக்கப் பட்டிருந்தான். (எரே 52:11). யோயாக்கீனுக்குப் பாபிலோன் ராஜாவின் தயவு எவ்வாறு கிடைத்தது என்பது தெரியவில்லை. யோயாக்கீன் உயிரோடு இருந்த நாளெல்லாம் அவன் நன்றாகப் பராமரிக்கப்பட்டான். (எரே 52:33-34).